வந்தேறிகள்

இரா. பாரதிநாதன்



ஆந்திரத்துக்குக் குடிபெயர்ந்த
தமிழக விசைத்தறித் தொழிலாளர்களின்
போராட்ட வாழ்வின் பின்புலத்தில் ஒரு நாவல்.

வந்தேறிகள்

(நாவல்)

பாரதிநாதன்

மதி நிலையம்

நாவல் / Novel

வந்தேறிகள்

Vantherigal

by Bharathinathan ©

M.N. No. 478
First Edition : December 2014
376 Pages, Price Rs.325

Printed in India.

Mathi Nilayam,
No.2/3, 4th Street,
Gopalapuram,
Chennai - 600 086.
Ph: 044-28111506

Website: www.mathinilayam.com

Email : mathinilayambook@gmail.com

Author's Email : bharathinathan310@gmail.com

Design / Layout : N. Premkumar, JLP Designs

This book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this the rights under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book.

உலகமெங்கும்
வந்தேறிகளாய்
அவதியுறும்
உழைக்கும்
மக்களுக்கு...



நுழையும் முன்

பல்வேறு வாழ்க்கை நெருக்கடிகளால் உழைக்கும் மக்கள் பல ஊர்களுக்கும், நாடுகளுக்கும் புலம் பெயர்வது ஆண்டாண்டு காலமாய் நிலவும் ஒன்றுதான். எனினும், உலகமயமாக்கல் சூழலுக்குப் பின் இந்த அவலம் மேலும் அதிகரித்தே வருகிறது.

அப்படி குடிபெயரும் மக்களுக்கு அவர் கள் போகும் இடங்களில் வந்தேறிகள் என்ற அவப்பெயர் கிட்டு கிறது. அப்படி ஒரு வந்தேறியாய் நானும் சில வருடங் களுக்கு முன் என் சொந்த ஊரை விட்டு வெளி மாநிலம் சென்று எனக்குத் தெரிந்த விசைத்தறி நெசவுத் தொழிலை செய்து வந்தேன்.

அந்த நேரத்தில் நான் சந்தித்த அனுபவங்களே இந்த நாவல். இதில், வருகின்ற சூழ்நிலைகள் உண்மை. ஆனால், கதாபாத்திரங்கள் கற்பனையே.

1.12.2014
சென்னை - 92

தோழமையுடன்,
இரா. பாரதிநாதன்
கைப்பேசி : 8939100876

அத்தியாயம்

1

1

சித்திரைப் புது வருடம் பிறந்து விட்ட தென்று ஊரில் பேசிக் கொள்கிறார்கள். யாருக்கு? என்பதில்தான் தெளிவில்லை. விடிகாலை நேரத்தில் பெண்கள் வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தனர். சிறிய தும் பெரியதுமாய் வண்ண வண்ணமாய் கோலங்கள். அந்த நேரத்தில் எட்டுப் புள்ளிகள் பத்துப் புள்ளிகள் என்று அவர்கள் வாய் ஏதோ கோலக் கணக்கை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அவர் கள் எல்லோரும் முதலாளிமார் வீட்டுப் பெண்கள்.. பொதுவாய் எல்லா ஊர் களிலும் விரல் விட்டு எண்ணிவிடலாம் என்பது போல மிகச் சிறிய எண்ணிக்கை யில் தான் முதலாளிகள் இருப்பார்கள். தொழிலாளர்கள் ஏராளமாய் காணப்படு வார்கள். இங்கும் அதேபோல இருந் தாலும், தொழிலாளர்களை யாரும் உள்ளூர் கணக்கில் சேர்த்துக் கொள்வ தில்லை. ஏனெனில்,இங்கிருக்கும் தொழி லாளர்கள் அனைவரும் வெளியூரைச் சேர்ந்தவர்கள்.

எனவே, அவர்களுக்கு இங்கே வந்தேறி கள் என்ற பட்டப்பெயர் மட்டுமே மிஞ்சி இருக்கிறது.

இந்த ஒருஊரில் மட்டும்தானா? உலகம் முழுக்க இதுதான் நிலமை. குறிப்பாய் மும்பைக்குப் பிழைக்கப் போன தமிழர்களையும், பெங்களூரில் கட்டிட வேலைக்குப் போய் கல்,மண் சுமக்கும் வறிய தமிழ் மக்களையும் இப்போதும் அங்கே வந்தேறிகள் என்றுதான் வசைப் பாடுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், தமிழகத்திலேயே இலங்கையிலிருந்து ஏதிலியராய் உயிருக்குப் பயந்து அடைக்கலமாய் வந்திருக்கும் ஈழத் தமிழர்களை சகமனிதர்களாய் கூட பார்க்கும் மனோபாவம் பலரிடத்தில் இல்லை. அதற்கு, இந்த ஊர் மட்டும் விதி விலக்காய் எப்படியிருக்க முடியும்? வெறுப்பாய் பலவாறு அவன் யோசித்துக் கொண்டே பஜனைக் கோயில் வராண்டாவை நோக்கி நிதானமாய் அடியெடுத்து நடக்கத்தொடங்கினான்.

2

அது, உயரம் குறைந்த திண்ணையை போல காட்சியளித்தது. அதில் உட்கார்ந்து ஏற்கனவே சில தொழிலாளர்கள் பேசிக் கொண்டிருந்தனர். வேறு சிலர் நைட்ஷிப்ட் வேலையை முடித்து விட்டு தமது வேட்டியை அவிழ்த்துப் போர்த்திக் கொண்டு ஒரு ஓரமாய் தூங்கிக் கிடந்தனர். அவன் தன் மடித்துக் கட்டிய வேட்டியை கால் வரை இறக்கி விட்டுக் கொண்டு அமர்ந்தான். தொழிலாளர்களின் உரையாடலை சற்று அசிரத்தையாய் செவி மடுத்தான்.அவர்கள் வழக்கம் போல் தங்கள் சொந்த ஊர் கதைகளைத்தான் வாயாடிக் கொண்டிருந்தனர். சில நூறு மைல்களைக் கடந்து வந்து இங்கே தறியோட்டினால் மட்டும் பிறந்து வளர்ந்த ஊர் நினைவுகள் யாருக்கும் அற்றுப் போகாதே.. தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் சின்னதும், பெரியதுமாய் ஏதாகிலும் ஒரு அவலக்கதை நிச்சயம் இருக்கும்.

அப்படியில்லாவிட்டால் இது போல ஊர் விட்டு ஊர் வந்துப் பிழைக்க வேண்டிய சோகம் நேர்ந்திருக்காது.

உள்ளூர் விசைத்தறி முதலாளிகளிடம் கடன்பட்டு அதைக்கட்ட முடியாமல் ஓடிவந்தவர்கள்தான் இதில் அதிகம். அதைக் கடன் என்று சொல்வதை விட பணப்பாக்கி என்றுதான் கூற வேண்டும். ஒரு முதலாளி தன்னிடம் வேலை செய்யும் விசைத்தறி தொழிலாளியின் வாழ்க்கை நெருக்கடிக்கு ஒருலட்சமோ இரண்டு லட்சமோ கேட்ட நேரத்தில் பணம் தருவான். ஆனால், வாங்கிய பணப்பாக்கியைக் கடுமையாய் உழைத்தும் குறைவான கூலியால் கட்ட முடியாமல்

தலைமறைவாய் ஓடி வந்தவர்கள் இவர்கள். எனவே, இந்த தொழிலாளர்கள் ஏராளமான அவலக்கதைகளுக்கு சொந்தக்காரர்கள்தானே! உள்ளூர் கொத்தடிமைத் தனத்தில் இருந்து தப்பியோடி வந்து விட்டாலும், பணம் கொடுத்த உள்ளூர் தறி முதலாளிகள் எந்த நிமிடமும் ஒரு வாகனத்தில் இங்கு வந்து விடலாம். ஒருநாயைப் போல அடித்து உதைத்து தாம் இழுத்துச் செல்லப்படலாம் என்ற அச்சம் பணப்பாக்கிப் பட்டு இங்கு ஓடிவந்த விசைத்தறி தொழிலாளர்களிடம் ஒவ்வொரு கணமும் இருந்துக் கொண்டேஇருக்கிறது. அந்த பயம் அவர்களை தூக்கத்திலும் துரத்தி வருகிறது.

கடந்த சில மாதங்களில் நான்கைந்து சம்பவங்கள் இப்படி நடந்திருக்கின்றன. இதை தடுத்து நிறுத்த ஒரு வழியும் தெரியவில்லை.

முதலாளிகள் அடியாட்களுடன் வருவது தெரிந்தால் காடு மேடாய் ஓடி ஒளிகிறார்கள் தொழிலாளர்கள். சே, என்ன வாழ்க்கை இது! கூலிக்காரனாய் பிறப்பது மகாபாவம். சுயவெறுப்பில் நாக்கெல்லாம் கசந்தது!

3

அவனுக்கு சக தொழிலாளர்களின் வாய் பேச்சில் வலியப் போய் கலந்துக் கொள்ள விருப்பமில்லை. இரண்டொரு நாட்களாய் வீட்டு நினைவுகள் அலைக்கழித்துக் கொண்டிருந்தன. எனவே, மற்ற எவரிடமும் முகம் கொடுத்துப் பேசத் தோணவில்லை.

அம்மாவும், அப்பாவும் அவன் மூளையின் ஒவ்வொரு செல்லிலும் பொதிந்துக் கிடந்தார்கள். அம்மா கையால் சாப்பிட்டு எத்தனை நாட்களாகின்றன?கயிற்றுக் கட்டிலில் அப்பாவின் அருகில் நிம்மதியாய் படுத்துத் தூங்கி எவ்வளவு வாரங்களாகின்றன? எல்லாம் பொய்யாய் பழங்கதையாய் போனதே...

ஒரு கணம் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

உண்மையைச் சொல்லப் போனால் அவன் ஊரை விட்டு ஓடி வந்து ஐந்தாறு மாதங்கள்தான் ஆகின்றன. ஆனால், யுகங்கள் பல நூறு கடந்ததாய் மனதுக்குள் தோற்றம். .பாசமுள்ள பிள்ளைகளுக்கு தமது தாய் தந்தையரை ஒருநாள் பிரிவதென்றாலும் கஷ்டம்தான். அவனுக்கும் அந்த கொடுந்துன்பம் நீடித்தே இருக்கிறது. இன்னும்

எத்தனை நாட்கள் இப்படியே போகுமென்ற காலக் கணக்கு நிச்சய மாய் அவனிடம் அறவே கிடையாது. அடுத்து வரும் ஒரு மாதமா, வருடமா அல்லது வாழ்நாள் முழுவதுமா? எதுவும் நிச்சயமாய் தெரியவில்லை.அப்படி அறுதியிடவும் எந்த நம்பிக்கையும் மனதில் தோன்றவில்லை.

மற்ற தொழிலாளர்களாவது சொந்த ஊர் தறிப் பேக்டரி முதலாளி களிடம் பணப்பாக்கிப் பட்டுத்தான் ஓடி வந்திருக்கிறார்கள். அவனோ, ஒருபடி மேலேப் போய் தன் முதலாளி பணப்பாக்கி கேட்டு குடும்பத்தை கேவலமாய் திட்டப் போக ஆத்திரம் எல்லை மீறி கடுமையாய் தாக்கி விட்டு வந்திருக்கிறான். அந்த முதலாளியின் கண்ணில் பட்டால் கொலை செய்யவும் தயங்க மாட்டான்.

பணப்பாக்கியை எப்பாடு பட்டாவது கட்டி விடலாம்தான். ஆனால், முதலாளியை அடித்த குற்றத்தை எதை வைத்து ஈடு செய்வது? தனக்கு வாழ்நாள் முழுக்க இந்த ஊர்தான் போலிருக்கிறது?

புகை மூட்டமாய் மனதில் கவலை வந்து சூழ்ந்துக் கொண்டது. அதன் அடர்த்தியில் மூச்சுத் திணறியது. நுரையீரல் சுவாசத்திற்காக போராடி யது. விழி பிதுங்கி வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஊரெங்கும் விசைத்தறிகள் ஓடும் ஓசை பனஞ்சாரிக்குள் பெரிதாக காற்று நுழைந்தால் எழுகின்ற இரைச்சலைப் போல ஹோய்வென்று கேட்டுக் கொண்டிருந்தது.

4

ஆந்திர மாநிலத்தின் எல்லையில் இருக்கும் ஊர் இது! கொஞ்சம் எம்பிக் குதித்தால் தமிழ் மாநில எல்லைக்குள் விழுந்து விடலாம். இங்கிருந்து திருத்தணியும், திருப்பதியும் எதிரெதிர் திசையில் இருக்கின்றன.

'வடவேங்கடம் தென் குமரி தமிழ் கூறு நல்லுலகத்துய' என்று ஒரு பழைய பாடலை எப்போதோ படித்ததாய் நினைவு. மொழி வாரியாக மாநிலங்களை பிரித்த சமயத்தில் அந்த பாடல் அன்றைய சென்னை மாகாண அரசுக்கு மறந்து விட்டது போலும். வட வேங்கடமென்னும் திருப்பதியை ஆந்திராவுக்கு தூக்கி கொடுத்து விட்டார்கள். ஏன், திருத்தணியே முன்பொரு காலத்தில் தமிழர்களிடத்தில் இல்லை.

அதை சிலம்புச் செல்வர் என்று அழைக்கப்பட்ட மா.பொ.சிவஞானம் அவர்கள் எல்லைப் போராட்டம் நடத்தித்தான் முருகப்படை வீட்டை மீட்டதாக சொல்வார்கள்.

தென்குமரியும் இதேபோல் தான் கேரளாவுடன் சேர்க்கப்பட்டு விட்டது. அதை மீட்க ஒரு மார்ஷல் நேசமணி தேவைப்பட்டது.

திருத்தணியில் இருந்து சில கிலோ மீட்டரில் இருக்கும் இந்த ஊர் மொழி வாரியாய் கறாராய் பிரிக்கப் பட்டிருந்தால் தமிழக எல்லைக் குள் தான் இருந்திருக்கும். ஏனெனில், இங்கு வசிக்கும் மக்களில் முக்காலே மூணு வீசம் தமிழர்களே... பெயருக்குத்தான் இது ஆந்திரா, தெலுங்கு மொழி பேசுபவர்களை பூதக் கண்ணாடி வைத்துதான் தேட வேண்டும். இங்கு மட்டுமல்ல திருப்பதி வரை தமிழர்கள் ஏராளம். எனவே தான் சற்று முன் பார்த்த கோலக் கொண்டாட்டம்.

ய என்ற தமிழ் எழுத்தை ஒருக்களித்துப் போட்டதைப் போல இந்த ஊரில் கிழக்கு நோக்கி மூன்று தெருக்களும் அவற்றை இணைப்ப தைப் போல வடக்கிலிருந்து தெற்காய் ஒரு தெருவும் நீண்டிருக்கிறது. ஊர் பார்ப்பதற்கு சற்று பெரிய கிராமமாய் காட்சியளிக்கிறது.

ஆனால், அது வழக்கமான கிராமங்களைப் போன்று குடிசைகள் நிறைந்ததாய் இல்லாமல் ஏதோ பெயருக்கு ஒன்றிரண்டைத் தவிர, பெரிய மெத்தைக் கட்டிடங்களும், நாட்டு ஓடு வீடுகளுமாய் காணப் பட்டன. எல்லா வீடுகளிலும் விசைத்தறிகள் ஓடுகின்றன. இரண்டு மூன்று தறிகள் ஓடும் சின்னப் பேக்டரிகளும், ஐம்பதுக்கு மேல் தறிகள் இயங்கும் பெரிய பேக்டரிகளும் இதில் அடங்கும்.

காட்டன் சட்டைத் துணிகள் மற்றும் கைலிகள் விசைத்தறிகளில் நெய்யப்படுகின்றன. ஆனால், எந்தரக சட்டைத் துணிகளும் உள்ளூர் மார்க்கெட்டில் விற்கப்படுவதில்லை.

5

வசதி படைத்த ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும், சிங்கப்பூர், மலேசிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எப்போதாவது தறியில் கவனக்குறைவால் ஏற்படும் பொறைவாட்டத் தாலோ, பேட்டாவாலோ துணிகள் பழுதடைந்தால் மட்டும் உள்ளூர்

முதலாளிகளின் மகன்கள் சட்டைத் தைத்துப் போட்டுக்கொள்வார்கள். தறி நெய்யும் தொழிலாளிக்கு கையகலத் துணியும் தர மாட்டார்கள். எனினும், துணியில் பழுது ஏற்படுத்தியதற்காக தொழிலாளியின் கூலியை மட்டும் கவனமாக பிடித்துக் கொள்வார்கள் விசைத்தறி முதலாளிகள்.

யோசித்துக் கொண்டே இப்படி எவ்வளவு நேரம் போனதென்றுத் தெரியவில்லை.

யாரோ தடதடவென்று ஓடிவரும் காலடியோசைக் கேட்டது. கொஞ்சம் திடுக்கிட்டுப் போய் தலையுயர்த்திப் பார்த்தான். அவனுடன் கூட வேலை செய்பவனும், சொந்த ஊர்க்காரனுமான மாதேசுதான் தலை தெறிக்க ஓடி வந்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. சட்டென்று அரக்கப் பரக்க எழுந்து நின்றான். ஏதாவது பிரச்னையா? என்று யோசித்தான்.

அதே வேகத்தில் ''ஏம்பா ஓடி வர்றே... என்னா நடந்துச்சி?'' என்று பதட்டமாய் கேட்டான்.

மாதேசு வந்த வேகத்தில் சமாளித்து நிற்க முடியாமல் நிலை தடுமாறினான். சட்டென அவனை பலமாகப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

தன் நண்பனை நன்றியுடன் பார்த்து விட்டு மூச்சிரைக்க ''அவனுங்க வ... வந்துட்டாங்கப்பா...'' என்றான். அவனுடைய முகத்தில் ஏதோ இனம் புரியாத திகில் இருந்தது. நடந்ததைச் சொல்ல நாக்கு ஒத்துழைக்கவில்லை. ஆயினும், சொல்லித்தான் தீர வேண்டும் என்பதால் தத்தளித்தான் மாதேசு.

பிறகு, கொஞ்சமாய் ஆசுவாசப்படுத்திக் கொண்டு சொன்னான் ''அந்த கள்ளிப்பாளையத்து மொதலாளிங்க நாலஞ்சு அடியாளுங்களோட வந்திருக்குறாங்க சந்துரு...'' என்று.

விசயம் இன்னதென்று விளங்கி விட்டது சந்துருவுக்கு.

அவனுக்கு மட்டுமல்ல அந்த கோயில் வராண்டாவில் கூடியிருந்த விசைத்தறி தொழிலாளர்கள் அத்தனைப் பேருக்கும்தான். எனவே, சட்டென தீப்பிடித்த மாதிரியாகி விட்டது. பிள்ளைப் பிடிப்பவர் களைக் கண்டு மிரளும் குழந்தையானார்கள் அனைவரும்.

6

ஒவ்வொருவருக்கும் தனக்குப் பணப்பாக்கிக் கொடுத்த முதலாளிகள் தான் தேடி வந்திருப்பதாய் மனதுக்குள் தோற்றம் எழுந்தது.

அதையுணர்ந்த சந்துரு ''யாரத் தேடிக்கிட்டு வந்திருக்குறானுங்கன்னு தெரியுமா? கொஞ்சம் சீக்கிரஞ் சொல்லு!'' என்று மற்றவர்களின் சார்பாக தானே விசாரித்தான். இந்த நேரத்தில் கோயில் வராண்டாவில் தூங்கிக் கொண்டிருந்தவர்களை ஒருவன் தட்டியெழுப்பினான். அவர்களும் அரக்கப் பரக்க எழுந்து உட்கார்ந்துக் கண்களைத் தேய்த்தார்கள். நிலைமையை யூகித்தறிந்தார்கள். எனவே, அனைவரும் மாதேசு என்ன சொல்லப் போகிறான் என்பதைக் கேட்பதற்குக் கூர்மையானார்கள்.

''அதத்தான் அவுங்கத் தேடிப் புடிச்சுட்டாங்களே...''

''நீயி யாரச் சொல்றே?''

''தேவூரு கந்தப்பன் குடும்பத்த...''

அடுத்த கணம் இடிதாக்கியதைப் போலானார்கள் எல்லோரும்.

ஒரு சிலருக்குப் கள்ளிப்பாளையம் முதலாளிகள் தங்களைத் தேடி வர வில்லை என்ற நிம்மதி ஏற்பட்டாலும் அவர்களுக்கு கந்தப்பன் குடும்பத்தின் மேல் சட்டென பரிதாபம் எழுந்தது. ஆனாலும், அதற்காக என்ன செய்ய வேண்டும் என்ற யோசனை யாருக்கும் தோன்றவில்லை.

எனவே, ஒருவரையொருவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சந்துருவுக்கு மட்டும் அந்த ஏழைக் குடும்பத்தை முதலாளிகள் பிடியிலிருந்து எப்படியாவது மீட்க வேண்டுமென்ற நினைப்பு ஏற்பட்டது. தன் நிலமையை மறந்து விட்டு அவன் அனிச்சையாய் ''இத இப்புடியே வுடக் கூடாது.'' என்று முணுமுணுத் தான். அது தன் காதில் விழ சரேலென்று அவனை ஏறிட்டு விநோத மாய் பார்த்தான் மாதேசு.

அவனுக்கும் அந்த எண்ணமிருந்தது. ஏனெனில், கந்தப்பன் என்ற அந்த தொழிலாளி அப்பாவி. அதேநேரம் மனிதாபிமானம் உள்ளவர். அவருக்கு மூன்று பிள்ளைகள் வேறு. அதிலும், மூத்தப் பெண்

வயதுக்கு வந்தவள். பணப்பாக்கிக்காக முதலாளிகள் தன் பெண்ணை ஏதாவது செய்துவிடக் கூடுமென்ற பயத்தில்தான் அவர் அந்த ஊரை விட்டே குடும்பத்தோடு இந்த ஊருக்கு வந்திருக்கிறார். சும்மாவே வெறிப் பிடித்தாடும் முதலாளிகளிடம் இப்போது சிக்கி விட்டால் அவ்வளவுதான். சிக்கி விட்டால் என்ன? அதுதான் சிக்கியாயிற்றே.

7

எனவே, அவன் சந்துருவிடம் கேட்டான். ''இப்ப என்னப்பா செய்ய லாம். சீக்கிரம் சொல்லு! அங்க கந்தப்பன் குடும்பம் மொதலாளிங்க கால்ல வுழுந்துக் கதறிக்கிட்டு இருக்குது.'' என்று.

அப்படியெல்லாம் உடனுக்குடன் சட்டென்று தீர்வு சொல்கிறப் பிரச்னையல்ல இது. அது சந்துருவுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. ஆயினும், சூழ்நிலையின் அவசரம் கருதி மாதேசு கேட்பதில் நியாயம் இருக்கிறது.

எனவே, யோசித்தான்.

சுற்றியிருந்த தொழிலாளர்கள் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டி ருந்தார்கள். இருப்பவர்களில் அவன் மட்டுமே ஓரளவுப் படித்தவன். தைரியசாலியும் கூட. இளம் கன்று பயமறியாது என்பதைப் போல அவன் நடவடிக்கைகளை இங்கு வந்த நாள் முதலாய் எல்லோரும் பார்த்துக் கொண்டிருப்பதால் அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

அவனும் அதை உணர்ந்தவன் போல சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான். முகத்தைத் தீவிரமாய் வைத்துக் கொண்டு ''இப்ப கள்ளிப் பாளையத்து மொதலாளிங்க எங்க இருக்குறானுங்க?''என்று மாதேசிடம் கேட்டான்.

''ரெண்டு பிளசரு காரை வச்சுக்கிட்டு மந்தையில நிக்குறானுங்க.. கந்தப்பண்ணன் டீக்குடிக்க அந்தப் பக்கம் வந்தப்பதான் அவரப் பாத்து புடிச்சிக்கிடானுங்க.. நானும், அங்கதான் இருந்தேன். தனியாளா ஒண்ணுஞ் செய்ய முடியாதுன்னுதான் இங்க ஓடியாந்தேன்.''

மாதேசின் விளக்கத்தைக் கேட்டு விட்டு சந்துரு ''வாங்க நாம்ப எல்லாரும் மந்தைக்குப் போவலாம்'' என்றுக் கூப்பிட்டான். அதே வேகத்தில் புறப்படவும் யத்தனித்தான். ஆனால், மற்ற

தொழிலாளர்கள் யாரும் சிறிதும் நகரவில்லை. அங்குபோய் என்ன செய்வதாய் உத்தேசம்? என்பதாய் அவநம்பிக்கைத் தொனிக்க ஒருவர் மற்றவர் முகத்தை ஏறிட்டார்கள். அவர்களில் சற்று மூத்தவரான ஏழுமலை மட்டும் கொஞ்சம் தயக்கமாய் கேட்டார் ''ஏம்பா.. ஒம் மனசுல என்னா திட்டம் போட்டு வச்சுருக்குறே?'' என்று.

அதற்கு சந்துரு யோசிக்காமல் பதில் சொன்னான் ''அண்ணா திட்டம் போடறதுக்கெல்லாம் இப்ப நேரங்கிடையாது. எதாயிருந்தாலும் அங்கப் போயி பேசிக்கலாம் வாங்க''

8

''அதுக்கில்லத் தம்பி... மொதலாளிங்க ஆள் பலத்தோட வந்திருக்குறதப் பாத்தா பயமாயிருக்குதுப்பா.'' என்று ஏழுமலை சொன்னதற்கு சந்துரு ''அண்ணா... நாம்ப வொண்ணும் அவுங்கக் கிட்ட குஸ்தி சண்டைப் போடப் போவல... கந்தப்பண்ணனை வுடச் சொல்லி கேட்டுப் பாப்போம்.'' என்றான்.

''வாங்குனப் பாக்கிப் பணத்தக் குடுக்காம அவனுங்க வுடுவானுங்களா? சண்டாளனுங்க...'' ஏழுமலை இப்படிச் சொன்னது மாதேசுக்குப் பிடிக்கவில்லை. அவன் ''அண்ணா... நாம்ப எதுவும் செய்யாம கம்முனு இருந்தா மொதலாளிங்களுக்குத் தொக்காயிடும். இன்னிக்கி மந்தையில இருந்த மனுசனத் தூக்குன மாதிரி நாளைக்கி ஊடுப் பூந்தும் தூக்குவானுங்க. இது ஒங்களுக்குச் சம்மதந்தானா?'' என்று வெடுக்கென்று கேட்டான்.

இதற்கு மேல் ஏழுமலை எதையும் கேட்கவில்லை. மாதேசு சொன்னது சரிதான். என்ன மட்டும் செய்வார்கள், அரக்க குணம் கொண்ட கள்ளிப் பாளையம் முதலாளிகள். ஆனால், இந்த துணிச்சல்கார இளைஞர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லையே? அவருக்கு 'சிறுபிள்ளைகள் இட்ட வெள்ளாமை வெளையுமாம். ஆனால், வீடு வந்துச் சேராதாம்.' என்ற சொலாந்தரம் ஏனோ அந்த நேரத்தில் நினைவுக்கு வந்தது! என்றாலும், இளைஞர்களை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. என்ற முடிவுக்கு வந்தார்.

சந்துருவும், மாதேசும் முன்னால் நடக்க, அவர்களின் பின்னால் அனைவரும் அடியெடுத்து வைத்தார்கள். இதுவரை இப்படியொரு ஒற்றுமை வாய்த்ததில்லை. .எனினும், அனைவரின்

மனதிலும் இனம்புரியாத பீதியிருந்ததென்னவோ மறைக்க இயலாத உண்மை.

அப்போது ஊருக்கு வெளியே இருந்த தண்டவாளத்தில் சென்னையி லிருந்து மும்பை நோக்கிச் செல்லும் தாதர் எக்ஸ்பிரஸ் தடதடத்துச் செல்லும் சத்தம் துல்லியமாய் கேட்டது. இன்சின் ஓட்டுநர் எதற்காகவோ ஆரன் அடித்தார். அது அவர்களுக்கு விடப்பட்ட எச்சரிக் கைப் போல தெரிந்து அனைவரின் பதட்டத்தையும் அதிகரித்தது.!

மொத்தம் அவர்கள் பத்திருபது பேர் இருந்தார்கள். தற்போது மந்தையில் என்ன நிலவரமென்றுத் தெரியவில்லை. கள்ளிப் பாளையத்து முதலாளிகள் கந்தப்பனைக் கொண்டுப் போய் விட்டார் களா? அவர் மனைவி, மக்களின் கதியென்ன? ஒன்றும் புரியாமல் நடந்தார்கள்.

மந்தையென்பது ஒரு பொதுமைதானம். அங்கே தொடக்கப்பள்ளி யொன்று இருக்கிறது.

9

ஆங்காங்கே சில டீக்கடைகளும், பெட்டிக் கடைகளும் உண்டு. அழுக்கேறிய காந்தி,காமராசர்,அண்ணா சிலைகளும் உண்டு. அதைத் தவிர, மூலைக்கொன்றாய் நான்கைந்து சிமெண்ட் பெஞ்சுகள் அமைக்கப் பட்டிருக்கும். நகரத்திலிருந்து இங்கு வரும் ஓட்டை உடைசல் பேருந்துகளுக்கும் அதுதான் நிறுத்தம். வெளியிலிருந்து சிறு வியாபாரிகள் தலைச் சுமையாய் கொண்டு வரும் கத்திரிக்காய், முருங்கைக்காய் உட்பட இன்னபிற காய்கறிகள், மீன், கருவாடு, நொங்கு, பனங்கிழங்கு, கோசப்பழம் எல்லாவற்றுக்கும் அதுதான் மார்க்கெட். நாட்டுக்கோழிகள், ஆட்டுக்கறியும் கூட அங்கு விற்கலாம். ஆனால், மாட்டுக்கறி மட்டும் விற்க கூடாதென்று ஊர் கட்டுப்பாடு இருக்கிறது.

விசைத்தறி தொழிலாளர்கள் ஊருக்குள் ஒன்றிரண்டு டீக்கடைகள் இருந்தாலும் மந்தைக்கு வந்துதான் டீக் குடிப்பார்கள். தினசரிப் பேப்பர்கள் படிக்க இதுதான் வசதி.

சந்துருவும், மற்றவர்களும் வந்து சேர்வதற்குள் அங்கே ஒரு சிறு கூட்டம் சேர்ந்திருந்தது. இரண்டு அம்பாசிடர் கார்கள் நின்றிருந்தன.

சற்று தூரத்திலிருந்தே அனைவரின் கண்களும் கந்தப்பனைத் தேடின. ஓங்குத் தாங்காய் இருந்த கள்ளிப்பாளையம் முதலாளிகள் மற்றும் அவர்களின் அடியாட்கள் முன்னே கூனிக் குறுகி வயோதிக வயதில் நின்றிருந்தார் கந்தப்பன்.

பார்க்கப் பாவமாய் இருந்தாலும் அவர் இழுத்துச் செல்லப்படாமல் இருந்தது சற்றே நிம்மதியாய் நினைக்கத் தோன்றியது.

சரசரவென்று சந்துரு தன்னுடன் மாதேசைக் கூட்டிக் கொண்டு கூட்டத்தில் ஊடுருவினான். அவனுடன் வந்தவர்கள் கூட்டத்தோடு கலந்தார்கள்.

அந்த நேரம் சட்டென கந்தப்பனுக்கு சளார் சளாரென்று இரண்டொரு அடிகள் விழுந்தன.அடித்தவர்கள் அடியாட்கள். கந்தப்பன் கதறியழ ஆரம்பித்தார்.அவருடன் ஒட்டி நின்றிருந்த மனைவி, மக்கள் கண்ணில் நீர் வைத்துக் கொண்டு முதலாளிகளைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

''அய்யோ... பண்ணாடி, அடிக்க வேணான்னு சொல்லுங்க. ஏற்கனவே சீக்காளி மனுசன் நீங்க அடிச்சா தாங்க மாட்டாரு. செத்துப் போயிடப் போறாருங்க.''

கந்தப்பன் மனைவி பெருங்குரலெடுத்து அழுதார். அதைப் பார்த்து அவரது மூன்று பிள்ளைகளும் அழுதார்கள்.

.

10

உடை மற்றும் தோற்றத்தை வைத்தே கார்களின் பக்கத்தில் நின்றிருந்த ஐந்தாறு நபர்களில் முதலாளிகள் யார்? அடியாட்கள் யார்? என்பதை தீர்மானம் செய்தான் சந்துரு.

அதில், ஒரு முதலாளி ''சீக்காளி, கீக்காளியெல்லாம் எங்களுக்குந் தெரியும். எங்கக்கிட்ட கை நீட்டிவாங்குனப் பணத்துக்கு என்ன வழி? அதச் சொல்லுடீ... நாதாரிமுண்ட...'' என்று மரியாதைக் குறைவாய் பேசி தன் வர்க்கப் புத்தியைக் காட்டிக் கொண்டான்.

அதற்கு மூக்கைச் சிந்திக் கொண்டே கந்தப்பன் மனைவி ''என்னத்தச் சொல்லச் சொல்றீங்க பண்ணாடி, ஆறு வருசமா ஒங்க தறிப்பேக்டரி யில குடும்பத்தோட நாயா, பேயா ஒழைச்சோம். அஞ்சுப் பைசா

மிச்சம் பண்ணமுடியலியே... எங்களால நாலுக்காசு சேக்க முடிஞ் சிருந்தா எதுக்கு ராவோடராவா இப்புடி ஊரவுட்டு ஓடியாந்து இருக்கப் போறோம். சொல்லுங்க பாப்பம்?'' என்றார்.

இதைக் கேட்டு அந்த முதலாளி சீறினான். ''தப்பெல்லாம் ஒங்க மேல வச்சுக்கிட்டு என்ன கேள்விக் கேக்குறியா?'' என்று.

''அப்புடி நாங்க என்னங்க தப்புப் பண்ணோம்? ஆடம்பரமாச் செலவு செஞ்சோமா? பொழுதன்னிக்கி கறிக் காச்சித் தின்னமா? நல்ல துணிமணி வாங்கிப் போட்டு மினிக்கிக் கிட்டுத் திரிஞ்சமா? சொல்லுங்க பாப்பம்...''

''.....''

''நீங்க எங்களுக்குக் குடுத்த கூலிக்குத் தெனம் ஒருவேளை கொழம்புலத் திங்கிறதுக்கே ஒன்னப்புடி என்னப்புடின்னு எட்டும் பத்தாமல்ல இருந்துச்சி...''

''ஒங்களுக்கு எவ்வளவுக் கூலிக் குடுத்தாலும் கட்டுப்படியாவதுடீ.. தருத்தரம் புடிச்ச நாய்ங்க நீங்க...'' என்று நக்கல் செய்தான் அந்த முதலாளி.

''எங்களுக்குத் தருத்தரம் புடிச்சதுக்குக் காரணமே நீங்க கூலிக் கொறைச்சுக் குடுத்ததுதான். இல்லன்னா நாங்களும் நாலு பேத்த மாதிரி நல்லாயிருந்துருக்க மாட்டமா பண்ணாடி...''

கந்தப்பன் மனைவி அப்படிக் கேட்டதுதான் தாமதம் அந்த முதலாளி சட்டென அந்த பெண்மணியின் தலைமுடியை எட்டிப் பிடித்தான்.

''ஏண்டீ, வாங்குனப் பணத்தக் கட்ட வக்கில்ல. சட்ட விட்டம் பேசுறியா, கண்டாரஓலி முண்ட...''

11

என்று சொல்லிக் கொண்டே அவள் கன்னத்தில் அறைய முயன்றான். அதுவரை அமைதியாக நின்றிருந்த சந்துரு பொறுக்க மாட்டாமல் ''அண்ணா.. பொம்பளய அடிக்கிற வேலய வெச்சிக்காதீங்க...'' என்று உரக்க கத்தினான். திடுக்கிட்ட முதலாளியின் கை அந்தரத்தில் அப்படியே

நின்று விட்டதே தவிர, கந்தப்பன் மனைவியின் தலைமுடியைப் பிடித்திருந்த இன்னொரு கை நீங்கவில்லை. அந்தப் பெண் வலிதாளாமல் கத்த ஆரம்பித்தாள். சந்துரு நெருங்கிப் போய் முதலாளி யிடமிருந்து அவளை விடுவித்தான். இதை சற்றும் எதிர்பாராத முதலாளி செய்வதறியாது நின்றான்.

ஆனால், கூட வந்த அடியாட்கள் அப்படியிருக்கவில்லை. ஆத்திரமாய் ஓடி வந்தார்கள். ''டேய்... யார்றாவன்.'' என்று சந்துருவின் சட்டை யைப் பிடிக்க வந்தார்கள். மாதேசு விடவில்லை. ''ஓய்... அப்புடியே நில்லு! எங்கைல என்ன இருக்குதுப் பாத்தியா? மண்டயப் பொழந் துடுவேன்.'' என்று எதையோ காட்டினான். அது நீளமான செங்கல். எங்கிருந்து எடுத்தான் என தெரியவில்லை. நல்ல வாட்டமாய் இருந்தது. அவன் முகத்தில் ஏறியிருந்த கோபத்துக்கு சொன்னதைச் செய்வான் போலிருந்தது. எனவே , அடியாட்கள் சந்துருவை நெருங்க அச்சப்பட்டு அப்படியே நின்றார்கள்.

இதைப் பார்த்து தைரியம் அடைந்த மற்ற தொழிலாளர்கள் மாதே சோடு சேர ஆரம்பித்தார்கள். முதலாளிகளும், அடியாட்களும் இதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியில் வாய் பிளந்தார்கள்.

கந்தப்பன் இவ்வளவு நேரம் குனிந்த தலை நிமிராமல் இருந்து விட்டு மெல்ல தன் பார்வையையுயர்த்தி சுற்றிலும் விநோதமாய் நோக்கினார்.

தான் காண்பது கனவா? நனவா? என்ற சந்தேகம் வந்தது. அவர் கண்களில் இருந்து மளமளவென கண்ணீர் பெருகியது. அவர் மனைவி மக்கள் அவரை இறுக கட்டிக் கொண்டு அழுதார்கள்.

அதைப் பார்த்து சந்துருவுக்கும், மாதேசுக்கும் கூட கண்ணீர் வர ஆரம்பித்தது. எனினும், இதைப் பார்க்கவா முதலாளிகள் தமிழகத்தின் மேற்கு எல்லையிலிருந்து இரண்டுக் காரை எடுத்துக் கொண்டு ஆயிரக்கணக்கில் செலவுப் பண்ணி எரிபொருள் போட்டுக் கொண்டு வடக்கு எல்லைக்கு வந்தார்கள்?

இந்த அழுகை நாடகக் காட்சிகளை அவர்கள் உள்ளூரிலேயே நிறைய பார்த்திருக்கிறார்கள். அதெல்லாம் அவர்களைத் துளியும் பாதிக்க வில்லை. ஒன்று, இந்த கந்தப்பனிடமிருந்து தங்கள் பணத்தை வசூலிக்க வேண்டும்.

12

இல்லாவிடில், இவனைக் குடும்பத்தோடு இழுத்துக் கொண்டு போய் தமது பேக்டரியில் வேலை செய்ய வைக்க வேண்டும் அது மட்டுமே அவர்கள் நோக்கமாய் இருந்தது.

இதுவரையிலும் இந்தமாதிரி தங்களிடமிருந்து பணப்பாக்கியை வாங்கிக் கொண்டு இந்த ஊருக்கு தப்பித்து வந்தவர்களை பலதடவை இப்படிச் செய்திருக்கிறார்கள். இந்த ஊர் முதலாளிகள் மட்டுமல்ல, கள்ளிப்பாளையத்துக்கு அக்கம்பக்கம் உள்ள மணியம்பாளையம், பவானி, மற்றும் சற்றே எட்டயிருக்கும் அந்தியூர், எடப்பாடி, ஜலகண்டாபுரம் இப்படி பல ஊர் முதலாளிகளும் கூட இதே நடை முறையைத் தான் வெற்றிகரமாய் செய்திருக்கிறார்கள். அப்படியிருக்க, இதென்ன புதுசாய் தடங்கல் வந்து சேர்ந்திருக்கிறது. அவர்கள் ஆத்திரத்துடன் சந்துருவையும், மாதேசையும் சுட்டெரிப்பதுப் போல பார்த்தார்கள்.

அதில், ஒரு முதலாளி ''என்னடா... தொண்டுப்பசங்களா, பெரிய இவுனுங்க மாதிரி சிலுத்துக்கிட்டு வந்து நிக்கிறிங்க. பண்ணாடைங் களா... இந்த கந்தப்பன் எங்களுக்கு ஒன்றரை லட்சரூபா பணப்பாக்கி குடுக்கணும்.நீங்க குடுக்குறீங்களா, சொல்லுங்க. நாங்க வேணா இப்புடியே வுட்டுட்டுப் போயிடுறோம்!'' என்று ஆத்திரமாய் கேட்டார்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சந்துருவும், மாதேசும் அமைதியாய் இருந்தார்கள்.

இதைக் கண்ணுற்ற இன்னொருவர் ''அட நீங்க வேற ஏங்க, பார்டனர். இவுனுங்களே பாக்கியக் கட்டமுடியாம டிமிக்கி குடுத்துட்டுத்தான இவ்வளவு தூரம் ஓடியாந்திருக்கானுங்க... இவுனுங்களுக்கு ஏது அவ்வளவு சத்து?'' என்று நக்கலடித்தார்.

இதைக் கேட்ட சந்துரு ஆத்திரமானாலும் அமைதியாகவே பதில் சொன்னான் ''நீங்க சொல்றது நெசந்தாண்ணா, அட்டை மாதிரி நீங்க எங்க ரத்ததையெல்லாம் உறிஞ்சிட்டீங்க. அப்புறம் எப்புடி எங்களுக்கு சத்துப் பத்தும்?'' என்று.

''டேய் மூலாவணம் பேசாதே! எங்க காசுக்கு பதில் சொல்லுங்க? இல்லீன்னா கந்தப்பனையும், அவங்குடும்பத்தியும் நாங்க வுட்டுட்டுப்

போவ மாட்டோம்.'' என்று அந்த முதலாளி திருப்பிச் சொல்லிவிட்டு தன் அடியாளிடம் கண்ணைக் காட்டினான். அதைக் கவனித்த சந்துரு ''கொஞ்சம் பொறுய்யா...'' என்று கையை நீட்டினான்.

13

அந்த அடியாள் அப்படியே நின்று விட்டான்.

அந்த மந்தை முழுக்கவே ஏராளமாய் கூட்டம் சேர்ந்திருந்தது. அவர்களில் ஒருசிலர் வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள். ஆனாலும், அனைவர் முகத்திலும் கந்தப்பன் குடும்பத்தின் மீது அனுதாப பாவனை படர்ந்திருந்தது.

அதே சமயம் சந்துரு என்ன செய்யப் போகிறான்? என்பதை தெரிந்துக் கொள்ளும் ஆவல் மீறியிருந்தது. இதை கவனிக்கத் தவறாத அவன் தன்னுடன் கந்தப்பனையும் மற்றும் மாதேசையும் வேறு சில தொழிலாளர்களையும் கூட்டிக் கொண்டு தனியே வந்தான்.

ஒரு மரத்தடியில் கொண்டு வந்து நிறுத்தி கந்தப்பனிடம் கேட்டான் ''அண்ணா, இப்ப ஒங்கக்கிட்ட ஏதாவதுப் பணம் வெச்சிருக் குறீங்களா.'' என்று

''எப்புடித் தம்பி இருக்கும்? ஊரவுட்டு வந்து ரெண்டு மூணு மாசந்தான் ஆவுது. அங்கிருந்து வரும் போது வெறுங்கையோடத்தான் வந்தோம். வூடு வாடகைக்கு எடுக்க முடியாம இந்த மந்தையிலதான பத்துநாளு நாடோடிங்க மாதிரி சோறாக்கித் தின்னோம். இப்பத்தான் வூடு வாடகைக்கி எடுத்து கொஞ்சங் கொஞ்சமா மூச்சு வுட்டுக்கிட்டு வர்றோம். மிச்சம் மீதி எப்புடி புடிக்க முடியும்? சொல்லு...'' என்று பரிதாபமாய் கேட்டார் கந்தப்பன்.

சந்துரு அதைக் காணச் சகியாமல் தன் முகத்தை திருப்பிக் கொண்டான்.

அப்போது அவன் அருகே நெருங்கி ஆத்திரமாய் வந்தான் மாதேசு, ''ஏம்பா ஒனக்கென்னா கிறுக்குப் புடிச்சுப் போச்சா? மொதலாளிங்கக் கிட்ட வாங்குனப் பணத்த ஏங்கட்டணும்? ஆறு வருசமா அவனுங்க கந்தப்பண்ணன் குடும்பத்தால எவ்வளவு சம்பாரிச்சுருப்பானுங்க.. பாக்கியக்கட்ட முடியாதுன்னு தொரத்தியுடுறத வுட்டுட்டு

நீயென்னமோ பஞ்சாயத்துப் பண்ணிக்கிட்டு இருக்குறியே.?'' என்று கொதித்தான்.

அதை ஏற்றுக் கொள்ளாமல் தலையசைத்த சந்துரு ''இல்ல மாதேசு. நாம அப்புடிச் செஞ்சுட்டம்னா தொழிலாளிங்கன்னாலே வாங்குன பாக்கிப்பணத்த திருப்பிக் கட்டாதவுனுங்கன்னு மொதலாளிங்கத் தப்பாப் பேசுவானுங்க. அதுக்கு நாம எடங்குடுத்துடக் கூடாது'' என்று நிதானமாய் கூறினான்.

தன் ஆத்திரத்தைக் கை விடாத மாதேசு ''என்னப்பா மொன்ன நாயம் பேசுறே... நாம்ப அவனுங்களுக்கு ஒழைச்சும் குடுக்கணும். பாக்கிப் பணத்தத் திருப்பியும் குடுக்கணுமா?'' என்று நிறுத்தினான்.

14

பிறகு, தொடர்ந்து ''அநியாயமா கம்மி கூலி குடுக்குற மொதலாளிங்க தறிமேல தறியாப் போட்டுக்குவானுங்க. நாம்ப மட்டும் நாயமா நடந்துக்கணுமா?'' என்றான்.

சந்துரு அதற்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்தான். அவன் மனதில் முதலாளிகளிடம் வாங்கியப் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதே சரியென்று தோன்றியது.

எனவே, அவன் மாதேசைஅடக்கினான்.

''சும்மாருப்பா, கள்ளிப்பாளையத்துக்காரனுங்கள வுடு... இந்த ஊரு முதலாளி நம்பள மதிப்பானா? நாளைக்கி ஏதாவது நெருக்கடி வந்தா அவங்கிட்டப் போயி நிக்கத்தான் முடியுமா? புரியாமப் பேசாத...'' என்றவன் அதே வேகத்தில் கந்தப்பனிடம் திரும்பி நின்றான். ''அண்ணா இப்ப நீங்க வேலை செய்ற மொதலாளி இந்தப் பாக்கிய ஏத்துக்குவானா?'' என்று கேட்டான்.

அதற்கு அவர் ''தெரியல தம்பி... கேட்டுப் பாத்தாதான் செய்வா னான்னு தெரியும்?'' என்றார்.

உடனே சந்துரு ''வாங்க நாம்பப் போயி கேட்டுப் பாப்பம்.'' என்று கந்தப்பனைக் கூட்டிக் கொண்டு நகர முயல, மாதேசு அவன் செய்கையை வெறுப்பாய் பார்த்தான். அதே சமயம் கள்ளிப் பாளையத்து முதலாளிகள் கந்தப்பனை அந்த இடத்தை விட்டு அசைய

விடவில்லை. ‘‘யோவ் நில்லு! எங்க அசாமத் தப்பிக்கப் பாக்குறே?’’ என்று ஒரு முதலாளி முன்னே வந்து தடுத்தார்.

அவரிடம் தன்மையாய் பேசிய சந்துரு ‘‘அண்ணா... ஒண்ணும் தப்பிக்கல. அவரு இப்ப தறியோட்டுற முதலாளிக்கிட்ட ஒங்க பணப்பாக்கிய ஏத்துக்கச் சொல்லி கேட்கத்தான் போறாரு...’’ என்றான். அதற்கு முதலாளி சம்மதிக்கவில்லை.

‘‘கந்தப்பனை வுட்டுட்டு நீங்க மட்டும் போயிட்டு வாங்க.’’ என்றார்.

அதுவரை நிதானத்தைக் கடைப்பிடித்த சந்துரு சட்டென ஆத்திர மானான். ‘‘அண்ணா... எங்களுக்குக் கொஞ்சம் ஒத்துழைப்புக் குடுங்க. ஒங்கப் பணத்தைப் பைசல் பண்ணப் பாக்குறோம்.’’ என்று சத்தமாய் சொன்னான்.

அது மிக கடுமையாய் இருந்தது. மாதேசு அந்த கோபத்தை எதிர் பார்த்தான். அவனுக்குத் தெரியும் தன் நண்பனுக்குக் கோபம் வந்தால் என்ன நடக்குமென்று. ஊரில் அவனிடம் அடிபட்ட முதலாளி உயிர் பிழைத்ததே அதிசயம். எனவே, சந்துருவின் கோபத்தை விசிறி விட ஆரம்பித்தான்.

15

‘‘ஏம்பா, இவுனுங்கக்கிட்ட நீயேன் பர்மிசுனு கேட்கறே... இவுனுங் களால நம்பள ஒண்ணும் புடுங்க முடியாது. நீ கந்தப்பண்ணனைக் கூட்டிக்கிட்டுப் போயிட்டு வா‘‘ என்றான். அதைக் கேட்ட கள்ளிப் பாளையம் முதலாளி ‘‘எங்க ஒரு அடியெடுத்து வைங்க பாப்பம்.’’ என்று மிரட்டினார்.

அந்த மிரட்டலுக்கு அஞ்சாத மாதேசு ‘‘எடுத்து வெச்சா என்னடா செய்வீங்க?’’ என்று கத்த, அடுத்தகணம். முதலாளி தன் அடியாளுக்கு கண்சாடைக் காட்டினார்.

அவன் சடசடவென ஒரு காரின் டிக்கியைத் திறந்தான். அடுத்த நிமிடம் அவன் கையில் பளபளக்கும் பட்டாக்கத்தி இருந்தது. அவ்வளவு பெரிய கத்தியை அங்கிருந்தவர்கள் யாரும் தமது வாழ்நாளில் பார்த்தவர்களில்லை. அனைவரும் திகைத்து நின்றார்கள்.

''இப்ப நகருங்கடாப் பாக்கலாம். எல்லாத்தையும் பொளந்துடறோம்.'' என்று அந்த அடியாள் அனைவர் முன்னாலும் அந்த பட்டாக்கத்தியை ஆட்டிக் காட்டினான்.

சந்துரு ஒருகணம் அதிர்ச்சியானான். இவ்வளவு முன்னேற்பாட்டோடு முதலாளிகள் வந்திருப்பார்கள் என்பதை அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அவன் கள்ளிப்பாளையம் முதலாளிகளைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக்கிறான். எந்த கொலைப் பாதகத்துக்கும் அஞ்சாதவர்கள். கொஞ்சம் ஏமாந்தால், உள்ளூரில் தங்களை எதிர்ப் பவர்களை அடித்துக் கொன்று காவிரியாற்றில் கல்லைக் கட்டி இறக்கி விடுவார்கள் என்று.

அதை இன்றுதான் நேரில் பார்க்கிறான்.

இந்த சண்டாள முதலாளிகளால் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப் பட்ட எத்தனையோ விசைத்தறி தொழிலாளிப் பெண்கள் தற்கொலை செய்துக் கொண்டு தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருக் கிறார்கள் என்று கூட அந்த ஊர் தொழிலாளர்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறான். இந்த அயோக்கியர்கள் வசமிருந்து கந்தப்பண்ணன் ஊரைவிட்டு தன் மனைவி வயது வந்தப் பெண்ணுடன் தப்பி வந்ததில் தப்பே இல்லை. இப்போது கந்தப்பன் மீதான கோபம் முதலாளிகளுக்கு அளவுக் கடந்து விட்டது.

இந்த சூழ்நிலையில் அந்தக் குடும்பத்தைக் கடத்திக் கொண்டு போனால் அவர்களின் நிலையென்ன? என்பதை நினைத்துப் பார்க்கவே அவன் நெஞ்சம் பதறியது.

இப்போது என்ன செய்வது?

16

தன் நண்பனை ஏதாவது யோசனை சொல்வான் என்று ஏறிட்டுப் பார்த்தான். ஆனால், அவன் எதிரியோடு நேருக்குநேர் மோதுவதில் காட்டிய ஆர்வத்தில் ஒருபங்குக்கூட யோசனை சொல்வதில் காட்டவில்லை. முதலாளிகள் ஆயுதத்தைப் பார்த்து தொழிலாளர்கள் பயந்து விட்டார்கள். என்பதில் ஆத்மதிருப்தி அடைந்தவர்களாக நின்றிருந்தார்கள். ஆயினும், அவர்கள் தாங்கள் தங்கள் இஷ்டப்படி ஆட இதுவொன்றும் உள்ளூர் அல்ல என்பதை மறக்கவில்லை.

ஆகவே, கத்தியை வைத்திருந்த அடியாளிடம் எச்சரிக்கை செய்து மறைத்து வைத்திருக்கும்படியே கூறினார்கள்.

சந்துருவை நோக்கித்தான் தொழிலாளர்கள் அனைவரின் பார்வையும் இருந்தது. இந்த நேரத்தில் அவனை நம்புவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியே தெரியவில்லை. அவனும் அதற்கு ஏற்றமாதிரி நடந்துக் கொண்டான். கள்ளிப்பாளையம் முதலாளிகளிடம் தயவாய் பேசிப் பார்த்தான் ''அண்ணா, கந்தப்பன் சம்சாரம் போலாமுல்ல...'' என்று. அவர்கள் அதற்கும் ஒத்துக் கொள்ளவில்லை. அந்த குடும்பத்திலிருந்து யாரும் எங்கும் நகரக்கூடாது என்று சொல்லி விட்டார்கள். வேறு வழியில்லாமல் சுற்றும் முற்றும் பார்த்தான். மாதேசை நம்பிப் பயனில்லை என்பது தெளிவாகத் தெரிய, சட்டென்று ஏழுமலையை தன்னருகே கூப்பிட்டான்.

அவரும் வர ''அண்ணா... நீங்க போயி கந்தப்பண்ணன் மொதலாளியக் கூட்டிக்கிட்டு வாங்க.''என்றான். எழுமலை அதை ஏற்றுக் கொண்டுப் புறப்பட்டார்.

அவர் போவதையே தொழிலாளர்கள் பார்த்துக் கொண்டு நின்றிருந் தார்கள். அவர்களுக்கென்னவொ கள்ளிப்பாளையம் முதலாளிகளிட மிருந்து கந்தப்பன் குடும்பம் தப்புமென்ற எண்ணம் அறவேயில்லை.

சந்துரு கந்தப்பனின் மனைவியையும் பிள்ளைகளையும் பரிதாபமாய் பார்த்தான். ஈர்குச்சி மாதியான தேகத்தில் கண்ணீரும்,கம்பலையுமான அவர்களின் தோற்றம் ஒட்டுமொத்த விசைத்தறித் தொழிலாளர்களின் இன்றைய நிலையை உணர்த்துவதாய் இருந்தது. ஒருநாளைக்குப் பண்ணிரண்டு மணிநேரம் உழைத்தும், மிச்சமிருப்பது எலும்பும் தோலும்தான். கந்தப்பனின் வயது வந்த மகள் பரிதாபகரமாய் காட்சியளித்தாள். தன்னால் இனி மானத்தோடு வாழமுடியுமா? என்று நினைத்துக் கொண்டிருப்பாள் போலும். உலகத்தில் எங்கே இருக்கிறது கடவுள்? திருப்பதி ஏழுமலையானும், திருத்தணி முருகனும் ஏழைகளின் உதவிக்கு வராமல் எங்கே போனார்கள்? அந்தப் பெண்ணுக்காக சந்துரு தன்னையறியாமல் கலங்க ஆரம்பித்தான்.

17

அவனுக்கு ஏனோ தன் உடன்பிறந்த தங்கையின் ஞாபகம் வந்து விட்டது. தன் நண்பனின் மனநிலையை அறிந்துக் கொண்ட மாதேசு

மெல்ல அவனருகே வந்து ஆறுதலாய் அவன் தோளில் கை வைத்தான்.

கொஞ்சநேரத்தில், கந்தப்பனின் முதலாளியான தேவராசைக் கூட்டிக்கொண்டு ஏழுமலை வந்து விட்டார்.

ஐம்பது வயதைக் கடந்த தேவராசு வந்ததும் வராததுமாய் தன் கரகரத்தக் குரலில் ''என்னப்பா, எதுக்கு என்னயிங்க கூப்டீங்க?'' என்று ஒன்றுமே தெரியாததுப் போலக் கேட்டார்.

இவ்வளவு சின்ன ஊரில் நடக்கும் இத்தனைப் பெரியசம்பவம் அந்த முதலாளியின் காதுக்கு இதுவரைப் போகாமலா இருந்திருக்கும்? ஏழுமலை சொல்லாமலா இங்கு கூட்டி வந்திருப்பார்? அது, நடிப் பென்று உணர்ந்துக் கொண்டாலும், சந்துரு நிதானமாய் தேவராசிடம் எல்லாவற்றையும் விளக்கினான். அவரும் ஏதோ கதைக்கேட்கும் பாவனையில் தலையாட்டிக் கேட்டார். அந்த உடல்மொழியே சந்துருவுக்கு அவநம்பிக்கையைக் கொடுத்து விட்டது. எனினும், தன் கடமையைச் சரியாகச் செய்ய முயன்றான். முழுவதுமாய் கேட்டு விட்டுச் சற்றும் யோசிக்காமல் தேவராசு கூறினார் ''இப்ப என்னால எதுவும் செய்யமுடியாது தம்பி...'' என்று.

இதைக் கேட்ட கந்தப்பன் குடும்பத்துக்கு அப்போதே உயிர் போய்விட்டது.

சந்துரு தன் உடம்பிலிருந்த வலுவெல்லாம் கால்வழியே இறங்கி பூமிக்குள் போவதாய் உணர்ந்தான். சற்று தூரத்திலிருந்த கள்ளிப்பாளையம் முதலாளிகளின் கேலிப் புன்சிரிப்பை அவனால் தாங்க முடியவில்லை. தன் நம்பிக்கையை மீட்டெடுத்துக் கொண்டு கெஞ்சினான்.

''அண்ணா... கொஞ்சம் மனசு வெய்ங்க, வந்திருக்குற அயோக்கிய னுங்கக்கிட்ட சிக்குனா கந்தப்பண்ணன் குடும்பமே சீரழிஞ்சிப் போயிரும். இப்ப நீங்க ஏத்துக்கறப் பணம் எங்கியும் போயிடாது. அந்த குடும்பமே ஒங்க பேக்டரியில ராப்பகலா உழைச்சுக் கட்டிடும்.''

தேவராசு சற்று யோசித்தார். கந்தப்பன் குடும்பத்தில் சிறுசுகளைத் தவிர்த்துப் பார்த்தால், மற்றவர்கள் உழைப்பாளிகள். இப்படி வேலைக்கு ஆள்கிடைப்பது கஷ்டம். அதுவுமல்லாமல், அவர் கொடுத்த வீட்டில்தான் தற்போது கந்தப்பன் குடும்பம் குடியிருக்கிறது. எனவே, கொஞ்சம் இறங்கி வந்தார்.

18

எனினும், ''செரிப்பா.. ஒங்க ஊர்ல பாக்கிப்பணத்தை வாங்கிக்கிட்டு இங்க ஓடிவந்த மாதிரி எங்கிட்ட வாங்கிட்டு வேறே ஊருக்கு போய்ட்டா...'' என்று இழுத்தார்.

சந்துரு சட்டென்று கந்தப்பன் குடும்பத்தைப் பார்த்தான். அவன் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்துக் கொண்டவளாய் கந்தப்பன் மனைவி தன் மூன்றுப் பிள்ளைகளை இழுத்துக் கொண்டு தேவராசு முன்னே வந்து நின்றார். ''பண்ணாடி... எங்கொளந்தைங்க சத்தியமா ஒங்கப் பணத்தக் கட்டாம நாங்க எங்கியும் போவமாட்டோம். நம்புங்க. ஊரூரா ஓடிப்பொழைக்க எங்க ஒடம்புலயுஞ் சத்தில்ல'' என்றார்.

தேவராசு அதை பெரியமனதுடன் ஏற்றுக்கொள்வதாய் முகபாவனைக் காட்டினார். பிறகு, இருபத்தையாயிரம் மட்டுமே தரமுடியும் என்று தெளிவாகக் கூறினார். இதைக் கேட்டதும் எல்லோருக்கும் சப்பென்று ஆகிவிட்டது.

இதற்குத்தானா அவர் இவ்வளவு பிகுகாட்டினார் என்று தோன்றியது. ஒன்றை லட்சம் எங்கே? வெறும் இருபத்தையாயிரம் எங்கே? இருந்தாலும், இந்த துவக்கம் அமைந்ததற்காக சந்துரு லேசாய் மகிழ்ந்தான். பாலைவனத்தில் தாகத்துக்கு அலைபவன் கண்ணில் மண்ணில் ஈரப்பதம் தென்பட்டாலும் சந்தோசம்தானே! அவன் பணம்தர ஒத்துக்கொண்டதற்காக தேவராசுக்கு முதலில் நன்றி சொன்னான்.

பிறகு, ''அண்ணா... இன்னுங் கொஞ்சம் பணம் சேத்திக் குடுத்தீங் கன்னா நாங்க எப்புடியாவது வந்தவுங்ககிட்டப் பேசி ஒத்துக்க வெச்சுடுவோம். பிரச்னை ஒரேடியா முடிஞ்சுடும்.'' என்றான்.

''இன்னுங் கொஞ்சம்னா எவ்வளவு?'' தேவராசு கேட்டார்.

''ஒங்களால எவ்வளவு தரமுடியுமோ, அதக் குடுங்க.''

''செரி, நீ இவ்வளவு தூரம் கேக்கறதுனால இன்னொரு மூணுமாசங் கழிச்சு இருபத்தையாயிரம் தர்றேன். என்னால அவ்வளவுதான் முடியும்.'' என்று இறுதியாய் சொன்னார்.

நிறைய ஏமாற்றமாய்தான் இருந்தது. என்றாலும், இதை விட்டாலும் வேறு வழியில்லையே! சந்துரு சரியென்று ஒத்துக் கொண்டான். கந்தப்பன் முகத்திலும் நிம்மதி பிறந்தது. சுற்றியிருந்த அனைவர் முகத்திலும் பிரச்னை தீர்ந்தால் சரியென்ற நம்பிக்கை தோன்றியது.

சந்துரு, தேவராசிடம் ''அண்ணா, நீங்களே வந்து கள்ளிப்பாளையத்து மொதலாளிங்கக் கிட்ட விசயத்தைச் சொல்லிடுங்க'' என்றான்.

19

அதற்கு அவர் ''நான் எதுக்குப்பா..'' என்று தயங்க, அவன் விடாமல், அவரின் கையைப் பிடித்தே கூட்டிச் சென்றான்.

தேவராசு கள்ளிப்பாளையத்துக்காரர்களிடம் தன்னால் என்ன முடியும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு ஒருகணம் கூட அந்த இடத்தில் நிற்காமல், 'உங்கள் பாடு! அவர்கள் பாடு!' என்பதாக நகர்ந்து விட்டார். அவர் போனதையடுத்து வந்த முதலாளிகள் என்ன சொல்லப் போகிறார்கள்? என்று சந்துரு உட்பட எல்லோரும் அவர்கள் முகத்தையே ஆவல் மேலிடப் பார்த்தார்கள்.

அதில், சற்று உயரமாய் முறுக்கு மீசையுடன் இருந்த முதலாளி ''என்னடா... கூலிக்காரப்பசங்களா... எங்களையென்னா கேணயனுங் கன்னு நெனச்சீங்களா? எங்கப் பணம் ஒன்றை லட்சத்துக்கு அம்பாதா யிரம் ரூவாதான் குடுப்பீங்களா?. .அதுவும் ரெண்டுத்தவணையா... மீதி ஒருலட்சத்துக்கு என்னடா வழி?'' என்றுக் கேட்டார்.

அந்தக் கேள்விக்கு சந்துரு என்ன பதில் சொல்லப் போகிறான்? என்பதை முதலாளிகள் மட்டுமல்ல, தொழிலாளர்களும் ஆவலாய் பார்த்தார்கள்.

அவன் தீர்மானமாய் சொன்னான் ''அண்ணா... அந்த ஒருலட்சத்த நீங்க தள்ளுபடி பண்ணத்தான் வேணும்.'' என்று

''எதுக்குப்பா தள்ளுபடி பண்ணனும்?'' என்று கேட்டவரிடம் சந்துரு சொன்னான்.

''அவுங்க ஆறுவருசம் ஒங்கப் பேக்டரியில ஒழைச்சிருக்குறாங்க அதுக்காக நீங்க இதைச் செஞ்சே தீரணும்.''

''அந்த ஆறுவருசமும் கூலி வாங்காம சும்மாவா எங்ககிட்ட வேலை செஞ்சாங்க? கை நீட்டிக் காசு வாங்கலே...''

''கூலி குடுத்தீங்க. ஆனா, அது நியாயமா இல்ல. ஒருபக்கம் பணப் பாக்கியக் குடுத்துட்டு அதுக்கு அநியாய வட்டியா கூலியக் கொறைச் சுட்டீங்க. அதனாலதான் அவுங்களால பாக்கியக் கட்ட முடியில.''

''அப்புடீன்னா அன்னிக்கே எங்கக்கிட்ட வாங்குனப் பணத்தத் திருப்பிக் குடுத்துட்டு வேறஎடம் பாத்திருக்கணும்.'' ''அது முடியாமத் தான் அவுங்க ஆறுவருசம் ஒங்களுக்கு ஒழைச்சுப் போட்டிருக்குறாங்க. இத ஏத்துக்கிட்டுப் பணத்தத் தள்ளுபடி பண்ணுங்க.''

20

என்ற சந்துரு தான் பேசியது சரிதானா? என்பது போல கந்தப்பன் குடும்பத்தையும் சுற்றி நின்ற தொழிலாளர்களையும் ஏறெடுத்துப் பார்த்தான்.

அவர்கள் அவன் நியாயத்தைப் பேசுவதில் சந்தோசப்பட்டார்கள். எனவே, ஆதரித்து உற்சாகமாய் குரல் கொடுத்தார்கள். மாதேசு தன் நண்பனின் புத்திசாலித்தனத்தில் பெருமைப் பட்டான்.

ஆனால், முதலில் பேசிய மீசைக்கார முதலாளி ஆத்திரப்பட்டான்.

''என்னடா நாயிங்களா... தருமநாயம் பேசுறீங்க. கந்தப்பன் பொண்டாட்டி எங்கக்கிட்டியா படுத்துப் புள்ளப்பெத்தா? போனா போச்சாது நம்பளுதானேன்னு வுடறதுக்கு. அதெல்லாம் முடியாது. இப்பவே காச வையிங்க...'' என்று அவன் சொன்னதுதான் தாமதம் அந்த இடம் தீக்கங்காய் மாறியது.

கந்தப்பன் மனைவி அவமானம் தாங்க முடியாமல் தலையில் அடித்துக் கொண்டு அழ, அவர் மகள் அம்மாவைப் பார்த்து வேதனைப் பட்டாள். இதைப் பார்த்த மாதேசு முற்றிலும் பொறுமையிழந்தான்.

அவனது ரத்தம் கொதித்தது. எவ்வளவு கேவலமானப் பேச்சுக்கள் இது. எனவே, ''டேய், மொன்ன ராசுகோலு.. யாரப் பாத்து என்னடா கேட்டே..? இந்த மாதிரி ஈனத்தனமான வேலையெல்லாம் ஒங்கூட்ல நடக்கும்டா, தொழிலாளிங்க மானத்தோட இருக்குறதாலத்தான் கூலிக்காரங்களா பொழைக்கிறாங்க. கூட்டிக் குடுக்குறப்

புத்தியிருக்குறதுனாலதான் நீங்க மொதலாளியா இருக்குறீங்க'' என்று கத்தினான்.

இதைக் கேட்டதும் அந்த முதலாளி வெறிப்பிடித்தவன் போலானான்.

''அவுங்களச் சொன்னா ஒனக்கு ஏண்டா கோவம் பொத்துக்கிட்டு வருது? அந்த நாதாரிக் குடும்பத்துக்கு மாமா வேலப்பாக்குறவனா நீ...''

இதற்கு மாதேசு ஏதோ அசிங்கமாய் சொல்ல வாயெடுக்க, சந்துரு அவனைத் தடுத்தான். ''நீ கொஞ்சம் சும்மாயிருப்பா...'' என்று அதட்டினான். தன் பொறுமையைக் கை விடாமல், மறுபடியும் முதலாளிகளிடம் தன்மையாய் பேசினான் ''அண்ணா... நான் சொன்னத யோசிங்க. கந்தப்பன் குடும்பத்த வுட்டுங்க.'' என்றான்.

ஆனால், அவர்கள் கேட்க மறுத்தார்கள். சந்துரு விடாமல் அவர்களிடம் வற்புறுத்திச் சொன்னான்.

21

அவனுக்கு ஆதரவாய் கந்தப்பன் குடும்பத்தோடு ஏழுமலை, ஓபுளி உட்பட வெளியூரிலிருந்து வந்து இங்கு வேலை செய்யும் அனைத்துத் தொழிலாளர்களுமே கள்ளிப்பாளையத்து முதலாளிகளிடம் ஒரு லட்சரூபாயைத் தள்ளுபடி செய்யச் சொல்லிப் பேச, ஒருகட்டத்தில் வாக்குவாதம் முற்றி சட்டென யாரும் எதிர்பாராமல், முதலாளிகள் அடியாட்களுக்கு கண்ணைக் காட்ட அவர்கள் கந்தப்பன் மகள் மேல் கை வைத்துக் காருக்கு இழுத்தார்கள்.

அடுத்தகணம் பட்பட்டென்று கார்களின் மீது கற்கள் பட்டுத் தெறித்தன. கண்ணாடிகள் சிலீரென்று உடையும் சத்தம் கேட்டது. சந்துரு திகைத்துப் போனான். ஒரேநேரத்தில் அவ்வளவு கற்கள் தொழிலாளர்களுக்கு எங்கிருந்துக் கிடைத்ததென்று அவனுக்குத் தெரியவில்லை. எனினும், ஒன்று புரிந்தது. தான் முதலாளிகளிடம் சமாதானம் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் மாதேசு இப்படியொரு சூழ்நிலையை எதிர்பார்த்து எல்லோரையும் தயார் செய்து வைத்திருக்கிறான். விசயம் கை மீறிப் போய் விட்டதென்றாலும், கந்தப்பன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற தொழிலாளர்களின் உறுதியைப் பார்த்து சந்தோசப்பட்டான். இனி வாளாவிருப்பது சரியல்ல என்று தோன்றியது.

மேலும் யோசிக்காமல் களத்தில் இறங்கினான். முதலாளிகளும், அடியாட்களும் கவ்வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் காருக்குள் நுழைந்து ஒளிய ஆரம்பித்தார்கள்.

அவன் கந்தப்பன் குடும்பத்தை முதலில் அப்புறப்படுத்தி பத்திரமாய் ஓரிடத்தில் நிற்க வைத்தான்.

அங்கிருந்துத் திரும்பிப் பார்க்க மந்தையே போர்க்களம் போலக் காட்சியளித்தது.

முதலில், கோயில் அருகேயிருந்து தன்னுடன் வந்தவர்கள் சிறிய எண்ணிக்கையில்தான் இருந்தார்கள். இப்போது தொழிலாளர்கள் நூற்றுக்கணக்கில் சேர்ந்து விட்டார்கள். கிட்டத்தட்ட வெளியூரிலிருந்து வந்த அனைவருமே யார் எந்த ஊரென்று இல்லாமல் அணிதிரண்டு முதலாளிகள் மீது தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தார்கள். மாதேசு அவர்களுக்கு முன்னிலையில் இருந்தான். சட்டென்று அவன் பெரிய கல்லால் ஒருகாரின் டீசல் டேங்கை உடைத்தான். யாரும் எதிர்பாராத தருணத்தில் அதுவரை தான் மறைத்து வைத்திருந்த பாட்டிலில் டீசலைப் பிடித்தான். மளமளவென்று முதலாளிகளின் கார்களின் மீது ஊற்றினான். இதைக்கண்டு அதிர்ச்சியான சந்துரு கிட்டே ஓடி வருவதற்குள் தொழிலாளி ஒருவரிடமிருந்து தீப்பெட்டியை வாங்கி குச்சியைக் கிழிக்க ஆரம்பித்தான். காருக்குள் இருந்து முதலாளிகள் அலறினார்கள்.

22

மின்னல் வேகத்தில் அந்த இடத்தையடைந்த சந்துரு, மாதேசின் கையிலிருந்த தீப்பெட்டியைத் தட்டி விட்டான்.

அதையும் மீறிக் கொண்டு மாதேசு கீழே கிடந்த தீப்பெட்டியை எடுக்க முயல, தன் நண்பனென்றும் பாராமல் அவன் இடுப்பில் ஓங்கி மிதித்தான். அவன் எட்டப் போய் விழுந்தான்.

அதே வேகம் மாறாமல் எழுந்த மாதேசு ''அவனுங்கள கொளுத்துனா ஒனக்கென்னடா வந்துச்சி?'' என்று கத்தினான்.

''அவனுங்க செத்தா இங்கிருக்குற எல்லாரும் காலம்பூரா ஜெயில்ல கெடக்குணும்டா...'' என்று எதிர்குரல் கொடுத்தான்.

இதற்குள் உள்ளூர்வாசிகள் கூட்டமாய் அங்கே வந்தார்கள். இதுவரை எத்தனையோ முறை வெளியூர் முதலாளிகள் இந்த ஊருக்கு அடைக்கலம் தேடி வந்தவர்களைப் படுகேவலமாய் அடித்து இழுத்துச் செல்வதை வேடிக்கைப் பார்த்தவர்கள்தான் அவர்கள். ஆனால், இப்போது தங்கள் வர்க்கப் பாசத்தைக் காட்டினார்கள். முதலாளிகள் வந்த கார்களைச் சுற்றி நின்றுக்கொண்டார்கள். அதைப் பார்த்ததும் சொல்லி வைத்தாற்போலக் கல்லெறி நின்றது. போர்க்களம் அமைதியானது.

உள்ளூரைச் சேர்ந்த ஒருவன் எல்லோருக்கும் பொதுவாய் கத்தினான். ''ஏண்டா பொழைக்க வந்தவனுங்களா... நீங்க கொளுத்திப் புட்டுப் ஊரவுட்டுப் போயிடுவீங்க, நாங்க போயி போலீசுல கைக்கட்டி நிக்கணுமா?'' என்று.

அனைவரும் அமைதியாய் இருந்தார்கள். இதைப் பார்த்த இன்னொரு உள்ளூர்வாசி ''ஏம்பா சந்துரு, நீதான் இவுங்களுக்குத் தலைவனா? இதெல்லாம் நல்லாவாயிருக்கு?'' என்று பொதுநியாயம் பேசினான்.

சந்துரு மெல்ல முன்னால் வந்து நின்றான். ''அண்ணா, வயசுப் புள்ளய கையப் புடிச்சு இழுத்தா யார்தான் சும்மாயிருப்பாங்க. ஒங்க வூட்ல இது நடந்தா நீங்க கையக் கட்டிக்கிட்டு வேடிக்கைப் பாப்பீங்களா?'' என்று நியாயவாதியிடம் கேட்டான். அந்த கேள்வியில் அவன் வாயடைத்துப் போனான்.

ஆயினும், ஊர் பெரியமனிதர் போலத் தெரிந்த மற்றொருவர் ''ஒங்கச் சண்டைய எங்கூர்ல போடாதீங்க. எதாயிருந்தாலும் ஊருக்கு வெளியப் போயி வச்சுக்குங்க.'' என்றார்.

இதைக் கேட்டதும் தான் தாமதம்...

23

கள்ளிப்பாளையம் முதலாளிகளும் அவர்களின் அடியாட்களும் தங்களுக்கான சிக்னலாய் எடுத்துக் கொண்டு சேதமான ஒருகாரை அம்போவென்று விட்டுவிட்டு அடுத்த காரில் அடைந்துக் கொண்டு தலை தெறிக்கும் வேகத்தில் விரைந்தார்கள்.

தொழிலாளர்கள் அனைவரது முகத்திலும் நிம்மதி பிறந்தது. ஆனால், அது தற்காலிகமானது தான் என்பதை சந்துரு உட்பட அவர்கள் யாரும் அப்போது உணரவில்லை.

அத்தியாயம்

2

1

கந்தப்பன் தன் குடும்பத்தோடு வசித்த பழைய வீடு மிகவும் மோசமாய் இருந்தது. மண் சுவர் பெயர்ந்து பார்க்க கோரமாய் காட்சியளித்தது. தரையும் கூட காரைப் போடப்படாத கட்டாந்தரைதான். நாட்டு ஓடுகளால் வேயப்பட்ட கூரை. மரச் சட்டங்கள் உளுத்துப் போய் எந்த நேரம் தலையில் விழுமோயென்று அச்சமாய் இருந்தது. விசைத்தறி முதலாளி தேவராசு கொடுத்த இந்த வீட்டை விட்டாலும், பாவம் கந்தப்பனுக்கு வேறு வழியில்லை. சந்துரு, மாதேசு, ஏழுமலை என மூவரும் அவரையும் அந்த வீட்டையும் பரிதாபமாய் பார்த்தார்கள். சந்துரு இதை விட கோயில் வராண்டாவிலும், முதலாளிகளின் வீட்டுத் திண்ணையிலும் படுத்துக் கிடக்கும் தங்கள் வாழ்க்கை தேவலாம் போல என்று நினைத்துக் கொண்டான். எனினும், தாம் தனி மனிதர்கள். கந்தப்பன் பிள்ளைக் குட்டிகளோடு இருப்பவர் அவருக்கு எலி வளையானாலும் தனி வளை என்பது

போல இதுதான் சரி என்பதாய் தோன்றியது. என்ன கொஞ்சம் பெரிய எலி வளை அவ்வளவுதான்.

தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் நாட்டு ஓடுகளைக் கூரையாய் கொண்ட பழைய வீடுகளைப் பார்ப்பது கடினம். பெரும்பாலும் ஓலைக் குடிசைகளோ அல்லது சிறிய சாளைகளோதான் அதிகம். அதை விட்டால் சீமை ஓடுகள் வேய்ந்த வீடுகளே இருக்கும். வட மாவட்டங்களில் தான் இப்படி நாட்டு ஓடுகள் நிறைந்த பாரம்பரிய வீடுகள் ஆங்காங்கே இருக்கின்றன. எல்லா வீட்டுகளிலும் திண்ணைகள் உண்டு. அதன் நீட்சியாய் தான் ஆந்திர எல்லையில் இருக்கும் இந்த வீட்டையும் சந்துரு கண்ணுற்றான்.

ஊர் சுற்றிப் பார்ப்பதில் ஆர்வமுள்ள அவனுக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் பேட்டைக்கு அருகாமையில் உள்ள மற்ற ஊர்களை பஸ் ஏறிப் போய் பார்த்து வருவது மனதுக்கு விருப்பமாய் இருக்கும்.

தமிழக எல்லையில் உள்ள திருத்தணி, பள்ளிப்பட்டு. பொதட்டூர் பேட்டை இங்கெல்லாம் தெருக்களில் இந்த மாதிரி பாரம்பரிய வீடுகளை கண்டிருக்கிறான்.

கந்தப்பன் குடியிருந்த வீடு சிதலமடைந்த நிலையில் காணப் பட்டாலும், பெரியதாய் இருந்தது. அநேகமாய், அவர் முதலாளி தேவராசின் முன்னோர்கள் வசித்த பழைய வீடாய் இருக்கலாம். இதை கை விட்டு விசைத்தறிகள் போட வசதியாய் ஊருக்குள் தனியாய் புதுவீடு கட்டிக் கொண்டு விட்டார் போலும்.

2

சந்துரு, மாதேசு, ஏழுமலை மூவரும் கள்ளிப்பாளையம் முதலாளிகள் உயிருக்குப் பயந்து மந்தையை விட்டு ஓடியதும், மற்ற தொழிலாளர் களிடம் கொஞ்ச நேரம் பேசினார்கள். ஒத்துழைப்பு கொடுத்ததற்காக நன்றி கூறினார்கள். எதிர்காலத்தில் இந்த ஒற்றுமை நீடித்தால் நல்லது என புரிய வைத்து அனுப்பி விட்டு கந்தப்பன் குடும்பத்தை ஆறுதலாய் அவர்கள் வீட்டில் விட வந்த போது அவர் மனைவி அந்த பரிதாபமான நிலையிலும் மூவரையும் வீட்டிற்குள் அழைத்து உட்கார வைத்து பாலில்லாத கருப்பு டீ போட்டுக் கொடுத்தார்.

தன் டீயைக் குடித்துக்கொண்டே சந்துரு மெல்ல நோட்டமிட்டான். கந்தப்பன் உடம்பில் நடுக்கம் குறையவில்லை. அவரே

அப்படியென்றால் இளம்பெண்ணான அவர் மகளைப் பற்றி சொல்லவே வேண்டாம். முகம் வெளிறி, கண்கள் இன்னும் கூட நீரை தேக்கியிருந்தன. அவளது சிறு வயது தம்பிகள் இருவரும் அக்காவை கட்டிக் கொண்டு கோழிக் குஞ்சாய் தரையில் உட்கார்ந்து இருந்தார்கள்.

பார்க்க மிகப் பரிதாபமாய் காணப்பட்டார்கள்.

சந்துரு, அந்தப் பெண்ணிடம் ஆறுதலாய் நாலு வார்த்தைகள் பேச ஆசைப்பட்டான். அவன் ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன்னால் கந்தப்பன் திடீரென்று சிறு குழந்தைப் போல, சற்று முன் நடந்ததை நினைத்து ஒரு துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கி அழுதார்.

திடுக்கிட்ட சந்துரு அவரை அதட்டினான். ''அண்ணா... சும்மாயிருங்க. அதயே நெனச்சுக்கிட்டு இருக்காதீங்க. குடும்பத்துல பெரியவர் நீங்க, புள்ளைங்களுக்கு ஆறுதல் சொல்றத வுட்டுட்டு இதென்னா இப்புடி பண்றீங்க?'' என்று.

அவனைத் தொடர்ந்த ஏழுமலை ''கந்தப்பா... அதான் ஒங் குடும்பத்துக்கு ஒண்ணும் ஆகலயில்ல. அப்புறமென்னாத்துக்கு இன்னும் கண்ணுல தண்ணியுடுற?'' என்று அவர் வயதையொத்தவர் என்பதால் ஒருமையில் விளித்தார்.

மாதேசு எதுவும் பேசாமல் அமைதியாய் இருந்தான். அவனையறி யாமல் கந்தப்பன் அழுவதைப் பார்த்து விட்டு தன் கையில் இருந்த அலுமினிய டீ தம்ளரை கீழே வைத்து விட்டான்.

கந்தப்பன் தன் அழுகையை நிறுத்தாமல் ''சந்துரு தம்பி... ஒங்களயெல்லா நா சென்மத்துக்கும் மறக்க மாட்டேன். சாமி மாதிரி வந்து எம் புள்ள மானத்தக் காப்பாத்துனீங்க...'' என்று கையெடுத்துக் கும்பிட்டார்.

மனதுக்கு கஷ்டமாய் இருந்தது.

3

அதைப் பார்த்த அவர் மகள் ''ஆமாண்ணா... அந்த கள்ளிப் பாளையத்து நாய்ங்க என்ன கொண்டுக்கிட்டுப் போயிருந்தா

இன்னேரம் என்னத்தையாவது செஞ்சு செத்திருப்பேன். எம் மானத்தையும், உசுரையையும் காப்பாத்துனதுக்கு ரொம்ப நன்றி...'' என சட்டென உடம்பெல்லாம் கூச தலையை குனிந்துக் கொண்டு கேவினாள். சந்துருவும் மற்றவர்களும் தர்மசங்கடப்பட்டாலும், அந்த சின்னப் பெண்ணின் வேதனையை உணர்ந்தார்கள்.

அந்த நேரம் கந்தப்பன் மனைவியும் இதே ரீதியில் பேச சந்துரு ''வுடுங்கம்மா நாம்ப எல்லாரும் ஒரே மாதிரி சூழ்நிலமையில தான் இருக்குறோம். நாளைக்கி எங்களுக்கு ஒரு கஷ்டம் வந்தா நீங்க வுட்டுடுவீங்களா என்ன...'' என அவர்களை அடக்கினான்.

பிறகு, கந்தப்பன் மகளைப் பார்த்து கேட்டான் ''ஒம் பேரு என்னம்மா?'' என அவள் ''எம் பேரு பொன்னிண்ணா.'' என்றாள். அதே போல அவள் தம்பிகள் இருவரையும் பெயர் விசாரித்தான். அவர்களை சமீபத்தில் தான் கந்தப்பன் மந்தையில் இருக்கும் பள்ளியில் சேர்த்திருந்தார். அங்கே, தமிழ் சொல்லித் தருகிறார்கள்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த நேரத்தில்...

பேட்டையில் தொழிலாளர்களிடமிருந்து உயிர் பிழைத்தோடிய முதலாளிகள் நகரம் காவல்நிலையத்துக்குச் சென்றார்கள். பேட்டை கிராமம் அதன் எல்லைக்குள்தான் வருகிறது. பேட்டையில், விசைத் தறித் தொழிலாளர்கள் தாம் கொடுத்த பணப்பாக்கியை நியாயமாக கேட்கப் போனதற்காக, தங்களை டீசல் ஊற்றி எரிக்க வந்தார்கள் என்று ஒரு புகாரை அங்கே கொடுத்தார்கள்.

சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டுமென்றும், தாம் பயந்து விட்டு விட்டு வந்த காரை மீட்டுக் கொடுக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்கள். அங்கிருந்த சட்டம் ஒழுங்கு காவலரான அதிகாரி தன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இந்த பகுதிக்குள் இப்படியொரு சம்பவமா? என சினம் கொண்டார். சடுதியில் காவல்துறை ஒரு வாகனத்தில் புறப்பட்டது.

நகரத்தில் இருந்து பெரிய தூரமில்லை என்பதால் கொஞ்ச நேரத்தில் காவல் வாகனம் பேட்டைக்கு வந்து விட்டது.

கள்ளிப்பாளையம் முதலாளிகள் மந்தையில் நின்றிருந்த தொழிலாளர் களால் சேதப்படுத்தப்பட்ட காரை காவல் அதிகாரியிடம் காட்டி ஒன்றுக்கு இரண்டாக சொன்னார்கள்.

4

அதிகாரிக்கு கோபம் தலைக்கேறியது.

தன்னுடன் வந்த எழுத்தரிடம் ''யோவ் ரைட்டர். காரோட சேதத்த குறிய்யா?'' என்று கத்தினார்.

காவலர்களிடம் ''இந்த மொதலாளிங்கள கொல்ல வந்த அந்த நாய்கள தேடிப் புடிச்சுக்கிட்டு வாங்கையய்யா...'' என உத்திரவிட்டார்.

உடைந்த காரின் மீது இன்னும் எரிபொருள் வாடை மிச்சமிருந்தது. அது அவரை கள்ளிப்பாளையத்துக்காரர்கள் சொன்னதையெல்லாம் நம்ப வைத்தது. எனவே, வெறி பிடித்தது போலானார்.

அதைப் பார்த்த முதலாளிகளுக்கு சந்தோசம் தாளவில்லை.

அதிகாரி உத்திரவின் பேரில் காவலர்கள் மந்தையில் இருந்த டீக் கடையில் கந்தப்பனைப் பற்றியும் மற்றவர்கள் பற்றியும் விசாரிக்க ஆரம்பித்தார்கள். அதையும் அதிகாரியையும், முதலாளிகளையும் தேநீர் அருந்த வந்த ஓபுளி தூரத்திலிருந்து பார்த்து விட்டான். அவன் மூளையில் விபரீதம் உறைக்க ஆரம்பித்தது.

சட்டென தன் நோக்கத்தை மாற்றிக் கொண்டு விடுவிடுவென கந்தப்பன் வீடு நோக்கி நடந்தான்.

அதே நேரம் பேட்டைக்கு போலீஸ் வந்திருப்பது தெரிந்து உள்ளூர் காரர்கள் ஒவ்வொருவராய் கூட தொடங்கினார்கள். அங்கே இப்படி போலீசார் வருவது அரிது. அப்படி வந்தாலும் அது குற்றவாளிகளை தேடி அல்ல. ஏதாவது ஊர் விசேடங்களுக்கு பெரிய மனிதர்கள் அழைப்பின் பேரில் விருந்தினர்களாய் கலந்துக் கொள்ள வருவார்கள். சுதந்திர தின கொடியேற்றமாய் கூட இருக்கும்.

இப்போது முதல் முறை ஒரு குற்றச் செயலுக்கு விசாரிக்க வந்திருக்கிறார்கள். ஊர்காரர்கள் சிலருக்கு தங்கள் ஊருக்கு ஏதோ வந்தேறிகளால் கெடுதி ஏற்பட்டிருப்பதாய் கவலை எழுந்தது. எனவே, அவர்கள் பதட்டமடையத் தவறவில்லை.

கந்தப்பன் வீட்டுக்கு வந்த ஓபுளி உள்ளே நுழைந்து வெளியில் இருந்து வந்ததில் இருட்டில் கண்ணைக் கசக்கினான். அவனது அவசரத்தைப்

பார்த்து கந்தப்பன் குடும்பமும் மற்றவர்களும் புரியாமல் விழிக்க, ஓபுளி ''ஏம்பா,இவனே...'' என்று கத்தினான். அவனுக்கு எப்போதும் சட்டென பழகியவர்களின் பெயர் வாயில் வராது.

5

அதைக் கேட்டவர்களில் சந்துரு முதலில் விசாரித்தான் ''ஓபுளி என்னாச்சி... இப்ப நீ யாரக் கூப்ட?'' என்று

அவன் ''ஒன்னத்தாம்பா... பேட்டைக்கி போலீஸ் வந்திருக்குது. அந்த கள்ளிப்பாளையத்து மொதலாளிங்க கூட வந்திருக்குறானுங்க.'' என சட்டென பதட்டமாய் கூறினான்.

அடுத்த கணம் எல்லோரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

சந்துருவுக்கு தெளிவாய் புரிந்து விட்டது, சட்டம் தன் கடமையை செய்ய ஆரம்பித்து விட்டது. அவனுக்கு மனதில் லேசாய் அச்ச உணர்வு எழுந்தது. ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ள வில்லை. என்றாலும், கந்தப்பன் குடும்பம் மிக மோசமான அச்சத்தில் தவித்தது. மாதேசும், ஏழுமலையும் அவர்களோடு ஒப்பிடும்போது சற்று தேவலை.

கந்தப்பனுக்கு தன்னை விட சந்துரு, மாதேசு இருவரின் மீதுதான் கள்ளிப்பாளையம் முதலாளிகள் போலீசில் அதிகமாய் சொல்லி யிருக்கக் கூடும். ஏனெனில், அவர்கள் தானே தன்னையும், தன் குடும்பத்தையும் காப்பாற்ற தொழிலாளர்களை திரட்டிக் கொண்டு வந்தவர்கள்.

எனவே தன்னையும் அறியாமல் அவர் முணுமுணுத்தார். ''நீங்க ரெண்டுபேரும் இங்கயிருந்துப் போயிடுங்கப்பா...'' என்று. மேலும் தொடர்ந்து...

''ஆமா, ஒடனே கிளம்புங்க...''

''சீக்கிரம் போங்கப்பா...''

''ம். நடங்க...''

என்று திரும்பத் திரும்ப ஏதோ பீடைப் பிடித்தவரைப் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒலியைக் கூட்டிச் சொன்னார்.

சந்துரு சட்டென அவர் அருகில் நகர்ந்து வந்து உலுக்கினான்.

''கந்தப்பண்ணா என்னா சொல்றீங்க?''

அவர் அவனிடம் நேருக்கு நேர் பார்த்துக் கூறினார்.

''தம்பி... போலீசோட மொதலாளிங்க வந்திருக்குறாங்கன்னா சங்கதி பெருசாத்தான் இருக்கும். எங்களுக்குகாவ நீங்க பலியாவ வேணாம். அவுங்க கண்ணுல படாம இங்கிருந்து எங்கியாவது போயிடுங்க.''

6

இதையே கந்தப்பன் மனைவியும் சொல்ல, சட்டென அவர்களின் அச்சம் தொற்றிக் கொண்டவனாய் மாதேசுக் கூட பதட்டமாய் ''நாம்ப போயிரலாம்பா...'' என்றான்.

எல்லா முரட்டுத் துணிச்சலுக்கும் ஒரு எதிர்மறை உண்டு. சட்டென்று வரும் கோபத்தைப் போலவே திடுமென பயமும் ஏற்படும். அதை இந்த சமயத்தில் மாதேசு நிரூபித்தான். ஏற்கனவே, சொந்த ஊரான மணியம்பாளையத்தில் அவசரப்பட்டு முதலாளிக் கவுண்டன் மீது கை வைத்ததால் வந்த பாதிப்பை தன் மனதில் நிறுத்திக் கொண்ட சந்துரு, இந்த முறை உடனே எந்த முடிவுக்கும் வரவில்லை. யோசித்தான். இவர்கள் சொல்வது போல இந்த ஊரை விட்டுப் போவதென்றால் எங்கே போவது? இன்னொரு விசைத்தறி மையத்திற்குத்தான் போக வேண்டும். அது எது?

அவன் யோசனையைப் புரிந்துக் கொண்ட ஏழுமலை கூட ''தம்பி, நீயொன்னும் யோசிக்க வேணாம். இப்பவே பொறப்பட்டு ரெண்டு பேரும் புத்தூருக்குப் போயிடுங்க. அங்கியும் நம்மப் பக்கத்து ஆளுங்க இருக்குறாங்க. இங்க மாதிரியே அங்கியும் நெறையாத் தறியோடுது. ஒண்ணும் பிரச்னையில்ல...'' என்று கூறினார்.

புத்தூர் என்பது ஆந்திர மாநிலத்தில் தான் இருக்கிறது. ஏழுமலை சொன்னது உண்மைதான் அங்கும் ஏராளமாய் தறிகள் ஓடுகின்றன.

ஆனால், இப்படி எத்தனை நாட்களுக்கு முதலாளிகளுக்குப் பயந்துக் கொண்டு ஊர் ஊராய் ஓடி ஒளிவது? இருவர் மட்டும் ஓடி விட்டால் கந்தப்பன் குடும்பத்தையோ, ஏழுமலையையோ, மற்ற தொழிலாளர் களையோ காவல்துறை விட்டு விடுமா? அவர்களைப் பிடித்துக்

கொண்டுப் போக மாட்டார்களா? ஒரு சிக்கலைத் தீர்க்கப் போய் மீள முடியாத இன்னொன்றில் அல்லவா கந்தப்பன் குடும்பம் சிக்கிக் கொண்டிருக்கிறது. அவர்களையும், நம்மை நம்பிய தொழிலாளர் களையும் நட்டாற்றில் விட்டு விட்டு எப்படித் தப்பிப் போவது?

'ஓடுற நாயக் கண்டா துரத்துற நாய்க்கு இன்னுந் தெகிரியம் வரும்!' என்று ஊரில் சொலாந்தரம் சொல்வார்கள். அந்த தைரியத்தை முதலாளிகளுக்கு ஏன் தர வேண்டும்? எதிர்ப்பது என்று முடிவாகி விட்டது. அதைக் கடைசி வரைச் செய்துப் பார்த்தால் என்ன? உயிராப் போய்விடும்? அப்படிப் போனால்தான் போகட்டுமே...

சந்துரு திட்டவட்டமாய் ஒரு முடிவுக்கு வந்தான். அவன் மனதில் வைராக்கியம் பிறந்தது. எனவே, அழுந்தம் திருத்தமாய் ''அண்ணா... நாங்க யாரும் எங்கியும் போகப் போறதில்ல. வாழ்வா, சாவான்னு ரெண்டுல ஒண்ணு பாத்துடுவோம்'' என்று உறுதியாய் சொன்னான்.

7

அதில், ஒரு முன்னோடிக்குரிய தன்னம்பிக்கையும், தைரிய குணமும் வெளிப்பட்டது. சொன்னதோடு நில்லாமல் சட்டென தன் இடத்தை விட்டு எழுந்தவன் மற்றவர்களையும் எழச் சொன்னான்.

அதைப் பார்த்த ஓபுளி ''இவனே... நீ ரொம்ப தில்லான ஆளுப்பா.'' எனப் பாராட்டி விட்டு அதற்கு மேல் தாமதிக்காமல் உற்சாகத்துடன் ''வாங்க, எல்லாரும் மந்தைக்குப் போலாம்'' குரல் கொடுத்தான். மாதேசுக்கு லேசாய் வெட்கம் வர, தானும் எழுந்து ஏழுமலை எழ கை கொடுத்தான்.

ஆனால், கந்தப்பன் மட்டும் தங்களுக்காக மற்றவர்கள் துன்பப் படுவதைச் சகியாதவராய்இருந்தார்.. அவரை சந்துரு சமாதானம் செய்தான்.

''அண்ணா... நாங்க, நீங்கன்னு இனிமே பிரிச்சுப் பாக்காதீங்க. இன்னியிலிருந்து நாம எல்லாரும் ஒண்ணுதான்.''

அவன் சொல்லி வாய் மூடவில்லை. கந்தப்பன் மனைவி ''த்தா... எந்திரிப்பா. சந்துரு இவ்வளவு சொல்லுதுல்ல... பொன்னி வாம்மா நாம்பளும் அண்ணனோட மந்தைக்குப் போலாம். வர்றது வரட்டும்.'' என்று வரிந்து கட்டினார்.

அவர்கள் சிறுவர்களை மட்டும் வீட்டில் இருக்கச் சொல்லி விட்டு புறப்பட்டார்கள். வழி நெடுக கந்தப்பன் என்ன நடக்கப் போகிறதோ? என பயந்தபடி நடந்தார்.

அவர்கள் மந்தைக்குப் போய் சேரும் முன்னால் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் கலைந்துப் போயிருந்த தொழிலாளர்களில் கணிசமான பேர் மறுபடியும் அங்கே கூடி விட்டார்கள்.

சந்துரு, மாதேசு, ஏழுமலை மற்றும் கந்தப்பன் குடும்பம் வர, அவர்களைப் பார்த்த கணத்தில் கள்ளிப்பாளையம் முதலாளிகள் ''இவுங்கதான்...இவுங்கதான்..!'' என்று காவல் ஆய்வாளரிடம் பரபரத்தார்கள்.

அவர் சந்துருவையும், மாதேசையும் அவர் தன் நெற்றிக்கண் கொண்டுப் பார்த்தார்.

அதைப் பொருட்படுத்தாத சந்துரு ஆய்வாளரிடம் தம் பக்கத்து நியாயத்தைச் சொல்ல வாயெடுக்க, முந்திக் கொண்ட அதிகாரி ''என்னடா... வந்தேறி நாய்ங்களா... பொழைக்க வந்த எடத்துல வாலாட்டுறீங்களா.'' என்று எகத்தாளமாய் கேட்டார். அதற்குச் சந்துரு காட்டமாய் பதில் சொன்னான். ''சார், நாங்கவொண்ணும் வந்தேறிங்க இல்ல இந்த நாட்டைச் சேந்தவுங்கதான். கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க.'' என்று.

8

''டேய்... ஊருவுட்டு ஊரு பொழைக்க வந்தாலே வந்தேறிங்க தாண்டா...'' ஆறடி உயரம் இருந்த அந்த காவல்துறை அதிகாரி தன் நக்கலைத் தொடர்ந்தார்.

அதைக் கேட்ட மாதேசு ''அய்யா, சொந்த ஊரு ஸ்டேசன்லயே வேலப் பாக்குறாரு போல இருக்குது.'' என்று பதிலுக்கு கலாய்க்க, அதிகாரி சட்டென்று அவனை அடிக்க கையை ஓங்கிக் கொண்டு வந்தார் ''என்னடா, எச்சிழைப் பொணைக்கிற நாயே... கொழுப்பாடா.'' என்று முகச்சதைத் துடிக்கக் கத்தினார்.

அதைப் பார்த்த சந்துருவுக்கு கோபம் மீறியது.

''சார் கைய மேல வெக்கிற வேலயெல்லாம் வெச்சிக்காதீங்க.'' என்று எச்சரிக்கை செய்தான்.

அவனை ஏற இறங்கப் பார்த்த காவல் ஆய்வாளர் ஆளை விழுங்கி விடுவதைப் போல எடைப் போட்டார்.

பிறகு, ''நீதான் இந்த ரவுடிக் கூட்டத்துக்குத் தலைவனாடா?'' என்று கேட்டார்.

''இங்க யாரும் ரவுடிங்களும் இல்ல, நான் அதுக்குத் தலைவனு மில்ல.'' என்று வெடுக்கென்று திருப்பிச் சொன்னான் சந்துரு.

அடுத்த கணம்...

சடாரென்று அவன் சட்டையைப் பிடித்து இழுத்த ஆய்வாளர் ''டேய்... இங்க வாடா, இதப் பார்றா...'' என்று சற்று முன்னால் தொழிலாளர் கள் சேதப்படுத்திய கள்ளிப்பாளையம் முதலாளிகளின் காருக்கு நேராய் அவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்.

அவரிடமிருந்து தன் சட்டையை விடுவித்துக்கொண்ட சந்துரு தொழிலாளர்களின் கோபத்துக்கு இலக்கான அந்த வாகனத்தைப் பார்த்தான். நொறுங்கிக் கிடந்தது அது!

அவனிடம் இரைந்தார் அதிகாரி ''இதுக்குப் பேர் என்னடா? இது ரவுடித்தனமில்லாம வேற என்னாடா... அடுத்தவன் சொத்தை இப்புடி நாசம் பண்ணலாமா?'' என்று.

சந்துரு அவர் சொன்னதை ஒரு பொருட்டாக எண்ணாமல் தன் பார்வையை வேறு எங்கோ திருப்பினான்.

அசட்டையாக நின்றான்.

அதே சமயம் அதிகாரிக்கு என்ன பதில் சொல்வதென யோசித்தான்.

9

அதைப் பார்த்துக் கடுப்பான காவல்துறை அதிகாரி ''என்னடா... திருடனாட்டம் முழிக்கிறே? இதுக்குப் பதிலு சொல்லுடா...'' என்றார்.

அவரை எரித்து விடுவதைப் போலப் பார்த்த சந்துரு ''தப்புதான் சார். ஆனா, ஒங்க வூட்டுப் பொண்ண எவனோ ஒருத்தன் கையப் புடிச்சு இழுத்தா நீங்க சும்மாயிருப்பீங்களா... சொல்லுங்க.'' என்று மடக்கினான்.

போலீசிடம் போன முதலாளிகள் இதை மட்டும் அதிகாரியிடம் சொல்லவில்லைப் போலிருக்கிறது. அவர் குழப்பமாகி ''பொண்ணக் கையப் புடிச்சி இழுத்தாங்களா? யாரு இழுத்தது?'' என்று கேட்டார்.

சந்துரு கையைக் காட்டினான்.

அதற்கு ஒரு கள்ளிப்பாளையம் முதலாளி சொன்னார் ''சார், எங்கப் பணம் ஒன்றை லட்சத்தை வாங்க்கிட்டு கட்டாம ஓடிவந்தா சும்மா இருப்பமா... அதக் கூட நாங்க வேணுன்னு செய்ல சும்மா மெரட்றதுக்காகத்தான் அப்புடிப் பண்ணோம்.'' என்று.

சந்துரு ஏதோ சொல்ல வாயெடுக்க அவனைத் தடுத்த ஏழுமலை ''அது மட்டுமில்ல சார். இந்த வயசான மனுசன இதே மந்தையில வெச்சு இவுங்க அடிச்சாங்க.'' என்று கந்தப்பனைக் காட்டினார். பிறகு, அவரே தொடர்ந்து ''இந்த ஆளோட பொண்டாட்டித் தலமுடியப் புடிச்சி அடிக்கப் பாத்தாங்க.'' என்றார்.

அப்போது கந்தப்பன் மனைவி காவல்துறை ஆய்வாளரிடம் பெருங்குரலெடுத்து அழுது முதலாளிகள் செய்த அட்டூழியத்தைச் சொன்னார். மனைவிக்கு ஆதரவாய் வந்த கந்தப்பன் பாக்கிப் பணத்தைக் கட்ட சந்துரு எடுத்த முயற்சியையும் எடுத்துக் கூறினார். காவலதிகாரி சட்டென்று முதலாளிகள் பக்கம் திரும்பி முறைத்தார்

''என்னய்யா... இவ்வளவு நடந்திருக்குது. ஏன், இதையெல்லாம் எங்கிட்ட நீங்க சொல்லல?''

சற்று ஆடிப் போன முதலாளிகள் ''இவுங்க ஒண்ணுக்கு ரெண்டா சொல்றாங்க சார். இவுங்கதான் எங்களக் கொல்ல வந்தாங்க...'' என்று ஒரேடியாகப் புளுகினார்கள். காவல்துறை அதிகாரி ஒரு நிமிடம் யோசித்தார். சந்துருவையும் மற்றவர்களையும் தன் பார்வையால் அளந்தார். ஏராளமாய் கூட்டமிருந்தது அவரைச் கொஞ்சம் நிதானப்பட வைத்தது.

10

அவரது முகக் குறிப்பை அறியாத காவலர் ஒருவர் தன் லத்திக்கம்பை சுழட்டியபடி தொழிலாளர் கூட்டத்தை நோக்கிப் பாய்ந்தார்.

''யோவ்... யாரும் இங்க கூட்டஞ் சேரக்கூடாது. எல்லாரும் போங்க. நகருங்க... நகருங்க.'' என்று அதட்டினார்.

அதைப் பார்த்த மாதேசு சினத்துடன் ''யாரும் இங்கயிருந்துப் போக மாட்டாங்க. எங்களுக்கு நாயம் வேணும்.'' என்று கத்தினான். அதற்கு அந்தக் காவலர் ''என்னடா... மசுரு நாயம்? நீ அய்யாக்கிட்ட அடி வாங்காம போ மாட்டியா?'' என்று மிரட்டினார்.

சட்டென மாதேசு ''ஒங்க அய்யாவ மேல கைய வெக்கச் சொல்லுங்க. அப்புறம் நடக்குறதே வேற...'' என்று நெஞ்சை நிமிர்த்தினான். காவலர் அதிர்ந்துப் போனார். அவன் ஏதோவொரு முடிவுடன் தான் இருப்பான் போலிருக்கிறது. கூட்டமும் வெறியோடு இருப்பதுப் போலத் தெரிகிறது. அவர்களின் கோபத்துக்கு நாம் ஏன் பலியாக வேண்டும். தலையிருக்க வாலாடலாமா? என்று பம்மினார்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த காவல் ஆய்வாளர் தன் அனுபவத்தால் சூழ்நிலையை உணர்ந்தார்.

ஏதாவது ஏடாகூடமாக தொழிலாளர்கள் மீது கை வைத்தால், முதலாளிகளின் மீதான அவர்களது கோபம் காவல்துறையின் மேல் திரும்பக் கூடும்.

அது நிச்சயம் சட்டம், ஒழுங்குப் பிரச்னையில்தான் கொண்டு விடும். எனவே, சற்று இறங்கி வந்தார்.

''செரிப்பா... இவுங்க ஒங்க மேலக் கொல்ல வந்தீங்கன்னு கம்ப்ளை யிண்ட் குடுத்திருக்குறாங்க. இதுக்கு நீங்க என்ன பதில் சொல்றீங்க?'' என்று பொதுவாய் கேட்டார்.

இதற்கு என்ன கூறுவதென்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால், சந்துரு ஏதாவது சொல்வான் என்று எதிர்பார்த்தார்கள்.

அவன் அதற்கு ஏற்ற மாதிரி அதிகாரியிடம் பணிவாகப் பேசினான் ''சார், மொதலாளிகளைக் கொல்லணும்னு எங்களுக்குத் தலையெழுத்தா என்ன? மொதல்ல அவுங்க கார் டிக்கியத் தொறந்துப் பாருங்க. அதுல பட்டாக்கத்தியெல்லாம் வெச்சுருக்குறாங்க. கூடவே, கூலிப்படையக் கூட்டிக்கிட்டு வந்திருக்குறாங்க. கடனை மட்டும் கேக்க வந்திருந்தா இதெல்லாம் அவுங்களுக்கு எதுக்கு? அத நீங்களே, வெசாரிங்க.'' என்று.

11

அவன் பேச்சில் உள்ள நியாயத்தை அதிகாரி உணரும் முன்பாகவே, தொழிலாளர்கள் சிலர் ஓடிப்போய் அம்பாசிடர் காரின் டிக்கியைத்

திறந்துக் காட்டினார்கள். அதில், அடியாள் எடுத்துக் காட்டிய பட்டாக் கத்தி மட்டுமில்லை. வேறு சில கொலைகார ஆயுதங்களும் கிடந்தன. அதைப் பார்த்து காவல் அதிகாரியே மிரண்டுப் போனார். இதற்கே முதலாளிகளைக் கைது செய்யலாமே.. அவர் மனம் ஏதேதோ கணக்குப் போட்டது.

எனவே, அவர் பார்வை முதலாளிகளிடம் தீர்க்கமாய் வந்து நின்றது. அவர் அப்படிப் பார்த்ததும் கள்ளிப்பாளையத்திலிருந்து வந்தவர்கள் உண்மையிலே பயந்துதான் போனார்கள். அந்த அச்சம் அவர்களை நெளிய வைத்தது. அதே சமயம் அதிகாரியை எப்படிச் சரி செய்யலாம் என்றும் யோசிக்கத் தூண்டியது

அதைக் கண்ணுற்ற அதிகாரிகள் ''என்னா மொதலாளிங்களா.. பணப் பாக்கிய வசூலிக்கிற ஒங்க லட்சணம் இதானா?'' என்று கேலியாக கேட்டார்.

ஒருமுதலாளி ''அய்யா... இதெல்லாம் சும்மா மெரட்றதுக்காக கொண்டாந்ததே தவுத்து வேற எதுக்கும் இல்லீங்க.'' என்று சொல்ல, அதிகாரி ''என்னய்யா, எதக் கேட்டாலும் சும்மா மெரட்றதுக்குன்னு சொல்லிக்கிட்டு இருக்குறீங்க. நீங்க .நடங்கய்யா ஸ்டேசனுக்கு. அங்க வெச்சு விசாரிச்சாத்தான் செரிப்படுவீங்க.'' என்று கத்தலாகச் சொன்னார். முதலாளிகளுக்கு அல்லு கழண்டு விட்டது. ஆனாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நின்றனர்.

தொழிலாளர்களிடம் அதே வேகத்தில் திரும்பிய அதிகாரி ''ஒங்கள்ல நாலு பேரு மட்டும் ஸ்டேசனுக்கு வாங்கப்பா. அங்க வெச்சிப் பேசி பைசல் பண்ணிக்கலாம்.'' நைச்சியமாகக் கூறினார். பிறகு, சந்துருவின் அருகே வந்து அவன் தோளைத் தட்டி ''நீ ரொம்ப நல்லாப் பேசறய்யா... என்னா படிச்சுருக்குறே?'' என்று விசாரித்தார். தன் கல்லூரிப் படிப்பை அவரிடம் சொன்னான்.

''அதான்...'' என்ற அதிகாரி தன் காவல் வாகனத்தில் போய் ஏறிக் கொள்ள, அது சட்டென்றுப் புறப்பட்டது. முதலாளிகள் ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் சேதமடைந்தக் காரை ஒரு வழியாக ஸ்டார்ட் செய்து மற்றதையும் ஓட்டிக் கொண்டுச் சென்றார்கள்.

அதுவரை என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று போலீசை நினைத்துப் பயந்துப் போயிருந்த தொழிலாளர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அதைப் போலவே உள்ளூர்காரர்களும் உணர்ந்தனர். எனவே, மெல்ல மந்தையில் இருந்து நகர்ந்தனர்.

12

என்றாலும், தொழிலாளர்கள் சந்துரு அடுத்து என்ன செய்யப் போகிறான்? என்பதையறிய ஆர்வமாய் நின்றிருந்தனர். அப்போது அவன் முகத்தில் குழப்ப ரேகைகள் படிந்திருந்தது. அதைக் கவனித்த ஏழுமலை கேட்டார்.

''என்னா தம்பி நம்பளுக்கு இன்னும் வில்லங்கம் தீரலன்னு நெனைக்கிறியா?''

''ஆமாண்ணா, என்னமோ பெருசா நடக்கப் போவுதுன்னு எம் மனசுக்குப் படுது.'' என்று அவனும் கவலையாகச் சொன்னான்.

இதைக் கேட்ட கந்தப்பன் அச்சத்துடன் ''நீ சொல்றது புரியலயே தம்பி. அப்புடி என்னா நடக்கும்?'' என்று கேட்டார்.

அதற்கு தன் உதட்டைப் பிதுக்கிய சந்துரு ''என்னால செரியா கணிக்க முடியலண்ணா...'' என்றான்.

அப்போது மாதேசு ''ஏம்பா... நாம்ப போலீஸ் ஸ்டேசனுக்கு போகாமயே இருந்துட்டா என்ன?'' என்க, அவன் யோசனைக்கு சந்துரு உடன்படவில்லை. ''இனிமே நாம்ப நெனைச்சாலும் போலீஸ் விடாது. போலீஸ் ஸ்டேசனுக்குப் போய்த்தான் தீரணும்.'' என்று தீர்க்கமாய் சொன்னான்.

அனைவரும் அமைதியாய் நின்றிருந்தார்கள். எல்லோர் முகத்திலும் கொஞ்சம் முன்னால் தோன்றியிருந்த நிம்மதி, நீர்குமிழியாய் உடைந் திருந்தது. சந்துரு அதை கவனிக்கத் தவறவில்லை. தொழிலாளர்கள் முன்னிலையில் தன் சந்தேகத்தைச் சொல்லி அவர்களைக் கலவரப்பட வைத்து விட்டோமோ என்று நினைத்தான். எனவே, உற்சாகப்படுத்த முயன்றான்.

''அண்ணா... ஒரலுக்குள்ற தலைய வுட்டாச்சி இனிமே, ஒலக்கைக்குப் பயந்து என்னவாகப் போவுது? நடங்க எல்லாருமா ஸ்டேசனுக்குப் போவோம்.'' என்று தன்னைத் தவிர மாதேசு, ஏழுமலை, கந்தப்பன் மூவரையும் கூப்பிட்டான். அப்போது ஓபுளி ''ஏம்பா இவனே... நாங்களும் அங்க வரட்டுமா?'' என்று கேட்டான். அது நல்ல யோசனையாய் படவே சந்துரு சரியென தலையசைத்தான். ஆனால், ஏழுமலை தடுத்தார்.

''தம்பி எதுக்குப்பா எல்லாரும்? அந்த காக்கிச் சட்டைக்காரன் என்னய்யா கூட்டத்த கூட்டிக்கிட்டு வந்து போலீச மெரட்றீங்களான்னு கேட்டான்னா நம்பளால பதில் சொல்ல முடியாது.''

கந்தப்பனும், மாதேசும் கூட அதை ஆமோதித்தார்கள்.

13

எனவே, சந்துரு அவர்கள் பேச்சுக்கு கட்டுப்பட்டு ஓபுளியையும் மற்ற தொழிலாளர்களையும் கலைந்துப் போகச் சொல்ல, அவர்கள் சற்று தயக்கமாய் அங்கிருந்து நகர்ந்தார்கள். அதே போல கந்தப்பன் தன் மனைவி, மகளை வீட்டுக்குப் போகச் சொல்ல அவர்களும் தயக்கமாய் நடந்தார்கள்.

நேரம் மதியத்தை நெருங்கி விட்டது.

காலையில் இருந்தே யாரும் சாப்பிடவில்லை. இந்த பிரச்னையில் பசியே தோன்றவில்லை. கந்தப்பன் வீட்டில் குடித்த டீயோடு சரி. எப்படியாவது நல்லத் தீர்வாகக் கிட்டினால் போதுமென்று இருந்தார்கள். நகரத்துக்கு இங்கிருந்து ஒருமைல் போக வேண்டும். மெயின்ரோட்டைத் தவிர்த்து ஒத்தையடிப் பாதை வழியாக குறுக்கே புகுந்து நடந்தால் அரைமைலில் ஊர் வந்து விடும். எனவே, பேட்டையை ஒட்டியுள்ள வயல் வரப்பில் நுழைந்து நடக்கலாம் என்றிருந்தபோது டவுன்பஸ் வந்து விட்டது. கடைசி நிறுத்தம் என்பதால், ஓட்டுநர் பேருந்தை திருப்பி நிறுத்தியதும் தான் தாமதம் சரசரவென்று எல்லோரும் ஏறிக் கொண்டார்கள்.

லங்கடா பஸ் ஆடியசைந்து, உடனே புறப்பட புகை நாற்றத்தில் மூச்சு முட்டியது. ஒருபர்லாங் மண்பாதையைக் கடந்து விட்டால், அப்புறம் சென்னைத் திருப்பதி தேசிய நெடுஞ்சாலை வந்து விடும். அங்கிருந்து தெற்காக திரும்பினால் நகரத்தை எட்டி விடலாம். ஊரின் பெயரே நகரம்தான். பெரிதாகவெல்லாம் கிடையாது. குட்டி நகரம்தான். அதையொட்டி இன்னொரு சிறுநகரம் குப்பம். அதைத் தாண்டினால், மேற்காக பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு, சோளிங்கர் என்றெல்லாம் ஊர்கள் வரும். கிழக்காக நாகலாபுரம், ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் என ஊர்கள் இருக்கிறது. வடக்கே திருப்பதியும், தெற்கே திருத்தணியும் முக்கிய நகரங்களாகும். இங்கிருந்து சென்னை மாநகரம் கணிசமான கிலோ மீட்டர்களில் இருக்கிறது.

வழியெங்கும் அடிக்கொரு தரம் நிறுத்தி நிறுத்தி ஆட்களை ஏற்றிக் கொண்டு ஒருமைல் தூரத்துக்கு அரைமணி நேரத்தை செலவழித்தார் பேருந்து ஓட்டுநர். நகரத்தின் நாற்சந்தியில் லங்கடா வந்து நின்றது. அதுதான் அந்த ஊருக்குப் பேருந்து நிலையம். எல்லோரும் இறங் கினார்கள். வழக்கம் போல நசநசவென கூட்டமிருந்தது. நாகலாபுரம் செல்லும் சாலையில்தான் காவல்நிலையம் இருந்தது. எல்லோரும் நூறடி தூரத்திலிருந்த காவல்நிலையத்தை நோக்கி நடந்தார்கள்.

ஏனோ, எல்லோருக்குமே இனம் புரியாத அச்சம் மனதில் எட்டிப் பார்த்தது.

14

பழைய கட்டிடத்தில் இருந்தது காவல்நிலையம். அதன் வாசல் ஒரு சிறிய மைதானத்தைப் போலிருந்தது. அதில், காலெடுத்து வைத்ததுமே அச்சமின்னும் அதிகமாய் நால்வரையும் சூழ்ந்துக் கொண்டது. சமாளித்து நடந்தார்கள். விடாப்பிடியாய் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நான்கு பேரும் காவல்நிலையப் படிகளில் ஏறினார்கள். தாங்கள் வந்திருப்பதை விபரமாய் காவல் ஆய்வாளரிடம் தெரிவிக்கச் சொல்லி, வாசலில் நின்றிருந்த காவலரிடம் கேட்டுக் கொண்டார்கள். அவர் கையிலிருந்த நீளமான துப்பாக்கியை சுமந்துக் கொண்டே அவசரமாய் உள்ளே சென்றார்.

அந்த நேரத்தில், அனிச்சையாய் சுற்றிலும் நோட்டமிட்டான் சந்துரு. கள்ளிப்பாளையம் முதலாளிகளின் இரண்டு கார்களும் ஓரமாய் நின்றிருந்தன. அதற்குப் பக்கத்தில் அடியாட்கள் நிற்க, அவர்களை எரித்து விடுவதைப் போல் பார்த்தான்.

அப்போது, காவல் நிலையத்தின் உள்ளிருந்து கள்ளிப்பாளையம் முதலாளிகள் இருவரும் ஏதோ பேசிச் சிரித்தபடி வெளியே வந்தார்கள்.

அதைப் பார்த்த சந்துருவுக்கு நெருடலாய் தோன்றியது. அதை காட்டிக் கொள்ளாமல் முதலாளிகளைக் கூர்ந்துப் பார்த்தான். அவர்கள் அதை வன்மமான முகபாவனையோடு எதிர் கொண்டார்கள். அதில், மீசைக்காரன் கந்தப்பனைப் பார்த்துப் பல்லைக் கடித்தான். சற்றே நெருங்கி வந்து ‘‘டேய் கந்தப்பா... இன்னிக்கி எங்க கிட்டயிருந்து நீ தப்பிச்சிட்டே. ஆனா, என்னிக்காச்சும் சிக்குவ அன்னிக்கி இருக்கு ஒனக்கு.’’ என்று சீறினார்.

அதைப் பார்த்த இன்னொரு முதலாளி ''அட வுடுங்க, நம்ப கிட்டயிருந்து தப்பிச்சா என்ன, அதான் போலீஸ்காரங் கைல எல்லா நாயிங்களும் நல்லா சிக்கியிருக்குதே...'' என்று மீசைக்காரனை இழுத்துக் கொண்டு போனார். அப்படிப் போகும் போது ''என்னவொண்ணு... போலீசுக்காரனுங்கதான் ஏகப்பட்டப் பணத்த லஞ்சமாப் புடுங்கிக்கிட்டானுங்க.'' என்ற முணுமுணுப்பு அவரிடம் எழுந்தது.

அவர்கள் மேலும் ஏதேதோ பேசிக் கொண்டே போக, சந்துருவுக்கும் மற்றவர்களுக்கும் காதில் விழுந்த விசயம் அதிர்ச்சியைக் கொடுத்தது. புலி வாயிலிருந்து தப்பித்து முதலை வாயில் மாட்டிய உணர்வு ஏற்பட்டது. கடிபடுவது உறுதியென்றாலும் அதன் பாதிப்பு எந்த அளவில் இருக்கும் என்பதை கணிக்க இயலவில்லை. முதலை ஆளையே விழுங்குமா? தொடைக் கறியோடு திருப்தியடையுமா? என்பதுதான் தெரியவில்லை.

15

சட்டென்று முதலாளிகள் தாங்கள் வந்த கார்களில் ஏறிப் புறப் பட்டனர். சேதமடைந்த காரை வழியில் எங்காவது மெக்கானிக் ஷெட்டில் சரி செய்துக் கொண்டு அவர்கள் ஊருக்குப் போவார்களாக இருக்க கூடும்.

அப்போது மாதேசு ''கள்ளிப்பாளையத்துக்காரனுங்க சும்மா பூச்சாண்டிக் காட்டிப் புட்டுப் போறானுங்கப்பா.'' என்று பொதுவாய் கூறினான். சந்துருவுக்கு கூட அப்படியும் இருக்குமோ? என்று தோன்றியது.

அந்த நேரம் காவல் ஆய்வாளரிடம் தகவல் சொல்லப் போன காவலர் திரும்பி வந்தார். அதிகாரி வரச் சொன்னதாகக் கூறினார். அவர்கள் உள்ளே போக காவல் நிலைய வராண்டாவில் ஒரு சேரில் எழுத்தர் இருந்தார். அவர் ஆய்வாளர் அறையைக் காட்ட நான்கு பேரும் ஒருவர் பின்னால் ஒருவராய் அதற்குள் நுழைந்தார்கள்.

யாருடனோ டெலிபோனில் பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் சட்டென்று பேச்சை நிறுத்தி விட்டு தன் கையிலிருந்த ரிசீவரை வைத்தார். பிறகு, நான்கு பேரையும் மேலிருந்துக் கீழாக அலட்சியமாய் பார்த்தார். ''வாங்கடா, மாப்ளைங்களா...'' என்று நக்கலாக ஆரம்பித்தார். அப்போதே திக்கென்றிருந்தது.

பிறகு, சந்துருவிடம் ''ஏண்டா படிச்சப் புடுங்கி... இந்த மாதிரி பிரச்னை வந்தப்ப, ஏன் மொதலாளிகளப் பத்தி நீ எங்கிட்ட கம்ப்ளையிண்ட் குடுக்கல?'' என்று கடுமையாய் கேட்டார்.

''எனக்கு அப்ப தோணல சார், அதான் குடுக்கல.'' அவன் பணிவாகத்தான் பதில் சொன்னான்.

அதற்கு இன்ஸ்பெக்டர் வெடுக்கென்று கூறினார் '' இல்லடா, ஒங்கள மாதிரி கூலிக்காரப் பசங்களுக்கே திமுரு சாஸ்தி. போலீஸ்காரங்க யெல்லாம் பொட்டப் பசங்கன்னு நெனப்பு.'' என்று.

அதற்கு மாதேசு ஏதோ கோபமாய் சொல்ல வாயெடுத்தான். ஆனால், சந்துரு அவனை விடவில்லை. '' சார் அப்புடியெல்லாம் இல்ல, எங்களுக்கு அந்த நேரத்துல கையும் ஓடல... காலும் ஓடல...'' என்று அதிகாரியிடம் கூறினான்.

உடனே அவர் ''என்ன இத நம்பச் சொல்றீங்களா? அதெப்புடி மொதலாளிகள காரோட வெச்சி எரிக்க மட்டும் ஒங்களுக்கு கை, கால் ஓடுச்சி?'' என்றார்.காவல் அதிகாரி ஏதோ ஒரு முடிவோடுதான் இருக்கிறார். கள்ளிப்பாளையம் முதலாளிகள் வீசிய தொகைக்கு வாலாட்டுகிறார் போலும்.

16

எப்படியிருந்தாலும், தைரியத்தை இழக்கக் கூடாது.

எனவே அஞ்சாமல் சந்துரு ''சார் எதுக்கு டென்ஷன் ஆகுறீங்க? இப்ப அதுவா முக்கியம். வயசுப் பொண்ண கையப் புடிச்சி இழுத்த கள்ளிப் பாளையம் மொதலாளிகளப் பிரச்னை தீராம எதுக்கு வெளியில அனுப்புனீங்க? அவுங்க மேல ஏன், எந்த நடவடிக்கையும் எடுக்கல?'' என காட்டமாய் கேட்டான்.

அதற்கு மாதேசு முந்திக் கொண்டு பதில் சொன்னான் ''எப்புடி எடுப்பாரு? அதான் வாங்க வேண்டியத வாங்கிக்கிட்டாருல்ல...'' என்று.

''ஆமாண்டா, மொதலாளிங்கக் கிட்ட நான் லஞ்சம் வாங்குனது நெசந்தான். அதுக்கு என்னடா செய்ணுங்குறீங்க? இல்ல, கேக்குறேன் என்ன ஒங்களால என்னடா பண்ண முடியும்?'' என எகத்தாளம் செய்தார்.

அவரை அருவருப்பாய் பார்த்த சந்துரு ''ஒரு படிச்ச அதிகாரியான நீங்க இப்படிச் சொல்ல வெக்கமாயில்ல...'' என்று கேட்டான்.

அவ்வளவுதான் சினத்துடன் எழுந்த அந்த அதிகாரி சிறிதும் மனிதாபிமானமின்றி கிடுகிடுவென்று அவனை எட்டி உதைத்தார். அதன் வேகம் ஒரு சிறிய பனைமரத்தை தூக்கி அடித்தது போலிருந்தது. சந்துரு எகிறிப் போய் அறைச் சுவற்றில் மோதி விழுந்தான். அவன் மண்டை நங்கென்று இடித்தது. ''ஐயோ...அம்மா..'' என்ற அலறல் எழுந்தது. தன் தலையை இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டு அப்படியே சுவற்றோரமாய் சுருண்டான்.

இந்த காட்சியில் மற்ற மூவரும் இடி தாக்கியதைப் போல நடுங்கிப் போனார்கள்.

மாதேசு இதையும் மீறி காவல் அதிகாரியைப் பார்த்து ஏதோ அசிங்கமாய் சொல்ல வாயெடுத்தான். அதற்குள் கந்தப்பன் சூழ்நிலை உணர்ந்து சட்டென ஓடிப் போய் அதிகாரியின் காலில் விழுந்தார். ''அய்யா... பாவம்! நல்லப் புள்ளைங்க அது. ஒங்களுக்குப் புண்ணியமாப் போவட்டும். தயவுப் பண்ணி அடிக்காதீங்க...''

''ஏய், கெழட்டு நாயே... எந்திரிடா.'' என்றவர் கந்தப்பன் தலை முடியை கொத்தாகப் பிடித்து அவனை தூக்கி நிறுத்தினார். அதே வேகத்தில் கன்னத்தில் சரமாரியாக அறைந்தார். கந்தப்பன் கதற, அவரை விட்டு விட்டு மற்றவர்கள் மீது பாய்ந்தார். தன்னை ஏதோ சினிமா கதாநாயகன் போல கருதிக் கொண்டு சரமாரியாக அடித்து நொறுக்கினார்.

தன் ஆத்திரம் முழுவதும் தீர்த்துக் கொண்டு சற்று தணிந்தார்.

17

அத்துடன் நிற்காமல் காவலர்களைக் கூப்பிட்டு சந்துருவை தூக்கி நிறுத்தச் சொல்லி அவனுடன் சேர்த்து மற்ற மூவரையும் விசாரணைக் கைதிகள் அறையில் அடைக்கச் சொன்னார். சந்துருவுக்கு மட்டும் குடிக்கத் தண்ணீர் தரச் சொல்லி உத்தரவு போட்டார்.

இரண்டு காவலர்கள் நால்வரையும் நெட்டித் தள்ளிக் கொண்டுப் போனார்கள்.

ஆய்வாளரின் அறைக்கு வெளியே வராண்டாவுக்கு அவர்கள் நடக்க, அங்கே, சில துப்பாக்கிகள் நீளநீளமாய் மர ஸ்டாண்டில் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்ததும் மாதேசின் மனதில் திடீரென்று வெறி தோன்றியது. ஒரு துப்பாக்கியை எடுத்து ஆய்வாளரைச் சுட்டுவிடலாமா? என்று யோசித்தான். ஆனால், அவனை நன்கு அறிந்த ஏழுமலை இறுக்கமாய் அவன் கையைப் பிடித்த படியே நடந்து வந்தார். அவன் முண்டுவதுப் போலத் தெரிய, பல்லைக் கடித்துக் கொண்டு அவனை முறைத்தான்.

லாக்கப் அறை முன்னால் நால்வரையும் கொண்டு போய் நிறுத்தி நிதானமாய் அதன் கதவை காவலர் ஒருவர் திறக்க, அந்த இடை வெளியில் மாதேசின் காதில் ஏழுமலை ரகசியமாய் கிசுகிசுத்தான்.

''நீ ஏடாகூடமா எதுவும் பண்ணாத இருந்தா நாம உசுரு தப்பிச்சோம். இல்லன்னா இங்கியே நம்பளுக்கு சங்கு ஊதிருவாங்க போலீஸ் காரங்க...''

அதன் பின்னால், மாதேசு அமைதியாகி விட்டான்.

அதன் பிறகு, கொஞ்ச நேரத்தில் நான்கு பேருக்கும் மறுபடியும் அடி விழுந்தது. இந்த முறை அடிக்கும் பொறுப்பை காவலர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஏதோ எதிரி நாட்டைச் சேர்ந்தவர்களை அடிப்பதைப் போல அவர்களின் நடவடிக்கை இருந்தது. இவர்களுக்கு ஏன் இந்த வன்மம்? என்று சந்துருவின் மனது யோசித்தது.

உழைக்கும் மக்களைக் கண்டால் அவ்வளவு இளக்காரம்.

அதோடு சேர்த்து அவர்களிடத்தில் ஒரு நிரந்தர பயத்தை ஏற்படுத்த வேண்டும். போலீஸ் மீது அச்சம் இல்லாவிட்டால், ஊரை கட்டுப்படுத்த இயலாது. ஒரு குறுநில மன்னனைப் போல வீதிகளில் நெஞ்சு நிமிர்த்தி திரிய முடியாது. யாரிடமும் கை நீட்டி லஞ்சம் வாங்கவும், சட்டம் ஒழுங்கின் பெயரால், எளியவர்களை அடக்கவும் முடியவே முடியாது. எல்லாம் அதிகார வெறி.

18

நான்கு பேரும் உடல்வலியும், மனவலியும் ஒன்றையொன்று மிஞ்ச லாக்கப்பில் குறுகிக் கிடந்தார்கள். அடி,உதை இத்தோடு முடிந்ததா?

இன்னும் மிச்சம் மீதியிருக்கிறதா? என்று அவர்களால் லேசில் கணிக்க இயலவில்லை. கள்ளிப்பாளையம் முதலாளிகள் போலீசுக்குக் காசை வீசியெறிந்து விட்டு எளிதில் தப்பித்து விட்டார்கள். காவல்துறை அவர்களுக்கு நன்றாக அடி சொரிந்து விட்டிருக்கிறது. திருப்தியுடன் போய் சேர்ந்து விட்டார்கள். நெடுந்துன்பத்துக்கான கதவு அவர்களால் திறந்து விடப்பட்டிருக்கிறது.

இனி, என்னவெல்லாம் வேண்டாத கஷ்டங்கள் வரப் போகிறதோ தெரியவில்லை.

அன்று மாலைக்குள் நான்கு பேர் மீதும் வழக்கு பதிந்து நேராக சித்தூர் கோர்ட்டுக்குக் கூட்டிப் போய் விட்டார்கள்.

நீதித்துறை நடுவர் முன்னால் ஆஜர்படுத்தும் முன்னால் ''போலீஸ் ஸ்டேசன்ல நடந்தப் பத்தியோ, நாங்க ஒங்கள அடிச்சதப் பத்தியோ கோர்ட்ல யாரும் வாயத் தொறக்கக் கூடாது.'' என்று எச்சரிக்கை வேறு செய்தார்கள்.

காவல்துறையினர். நீதிமன்ற நடுவர் அவர்கள் கொடுத்த முதல் தகவல் அறிக்கையை ஏற்றுக் கொண்டு விட்டார். முதல் தகவல் அறிக்கையில் என்ன இருக்கிறது? என்பதை தெரிந்துக் கொள்ளவும் குற்றம் சாட்டப்பட்டவர்களை அனுமதிக்கவில்லை. எல்லாமே கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது நால்வருக்கும். எல்லாமே புதிய முகங்கள். யாரிடம் போய் தங்கள் நிலைமையைச் சொல்லி உதவி கேட்பதென்று தெரியவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் சிறைக்குக் கொண்டு போகப் போகிறார்கள்.கிளைச் சிறையா? மத்திய சிறையா? அதுவும் தெரியவில்லை.

அந்த நேரத்தில் சந்துரு ஒரு காரியம் செய்தான். நீதித்துறை நடுவரிடம் சத்தமாய் இப்படிச் சொன்னான்.

''அய்யா... எங்களப் போலீசுக்காரங்க கடுமையா அடிச்சுட்டாங்கய்யா, நாங்க அப்பாவிங்க. எங்க மேல எந்த தப்பும் இல்லீங்க. மொத லாளிங்கக் கிட்ட லஞ்சத்த வாங்கிக்கிட்டு எங்கள இன்ஸ்பெக்டரு எப்படி அடிச்சுருக்காம் பாருங்க...''

என்று சொன்னதோடு நில்லாமல் தன் சட்டையை வேறு கழட்டிக் காட்டினான். அவனைப் போலவே மற்றவர்களும் தங்களது சட்டையைக் கழட்ட, நடுவர் அதை அறுவறுப்பாய் பார்த்து விட்டு அவர்களைக் கூட்டி வந்த காவலர்களைப் பார்த்துக் கத்தினார்.

19

''யோவ், இவுனுங்கள மொதல்ல வெளியக் கூட்டிக்கிட்டுப் போங்கய்யா...''

அவ்வளவுதான், நால்வரையும் தரதரவென்று இழுத்துச் சென்றனர். சந்துரு மேலும் ஏதோ சொல்ல வாயெடுக்க அதட்டினார்கள். கோர்ட் வராண்டாவில் கொண்டு வந்து நிறுத்தி வாயைத் திறக்க விடாமல் அச்சுறுத்தினார்கள்.

சந்துரு அமைதியாகி விட்டானே தவிர, கோர்ட்டுக்கு வந்திருந்த பொதுமக்களும், வழக்குரைஞர்களில் ஒரு சிலரும் அனுதாபத்தோடு பார்த்தார்கள்.

அதே சமயத்தில், வழக்கமாய் நீதிமன்றத்துக்கு வரும் உளவுத்துறை போலீஸ்காரர் ஒருவர் சந்துருவை கூர்ந்துப் பார்த்து, அவன் உருவத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டார். அவன் அதிகார வர்க்கத்தை எதிர்பவன் ஆயிற்றே..!

கொஞ்சநேரத்தில் ஆயுதப்படை போலீஸ் வந்தது. அவர்கள் வசம் நால்வரையும் ஒப்படைத்து விட்டு தங்கள் கடமை முடிந்ததாக நகரம் போலீஸ் நகர்ந்தது.

அடுத்ததாய், வெள்ளை நிற வேனில் ஏற்றப்பட்ட போதும் சரி, சிறைக்கு கொண்டுச் செல்லப்பட்டு அங்க அடையாளங்கள் குறிக்கப் பட்டு, ஒரே சிறைக் கொட்டடியில் நால்வரும் அடைக்கப்பட்ட போதும் சரி யாரும் யாருடனும் பேசிக் கொள்ளவேயில்லை.

தன்னிறக்கம் நான்கு பேரையும் இறுக்கமாய் சூழ்ந்திருந்தது. ஒவ்வொரும் தனித் தனி வலையில் குறுகிக் கொண்டனர். என்ன தவறு செய்து விட்டோம் என்று இந்த கொடுஞ்சிறை வாசம்? பெண்ணின் கையைப் பிடித்து இழுத்தவன் லஞ்சம் கொடுத்து தப்பி விட்டான். அதை தட்டிக் கேட்டதற்காக அடி உதை போதாக் குறைக்குச் சிறை. சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமமாம். சிலர் கூறுகிறார்கள். போங்கடா... நீங்களும் உங்க சட்டமும். என்றாலும், தன் பொறுப்பை உணர்ந்த சந்துரு மற்ற மூவரிடம் ஆறுதலாய் பேசினான். ''இங்க பாருங்க, நாம்ப தெகிரியமா கள்ளிப்பாளையத்து மொதலாளிகள எதுத்து நின்னதுனாலத்தான் கந்தப்பண்ணன் குடும்பம்

தப்பிச்சுது. இல்லாமப் போயிருந்தா என்ன நடந்திருக்கும்னு நெனச்சுப் பாருங்க. நாம இப்ப இருக்குற நெலமைய விட அது கொடுமை யில்லியா?''என்று.

அவன் பேச்சில் இருந்த உண்மையை உள்வாங்கிக் கொண்ட மூவரும் மெல்ல சுய இரக்கத்திலிருந்து வெளியே வந்தார்கள். கந்தப்பன் மெதுவாய் சந்துருவிடம் கேட்டார் ''அது செரி தம்பி. இங்கயிருந்து நாம எப்புடி வெளியிலப் போறது?'' என்று.

20

அதுதான் அவனுக்கும் புரியவில்லை. எனவே, மௌனம் காத்தான்.

கொஞ்ச நேரத்தில் சாப்பாடு வந்தது. அதில், லயிக்காமல் சாப்பிட்டு விட்டு நால்வரும் இரவு முழுக்க தனித் தனியே யோசித்துக் கிடந்தார்கள்.

அத்தியாயம்

3

1

சீரான வேகத்தில் காற்றை விசிறியடித்துக் கொண்டு சென்றது ரயில் வண்டி. முகத்தில் அறையும் தீக்காற்றில் மோதிக் கொண்டது பெருமூச்சு. அதன் வேகத்தில் சிக்கிமுக்கிக் கல்லை உரசியதுப் போல சட்டென பற்றிக் கொள்ளுமோ என அச்சம் வந்தது. அக்னி குண்டத்தில் உட்கார்ந் திருப்பது போலிருந்தது. பூமி நாளுக்கு நாள் வெப்பமடைவதாய் கூறுகிறார்கள். ஆனால், அதையும் கூடத் தாண்டி நெருப்புப் பந்தாய் பூமி உருண்டை மாறி விட்டதாய் தோற்றம். தமிழக மேற்கு மாவட்டங் களில் கோடை காலத்தில் நிலவும் வெப்பத்தை விட ஆந்திரத்தின் வெக்கை கடுமையாய் இருந்தது. இன்னும் வடக்கே போகப் போக அதிக வெக்கை கோரமாய் தகிக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறான். அங்கெல்லாம் எளிய மக்கள் எப்படித் தான் வாழ்கிறார்களோ? என நினைத்தான். அடர்ந்த பெருமூச்சு மீண்டும் வெளிப் பட்டது.

பக்கத்தில் உட்கார்ந்து வந்த மாதேசை அனிச்சையாய் திரும்பிப் பார்த்தான். சித்திரையின் அக்னியில் கொல்லர்

உலையில் வேகும் இரும்பாய் மாறி விட்ட ரயில் பெட்டியின் கடும் சூட்டை உணராதவனாய் சன்னலோர இருக்கையில் தூங்கிக் கொண்டு வந்தான் மாதேசு. அதைப் பார்த்த சந்துரு தன் நண்பனை நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான். சிறுவயதிலிருந்தே விட்ட குறை தொட்ட குறையாய் கூடவே வரும் நட்பு. மாதேசு முரடன் என்றாலும், சில சமயம் குழந்தையாய் மாறி விடுவான்.

அப்படித்தான் சந்துரு, கந்தப்பன், ஏழுமலையோடு சிறைக்குள் அடைப்பட்டிருந்த நேரத்தில் ஏதோ தன் கழுத்துக்கு தூக்கு வந்து விட்டதைப் போல முகத்தை சோகமாய் வைத்துக் கொண்டு திரிந்தான். அன்று, சித்தூர் கிளைச் சிறையில் காலையில் அறைக் கதவை திறந்து விட்ட காவலர்கள் மலம் கழிக்கவும், குளிக்கவும் கொஞ்ச நேரத்தை நால்வருக்கும் ஒதுக்கித் தந்தார்கள். அந்த காலக் கெடுவுக்குள் காலை உணவு வந்து விடும். அதை சாப்பிட்டு விட்டு மறுபடியும் சிறை அறைக்குள் போய் விட வேண்டும் என்றார்கள். அப்புறம், மதிய நேர சாப்பாட்டுக்குத்தான் கம்பிக் கதவு திறக்கப்படும் என்று எச்சரித்தார்கள்.

மாதேசு தன் அச்சம் சூழ்ந்த மனநிலையில் காலைக் காரியங்களை வெறுப்பாய் செய்தான். அவனோடு ஒப்பிடும் போது கந்தப்பனும், ஏழுமலையும் சற்றே தேவலை. சந்துரு அவரவர் போக்கில் அப்படியே விட்டு விட்டான்.

2

அவனுக்கு இருந்த யோசனையெல்லாம் இந்த சிறையில் இருந்து எப்படி மீள்வது? என்பது பற்றியே சுழன்றது. நால்வரையும் யார் வந்து பிணையில் எடுப்பார்கள்? பேட்டையில் இருந்து ஓபுளி போன்றவர் கள் விசயமறிந்து இங்கு வருவார்களா? அப்படி வந்தால் எப்போது வருவார்கள்? அவர்களுக்கு நகரத்தில் வழக்குரைஞர்கள் யாரையாவது தெரியுமா? தங்கள் கையோடு கூட்டி வருவார்களா? அல்லது எதுவும் தோணாமல் கையைப் பிசைந்துக் கொண்டு நிற்பார்களா? எத்தனை நாட்கள் இந்த சிறைவாசம்?

திரும்பத் திரும்ப யோசித்ததில் அவனுக்கு மண்டை வலித்தது.

அப்போது காலைப் பத்துமணிக்கு மேலிருக்கும். அவர்கள் நால்வரை யும் யாரோ மனுப் பார்க்க வந்திருப்பதாய் சிறைக் காவலர்கள் வந்து சொன்னார்கள். சட்டென நான்கு பேருக்குமே சற்று உற்சாகம் வந்தது.

காவலர்கள் சிறைக் கதவை திறந்து கிளைச் சிறையின் மனுப் பார்க்கும் அறைக்கு கூட்டிச் சென்றார்கள். அங்கே, தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களைப் பார்க்க சிறு கூட்டம் சேர்ந்திருந்தது. அவர்களைப் போலவே அழைத்து வரப்பட்ட சிறைவாசிகள் சிலர் வந்தவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், அங்கே, சந்துருவும் மற்றவர்களும் ஓபுளியையோ பேட்டையைச் சேர்ந்த தொழிலாளிகளையோ யாரையும் தங்கள் கண்ணில் காணாமல் தவித்தார்கள்.

அப்போது சன்னல் வலைக் கம்பிக்கருகே இவர்களை நோக்கி வந்த ஒருவர் நாற்பதை எட்டும் வயதில் தெரிந்தார். ஒரு புத்திஜீவியின் தோற்றம். அவர் சந்துரு உட்பட நான்கு பேரிடமும் தான் ஒரு வழக்குரைஞர் என்றும், இவர்களை நேற்று மாலை சித்தூர் கோர்ட்டில் பார்த்ததாகவும் கூறினார். பிறகு, தான் நால்வரையும் பிணையில் எடுக்க உதவுவதாகச் சொன்னார்.

அதைக் கேட்ட நான்கு பேருக்குமே கண்ணில் நீர் வராத குறை. அவரை ஆபத்பாந்தவனாய் பார்த்தார்கள்.

சந்துரு வியப்பின் எல்லைக்கே போய் ''நிசமாவா சார்?'' என்று நம்ப முடியாமல் கேட்டான். அதற்கு சிரித்தபடி ஆமாம் என்று தலையசைத்த அவர், அவர்கள் நால்வரும் சிறைப்பட்டதற்கான உண்மையான காரணங்களை வினவினார். அவன் மளமளவென நடந்த சம்பவங்களை விபரமாய் சொன்னான். அதைக் கேட்ட வழக்குரைஞர் நகரத்தின் காவல் அதிகாரி சட்டத்தை மீறி அராஜகமாய் செயல் பட்டிருப்பதைப் புரிந்துக் கொண்டார்.

3

பிறகு, அவர்கள் மீதான வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நடுவர் மன்றத்துக்குப் போய் பார்த்து விட்டு பிணைக்காக ஆவன செய்வதாய் உறுதியளித்தார். அவரது பேச்சும், நடத்தையும் நம்பிக்கைக்கு உரியதாய் இருந்தது. அவர் பிணையில் எடுக்கப் பணம் வேண்டுமென்றோ, பிணைதாரர்கள் தேவையென்றோ எதுவும் கேட்கவில்லை.

என்றாலும், மறுநாளே சித்தூர் கிளைச்சிறையில் இருந்து நால்வரையும் தான் சொன்னவாறே பிணையில் வெளியில் கொண்டு வந்தார். அந்த மனிதாபிமானியை அவர்கள் கை கூப்பிக் கும்பிட்டார்கள். அதை

பொருட்படுத்தாத அவர் ஒரு நல்ல ஓட்டலுக்கு கூட்டிச் சென்று உணவு வாங்கிக் கொடுத்து, ஊருக்குச் செல்ல பணமும் தந்தார். பிறகு, தன் முகவரியை சந்துருவிடம் கொடுத்து நிதானமாய் தன்னை வந்து பார்க்குமாறு சொல்லி விட்டு ஏதோ அவசர வேலையிருப்பதாய் புறப்பட்டுப் போனார்.

முகவரி அட்டையைப் பார்த்த போது அவரின் பெயர் வசீகரன் என்று பொறிக்கப்பட்டு இருந்தது. நிச்சயம் தமிழர்தான். புலம் பெயர்ந்து வந்தவர்களை இங்குள்ள தமிழர்கள் வந்தேறிகளாய் பார்க்கும் போது, இன்னொரு தமிழர் மிகப் பெரிய உதவியை செய்து விட்டுப் போகிறாரே அது எப்படி? புரிந்துக் கொள்ள இயலாமல், சந்துரு அங்கிருந்து மற்றவர்களுடன் பஸ் ஏறி பேட்டைக்கு வந்தான். விசைத்தறி தொழிலாளர்கள் அவர்கள் நால்வரைப் பார்த்ததும் ஆனந்தமாய் கட்டிக் கொண்டார்கள். கந்தப்பன் குடும்பத்திடம், முதலாளி தேவராசு வக்கீல் ஏற்பாடு செய்து தருவதாய் சொல்லியிருக்கிறார். ஒபுளியும் கூட தனக்கு தெரிந்த வழியில் அவர்களின் பிணைக்கு முயன்றிருக்கிறான். ஆனால், அதற்கு அவசியமே இல்லாமல் செய்து விட்டார் வழக்குரைஞர் வசீகரன்.

பேட்டைத் தொழிலாளர்கள் சந்துரு உட்பட நால்வருக்கும், அவர்கள் போலீசில் பட்ட காயங்களை குணமாக்க நிறைய உதவிகள் செய்தார்கள். சந்துருவும், மாதேசும் இளைஞர்கள் என்பதால், சீக்கிரம் உடல் நலம் தேறி விட்டார்கள். கந்தப்பனும், ஏழுமலையும் இன்னும் குணமடையவில்லை. எனவே, தாங்கள் இருவர் மட்டும் வழக்குரைஞரைப் பார்க்க ரயிலில் கிளம்பி விட்டார்கள்.

ரேணிகுண்டாவில் இருந்தது வசீகரனின் வீடு. ரேணிகுண்டா சந்திப்பு ஓரளவுக்குச் சற்றுப் பெரியதாகத்தான் இருந்தது. நான்கைந்து பிளாட்பாரங்கள் மற்றும் நடைமேம்பாலம். எல்லா திசைகளுக்கும் செல்லும் ரயில்கள். அதில், ஏறக் காத்திருக்கும் பயணிகள். அவர்கள் பேச்சில் தெரியும் அந்நிய பாசைகள். பல மாநில முகச்சாயல்கள். பழங்கள் விற்பவர்கள். தின்பண்டங்கள் விற்பவர்கள். பிச்சைக்காரர் கள் என நிரம்பி வழிந்தது.

4

உளரில், சந்தை இரைச்சலைக் கேட்டது போலிருந்தது. ஆனால், அதனூடாகக் கேட்கும் ரயில் சத்தம் மட்டும் வித்தியாசமாய் இருந்தது.

சந்துருவும், மாதேசும் வேலையில்லாத நாட்களில் இதே மாதிரி ரயில் ஏறி கடப்பா வரை போய் ஊர் சுற்றுவார்கள். அப்போது இந்த ஊரை ரயிலில் இருந்து பார்த்ததுதான். இப்போது கீழே இறங்கிப் பார்க்கும் போதுதான் ரயில் நிலையமும், அதைச் சுற்றியுள்ள நகரமும் பெரிதாய் தெரிகின்றன

வழக்குரைஞர் வசீகரன் கொடுத்த விலாசத்திற்கு ரயில் நிலையத்தி லிருந்து எந்தப் பக்கம் போக வேண்டுமென்ற புரிதல் இல்லாமல் சந்துரு குழப்பத்துடன் சுற்றும், முற்றும் பார்த்தான். ஆனால், மாதேசு அதைக் கண்டு கொள்ளாமல் அவன் பாட்டுக்கு வேடிக்கைப் பாத்துக் கொண்டிருந்தான்.

அப்போது யாரோ சந்துருவின் தோளைத் தொட்டார்கள். திரும்பிப் பார்த்தான். பயணச்சீட்டு பரிசோதகர் நின்றிருந்தார். அவர்களின் பயணச்சீட்டுகளைக் கேட்டு கையை நீட்டினார். சந்துரு எடுத்துக் கொடுக்க சரி பார்த்தார். ஆனாலும், அவர் பார்வை அவன் மீதும், மாதேசு மீதும் நூதனமாய் படிந்தது. அதற்குக் காரணம் அவர்கள் இருவரும் இடுப்பில் கட்டியிருந்த லுங்கி, மூட்டி என்றெல்லாம் அழைக்கப்படும் கைலி. பொதுஇடத்தில் கைலி கட்டிக் கொண்டு வருபவன் சிலரது பார்வையில் ஒழுக்கம் இல்லாதவன். பரிசோதகர் விட்டால், தனியாகக் கூட்டிச் சென்று அவர்களை உடல் முழுக்கத் தடவிப் பார்ப்பார் போலிருந்தது. சந்துரு அதற்கு இடம் கொடாமல் தன் சட்டைப் பையிலிருந்த வழக்குரைஞரின் விலாசத்தைக் காட்டி விசாரித்தான்.

அவர் வாய்திறந்து பதில் சொல்லாமல் கையை நீட்டி திசையை மட்டும் காட்டினார். அந்த இளக்காரம் மெலிதாய் ஒரு சின்னக் கோபத்தை ஏற்படுத்தியது.

சந்துரு அதைப் பொருட்படுத்திக் கொள்ளாமல் மாதேசைக் கூட்டிக் கொண்டு நடந்தான். பரிசோதகர் கை காட்டிய திக்குக்கு ரயில்வே நடை மேம்பாலத்தில் ஏறித்தான் அந்தப் பக்கம் இறங்க வேண்டும். எனவே, மேம்பாலத்தை அடைந்து படிகளில் ஏறும் போது மறுபடியும் அந்த இளக்காரம் மனதுக்குள் தலை தூக்கியது. கைலி கட்டுபவர்களுக்கு பொதுஇடத்தில் மட்டுமா அவமரியாதை? இன்றும் கோயில்களில் அவர்களை அனுமதிப்பதில்லை. இத்தனைக்கும் கோயில் அர்ச்சகர்கள் மெலிதான வேட்டியைக் கீழ் பாய்ச்சிக் கட்டிக் கொண்டு உள்ளாடை தெரியும்படி, மேல் சட்டை கூட அணியாமல்தான் திரிகிறார்கள். இதைப் பற்றி யாரும் கேட்பதில்லை.

என்ன பக்தி ஒழுக்கமோ?

5

மூட்டைத் தூக்குபவர்கள், செருப்புத் தைப்பவர்கள், காகிதம் சேகரிப்பவர்கள், டீக்கடையில் வேலை செய்பவர்கள் தள்ளுவண்டி வைத்திருப்பவர்கள் என அழுக்குப்படும் பல வேலை செய்பவர்கள் கைலிதான் கட்டியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஒழுக்க விதியற்றவர்களா என்ன?

நாட்டில் டிப்டாப் திருடர்கள் ஏராளம். அவர்களை இந்த ஒழுக்க சீலர்கள் ஏனோ கண்டுக் கொள்வதில்லை.

சந்துருவும், மாதேசும் இறங்கிப் பார்த்த போது ரேணிகுண்டா நகரம் நாட்டின் மற்ற ஊர்களைப் போல அழுக்காகத்தான் தெரிந்தது.

குப்பைகளே தெருக்களாய் காட்சியளித்தன. விதவிதமாய் மக்கும் மக்காதக் குப்பைகள். அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம் என்று சொன்னார்களே... அப்புறம் ஏன் குப்பைகளை விட்டு வைத்திருக் கிறார்கள். அங்கீகரிக்கப்படுகிறதே சுகாதாரக் கேடுகள் அது ஏன்? ஒன்றும் புரியவில்லை. திடீரென்று மாதேசுக் கேட்டான் ''ஏம்பா டீ குடிக்கலாமா?'' என்று.

''குப்பத்துல ரயில் ஏற்றப்பத்தானே குடிச்சோம். அதுங்காட்டியும் எதுக்கு டீ? பேசாம வா.'' என்று சந்துரு சொன்னதற்கு, ''அது ரொம்ப நேரம் ஆயிடுச்சுல்ல, இப்ப ஒண்ணுப் போட்டாத்தான் நல்லா யிருக்கும்.'' என்று அடம் பிடித்தான்.

''அதுக்குப் பேசாம டிபனே சாப்டுரலாமே...''

''அது அப்புறம். இப்ப டீ மட்டுங் குடிக்கலாம்.'' அவன் இப்படித் தான். எல்லாவற்றுக்கும் எதிர்மறையாய் நிற்பான். ஒரு கடையில் டீக் குடிக்கும் போது மாதேசு திடீரென்று கேட்டான் ''ஏம்பா இப்ப நாம பாக்கப் போறமே... அந்த வக்கீலு நல்லவரா? கெட்டவரா?'' என்று. சந்துரு அவனைப் புதிராய் பார்த்தான்.

''இல்ல, நாம்ப ஜெயிலுக்குப் போனத வெச்சி எதுனாச்சும் தப்புக் காரியத்துக்குக் கூப்டுவாரோன்னு எனக்குத் தோணுது.'' சற்றே திடுக்கிடல் வந்தது. குழப்பத்தில் டீயை சரியாக கூட குடிக்காமல் தம்ளரைக் கீழே வைத்தான் சந்துரு. அப்படியும் இருக்குமோ? சில விநாடிகள் யோசித்தான். மாதேசின் சந்தேகம் சரியாக இருந்தால்

அப்புறமெதற்கு மெனக்கெட்டு வழக்குரைஞரைப் பார்க்க வேண்டும்? ஆனால், அடுத்த கணமே தெளிவடைந்தான். தனக்கும் இந்த சந்தேகம் வசீகரன் பிணையில் எடுக்க வந்த சமயத்தில் எழுந்தது உண்மை. வலிய வந்து உதவி செய்பவர்களை சந்தேகமாய் பார்ப்பதுதானே பொதுப்புத்தி. தன் நண்பன் அதைத்தானே வெளிக்காட்டி இருக்கிறான். சட்டென மாயையை விட்டொழித்தான்.

6

டீக்குக் காசைக் கொடுத்து விட்டு, அங்கேயே தேடி வந்த விலாசத்தை சரிவர விசாரித்துக் கொண்டு விடுவிடுவென்று நடந்தான். கூட வந்தவன் பின்னால் ஓடி வர வேண்டியதாயிற்று.

கொஞ்ச நேர நடையில் குடியிருப்புப் பகுதியொன்று தென்பட்டது. நடுத்தர மக்களின் வசிப்பிடம். அதற்கு நடுவில் சில மெத்தை வீடுகளும் இருந்தன. வீட்டு எண்ணைப் பார்த்துக் கொண்டே வந்ததில் 10ம் எண் பொறித்த வீடு கண்ணுக்குத் தெரிந்தது. முன்கதவு சாத்தியிருந்தது. இது வழக்குரைஞரின் வீடா? அலுவலகமா? எதுவும் புரியாமல் இருவரும் தயங்கி நின்றார்கள்.

அப்போது சிறுமியொருத்தி கடைக்குப் போக கதவைத் திறந்துக் கொண்டு கையில் பையுடன் வெளியே வந்தாள். இவர்களைப் பார்த்து விட்டு சற்றும் தயங்காமல் ''ஒங்களுக்கு யார் வேணும்?'' என்று பளிச்சென கேட்டாள்.

''வசீகரன் சார் வூடு இதானே பாப்பா?'' சந்துரு கேட்டான்.

''ஓ... அப்பாவப் பாக்க வந்தீங்களா... வரச் சொன்னாரா?''

பளிச் தொடர்ந்தது.

''ஆமா பாப்பா.'' சொல்லி வாய் மூடும் முன்பாகவே ''அப்பா... ஒங்களப் பாக்க வந்துருக்குறாங்க...'' என்று உள் நோக்கி குரல் கொடுத்தாள்.

மறுகணமே ''அவுங்கள உள்ற வரச் சொல்லும்மா...'' என்ற வழக்குரைஞரின் குரல் கேட்டது.

''உள்ளாரப் போயி ஒக்காருங்க. நாங் கடைக்குப் போறேன்.'' என்ற சிறுமி துள்ளலாய் நடந்துப் போனாள். அதைப் பார்க்க சந்துருவுக்கு

அழகாய் இருந்தது. சில கணங்கள் புன்முறுவலோடு பார்த்துக் கொண்டு நின்றான்.

அதற்குள், மாதேசு நெட்டித் தள்ள முன்னே நடந்தான். செருப்பை வாசலிலேயே விட்டார்கள். வாசற்கதவைத் தாண்டியதும் சிறிய திண்ணை இருந்தது, அது பாரம்பரியத்தைக் காட்டியது. அதைத் தாண்டி நகர, மாதேசு வெறும் காலில் நடக்க சிரமப்பட்டான். அவனுக்கு ஆணிக்கால் இருந்தது. கொஞ்சம் சுமாரான ஹால் தென்பட்டது. அதில், நீளமான பழைய சோபாவும், சில பிளாஸ்டிக் சேர்களும் இருந்தன. உட்காருவதற்கு முன்னால் சுற்றிலும் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த புகைப்படங்களைப் பார்த்தார்கள் இருவரும். வயதான தம்பதியரின் புகைப்படமொன்று பழசாய் மாலைப் போட்டு மாட்டியிருந்தது.

7

அதற்குப் பக்கத்தில் லட்சணமான முகத்தோற்றத்துடன் ஒரு இளம்பெண்ணின் படமும் மாலையுடன் காட்சியளித்தது.

சற்றே இடதுபுறம் திரும்ப மார்க்சிய ஆசான்கள் ஐந்து பேரும் ஒரே புகைப்படத்தில் காட்சியளித்தார்கள். தன் நண்பன் சந்தேகப்பட்டது போல, அந்த வழக்குரைஞர் தப்பான ஆளாக சந்துருவுக்குத் தோன்ற வில்லை. அது மட்டுமல்ல, அவர் ஏன், தங்களை வந்தேறிகளாய் பார்க்கவில்லை என்பதும் புரிந்தது. சட்டென்று, வலதுபுற அறையிலிருந்து வெறும் முண்டா பனியனும்,கையுமாய் வசீகரன் வெளிப்பட்டார். அவர்களைப் பார்த்ததும உற்சாகமாய் சிரித்தார்.

''வாங்க காம்ரேட்ஸ். என் வீட்டைக் கண்டுபுடிக்க கஷ்டமா இருந்துச்சோ?'' என்று இயல்பாய் கேட்டார். இருவரும் பதில் சொல்லும் முன்பாகவே ''மொதல்ல ஒக்காருங்க.'' என கூறி விட்டு உள்ளே போய் குடிக்க நீர் கொண்டு வந்துக் கொடுத்தார்.

அதை வாங்கிக் குடித்து விட்டு தம்ளர்களைத் திருப்பிக் கொடுத்தார்கள்.

அவர்கள் உட்கார்ந்திருந்த சேர்களின் எதிர்புறமிருந்த சோபாவில் நன்றாக சாய்ந்து உட்கார்ந்த வசீகரன் தற்போது பேட்டை நிலவரத்தைப் பற்றியும், போலீஸ் தொந்தரவுப் பற்றியும் விசாரித்தார்.

சந்துரு ''போலீஸ் மறுபடியும் தேடியொண்ணும் வரல சார். தறிக்காரங்க எல்லாம் நாங்க வெளிய வந்ததுல சந்தோசமாத்தான்

இருக்குறாங்க. ஆனா, பேட்டை மொதலாளிங்கதான் என்னமோ மாதிரி பட்டும் படாம நடந்துக்குறாங்க.'' என்றான்.

மாதேசு தன் நண்பனின் பேச்சுக்கு வெறுமனே தலையாட்ட மட்டும் செய்தான்.

சந்துரு தொடர்ந்து ''ஜெயிலுக்குப் போயிட்டு வந்ததனால எங்க நாலு பேத்துக்கும் கூட மொதலாளிங்க தொழில் செய்ய தறியுட மாட்டாங் கன்னுதான் நெனச்சோம். அப்புடியெதுவும் நடக்கல.'' என்றான்.

அதைக் கேட்ட வசீகரன் ''தங்களோட தறிப் பேக்டரிக்கு வெளியே தொழிலாளிக்கு என்ன நடந்தாலும் தனக்குக் கவலையில்லன்னு நெனக்கிறாங்க போல்ருக்கு. மொதலாளிகளோட அந்த எண்ணத்துல நல்லதும் இருக்குது. கெட்டதும் இருக்குது. இப்போதைக்கு ஒங்களுக்கு அது நல்லதா முடிஞ்சிருக்குது.'' என்றார்.

பிறகு,''மத்த ரெண்டு பேரும் வரலையா?'' என்று விசாரித்தார். அதற்கு, சந்துரு''கொஞ்சம் வயசானவுங்கல்லியா... இன்னும் ஒடம்பு செரியாகல.'' என்று சொன்னான்.

8

அதை அனுதாபத்தோடு செவிமடுத்தார் வழக்குரைஞர். கொஞ்சநேர அமைதிக்குப் பின் கேட்டார். ''நீங்கெல்லாம் தமிழ்நாட்டோட அந்த கோடியில இருந்து ஆந்திராவுக்கு வர்றதுக்கு என்ன காரணம்? மொதல்ல ஒங்க கதையச் சொல்லுங்க சந்துரு.''

''அப்பா பழைய கம்யூனிஸ்ட்காரரு. அந்த காலத்துலயே ஒரு தலித் பொண்ணை சாதிமறுப்புத் திருமணம் செஞ்சுக்கிட்டாரு. அத அவுங்க கட்சிதான் முன்ன நின்னு நடத்தி வெச்சதாச் சொன்னாரு. இந்த கல்யாணத்துனால அப்பாவுக்குச் சொந்த பந்ததுலப் பகையாயிடுச்சு. கட்சி ஆதரவுனால குடும்பத்தச் சமாளிச்சிருக்குறாரு. ஆனா, கொஞ்ச நாள்ல கட்சியிலயும் அப்பாவுக்குப் பிரச்னை வந்து வெளிய வந்துட்டாரு. இனிமே, சொந்த ஊருல பொழைக்க முடியாதுன்னுட்டு அம்மாவக் கூட்டிக்கிட்டு மணியம்பாளையம் வந்துட்டாரு.''

''ஒங்கப்பாவுக்குச் சொந்த ஊரு எது?'' என வசீகரன் குறுக்கிட்டுக் கேட்டார்.

''மேட்டூர் அணைக்குப் பக்கத்துல வனவாசி.''

''ஓ...''

''மணியம்பாளையம் வந்தப்புறம் ஒண்ணும் பிரச்னையில்ல. அப்பாவும், அம்மாவும் இன்னிக்கி வரைக்கும் ஒத்துமையாத்தான் இருக்குறாங்க. நாங்க மொத்தம் நாலு புள்ளைங்க சார். மூத்தது அக்கா, ரெண்டாவது அண்ணன், அப்புறம் நான், கடைசியா தங்கச்சி...'' என்று நிறுத்தினான் சந்துரு. அதைக் கேட்டு வசீகரனின் முகத்தில் உற்சாக ரேகை படர்ந்தது.

அவன் தொடர்ந்தான். ''எங்க நாலு பேத்தையுமே அப்பா நல்லாப் படிக்க வெக்க ஆசப்பட்டாரு. அக்காவுக்கும், அண்ணனுக்கும் அவ்வளவாப் படிப்பு ஏறல... என்னக் கல்லூரிக்கு அனுப்சி படிக்க வெச்சாரு. தங்கச்சியும் இப்ப கல்லூரிக்குப் போயிட்டிருக்குது.'' என்று.

வசீகரன் மேலும் சந்தோசப்பட்டார்.

உடனே, ''பரவாயில்லையே ஒங்கப்பா. சாதிமறுப்புத் திருமணம் செஞ்சு நாலு கொழந்தைங்களப் பெத்து ஆளாக்கியிருக்குறாரே...'' என்று வாய் விட்டுப் பாராட்டிச் சொன்னார்.

அதை தொடர்ந்து ''அப்புறம் எதுக்குச் சந்துரு, அவங்கள வுட்டுட்டு இவ்வளவு தூரம் வந்து தனியா சிரமப்பட்டுக்கிட்டு இருக்குறீங்க? அங்கியே ஏதாவது நல்ல வேலப் பாத்திருக்கலாமே?'' என்று கேட்டார்.

9

''சாதியில்லாதவங்களாவே எங்கப்பா எங்கள வளத்துட்டாரு சார். ஸ்கூல் சர்ட்டிபிகேட்ல கூட இன்ன சாதிமதம்னு அவுரு குறிப்பிடல.. அதனால இடஒதுக்கீட்டு உரிமையெதுவும் எனக்குக் கெடைக்கல. லோக்கல் தறிப்பட்டறைல குமாஸ்தா வேலைக் கெடைச்சுது. அதுக்குத் தறி ஓட்டுறவனுக்குக் கெடைக்கறத வுட கம்மிச் சம்பளந்தான் குடுக்குறாங்க. அதுனாலதான் நா தறியோட்டப் போனேன்.'' என்றவன் சற்று நிறுத்தினான்.

வசீகரன் சற்று அனுதாபத்துடன் இப்போது அவனைப் பார்த்தார்.

மாதேசுக்கு இது தெரிந்த கதைதான் என்றாலும், அதை தன் உயிர் நண்பனின் வாயால் கேட்பதில் பரிதாபம் காட்டினான்.

சந்துரு தொடர்ந்தான் ''மூத்தவளுக்குக் கல்யாணம் பண்ணி வெக்க எம் பங்குக்கு கொஞ்சம் அதிகப்படியாவே மணியம்பாளையம் தறி மொதலாளிக் கிட்ட ரெண்டு லெட்ச ரூபா கடன் வாங்குனேன் சார். அதைக் கட்ட முடியல.. அந்த மொதலாளி ஒரு நாளு குடும்பத்தப் பத்திக் கேவலமாப் பேசுனான். பக்கத்துல மரக்கட்டை கெடந்துச்சு, எடுத்து நாலு சாத்து சாத்துனேன். அதுலதான் வந்தது வெனையே...''

''.....''

''அதனாலதான் சார் இப்புடி தலமறைவா இந்த ஊருக்கு ஓடியாந்துட்டேன்.இந்த மாதிரி சொந்த ஊர் மொதலாளிங்களால பாதிக்கப் பட்ட பேட்டைத் தொழிலாளிங்களுக்கு ஆளுக்கொரு கத இருக்குது சார்.'' என்று முடித்தான்

முழுவதும் கேட்ட வசீகரன் எதுவும் பேசவில்லை. அவர் மனதில் கனம் ஏறியிருந்தது. மெலிதாய் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

பிறகு, தன்னையறியாமல் மாதேசைப் பார்த்தார்.

அவன் தன்னிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்பதைப் போல அவரைக் கண்ணுற்றான்.

அதைப் பார்த்து சிரித்த சந்துரு அவன் சார்பாக தானே பேசினான்.

''நாங்க ரெண்டு பேரும் சின்ன வயசுல இருந்தே நண்பர்கள் சார். அவுங்க குடும்பமும் வெளியூர்ல இருந்து மணியம்பாளையத்துக்குப் பொழைக்க வந்ததுதான். வூட்டுக்கு ஒரே பையன். அவுங்க அப்பா, அம்மா அங்க இருக்குறாங்க. ஆனா, இவன் மட்டும் இப்ப எங்கூடத்தான் பேட்டையில தறியோட்டுறான்.''

10

''அவரும் ஒங்கள மாதிரி கடன் வாங்கிட்டுக் கட்ட முடியாம வந்தவர்தானா?''

''அதெல்லாம் இல்ல சார். என்ன வுட்டுப் பிரிய முடியாமத்தான் எங்கூடவே இங்க வந்துக் கெடக்குறான்.''

அந்த நண்பர்களை ஆச்சரியமாகப் பார்த்தார் வசீகரன். மாதேசின் மீதான அவரின் மரியாதை கூடியது போல் தெரிந்தது.

''கல்லூரியிலயும் ஒண்ணாத்தான் படிச்சீங்களா?''

அதற்கு சந்துருவின் பதில் வசீகரனை மேலும் வியக்க வைத்தது.

''அவன் அஞ்சாங் கிளாசோட செரி சார்.''

படித்தவனும், படிக்காதவனும் சிறுவயது முதல் இணைபிரியாத நண்பர்கள் என்பது அவருக்கு சுவராசியமாய் பட்டது.

அதே நேரத்தில் சந்துரு, வசீகரன் எதற்காக தன்னை வரச் சொன்னார்? என்பதை தெரிந்துக் கொள்ள வாயெடுத்தான். அப்போது அவனும், மாதேசும் வாசலில் பார்த்த அந்த சிறுமி வந்து விட்டாள். அவள் கையிலிருந்த பை கனத்திருந்தது.

''என்னடா கண்ணு ஏன் லேட்?'' வசீகரன் மகளிடம் அன்பாய் கேட்டார்.

''கடைல ரொம்ப கூட்டம்பா...'' என்று அழகாய் சலித்துக் கொண்ட அந்த சின்னப் பெண் வீட்டின் சமையலறையில் கொண்டு போய் கைப் பையை வைக்கப் போனாள்.

அதைப் பார்த்தபடியே வசீகரன் ''ஏண்டா... ஒங்கிட்ட ரெண்டு முட்டைதான் வாங்கியாரச் சொன்னேன். இப்ப தோழர்கள் வேற வந்திருக்குறாங்களே... இன்னும் ரெண்டு முட்டை வேணுமே.'' என்று சத்தமாக கேட்டார்.

''அவுங்களுக்குக் சேத்து நாலு முட்டையா வாங்கிட்டேம்பா...'' என்று சிறுமி குரல் கொடுக்க, வந்தவர்கள் பக்கம் பெருமையாக சிரித்தபடியே முகத்தைத் திருப்பினார் வசீகரன்.

பிறகு, ''எம் பொண்ணுப்பா... பேரு நிர்மலா.'' என்றவர், சமையலறை நோக்கி குரல் கொடுத்தார். ''இங்க வாடா கண்ணு. தோழர்கள அறிமுகப்படுத்தி வெக்கறேன்.'' என்று.

11

சட்டென நிர்மலா வெளிப்பட, வசீகரனை முந்திக் கொண்டு சந்துரு பேசினான்.

''நாங்கதான் பாப்பாவ வாசல்லயே பாத்துட்டமே சார்.'' என்று.

தன் செல்லமகளை இழுத்து, மடியில் உட்கார வைத்துக் கொண்ட அவர் அவளுக்கு சந்துருவையும், மாதேசையும் முறையாக அறிமுகப்படுத்தி வைத்தார். பிறகு, ''நான் அன்னிக்கி சொல்லல, பேட்டையில ரெண்டு பேரு மொதலாளிகள அடிப் பின்னிட்டாங்கன்னு... அவுங்க இந்த தோழருங்கதான். '' என்று சொன்னதற்கு அவள் சிரித்தாள். தன் அப்பா சொன்னதக் கேட்டு நிர்மலா ''எனக்கு ஒங்களப் பாக்கணுன்னு நேத்து தான் தோணுச்சு. இன்னிக்கி நீங்களே எங்க வூட்டுக்கு வந்துட்டீங்க. ரொம்ப நன்றி.'' என்றாள்.

''நீ என்னப் படிக்கிறே பாப்பா?'' என்று சந்துரு கேட்டான்.

''ஏழாவது படிக்கிறேன்.''

அப்போது அவர்கள் பேச்சில் குறுக்கிட்ட வசீகரன் ''படிப்பெல்லாம் சுமார்தான்.'' என்று கேலி செய்தார்.

அதில், வெட்கப்பட்ட நிர்மலா ''சரிப்பா, நாம் போயி டீப் போட்டுக் கொண்டாரேன். இருங்க.'' என்று எழுந்து உள்ளே போனாள். என்ன இன்றைக்கு இருந்தால் பத்துப் பண்ணிரெண்டு வயதிருக்கும் அவளுக்கு என்று நினைத்துக் கொண்டான் சந்துரு. அப்போது சட்டென மாதேசு ''சார், அவுங்க அம்மா எங்கப் போயிட்டாங்க?'' என்று. அவன் அப்படிக் கேட்டது இங்கிதமற்றதாய் தோண்ற சந்துரு கொஞ்சம் பதட்டமானான்.

என்றாலும், வசீகரன் அதற்கு பொறுப்பாய் பதில் சொன்னார்.

''அவுங்கம்மா எங்கயும் போகல மாதேசு, இங்கதான் இருக்க குறாங்க.'' என்று புகைப்படத்தில் இருந்த இளம்பெண்ணைச் சுட்டிக் காட்டினார். மாதேசுக்கும், சந்துருவுக்கும் தூக்கி வாரிப் போட்டது.

நிர்மலாவின் தாயார் இறந்து விட்டாரா? அதுவும், இவ்வளவு சின்ன வயதிலா? அதெப்படி?

''எங்க பாப்பா பொறந்த நேரத்துல, அரக்கோணத்துக்கு பக்கத்துல அவுங்க அம்மா வீட்ல இருந்தாங்க. அது ஒரு கிராமம். கழிப்பறை வசதி கெடையாது. அங்க வயக்காட்டுப் பக்கம் ஒதுங்குனப்ப பாம்பு கடிச்சி எறந்துட்டாங்க.'' என்று அவர் கம்மிய குரலில் கூறினார்.

12

அந்த கனமான சோகம் இருவரது மனங்களையும் சட்டென தாக்கியது.

அப்போது வசீகரன் தன் மனைவியின் படத்தைப் பார்த்துக் கண் கலங்கினார். அந்த காட்சி ஒரு அன்பான கணவனின் அப்பழுக்கற்றப் பாசத்தைக் காட்டியது. அதைக் கண்ணுற்ற சந்துருவும், மாதேசும் தங்களையறியாமல் கண் கலங்க ஆரம்பித்து விட்டார்கள்.

நல்லவேளையாக நிர்மலா டீப் போட்டு எடுத்து வந்து விட்டாள். மூவரும் சகஜநிலைக்கு வந்தார்கள். கொண்டு வந்த டீயைக் கொடுத்துக் கொண்டே கேட்டாள்.

''என்னப்பா... அம்மாவோடக் கதயச் சொல்லி வந்த தோழர்கள அழ வெச்சுட்டீங்களே?'' என்று.

எவ்வளவு அருமையான குழந்தை அவள் என்று வியந்தான் சந்துரு.

அதேநேரத்தில், ஒரு கம்யூனிஸ்ட்காரன் வளர்த்தப் பிள்ளை வேறெப்படி இருக்கும்? என்றே அவனுக்குத் தோன்றியது. தன் அப்பாவும் இப்படித்தானே தன்னை வளர்த்தார். தன்னை மட்டுமா? தன் சகோதர சகோதரிகளையும் அப்பா எவ்வளவுப் பாசமும், அறிவும் ஊட்டி வளர்த்தார். ஒரு செஞ்சட்டைக்காரனுக்குப் பிள்ளையாய் பிறக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். என்றாலும் கூட, தனக்கு தொட்டில் கட்டி தாலாட்டி வளர்க்க அன்னை இருந்தார். இப்போதும் இருக்கிறார்.

இந்த சின்ன வயசுப் பெண்ணுக்கு அந்த பாக்கியம் இல்லையே என நினைக்கும் போது நிர்மலா மீது அளவு கடந்த பாசமும், அனுதாபமும் தோன்றியது. அந்தப் சிறுமி போட்ட டீயும் கூட அருமையாய் இருந்தது.

ஒரு நல்ல தகப்பனாய் தன் கண்ணுக்குத் தெரிந்த வசீகரனை டீயைக் குடித்துக் கொண்டே ஏறிட்டுப் பார்த்தான் சந்துரு. இவரைப் போய் சந்தேகப்பட்டானே இந்த மாதேசு சண்டாளன் என்று தோன்ற, பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவனை திரும்பிப் பார்த்து முறைத்தான். தன் நண்பனின் மனவோட்டத்தைப் புரிந்துக் கொண்ட மாதேசு தன் கண்களால் மானசீகமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

இதைக் கவனித்து விட்ட வசீகரன் ''என்ன ரெண்டு பேரும் பார்வை யாலயே பேசிக்கிறீங்க?'' என்று விசாரித்தார். மாதேசு தானே முன்வந்து அவரை சந்தேகப்பட்டதைச் சொல்லி அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டான்.

13

அதற்கு, அவர் ''ஒங்க மேல தப்பில்ல தோழரே, இன்னிக்கி ஒலகம் அப்புடி.'' என்றார்.

பிறகு, ''கொஞ்சம் இருங்க நானும், நிர்மலாவும் டிபன் ரெடி பண்ணிடுறோம். நாம நாலு பேரும் பேசிக்கிட்டே சாப்பிடலாம். அதுவரைக்குக் இன்னிக்குப் பேப்பர் படிங்க...'' என்று நாளிதழை அவர்கள் முன்னே தூக்கிப் போட்டு விட்டு எழுந்து நின்ற அவரிடம் சந்துரு கேட்டான் ''சார்... ஒங்களுக்கு நாங்களும் கூடமாட ஒத்தாசை செய்யலாமா?'' என்று.

அதைக் கேட்டு சற்றும் தயங்காத வசீகரன் ''வாங்க, தாராளமா வந்து செய்ங்க.'' என்று சிரித்தபடியே வரவேற்று சமையலறைக்குக் கூட்டிப் போனார்.

சமையலறைக் கொஞ்சம் விசாலமாயும், சுத்தமாயும் இருந்தது.

உப்பு, மிளகாய், கடுகு டப்பாக்களும் எண்ணை ஜாடியும் அழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. குடும்பத் தலைவியில்லாத வீடென்று சொல்ல முடியவில்லை. சமையலுக்கு கேஸ் உபயோகப்படுத்தினார்கள்.

சந்துருவும், மாதேசும் காய்கறிகளைக் கழுவி ஹாலுக்கு எடுத்து வந்து நறுக்கினார்கள். வீட்டில் டிவி இருந்தது. அதை யாரும் சட்டை செய்யக் காணோம். வெகுசீக்கிரத்தில் வசீகரனின் வீடு வந்தவர்களுக்கு சொந்த வீடு மாதிரியாகி விட்டது. அதை எதிர்பார்த்திராத அவர்கள் அனுபவித்து ரசித்தார்கள்.

அடுத்த அரைமணி நேரத்தில் சாதம்,சாம்பார், ஆம்லெட் என்று எளிமையாய் சாப்பாடே தயாராகி விட்டது.

ஹாலை கூட்டி சுத்தம் செய்து விட்டு சமைத்த பாத்திரங்களைக் கொண்டு வந்து பரப்பி வைத்துக் கொண்டு ஆளுக்கொரு தட்டில் சோற்றை எடுத்து வைத்துச் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

சம்மணம் போட்டு உட்கார்ந்துச் சாப்பிட கைலி வசதியாய் இருந்தது.

சாப்பாட்டுக் கடை ஓய்ந்ததும் காலியான பாத்திரங்களைச் சந்துருவும், மாதேசும் மீண்டும் சமையலறைக்குக் கொண்டு வந்து அதே வேகத்தில் கழுவ முயல நிர்மலா தடுத்து விட்டாள்.

''நீங்க போயி அப்பாக்கிட்டப் பேசிக்கிட்டு இருங்க தோழர். நானே கழுவிக்கிறேன்.'' என்று அவர்கள் வந்த நோக்கத்தை நினைவுப் படுத்துவது போலக் கூறினாள்.

14

அவளது பொறுப்புணர்ச்சியும், தோழர் என்று கூப்பிட்ட விதமும் சந்துருவுக்கு மிகவும் பிடித்திருந்தது. எனவே, மறுப்புச் சொல்லாமல் மாதேசோடு வெளியே வந்தான்.

ஹாலில் வசீகரன் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தார். அந்த புகை நாற்றத்தை உணர்ந்த நிர்மலா ''அப்பா... வீட்டுகுள்ற சிகரெட் பிடிக்காதீங்கன்னு சொல்லியிருக்கேன்ல...'' என்று சமையல் அறையிலிருந்துச் சத்தம் போட்டாள்.

''சாரிம்மா, இன்னிக்கி ஒரு நாளைக்கி ப்ளீஸ்...'' என்று மகளுக்குப் பதில் சொல்லி விட்டு வந்தவர்கள் பக்கமாய் திரும்பினார்.

''அப்புறம் ரெண்டு பேரும் வயிறு நெறையச் சாப்பிட்டீங்களா?'' என்று கேட்டார். சந்துருவும், மாதேசும் ஒரே மாதிரி தலையாட்டினார்கள்.

உடனே ஆரம்பித்தார் ''இனிமே என்ன செய்றதா உத்தேசம்?'' என்று வினவினார்.

சந்துரு, மாதேசை ஒருமுறைப் பார்த்து விட்டு அவரிடம் வந்தான் '' எதப் பத்தி சார் கேட்குறீங்க?'' என பதில் கேள்வி எழுப்பினான். அவசரமாய் தன் வாயிலிருந்தப் புகையை ஊதி விட்டு அவர் கூறினார் ''இனுமே என்னை தோழர்னுதான் கூப்பிடணும்.'' என்று கண்டிப்பாக.

சந்துரு தன் நண்பனுக்கும் சேர்த்து தானே சரியென்பதைப் போல தலையசைத்தான். அதன்பின், வசீகரன் தொடர்ந்தார் ''இல்ல, தன்னெழுச்சியா மொதலாளிகளுக்கு எதிரா ஒரு போராட்டம் பண்ணி,

போலீஸ் கையால அடி வாங்கி, ஜெயிலுக்கும் போய்ட்டு வந்துட்டீங்க. இதோட உங்க கடமை முடிஞ்சுதா? வேற எதாவது எண்ணம் இருக்குதா?'' என்று.

''எங்கக் கிட்டயிருந்து தப்பிச்சுப் போன மொதலாளிங்க மறுக்கா வர மாட்டானுங்கன்னு எந்த கேரண்டியும் இல்ல, அதே மாதிரி தொழிலாளிங்களுக்குக் கடங்குடுத்த வேற மொதலாளிங்களும் பேட்டைக்கி வராம இருக்க மாட்டாங்க. இதையெல்லாம் நாங்க யோசிக்காம இல்ல தோழர். இதுக்கு தீர்வு என்னன்னுதான் எங்களுக்குத் தெரியல. எங்களுக்கு நீங்கதான் வழி காட்டணும்.''

''ஒங்களுக்கு நா என்ன வழி காட்டுறது தோ.. அந்த படத்துல இருக்குறவங்கதான் ஏற்கனவே வழி காட்டி வச்சுட்டுப் போயிருக்குறாங்களே.'' அவர் தலை சாய்த்து தனக்குப் பின்னால் சுவற்றில் மாட்டியிருந்த மார்க்சிய ஆசான்களின் படத்தை குறிப்பால் சுட்டிக் காட்டினார்.

15

பிறகு, ''என்ன சந்துரு, ஒரு கம்யூனிஸ்ட்காரரின் மகனான ஒங்களுக்கு இதெல்லாம் தெரியாதா?'' என்று கேட்டார்.

அப்படிக் கேட்டு விட்டு அவனை ஆழமாய் பார்த்தார்.

''தோழர்... எங்கப்பா, அடிக்கடி எங்ககிட்ட 'இந்த நாட்ல ஏழைப் பணக்காரன்னு வித்தியாசம் இருக்கக் கூடாது எல்லாம் சமமா வரணும்பா.' அப்புடின்னு சொல்வாரு. அதைக் கொண்டுக்கிட்டு வர்ற வழி ஒரு மக்கள் புரட்சின்னும் சொல்வாரு அதுக்குப் பல கட்டப் போராட்டங்கள் செய்யணும்னு அடிக்கடிப் பேசுவாரு.''

''செரிதான். அவுரு ஒங்களுக்குப் படிக்க கம்யூனிசப் புத்தகங்கள் எதுவும் குடுத்தது இல்லியா?''

''சில புத்தகங்கள் வாங்கிப் படிக்கிறதுக்கு குடுத்தாரு...''

''படிச்சீங்களா?''

''படிச்சேன். ஆனா,அதுல இருக்குற எதையும் எம் மனசுல ஏத்திக்கல''

''ஏஞ் சந்துரு?'' என்று கேட்டு விட்டு வசீகரன் அவனைக் கூர்மையாய் பார்த்தார்

கொஞ்சம் தயங்கிய அவன் ''வெளிப்படையா சொல்லணும்னா எங்க அப்பா மேல எனக்கு இருந்த பாசம் அவரோட கொள்கைகள் மேல இருந்தது இல்ல தோழர். ஏன்னா, கம்யூனிஸ்ட்காரங்க நல்லவங்களா இருக்குறாங்களே தவுத்து நடைமுறையில ஏமாளிங்களாத்தான் இருக்குறாங்க. அதுக்கு எங்கப்பா ஒரு உதாரணம். அவுருக்குப் பின்னாடி மணியம்பாளையத்துக்கு பொழைக்க வந்தவுங்கள்லாம் இன்னிக்கி வூடு கட்டிச் சொந்தமா தறிப் போட்டுட்டாங்க. இவுரு இன்னும் தொழிலாளியாத்தான் இருக்குறாரு.'' என்றான்.

அதைக் கேட்டு அவர் முகம் இறுக்கமானது. சட்டென கேட்டார் ''ஆனா அவுரு நல்லவரா இருக்குறாருல்ல.'' என்று.

''நல்லவுங்கள யார் தோழர் இந்த காலத்துல மதிக்கிறாங்க. பொழைக்கத் தெரியாதவன்னுதான் சொல்றாங்க. நாங்கூட ஒங்க வூட்ல நொழைஞ்சதும் கம்யூனிஸ்ட் தலைவருங்க படத்தைப் பாத்துட்டு, மாநிலம் வுட்டு மாநிலம் வந்து பொழைக்கிற எங்கள வந்தேறிகளாப் பாக்காத ஒங்கள நல்லவரா இருப்பீங்கன்னுதான் நெனைச்சேன். இருந்தாலும் ஏமாளியாத்தான் பாத்தேன்.''

16

இந்த சமூகத்தில் யாரோ ஒரு சிலர் அவனைக் காயப்படுத்தி யிருக்கிறார்கள் என்பதை வசீகரன் சட்டென்று உணர்ந்துக் கொண்டார். அந்த வேதனையில் அவன் பேசுகிறான் என்பதும் புரிந்தது. உடனே அவர் கேட்டார்.

''இவ்வளவு பேசற நீ அப்புறம் ஏன்யா, ஒங்க சொந்த ஊர்ல மொதலாளிய மரக்கட்டையால அடிச்சே?''

இந்த கேள்விக்குப் பதில் தெரியாமல் அவன் விழித்தான்.

''இங்கப் பாருங்க சந்துரு. இங்க ஒருத்தன் எவ்வளவு புத்திசாலியா இருந்தாலும் நெனச்சவுடனே மொதலாளியா ஆயிட முடியாது. மொதல்ல தொழில் தொடங்க மூலதனம் வேணும். அதை திரட்டவே ஆயிரம் கேப்மாரித்தனம் பண்ணனும். அடுத்தவங்க மேல ஈவு

இரக்கமே காட்டக் கூடாது. மான ரோசத்தை விட்டுடனும். சமயத்துல, வேற மாதிரி தப்புச் செய்யவும் தயங்கக் கூடாது. இதையெல்லாம் செஞ்சி மூலதனம் திரட்டி தொழில் தொடங்குனா அங்க தொழிலாளிய கசக்கிப் பிழிஞ்சி சுரண்டனும். இதெல்லாம் மனுசங்களோட குணமா?''

''.....''

''இப்படியெல்லாம் வாழாம ஒங்கப்பா மனுசனா வாழ்ந்திருக்குறாரு, மொதல்ல அதுக்கு அவரப் பாராட்டனும். இப்படிப்பட்டவரத் தக்க வெச்சுக்காம போனதுக்கு அவர் இருந்த கட்சிக்கு கொடுப்பினை இல்லாம போச்சு. ஆனா, ஒங்கப்பா அப்பழுக்கில்லாத தொண்டனா இருந்திருக்குறாரு. அதனாலதான் ஒங்கள மாதிரி நல்லப் புள்ளையப் பெத்துருக்குறாரு.''

''.....''

''ஒங்கப்பாவ பொழைக்கத் தெரியாதவர்னு சொல்ற நீங்க இப்ப செஞ்சுக்கிட்டு இருக்குற காரியம் என்ன? வர்க்கப் போராட்டம்தானே. அத ஏஞ் செய்றீங்க? ஒரு மனிதாபினானமுள்ள தொழிலாளியா இருக்குறதனால அப்புடிச் செய்றீங்க. அதுக்குக் காரணம் ஒங்க ஒடம்புல ஓடற ரத்தத்துல வர்க்க குணம் இருக்குது. ஒங்கப்பா செய்யாம விட்டப் புரட்சிய நீங்க ஏன் செய்யக் கூடாது? '' என்று ஆவேசமாய் கேட்டு நிறுத்தினார் வசீகரன்

''அதப் பத்தியெல்லாம் எங்களுக்கு ஒண்ணும் தெரியாது தோழர்.'' என்று பரிதாபமாய் சொன்னான் சந்துரு.

அதை மாதேசும் ஆமோதித்தான்.

17

''புரட்சியப் பத்தி ஒங்களுக்குச் சொல்லித் தர இங்க தோழருங்க இருக்குறாங்க. மொதல்ல அதக் காது குடுத்துக் கேக்க நீங்க தயாரா?'' என்று வினவினார்.

அதற்கு சந்துரு பதில் சொல்லத் தொடங்கும் முன்பே மாதேசு முந்திக் கொண்டான்.

''எப்புடியாவது எங்களுக்கு மொதல்ல எங்க ஊர் மொதலாளிங்க தொல்லையில இருந்து விடுதலைக் கெடைக்கணும். ரெண்டாவது இந்த ஊர் மொதலாளிங்க எங்கள வந்தேறியாப் பாக்குறத மாத்தணும். இங்க நாங்க வாழ்றதுக்கான அங்கீகாரம் கெடைக்கணும். அதுக்கு நீங்க என்ன சொன்னாலும் கேக்குறோம்.'' என்றான்.

அவன் சொன்னதை ஆமோதித்த சந்துரு ''என் நண்பன் சொன்னதுதான் எனக்கும் தோழர்.'' என வழி மொழிந்தான்.

இருவரும் கூறியதைக் கேட்டு உற்சாகமான வசீகரன் சட்டென எழுந்து தன் பனியனுக்கு மேல் சட்டைப் போட்டுக் கொண்டார்.

''வாங்க போகலாம்.''என்று வெளியே அழைத்தார்.

எங்கே? என்று யாரும் கேட்கவில்லை. அவருடன் புறப்பட சந்துருவும், மாதேசும் தயாரானார்கள்.

சமையலறையை நோக்கி வசீகரன் குரல் கொடுத்தார்.

''நிர்மலா... நா தோழர்கள கூட்டிக்கிட்டு கொஞ்சம் வெளியப் போயிட்டு வர்றேம்மா.''

''செரிப்பா, சீக்கிரம் வந்துடுங்க.''

அங்கிருந்து பதில் வந்ததும் மூவரும் புறப்பட்டார்கள்.

நேரம் மதியத்தை நெருங்கி விட்டதற்கு அடையாளமாய் பக்கத்தில் எங்கோ பாங்குச் சத்தம் கேட்டது. தொழுகைக்காக செல்லும் சில முஸ்லிம்கள் எதிரே தென்பட்டார்கள். தலையில் குல்லா அணிந்திருந்த ஒருவர் இவர்களைப் பார்த்து ''ஸலாமலைக்கும்...'' என்று முகமன் கூறி விட்டுச் சென்றார்.

கைலியின் மகத்துவம் அது என்று சந்துரு நினைத்துக் கொண்டான்.

18

உண்மையில், முஸ்லிம்களிடம் உள்ள இந்த கைலி கட்டும் பழக்கம் மட்டும் இல்லாவிடில் விசைத்தறித் தொழில் இன்னும் நசிந்திருக்கும். தறிகளில் ஓடும் கைலி ரகங்கள் ஓரளவு கை கொடுக்கின்றன.

இதுவும் அற்றுப் போயிருந்தால், தொழிலாளர்கள் நகர்புறங்களுக்கு கட்டிட வேலை செய்யப் போக வேண்டியதுதான்.

வசீகரன் ஒரு சில தெருக்களை தாண்டி கூட்டிச் சென்றார். கடைசியில் முன்புறம் காலியாக கிடந்த ஒருமனையைத் தாண்டி உள்ளடங்கி யிருந்த வீடொன்றுக்குள்ளே நுழைந்தார். அப்படி போகும் போது அவரையறியாமல் அவரது கண்கள் முன்னெச்சரிக்கையாய் சுற்றும் முற்றும் நோட்டமிட்டன, அவர் ஏன் அப்படிச் செய்கிறார் என்பதை சந்துருவும், மாதேசும் குழப்பத்துடன் பார்த்தனர். இருந்தாலும் வசீகரனிடம் எதுவும் கேட்கவில்லை.

அந்த வீட்டினுள் பிரவேசிக்கும் போது ''செருப்ப வெளிய வுடாதீங்க. உள்ற கொண்டாந்து வுடுங்க.'' என்றார்.

அவர் சொன்னபடியே இருவரும் செய்தார்கள்.

ஆளரவம் கேட்டு உள்ளிருந்து மூக்குக் கண்ணாடியணிந்த முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் வந்து எட்டிப் பார்த்து விட்டு ''வாங்க தோழர்...'' என்று சிரித்தார். பிறகு, யாரிடமோ ''வசீகரன் வந்திருக்குறாரு...'' என்று பின்புறம் திரும்பிச் சொன்னார் அந்த பெண்ணைப் பின் தொடர்ந்து மூவரும் செல்ல, அங்கு இருந்த சேர்களில் வயதான ஆண் ஒருவரும், நடுத்தர வயதில் ஒரு பெண்ணும் மேலும் இரண்டு இளைஞர்களும் உட்கார்ந்து இருந்தார்கள். அவர்கள் பொறுப்பாய் அமர்ந்திருந்த தோரணையில் ஏதோ முக்கியமாய் பேசிக் கொண்டிருந்ததாய் சந்துருவுக்குப் பட்டது. தான் கூட்டி வந்த இருவரையும் பொதுவாய் அங்கிருந்த ஐந்து நபர்களிடமும் அறிமுகப்படுத்தும் விதமாய் ''இவுங்கதான் பேட்டைக் கிராமத்துல நடந்த தொழிலாளர் பிரச்னையோட முன்னோடிகள்.'' என்று வசீகரன் கூறினார்.

அதற்கு, எல்லோரிடமிருந்தும் சந்துருவையும், மாதேசையும் வரவேற்கும் முகபாவனைத் தெரிந்தது. அவர்களின் பிரதிநிதி போல வயதான தோழர் ''வாங்க தோழர்களே... ஒங்கள சந்திச்சதுல ரொம்ப சந்தோசம்.'' என்று சொல்லி விட்டு ''இப்புடி வந்து ஒக்காருங்க...'' என்று தன்னருகே கூப்பிட்டார். மற்றவர்கள் வழி விட, சந்துருவும், மாதேசும் முன்னேறிச் சென்று அவருக்கு நெருக்கமாய் காலிச் சேர்களில் உட்கார்ந்தார்கள்.

19

வசீகரன் அவர்களின் பெயர்களைச் சொல்ல ஐவரும் ஒவ்வொருவராய் கை கொடுத்தார்கள்.

பெண்கள் கையைத் தொடும் போது மட்டும் மாதேசு கூச்சப்பட்டான். சந்துருவுக்கு அப்படியெதுவும் தோன்றவில்லை.

ஆனால். அந்த தோழர்களின் பெயரை வசீகரன் சொல்லாதது அவனுக்குக் குறையாய் பட்டது. இருந்தாலும், அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அறிமுகப் படலம் முடிந்ததும் வசீகரன் ஆரம்பித்தார் ''இவுங்க ரெண்டு பேத்தையும் வெச்சு பேட்டையில இருக்குற வெளியூர் தொழிலாளர்கள் மத்தியில உடனடியா ஒரு தொழிற்சங்க அமைப்பைக் கட்டணும். அதுதான் மார்க்சிய அரசியலுக்கு எல்லாரையும் கொண்டு வர்றதுக்கான முதல் படி. நீங்க என்ன நெனைக்குறீங்க?'' என்று வயதான தோழரிடம் அவர் கருத்துக் கேட்டார்.

மறுப்பேதும் சொல்லாமல் சம்மதத்துக்கான அறிகுறியாய் மூத்த தோழர் தலையசைத்தார்.

பிறகு, மற்றவர்கள் இது சம்பந்தமாய் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் போல தன் சக தோழர்களை ஒவ்வொருவராய் பார்த்தார். அவர்களும் ஒப்புக் கொள்ளவே சந்துரு, மாதேசிடம் ''என்ன தோழர்களே இதுல ஒங்களுக்குச் சம்மதந்தானே?'' என்று கேட்டார்.

சந்துரு ஒருமுறை வசீகரனைப் பார்த்து விட்டு ''இப்ப எங்களுக்கு சட்டுனு ஒரு பாதுகாப்பு வேணும் தோழர். அதுக்கு சங்கம் கட்றதுதான் செரியா இருக்கும்னு நீங்க நெனைச்சீங்கன்னா, அதுல ஆட்சேபணை இல்லீங்க.'' என்றான்.

அதற்கு வயதான தோழர் ''சங்கம் என்கிறது தொழிலாளர்களுக்கு கேடயமாவும் இருக்கும். ஆயுதமாவும் இருக்கும். தோழர் வசீகரன் ஒங்களப் பத்தி எங்கக்கிட்ட மொதல்ல சொன்னப்ப, பேட்டை, நகரம் பகுதிகள நாங்க ஆய்வு செஞ்சம். அதுல ஒங்கள மாதிரி மாநிலம் விட்டு மாநிலம் வந்து பொழைக்கிற உழைக்கிற சனங்க பிரச்னைகள் என்னன்னு புரிஞ்சிக்கிட்டம். அதை வலுவான ஒரு தொழிற்சங்க

அமைப்பு மூலம் பல போராட்டங்கள் மூலியமா நிச்சயம் தீர்க்க முடியும். ஆனா, அந்த அமைப்பு மார்க்சிய சித்தாந்த அடிப்படையில கட்டப்படணும். இல்லன்னா தொழிலாளிங்க முதலாளிகளோட சுரண்டல்ல இருந்து விடுபட போராட முடியாது. ஏதோ கூலிக்கும், போனசுக்கும் வேற சில சலுகைகளுக்கும் மட்டும் சங்கம்னு ஆயிடும்.'' என்றார்.

20

சந்துருவும், மாதேசும் அவர் சொல்வதைக் கவனமாய் செவி மடுக்க, அவர் மேலும் தொடர்ந்தார்.

''இப்ப இருக்குற ஒங்க சூழ்நிலைல மார்க்சிய அரசியல் தெரிஞ்சுக் கிட்டப் பின்னாடி சங்கம் கட்றது ஒடனே சாத்தியமில்ல. அதனால, சித்தாந்த தெளிவு இருக்குற எங்க வழி காட்டுதல்ல தொழிற் சங்கத்தைக் கட்டிட்டு அப்புறம், கொஞ்சம் கொஞ்சமாப் புரட்சிகர அரசியலைத் தெரிஞ்சுக்கலாம். இது என்னோட கருத்து. ஒங்க கருத்தச் சொல்லுங்க சந்துரு தோழர்.''

''நாங்க தறிக்காரங்க, எங்க தொழில ஒரே நாள்ல நாங்க கத்துக்கல. படிப்படியாத்தான் கத்துக்கிட்டம். அந்த அனுபவத்த வெச்சிப் பாத்தா நீங்க சொல்றது செரியானதுதான் தோழர்.''

அவன் அப்படிச் சொன்னதற்கு கை தட்டாத குறையாய் வரவேற் பிருந்தது. அதிலும், வீட்டுக்குள் நுழையும் போது வரவேற்ற இளம் பெண் தோழர் வாய் விட்டே சொன்னார்.

''பரவாயில்லியே, சந்துரு தோழர் சிறப்பா பேசறாரே...''

அதற்கு வசீகரன் ''பின்னே, சும்மாவா... கல்லூரியில படிச்சிருக்கு றாரு. அவுங்கப்பா ஒரு கம்யூனிஸ்ட் வேற...'' என்று பெருமையாய் அவனைப் பற்றிச் சொன்னார். அதைக் கேட்டதும் நடுத்தர வயது பெண் தோழர் ''அடடே, இன்னும் கூடுதல் சிறப்பாச்சே...'' என்று சிரித்தார்.

ஆனால், சந்துருதான் சங்கடத்துடன் நெளிந்தான். அப்போது ஐவரில் நிறைய தலைமுடியை வைத்திருந்த ஒரு இளைஞர் ''செரி தோழர்,

இவுங்க ரெண்டு பேர் மட்டும் தொழிற்சங்கம் கட்றதுக்கு சம்மதிச்சாப் போதுமா, மற்ற தொழிலாளர்களோட கருத்தைக் கேக்க வேணாமா?'' என்று கேட்டான்.

அவனுக்கு மாதேசு சட்டென்று பதில் கூறினான் ''அதெல்லாம் நாங்க சொன்னா பேட்டைத் தொழிலாளிங்க கேப்பாங்க.'' என்று.

அதற்கு அந்த இளைஞர் ''அது சனநாயக ரீதியான அணுகுமுறை கிடையாது. தொழிலாளர்கள் கிட்டப் பேசிப் புரியவெச்சுதான் சங்கம் கட்டணும்.'' என ஆணித்தரமாய் பேச, மாதேசு முகம் சுளித்தான்.

''ஏங்க எங்க ஊர்காரங்களப் பத்தி எங்களுக்குத் தெரியாதா?'' என்று கடுப்பாய் குரல் உயர்த்தினான். சட்டென்று இருவருக்குமிடையே ஒரு சின்ன வாக்குவாதம் எழுந்தது. ஆனால், அதை வளர விடாமல் சந்துரு, மாதேசை அடக்கினான்.

21

''அந்த தோழர் சொல்றது கரெக்ட்டுதான். நாம்ப கந்தப்பண்ணன், ஏழுமலை, ஓபுளி இன்னம் இருக்குற தொழிலாளிங்கக் கிட்டப் பேசி முடிவெடுப்போம்.'' என்று முற்றுப்புள்ளி வைத்தான். பிறகு, வயதானவரிடம் திரும்பி ''தோழர், பெரும்பாலும் சங்கம் கட்டப் போறதுக்கு தொழிலாளிங்க மறுப்பு சொல்ல மாட்டாங்கன்னுதான் மாதேசு நம்புற மாதிரி நானும் நம்புறேன். ஏன்னா, நாங்க வக்கீலப் பாக்க கிளப்புறப்போ அடுத்ததா என்ன செய்றதுன்னு ஒரு முடிவோட வாங்கப்பான்னு தொழிலாளிங்க எங்ககிட்ட சொல்லித்தான் அனுப்சாங்க.'' என்றான்.

அதற்கு அவர் ''ஓகே நல்ல விசயம்.'' என்றார். பிறகு ''தோழர், நகரத்தச் சுத்தியிருக்குற சில கிராமங்கள்ல எங்களுக்கு ஏற்கனவே சின்ன அளவுல அரசியல் தொடர்புங்க இருக்குது.'' என்று ஒரு தகவலைச் சொன்னார்.

அதைக் கேட்டு உற்சாகமான சந்துரு ''அப்புடியா தோழர்...'' என்று வியப்பு தெரிவித்தான்.

''ஆமாங்க, ஆனா அவுங்க ஒங்கள மாதிரி விசைத்தறி தொழிலாளர்கள் இல்ல. கூலி விவசாயிகள்.''

''அப்புடின்னா எங்களுக்கு தொணைக்கி பக்கத்துலயே தோழர்கள் இருக்குறாங்கன்னு சொல்லுங்க ''என்று தன் நண்பனுக்கு ஒத்திசைந் தான் மாதேசு.

''நீங்க சொல்றது செரிதாங்க. இதையே புரட்சிக்கான நோக்கத்துல பாத்தோம்னா தொழிலாளிகளுக்கு இந்த நாட்ல மிக நம்பகமான கூட்டாளிங்க கூலி விவசாயிகள்தான். இந்த ரெண்டு வர்க்கமும் ஒண்ணு சேராம நம்பளால புரட்சி நடத்த முடியாது.'' என்று தோழர் தொடர்ந்தார்.

பிறகு, தன் சகாக்களிடம் ''இப்ப அந்த பகுதி கூலி விவசாயிகள் தொடர்ப நம்ம அமைப்புல இருந்து யார் பாத்துக்குறா?'' என்று கேட்டார். அவர்களில் ஒருவர் கண்ணாடியணிந்த சந்துருவும், மாதேசும் அந்த வீட்டில் நுழையும் போது பார்த்த இளம்பெண் தோழரைச் சுட்டிக் காட்டினார்.

''ஓ, அனுராதா தான் பாத்துக்குறாங்களா...'' என்ற வயதான தோழர் ''பேட்டைப் பகுதியில சங்கம் கட்றப் பொறுப்பையும் அவங்களே செய்யட்டுமே...'' என்று கூறினார்.

அப்போது நீளமுடி இளைஞன் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தான். ''இவ்வளவு பெரிய பொறுப்பை அவுங்களால செரியாச் செய்ய முடியுமா?'' என்று கேள்வி எழுப்பினான்.

22

அதற்கு மூத்தவர் பதில் கூறும் முன் நடுத்தர வயது பெண் தோழர் ''ஏஞ் செய்ய முடியாது? அனுராதா அந்த பொறுப்புக்கு தகுதி யானவுங்கதான்.'' என்றார். அதை மூத்த தோழரும் ஏற்றுக் கொள்ள, நீளமுடி இளைஞனின் முகம் சுணங்கிப் போனது.

இதைக் கவனித்த மாதேசு தன்னுடன் ஏற்கனவே வாதம் செய்தவன் மூக்குடைப் பட்டதை நினைத்துச் சந்தோசப்பட்டான்.

அந்த உணர்வில் ''தோழர், இவுங்களையே எங்க பகுதிக்குச் சங்கங்கட்ட அனுப்புங்க...'' என்று சத்தமாய் சொல்ல, சட்டென்று அங்கிருந்த எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ளும் விதமாய் கலகலவென்று சிரித்தார்கள்.

அனுராதா என்று அழைக்கப்பட்ட பெண் தோழரும் உற்சாகமாய் சிரித்தார்.

''செரி தோழர்களே, சந்துருவுக்கும், மாதேசுக்கும் நம்ப இயக்க வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள் இப்புடி எதெல்லாம் இருக்குதோ அதெல்லாம் குடுங்க. இப்போதைக்கு அவுங்க மொதல்ல அதையெல்லாம் படிக்கட்டும்.'' என்று வயதான தோழர் சொல்ல. நீளமுடி இளைஞனுக்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு செவத்த இளைஞன் எழுந்து அந்த வீட்டில் இருந்த ஒரு அறையின் கதவைத் திறந்து உள்ளே போனான்.

அதே வேகத்தில் உள்ளிருந்து ஒரு சின்ன அட்டைப் பெட்டியை எடுத்து வந்தான். அதில், சிவப்பு எழுத்துக்களில் மின்னிய அளவில் சிறியதும், பெரியதுமான துண்டுப் பிரசுரங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை எடுத்தான்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த நடுத்தர வயதுப்பெண் தோழர் ''ரமணா, அப்புடியே மார்க்சியப் புத்தகங்கள் எதாவது இருக்கான்னு பாருங்க...'' என்று கேட்டுக் கொண்டார்.

அவன் அட்டைப் பெட்டியை கவிழ்த்துப் போட்டு ''இருக்குது தோழர்.'' என்று ஒன்றை எடுத்துத் தர, மூத்த தோழர் ''இந்த நேரத்துக்கு பேட்டை தோழர்களுக்குப் பொருந்தி வரக் கூடிய புத்தகம் அதை மொதல்ல குடுங்க'' என்று பரிந்துரை செய்தார்.

கொஞ்ச நேரத்தில் சந்துருவும், மாதேசும் அந்தப் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டு விடை பெற எழுந்து நின்றார்கள். அதைப் பார்த்து வசீகரன் உட்பட மற்றவர்களும் எழுந்தார்கள்.

23

இருவருக்கும் வலது கை முஷ்டியை உயர்த்தி செவ்வணக்கம் கூறினார்கள். சந்துருவும், மாதேசும் முதன் முறையாக அதே போல் பதிலுக்குச் செவ்வணக்கம் சொன்னார்கள்.

மிக விரைவில் தோழர் அனுராதா மூத்த தோழரோடு பேட்டைக்கு வருவதாக கூறினார்.

வசீகரன் சந்துருவையும் , மாதேசையும் கூட்டிக் கொண்டு வெளியே வந்தார். அப்போது அவர் சொன்னார்.

''இங்க தோழர்களப் பாத்ததை ரகசியமா வெச்சுக்குங்க. ஏன்னா, அவுங்க தலைமறைவா இருக்குறாங்க... அதே நேரத்துல நம்ம்பிக் கையானவுங்க கிட்ட மட்டும் சொல்லலாம்.'' என்று அறிவுறுத்தினார். பிறகு, ''இனுமே நீங்க கூட போலீஸ் கிட்ட உசாரா இருக்கணும்.'' என்று எச்சரிக்கை செய்து வழியனுப்பினார்.

அவர்கள் அதை மனதில் வைத்துக் கொண்டு ரயில் நிலையம் நோக்கி நடந்தார்கள்.

அப்போது மாதேசு சொன்னான் ''இப்ப நாம்ப பாத்த தோழர்கள் பேச்சுல தெலுங்கு வாடை அடிக்குதுப்பா...'' என்று.

அத்தியாயம்

4

1

பால் வெளுப்பில் பௌர்ணமி நிலவு வயல் வெளியெங்கும் பரந்து விரிந்து இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்ட நெற் பயிர்கள் அறுவடைக்கு தயாராய் தலை யில் முற்றிய நெல் மணிகளை சுமந்த படி உழவனின் அரிவாளுக்காக காத்திருந்தன. பூமியெங்கும் நெல் வாசம். அதை சுவாசிப்பதில் தனி சுகம். இரவுப் பூச்சி கள் ஏதோ உரையாடிக் கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் சேறடித்த வயல்களில் புதிதாய் நாற்று நட்டிருந்தார்கள். மெல்லி தாய் வீசிய காற்றில் நாற்றுகள் அசைந்துக் கொண்டிருந்தன. பேட்டைக் கிராமத்துக் கும் நகரத்துக்கும் இடைப்பட்ட வயற் காடு அது. மூன்று போகமும் விளைச் சலைத் தர தவறுவதில்லை. பேட்டை யின் தெற்குப்புறமுள்ள ஏரியில் எப் போதும் தண்ணீர் ஓரளவேனும் இருப்ப தால், அதையொட்டிய இந்த நிலத்துக்கு நீர் பஞ்சம் வருவதில்லை.

இந்த வயல் வெளியைச் சுற்றி நிறைய பம்பு செட் கிணறுகள் இருக்கின்றன. அதில், எந்த நேரமும் ஏதாவது ஒரு

கிணற்றில் மின்சார மோட்டார் ஓடிக் கொண்டேயிருக்கும். அதனால், பெரிய தொட்டிகளில் தண்ணீர் எப்போதும் குறையாமல் இருக்கும். பேட்டையில் வேலை செய்யும் விசைத்தறி தொழிலாளர்களுக்கு இந்த தண்ணீர் தான் குளிக்க, துணி துவைக்க பெரும்பாலும் பயன்படுகிறது. நீச்சல் தெரிந்தவர்கள் கிணற்றில் இறங்கியும் குளிக்கலாம். யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்.

ஆனால், தாவர அடர்த்தி நிறைந்திருப்பதால் பேட்டையில், கொசுத் தொல்லை அதிகம். வீட்டுக்குள் படுத்திருப்பவர்களையே ஈ மாதிரியான பெரிய கொசுக்கள் கடித்துப் பாடாய் படுத்தும். அதற்காக, அவர்கள் கொசுவலை வைத்திருப்பார்கள். ஆனால், வீட்டுத் திண்ணைகளிலும், கோயில் வராண்டாவிலும் சுருண்டுக் கிடக்கும் தொழிலாளர்களை கொசுக்கள் சும்மாவா விடும். யாராலும் ஒரு இரவுக் கூட நிம்மதியாய் தூங்க இயலாது. கொசுக்கடியின் விளைவாய் நீண்ட காலமாய் பேட்டையில் இருக்கும் தொழிலாளர்கள் பலருக்கு யானைக்கால் வியாதி உண்டு. அதே போல விரை வீக்கம் என்ற ஓதண்டமும் இருக்கிறது.

இதையெல்லாம் தாங்கிக் கொண்டு தான் அவர்கள் தங்கள் ஊருக்குச் செல்ல முடியாமல் பேட்டையே கதியென்று கிடக்கிறார்கள்.

2

இந்த ஊரிலும் சரி, நகரம் மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள விசைத் தறிகள் ஓடுகின்ற வேறெந்த ஊர்களிலும் சரி, திருமணமாகாத தொழிலாளர்கள் யாருக்கும் முதலாளிகள் வீடுகள் வாடகைக்கு தர மாட்டார்கள். அவர்கள் வயதானவர்களாய் இருந்தாலும் இந்த நிலமைதான்.

தலைவலி, காய்ச்சல் என்று எது வந்தாலும், அனாதைகள் போல கோயில் திண்ணைகளில் கிடக்க வேண்டியது தான்.

சந்துருவும், மாதேசும் ரேணிகுண்டாவுக்குப் போய் விட்டு வந்த அந்த இரவில் தான் வயல் வெளியில் உட்கார்ந்து கந்தப்பனிடமும், ஏழுமலை மற்றும் ஓபுளியிடமும் அங்கு வசீகரனையும் மற்ற தோழர் களையும் சந்தித்துப் பேசியது பற்றி விவரித்துக் கொண்டிருந்தார்கள்.

அதைக் கேட்ட கந்தப்பன் முதலில் பேசினார் ‘‘நீங்க சொன்னதை யெல்லாம் கேக்குறப்ப மனசுல பெரிய நம்பிக்க வருதுப்பா...

எப்புடியாவது சங்கம் கட்டிட்டா நாம எவனுக்கும் இனுமே பயப்பட வேண்டாம்...'' என்று சந்தோசப்பட்டார்.

அதற்கு ஏழுமலை ''ஆனா, நாம்ப சங்கங் கட்றது தெரிஞ்சா உள்ளூர் மொதலாளிங்க என்ன நெனைப்பானுங்கன்னு தெரியல...'' என்று அச்சப்பட்டார்.

''அவனுங்க என்னமோ நெனைக்கட்டும் ஏழுமல. நம்ப பாதுகாப்பு நமக்கு முக்கியம். வேணுன்னா நம்பள ஊர வுட்டு தொறத்திட்டு அவனுங்க தறிய அவுங்களே ஓட்டிக்கிட்டும்''

கந்தப்பன் சொன்னதைக் கேட்ட ஓபுளி ''செரியாத்தாம் பேசுற இவரே...'' என்றான்.

உடனே ஏழுமலை ''ஒங்க எல்லாத்துக்கும் சங்கங் கட்றதுல சம்மதம்னா, எனக்கும் செரிதான்.'' என்று இறங்கி வந்தார்.

அப்போது சந்துரு ''அப்ப நாம்ப எல்லாரும் நமக்கு தெரிஞ்ச தொழி லாளிங்க கிட்ட இதப் பத்தி பேசுவோம்.'' என்று ஊக்கப்படுத்தினான்.

கூடவே மாதேசு ''ஆனா, இப்போதைக்கி மொதலாளிங்க காதுக்குப் போவாம பாத்துக்கணும்.'' என்று எச்சரிக்கை செய்தான்.

''ஆமாமா... அது ரொம்ப முக்கியம். சங்கங் கட்னப்புறம் எது வந்தாலும் பாத்துக்கலாம். அது வரிக்கிம் எதையும் ரகசியமாத்தான் செய்யணும்.''

சந்துரு சொன்னதை அனைவரும் ஆமோதித்தார்கள்.

3

அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்பது அவனுக்கு தெரியும். சந்துரு, கந்தப்பனுக்கு எப்படி ஒரு சோகக்கதை இருக்கிறதோ அப்படியே ஓபுளிக்கும், ஏழுமலைக்கும் இருக்கிறது.

அதில், ஏழுமலை சொந்தமாய் கள்ளிப்பாளையத்தில் இரண்டு தறிகள் நடத்தியவர். அவ்வப்போது தொழில் நெருக்கடிக்கு கந்து வட்டிக்கு கடன் வாங்குவார். அதை சரியாய் வட்டியும், முதலுமாய் கட்டி விடு வார். ஆனால், யோக்கியர்களைக் கண்டால்தான் வட்டிக்காரனுக்கு தொக்காச்சே ஒரு கொடுங்கோலன் தன் பணத்துக்கு ஏகப்பட்ட வட்டி

கேட்க வேறு வழியில்லாமல் அவன் அடியாள் மிரட்டலுக்கு பயந்து தன் தறிகள் இரண்டையும், வீட்டையும் எழுதிக் கொடுத்து விட்டார். இந்த சோகத்தில் அவர் மனைவி வயது வந்த மகளுடன் தூக்குப் போட்டு இறந்து விட்டார்.

மனம் உடைந்த ஏழுமலை சொந்த ஊரில் இருக்கப் பிடிக்காமல் பேட்டைக்கு வந்தவர் தான். நான்கைந்து வருடங்களாய் எங்கும் நகரவில்லை.

ஓபுளியின் கதையும் சோகம் தான்.

தன் அண்ணன் குடும்ப நெருக்கடிக்கு தன்னாலான பண உதவி செய்யப் போய், தான் வேலை செய்த முதலாளியிடம் கடனாளியானான். அதைக் கட்ட வழியில்லாமல் கடைசியில் தன் ஒரு கிட்னியை இதற் கென இருக்கும் புரோக்கர் மூலமாய் விற்று விட்டான். அப்படியும் பாதிப் பணம் தான் முதலாளிக்கு தர முடிந்தது. மீதியை கொடுக்க இயலாமல் ஊரை விட்டு ஓடி வந்திருக்கிறான்.

இப்படி தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் நிலவும் பணப்பாக்கி மற்றும் கந்து வட்டிக் கொடுமைகளுக்கு அளவேயில்லை. எத்தனையோ புகார்கள் கொடுத்தும் அரசு இயந்திரம் அசைந்துக் கொடுக்கவில்லை.

சந்துரு இதை யோசித்துக் கொண்டு இருக்கும் போது சற்று தூரத்தில் இருக்கும் வயல் வரப்பில் நிலா வெளிச்சத்தில் யாரோ இருவர் இவர்கள் ஐந்துப் பேரையும் நோக்கி வருவது தெரிந்தது. அவன் கூர்ந்து கவனித்தான்.

அப்போது வந்தவர்களில் ஒருவர் உரக்க குரல் கொடுத்தார்.

''ஓபுளி...'' என்று. அந்த குரலை அடையாளம் கண்டுக் கொண்ட அவன் ''இவரே... வாங்க...'' என பதில் குரல் கொடுத்தான்.

4

அது வேறு யாருமல்ல, தமிழகத்தின் தென் மாவட்டங்களை சேர்ந்த மச்சக்காளையும், பச்சையப்பனும் தான்.

அவர்களும் தங்கள் ஊர்களில் சொந்தமாய் தறிகள் போட்டு நடத்தியவர்கள் தான். தொழில் நெருக்கடி காரணமாய் ரகங்கள் கிடைக்காமல் தறிகளை விற்று விட்டு குடும்பத்தைக் காப்பாற்ற

இவ்வளவு தூரம் வந்து வேலை செய்கிறார்கள். அவர்களின் மனைவி, மக்கள் சொந்த ஊரில் தான் இருக்கிறார்கள்.

ஓபுளிக்கு அவர்கள் நெருக்கம். அவன் இந்த இரவு நேரத்தில் வயல் வெளியில் கூடப் போவதை அவர்கள் இருவரிடமும் கூறியிருப்பான் போல. அதான் வந்திருக்கிறார்கள்.

பயிரடப்படாத ஒரு குறைக் காட்டில் புள்ளாச்சி முளைத்திருந்தது. அதில், அமர்ந்திருப்பவர்களின் அருகில் தாங்களும் வந்து உட்கார்ந் தார்கள் மச்சக்காளையும், பச்சையப்பனும். சற்றேத்தாழ சமவயது உடையவர்கள். நடுத்தரமாய் இருந்தார்கள்.

பச்சையப்பன் கேட்டார் ''என்னா சந்துரு, வக்கீலப் பாக்க ரேணி குண்டா போனீங்களாமே?'' என்று.

அவன் ''ஆமாண்ணா... சாயங்காலந்தான் வந்தோம்.'' என்று கூறி விட்டு அவர்களிடமும் அங்கு நடந்த விபரங்களை சொன்னான்.

அதற்கு அவர் ''சங்கங் கட்றது ரொம்ப நல்ல காரியம் தம்பி. அதுக்கு நாங்களும் ஒத்துழைப்பு தர்றோம்.'' என்று உறுதிப்படக் கூறினார்.

அதே நேரத்தில் மச்சக்காளை ''வெறும் கூலி, போனஸ் சங்கமா அது இருக்கக் கூடாது சந்துரு. அதெல்லாம் நாங்க எங்க ஊருலயே பாத்துட்டம். நமக்கு வறுமை தீர வழி சொல்ற சங்கமாயிருக்கணும்.'' என்று விபரமாய் பேசினார்.

அதைக் கேட்டு சந்தோசமான அவன் நாம் ஒரு புரட்சிகர அமைப்பில் தான் இணையப் போகிறோம். அது ஒரு தலைமறைவு அமைப்பு என சொன்னான்.

அதற்கு கந்தப்பன் ''தலைமறவு அமைப்புன்னா அரசாங்கத்தால ஏதாவது பிரச்னை வருமோ?'' என கேட்க, மச்சக்காளை ''என்னா கந்தப்பண்ணா இப்ப மட்டும் பிரச்னை வராமயா இருந்துச்சி...'' என அவர் சிறைக்குப் போனதை பூடகமாய் சொல்ல அனைவரும் சிரித்தார்கள்.

5

உடனே ஓபுளி ''என்ன இவனே, நாம்ப இப்பவே சங்கம் கட்ன மாதிரிதானே...'' என உற்சாகமானான்.

எல்லாம் நிறைவாய் தோன்றவே, அன்று இரவு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் கலைந்தார்கள்.

மறுநாள்...

சரிதா தேடிக் கொண்டு வந்திருக்கிறாள் என்று மாதேசு வந்து சொன்ன போது எதற்கு வந்திருக்கிறாள்? என்று புரியாமல் குழப்பமானான் சந்துரு. மாதேசு தன் ஆணிக்காலுக்கு மருந்து வாங்க குப்பத்துக்குப் போயிருந்தான். அப்போதுதான் சரிதா அவனைப் பார்த்திருக்கிறாள். சந்துரு தனக்கும், அவளுக்குமான உறவு ஆற்றங்கரையோடு முடிந்து போகும் ஒன்றுதானே! பிறகெதற்கு இவ்வளவு தூரம் தேடி வருகிறாள்? அவளுக்குத் தான் எதுவும் காசு, பணம் தர வேண்டிய தில்லையே... ஒருவேளைக் கடன் கிடன் கேட்டு வந்திருப்பாளோ? என்றெல்லாம் யோசித்தான். அவன் முகபாவனையைப் பார்த்து விட்டு மாதேசு நமுட்டுச் சிரிப்பு சிரித்தான். அவன் மட்டுமா? ஊரில் மின் சாரம் போனதால் தறியோட்ட முடியாமல் கோயில் வராண்டாவில் சந்துருவுடன் உட்கார்ந்திருந்த தொழிலாளர்கள் அனைவரும்தான் அதே மாதிரி சிரித்தார்கள்.

சரிதாவுக்கும், அவனுக்குமான உறவு எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அவனது தர்மசங்கடத்தை உணர்ந்த கந்தப்பண்ணன் பெரிய மனுசனுக்கு அழகாய் பொறுப்பாய் பேசினார்.

''தம்பி என்னன்னு ஒரு வார்த்தைக் கேட்டுட்டு வந்துடுப்பா...'' என்று.

அதற்கு சந்துரு தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழாமலே பதில் பேசினான். ''எதாயிருந்தா என்ன? இப்ப என்னால எங்கியும் நகர முடியாதுண்ணா. மாதேசு நீ போயி நா அப்புறம் பாக்கலான்னு சொன்னதா சொல்லி அனுப்சிட்டு வந்துடு.'' என்று சற்று எரிச்சலுடன் கூறினான்.

அதைக் காதில் வாங்காத மாதேசு ''அத நீயே போயி சொல்லிட்டு வா... ஒனக்கும், அந்தப் புள்ளைக்கிம் நடுவுல நா என்னா தூதாளா?'' என்று நறுக்கென்று கேட்டான்.

அவனை எரித்து விடுவது போல் சந்துரு பார்க்க, ஓபுளி மாதேசுக்கு சப்போர்ட்டுக்கு வந்தான்.

6

''ஏம்பா. இவனே... ஏ அடம் புடிக்கிறே.. ஒரு எட்டுப் போயிட்டுத் தான் வாயேன்.''

எல்லோரும் வற்புறுத்தவே சந்துரு எழுந்தான். ஆனால், அதற்குப் பின்னே ஒரு குறும்புத்தனம் ஒளிந்திருப்பதை அவன் உணரத் தவறவில்லை.

தொழிலாளர்கள்தான் என்றாலும் சாதாரணமாகவே திருமணமாகாத ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் ஏற்படும் உறவை தேவையே இல்லாமல் மணிக்கணக்கில் பேசி சிரிக்கும் இந்த சமூகத்தின் அங்கம் தானே அவர்கள். அதிலும், ஒழுக்க விதிகளை மீறிய இந்த மாதிரி உறவுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாய் கொச்சையான அழுத்தம் தரவே செய்வார்கள். இதை உணர்ந்ததும் இன்றோடு சரிதாவின் தொடர்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டான். அந்த சமயத்தில், தனக்கு சரிதாவை அறிமுகம் செய்து வைத்து இப்படி தர்மசங்கடத்தில் மாட்டி விட்ட சக தொழிலாளி ராசுவை அவன் கண்கள் அனிச்சையாய் தேடின. அதை அங்கிருந்த ராசுவும் உணர்ந்துக் கொண்டான்.

அவன் ''சந்துரு நா வேணாக் கூட வரட்டுமா?'' என்று குறும்பாய் கேட்டான். அதை உணர்ந்த மற்ற தொழிலாளர்கள் 'ஓ...' வென்று சிரிக்க, எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு நடந்தான்.

பின்னால் மாதேசு கத்தினான் ''அந்தப் புள்ள ஏரிக்கரை மேல நிக்குது. போய் பாரு...'' என்று.

''வசதியான எடந்தான்.'' என்று யாரோ அவனுக்கு ஒத்திசந்தார்கள்.

மீண்டும் சிரிப்பொலி கேட்டது.

ஆனால், கந்தப்பன், ஏழுமலை போன்றோர் சிரித்தவர்களை அடக்காமல் இல்லை.

வயல் வரப்பு வழியே ஏரிக்கரையை நோக்கி நடந்தான் சந்துரு. அந்த நேரத்தில் தான் சரிதாவை சந்தித்த அந்த முதல் நாள் அவனுக்கு நினைவுக்கு வராமல் இல்லை.

கந்தப்பன் விவகாரம் வராததற்கு முந்தைய சில மாதங்களில் மிகப் பெரிய விரக்தியை அவன் கொண்டிருந்தான். அதில், முக்கியமாய் குடும்பத்தை விட்டு வந்த கொடுமை அவனை அலைகழித்தது. அதை மறக்க முயன்று தோற்றுப் போய் மற்ற தொழிலாளர்களுடன் சேர்ந்து கையில், காசிருந்தால் போதும். குடிக்க ஆரம்பித்தான்.

7

அதற்கு தோதாய், ஆந்திர மாநிலத்தின் பாக்கெட் சாராயம் பேட்டை, நகரம் என எல்லா இடங்களிலும் தாராளமாய் கிடைத்தது. அது மட்டுமா? கஞ்சா பொட்டலங்களும் எளிதாய் நடமாடின. எல்லாமே சல்லிசாய் கிடைக்க, தொழிலாளர்கள் பலரோடு சேர்ந்து அவனும் போதையில் மிதந்தான்.

வெள்ளிக்கிழமை நகரத்தின் சந்தை நாள். அது, சந்துருவின் சொந்த ஊரான மணியம்பாளையத்திற்கும், நகரத்திற்கும் ஆச்சரியமான ஒற்றுமையுடன் கூடிய வாரச் சந்தை நாளாய் இருந்தது.

அன்று மதியம் வாரம் முழுவதும் நெய்த கூலி கைக்கு வந்ததும், நேராகப் போய் அங்கம்மாள் சோற்றுக் கடைக்கு அந்த வாரப் பாக்கியைத் தீர்த்து விட வேண்டியது. வயல்வெளிக்கு வந்து பம்புசெட்டில் துணி துவைத்துக் குளித்து விட்டு அவசர, அவசரமாய் நகரத்துக்கு வந்து பாக்கெட் சாராயம் இரண்டு உறை வாங்கி கோலிசோடாவைக் கலந்துக் குடித்து விட வேண்டியது. அந்த போதை போதாமல் போனால் கூட வரும் ராசு கஞ்சாப் பொட்டலம் வாங்கி வருவான். அதையும் சிகரெட்டில் போட்டு இழுத்து விட வேண்டியது.

அப்புறம் மாலை வரை உலகத்தை மறந்து நகரத்தின் வீதிகளில் திரிந்து விட்டு சாயங்காலம் ஏதாவது ஒரு தியேட்டருக்குப் படம் பார்க்கப் போய் விடுவது. இந்த வழக்கமான நடைமுறையில் இருந்து ஒருநாள் விலகி சந்துருவை வேறொரு இடத்துக்கு கூட்டிப் போனான் ராசு.

நகரத்தின் பேருந்து நிலையத்தை விட்டு சற்று விலகி ஆங்காங்கே குடியிருப்புகள் முளைத்திருந்த பகுதியில் நுழைந்து ஒற்றையடிப் பாதையில் நடந்தான். அவன் கூடவே நடந்த சந்துரு ''எங்கப்பா போறம்?'' என்று கேட்டதற்கு ''பேசாம வா...'' என்று மர்மமாய் சிரித்தான்.

நடக்க, நடக்க சடுதியில் அந்த ஆற்றங்கரை கண்ணில் பட்டது. ஆற்றின் விஸ்தீரணம் அரைபர்லாங்குக்கு நீண்டிருந்தது. ஆனால், ஆற்றில் பொட்டுத் தண்ணீர் இல்லை. வெறும் மணற்பரப்பாய் காட்சியளித்தது. எப்போதோ ஆற்றில் வெள்ளம் வந்ததற்கு அடையாளமாய் மணலில் நீர் தடங்கள் மீதமிருந்தன. தூரத்தில் ஆற்றின் மீது கட்டப்பட்ட பாலத்தில் வாகனப் போக்குவரத்து நிகழ்ந்துக் கொண்டிருந்தது. எல்லாம், எதிரெதிர் திசையில் திருப்பதிக்கும், சென்னைக்கும் செல்லும் வாகனங்கள்.

பாலத்துக்கு அந்தப்பக்கம் வெகுதூரத்தில் மாட்டுவண்டியை ஆற்றுக்குள் நிறுத்தி மணல் அள்ளிக் கொண்டிருந்தார்கள்.

8

ஆற்றங்கரை மேட்டிலிருந்துப் பார்க்கும் போது, இருகரை முழுக்க அடர்த்தியாய் நாணல்கள் புதராய் மண்டியிருந்தது.

சந்துரு அதுவரை அந்தப் பகுதிக்கு வந்ததில்லை. எனவே, ஆற்றை வேடிக்கைப் பார்த்தான். அவன் ஊரான மணியம்பாளையம் காவிரிக்கரையில் இருந்தது. நாளை காவிரியும் இப்படித்தான் மணற்பரப்பாய் போய் விடுமோ? என்று அவன் மனதுக்குள் அச்சப்பட்டான்.

இதையறியாத ராசு, அவன் கையைப் பிடித்து மேட்டிலிருந்து கரைக்கு இழுத்து வந்தான். கரையோரமாய் கொஞ்ச தூரம் நடந்தார்கள். இவர்கள் வருவதைப் பார்த்து விட்டு நாணல் புதர் மறைவிலிருந்து அந்த பெண்கள் வெளிப்பட்டார்கள். தாவணியில், சேலையில் ஏன், பாவாடைச் சட்டையில் கூட பலதரப்பட்ட வயதில் அவர்கள் இருந்தார்கள். அவர்களின் முகப்பூச்சும், சிரிப்பும், உடல்மொழியும் சட்டென உணர்த்தியது அவர்கள் பாலியல் தொழிலாளர்கள் என்று.

சந்துரு அதிர்ந்து போனான். அதுவரை அவன் இப்படியெல்லாம் வந்ததில்லை. எனவே, கூட்டி வந்த ராசுவை முறைத்தான்.

அதைக் கண்டுக் கொள்ளாத ராசு பாலியல் பெண்களிடம் போய் சகஜமாகப் பேசினான். அவர்களில் ஓரிருவர் அவனிடம் பேசிக் கொண்டே சந்துருவைப் பார்த்து ஒருமாதியாய் சிரித்தார்கள். அவன் சங்கடத்தில் நெளிந்தான்.

அதில் ஒரு பெண் சத்தமாய் வாய்விட்டே கேட்டாள் ''என்ன மாமா எங்கூட வர்றியா?'' என்று.

கடுப்பான சந்துரு ''யோவ் ராசு... வாப்பா போலாம்.'' என்று கூப்பிட, ராசு அந்த பெண்ணை ''தா...சும்மாரு.'' என்று அதட்டினான்.

பிறகு, ராசு அவனை வலுக்கட்டாயமாய் ஆற்றின் மணற்பரப்பில் நடத்தி அக்கரைக்கு அழைத்துப் போனான். அங்கும் இதே மாதிரி பெண்கள் இருந்தார்கள். அதைப் பார்த்து சந்துரு அதிசயப்பட்டான். வெளிப்படையாய் இப்படி விபசாரம் கொடிகட்டிப் பறக்கிறதே என்று. ஆனால், இங்கு மட்டுமா நடக்கிறது? பல ஊர்களிலும்தான் நடக்கிறது. அவ்வளவு ஏன், புண்ணிய ஸ்தலங்கள் என்று சொல்லப் படும் திருப்பதி, திருத்தணி, பழனி என்று அங்கும் கூடத்தான் தங்கும் விடுதிகளில் நடக்கிறது. மும்பையில் இதுவே சட்டப்பூர்வம். .ஆனால், இங்கே சட்டவிரோதம். ஏனிந்த முரண்பாடென்பதை ஆட்சியாளர்கள் தான் சொல்ல வேண்டும்.

9

எதுவாகிலும், இந்தப் பெண்கள் ஒன்றும் உடல் தினவெடுத்து பாலியல் தொழிலுக்கு வந்தவர்கள் அல்ல. சமூகத்தின் வறுமை, குடும்பச் சூழ்நிலை, தவறான ஆண்களின் ஏமாற்றுத்தனம் இப்படி ஏதோவொன்று இவர்களை இந்த நிலைக்கு தள்ளியிருக்க வேண்டும்.

இந்த கொடுமை எந்த ஊர், என்ன மொழியென்றப் பாகுபாடு இல்லாமல் சாதிமத கலப்பற்று அபலைப் பெண்களுக்கு நிகழ்கிறது. அது மண்டைக்குள் உறைக்க அவன் தன் அசூசையைக் கை விட்டான்.

ராசு, இங்கும் போய் அந்த பெண்களிடம் அந்நியோன்யமாய் பேசினான். என்றாலும், சந்துருவுக்கு அந்த தைரியம் வரவில்லை. அவன் பேசி விட்டு வரும் வரையில் அமைதி காத்தான். அவனது மனநிலையை உணர்ந்த ராசு அவனை வற்புறுத்தாமல் மறுபடியும் இக்கரைக்கே கூட்டி வந்தான்.

அப்போதுதான், பார்த்த மாத்திரத்தில் சட்டென்று மனதில் ஒட்டிக் கொள்ளும் வசீகரத்தோடு சரிதா எதிர்பட்டாள். கறுப்பாகத்தான் இருந்தாள். ஆனால், களையாய் இருந்தாள். மெலிந்த தேகம். நாணல் தட்டுக்கும் அவளுக்கும் எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டும், தலையில் கொஞ்சமாய் மல்லிகையும் சூடியிருந்தாள். அவள் அணிந்திருந்த சுமாரான சேலைதான் பொருந்தி வரவில்லை.

அப்போது சந்துருவை கவனித்த ராசு சட்டென்று அவன் மனதைப் புரிந்து கொண்டான். ஆடு பலிபீடத்திற்கு தயாராகி விட்டதாய் நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான். அவர்களை கடந்துப் போன சரிதாவைக் கூப்பிட்டு அறிமுகம் செய்து வைத்தான். இதற்குள் இருவருக்கும் வேறு சில பாலியல் பெண்களிடம் இருந்து அழைப்புகள் வர ஆரம்பித்தன.

இதைக் கவனித்த சரிதா, தனது வாடிக்கையாளரான சந்துருவை நாணல் புதரின் உள்ளே இழுத்தாள். அவளது இளம் கை அவனது இடது கையை உடும்பாகப் பற்றியிருந்தது. அங்கே, கிழிந்துப் போன பாயொன்று விரித்து வைக்கப் பட்டிருந்தது. அந்த நிமிடம் வரை பெண் சுகத்தை அறியாத அவனுக்கு அந்த போதையிலும் கூச்சம் வந்தது. அதைப் பார்த்த சரிதா மென்மையாய் சிரித்தாள். அதில், மேலும் வசீகரத்தை உணர்ந்தான். அவனுக்குள் ஒரு ரசாயன் மாற்றம் ஏற்படத் துவங்கியது. ஆனால், எங்கிருந்து தொடங்குவது? என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. எனவே, பேந்தப் பேந்த முழித்தான். சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை என்பார்கள்.

10

அப்படிச் சொன்னவர்கள் கூட முதல் உறவை தட்டுத் தடுமாறித்தான் அனுபவித்திருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டான். அதற்குள் அவன் தாமதம் செய்வதைப் பார்த்து விட்டு சரிதா ''என்னா இப்புடி முழிக்கிறீங்க?'' என்றாள். அவனுக்கு சுலபமாய் வேர்த்தது. அவளை நேருக்குநேர் பார்ப்பதை தவிர்த்தான்.

சரிதா சட்டென்று சிரித்தபடிக் கேட்டாள் ''புதுசா?'' என்று.

அப்படிக் கேட்கும் போது அழகாய் கண்ணடித்தாள்.

இதற்கு என்ன சொல்வதென்று யோசித்த சந்துரு, இதில், யோசிக்க என்ன இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தவனாய் ஆமாம் என்பது போல தலையசைத்து உண்மையை ஒப்புக் கொண்டான்.

அவள் சிரிப்பு மாறாமல் ''சும்மா வாங்க. பயப்படாதீங்க...'' என்று அவனை உறவுக்கு தயார் செய்தாள். அவனும் அதற்கு உடன்பட, திடீரென்று அவள் அவன் காலைத் தொட்டுக் கும்பிட்டு, தன் சேலை முந்தானையை அவன் முன்னே விரித்துப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

சந்துரு புரியாமல் ''என்னாயிது?'' என்று கேட்டான்.

''இதுல பணம் போடுங்க.'' என்றாள்.

அவன் ''அதயெதுக்கு பிச்சை மாதிரிக் கேட்குறே? ஒங்கைல குடுத்தா வாங்க மாட்டியா?'' என்று வினவினான்.

''அதில்லீங்க... இன்னிக்கி நீங்கதான் மொத போணி. அதனாலதான் முந்தானைல போடச் சொல்லி கேக்குறேன்.''

''ஓகோ செண்டிமெண்டா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இது எங்களுக்குள்ற இருக்குற மொறை.''

''அதத்தான் நான் கேட்டேன்.'' என்றவன், அவள் கேட்ட சொற்ப தொகையை அவள் விரித்துப் பிடித்திருந்த முந்தானையில் போட்டான்.

பிறகு, திடீரென்று கேட்டான்.

''ஆமா, இதுக்கப்புறமா ஒனக்கு போணி செரியா ஆகலன்னா, என்ன ராசியில்லாதவன்னு திட்டுவதானே... எதுக்கு வம்பு? பேசாம நானு அப்புறமா வர்றனே...'' என்று.

11

''ஐயே... அப்புடியெல்லாம் ஒண்ணும் நா திட்ட மாட்டேன்.'' என்றவள், அதற்குப் பின்பும் அவன் தயங்குவதைப் பார்த்து சட்டென தன் பக்கம் நெருக்கமாய் இழுத்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவன் அதில் கிறங்க அப்போது வெளியிலிருந்து ஒரு கட்டையான ஆண் குரல் கேட்டது. ''சரிதா... அடுத்த கிராக்கி வந்துட்டாங்க.'' என்று.

புரோக்கர் போலும் என்று சந்துரு நினைத்துக் கொண்டான்.

ஆனால், அவள் எந்த அவசரமும் அவனிடம் காட்டாமல் நிதான மாகவே செயல்பட அனுமதித்தாள்.

அவளிடம் இன்பம் துய்த்து விட்டு கொஞ்சம் கூடுதலாய் தன் பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான். அவளும் தயங்காமல் வாங்கிக் கொண்டு ''அடிக்கடி வாங்க...'' என்று விடை கொடுத்தாள்.

அது பிரியா விடை ஆயிற்று.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் சந்துரு அவளைத் தேடி ஆற்றங்கரைக்கு வந்து விடுவான். இந்தப் பழக்கம் நீடித்து இரவு பத்து மணிக்கு மேல் அவளைக் கூட்டிக் கொண்டு, அவன் ஏரிக் கரையோரமாய் இருக்கும் வயற்காட்டு பம்புசெட் கொட்டகைக்கு வந்து விடுவான். அங்கிருக்கும் காவலாளிக்கு ஒரு தவளையை - சாராய பாக்கெட்டை உள்ளங்கையில் வைத்தால் அது ததும்பி தவளை மாதிரி லேசாய் குதிக்கும். அதனால், அதற்கு தவளை யென்று தறிக்காரர்கள் செல்லப் பெயர் வைத்திருந்தார்கள்- கொடுத்து விட்டு இரண்டாவது ஆட்டம் சினிமாவுக்குப் போகப் பணமும் அளித்தால், அவன் விடியும் வரை பம்புசெட் கொட்டகை பக்கம் வர மாட்டான்.

முழு இரவும் அவனும், சரிதாவும் கொட்டகைக்குள் பாம்புகள் மாதிரி பின்னிக் கிடப்பார்கள். காலையில் எழுந்து டீக்கடைப் பக்கம் போய் ஆளுக்கொரு பன்னைப் பிய்த்து தின்று விட்டு ஒரு டீக்கு ரெண்டு டீயாய் குடித்து விட்டுத்தான் இருவரும் பிரிவார்கள். இந்த சில மாதங்களில் அவள் யார்? எங்கிருந்து வருகிறாள்? இந்த பாலியல் தொழிலுக்கு ஏன் வந்தாள்? என்றெல்லாம் அவனும் கேட்டதில்லை. அவளும் சொன்னதில்லை. காமம் சம்பந்தப்பட்ட அந்த உறவில் அவள் குருவாகவும், அவன் மாணவனாகவும் இருந்திருக்கிறார்களே தவிர, அதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை.

12

இப்படியெல்லாம் சரிதா, சந்துருவைத் தேடி இதற்கு முன் வந்தவளல்ல... பிறகு, ஏன் இன்று வந்திருக்கிறாள்? ஏராளமான கேள்விகளுடன் அவளை எதிர்கொள்ள தயாரானான் அவன்.

பரந்த ஏரியின் இக்கரையில் அவள் நிற்பது தெளிவாய் தெரிந்தது

அந்த சமயத்தில், அக்கரையையொட்டிய தண்டவாளத்தில் ஐதராபாத் செல்லும் ரயில் தடதடத்துச் சென்றது. ரயிலின் பின்னணிக் காட்சியில் அவள் நிற்பதை தன்னையறியாமல் ரசித்தான் அவன்.

பேட்டைக் கிராமத்துக்கும், ஏரிக்கரைக்கும் நடுவே ஒரு சின்னப் பள்ளம். அதில், நிதானமாய் இறங்கி ஏறினான் சந்துரு.

ஏரிக்கரை அகலமானது.

குப்பத்துக்கும், பேட்டைக்கும் இடையே வாகனப் போக்குவரத்துக்கும் அது தோதாய் இருந்தது. எனவே, அதில், நூல்கட்டுகளை ஏற்றிக் கொண்டும், விசைத்தறியில் நெய்து முடித்த தடித்தடியான காட்டன் பீஸ்களை சுமந்துக் கொண்டும் நான்கு சக்கர மற்றும் இரு சக்கர வாகனங்கள் அவ்வப்போது சென்று வரும். இப்போது அப்படியொரு வாகனம் அவனைக் கடக்கும் போது புழுதி வாரியிறைத்தது.

அவன் தன்னை நெருங்கி வருவதை ஆவல் நிறைந்த முகத்துடன் பார்த்தாள் சரிதா.

அவனோ, அதைக் கண்டும் காணாமல் அவள் முன்னே வந்து நின்று தயவு தட்சண்யமில்லாமல் கோபமாய், ''இங்கயெதுக்கு வந்தே?'' என்று கேட்டான்.

அந்த கேள்வியில் அவள் புண்பட்டது துல்லியமாய் முகத்தில் தெரிந்தது. சட்டென்று பதில் கூறினாள்.

''இல்ல... கொஞ்சநாளா ஆத்துப் பக்கமே ஆளை காங்கலையே, என்ன வுட்டுட்டு பேட்டையிலயே எவளையாவது புடிச்சிட்டியோன்னு கேட்க வந்தேன்.'' என்று.

அந்த இடக்குப் பேச்சில் ஆத்திரமான அவன் ''அப்புடியிருந்தாத்தான் ஒனக்கென்ன? இங்க எதுக்கு வந்தே? மொதல்ல அதச் சொல்லு...'' அவன் பதிலடி கொடுத்தான்.

''ஆமாமா எனக்கென்னா வந்துச்சி. நா என்ன ஒம் பொண்டாட்டியா? காசுக்கு வர்ற அவுசாரிதானே...''

13

''தெரியுதுல்ல, அப்புறமெதுக்கு இவ்வளவு தூரத்துக்கு தேடிக்கிட்டு வந்தே?''

''சொல்றம்பா... சொல்றேன். கொஞ்சம் பொறு...'' என்று ஒரு நிமிடம் நிறுத்தினாள். சட்டென்று வார்த்தை வராமல் தலை குனிந்தாள். அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் அவன்.

''ஒங்கள போலீசு புடிச்சுக்கிட்டுப் போய் அடிச்சுட்டதாக் கேள்விப் பட்டேனே... நெசமா?'' என்று அனுதாபத்தோடு மெல்லிய குரலில் கேட்டாள் சரிதா.

''ஆமா, அதுக்கென்னா இப்போ?'' அவன் கோபம் மாறாமல் பேசினான்.

''என்ன நீங்க எது நெனச்சாலும் செரி, அந்த நிமிசத்துல இருந்து எனக்கு கையும் ஓடல, காலும் ஓடல. அப்பத்திலயிருந்து ஒங்களப் பாக்கணு முன்னுதான் தவிச்சிக்கிட்டிருந்தேன். வெளிய எங்கயும் பாக்க முடியல. அதான் இங்கியே நாந் தேடிக்கிட்டு வந்தேன்.'' அவள் இதைச் சொல்லும்போது லேசாய் தழுதழுத்தாள்.

அவனுக்குச் சங்கடமாய் போய் விட்டது. இவளை போய் தப்பாக நினைத்து விட்டோமே என்ற குற்ற உணர்வு கூட எழுந்தது. என்றாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் எங்கோ பார்த்துக் கொண்டு அமைதியாய் நின்றிருந்தான்.

''ரொம்ப அடிச்சுட்டாங்களா... ஜெயில்ல கூடப் போட்டுடாங்கன்னு பேசிக்கிட்டாங்க. எப்புடி வெளியில வந்தீங்க?'' என்று அவள் தொடர்ந்தாள்.

அவனும் சற்றே இறங்கி வந்து போலீஸ் அடக்குமுறையையும், வசீகரன் எதிர்பாராமல் வந்து பிணையில் எடுத்ததையும் சுருக்கமாய் சொன்னான்

அவளது அனுதாபம் இன்னும் கூடியது. சட்டென்று அழ தொடங்கி விட்டாள். அவன் பதட்டமடைந்து ''இப்ப எதுக்கு அழுவுறே?'' என்று கேட்டான்.

அவள் மூக்கைச் சிந்தியபடியே சொன்னாள்.

''நல்லவுங்களுக்கு ஒரு கஷ்டம்னா யாருக்கும் மனசு பொறுக்காது.''

''இந்த அளவுக்கு ஒம் மனசுல நல்ல எண்ணம் இருக்குறது பெரிய விசயம். நாந்தான் ஒன்னத் தப்பா நெனச்சுட்டேன்.''

''நா மட்டுமில்லீங்க, ஆத்தோரமா நிக்குற எங் கூட்டாளிப் பொண்ணுங்க கூட எப்புடி வருத்தப்பட்டு பேசுனாங்க தெரியுமா? அந்த நல்ல மனுசரயா போலீஸ்காரங்க அடிச்சாங்கன்னு கவலப் பட்டாங்க தெரியுமா?''

14

அவன் ஆச்சரியப்பட்டான்.

''அதெப்புடி சரிதா என்ன நல்லவன்னு அவுங்க முடிவுக்கு வந்தாங்க?'' என்று வினவினான்.

''அந்த எடத்துல எத்தன நாய்ங்க என்னென்ன ராவுடி பண்ணுதுங்க தெரியுமா? ஆனா, நீங்க வர்றதும் தெரியாது போறதும் தெரியாது. அதுவுமில்லாம என் ஒருத்தி கிட்ட மட்டுந்தானே வந்துப் போவீங்க...''

''இத வெச்சா என்ன நல்லவன்னு நெனச்சாங்க?''

''இல்லீங்க, பேட்டையில நீங்க வெளியூரு மொதலாளிகள எதுத்து சண்டப் போட்டதும் எங்க எல்லாத்துக்கும் தெரியும்.''

அவன் அவளைப் பார்த்து மென்மையாய் சிரித்தான்.

''கேக்க சந்தோசமா இருக்குது.'' என்றான்.

''நாங்க காசுக்காவ ஒடம்ப விக்கிறவுங்க தாங்க. ஆனா மனச யாரு கிட்டயும் விக்க மாட்டோம்.'' என்று அவள் சொன்ன போது நெகிழ்ச்சியாய் இருந்தது. மனிதர்களைப் புரிந்துக் கொள்ளும் பக்குவம் இன்னும் தனக்கு வரவில்லை என்று அவன் நினைத்துக் கொண்டான்.

''செரி... ஆத்தங்கரைக்கி வர்ற எங்க ஆளுங்க யார் கிட்டயாவது என்னப் பாக்கணும்னு சொல்லியுட வேண்டியதுதானே, நீ எதுக்கு மெனக்கெட்டு இவ்வளவு தூரம் வந்தே?''

''இந்த பிரச்னை நடந்தப்புறம் போலீசுக்காரங்க அங்க வந்து எங்க எல்லாத்தையும் தொரத்த ஆரம்பிச்சுட்டாங்க. இங்க பொண்ணுங்க வரக் கூடாதுன்னு ரொம்ப கெடுபிடி பண்றாங்க.''

அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியாய் இருந்தது. தொழிலாளர்கள் பிரச்னைக்கும், இந்த பாலியல் தொழிலாளர்களுக்கும் என்ன சம்பந்தம்? தென்னை மரத்தில் தேள்கொட்டி பனைமரத்தில் நெரிகட்டிய கதையாகி விட்டதேயென்று என்று யோசித்தான். ஒருவேளை எல்லா தொழிலாளர்களையும் அடக்கி வைக்க வேண்டுமென்று சட்டம் ஒழுங்குக் காவலர்கள் நினைக்கிறார்கள் போலும். பாவம் இந்தப் பெண்கள்.

''எங்களால ஒங்க சோத்துல மண்ணு வுழுந்துடுச்சே...'' என்று அவளிடம் வருத்தப்பட்டுப் பேசினான்.

15

''அதெல்லாம் ஒண்ணுமில்ல, ஊர்ல இது மாதிரி ஏதுனாச்சும் பிரச்னை நடந்தாக்கா போலீசுக்காரங்க இப்புடி கெடுபுடி பண்றது வழக்கந்தான். நொண்டிக் குதிரைக்கு சறுக்குனது சாக்குன்னு எல்லாம் மாமூல் சேத்தி வாங்குறதுக்குத்தான், எங்க ஆளுங்க கிட்ட போலீசு கெடுபிடி பண்ணுது. எல்லாம் கொஞ்ச நாள்ல செரியாப் போயிடும்.''

சரிதா சொல்வது உண்மைதான்.

இது எல்லா ஊர்களிலும் நடக்க கூடிய ஒன்றுதான். திடீரென்று அதிகார வர்க்கத்திடமிருந்து அதட்டல், உருட்டல் வருகிறதென்றால் அது பொதுமக்களின் நன்மைக்காக அல்ல. அதிகார வர்க்கத்தின் நன்மைக்காகத்தான்.

சாராயம், கஞ்சா விற்பவர்களை வளைத்து வளைத்துப் போலீஸ் பிடிப்பதும், இரவில் பத்துமணிக்கு மேல் டீக்கடை வைக்கக் கூடாதென்று மிரட்டுவதும் மாமூல் உயர்த்தும் நாடகமேயன்றி வேறொன்றுமில்லை.

அவன் பெருமூச்சு விட்டான்.

பிறகு, அவளிடம் அன்பாய் கேட்டான்.

''நீ சாப்டியா?'' என்று.

''காத்தால பழைய சோத்தானிக் குடிச்சேன். இப்ப கடையில் அரிசி வாங்கிக்கிட்டுப் போய்த்தான் ஆக்கித் திங்கணும்.'' என வெள்ளந்தியாய் பதில் சொன்னாள்.

அவன் தன் சட்டைப் பாக்கெட்டைத் தடவிப் பார்த்தான். அதில், ஐம்பது ரூபாய் இருந்தது. அவள் மேல் அனுதாபப்பட்டு அந்த பணத்தை யெடுத்து ''இத வெச்சுக்க...'' என்று அவளிடம் கொடுத்தான்.

அதை ஏற்க மறுத்து ''எதுக்கயிது?'' அவள் என்று கேட்டாள்.

''அரிசி வாங்கணும்னு சொன்னியே, வாங்கிக்கிட்டுப் போ...''

முதலில் அவள் தயங்கினாள். அவன் வற்புறுத்தவே வாங்கிக் கொண்டாள். பிறகு, சொன்னாள் ''ஆத்தாங்கரையில நெலம செரியானவுடனே யார் கிட்டயாவது சொல்லியனுப்புறேன். அப்ப வாங்க...'' என்று.

அவன் ஒருகணம் யோசித்தான்.

அதைக் கண்ணுற்ற அவள் ''என்னா ஓசனப் பண்றீங்க? வருவீங்கதானே?'' என்று கேட்டாள்.

16

அவன் நிதானமாய் புன்முறுவலோடு பதில் சொன்னான்.

''ஒன்னொடம்புக்காவ இல்லன்னாலும், மனசுக்காவ வருவேன்.''

''அதெப்புடி, ஒடம்பும் மனசும் ஒண்ணாத்தானே இருக்குது.''

அதைக் கேட்டு தன் அறியாமையின் மீது அவனுக்கு சிரிப்பு வந்தது. கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தான். அவளும் வஞ்சனை யில்லாமல் கலந்துக் கொண்டாள். அந்த நிமிடத்தில் சந்துருவுக்கு அவளை அப்படியே கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால், பொதுஇடம் கருதி அடக்கிக் கொண்டான்.

சிரித்து ஓய்ந்ததும் திடீரென்று அவள் சொன்னாள்.

''இனுமே நீங்க ஆத்தாங்கரைக்கி வர வேணாம்.''

''ஏன்?''

''என்னூட்டுக்கு வாங்க.''

அவன் அதை ஏற்றுக் கொண்டு தலையசைத்தான்.

''ஆமா, ஒன்னூடு எங்க இருக்குது?'' என்று கேட்டான்.

அவள் கை நீட்டிக் காட்டினாள்.

''அந்த ரயிலு தண்டவாளம் இருக்குதில்ல... அதுக்கு அந்தப் பக்கம் ஒரு அரப்புக்காடு இருக்குது. அத தாண்டித்தான் என் ஊரு. அங்க வந்து எம் பேரச் சொல்லி யார் கிட்ட கேட்டாலும் ஊட்டக் காட்டுவாங்க.''

''கண்டிப்பா வாரேன்.'' என்று உறுதி கொடுத்தான். பிறகு, சட்டென்று நினைவு வந்தவனாக ''நாம் போறேன் சரிதா... தோழர்கள் கோயில் வராண்டாவுல இருக்குறாங்க.'' என்றான்.

அவள் ஆச்சரியமாய் ''அதென்னா புதுசா தோழருங்கன்னு சொல்றீங்க?'' என்று கேட்டாள்.

''இனுமே அப்புடித்தான்.''

என்று சொல்ல அவள் குதூகலமாய் விடை பெற்றாள்.

கொஞ்சநேரம் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு அவன் திரும்பினான். சரிதாவின் குதூகலம் அவனையும் தொற்றிக் கொண்டது.

17

சரசரவென்று ஏரிக்கரையிலிருந்து பள்ளத்தில் இறங்கி மேடேறினான்.

மதியச் சாப்பாட்டு நேரம் வந்து விட்டது. போன மின்சாரம் இன்னும் வராததால் கோயில் வராண்டாவில் தொழிலாளர்கள் உட்கார்ந்த வாக்கிலேயே எங்கும் நகராமல் இருந்தார்கள். அதைப் பார்த்த சந்துருவுக்கு ஒருவேளை சரிதா எதற்கு அவனை தேடி வந்தாள்? என்று தெரிந்துக் கொள்ளக் காத்திருக்கிறார்களோ? என்று கூட தோன்றியது.

அவனைப் பார்த்ததும் கந்தப்பன் கேட்டார் ''என்ன தம்பி, அந்தப் புள்ளயப் பாத்துப் பேசுனுயா?'' என்று.

சந்துரு ஆமாம் என்பது போல தலையசைத்தான்.

''எதுக்கு வந்துதாம்?'' இதையும் அவரேதான் கேட்டார். மற்ற யாரும் வாய் திறக்கவில்லை. ஒருவேளை அவர் புத்தி சொல்லி அடக்கி

வைத்திருக்கிறார் போலும். சந்துரு தனக்கும், சரிதாவுக்கும் இடையில் நடந்த உரையாடலை கொஞ்சமும் மறைக்காமல் சபையில் சொன்னான். அதைக் கேட்டதும் கந்தப்பன் வாய்விட்டுச் சொன்னார்.

''அவுசாரின்னா எளக்காரமில்ல, எளகுன மனசுன்னு மூஞ்சில அடிச்ச மாதிரி அந்தப் புள்ள நம்ப எல்லாத்துக்குக் சொல்லிட்டுப் போயிருக்குது. அப்புடித்தானே?'' என்று பொதுவாய் சொன்னார்.

''ஆமாண்ணா... நாங்கூட அனுபவமில்லாமே என்னமோன்னு நெனச்சுட்டேன்.'' என்று சந்துரு சொல்ல, சட்டென்று மாதேசு கூறினான்.

''என்ன மன்னிச்சுருப்பா.. நாந்தான் மொதல்ல கேலிப் பண்ணுனேன்.''என்று இறைஞ்சினான்.

அது போலவே ராசுவும், ஓபுளியும் கூடப் பேசினார்கள்.

''செரி வுடுங்க, எல்லாமே தெரியாம நடந்ததுதானே...'' என்று சரிதாவின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் சந்துரு.

அத்தியாயம்

5

1

ஒவ்வொன்றும் நான்கு தொட்டிப் பலகைகள் கொண்ட டிராபாக்ஸ் தறிகள் இரண்டும் சீராய் இயங்கிக் கொண்டி ருந்தன. பொதுவாய் விசைத்தறிகளில் இரண்டு வகைகள் உண்டு. ஒரு தொட்டிப் பலகை உள்ள தறியை சாதா தறி என்று கூறுவார்கள். இரண்டாவது வகையினம் இந்த ஒன்றுக்கும் மேற்பட்ட தொட்டிப் பலகைகள் கொண்ட டிராபாக்ஸ் தறி. சாதா தறியில் ஒரு நாடா மட்டுமே பயன் படுத்த முடியும். அதில், நெய்யப்படும் ரகங்கள் வெள்ளை வேட்டி மற்றும் காடா துணிகளாய் இருக்கும். அதை, தவிர்த்து சட்டைத் துணிகளில் அலுவலங்களுக்கு செல்பவர்கள் விரும்பி அணியும் நீளமாய் கோடு போட்ட சட்டைகளை தயாரிக்க லாம். அந்த ரகங்களில் ஊடுபாவில் இரண்டு அல்லது அதற்கு மேலும் உள்ள வர்ணக் கோடுகளை அமைத்து விடுவார் கள். அதன் ஊடைக்கு ஒரு தறிநாடா போதும். ஆனால், கட்டங்கள் அமைந்த சட்டைத் துணிகளுக்கு டிராபாக்ஸ் தறிகள் தேவைப்படும்.

சந்துரு இப்போது வேலை செய்வது ஒரு பெண்மணியின் சின்னஞ் சிறிய தறி பேக்டரி. அதில், இரண்டு டிராபாக்ஸ் தறிகள் மட்டுமே உண்டு. அவற்றுக்கு ஒரு ஆள் போதும். தறிக்காரனுக்கு முன்புறமும், பின்புறமுமாய் அமைக்கப்பட்ட தறிகள் அவை. எனவே, இரண்டு பக்கமும் திரும்பியபடி நின்ற இடத்திலிருந்தே தறிகளைப் பார்த்துக் கொண்டு வேலை செய்யலாம்.

ஆனால், காட்டன் தறிகளுக்கு இரண்டு ஷிப்ட் என்பதால், சந்துருவும், மாதேசும் பகலென்றும் இரவென்றும் வாரம் ஒருமுறை மாற்றி மாற்றி ஷிப்டை பகிர்ந்துகொள்கிறார்கள்.

சந்துருவுக்கு இந்தவாரம் இரவு பணிமுறை என்பதால், ராத்திரி ஒரு மணியில் இருந்து தறியில் வேலை செய்கிறான். இன்று மதியம் ஒருமணிக்கு அவன் பணிமுறை முடிந்து விடும். அதன் பிறகு பகல்முறையை தற்போது முதலாளி வீட்டுத் திண்ணையில் தூங்கிக் கொண்டிருக்கும் மாதேசு மாற்றிக் கொண்டு மதியம் தொடங்கி இரவு பண்ணிரெண்டு முடியும் வரை வேலை செய்வான்.

சந்துரு தான் முதலில் இந்த ஊருக்கு தான் மட்டும் தனியாக வந்தான். அந்த நெருக்கடியான நேரம் கொடியது. சொந்த ஊரான மணியம் பாளையத்தில் இதை விடவும், கொஞ்சம் பெரிய தறிப் பேக்டரியில் அவன் வேலை செய்து கொண்டிருந்தான்.

2

அந்த சமயத்தில்தான் உடல்நலம் சரியில்லாமல் இருந்த சந்துரு சில நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் ஓய்வில் இருந்து அன்றைக்கு தறிக்கு வந்திருந்தான். அவன் வந்ததும், வராததுமாய் அந்த பேக்டரி முதலாளி அவன் லீவு எடுத்ததற்காக கத்திக் கூப்பாடு போட்டான்.

''ஏண்டா... ஒங்கக்கா கண்ணாலத்துக்கு எங்கிட்ட வாங்குன பணப் பாக்கிய கட்ட வக்கில்ல. ஒனக்கெல்லா ரீவு கேக்குதா ரீவு? ஒழுங்கு மசுரா வேல செஞ்சு பாக்கியக் கட்டப் பாரு. இல்லன்னா வட்டிப் போடுவேம் பாத்துக்க. இனுமே ஒரு நாளு ரீவுப் போட்டாலும் நா ஒத்துக்க மாட்டேம்.'' என்று எகிறினான்.

எரிச்சலான சந்துரு பதிலுக்கு பேசினான் ''அண்ணா... நா என்னா கந்துக்கா ஒங்கிட்ட கடன் வாங்குனேன். நீ வட்டிப் போட்டு எங்கிட்ட பணத்த திருப்பி வாங்குறதுக்கு. குடுக்கறதே மத்த பேக்டரிய வுட கம்மிக் கூலி. இதுல பணப்பாக்கிக்கி வட்டி வேணுமாமுல்ல...''

''எங் கூலிக்கி ஒத்துக்கிட்டுத்தானடா கை நீட்டி காசு வாங்குனே...''

''ஆமாண்ணா... மனுசனுக்கு நல்லது கெட்டது எதுவும் வராதா? ரெண்டு நாளு ரீவு போட்டதுக்கு இந்த கத்துக் கத்தறீங்களே...''

''எனக்கு டைமுக்குல்ல துணி போயி சேரலன்னா ரகங் குடுத்தவன் கழுத்துல கத்தி வெப்பானே. அதுக்கு என்னா பண்றது?''

''அதெல்லாம் ஒங்க பிரச்ன. அதுக்காவ ஒடம்புக்கு முடியலன்னா கூட வந்து தறியோட்ட முடியுமா?''

''டேய் உசுரே போறதாயிருந்தாலும் கடன் வாங்குனத மனசுல வெச்சிக்கிட்டு வந்து தறியோட்டத்தாண்டா வேணும்.''

''அப்புடியெல்லாம் முடியாது. சும்மா சத்தம் போடாத...''

''அப்படித்தாண்டா போடுவேன். பிடிக்கலன்னா எம் பாக்கியக் குடுத்துட்டு வெளியப் போடா...''

அதற்கு சந்துரு தன் இயலாமையால் அமைதி காக்கவே அந்த முதலாளி இன்னும் அதிகமாய் திட்டினான்.

3

''ஏண்டா, பேசாம இருக்குற? ஒங்கக்காளுக்கு எம் பணத்துல கன்னி கழிஞ்சிருச்சுங்குற தைரியமா... போடா மொன்ன ராஸ்கோலு...''

அதைக் கேட்டு தாங்க முடியாமல் சந்துரு விரல் நீட்டி எச்சரித்தான். அந்த பேக்டரியில் வேலை செய்யும் தறிக்காரர்கள் கூட தங்கள் தறியை நிறுத்தி விட்டு வேடிக்கைப் பார்த்தார்கள். அவர்களில் மாதேசும் ஒருவன்.

''யோவ், ஒழுங்கு மரியாதையா போய்டு.''

''என்னடா யோவ் போட்டுப் பேசற. கடன் வாங்கி என்னடா கண்ணாலம்? இதுக்குப் பேசாம ஒங்கக்காள எங் கிட்ட வுட்றுந்தா

நானே கன்னிக் கழிச்சி வுட்டு இரண்டு லட்சம் பணத்த சும்மா குடுத்திருப்பனே...''

அவ்வளவுதான். ஆத்திரம் எல்லை மீறிய சந்துரு அந்த முதலாளியை ஒங்கி அறைந்தான். அடி வாங்கிய அவன் மேலும் சந்துரு குடும்பத்தைப் பற்றி ஏதோ அசிங்கமாய் திட்டப் போக அவனை சாய்த்து விடும் நோக்கத்துடன் எதையோ தேடினான்.

அந்த நேரம் மாதேசு தன் காலடியில் இருந்த பழைய மரக்கையை சந்துருவிடம் தட்டி விட, அதை எடுத்த அவன் ஆவேசமாய் முதலாளியை அடித்து நொறுக்கினான். அதில், தலையில், வாயில் ரத்தம் வழிய கீழே விழுந்த முதலாளி மயக்கமானான்.

அதன் பிறகு இனி, ஒரு கணம் இந்த ஊரில் இருந்தாலும் தன்னை அவனைச் சார்ந்தவர்கள் கொன்று விடுவார்கள் என்று அங்கிருந்து தப்பித்து தன் மற்றொரு நண்பனான மனோகரனிடம் போய் உதவி கேட்க, அவன்தான் இந்த ஊரைப் பற்றிச் சொல்லி ஒரு பேக்டரி முகவரியும் கொடுத்தான். இதற்கு முன் மனோகரன் பேட்டையில் வந்து வேலைப் பார்த்திருக்கிறான்.

அடுத்த அரைமணி நேரத்தில் அப்பா அச்சுப் பிணைக்கும் பேக்டரிக்குப் போய் நடந்ததை சுருக்கமாய் சொல்லி விட்டு ஈரோட்டுக்குப் போய் அங்கிருந்து ரயில் ஏறினான்.

அதன் பிறகு, பத்துப் பண்ணிரெண்டு மணி நேர ரயில் பயணத்தில் குப்பத்துக்கு வந்து சேர்ந்து அங்கிருந்து இந்த ஊருக்குள் நுழைந்தான். இங்கே அவன் இருப்பது அடிபட்டு, கஷ்டப்பட்டு உயிர் பிழைத்த முதலாளியின் தரப்புக்கு இதுவரை தெரியாது.

4

தெரிந்திருந்தால் அன்று கள்ளிப்பாளையம் முதலாளிகள் கந்தப்பன் குடும்பத்தை இழுத்துப் போக வந்த மாதிரி காரெடுத்துக் கொண்டு வந்திருப்பார்கள் நல்லவேளை, உள்ளூரில் அப்பாவுக்கு கொஞ்சம் கட்சிக்காரர்கள் செல்வாக்கு இருந்ததால் குடும்பம் தப்பித்தது. அதன் பிறகு மாதேசு மட்டும் மனோகரனிடம் விசாரித்து தெரிந்துக் கொண்டு, ஓரிரு மாதத்தில் இங்கே வந்து விட்டான்.

சந்துரு, முதலில் தன் நண்பன் கொடுத்த முகவரியில் இருந்த முதலாளி யின் பேக்டரிக்குப் போக, அங்கே தறிக்கு ஆட்கள் இருந்தார்கள். பிறகு, அவர்களே இந்த பேக்டரிக்கு அனுப்பி வைத்தார்கள். கொஞ்ச நாட்களில், ஜோடி தறிக்காரன் நின்று விடவே தேடி வந்த மாதேசு, சந்துருவுக்கு ஜோடியாகி விட்டான்.

நேரம் மதியத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

சந்துரு தான் வேலை செய்யும் இரண்டு தறிகளுக்கு நடுவே ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த வண்ணம் வலதும், இடதுமாய் தலையை திருப்பி வாட்டம் விழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது பேக்டரி வாசலில் நிழலாடியது போல் தெரிய, அவனது கவனம் கலைந்தது. யாரென்று நிமிர்ந்துப் பார்க்க அங்கே ராசு நின்றிருந்தான். சட்டென உள்ளே வந்த அவன். சந்துருவின் சொந்தக்காரர்கள் ஊரிலிருந்து தேடி வந்திருப்பதாகவும், அவர்களைக் கொண்டு போய் கந்தப்பன் வீட்டில் விட்டு விட்டு வந்திருப்பதாகவும் கூறினான். அதைக் கேட்டதும் சந்துருவுக்கு குழப்பமாய் இருந்தது. சொந்தக்காரர்கள் என்றால் யார்? அம்மா வழியா? அப்பா வழியா? அப்படி எந்த சொந்தம் தேடி வந்திருக்கிறது? அவன் கண்ணுக்குத் தெரிந்து அப்படி யாரும் இவ்வளவு தூரம் மெனக்கெட்டு வரும் அளவுக்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால், வீட்டாரைத் தவிர வேறு யாருக்கும் அவன் எங்கே இருக்கிறான் என்பதே தெரியாதே!!

ஒருவேளை தான் அடித்த முதலாளியின் ஆட்கள் தான் தேடி வந்து விட்டார்களோ? ராசுவிடம் பொய் சொல்லி விசாரித்திருக் கிறார்களோ? என்று யோசித்தான் சந்துரு.

அவன் சட்டென ''ஏம்பா... அவுங்கள எங்கப் பாத்தே? எதுனாச்சும் கார்ல வந்தாங்களா?'' என படபடவென விசாரித்தான்.

அந்த பதட்டத்தைப் புரிந்துக் கொண்ட ராசு சொன்னான்.

5

''சந்துரு, அவுங்களப் பாத்தா வெளியூர் மொதலாளிங்க மாதிரி தெரியல. அப்பாவும், மகளுமா ஒண்ண தேடி வந்திருக்குறதா சொன்னாங்க. மந்தையில லங்கடா பஸ்ச வுட்டு இறங்கி வந்தாங்க.

எங்கிட்ட தான் வெசாரிச்சாங்க. அவுங்களுக்கு கந்தப்பன் வெவகாரம் கூட தெரிஞ்சுருக்குது. அதப்பத்திக் கூட கேட்டாங்க. அதனாலத்தான் அங்க கொண்டுக்கிட்டுப் போயி வுட்டேன்.''

சந்துருவின் குழப்பம் இன்னும் அதிகரித்தது. அவன் மேலும் ராசுவை ஏதோ கேட்க முயல, அவன் தறிக்கு நேரமாகி விட்டதென கிளம்பி விட்டான். சரி, யாராய் இருந்தாலும் போய்த்தான் பார்ப்போம் என்ற முடிவுக்கு வந்த சந்துரு இரண்டு தறிகளையும் பிரேக் போட்டு நிறுத்தி விட்டு பேக்டரியை விட்டு வெளியே வந்தான். அப்போது மதியம் ஒரு மணியானதன் அடையாளமாய் ஊரில் தறிகள் நின்றன.

அந்த நேரம் வாசல் திண்ணையில் படுத்திருந்த மாதேசு தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தான். அவனொரு தானியங்கி இயந்திரம். சாப்பாட்டு நேரத்துக்கு யாரும் எழுப்பாம லேயே எழுந்து விடுவான். அவனிடம் கந்தப்பன் வீடு வரை போய் வரலாம் என்று சொன்னதற்கு எதற்கென்று கேட்காமலே திண்ணையை விட்டு இறங்கி நடந்தான்.

ஒரு நூறடி தூரத்தில் தான் தேவராசு பேக்டரி. கந்தப்பன் வெளியே வர விசயத்தைச் சொல்லி கூட்டிக் கொண்டு அவர் வீட்டை நோக்கி அவர்கள் நடக்க, வழியெங்கும் தென்பட்ட தொழிலாளர்கள் அவர் களுக்கு முகமன் கூறினார்கள். வயது வித்தியாசமில்லாத அன்பான விசாரிப்புகள் தொடர்ந்தன. சிலிர்ப்பாய் இருந்தது. வஞ்சகமில்லாத தோழமைகள் மனதுக்கு நிறைவாய் தோன்றியது.

முதல்தெரு, நடுத்தெரு, கடைசித்தெரு இப்படித்தான் ஊர்மக்கள் வீதிகளுக்கு பெயர் வைத்திருக்கிறார்கள். வேறு ஏதேதோ பெயர்கள் இருந்தும் இப்படித்தான் எல்லோராலும் அழைக்கப்படுகிறது. இம் மூன்றையும் இணைப்பதற்குப் பெயர் குறுக்குத்தெரு. நடுத்தெருவின் மத்தியில் தேவராசு தறிப் பேக்டரி இருந்தாலும், கந்தப்பனுக்காக அவர் குடியிருக்க கொடுத்தப் பழைய வீடு கட்டக் கடைசியில் இருந்தது. போய் சேர பத்து நிமிடங்கள் ஆகி விட்டது. அதுவரை யார் வந்திருப் பார்கள் என்ற கேள்வி சந்துரு மனதைக் குடைந்துக் கொண்டே யிருந்தது.

வீட்டுக்குள் நுழையும் முன்பே, கந்தப்பனின் மூத்தமகள் சந்துருவைப் பார்த்து ''வாண்ணா...'' என்று சிரித்தபடி வரவேற்றாள். ஆனால், ஏனோ மாதேசை அப்படிச் சொல்லி கூப்பிடவில்லை. அவள் செய்கையில் ஒரு கள்ளத்தனம் இருந்தது. மாதேசைத் தவிர மற்றவர்கள் யாரும் அதை கவனிக்கவில்லை.

6

அந்த பெரிய வீட்டுக்குள் நுழைந்ததும் தெரிந்தது, வந்திருப்பவர்கள் தோழர்கள் என்று. அவர்களில் ஆண்குரல் மட்டும் ''வாங்க சந்துரு, வாங்க மாதேசு...'' என்று அழைத்தது.

ரேணுகுண்டாவில் வழக்குரைஞர் வசீகரன் அறிமுகப்படுத்தி வைத்த தோழர்களில் மூத்த தோழரும், அனுராதாவும் வந்திருந்தார்கள். அவர் களைப் பார்த்ததும் சந்தோசம் தாளவில்லை.

''எப்ப வந்தீங்க? ரெண்டு பேரும்...'' சந்துரு வேண்டுமென்றே தோழரை தவிர்த்தான்.

அதை உணர்ந்த மாதேசு அவனையே பின்பற்றினான்.

''இந்த ஊர கண்டுபிடிக்க கஷ்டமா இருந்துச்சோ?'' என்று.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே, நாங்க மொழி தெரியாத மாநிலத்துக் குப் போனாலும் சுலபமா கண்டுப்பிடிச்சுடுவோம்!'' என்றார் சிரித்தபடியே அனுராதா.

மெல்ல அந்த இடத்தில் கந்தப்பனையும், அவர் குடும்பத்தையும் தவிர வேறு யாருமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட சந்துரு தோழர்களிடம் அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.

அவர்கள்தான் கள்ளிப்பாளையம் முதலாளிகளால் கடத்திச் செல்லப்பட இருந்தவர்கள் என்று தெரிந்ததும், தோழர்கள் இருவர் முகத்திலும் அனுதாபம் தெரிந்தது.

மூத்த தோழரின் பக்கத்தில் சந்துருவும், மாதேசும் அடுத்தடுத்து உட்கார்ந்தார்கள். அவர்களுக்கு கந்தப்பன் மனைவி குடிக்க தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். குடித்து வாயைத் துடைத்துக் கொண்டு சந்துரு நிதானமாய் மூத்த தோழரைப் பார்த்தான்.

சந்தன நிறத்தில் ஜிப்பாவும், வெள்ளை வேட்டியும் அணிந்திருந்தார் அவர். அனுராதா காட்டன் சுடிதார் அணிந்து அதற்கு மேட்சிங்காய் துப்பட்டா அணிந்திருந்தார்.

இருவரையும் பார்க்க யாருக்கும் அப்பா, மகள் என்றே நினைக்கத் தோன்றும். எனவே, தோழர்கள் பாதுகாப்பு கருதியே தங்களை

மற்றவர்களிடம் அப்படி சொல்லியிருக்கிறார்கள். கூடவே, சந்துருவுக்கு உறவினர் என்ற பாதுகாப்புக் கவசம்.

7

இதற்குள் கந்தப்பன் மனைவி சாப்பிட வரச் சொல்லி எல்லோருக்கும் பொதுவாய் கை கழுவ தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

ஆனால், சந்துரு ''தோழர்கள மட்டுஞ் சாப்புடச் சொல்லுங்க நாங்க அங்கம்மா கடைக்குப் போறோம்.'' என்று அவர்களின் சிரமத்தை தவிர்க்கப் பார்த்தான்.

அதற்கு கந்தப்பன் மனைவி அவசரமாய் முன் வந்து சொன்னார். ''கண்ணு சோறு உண்டுனாத்தான் ஆக்கியிருக்குறேன். நீங்களும் இங்கியே தின்னுங்க.'' என்று.

தட்ட முடியாமல் அவனும், மாதேசும் தோழர்களுடன் சேர்ந்து சாப்பிட உட்கார்ந்திருந்தார்கள்.

கந்தப்பனும் உட்கார சிறிய வாழை இலைகளில் மொத்தை மொத்தையாய் அரிசியும், பருப்பும் சேர்த்து பதமாய் வேகவைத்த கூட்டாஞ் சோறு சூடாய் விழுந்தது. தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் குறிப்பாய் சேலம் பகுதிகளில் இந்த கூட்டாஞ்சோறு மிக பிரபலம். கிட்டத்தட்ட நகர்புறங்களில் செய்யப்படும் சாம்பார் சாதம் போலவே இருந்தாலும் கூட்டாஞ்சோறுக்கு தனித் தன்மை உண்டு. அளவாய் கொதிக்கும் தண்ணீரில் ஊற வைத்த அரிசியைக் கொட்டி, பாதி வேக்காட்டில் அளவான பருப்பும், வெங்காயம், தக்காளியும் கொட்டிக் கிளறி கஞ்சி வடிக்காமல் தாளித்து தம் கட்டி வைத்து, கொஞ்ச நேரம் களித்து நெய்யோ, நல்லண்ணையோ ஊற்றி சுடச்சுட சாப்பிட்டால், அமிர்தமாய் இருக்கும். அதிலும், சந்துருவுக்கு அவன் அம்மாவின் கைப் பக்குவம் ரொம்ப பிடிக்கும். அந்த யோசனையில் ருசி தெரியாமல் இப்போது சாப்பிட்டான்.

அப்போது சோறு பரிமாற வந்த கந்தப்பன் மகள் பொன்னி, மற்றவர்கள் அறியாமல் மாதேசுக்கு நிறைய அள்ளி வைத்தாள். அதை அவன் மனதுக்குள் ரசித்தான்.

சாப்பிட்டுக் கொண்டே தலைமை தோழர் கேட்டார் ''சந்துரு இன்னிக்கே நம்ப தொழிற்சங்க அமைப்பைக் கட்டிடலாம்னு நா நெனக்கிறேன். நீங்க அதுக்கு தயாரா இருக்குறீங்களா?'' என்று.

''ஏற்கனவே முக்கியமான தொழிலாளிங்க கிட்ட இத பத்தி கூட்டி வெச்சு பேசிட்டோம். ஒங்களுக்காவத்தான் இதுவரைக்கும் காத்துக்கிட்டு இருக்குறோம்.'' என்றான்.

அவனையும், மாதேசையும் பாராட்டிய தோழர் ''செரி, அந்த முன்னோடிகள எப்ப பாக்கலாம்?'' என்று வினவினார்.

8

சந்துரு, கந்தப்பன் பக்கம் திரும்பி ''என்னண்ணா... நம்ப சனங்கள் இன்னிக்கி ராவுக்குள்ள கூட்ட முடியுமா?'' என்று கேட்டான்.

''முடியுந் தம்பி ராத்திரி எட்டு மணிக்கு பகல் ஷிப்ட் ஓட்றவங்கள லீவு போட்டு வரச் சொல்லாம். ராத்திரி ஷிப்ட்காரங்க மத்தியானத்துல இருந்தே சும்மாத்தானே இருப்பாங்க. அவுங்களுக்கு ராத்திரி ஒரு மணிக்கு மேலதான வேல''

கந்தப்பன் சொன்ன பதிலைக் கேட்ட தோழர் ''எல்லா தொழிலாளி களையும் கூப்டு கூட்டம் சேக்க வேணாம். பொறுக்கியெடுத்த மாதிரி உறுதி குலையாம இருக்குற மொத்தம் ஏழு பேர் போதும்.'' என்றார்.

அமைப்புக் கட்டுவதற்கான நடைமுறைப் பேச்சில் கலந்துக் கொண்ட அனுராதா ''இப்பவே இவுங்க மூணு பேரும் முன்னோடி சக்திகளா இருக்குறாங்க. இன்னம் நாலு பேத்த தேர்வு செஞ்சாப் போதும்.'' என சந்துரு, மாதேசு, கந்தப்பனை சுட்டிக் காட்டினார்.

மூத்த தோழர் அதை ஆமோதித்து ஏற்றுக் கொண்டார்.

அப்போது கந்தப்பன் ''அதென்னா ஏழு பேர் கணக்கு? நம்ப கிட்டதான் நெறையா தொழிலாளிங்க இருக்குறாங்களே...'' என புரியாமல் கேட்டார்.

அதற்கு அனுராதா ''சட்ட ரீதியா தொழிற்சங்க அமைப்புக்கு ஏழு பேரு போதும். இதுவந்து ஒரு சம்பிரதாயம் மாத்திரந்தான். எதிரிகிட்ட இந்த ஏழு பேத்த ஒப்புக்கு அடையாளம் காட்ட போறமே தவுத்து, வேற ஒண்ணுமில்ல...'' என்று பதிலுரைத்தார்.

''நாம்ப முறைப்படி சங்கத்த பதிவுப் பண்ணப் போறமா தோழர்?'' என மாதேசு கேட்க, அனுராதா அதற்கும் தானே முன்வந்து விளக்கினார் ''ஆமா தோழர். ஆனா, சட்டப்பூர்வ வழிகள்ல மட்டுமே நம்ப தொழிற்சங்கம் செயல்படாது. சட்டத்துக்குப் புறம்பாவும் செயல்படும்.'' என.

அதைக் கேட்ட கந்தப்பன் ''சட்டத்துக்குப் புறம்பான்னா அடிதடியா? தோழர்.'' என சந்தேகப்பட, மூத்த தோழர் ''அதுவும் தான்.'' என்று சிரித்தார். அப்படிச் சிரித்ததில் அவருக்கு சட்டென புரையேறியது. அவருக்கு குடிக்க தண்ணீர் எடுத்துக் கொடுத்த கந்தப்பன் '' ஒங்கள யாரோ நெனைக்கிறாங்க தோழர்.'' என்று சொல்ல, அதற்கு அவர் ''வேற யாரு, வர்க்க எதிரிகளாத்தான் இருக்கும்.'' என்க, எல்லோரும் சிரித்தார்கள்.

9

தோழர் அளவாய்த்தான் சாப்பிட்டார். கேட்டதற்கு தான் சர்க்கரை நோயாளி என்று கூறினார். ஆனால், அனுராதா நிறைவாய் சாப்பிட்டார். அவரை விட மாதேசு, பொன்னி காட்டிய அக்கறையில் கூடுதலாய் சாப்பிட்டான்.

தோழர் சாப்பிட்டு கையை கழுவிக் கொண்டு தான் வைத்திருந்த சின்னப் பையிலிருந்து மாத்திரையெடுத்துப் போட்டுக் கொண்டார்.

அதன் பிறகு, எல்லோரையும் உட்கார வைத்து பொதுவான மார்க்சிய அரசியல் பேசினார். முதலில் மனிதனுக்குத் தேவையான அடிப்படை தேவைகள் எது? என்று ஆரம்பித்தார். உண்ண உணவு, உடுக்க உடை, இருப்பிடம், மருத்துவம். கல்வி, வேலைவாய்ப்பு, நல்ல ஓய்வு இதெல்லாம் தொழிலாளிக்கு கிட்டாமல் போகும் காரணங்கள் என்ன? என்று விரிவுப் படுத்தினார். சுரண்டலின் ஊற்றுக் கண் லாபமே என்று எளிமையாய் சொல்லி முடித்தார். அது ஒரு சின்ன அரசியல் வகுப்பைப் போலயிருந்தது.

தன் கையோடு கொண்டு வந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, கூலி, விலை லாபம், என்ன செய்ய வேண்டும், போன்ற நூல்களை சந்துருவிடம் கொடுத்தார்.

அன்று இரவு, கந்தப்பன் வீட்டிலேயே தாராளமாய் அமர்ந்து கொண்டு, தோழர்களோடு சந்துரு, மாதேசு, கந்தப்பன், ஏழுமலை, ஓபுளி,

மச்சக்காளை, பச்சையப்பன் என்று ஏழு பேர் கொண்ட தொழிற்சங்க அமைப்புக் குழு கூடியது.

அதில், மூத்த தோழரும், அனுராதாவும் சமுதாய மாற்றத்தில் தொழிற் சங்கங்களின் பங்கு பற்றி விளக்கினார்கள். சுரண்டலற்ற சமுதாயம் அமைக்க அவற்றின் தேவைப் பற்றி அனைவருக்கும் எடுத்துச் சொன்னார்கள்.

நிகழ்ச்சி நிரலின் கடைசியாக நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. தலைவராக சந்துருவும், செயலராக மாதேசும், பொருளாளராக. ஏழுமலையும் தேர்வு செய்யப்பட்டனர். மற்றவர்களுக்கு துணைப் பொறுப்புகள் வழங்கப்பட்டன.

மாதேசு, தொழிற்சங்கத்தில் செயலரானதை அறிந்து முக மலர்ச்சி யோடு அந்த இரவு நேரத்தில், தூங்காமல் இருந்த பொன்னி தனக்குள் சந்தோசப்பட்டுக் கொண்டாள்.

ஆனால், அவன் தன் கடமையுணர்வில் அதை கண்டுக் கொள்ள வில்லை.

அப்போது சந்துரு தோழர்களிடம் கேட்டான் ''நாளைக்கே நம்ப சங்கத்த வெளிப்படையா அறிவிச்சுடலாமா?'' என்று.

10

அதற்கு அனுராதாவும் சரி, மூத்த தோழரும் சரி ஒப்புக் கொள்ள வில்லை. அவர்களின் முடிவைக் கேட்டு கொஞ்சம் ஆச்சரியமானான் சந்துரு. சங்கத்தை பகிரங்கமாய் அறிவிக்காமல் தொழிலாளர்கள் மத்தியில் எப்படி செயல்படுவது? என்பதே அவன் கேள்வியாய் இருந்தது. அவனுக்கு மட்டுமல்ல, நிர்வாகிகளாய் தேர்வு செய்யப் பட்ட மற்றவர்களுக்கும் இதே கேள்விதான் எழுந்தது.

மூத்த தோழர் அவர்களுக்கு எழுந்த அந்த மிக முக்கியமான கேள்விக்கு பதில் சொன்னார். அனைவரும் கூர்ந்து கேட்க தொடங்கினார்கள்.

''தோழர்களே... நீங்க எல்லாரும் வெளியூர்ல இருந்து இங்க வந்து வேலை செய்றீங்க. ஒங்கள்ல ஒருத்தரும் இந்த ஊரை சேர்ந்தவுங்க இல்லை. இதுதான் தொழிற்சங்கத்தை வெளிப்படையா அறிவிக் கிறதுல இருக்குற மிகப் பெரிய சிக்கல். நீங்க இப்படியொரு சங்கத்தை

கட்டியிருக்குறீங்கன்னு இந்த ஊர் மொதலாளிங்களுக்கு தெரிஞ்ச மறு நிமிசமே அவன் சங்க நிர்வாகிகளுக்கு வேலை தர மாட்டான். குடியிருக்க வூடு தர மாட்டான். வந்தேறின்னு மெரட்டுவான். நீங்க அவுங்க கொடுமைகள இந்த மாநில அரசாங்கத்துக் கிட்ட கொண்டு போனாலும் அவுங்க கண்டுக்க மாட்டாங்க. ஏன்னா, உள்ளூர் மொதலாளிகளுக்கு ஆதரவாத்தான் அரசாங்கம் நடந்துக்கும். அது மட்டுமில்லாம உடனே, ஒங்கள எல்லா மொதலாளிங்களும் சேந்து ஊரையே காலிப் பண்ணச் சொல்லவும் கூட வாய்ப்பிருக்குது. அத மொதல்ல புரிஞ்சுக்குங்கங்க.''

''நம்ப தொழிலாளிங்கள வெச்சி நாம்ப ஒடனே ஸ்ட்ரைக் செய்ய மாட்டோமா? தோழர்.'' அனைவரின் சார்பாக மறுபடியும் சந்துரு கேட்டான்.

''ஸ்ட்ரைக் செய்றவங்கல்லாம் யாரு? அவங்களும் வெளியூர் சக்திகள் தானே... இப்புடி எல்லாத்தையுமே அவன் ஊரைக் காலி பண்ணச் சொன்னா என்னா செய்வீங்க?''

''அப்புடிச் செஞ்சா அவனுக்கு வேல செய்ய ஆள் கெடைக்காதே.. அவந் தறிய அவனால ஓட்ட முடியாதே.'' என்றான்.

அதற்கு தோழர் ''நெசந்தான். ஒங்க நெலமையென்னா? ஒட்டு மொத்தமா இந்த ஊரை வுட்டுட்டு நீங்க எங்க போவீங்க.. நாடோடிங்க மாதிரி அடுத்த ஊருக்குப் போவீங்களா? அங்கியும் போயி ஒரு மொதலாளிக்கிட்ட தானே வேல செய்யணும். இதே மாதிரி அங்க பிரச்னை வந்தா வுட்டுட்டு அடுத்தத தேடுவீங்களா? அதுவுமில்லாம, வெளியூர்ல இருந்து தொழிலாளிங்க அடுத்தடுத்து இந்த ஊரை நோக்கி வரும் போது, மொதலாளி பொழைச்சுக்குவான். நீங்க தான் கஷ்டப்படணும்.''

11

அதற்கு சந்துரு ''நமக்கு உள்ளூர் மொதலாளிகள வுட வெளியூர் மொதலாளிகள் தானே இப்ப பெரிய பிரச்னையா இருக்குறாங்க. அவுங்கள சமாளிக்கவாவது இந்த சங்கத்த வெளிப்படையா அறிவிச்சுதான் தீரணும்.'' என்று கூறினான்.

''அப்ப அந்த மொதலாளிகள எதுப்பீங்க, இந்த ஊர்க்காரன் எவ்வளவு கூலி கம்மியா குடுத்தாலும் வாங்கிக்கிட்டு வேல செய்வீங்களா? என்ன

கொடுமை செஞ்சாலும் தட்டிக் கேட்காம சும்மா இருப்பீங்களா? தொழிலாளிகள் வீட்டுப் பெண்கள வெளியில இருந்து வர்றவன் கை வெச்சா அடிப்பீங்க. இந்த ஊர்க்காரன் கை வெச்சா கம்முனு இருப்பீங்களா... சொல்லுங்க?''

இந்த கேள்விக்கு யாருக்குமே பதில் தெரியவில்லை. ஏழு பேரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். என்ன இது வம்பாகப் போய் விட்டது. இதற்கெல்லாம் தீர்வு தேடி இவரிடம் போனால், இவர் நம்மிடம் கேள்வி கேட்கிறாரே? என்று ஒரு மனதாய் யோசித்தார்கள்.

சந்துரு மட்டும் ''செரி தோழர், நீங்க இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க?'' என பரிதாபமாய் கேட்டான்.

''அப்புடிக் கேளுங்க. ஒங்களுக்காவப் பேச ஒரு உள்ளூர் அமைப்போ இல்லன்னா தனிநபர்களோ முன் வராத இந்த சமயத்துல மொதல்ல, இந்த ஊர்ல ஒரு முன்னோடியவோ, இல்ல குறைந்த பட்சம் ஆதரவு சக்திகளையோ நாம வென்றெடுக்கணும். அதுக்குப் பின்னாடிதான் நாம்ப சங்கத்த வெளிப்படையா அறிவிக்கணும்.''

''இந்த ஊர்ல ஒரு முன்னோடியா? அது சாத்தியமேயில்ல தோழர். எல்லாரும் மொதலாளிங்க எவனும் வர மாட்டான்.''

''ஒரு விசயத்தப் புரிஞ்சுக்குங்க சந்துரு. இதுல யாரும் பெரிய தரகு மொதலாளிங்க இல்ல. சிறு மொதலாளிகள்தான். இவுங்க வீதிக்கு வர ரொம்ப நாளாகாது.''

''நீங்க போகாத ஊருக்கு வழி சொல்றீங்க?''

''இல்ல, இதுதான் செரியான வழி. கண்டிப்பா இது ஊர் போயி சேரும்.'' தோழர் தீர்மானமாய் சொல்லவே சந்துரு வாயடைத்துப் போனான்.

அதன் பிறகு தோழர் சொன்னார் ''இது ஏதோ கற்பனையா நாஞ் சொல்லல தோழர் சந்துரு. இதுக்கு முன்னால நம்ப அமைப்புக்கு கெடச்ச அனுபவத்த வெச்சித்தான் உறுதியா சொல்றேன்.''

12

இதற்கு மேலும் அவரிடம் அவனால் பேச இயலவில்லை. அவரது முடிவுக்கு கட்டுப்பட்டான். மற்றவர்களும் அதற்கு ஒத்திசைந்தார்கள்.

இறுதியாய் மச்சக்காளை தோழரிடம் கேட்டார். ''காலம் பூரா நாங்க இதே ஊர்லதான் இருக்கணுமா? சொந்த ஊருக்கு திரும்பிப் போவ முடியாதா?''

''தாராளமாப் போலாம், அங்கியும் நம்ப பொதுவுடமை அமைப்புக் கட்டி பலமா மாற்றப்ப.''

''அதுக்கு என்னா செய்யணும்?''

''ஒங்க ஊர்ல முன்னோடி சக்திகள் தொடர்பு குடுங்க..தமிழ்நாட்டுல இருக்குற பொதுவுடமைக் கட்சி தோழர்கள மூலமா அவுங்களப் பாக்கச் சொல்வோம்'' என்றார் தோழர்.

அவரவர் தமது ஊரிலுள்ள போர்குணமுள்ள சில சக்திகளை குறிப்பிட்டு அவர்களின் முகவரிகளைக் கொடுக்க தோழர் குறித்துக் கொண்டார். சந்துரு தன் நண்பன் மனோகரனின் விலாசத்தைக் கொடுத்தான்.

அத்தியாயம்

6

1

திடீரென இப்படியொரு மோசமான திருப்பம் பேட்டையில் உருவாகும் என விசைத்தறி தொழிலாளர்கள் யாருமே கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை. அந்த திருப்பம் அவர்களின் வாழ்க்கையை கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கி இருந்தது. இனி, இந்த ஊரில் நிச்சயம் பிழைக்க இயலாது. வேறு வாழ்விடம் தேடி நாடோடிகளாய் நகர வேண்டியதுதான் என்று தொழிலாளர்கள் உள்ளூர அஞ்சினார்கள். அவர்கள் மட்டுமல்ல, ஒரு தொழிற்சங்கத்தை கட்டி செயல்பட முனைப்புடன் காத்திருந்த சந்துருவும், மாதேசும், கந்தப்பனும், ஏழுமலையும் மற்ற முன்னோடிகளும் கூடத்தான் அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

இனி, இந்த ஊரில் விசைத்தறி தொழிலே கேள்விக்குறியான பின்பு, தொழிற்சங்கத்திற்கு இங்கே என்ன வேலை?

முதலாளிகளுக்கு எதிராய் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த காலம் போய், ஒருபிரிவு முதலாளிகளுக்கு எதிராய் இன்னொரு பிரிவு முதலாளிகள் வேலை நிறுத்தம் செய்த அதிசயத்தை,

தங்கள் வாழ்நாளில் அன்றுதான் பார்த்தார்கள் தொழிலாளர்கள். இதென்ன புதுமையாய் இருக்கிறதே... கொடுமை கொடுமையென்று கோயிலுக்குப் போனானாம் ஒருவன். அங்கு ஏற்கனவே ரெண்டு கொடுமைகள் ஜிங்கு ஜிங்குன்னு ஆடிக் கொண்டிருந்ததாம். அந்த கதையாகிப் போய் விட்டது அவர்களின் வாழ்நிலை.

நடந்தது இதுதான்...

விசைத்தறி முதலாளிகளில் இரண்டு வகையுண்டு. கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் அதில் ஒருவகை, அவர்களுக்கு பாவுநூல் என்கிற கச்சாப் பொருளை கூலிக்கு நெய்யக் கொடுத்து துணி ரகங்களாய் திருப்பி வாங்கும் ஜவுளி உற்பத்தியாளர்கள் இன்னொரு வகை. இந்த ஜவுளி உற்பத்தியாளர்கள் பெரிய முதலாளிகள் என்றால்,விசைத்தறி உரிமையாளர்கள் சிறு முதலாளிகள். இந்த இருபிரிவினரிடையே தான் இப்போது கூலிப் பிரச்சனை ஏற் பட்டிருக்கிறது. அதனால், சிறு முதலாளிகள் பெரிய முதலாளிகளை எதிர்த்து தங்களது தறிகளை இயக்காமல் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

கடந்த ஒருவாரமாய் அந்த வேலை நிறுத்தம் தொடர்கிறது.

2

இங்கு மட்டுமல்ல, நகரத்திலும் கூட இதே நிலைமைதான்.

விசைத்தறி தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒருவாரம் வேலை இல்லாமல் இருப்பதே சற்று அதிகப்படியானது. இதில், வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடித்தால் தொழிலாளர்கள் பட்டினி கிடக்க வேண்டியதுதான். இதற்கு என்ன தீர்வென்று தெரியவில்லை? என்றாலும், ஜவுளி உற்பத்தியாளர்கள் தாங்களே சொந்தமாய் வைத்திருக்கும் ஒருசில பெரிய பேக்டரிகளை இயக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சந்துருவும், மாதேசும் மற்ற தொழிலாளர்களோடு சேர்ந்து விழி பிதுங்கி திணறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், மச்சக்காளையும், பச்சையப்பனும் அவர்களுடன் இல்லை. ஏனெனில், அவர்கள் பெரிய பேக்டரியில் வேலை செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரேணிகுண்டாவிலிருந்து வந்த அமைப்புத் தோழர்கள் தொழிற் சங்கத்தை ஏற்படுத்தி விட்டு தாங்கள் சொல்லும் வரையில் அதை, வெளிப்படையாய் அறிவிக்கக் கூடாதென வற்புறுத்திக் கூறி விட்டுப்போன பிறகு, இதுவரை கண்ணில் தென்படக் காணோம். எனவே, வழிகாட்ட ஆளில்லாமல் தவித்துக் கிடந்தார்கள் அனைவரும். தொழிலாளர்களோடு சேர்ந்து அவர்களும் தினமும் அங்கம்மா சாப்பாட்டுக் கடையில் கணக்கு வைத்துக் கொண்டு மூன்று வேளையும் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பஜனைக் கோயில் வராண்டா விலும் ஆங்காங்கே முதலாளிமார் வீட்டுத் திண்ணையிலும் படுத்துக் கிடந்தார்கள். கொஞ்சம் பேர் மந்தையில் இருக்கும் பள்ளிக்கூடத்தில், தினமும் மாலைநேரத்திலும், பள்ளி விடுமுறை காலங்களிலும் தாயக்கரம் போட்டு ஆடிக் கொண்டு பொழுதைக் கழித்து வந்தார்கள்.

இன்னும் இரண்டு நாட்கள் இப்படியே போனால் ரேணிகுண்டா போய் வழக்குரைஞர் வசீகரன் மூலமாய் தோழர்களைப் பார்த்து ஆலோசனை கேட்கலாம் என சந்துரு மற்ற முன்னோடிகளிடம் பேசி வைத்திருந்தான்.

ஆனாலும், தொழிலாளர்களின் வாழ்நிலைமை என்னவாகுமோ? என்ற அச்சம் அவனுக்கு ஏற்படாமல் இல்லை.

இன்று காலையிலேயே அங்கம்மா சோறு போடும் போது சுணக்கம் காட்டினாள். அவள் மட்டும் என்ன செய்வாள்? பாவம். அரிசி,பருப்பு போன்ற மளிகைச் சாமான்கள் கடையில் சும்மாவா கிடைக்கிறது?

3

ஒரு நாளைக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மூன்று வேளையும் அவள் கடையில் சாப்பிடுகிறார்கள். ஒரு வாரத்துக்கான சாப்பாட்டுக் காசை யாரும் தரவிட்டால் அவள் மட்டும் எப்படி சமாளிப்பாள்? நாளையே அவள் சோறு போட மாட்டேன் என்று சொல்லி விட்டால், அதோ கதிதான்!!

சந்துரு பித்துப் பிடித்த மனநிலையில் அங்கும் இங்கும் உலாத்தி விட்டு கடைசியாய் பள்ளிக்கூட வராண்டாவில் வந்து உட்கார்ந்தான். அன்று, பள்ளி விடுமுறையென்பதால் தொழிலாளர்கள் அங்கிருக்க அவர்களுடன், மாதேசு அரசியல் பேசியபடி இருந்தான். அதை சந்துரு கூர்ந்துப் பார்த்துக் கிடந்தான். அந்தநேரம், நகரத்திலிருந்து வரும்

லங்கடா பஸ் பெருத்த சத்தத்துடன் வந்து மந்தையில் நின்றது. பஸ்ஸில் கூட்டமே இல்லை. கையில் காசில்லாமல் தொழிலாளர் களால் எங்குதான் நகர இயலும்? அனைத்து இயக்கமும் முதலாளி களின் வேலை நிறுத்தத்தால் நசுங்கிக் கிடக்கிறது.

அந்தநேரம், பேருந்திலிருந்து ஒற்றை ஆளாய் இறங்கினான் சிற்பி. அதைப் பார்த்ததும் தான் சந்துருவுக்கு அவன் நினைவே வந்தது. கொஞ்ச நாளாய் இவன் பேட்டையில் ஆளையே காணவில்லையே... எங்கு போயிருந்தான்? சென்னைக்கா? அல்லது சொந்த ஊருக்கா? என்று அவனைப் பற்றி யோசித்தான். தோளில் ஒரு சின்ன தோல்பை யுடன் பேருந்தை விட்டு இறங்கி நின்ற சிற்பி அங்கிருந்தே சந்துருவைப் பார்த்து விட்டான். எனவே, சிரித்த படியே அவனை நோக்கி வந்தான்.

சிற்பி அணிந்திருந்த பேண்ட், சர்ட் பேட்டையின் விசைத்தறி சூழலுக்குப் பொருந்தாமல் இருந்தாலும், எடுப்பாய் தோன்றியது. அவனது மாநிறம் அதற்கு உதவி செய்தது. சராசரிக்கும் சற்று கூடுதல் உயரத்தில் கண்களில் கொஞ்சம் விலை குறைந்த கூலிங்கிளாஸ் போட்டிருந்தான். சினிமாவில் வாய்ப்பு தேடுபவர்கள் சற்று பகட்டாய் தோன்றினால் தப்பில்லை.

அவன் சினிமாவில் பெரிய நடிகனாகும் ஆசையில் இருப்பவன். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன். சில வருடங்களுக்கு முன்பிருந்தே இங்கு வந்து தறியோட்டுகிறான். திங்கள் முதல் வெள்ளி வரை வேலை செய்வான். சந்தை நாளன்று சம்பளம் வாங்கிக் கொண்டு அன்று மாலையே சென்னைக்கு பஸ் ஏறி விடுவான். சனி, ஞாயிறு திரைப்பட வாய்ப்புக்காக அலைந்து விட்டு மறுபடியும் பேட்டைக்கே திரும்பி விடுவான்.

இங்கிருந்து சென்னைக்கு இரண்டு, மூன்று மணி நேரப் பயணம் தான் என்பதால், அவனுக்கு வந்துப் போக சௌகரியமாய் இருந்தது.

4

ஆனால், சந்துருவுக்கு தெரிந்து அவன் இன்னும் ஒரு படத்தில் கூட சிறு வேடத்திலும் நடித்ததில்லை.

சிற்பி ''என்னா சந்துரு... எப்புடி இருக்குறே? ஆமா, ஊர்ல தறிச் சத்தம் கம்மியா கேக்குதே... என்னா விசயம்? ஒரு லைன்ல கரண்டு, கிரண்டு

போய்டுச்சா? இல்ல, வேற எதுனாச்சும் பிரச்னையா?'' என நெருக்க மாய் வந்து நின்று ஒரே நேரத்தில் ஒம்போது கேள்விகள் கேட்டான். அவன் எப்போதும் இப்படித்தான். படபடவென்று பேசுவான்.

அப்போது அவனைப் பார்த்து விட்ட தொழிலாளர்கள் சிலர் ''என்னா நடிகரே, எப்ப வந்தீங்க?'' என்று தங்கள் இடத்திலிருந்து கையை உயர்த்தி சலாம் வைத்துக் கேட்டார்கள். சிற்பியும் அதேபோலச் சலாம் வைத்து ''இப்பத்தான் வந்தேன்.'' என பொதுவாய் சொன்னான்.

சந்துரு அவனிடம் ''எங்கப்பா ஆளையே காணோம்?'' என்று கேட்டான்.

அதற்கு அவன் ''ஒரு ஷூட்டிங் போயி நடிச்சுட்டு வர்றேம்பா...'' என்றான்.

''அப்புடியா..!'' என்று அதைக் கேட்டு சந்துருவுடன் சேர்ந்து மற்ற தொழிலாளர்களும் வியந்தார்கள். பிறகு, தறிக்காரர்களில் சிலர் என்ன வேசம்? என பரபரத்தார்கள்.

''ஒரு படத்துல நல்ல வேசம் கெடைச்சுதுப்பா. அதுவும் ஜோடி யோட... என் வாழ்க்கையில மொத தடவையா கேமரா முன்னால நின்னு நடிச்சுட்டு வர்றேன்.'' என உற்சாகமாய் சொன்னான்.

சட்டென அவன் தோளில் தட்டிக் கொடுத்த சந்துரு ''பரவா யில்லையே, ஒன்னோட லட்சியம் நெறைவேறிடுச்சே...'' என பாராட்டினான்.

பிறகு, ''என்னா வேசம்? கதாநாயகனாயிட்டியா?'' என்று கேட்டான்.

அதற்கு சிற்பி ஒரு மாதிரி சிரித்தான்.

அதன்பின் ''அப்புடியெல்லாம் ஒண்ணுமில்ல, சின்ன வேசந்தான். ஆனா, சொல்லிக்கிற மாதிரியிருக்கும்.'' என்றான்.

''அப்புறம் எதுக்குப்பா இங்க வந்தே? சென்னையிலயே இருந்து மேல மேல வாய்ப்புத் தேட வேண்டியதுதானே?''

சந்துருவை விட சிற்பி சில வருடங்கள் வயதில் மூத்தவன் தான் என்றாலும், ஏனோ, ஒருமையில் விளிப்பது மனதுக்கு நெருக்கமாய் இருந்தது.

5

அந்த நேரத்தில் சிற்பி ''கைல காசில்லாம எப்புடிப்பா சிட்டில இருக்க முடியும். ஒரு நாளைக்கி என்னா செலவாகுது தெரியுமா? ஒண்ணுக்கு, ரெண்டுக்குப் போறதுன்னாக் கூட காசில்லாம நடக்காது. நமக்கு தெருவோரம் அத்தினி சனநடமாட்டத்துல ஒண்ணுக்கு வர்றது கஷ்டம்னு ஒனக்கு தெரியாதா?'' என விவரித்தான்.

அவன் சொல்வது உண்மைதான். சினிமா தியேட்டருக்குப் போனால் கூட தன் பக்கத்தில் யாராவது யூரினலில் வந்து நின்றால், ஒன்னுக்கிருக்காமலே நகர்ந்து விடுவான் சிற்பி. அநியாயத்துக்கு கூச்ச சுபாவம். நாளைக்கு இவன் எப்படி சினிமாவில் நடிகைகளை தொட்டு நடிக்கப் போகிறான் என்று சந்தேகப்பட்டிருக்கிறான் சந்துரு. ஆனால், அவன் நினைப்புக்கு மாறாக, சிற்பி தான் நினைத்ததை முடித்து விட்டு வந்திருக்கிறானே..! பாராட்டப்பட வேண்டியவன் தான்.

அப்போது தொழிலாளர்களின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்த மாதேசு தொடர்ந்து அரசியல் பேச, சிற்பி அதை நூதனமாய் பார்த்து விட்டு சந்துருவை டீக் கடைக்கு கூப்பிட்டான்.

இருவரும் தனியே நடக்க சந்துரு கேட்டான்.

''ஆமா, நீ நடிச்சதுக்கு அந்த சினிமா கம்பெனியில பணம் கிணம் தர்லியா?''

அதற்கு பதில் சொல்லாத சிற்பி. சந்துருவை கொஞ்ச தூரம் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு பரிதாபமாய் சொன்னான். தான் சினிமாக் காட்சியில் கூட்டத்தில் வரும் ஒரு ஆளாய் நின்று விட்டு வந்திருப்ப தாய். இதை பள்ளிக் கூட வராண்டாவில் சொல்லியிருந்தால் மற்றவர்கள் கேலி செய்யக் கூடும் சந்துரு அப்படி நினைக்க மாட்டான் என்பதால் தனியே அழைத்து வந்து சொன்னதாய் கூறினான். இதைச் சொல்லும் போது அவன் கண்கள் கலங்கியிருந்தன. மேலும், தன்னை கும்பலுக்கு அழைத்துச் சென்றவன் அதற்கான காசையும் தரவில்லை. அவன் சூழ்நிலை அப்படி. தயாரிப்புக் கம்பெனியில் பணம் செட்டில் செய்யப்படவில்லை.

பரிதாபப்பட்ட சந்துரு டீக் கடையில் ஆர்டர் சொல்லி சிற்பியின் சூழ்நிலையறிந்து இரண்டு டீக்கான காசைத் தானே எடுத்துக்

கொடுத்தான். அதற்குப் பிறகு, சிற்பி தனக்கு ஒரு சிகரெட் வாங்கித் தரும் படிக் கேட்டான். சந்துரு சிரித்துக் கொண்டே ''இது வேறயா?'' என அவன் கேட்டபடி சிகரெட் வாங்கிக் கொடுத்தான்.

6

அதைப் பற்ற வைத்துக் கொண்டே திடீரென்று நினைவு வந்தவனாய் சிற்பி ''ஆமா... ஏம்பா நம்ப ஆளுங்க எல்லாரும் தறிக்குப் போவாமப் பள்ளிக்கூடத்துல ஒக்காந்து இருக்குறாங்க?'' என்று கேட்டான்.

சந்துரு அவனிடம் தற்போது ஊரில் நடக்கும் சிறு முதலாளிகளின் வேலை நிறுத்தம் பற்றிச் சொல்ல, சிற்பியின் முகம் இருண்டு போனது. அவன் வாய் விட்டுப் புலம்பினான். ''அட, என்னப்பா... நானே சென்னையில சோத்துக்கு வழியில்லாமத்தான் வந்திருக்குறேன். இங்கயும் இப்புடியாயிடுச்சே... இப்ப நா என்னா செய்யட்டும்?'' என்று.

அவனுக்கு சமாதானம் சொன்ன சந்துரு ''நாங்கல்லாம் இத்தினிப் பேரு இருக்கும் போது ஒன்ன மட்டும் பட்டினியா கெடக்க வுட்றுவமா? கவலப்படாதே.'' என்று தேற்றினான்.

இந்த மனிதாபிமானம் தான் சந்துருவிடம் சிற்பிக்கு மிகவும் பிடித்தது. தன்னையறியாமல் அவன் கையைப் பிடித்துக் கொண்ட அவன் ''நீ நல்லா இருக்கணும் நண்பா...'' என மனதாரச் சொன்னான். பிறகு, ''ஆமா, ஊர்ல இருந்து பொணந்தின்னிங்க எவனாவது இந்தப் பக்கம் வந்தானுங்களா? நம்ப தொழிலாளிங்க யாருக்கும் ஒண்ணும் பாதிப்பில்லியே?'' என்று கவலையாய் விசாரித்தான்.

பணப்பாக்கி வசூலிக்க வெளியூரிலிருந்து பேட்டைக்கு வரும் கொடூரமான விசைத்தறி முதலாளிகளுக்கு சிற்பி வைத்திருக்கும் பெயர் பிணந்தின்னிகள்.

அதை ரசித்த சந்துரு ''கள்ளிப்பாளையத்துக்காரனுங்க வந்தாங்க. நல்லா வாங்கிக் கட்டிக்கிட்டுப் போனாங்க.'' என்றான்.

சிற்பி கேள்விக்குறியாய் அவனைப் பார்க்க கொஞ்ச நாட்களுக்கு முன் நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் அவனிடம் சொன்னான் சந்துரு. அதை தொடர்ந்து நான்குபேர் சிறைக்குப் போனது. வசீகரனை

சந்தித்தது. அமைப்புக் கட்டியது வரைக்கும் சொல்ல, சிற்பியின் முகபாவனைகள் மாறிக் கொண்டே வந்தன.

''நா ஊர்ல இல்லாத நேரத்துல இவ்வளவு நடந்திருக்குதா?'' என்று வியந்தவன் கடைசியில் தன் கையிலிருந்த சிகரெட்டை தூக்கியெறிந்து விட்டு சட்டென சந்துருவைக் கட்டிக் கொண்டான்.

7

''நண்பா... நெசமாலுமே ஒரு பெரிய காரியத்த நீ பண்ணியிருக்குறே... நான் சினிமாவுல தான் கதாநாயகனும்னு நெனைக்குறேன். ஆனா, நீ சனங்க மத்தியில கதாநாயகனாவே ஆயிட்டே.'' என்றான்.

''நம்ப தொழிலாளிங்க இல்லன்னா என்னால என்ன செஞ்சிருக்க முடியும். அவுங்கதான் என்னிக்கும் கதாநாயகர்கள்.'' என்ற சந்துரு, அவனிடமிருந்து தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டான்.

சிற்பி வெறும் நடிகன் மட்டுமல்ல, நன்றாகப் பாடுவான். கூடவே, நல்ல சிந்தனையாளனும் கூட. ஒருமுறை சொன்னான்.

'கல் இடிச்சுடுச்சாப்பாங்கிற வாக்கியத்தக் கண்டுப் புடிச்சது ஒரு அம்மாவாத்தான் இருக்கணும்.' என்று.

மதிய நேரத்துக்கு அடையாளமாய் வடக்கே செல்லும் ரயில் ஆரனை எழுப்பியபடி தடதடத்துச் சென்றது, சற்று தூரத்தில்...

சந்துரு, சிற்பியைக் கூட்டிக் கொண்டு அங்கம்மாளின் சாப்பாட்டுக் கடைக்கு நடந்தான். கொஞ்சம் சுமாரான வீடுதான் அவளது ஓட்டல். அதில், உட்கார்ந்துதான் நான்கைந்து பந்தியாய் தொழிலாளர்கள் சாப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

இந்த ஊருக்கு விசைத்தறி நெய்யத் தெரிந்த எந்த தொழிலாளியும் கையில் ஒரு ரூபாய் கூட இல்லாமல், தாராளமாய் வந்துப் பிழைக்க முடியும். ஏன், தொழில் தெரியாவிட்டால் கூட புதிதாய் கற்றுக் கொண்டு வாழ முடியும். அதுவே, பல இடங்களில் இருந்து இங்கு ஆட்கள் வர ஒரு காரணமாகவும் இருக்கிறது. ஊருக்குள் புதிதாய் ஆட்கள் தென்பட்டால், உடனே, விசைத்தறி முதலாளிகள் யாருக்காவது மூக்கு வேர்த்து விடும். அந்த தொழிலாளியை வெகு சுலபமாய் கண்டுபிடித்து தமது பேக்டரியில் யாராவது ஒருவர்

வேலைக்குச் சேர்த்துக் கொள்வார்கள். நேராக, அங்கம்மா கடைக்குக் கூட்டி வந்து அங்கு, தங்கள் கணக்கில் சோறு போடச் சொல்லி விடுவார்கள். வாரக் கடைசியில் அந்த தொழிலாளியின் சாப்பாட்டுக் கணக்கு அவனது முதலாளிக்குப் போகும். அந்தப் பணம் தொழிலாளியின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டு அங்கம்மாளின் சாப்பாட்டுக் கணக்கு தீர்க்கப்படும். மிச்சப் பணம் தறிக்காரனின் கைக்கு கிடைக்கும். இந்த வசதியுடன் கூடவே, சாராய போதை, கஞ்சா போதை மற்றும் ஆற்றங்கரைப் பெண்களின் பாலியல் போதையும் கூட நகரத்தின் ஈர்ப்புக்கு மற்றொரு காரணமாய் இருக்கிறது. எனவே, நாடோடி வாழ்க்கையை விரும்பும் தொழிலாளிக்கு இதொரு மிக மோசமான சொர்க்கம் என்றால் மிகையில்லை.

8

அங்கம்மாள் என்கிற அந்த பெண்மணிக்கு நாற்பது வயதுக்குள் இருக்கும். பேட்டை தொழிலாளர்களுக்கு அவள்தான் அன்னமிட்ட கை. உயர்நிலைப் பள்ளிக்குப் போகும் வயதில் பெண்ணும், ஆணுமாய் இரண்டு குழந்தைகள். அங்கம்மாள் விதவையென்று ஒரு சிலரும், கணவன் ஓடிப் போய் விட்டான் என்று வேறு சிலரும் சொல்கிறார்கள். உண்மை எதுவென்று சந்துருவுக்கு தெரியாது. அவளுக்கு சொந்தத்தில் சேர்த்தியில்லாத யாரோ ஒரு இளைஞன் கூடமாட ஒத்தாசை செய்து வருகிறான். அங்கம்மாளோடு அந்த இளைஞனை இணைத்து வைத்துப் பேசும், கள்ள உறவுக் கதையொன்று ஊரில் நிலவுகிறது. வெளியூரில் இருந்து மற்றவர்களைப் போலவே, தறியோட்ட வந்த அவனை அங்கம்மாள் தன்னுடன் சேர்த்துக் கொண்டாளாம்.

இந்த மாதிரியான விவகாரங்களில் ஆர்வமில்லாத சந்துரு அதை யார் பேசினாலும் தூரப் போய் விடுவான்.

ஒரு சின்ன சந்தில் இருக்கும் அங்கம்மாள் கடையின் வாசற்படியில் சந்துரு, சிற்பியுடன் ஏறும் போது யாரையோ அவள் திட்டுவது காதில் விழுந்தது. சாப்பாட்டுக் கடையைத் தவிர அவள் ஏலச் சீட்டு நடத்துகிறாள். சீட்டுப் பணம் கட்டாத ஒரு நபர் திட்டு வாங்கிக் கொண்டிருந்தான். அதைக் கண்டுக் கொள்ளாத மாதிரி இருவரும் உள்ளே நுழைந்து, காரை தரையில் உட்கார்ந்தார்கள். ஏற்கனவே, கோபத்தில் இருக்கும் அங்கம்மா, சிற்பிக்கும் சேர்த்து தன் கணக்கில்

சாப்பாடு போடச் சொன்னால், என்ன சொல்வாளோ? என சந்துரு பயந்தான். அதுவுமில்லாமல் எல்லோரையும் முந்திக் கொண்டு முதல் போணியாய் வேறு வந்திருக்கிறோம். என்ன நடக்குமோ?

அதற்கு தகுந்த மாதிரி வாடிக்கையாளர்கள் சாப்பிட வந்து உட்கார்ந்ததும் துரித கதியில் இலைப் போடும் அங்கம்மாளுடன் இருக்கும் அந்த இளைஞன் கண்டுக் கொள்ளாமல் இருந்தான். சிற்பியை வேறு ஒரு மாதிரியாய் பார்த்தான். அப்போது அங்கம்மாள் தன்னிடம் திட்டு வாங்கியவனை ''நானு பல பேத்துக்கு பதில் சொல்லணும்பா. நீங்கயெல்லாம் ஒழுங்கா சீட்டுக் கட்டுனாத்தான் நான் வசூல் பண்ணி மத்த சீட்டுக்காரங்களுக்குப் பணம் தர முடியும். இதுதான் கடைசி அப்புறம், என்ன வீதியில நின்னு கத்த வெச்சிராதே...''என எச்சரித்தாள்.

அவன் திகில் நிறைந்த முகத்தோடு உடம்பெல்லாம் வேர்த்து தலையாட்டி விட்டு நகர்ந்தான்.அப்படியும் ''இதெல்லா என்ன சென்மமோ? சீட்டு எடுக்குறப்ப என்னா கண்டிசன் போட்டாலும், தலையாட்டுது. அப்புறம் எருமை மேல மழை பேஞ்சா மாதிரி நாம்ப என்ன திட்னாலும் சொரணையில்லாம திரியுது...'' என ஆளை முன்னே விட்டு பின்னாலும் திட்டினாள்.

9

பிறகு, இந்தப் பக்கம் திரும்பாமல் சமையல் கட்டைப் பார்த்துக் கொண்டே ''என்னா சந்துரு, ஒங் கூட்டாளி நடிகர் திலகம் சிவேசிகணேசன் எப்ப வந்தாரு?'' என குத்தலாய் கேட்டாள். அந்த சிவேசி என்ற சொல்லை மட்டும் ஒரு மாதிரி ராகமாய் இழுத்தாள்.

''இப்பத்தாங்கா வந்தாரு...'' என சந்துரு பதில் சொல்ல, ''என்னா மெட்ராசுல போயி நடிச்சுக் கொட்டிட்டு வந்துட்டாரா?'' என சத்தமாய் கேட்டாள்.

அதற்கு சந்துரு வாயெடுக்கும் முன்பே சமையலறையிலிருந்து ஏதோ தீய்ந்த வாடை வர சட்டென அதனுள் போனவள் அங்கிருந்தபடியே மேலும் குரலுயர்த்தினாள் ''என்னாச்சி சீ...னிமா? அங்கப் போட்ட சோறு ஒடம்புக்கு ஒத்துக்கலியா? வுத்தால கிவுத்தால போயிடுச்சா? போன மச்சான் திரும்பி வந்தாம் பூ மணத்தோடன்னு வந்துட்டாரு...'' என்று.

''இவுரெல்லாம் நடிக்க வரலேன்னு யாரு அங்க அழுதா? சினிமாவுல சோத்துக்கு செத்துக்கிட்டு நா நாளைக்கே பெரியாளாயிடுவேன்னு சொல்லிக் கிட்டுத் திரியறவங்க தான் சந்துரு ரொம்ப சாஸ்தி.''

சிற்பிக்கு அப்போதே சாப்பிட்ட மாதிரி ஆகி விட்டது. எழுந்துப் போய் விடலாமா? என நினைத்தான்.

ஆனால், சந்துரு அவனைப் புரிந்துக் கொண்டு கண் சாடையில் அதை தடுத்தான். பிறகு, சமையலறையைப் பார்த்து உரக்கச் சொன்னான் ''அக்கா... நெசமாலுமே நம்ப ஆளு நடிச்சுட்டுத்தான் வந்திருக்கு றாரு...'' என்று.

ஆனால், அதை நம்பாத அங்கம்மாள் ''என்னத்த நடிச்சுருக்கப் போறாரு. எங்கியாவது சூட்டிங்குல கூட்டத்துல நிக்க வெச்சிருப்பாங்க. படம் வந்தாத்தான் தெரியும்...'' என்றாள்.

அதே வேகத்தில் ''ஏம்பா வந்தவுங்களுக்கு எலை போடுப்பா...'' என தன்னோடு செட்டிலாகி விட்ட இளைஞனிடம் உத்தரவாய் சொன்னாள்.

அவன் ''சிற்பிக்குமா?'' என இங்கிருந்தே வினவினான்.

''பின்னே... அவர மட்டும் பட்டினி போடவா முடியும்?'' என்றாள்.

10

இதுவரை பேசியது அங்கம்மாவின் குணமல்ல. இதுதான் அவள் சுயரூபம். அது நன்றாக தெரிந்துதான் சிற்பியை துணிந்து சாப்பிடக் கூட்டி வந்திருந்தான் சந்துரு.

அன்று, சோறும் வெறும் ரசமும் மட்டும் தான் இருந்தது. இந்த அளவுக்காவது பல்லைக் கடித்துக் கொண்டு சமாளித்து தொழிலாளர் களுக்கு சோறு போடும் அங்கம்மாளைப் பாராட்டியே ஆக வேண்டும். அதே சமயம். இதுவும் கூட எத்தனை நாளைக்கு? அந்த கவலையில் சந்துருவுக்கு தொண்டையில் சோறு இறங்கவில்லை.

கொஞ்ச நேரத்தில் மாதேசுடன் மற்ற தொழிலாளர்கள் கும்பலாய் கடைக்கு வந்தார்கள். அவர்கள் சிற்பியிடம் அவன் என்ன வேசத்தில்

சினிமாவில் நடித்து விட்டு வந்தானோ அதை தங்கள் முன்னால் செய்துக் காட்டச் சொல்ல நிஜத்தையறிந்த சந்துரு, சிற்பியைப் பரிதாபமாய் பார்த்தான். ஆனால், உண்மையான கலைஞனான அவன் சற்றும் தயங்காமல், எச்சில் கையுடன் எழுந்து ஒரு மனநோயாளியைப் போல அருமையாய் நடித்துக் காட்ட, எல்லோரும் கை தட்டினார்கள். முதன் முறையாய் தன் நடிப்புக்கு அங்கீகாரம் கிடைத்ததில் மெய் சிலிர்த்துப் போனான் சிற்பி. சந்துரு தன் மனதுக்குள் அவன் திறமையைப் பாராட்டினான்.

அந்த நேரத்தில் அங்கே, மச்சக்காளையும், பச்சையப்பனும் சாப்பிட வந்தார்கள். அவர்களின் முகபாவனையில் சந்துருவிடம் சொல்ல ஏதோ தகவல் இருந்தது போலத் தோன்றியது. அதை கவனித்து விட்ட அவன் 'என்ன?' என்பது போல பார்வையில் கேட்டான்.

''கந்தப்பண்ணன் வூட்டுக்கு சொந்தக்காரங்க வந்திருக்குறாங்க...'' என்றார் மச்சக்காளை. சந்துருவுக்கு புரிந்து விட்டது. தோழர்கள் தான் வந்திருக்கிறார்கள். எனவே, முதல் சாப்பாட்டோடு எழுந்து எச்சில் இலையை எடுத்து வாசலில் இருந்த பிய்ந்த மூங்கில் கூடையில் போட்டு விட்டு பானைத் தண்ணீரில் கையை கழுவினான். பிறகு, உள்ளே வந்து எல்லோருக்கும் பொதுவாய் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

அவன் நேராக கந்தப்பன் வீட்டுக்குத்தான் போகிறான் என்பது புரிய அந்த இடம் சட்டென பரபரப்படைந்தது. சொந்தக்காரங்க என்கிற பரிபாஷை தோழர்களை குறிக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். தங்களின் தற்போதைய பிரச்னைக்கு தீர்வுக் காண முன்னோடிகள் வருகையை அவர்களும் எதிர்ப்பார்த்திருந்தார்கள். எனவே, தாங்களும் கந்தப்பன் வீட்டுக்குச் போகும் ஆர்வத்தில் சாப்பிடுவதில் அவசரம் காட்டினார்கள்.

11

திடீர் மாறுதலைக் கவனித்த சிற்பி சற்று குழம்பிப் போய் மாதேசை விசாரிக்கலாமா? என்று நினைத்தான். பிறகு, ஏனோ அதை கை விட்டான்.

ஆனால், வெளியே போன சந்துரு திரும்பி வந்து சிற்பியை தன்னுடன் வரும்படி சைகை செய்தான். அதற்காக காத்திருந்தவன் மாதிரி கையைக் கழுவிக் கொண்டு அவனும் சடுதியில் கிளம்பினான்.

போகும் வழியில் ''சொந்தக்காரங்கன்னு மச்சக்காளை அண்ணன் சொல்லிச்சே?'' என படபடத்தான். அவனிடம் தோழர்களைப் பற்றி சந்துரு சொல்ல, சிற்பிக்கு இன்னும் ஆர்வம் கூடியது.

பேட்டைக் கிராமமே மயான அமைதியுடன் காணப்பட்டது. தெருக்கள் வெறிச்சோடியிருந்தன. எந்த நேரமும், வெளியிலிருந்து நூல் கட்டுகள் வாகனங்களில் வருவதும், அதை சம்பந்தப்பட்ட தறிப் பேக்டரிகளில் இறக்கி விட்டு, அதே வாகனங்கள் நெய்த துணிரகங்களை திண்டு திண்டாய் ஏற்றிக் கொண்டு ஊரை விட்டுப் போவதுமாய் இருப்பது பேட்டையின் இயல்பு. அதையெல்லாம் ஒரு வாரமாய் காண இயலவில்லை. அதே போல வீதிகளில் சாயம் போட்ட பல வண்ண ஈர நூல் வகைகள் தடித்தடியான மூங்கில் வாரைகளில் வெயிலில் காய்ந்துக் கொண்டிருக்கும். வீதிகளில் நடந்து போகும் போது அதன் ரசாயன வாடை மூக்கைத் துளைப்பது வழக்கம்.

இவை எல்லாமே மாறிப் போய் சூன்ய வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது ஊர். சிறு விசைத்தறி முதலாளிகள் வங்கியிலோ, தனியாரிடமோ கடன் வாங்கித்தான் இந்த தொழிலைச் செய்துக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு நிமிடமும் வாங்கிய கடனுக்கு வட்டி ஏறிக் கொண்டே போகிறது.

என்றைக்கு கடன்காரன் பணத்தை எடுத்து வை என வாசலில் வந்து நிற்கப் போகிறானோ? வீட்டையும், தறியையும் அவனுக்கு எழுதிக் கொடுத்து விட்டு தெருவில் நிற்க வேண்டியிருக்குமோ? என்ற கவலையில் எதிர்ப்பட்ட முதலாளிகள் முகத்தில் பிணபாவனையே எஞ்சியிருந்தது.

இத்தனைக்கும் அவர்கள் யாரிடம் கூலி உயர்வுக்காகப் போராடுகிறார் களோ அந்த ஜவுளி உற்பத்தியாளர்கள் என்கிற பெரிய விசைத்தறி முதலாளிகளும், இவர்களும் ஒரே சாதியை சேர்ந்தவர்கள் தான். 'தாயானாலும், பிள்ளையானாலும் வாயும், வயிரும் வேறு' என்று ஒரு பழமொழி உண்டு. அது இங்கே நிதர்சனமாகி விட்டது.. வர்க்க வேறுபாட்டின் முன்னே சாதிய பாசம் பல்லிளித்துக் கொண்டு நிற்கிறது.

12

பெரும்பாலும் அவ்வளவாய் வீட்டை விட்டு வெளியே வராத முதலாளிமார் இல்லத்தைச் சேர்ந்த பெண்கள் திண்ணைகளில்

உட்கார்ந்து ஏதோ தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். சந்துரு அவர்களைக் கடந்த சமயத்தில் அவனைப் பார்த்து விட்டு மெல்லிய குரலில் அவனைப் பற்றி ஏதோ பேசினார்கள். கந்தப்பண்ணன் மகளைப் கள்ளிப்பாளையம் முதலாளிகளிடமிருந்து காப்பாற்றிய பின்னால், சந்துருவின் மேல் அவர்களுக்கு ஒரு மரியாதை ஏற்பட்டிருந்தது. என்னதான் முதலாளிகள் வீட்டுப் பெண் பிள்ளைகள் ஆயினும், அவர்களும் ஆணாதிக்கத்தால் அவதிப்படுபவர்கள் அல்லவா?

அவ்வளவு ஏன், சந்துருவும், மாதேசும் தறியோடும் அந்த பேக்டரியின் முதலாளி மனநலம் சரியில்லாதவர்.

அதனால், அவரது மனைவிதான் பேக்டரி நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருகிறார். அவருக்கு ஆண் பிள்ளையில்லை. வயதுக்கு வந்த இரண்டு பெண்கள் தான் இருக்கிறார்கள். வீடும், பேக்டரியும் ஒன்றாக இருப்பதால், அந்த அம்மாள் தன் மகள்களை சமையல் கட்டைத் தாண்டி வெளியே நடமாட அனுமதிக்க மாட்டார். போதாக் குறைக்கு இளைஞர்களான சந்துரு, மாதேசு மீது எப்போதும் ஒரு ரகசிய கண்காணிப்பில் இருப்பார். இப்போது அவரது நடவடிக்கைகளில் ஒரு மாறுதல் தெரிகிறது. முன்பெல்லாம் உறவினர் வீட்டு விசேடங்களுக்கு எதற்கும் அவ்வளவாகப் போக மாட்டார். அவசியம் என்றால் தன் பெண்களையும் கூட்டிக் கொண்டுதான் போவார்.

அதெல்லாம் இப்போது மாறி விட்டது. ''சந்துரு, வூட்டப் பாத்துக் கோப்பா... நா சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு போய்டு வர்றேன்.'' என சொல்லி விட்டு தைரியமாய் போய் வருகிறார். சந்துருவுக்கு அப்போதுதான் உணர்ந்துக் கொண்டான் ஒரு போராளியாய் வாழ்வது எவ்வளவு பெருமைக்குரியதென்று

சந்துரு தன் அனுபவத்தை நடந்துக் கொண்டே சிற்பியிடம் சொல்ல, அவன் கூறினான். 'போராளிகள் நடந்து போகும் பாதையில் முள்ளும் மலராகும்' என்று.

கந்தப்பண்ணன் வீட்டில் தோழர் அனுராதா வந்து காத்திருந்தார். பாதுகாப்புக் கருதி ஊரார் மத்தியில் அவர் சந்துருவின் உறவினர் மகள் மட்டுமல்லாமல், ரேணிகுண்டாவில் ஒரு அலுவலகத்தில் வேலைப் பார்த்துக் கொண்டு அங்கேயே பெண்கள் விடுதியில் தங்கியிருக்கிறார். அவ்வப்போது சந்துருவைப் பார்க்க வந்து போவார் என்ற செய்தி

தோழர்களால் பரப்பட்டிருந்தது. சிற்பியை அனுராதாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான் சந்துரு.

13

பிறகு, ஊர் நிலவரம் பற்றி அவரிடம் பேச வாயெடுத்தான். ஆனால், அவனை முந்திக் கொண்டு அவர் பேசினார். ''கேள்விப் பட்டேன் சந்துரு, கந்தப்பன் தோழர் எல்லாத்தையும் விரிவாச் சொன்னார்.'' என்று.

அவன் சற்று தள்ளி உட்கார்ந்திருந்த கந்தப்பண்ணனைப் பார்த்தான். அவர் ஆமாம் என்பது போல தலையசைத்தார். அங்கே, கந்தப்பனின் மனைவியும், மகள் பொன்னியும் கூட இருந்தார்கள். மற்ற பிள்ளைகள் சின்னஞ்சிறுசுகள் என்பதால், வெளியே விளையாடிக் கொண்டி ருந்தார்கள்.

அனுராதாவிடம் தாமதிக்காமல் சந்துரு ''இப்ப என்னா செய்லாந் தோழர்?'' என்று கேட்டான்.

அதற்கு அவர் மென்மையாய் புன்னகைத்தார். அது அவனுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது. அதை ரசித்த அனுராதா அவனை மேலும் குழப்பினார். ''பழம் நழுவிப் பால்ல வுழுந்திடுச்சுன்னு தமிழ்ல ஒரு பழமொழி இருக்குதுல்ல தோழர்...'' என்று.

அவன் சற்று எரிச்சலானான் ''ஆமாந் தோழர். அதெதுக்கு இப்போ?'' என கேட்டான்.

அவர் அதைப் புரிந்துக் கொண்டு தன் மர்மப் புன்னகையை நிறுத்திக் கொண்டு அவனுக்கு தெளிவாய் விளக்கினார். அதற்கு முன் நாவால், தன் உதடுகளை ஈரமாக்கிக் கொண்டார்.

''இந்த ஊரைச் சேந்த ஒரு ஆதரவு சக்திய வென்றெடுக்காம நம்ப அமைப்பை வெளிப்படையா அறிவிக்க கூடாதுன்னு அன்னிக்கி முடிவெடுத்தப்ப நீங்களும் மத்த தோழர்களும் அது நடக்குமான்னு சந்தேகப்பட்டீங்க இல்லியா? ஆனா, இப்ப பாருங்க இந்த ஊரே நம்ப பக்கம் வர்ற மாதிரி ஆயிடுச்சி இந்த விசைத்தறி மொதலாளிகள் சாதாரண சின்ன மொதலாளிகள் தான். இவுங்க ஒண்ணும் பெரிய மொதலாளிகள் இல்லன்னு நாம்ப ஏற்கனவே பேசியிருக்குறோம் இல்லியா?''

''ஆமாந் தோழர்.''

''இவுங்க எந்த நேரத்துலயும் தன்னோட சின்ன முதலீட்டை பெரிய ஆளுங்க கிட்ட இழந்துட்டு, என்னிக்காவது ஒரு தொழிலாளியா தன்னோட கையையும், காலையும் நம்பி வாழ வேண்டிய நெலமைக்கு தள்ளப்படுவாங்க அப்புடிங்கிறதுக்கு இப்ப நடந்துக்கிட்டு இருக்குற ஸ்ட்ரைக் ஒரு நடைமுறை உதாரணமாயிடுச்சு.''

14

''அது செரிங்க, இந்த மொதலாளிங்க பிரச்னைல நமக்கென்ன வந்துச்சு? வேணா, பசியும், பட்டினியுமா வவுத்துல ஈரத் துணியப் போட்டுக்கிட்டு வேடிக்கைப் பாக்கலாம். இத தவுத்து நம்பளால வேறா என்னா செய்ய முடியும்?''

''இல்ல, சந்துரு இந்த போராட்டத்தை நாம்ப கையில எடுக்கணும். அப்பத்தான் பசி பட்டினியில இருந்து தொழிலாளிங்கள நம்பளால காப்பாத்த முடியும்.''

அனுராதா இதுவரை சொன்னதை கூர்ந்து கவனித்த சந்துரு அவரின் அணுகுமுறையைப் புதிதாய் பார்த்தான். மற்றவர்களும் அதே முகபாவனையை வெளிப்படுத்தினார்கள்.

அந்த சமயத்தில் கந்தப்பண்ணன் வீட்டுக்கு வந்த மாதேசு, ஏழுமலை, ஒபுளி, மச்சக்காளை, பச்சையப்பனிடமும் அனுராதா மீண்டும் ஒருமுறை தன் கருத்தைக் கூறினார். அப்போது அனைவர் மனதிலும் இருந்த ஒரே எண்ணம் இந்த சிறு முதலாளிகளின் வேலைநிறுத்தத்தை எப்படியாவது முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே! அதற்காக, தோழர் அனுராதா என்ன சொன்னாலும் செய்ய தயாராய் இருந்தார்கள்.

ஆயினும், சந்துரு மட்டும் அவர் சொன்னதை மனதில் உள்வாங்கிக் கொள்ள முற்பட்டான். அனுராதா சொன்னது சரிதான். இந்த கூலி உயர்வுப் போராட்டம் இரு தரப்பு முதலாளிகளுக்கிடையிலான முரண் பாடுதான். இதை தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொள்ளாமால் இருப்பதில் ஒரு பயனும் இல்லை. அதற்கான வழிமுறையை தோழரே சொல்லட்டும் என வாளாவிருந்தான்.

அதை உணர்ந்த அவர் மேலும் தொடர்ந்தார்.

''இப்ப ஜவுளி உற்பத்தியாளர்கள்னு சொல்லப்படுற பெரிய மொதலாளிகள் தறிப் பேக்டரியில நம்ப முன்னோடிகள் யாரெல்லாம் வேலை செய்றாங்க?'' என பொதுவாய் கேட்டார்.

சட்டென மச்சக்காளையும், பச்சையப்பனும் கையைத் தூக்கினார்கள். அதைப் பார்த்த அவர் ''அருமை.'' என்றார்.

அடுத்து அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க அனைவரும் கூர்மையடைந்தார்கள். அந்த இடம் வெகுவாய் நிசப்தத்திற்கு மாறியிருந்தது. சிலர், மூச்சு விடுவதைக் கூட மறந்த நிலையில் இருந்தார்கள்.

15

உடனே அவர் ''பெரிய பேக்டரியில வேலை செய்ற நம்ப தொழிலாளர்கள் உடனடியா சின்ன மொதலாளிகளுக்கு ஆதரவா வேலை நிறுத்தம் செய்ணும்.'' என்றார்.

அதைக் கேட்டதும் மச்சக்காளை ''அப்புடிச் செஞ்சா என்ன நடக்கும் தோழர்?'' என சற்று படபடப்பாய் வினவினார்.

''பெரிய மொதலாளிகளோட உற்பத்தி இதுனால பாதிக்கப்படும் இல்லியா? அதுதான் போராட்டதை முடிவுக்கு கொண்டுக்கிட்டு வர ஒரே வழி.''

அடுத்து பச்சையப்பன் ''இதுக்கு அந்த பேக்டரியில வேல செய்ற மத்த தொழிலாளிங்க ஒத்துக்குவாங்களா? மத்தவங்களுக்காவ நாங்க வேலை நிறுத்தம் செஞ்சு பட்டினி கெடக்குணுமான்னு கேக்க மாட்டாங்களா?'' என கேட்டார்.

அப்போது மாதேசு ''அண்ணா, தொழிலாளிங்க அப்புடியெல்லாம் கேக்க மாட்டாங்க. அடுத்தவுங்க கஷ்டத்த அவுங்க அனுசரிக்கவே செய்வாங்க...'' என அலட்சியமாய் சொன்னான்.

அவன் சொன்னதை ஏழுமலையும், ஓபுளியும் ஆதரித்தார்கள். கந்தப்பன், மச்சக்காளைக்கும், பச்சையப்பனுக்கும் ஆதரவு தெரிவித்தார். சந்துரு நடுநிலை வகித்தான்.

இருதரப்புக்குமிடையே இது சாத்தியமா? இல்லையா? என வாக்கு வாதம் ஆரம்பித்து விட்டது. அதை அர்த்தமுள்ள மௌனத்துடன்

அனுராதா செவிமடுக்க, அங்கிருந்த கந்தப்பனின் மனைவியும், அவரது மகளும் வெறும் பார்வையாளர்களின் பாத்திரத்தை வகித்தார்கள்.

ஆனாலும், பொன்னி அப்படியிருப்பதை வெறுத்து ஏதோ கூற முன் வந்தாள். அதைக் கண்ணுற்ற அனுராதா ''கொஞ்சம் சும்மாயிருங்க...'' என்று அனைவரது பேச்சையும் கண்டிப்பான குரல் உயர்த்தி தடுத்து நிறுத்தினார்.

அதே வேகத்தில் ''சொல்லுங்க பொன்னி.'' என்று அவளை நோக்கினார்.

தொழிற்சங்க முன்னோடிகள் சற்று குழப்பமடைந்து புதிதாய் ஒருவருக்கொருவர் பார்த்தார்கள்.

16

சந்துரு, தான் கவனிக்கத் தவறியதை தோழர் கவனித்து விட்டார் என்பதை உணர்ந்து ''சொல்லு பொன்னி.. என்ன சொல்ல வந்தே? தோழர் கேக்குறாங்கல்ல...'' என வழி மொழிந்தான்.

அவளோ சபையில் பேச கூச்சப்பட்டாள். வார்த்தை எழாமல் தடுமாறினாள். அதைப் புரிந்துக் கொள்ளாத கந்தப்பண்ணன் தன் மகளை அதட்டினார். '' சொல்லு புள்ள...'' என்று.

அனுராதா ''தோழர், நீங்க இப்புடி மெரட்னா அவுங்க எப்புடிப் பேசுவாங்க? கம்முனு இருங்க நீங்க...'' என எரிச்சலுடன் கண்டித்தார்.

பொன்னி மெல்ல பேசத் தயாராக மாதேசு அவளை குறுகுறுவென்றுப் பார்த்தான்.

அவள் தெளிவாக கூறினாள் ''அன்னிக்கிப் பள்ளிப்பாளையத்து மொதலாளிங்க எம் மேல கை வெச்சப்ப மத்த தொழிலாளிங்க நமக்கென்னான்னு இல்லாம எல்லாரும் ஒண்ணா சேர்ந்து அவுங்கக் கிட்ட சண்டைப் போட்டாங்களே அது மாதிரி நம்ப சனம் பட்டினி கெடக்குறப்ப பெரிய பேக்டரி தொழிலாளிங்க மட்டும் வேல செஞ்சு வவுறார எப்புடி சோறு திம்பாங்க?'' என்று.

சட்டென்று அனுராதா அதற்கு கை தட்டினார். சந்துருவும், மற்றவர்களும் அதையே பின்பற்ற, மாதேசு ஒருபடி மேலே போய் பலமாய் விசிலடித்தான்.

எல்லோருக்கும் அதைப் பார்த்து சிரிப்பு வந்து விட்டது. ஆனால், சந்துரு மட்டும் அவனது அதீத உற்சாகத்தை கவனிக்க தவறவில்லை. அதே நேரம் கொஞ்சம் வெட்கப்பட்ட பொன்னி மாதேசை ஓரக் கண்ணால் பார்த்தாள். அதையும் சந்துரு மனதில் குறித்துக் கொண்டான். ஏனோ, அவன் மனசுக்குள் கவலை எழுந்தது.

மளமளவென அடுத்தடுத்து என்ன செய்வதென்று பேசப்பட்டது. முன்னோடிகள் பொறுப்புகளைப் பகிர்ந்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

பெரிய பேக்டரி தொழிலாளிகளிடம் உடனே வேலை நிறுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பேச மச்சக்காளையும், பச்சையப்பனும் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள். சிறுமுதலாளிகளிடம் ஆதரவு திரட்டும் பொறுப்பை கந்தப்பனும், சந்துருவும், மாதேசும் ஏற்றுக் கொண்டார்கள்.

கந்தப்பண்ணனின் தறிப் பேக்டரி முதலாளி தேவராசு முதலியார்தான் தற்போது பெரிய முதலாளிகளுக்கெதிராய் கூலி உயர்வுப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் சிறுமுதலாளிகளின் சங்கத்துக்கு தலைவர். எனவேதான் இந்த மூவர் கூட்டணி.

17

அடுத்து மீதமிருந்த முன்னோடிகள் ஏழுமலைக்கும், ஓபுளிக்கும் தோழர் அனுராதா தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்துக்கான துண்டறிக்கையை திருத்தணிக்குப் போய் அச்சகத்தில் அச்சடித்து வரப் பொறுப்புக் கொடுத்தார்.

உள்ளூரில் அச்சடித்தால் எதிரிகளின் காதுக்குப் போக வாய்ப்பிருக்கிறது என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

மீதமிருந்தது சிற்பி. அவன் தான் என்ன செய்வதென்று முழிக்க, அவனை அனுராதா துண்டறிக்கை எழுத தனக்கு துணையாய் வைத்துக் கொள்ள முடிவெடுத்தார். அவனது இலக்கிய அறிவு அதற்குப் பயன்பட்டது.

அத்தியாயம்

7

1

முன்னணித் தோழர்கள் அனைவரும் தமது பொறுப்பை உணர்ந்து தமக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் சரியாய் செய்தனர். அவர்கள் அனைவருக்குமே தெரிந்திருந்தது, இது வாழ்வா? சாவா? போராட்டமென்று. சந்துருவும், மாதேசும், கந்தப்பனோடு இணைந்து சற்றும் தாமதிக்காமல் அன்றைய தினமே பேட்டையிலுள்ள சிறு முதலாளிகள் சங்கத்தின் தலைவர் தேவராசிடம் போய் பேசினார்கள்.

அவர் முதலில் அவர்கள் சொன்னதை நம்பவில்லை. ''நெசமாவா சொல்றீங்க?'' என்று கூட கேட்டார். சற்று யோசித்து விட்டு, மற்ற சங்க முன்னோடிகளிடம் அழைத்துச் சென்றார்.

அவர்களிடமும் சந்துரு சிறு முதலாளிகள் நடத்தும் கூலி உயர்வுப் போராட்டத்துக்கு ஆதரவாய் விசைத்தறி தொழிலாளர்கள் களமிறங்குவது என்ற தங்களின் முடிவை சொல்ல, அவர்கள் இன்ப அதிர்ச்சிக் குள்ளானார்கள். தாங்கள் அவசரப்பட்டு விட்டோமோ? என்று கூட தமது

போராட்டத்தை நினைத்து விசனப்பட்டுக் கொண்டிருந்த அவர்கள் தொழிலாளர்களின் இந்த முடிவால் தங்கள் போராட்டத்திற்கு புது ரத்தம் பாய்ச்சப் பட்டதைப் போல நினைத்தார்கள். தன் கூட்டாளிகள் முகத்தில் மலர்ச்சியைப் பார்த்த தேவராசு அந்த சந்தோசத்தில் உணர்ச்சி வயப்பட்டு சந்துருவின் கையைப் பிடித்துக் கொண்டார். நா தழுதழுக்க அவர் ''தம்பி வெளியூர்ல இருந்து பஞ்சம் பொழைக்க வந்த நீங்க, எங்களுக்கு இவ்வளவு சப்போட் பண்ணுவீங்கன்னு நாங்க நெனைக்கவே இல்லப்பா.'' என்று கூறினார்.

அதற்கு சந்துரு ''அண்ணா இந்தப் போராட்டத்துனால எங்க தறிக்காரங்களுந்தான் பாதிக்கப்பட்டுப் பட்டினி கெடக்குறாங்க. ஒங்க பிரச்னை தீந்தாத்தான், நாங்க சோறு திங்க முடியும். அதனால ஒங்களுக்கு கட்டாயம் ஆதரவு தர வேண்டியது எங்க கடமை'' என்றான்.

''அது செரிப்பா... நீங்க கொஞ்சம் பேரு மட்டும் எங்களுக்கு ஆதரவு குடுத்தாப் போதுமா? பெரிய பேக்டரி தொழிலாளிங்க ஆதரவு தர வேணாமா?'' என்று சந்தேகமாய் கேட்டார் தேவராசின் கூட்டாளி கருணாகரன்.

2

அதற்கு சந்துரு ''அண்ணா... நாங்க முன்னாடியே பெரிய பேக்டரி தொழிலாளிங்கள எங்களோட சேத்துக்கிட்டு ஒரு சங்கத்த கட்டி வெச்சிருக்குறோம் அதுனால ஒண்ணும் பிரச்னை இல்ல.''என்றான்.

அதைக் கேட்டு அவர்கள் ஆச்சரியமானார்கள்.

இனி, அடுத்து என்ன செய்வது? என்பதை முடிவு செய்ய இரு தரப்பும் தேவராசு வீட்டிலேயே உட்கார்ந்து பேசினார்கள். உடனடியாக, முதலாளிகள், தொழிலாளர்கள் அடங்கிய கூட்டுக் கூட்டதை நடத்தி, அவர்களிடம் கூலி உயர்வுப் போராட்டத்தை தீவிரப்படுத்துவது பற்றிப் பேசி மற்றவர்களின் கருத்தறிவது என முடிவு செய்தார்கள்.

அந்த நேரத்தில் தேவராசு கேட்டார் ''ஏம்பா சந்துரு நீங்கல்லாம் எங்களுக்குத் தெரியாம எப்ப ஒண்ணா கூடி சங்கமானீங்க?'' என்று.

அவன் தன்னுடன் இருந்த மாதேசையும், கந்தப்பனையும் ஒரு முறைப் பார்த்து விட்டுப் நூதனமாய் சிரித்தான்.

பிறகு, ''அண்ணா, எப்ப கள்ளிப்பாளையத்து மொதலாளிங்க எங்கூட்டுப் பொண்ண தூக்கப் பாத்தாங்களோ, அப்பவே நாங்க முழிச்சுக் கிட்டம். இனிமே ஒத்துமையா இல்லன்னா வேலைக்கி ஆவாதுங்கிற முடிவுக்கு வந்தம்.'' என்று அவருக்கு விளக்கினான்.

அடுத்து அவர் கேட்டார் ''அது செரிப்பா... நீயும், மாதேசும் வெளியூர் போய்ட்டு வந்ததா எங்க சின்ன மொதலாளிங்க மத்தியில பேசிக்கிட்டாங்களே...''

சந்துரு அதற்கு மேலும் மறைக்க விரும்பாமல் தாங்கள் சிறையில் இருந்த போது தங்களை பிணையில் எடுத்த வழக்குரைஞர் வசீகரனைப் பார்க்க ரேணிகுண்டா போனதையும், அவரது அறிவுறுத்தலின் பேரில் தான் விசைத்தறி தொழிலாளர் சங்கம் கட்டப் பட்டிருப்பதையும் அவன் தேவராசிடம் கூறினான். ஆனால், எச்சரிக்கையாய் தங்கள் பின்னே ஒரு புரட்சிகர கட்சி இருப்பதை தவிர்த்து விட்டான். மேலும் துருவிய தேவராசு, சற்று தாமதித்து முதலாளிகள், தொழிலாளர்கள் கூட்டுக் கூட்டத்தைக் கூட்ட தேதியும், நேரமும் எங்கு நடத்துவது என்ற விபரத்தையும் சொல்ல, பிறகு, அங்கிருந்து விடைப் பெற்றுக் கொண்டு கந்தப்பன் வீடு நோக்கி நடந்தார்கள் மூவரும்.

வழியில், மாதேசு சொன்னான் ''இந்த சின்ன மொதலாளிங்க செரியான சந்தேகம் புடிச்சவனுங்க போல்ருக்குப்பா...'' என்று சலிப்புடன்.

3

அதற்கு கந்தப்பன் ''என்ன இருந்தாலும் அவுங்க பண்ணாடிங்க இல்லியா? நல்லா ஓசனப் பண்ணித்தான் எதையும் செய்வாங்க.'' என்று சொன்னார்.

உடனே மாதேசு ''நல்லா ஓசனப் பண்ணுனாங்க. தாம் பேண்ட பீய தானே எந்திரிச்சி சந்தேகமா திரும்பி பாப்பானுங்க போல்ருக்கு...'' என்று சொல்ல, கந்தப்பன் முகம் சுளித்தார்.

இதைப் புரிந்துக் கொண்ட சந்துரு, மாதேசை மேலும் பேச விடாமல் கண் சாடைக் காட்டி தடுத்தான். அந்த சமயத்தில், ஏனோ அவனுக்கு இன்று மதியம் மாதேசும், பொன்னியும் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டது நினைவுக்கு வந்தது.

பேட்டை சிறு முதலாளிகளைப் பார்த்துப் பேசிய விவரத்தை கந்தப்பன் வீட்டில் துண்டறிக்கை தயாரிக்கும் பணியில் இருந்த தோழர் அனுராதாவிடம் மூவரும் வந்து உடனே சொன்னார்கள். அவர் தொழிற்சங்கம் கட்டிய விசயத்தை சரியான நேரத்தில் முதலாளிகளிடம் சொன்னதற்காக சந்துருவைப் பாராட்டினார்.

பிறகு, தான் தயாரித்த துண்டறிக்கையில் கூட்டுக் கூட்டம் நடைபெறப் போகும் தேதி, நேரம், இடம் போன்றவற்றைச் சேர்த்தார். அதே நேரத்தில் பெரிய பேக்டரி தொழிலாளர்களிடம் வேலை நிறுத்தம் பற்றிப் பேசப் போயிருந்த மச்சக்காளையும், பச்சையப்பனும் வந்து அங்கே வந்து சேர்ந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் தோழர் அனுராதா ''போன காரியம் என்னாச்சி?'' என்று விசாரித்தார். தோழர்கள் அதற்கு சாதகமான பதிலையே கூறினார்கள். ''ஒண்ணும் பிரச்னையில்ல தோழர். விசயத்த சொன்னவுடனே தொழிலாளிங்க அவுங்க ஓட்ற தறிய நிறுத்திட்டு பேக்டரிய வுட்டு வெளிய வந்துட்டாங்க'' என்றார் மச்சக்காளை.

அதற்கு அனுராதா ''தொழிலாளிங்க யாரும் மத்தவுங்களுக்காவ நாம்ப ஏன் ஸ்ட்ரைக் செய்யணும்னு கேட்கலியா?'' என வினவ, அதற்கு பச்சையப்பன் ''அதெல்லாம் ஒண்ணும் கேட்கல தோழர். நாங்களே சின்ன மொதலாளிங்க கிட்ட வேலை செய்ற தொழிலாளிங்கள நெனச்சிப் பரிதாபப் பட்டோம் அப்புடீன்னு தான் சொன்னாங்க'' என்று கூறினார்.

அதை அங்கிருந்த பொன்னி கேட்டு சந்தோசப்பட்டாள்.

அனுராதா சிற்பியை கூட வைத்துக் கொண்டு தான் தயாரித்த துண்டறிக்கையை சந்துருவிடமும், மற்றவர்களிடமும் காட்டினார். குண்டு குண்டாய் அழகான கையெழுத்தில் நேர்த்தியாய் இருந்தது அந்த துண்டறிக்கை.

4

அதில், எல்லா விபரங்களும் அடங்கியிருந்தது. சிறு முதலாளிகளை நசுக்கும் பெரிய முதலாளிகளின் அதிகாரப் போக்கு. அவர்களுக்கு எதிராய் வேலை நிறுத்தம் செய்திருப்போருக்கு விசைத்தறி

தொழிலாளர்கள் ஆதரவு தர வேண்டிய அவசியம். மேலும், புதிதாய் கட்டப்பட்டுள்ள தொழிற்சங்கத்துக்கான அறிவிப்பு. அதன் நிர்வாகிகள் யார், யாரென பெயர்கள் அறிவிப்பு. பேட்டையில் நடக்கும் சிறு முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களின் கூட்டுக் கூட்டம் அதன் தேதி மற்றும் இடம் பற்றிய விபரங்கள் என.

வாசகங்களும் வெகு அருமையாய் இருந்தன. தோழர்கள் சந்தோசப் பட்டனர்.

கூடவே,சந்துரு ''ஒங்க கையெழுத்து பிரமாதமா இருக்குது தோழர்'' என்று பாராட்ட, அதற்கு அனுராதா சிரித்து விட்டு ''ஐயே... இது ஒண்ணும் எங் கையெழுத்து இல்ல சந்துரு. அது கோழி கிறுக்குன மாதிரியிருக்கும். சிற்பி தோழர் தான் இவ்வளவு அழகா எழுதுனாரு...'' என்றார்.

அதைக் கேட்டு ஆளாளுக்குப் பாராட்ட, ஏதோ ஒருவிதத்தில் தான் அவர்களுக்கு பயன்பட்டதற்காக சிற்பி மகிழ்ந்தான்.

தயாரான துண்டறிக்கையை திருத்தணிக்கு கொண்டு போய் அச்சடித்து வர ஏழுமலையும், ஓபுளியும் கூட தயாராய் இருந்தார்கள். ஆனால், அச்சகத்துக்கு தர பணம் வேண்டுமே. ஆளாளுக்கு தலையை சொறிந்தார்கள். ஒரு வாரமாய் வேலையில்லாமல் இருந்தால் எங்கிருந்துக் கிட்டும் பணம். சந்துரு, மச்சக்காளையிடமும், பச்சையப்பனிடமும் கேட்டான். அவர்கள் ஒரே மாதிரி ''நேத்துதாந் தம்பி ஊருக்கு பணம் அனுப்சி வெச்சோம்.'' என்றார்கள். அப்போது கந்தப்பனின் மனைவி முன் வந்து தன் மூக்குத்தியை கழட்டித் தருகிறேன். அதை விற்று பணம் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். கேட்ட எல்லோரும் பிரச்னை தீர்ந்தது என்று சந்தோசமாக அனுராதா அதை ஏற்க மறுத்தார்.

சந்துரு வியப்பாய் ''ஏன் தோழர்?'' என்று கேட்டான்.

அனுராதா ''கையில வெண்ணைய வெச்சிக்கிட்டு யாராவது நெய்க்கி அலைவாங்களா?'' என்று ஒரு பழமொழியை புதிர் போல கூறி விட்டு அவரே அதை விடுவித்தார். ''இப்ப நாம்ப வேலை நிறுத்தம் செய்றது மொதலாளிங்களுக்காவத் தானே... அப்புறம் எதுக்கு காசுக்கு கஷ்டப்படணும்? அவுங்க கிட்டயே போய் நிதி கேளுங்க.'' என்றார்.

5

அது அருமையான யோசனையாய் அனைவருக்கும் பட்டது. பொருளாளர் ஏழுமலை தலைமையில் ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு எல்லோரும் சிறு முதலாளிகளிடம் வசூல் வேட்டைக்கு கிளம்பினார்கள்.

ஆனால், சந்துரு மட்டும் வேட்டையில் சிக்கப் போவது எலியா? புலியா? என்பது தெரியாமல் குழப்பமானான். ஏனெனில், சிறு முதலாளிகள் சமுக்காளத்தில் வடிகட்டும் கஞ்சன்கள். என்ன தரப் போகிறார்களோ தெரியவில்லை. இருந்தாலும் முயற்சித்துப் பார்ப்பதில் தவறில்லை.

ஆனால், அடுத்த ஒரு மணி நேரத்தில் சில ஆயிரம் ரூபாய்கள் தேறி விட்டது. தன் காரியம் என்றவுடன் எச்சில் கையால் காக்கை ஓட்டாத ஒரு சில முதலாளிகள் கூட ஓரளவுக்கு நிதி கொடுத்தார்கள். தெரியாமலா சொலாந்தரம் சொன்னார்கள் 'தனக்குத் தனக்குன்னா ...டுக்கும் களை வெட்டுமாம்!!' என்று.

கிடைத்தப் பணத்தில் துண்டறிக்கை அச்சிட தேவையானதை எடுத்துக் கொண்டு சற்றும் தாமதிக்காமல் ஏழுமலையும், ஓபுளியும் திருத்தணிக்குப் புறப்பட்டார்கள். கூட்டுக் கூட்டத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் தான் அவகாசம் இருந்தது.

எனவே, சூழ்நிலையின் அவசரம் கருதி அவர்களை எவ்வளவு நேரமானாலும் காத்திருந்து துண்டறிக்கையை அச்சிட்டு வாங்கி வர சந்துரு அறிவுறுத்தி அனுப்பி வைத்தான்.

இரண்டு நாட்கள் இடைவெளியில், பேட்டையில் உள்ள பள்ளிக்கூடத்தில் விசைத்தறி தொழிலாளர்கள், சிறு முதலாளிகள் அடங்கிய கூட்டுக் கூட்டம் நடத்த ஏற்பாடாகியிருந்தது.

அன்று, பள்ளி விடுமுறை என்பதால் கூட்டம் நடத்த வசதியாய் போய் விட்டது. மாணவர்கள் அமரும் பலகைகள் அப்புறப்படுத்தப் பட்டு, கூட்டத்துக்கு வந்தவர்கள் சரிசமமாய் அமர தரையில் பெரிய பெரிய பவானி சமுக்காளங்கள் வாடகைக்கு எடுத்து வரப்பட்டு விரிக்கப்பட்டது.

காலை பத்து மணிக்குத்தான் கூட்டம் என்றாலும், விசைத்தறி தொழிலாளர்கள் பலர், தொடக்கத்துக்கு முன்னரே வெகு சீக்கிரம் பள்ளிக்கூடத்தில் விரிக்கப்பட்ட சமுக்காளங்களில் வந்து உட்கார்ந்திருந்தனர். பேட்டை தொழிலாளர்கள் மட்டுமல்ல, அதன் அருகாமையில் உள்ள நகரம், குப்பம், சத்தியவாடா, பொன்பாடி, புத்தூர், நின்ற, பூதிப்பட்டு என பல ஊர்களில் இருந்ததும் தறிக்காரர்கள் வந்து குவிந்திருந்தனர்.

6

கூட்ட ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டிருந்த மாதேசு, மச்சக் காளை, பச்சையப்பன், ஏழுமலை, ஓபுளி போன்றவர்கள், அதைப் பார்த்து வாய்பிளந்து திகைத்துப் போனார்கள். அதே சமயம் அவர்களது ஒவ்வொருவர் மனதிலும் உற்சாகப் பெரு வெள்ளம்.

தொழிலாளர்களின் இந்த அதீத ஆர்வத்துக்கு காரணமிருக்கிறது. அவர்களெல்லாம் தமிழகத்தின் பல ஊர்களில் இருந்து இங்கு வந்து வேலை செய்பவர்கள். இது, ஏதோ இன்று நேற்றல்ல, சில தலைமுறைகளுக்கு முன்பிருந்தே மேற்கண்ட விசைத்தறி மையங்களுக்கு தறியோட்ட வந்தவர்கள் தான் அவர்கள்.

இதில், அப்பா, மகன் என்று இங்கேயே நிரந்தரமாய் தங்கி விட்டவர்களை விடவும், அவ்வப்போது வந்து வேலை செய்து விட்டு தங்கள் சொந்த ஊருக்குப் போய் வருபவர்களும் நிறைய இருக்கிறார்கள்.

இவர்களில் யாருக்கும் உள்ளூர் முதலாளிகளும் சரி, இந்த மாநில அரசாங்கமும் சரி இதுவரை எந்த அங்கீகாரமும் கொடுத்ததில்லை. அவர்களின் கணக்கில் தொழிலாளர்கள் அனைவருமே வந்தேறிகள் தான். அதனால், அரசால் முறைப்படி வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் அட்டை என்று எதுவுமே இவர்களுக்குத் தரப்படவில்லை.

இத்தனைக்கும், விசைத்தறி தொழிலாளர்களை நம்பித்தான் பல ஊர்களின் பொருளாதாரமே இருக்கிறது. அவர்களின் வருமானத்தில் விசைத்தறி முதலாளிகள் மட்டும் பிழைப்பு நடத்த வில்லை, உணவு விடுதிகள், மளிகைக் கடைகள், துணிக் கடைகள், டீக்கடைகள், சினிமா தியேட்டர் வைத்திருப்பவர்கள், முக்கியமாய், அரசு மதுபானக் கடைகளுக்குக் கூட தொழிலாளர்களால் தான் வரும்படி.

இப்படி அனைத்துத் தரப்பாலும் சுரண்டப்படும் தொழிலாளர்களுக்கு ஏதிலிகள் வாழ்க்கையே விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவுக்கும் சொந்த ஊருக்கு திரும்ப முடியாத, பள்ளிப் பாளையம், கொமாரபாளையம், பவானி, ஜலகண்டாபுரம் போன்ற இன்னும் சில ஊர்களில் முதலாளிகளிடம் கடன்பட்டு தங்கள் குடும்பத்துடன் ஓடி வந்த பல தொழிலாளர்கள் தங்களுக்குள்ளேயே திருமண சம்பந்தம் கூட வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பிள்ளைகளும் கூட இங்குதான் படிக்கின்றன. இத்தனை கொடுமை களுக்கு நடுவே ஒரு சின்ன ஆறுதல் இங்குள்ள அரசுப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது.

7

எனவே, தங்களைப் போலவே வெளியூரிலிருந்து இங்கு வந்த சந்துரு போன்றவர்கள் தொழிற்சங்கம் அமைத்திருப்பது அவர்களை எழுச்சியுறச் செய்திருந்தது.

அது மட்டுமல்லாது, இதுவரை பெரிய முதலாளிகளோடு சேர்ந்துக் கொண்டு தங்களைப் புழுவைப் போல நடத்திய சிறு முதலாளிகளோடு சரிக்கு சமமாய் அவர்கள் அமரப் போகிறார்கள் என்பதும் பெருமை அடையச் செய்திருந்தது. அந்த கண் கொள்ளாக் காட்சியைக் காணவும் தொழிலாளர்கள் வெகு சீக்கிரம் ஆர்வமாய் வந்து கூடியிருந்தார்கள்.

நேற்று மாலை தான் துண்டறிக்கை ரொம்ப தாமதமாய் அச்சகத்தி லிருந்து வந்திருந்தது.

பல மணி நேரம் தவமிருந்து ஏழுமலையும், ஓபுளியும் வாங்கி வந்திருந்தார்கள். அதனால், அவசர அவசரமாய் தான் விநியோகிக்க முடிந்தது. பத்துக்கும் மேற்பட்ட சைக்கிள்களில் போய் தொழிலாளர் கள் பல பகுதிகளிலும், ஊர்களிலும் அதை பொதுமக்களிடம் கொடுத்தார்கள்.

அதற்குள், இவ்வளவு கூட்டம் சேர்ந்திருப்பது தோழர்களுக்கு சந்தோச மாயிருந்தது. அதே சமயம் இயக்கத்தின் தொடர்பில் இருந்த கூலி விவசாயிகளான அனுமந்துவும், கொண்டையாவும் தங்களுடன் கொஞ்சம் பேரை அழைத்து கொண்டு வந்திருந்தனர்.

திட்டமிட்டப்படி பத்து மணிக்கு கூட்டு நடவடிக்கை குழுவின் கூட்டம் பள்ளிக்கூடத்தில் தொடங்கியது.

முன் வரிசையில் சந்துரு அமர்ந்தான்.

அவனைத் தொடர்ந்து மாதேசும், மச்சக்காளையும் அவர்களை அடுத்து கொண்டையாவும், அனுமந்துவும் உட்கார்ந்தார்கள். இடதுபுறத்தில், தேவராசு, கருணாகரன் மற்றும் சிறு விசைத்தறி முதலாளிகள் மற்றும் அவர்களின் சங்கத்தினர் அமர்ந்தார்கள். சில நிமிடங்களில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் சரிப் பார்க்கப்பட்டது. அதன் படி செயலாளர் கருணாகரன் தரையில் உட்கார்ந்து வாக்கிலேயே கூட்டுக் கூட்டத்துக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று விட்டு தங்கள் போராட்டத்துக்கு ஆதரவு தர . முன் வந்த தொழிலாளர்கள் சங்கத்துக்கு நன்றி கூறி விட்டு முதலில் சந்துருவை பேச சொன்னார்.

8

அவனும் தன் தொண்டையை செருமிக் கொண்டு பேச முனைய, பள்ளிக்கூடத்தின் உள்ளே, உட்கார இடம் கிடைக்காமல் அதனைச் சுற்றியுள்ள சன்னல்கள் வழியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் சத்தமிட்டார்கள்.

''தம்பி, எந்திரிச்சி நின்னுப் பேசுப்பா...''

''ஆமாப்பா... நீ பேசுறது எல்லார் காதுலயும் கணீர்னு வுழணும்''

''எந்திரிச்சி நில்லுப்பா...''

''எந்திரிப்பா...''

அந்த அன்புக் கட்டளையை மீற முடியாமல் சந்துரு மெல்ல புன்னகைத்த படியே எழுந்து நின்று சுற்றிலும் ஒரு முறை பார்த்து விட்டு சத்தமாய் பேச ஆரம்பித்தான்.

''இன்னிக்கி, நம்ப விசைத்தறி தொழிலாளிங்க எல்லாத்துக்கும் ஒரு அருமையான நாள். சொந்த ஊரை வுட்டு வந்து ஆந்திராவுல நாம்ப எல்லாரும் அனாதைங்க மாதிரி திரிஞ்சிக்கிட்டு இருக்குறம். இந்த ஊர்ல நம்பள யாரு என்ன செஞ்சாலும், கேக்குறதுக்கு நாதி கெடையாது. கண்ட எடத்துல பிச்சைக்காரன விட கேவலமா படுத்துக்கிட்டு, குளுர்லயும், மழையிலயும், கொசுக்கடிப்பட்டு, காச்சல்

வந்து யானைக்கால் வியாதி வந்து கொஞ்சங் கொஞ்சமா செத்துக் கிட்டு இருக்குறம். இது வரிக்கிம் தொழிலாளிங்கள ஏறெடுத்தும் பாக்காத தறி மொதலாளிங்க இன்னிக்கி நம்பள மதிச்சு ஒங்க ஆதரவு எங்களுக்கு வேணுமுன்னு நெனைக்குற அளவுக்கு வந்திருக்குறாங் கன்னா, அதுக்கு காரணம் நாம்ப ஒரு விசைத்தறி தொழிலாளர் சங்கத்த கட்டியிருக்குறம். அந்த சங்கத்த இனிமே நாம்ப உயிரா நெனைக் கணும். கொஞ்ச நாளைக்கி முன்னாடியே நானு, மாதேசு, கந்தப் பண்ணன், ஏழுமலை, மச்சக்காளை, பச்சையப்பன், ஓபுளின்னு ஏழு பேரு சேர்ந்து தொழிலாளர் சங்கத்தக் கட்டிட்டம். ஆனா, சில காரணங்களால நாங்க வெளிப்படையா அறிவிக்கல. இப்ப சூழ்நிலமை மாத்தம் வந்திருக்குது...''

அதைக் கேட்டதும் தான் தாமதம், தொழிற்சங்கத்துக்கு வாழ்த்து முழக்கம் கூடியிருந்த தொழிலாளர்கள் மத்தியில் இருந்து வெடித்துக் கிளம்பியது. ஒருவர் மாற்றி மற்றவர் வெகு நேரம் முழக்கத்தை விடாமல் தொடர்ந்தார்கள் உழைக்கும் மக்கள்.

சட்டென்று இடி, மின்னலுடன் சோவென்று அடைமழை பெய்தது போல இருந்தது.

9

அதைக் கேட்டு தேவராசும், கருணாகரனும், கூட்டத்தில் தொழிலாளர்களுடன் கலக்காமல் சற்று விலகியே அமர்ந்திருந்த மற்ற உள்ளூர் சிறு முதலாளிகளும் அரண்டு போனார்கள்.

இதுவரை தங்கள் முன்னால், அதிர்ந்துப் பேசவே அஞ்சும் வந்தேறிகள் துணிந்து விட்டார்களே என ஆதங்கப்பட்டார்கள். நாம் இவர்களுக்கு ரொம்ப இடம் கொடுத்து விட்டோமோ என்ற சிந்தனை அவர்களுக்கு வராமல் இல்லை. என்றாலும், பெரிய முதலாளிகளை எதிர்த்து நிற்க இவர்களை விட்டால் வேறு நாதியில்லை. எனவே, எதுவும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் உட்கார்ந்திருந்த இடத்திலேயே திடீரென மூலம் வந்தவர்களை போல நெளிந்தார்கள். அந்த கணத்திலிருந்து தொழிலாளிகள் மேல் அவர்களுக்கிருந்த இளக்காரம் விலகி, இனம் புரியாத அச்சம் தோன்ற ஆரம்பித்து விட்டது. திருடனுக்கு தேள் கொட்டியதைப் போல ஒருவருக் கொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இதற்கு நேர் எதிரான மனநிலையில் தொழிலாளர்கள் இருந்தனர். இந்த ஊருக்கு வந்ததில் இருந்து இப்படியொரு மகிழ்ச்சியான சூழலை அவர்கள் அனுபவித்ததில்லை. ஏதோ தங்கள் கைகளில் இருந்த கொடுமையான விலங்கு இற்று உதிர்ந்து, கீழே விழுந்து விட்டதைப் போல அவர்கள் உணர்ந்தார்கள். அந்த விடுதலை பாவனை அனைவரது முகத்திலும் தெரிந்தது.

பேட்டையில் முதன் முறையாக காலக் காற்று உழைக்கும் மக்களுக்கு சாதகமாய் வீசத் தொடங்கியிருந்தது.

தொடர்ந்த முழக்கங்களால் சற்று நிதானித்திருந்த சந்துரு மேலும் தொடர்ந்தான் ''போன ஒரு வாரம் பத்து நாளா கூலிக்கி நெசவு நெய்ற சின்ன தறி மொதலாளிங்க, பெரிய மொதலாளிங்கள எதுத்து செய்ற ஸ்ட்ரைக் நியாயமானது. அதனால தான் நம்ப சங்கம் அவுங்க ஸ்ட்ரைக்க ஆதரிக்குது. இங்க வந்து இருக்குற தறி மொதலாளிங்க யாரும் டாட்டா, பிர்லா, அம்பானிங்க இல்ல. பொண்டாட்டி நகைய நட்ட வித்து, வட்டிக்கு கடன் வாங்கி தொழில் செய்யுற குட்டி மொதலாளிங்க தான். பெரிய மொதலாளிங்க வளர்ந்த பெருச்சாளிங் கன்னா, இவுங்க, சுண்டெலிங்க மாதிரின்னு சொல்லலாம். ஆனா, இதுகளும் லேசுப்பட்டதில்ல. நம்ப உழைப்புங்கிற சோத்த திருடித் தின்னுக்கிட்டு திரியுதுங்க தான். ஆனா, இப்ப பெரிய பெருச்சாளிங்கள எதுக்க முடியாம தெணறுதுங்க. அந்த பெருச்சாளிங்க நம்பளுக்கும் எதிரி, அதனால தான் இவுங்களுக்கு நாம்ப ஆதரவு கொடுக்குறோம். இவுங்கக் கிட்ட நாம்ப பேச வேண்டிய கோரிக்கைங்க நெறையா இருக்குது. மொதல்ல, இந்த ஸ்ட்ரைக்க ஒரு முடிவுக்கு கொண்டாந் துட்டு, அதை பிறகு பேசுவோம்.''

10

அவன் பேச்சுக்கு பலத்த வரவேற்பு இருந்தது. அதற்கு சாட்சியாய் பெரிய அளவில் கை தட்டல் எழுந்தது.

அடுத்து தேவராசு மெல்ல சிரித்தபடியே ஆரம்பித்தார். ''சந்துரு தம்பி படிச்சவரு, புத்திசாலின்னு எனக்கு தெரியும். ஆனா, இவ்வளவு நல்லா பேசுவாருன்னு இப்பத்தான் தெரிஞ்சுக் கிட்டேன். அவுரு என்னை மாதிரி சின்ன மொதலாளிங்கள சுண்டெலிங்கன்னு சொன்னாரு. அத நாங்க ஒரு பேச்சுக்கு ஒத்துக்கிட்டாலும் ஏதோ நாலு பருக்கைய திங்கிற வீட்டு எலிங்கன்னு நெனச்சுக்குங்க. நாங்க இப்ப

ஒரு பரிதாபமான நெலமையில இருக்குறோம். எங்கள இந்த இக்கட்டான சூழ்நிலைல ஆதரிக்க முன் வந்த தொழிலாளிங்களுக்கு மனமார்ந்த நன்றி. நாங்க நெருப்புல நின்னு தவிச்சுக் கிட்டு இருக்குறோம். அதுல இருந்து எரிஞ்சு சாம்பலாகாம நீங்க தான் எங்கள காப்பாத்தனும். ஒங்களுக்கு எங்கக்கிட்ட சில கோரிக்கைகள் இருக்குதுன்னு தம்பி சந்துரு சொல்லிச்சி. இந்த சுண்டெலிங்க கிட்ட நீங்க என்ன எதிர்பாக்கறீங்கன்னு எனக்குத் தெரியல. இருந்தாலும், இதுக்கு முன்னாடி இது மாதிரி எந்த கோரிக்கையும் யாரும் கேக்கல, செரி, அதுப்பத்தி இந்த ஸ்ட்ரைக் முடிஞ்சதும் நாம ஒக்காந்து பேசுவம்'' என்று.

அவரது பேச்சுப் பட்டும் படாமல் இருந்ததை சந்துருவும், மற்ற சங்க முன்னோடிகளும் உணர்ந்தார்கள். சிறு முதலாளிகள் களவாணி எலிகள் என்பது தெளிவாயிற்று. இந்த பெரிய முதலாளிகளுக்கு எதிரான ஸ்ட்ரைக் வெற்றிப் பெற்றாலும் கூட, தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்காக இவர்களிடம் கடுமையான ஒரு போராட்டத்தை நடத்தத் தான் வேண்டியிருக்கும்.

தொழிலாளிகளை வந்தேறிகள் என்று கேவலமாய் பேசும் இவர்கள் அவ்வளவு எளிதில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றி விட மாட்டார்கள். இந்த யுத்தத்தை தொடர்ந்து அடுத்த ஒரு யுத்தம் நிச்சயம் இருக்கும்.

இதை விட அதுதான் கடுமையாகவும் இருக்கும் என்று தோன்றியது. எனவே, அச்சமும், கவனமும் கண்டிப்பாய் தேவை.

அடுத்து மாதேசு பேச எழுந்தான். அவனுக்கு சுத்தமாய் பேச வரவில்லை.

தரையைப் பார்த்து ஏதோ தொலைத்ததை தேடும் பாவனை செய்தான். பிறகு, தலையை சொறிந்தான். நிமிர்ந்து மோட்டு வளையைப் பார்த்தான்.

11

கூட்டத்தில் இருந்து இதைப் பார்த்த ஓபுளி பொறுமையிழந்து அவன் பாணியில் கத்தினான். ''இவனே... என்னய்யா செய்றே?''என்று.

''எனக்குப் பேச வரலப்பா...'' மாதேசு முனகினான். ஆனால், அது தெளிவாய் கேட்டது.

அதை செவி மடுத்த பொன்னி அடிதடின்னா மட்டும் நல்லா வரும்.'' என்று சத்தம் போட்டாள்.

அவ்வளவுதான் கூட்டம் களேரென்று சிரித்தது. மாதேசு வெட்கம் தாளாமல் அடுத்து ஒன்றுமே பேசாமல், உட்கார்ந்து விட்டான்.

மகளின் குறும்பை ரசித்து அவள் தாயாரும் சிரிக்க, கந்தப்பன் மட்டும் அதிர்ச்சியடைந்த முகபாவனையைக் காட்டினார்.

அப்போது கூட்டத்திலிருந்த சந்துருவின் முதலாளி கோகிலா அம்மாள் தான் பேச விரும்புவதாய் சொல்லி விட்டு யாருடைய அனுமதியும் பெறாமல் அந்த நடுத்தர வயதுப் பெண்மணி தைரியமாய் எழுந்து நின்று பேசினார். அதை அங்கிருந்த அவர் மகள்கள் இருவரும் பெருமையாய் பார்த்தார்கள்.

''இந்தப் பசங்க சந்துருவும், மாதேசும் அஞ்சாறு மாசமா எங்கூட்ல தறியோட்டுதுங்க. நானு இவுங்கள என்னமோன்னு நெனச்சேன். இவ்வளவு நல்லப் பசங்களா இருக்கும்னு கள்ளிப்பாளையத்துக் காரங்கள இவுங்க ஒதச்சு முடுக்கி வுடுற வரிக்கிம் எனக்குத் தெரியல. ஒரு பொட்டப் புள்ள மேல கண்டவன் கைய வெச்சுட்டான்ன வுடனே அவுங்களுக்கு வந்த கோவத்தைப் பாத்துத்தான் நானே மனசு மாற்னேன். நானும், வயசுக்கு வந்த ரெண்டுப் பொட்டப்புள்ளைங்கள வெச்சிருக்குறேன். எம் புருசனுக்கு அஞ்சாறு வருசமா புத்தி சுவாதீனமில்ல. பீப் பேண்டா கழுவக் கூடத் தெரியாது. ஆறு மாசத்துக் கொழந்தை மாதிரி தான் அவுரு. கோகிலா, வயசுப் பசங்களுக்கு எதுக்கு அவ வூட்ல தறி வுட்றுக்கான்னு தெரியுமா? அவனுங்கள இவ வெச்சிருக்குறான்னு இந்த ஊர்ல பல பேரு எங் காதுப் படவே பேசியிருக்குறாங்க. தறிக்கு வேற ஆள் கெடைக்காமத்தான் மனசக் கல்லாக்கிக் கிட்டு இந்த பசங்கள என்னூட்ல வேலைக்கி வெச்சிருந்தேன். அதுங்க பாவம், தாய், தவப்பன வுட்டுட்டு என்ன தலையெழுத்தோ, ஊரு வுட்டு வந்து இங்க வேலை செய்துங்க. இன்னிக்கி ஒங்க எல்லாரு முன்னாடியும் சொல்றேன். அதுங்க ரெண்டும் நாம் பெறாத புள்ளைங்க. இந்த ஊர்காரங்க யாரு என்னா நெனச்சாலும் சரிதான்...''

12

கோகிலா அம்மாள் உணர்ச்சிகரமாய் பேசி விட்டு அழத் தொடங்கி விட்டார்.

அந்த நிமிடம் வரை சந்துருவும், மாதேசும் ஊரில் அவரையும், தங்களையும் இணைத்து இப்படியெல்லாம் உள்ளூர் சிறு முதலாளிகள் பேசியிருக்கிறார்கள் என்பதை அறியாதவர்கள். எனவே, அதிர்ந்துப் போனார்கள். அந்த நேரத்தில் தான் கோகிலா அம்மாள் தன் மனதிலிருப்பதைக் ஊரார் முன்னால் கொட்டவே, இந்த கூட்டத்தில் பேச விரும்பியது சந்துருவுக்கு தெரிய வந்தது.

இதே போலத்தான் சாப்பாட்டுக் கடைக்காரி அங்கம்மாளையும், அவருடன் இருக்கும் இளைஞனையும் இணைத்து மற்றவர்கள் தவறாகப் பேசுகிறார்களோ என்ற யோசனையும் அவனுக்கு வராமல் இல்லை.

மேலும் தொடர்ந்து கோகிலா அம்மாள் சொன்னார் ''இந்த ஊர்ல கல்யாணமாகாத வெளியூர் பசங்களுக்கு யாரும் வூடு தர்றதில்ல. ஆனா, நா சந்துருவுக்கும், மாதேசுக்கும் வூடு தர்றேன்.'' என்று அதே வேகத்தில் அவர் அமர்ந்தார்.

சிறு முதலாளிகள் அனைவரும் கோகிலா அம்மாளின் பேச்சில் செருப்படிப் பட்டதைப் போல் உணர்ந்தார்கள். கூட்டுக் கூட்டத்தில் கனமான இறுக்கம் சூழ்ந்தது.

அதை கலைக்கும் விதமாய் தேவராசு, சந்துருவிடம் கேட்டார் '' அடுத்து நாம்ப என்ன செய்லாம்? எங்களுக்கு ஒரு ஓசனையும் ஓடல...'' என்று.

அதற்கு சந்துரு தெளிவாய் பதில் சொன்னான் ''அண்ணா... ஒங்க சின்ன மொதலாளிங்களுக்கு ஆதரவா நாங்க ஸ்ட்ரைக் செஞ்சது பெரிய மொதலாளிங்களுக்கு கண்டிப்பா அதிர்ச்சியா இருக்கும். இனுமே நாம்ப என்ன செய்யணும்னு அவுங்க அடுத்து எடுக்கப்ப போற நடவடிக்கையைப் பாத்துட்டு முடிவு செய்லாம்.'' என்று.

அவன் கூறியது நியாயமாய் பட்டதால் அதற்கு மேல் யாரும் பேச விரும்பவில்லை.

எனவே, அத்துடன் கூட்டத்தை முடித்துக் கொண்டு அனைவரும் எழுந்து நின்றார்கள்.

பிறகு, சின்ன சலசலப்புடன் கலைந்தார்கள். சந்துரு, மாதேசு போன்ற சங்க முன்னோடிகள் அந்த பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வர, வெளியூர் தொழிலாளர்கள் பலர் அவர்களை சூழ்ந்துக் கொண்டு ஆளாளுக்கு கை கொடுத்தார்கள்.

13

''நல்ல காரியம் பண்ணிக்கப்பா... ஒங்களால வந்தேறிப் பட்டத்தோட இருக்குற என்ன மாதிரி தொழிலாளிங்களுக்கு விடிவு காலம் கெடைக்கணும்பா.''

என்று நீண்ட நாட்களாய் இந்த ஊரிலிருந்து அவதிப்படும் ஒரு நடுத்தர வயதுக்காரர் தன் பெருத்த யானைக்காலுடன் சந்துருவைப் பாராட்ட, அவன் நெகிழ்ந்த போதும் இவர் போன்றவர்களின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போகாமல் இருக்க வேண்டுமே என கவலைப்பட்டான்.

அத்தியாயம்

8

1

அதே நேரம், நகரத்தில் உள்ள ஜவுளி உற்பத்தியாளர்கள் எனப்படும் பெரிய முதலாளிகளின் கூட்டம் அவர்களது பகட்டான குளிர்சாதனம் செய்யப்பட்ட மினி அரங்கத்தில் நடைபெற்றது. பெரிய முதலாளிகளது முகங்கள் இருளோடிப் போயிருந்தன. யாரும், இப்படியொரு சூழ்நிலை உருவாகுமென்று கனவிலும் நினைக்கவில்லை. தங்களுக்கெதிராய், உள்ளூர் சிறுமுதலாளிகள் வேலை நிறுத்தம் செய்ததோடு சரி, வேறெந்த நிர்ப்பந்தமும் செய்யவில்லை. ஆனால், வெளியூரிலிருந்து இங்கு வந்து வேலை செய்பவர்கள் அவர்களுக்கு ஆதரவாய் கொடிப் பிடித்து நிற்கிறார்களே? இப் போது என்ன செய்வது? வந்தேறிகளை திரும்பப் போங்கள் என்று துரத்துவதா? இல்லை, சிறுமுதலாளிகளின் கோரிக்கை களை ஏற்றுக் கொள்வதா? என்பதை ஆலோசிக்கத் தான் பெரிய முதலாளி களும் அவர்களிடைய ஆதரவாளர்களும் ஒன்று கூடியிருக்கிறார்கள்.

உண்மையில் பெரிய முதலாளிகள் என்ப வர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய

எண்ணிக்கையில் உள்ள சிறுபான்மையினரே. குறிப்பாய் சொல்ல வேண்டுமானால், இந்த ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு தலைவர் அண்ணாமலை என்பவர் தான்.

இவரைத் தொடர்ந்து திருவேங்கடம் செயலாளர். அடுத்து, கனகாசலம் பொருளாளர். இவர்கள் அனைவருமே பெரிய முதலாளிகள் தான் என்றாலும், அண்ணாமலை பலகோடிகளுக்கு அதிபதி. இவருக்கு நகரத்தில் மட்டுமல்ல, ஆந்திராவிலேயே புத்தூர் மற்றும் தமிழ் நாட்டில் பள்ளிப்பட்டு, சோளிங்கர், அதைத் தொடர்ந்து சேலம் போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கில் விசைத்தறிகள் சொந்தமாக ஓடுகின்றன. அவை அனைத்திலும் காட்டன் சர்ட் துணிகள் நெய்யப்படுகின்றன. இந்த துணிரகங்களுக்கான மார்க்கெட் அவருக்கு வெளிநாடுகள் தான்.

அங்குள்ள பெரிய ஜவுளிக் கடைகளில் ஆர்டர் எடுத்து சட்டைத் துணிகளை சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களில் ஆயத்த ஆடைத் தொழிலாளர்களை வைத்து பல்வேறு அளவுகளில் தைத்து ரெடிமேட் ஆடைகளாய் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்.

2

உலகின் சில முன்னணி ஏகாதிபத்திய நிறுவனங்கள் இந்த ஆடை களில் தங்கள் பிராண்டுகளைப் பொறித்து அகிலம் முழுக்கவே கொள்ளை லாபத்தில் விற்கின்றன. எனவே, அவர் வெளிநாட்டு முதலாளிகளுக்கு சேவை செய்யும் இந்திய தாசானு தாசனாய் வலம் வருகிறார்.

பல நூற்பாலைகள் அவருக்குச் சொந்தமாய் இருக்கின்றன. கூடவே, சாயப்பட்டறைகள், துணிகளைப் பதனிடும் சைசிங் மில் எனவும் உள்ளன. துணிகளுக்குத் தேவையான பருத்தியை விவசாயிகளிட மிருந்து ஆட்களை வைத்துக் கொள்முதல் செய்வது, பருத்திக் கூட்டுறவு சொசைட்டிகளில் அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு அங்கும் குறைந்த விலையில் பருத்தி வகைகளை வாங்குவது என அவரது சாம்ராஜ்யம் வலுவானது.

இப்படிப்பட்டவரைத் தலைவராய் கொண்ட ஜவுளி உற்பத்தியாளர்கள் அமைப்பிடம் தான் பேட்டை, நகரம் விசைத்தறி தொழிலாளர்கள் ஒரு புரட்சிகர கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் மோதத் தொடங்கி யிருக்கிறார்கள். வெறும் கையை மூலதனமாய் கொண்டவர்கள்,

செல்வாக்கு மிக்க பெரிய முதலாளிகளை வெல்வது சாத்தியமா? என்ற கேள்வி தற்போது எழுந்திருக்கிறது.

அண்ணாமலை தனது வெளிநாட்டுக் காரில் ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு வந்திறங்கினார்.

அவருக்கு ஏற்கனவே, அங்கு கூடியிருந்த மற்ற முதலாளிகள் எழுந்து நின்று வணக்கம் செலுத்தி வரவேற்றார்கள். அண்ணாமலை அதை ஏற்றுக் கொண்டு தலையசைத்தார்.

அவருக்கு அறுபது வயதிருக்கும். அது தெரியாமல் இருக்க வெளி நாட்டு டை அடித்திருந்தார். பளிச்சென்ற முகச்சவரத்தில் பத்து வயது குறைந்திருந்தார். அதீத தொப்பையை மறைக்க இடுப்பில் பெல்ட் அணிந்திருந்தார். சிவந்த நிறத்தில் சராசரி உயரத்துடன் கதர்சட்டையும், வேட்டியும் அணிந்திருந்தார். நெற்றியில் மெலிதாய் திருநீறு வைத்திருந்தார்.

கையில், கழுத்தில் ஆபரணங்கள் ஏதுமின்றி ஆர்ப்பாட்டம் தவிர்த்தவராக காட்சியளித்தார்.

ஜவுளி உற்பத்தியாளர்களின் கூட்ட அரங்கத்தில் இருபது, முப்பது பேர் உட்காரும் அளவுக்கு நாற்காலிகள் போடப் பட்டிருந்தன. சங்கத்தின் முக்கியப் பிரமுகர்கள் ஏறத்தாழ அனைவருமே வந்திருந்தனர். அவர்கள் நடுத்தர வயதைக் கடந்தவர்களாய் காணப்பட்டனர்.

3

சம்பிரதாயமாய் கூட்டத்தை ஆரம்பிக்காமல் ஜவுளி உற்பத்தியாளர் சங்க செயலாளர் திருவேங்கடம் பதட்டத்துடன் முதலில் பேசினார் ''இப்ப என்னண்ணா பண்றது? வெளியூர்காரனுங்கள சேத்துக்கிட்டு நம்ப ஆளுங்களே நம்பள எதுக்குறாங்களே?'' என்று.

அண்ணாமலை அதற்குத் தான் பதில் சொல்லாமல் மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள்? என்பதை அறிந்துக் கொள்ள அமைதி காத்தார். பொருளாளர் கனகாசலம் அடுத்து ஆரம்பித்தார் ''சின்ன மொதலாளிங்க ஒருவாரம், பத்து நாளுன்னு ஸ்ட்ரைக் பண்ணிப் பாத்துட்டு கடைசீல முடியாம நம்ப கால்ல வந்து வுழுவானுங்கன்னு பாத்தா கூலிக் காரங்கப் பசங்களோட சேந்துக்கிட்டு நொம்பளமுல்ல பண்றானுங்க'' என்று.

இன்னுமொரு சங்க உறுப்பினர் ஆத்திரத்துடன் ''இத இப்புடியே வுடக் கூடாது மொதல்ல வெளியூர்காரனுங்கள கையைக் கால ஒடச்சு ஊர வுட்டுத் தொறத்தணும். அப்பத்தான் சின்ன மொதலாளிங்க அடங்கு வானுங்க'' என்று கத்த ஆரம்பித்தார்.

ஆனால், அடுத்த உறுப்பினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார் ''அப்புடி செஞ்சா நம்பூட்டு தறிய யாரு ஓட்டுவா? ஆகுற கதையப் பேசுங்கப்பா...'' என்று

''எல்லாம் ஆகுற கதைதானப்பா, நாம்ப ஏன் வந்தேறி நாய்ங்கள வெச்சு வேல வாங்கணும். நம்ப தறியக் கழட்டிக் கிட்டுப் போயி வேற ஏதாவது ஊர்ல தொழில் செஞ்சாப் போச்சி...'' என்று அவருக்கு வேறொருவர் பதில் கொடுத்தார்.

''அங்க போனா மாத்திரம் பிரச்னை தீந்துடுமா? போவாத ஊருக்குத் தடஞ் சொல்லாதீங்கப்பா...''

''யோவ் சும்மா வெட்டிப் பேச்சுப் பேசி நேரத்தக் கடத்தாதீங்கப்பா. குடுத்த துணி ஆர்டரு கைக்கு எப்பக் கெடைக்கும்னு வெளிநாட்டுல இருந்து அவனவன் ஐ.எஸ்.டி போட்டுக் கேட்டுக்கிட்டு இருக்குறான்.''

கடைசியாய் பேசியவரைக் கூர்ந்துப் பார்த்தார் அண்ணாமலை.

ஏனெனில், அவருடைய பேச்சில் யதார்த்தம் இருந்தது. வெளிநாட்டுக்காரர்கள் லேசுப்பட்ட ஆட்களில்லை. தாம் கொடுத்த துணி ஆர்டரை குறித்த தேதிக்குள் முழுவதுமாய் முடித்துத் தராவிட்டால், ஆர்டரை ரத்து செய்து விடுவார்கள். அப்புறம், கோடிக்கணக்கில் நஷ்டம் தான் ஏற்படும்.

4

அந்த வெளிநாட்டுக்காரன் மீது சட்டரீதியாய் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. வியாபார ஒப்பந்தமே அப்படித்தான்.

நீண்டகால வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தில் அண்ணாமலை ஈடுபட்டு வருவதால், இந்த சிக்கலை நன்கு உணர்ந்து இருந்தார். அவருக்கு வேறு ஊர்களில் சொந்தமாய் தறிகள் ஓடினாலும், இங்குதான் எண்ணிக்கையில் அதிகம். எனவே, மனதுக்குள் நிலவிய அச்சத்தை வெளிக்காட்டி கொள்ளாமல் அமைதியாய் இருந்தார்.

அவர் இந்த சிறுமுதலாளிகளின் போராட்டத்தை உடைக்க, அதில், யாரெல்லாம் ஊசலாட்டமான சக்திகள் இருக்கிறார்கள் என யோசித்தார். அவர்களின் பலவீனம் தான் தற்போது சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். எனவே, கூட்டத்தில் நிலவிய சலசலப்பை கையை உயர்த்தி அமைதிப்படுத்தி விட்டு முதன்முறையாய் வாய் திறந்துப் பேசினார்.

''தா... பாருங்கப்பா. சின்ன முதலாளிங்களுக்கு ஆதரவா தொழிலாளிங்க ஸ்ட்ரைக் செய்வாங்கன்னு நாம்ப யாரும் கெனாவுலக் கூட நெனைக்கில, ஆனா, நெலம முத்தித்தாம் போச்சி. அதனால, நாம்ப இப்ப குறுக்கு வழியில போறத தவுத்து வேற எதையும் யோசிக்க முடியாது.''

என்று அண்ணாமலை தன் பேச்சை நிறுத்த மற்ற ஜவுளி உற்பத்தி யாளர்கள் அவர் என்ன சொல்ல வருகிறார்? என்பதைக் கேட்க ஆர்வமானார்கள். ஒருவர் விடும் மூச்சுக் காற்று அடுத்தவருக்கு கேட்கும்படி பேரமைதி.

அண்ணாமலை தன் கதர்சட்டையின் மேல் பொத்தானைத் தளர்த்திக் கொண்டு பேச்சை தொடர்ந்தார்.

''இந்த போராட்டத்துல பேட்டைக்கார சின்ன மொதலாளிங்க தான் அதிகம். அதுனால, அவுங்க சங்கத்துல இருக்குற தீவிரமான ஆளுங்கள வுட்டுட்டு இப்ப நாம்ப அரைகொறையா அங்க ஒட்டிக்கிட்டு இருக்குறவங்களுக்கு ஆசைக் காட்டி தூது வுடணும். அந்த சங்கத்த வுட்டு வெளியில வந்தா அவுங்களுக்கு மட்டும் கேட்ட கூலியக் குடுக்குறமுன்னு சொல்லணும். அப்புடி கொஞ்சம் பேத்த நம்ப வழிக்கிக் கொண்டாந்தா வெகு சீக்கிரம் இந்த ஸ்ட்ரைக்க ஒடைச்சிடலாம். இது நம்பளால முடியும்னா அப்புடி யாரெல்லாம் எலும்புத் துண்டுக்கு ஆசைப்படுற நாய்ங்கன்னு கணக்கெடுக்கணும். ஒவ்வொருத்தரா அவுங்களுக்கு தெரிஞ்சப் பேர சொல்லுங்க...'' என்று கூறி நிறுத்தினார்.

5

அவரது பேச்சை செவிமடுத்த பெரிய முதலாளி ஒருவர் சட்டென்று கேட்டார் ''ஏங்க பண்ணாடி, சின்ன மொதலாளிங்க சங்கத்த ஒடைக்கிறத்துக்குப் பதிலா, தொழிலாளிங்க சங்கத்த ஒடைச்சு

நொறுக்கிடலாமே... ஏன்னா, பல ஊருக்குகாரனுங்க இங்க வந்து கோயிலு திண்ணையில படுத்துக்கிட்டு தறியோட்டுறானுங்க, அதுல முக்கியமா திரியறவனப் பாத்து சங்கத்த வுட்டு வெளியில வா, இல்லன்னா, உசுரோட ஊரு போயி சேரமாட்டன்னு மெரட்டி வழிக்கிக் கொண்டாரலாமே... தொழிலாளி அடங்குனா, சின்ன மொதலாளியும் தன்னால அடங்கிட்டுப் போறான்?'' என்று.

அதற்கு அண்ணாமலை தெளிவாய் பதில் சொன்னார் ''நா இங்க வர்றதுக்கு முன்னாடி அந்த தொழிலாளிங்க சங்கத்தப் பத்தி நல்லா வெசாரிச்சிட்டுத்தான் வந்திருக்குறேன். அதுல முக்கியமா இருக்குறவனுங்க ஏற்கனவே கள்ளிப்பாளையத்து தறி மொதலாளிங்கள அவுங்க வந்த காரோட வெச்சி எரிக்கப் பாத்திருக்குறானுங்க, இப்ப அவனுங்களுக்கு நக்சலைட்டுங்க வேற சப்போட் பண்றாங்கன்னு எங் காதுக்கு நூஸ் வந்திருக்குது.''

அவர் அப்படிச் சொல்லி நிறுத்தியதும் எல்லா பெரிய முதலாளிகளும் பரபரப்படைந்தார்கள்.

''அத வுட முக்கியம் தொழிலாளிங்கிறவன் பசி, பட்டினி கெடந்தாலும் கொள்கைக்காவ உசுரக் கூட குடுப்பான். ஆனா, சின்ன மொதலாளி அப்புடியில்ல, கடனவுடன வாங்கி தறிப் போட்டு இருக்குறவன். நாளைக்கு தெருவுக்கு வந்துடுவமோன்னு பயத்துல கெடக்குறவன். இவனுக்கு ஆசைக் காட்டுனா நம்ப கூட வந்துடுவான். தொழிலாளி அப்புடி வர மாட்டான்.''

அவர் தொடர்ந்து கூறி விட்டு தான் சொன்னது சரிதானா என்று, செயலாளர் பொருளாளர் இருவரையும் ஒரு பார்வைப் பார்த்தார். அவர்கள், 'அய்யர் வாக்கு ஆண்டவன் வாக்கு' என்பதைப் போல தங்கள் தலைவரைப் பெருமையாய் ஒரு சேரப் பார்த்தார்கள். விட்டால், தெய்வமே என்று காலில் விழுந்து விடுவார்கள் போலிருந்தது.

வேறு யாரும் கூட்டத்தில் பேச முன்வராதது போல் தெரிய அண்ணாமலை கொஞ்ச நேரம் காத்திருந்து விட்டு ''என்னாப்பா... கம்முனு இருக்குறீங்க. நாஞ் சொன்ன ஓசன ஒங்க யாருக்கும் புடிக்கலியா?'' என்று வினவினார்.

அப்போது பேட்டையைச் சேர்ந்த பெரிய முதலாளி நடுத்தெரு மாதையன் அவசரமாய் எழுந்து நின்று தான் சொல்ல வந்ததைப் பேச முற்பட்டான்.

6

அவன் நிற்பதைத் தடுத்த அண்ணாமலை ''ஒக்காரு... ஒக்காருப்பா ஒக்காந்தே பேசு.'' என கையசைத்துக் கூறினார்.

தலைவரின் பேச்சுக்குக் கட்டுப்பட்ட அவன் அதே சமயம் அவர் தன்னை மதித்து உட்காரச் சொன்னதில் பெருமையடைந்து மற்றவர்களை கர்வம் மேலிட பார்த்தான்.

பிறகு, சட்டென உட்கார்ந்து ''அண்ணா, எங்க பேட்டையில நடேசன்னு ஒரு சின்ன மொதலாளி இருக்குறான். அவனுக்கும், இப்ப சிறு மொதலாளிங்க சங்கத்துக்கு தலைவரா இருக்குற தேவராசுக்கும் ஒரு எடப் பிரச்னை இருக்குது. அதை வெச்சி அவன நம்ப பக்கம் இழுக்கலாம்னு எனக்கு தோணுது.'' என யோசனைக் கூறினான்..

அதற்கு திருவேங்கடம் ''எடப் பிரச்னைன்னா... என்னா எடம்? என்னா பிரச்னை? தெளிவாச் சொல்லுப்பா.'' என்று தூண்டி விட்டார். அப்படிச் சொன்ன சமயத்தில் அவர் வாய் கோணியது.

அது, அவரது மேனரிசம். அதனாலேயே அவருக்கு கோணவாய் திருவேங்கடம் என்று ஒரு பட்டப்பெயர் ஊரில் உண்டு.

அவர் அப்படிச் சொன்னதும் உற்சாகமான நடுத்தெரு மாதையன் தன் பேச்சை தொடர்ந்தான்.

''நடேசனும், தேவராசும் பக்கத்துப் பக்கத்து வூடுதான். அவுங்க ரெண்டுப் பேத்து வூடுங்களுக்கு நடுவுல ஒரு பொதுச்சந்து இருக்குது. அவுங்கங்க வூட்டுச் செவுத்தப் பராமரிக்க அந்த காலத்துல பெரியவுங்க வுட்ட சந்து அது. அந்த சந்துனால இப்ப ரெண்டு வூட்டுக்காரனும் அடிச்சுக்கிட்டு நிக்கிறானுங்க. அந்த சந்து என் நிலத்துலதான் இருக்குன்னு நடேசன் சொந்தங் கொண்டாடுறான். தேவராசு அதுக்கு வுட மாட்டேங்குறான். அதுதான் இப்ப பிரச்னை.''

''அவனவன் வூட்டுப் பத்தரத்தை எடுத்துப் பாத்தா தெரிஞ்சிடுமே, பொதுச்சந்து யாருதுன்னு?''

இதைக் கேட்டது கனகாசலம்.

அதற்கு, நடுத்தெரு மாதையன் பதில் கொடுத்தான் ''அடப் பேட்டை கிராமமே ஒரு காலத்துல பொறம்போக்கு நிலந்தானே. இன்னிக்கி

வரைக்கிம் அங்க குடியிருக்குற யாருக்கும் செரியான பட்டா கெடையாது. அதுனாலதான் இந்தப் பிரச்னையே...''

7

இதைக் கேட்டு கூட்டத்தில் சலசலப்பு எழுந்தது. ஓரிருவர் பேச வந்த சிறு முதலாளிகளின் ஸ்ட்ரைக்கைப் பற்றிப் பேசாமல், வேறு ஏதோ நிலப்பிரச்னைப் பற்றிப் பேசி நேரம் வீணடிக்கப் படுவதாய் நினைத் தார்கள். அதில், ஒருவர் வாய்விட்டே கேட்டார் ''ஏம்பா, பட்டுக் கோட்டைக்கி தடமெதுன்னு கேட்டா, கொட்டப்பாக்குக்கு வெல சொல்றியே?'' என்று.

அவர் அப்படிக் கேட்டதும் பலத்த சிரிப்பொலி எழுந்தது. யாரோ ''தெரியாமயா மாதையனுக்கு, கூதையன்னு ஊர்ல பேரு வெச்சிருக்குறாங்க.'' என்று முணுமுணுத்தார்கள்.

கூதையன் என்பது மாதையனின் பட்டப்பெயர். அதற்கு அர்த்தம், கூதைப் பேச்சு என்பது எதற்கும் உபயோகம் இல்லாமல் பேசுவது ஆகும். மாதையன் ஒரு காலத்தில் அப்படிப் பேசத் திரிந்த ஆள்தான். ஆனால், இப்போது அப்படி இல்லையென்றாலும், என்றோ ஊரார் வைத்தப் பட்டப் பெயர் நிலைத்து விட்டது.

இது மாதிரி நகரத்திலும், பேட்டையிலும் ஒவ்வொரு தனி நபருக்கும் ஒரு பட்டப்பெயர் உண்டு. அந்த இடுபெயராலேயே சம்பந்தப்பட்ட நபரின் குடும்பமே அழைக்கப்படுவது. ஊரறிந்த ரகசியம்.

இது இன்று நேற்றல்ல, காலங்காலமாய் ஊர்களில் நிலவி வரும் நடைமுறை.

நகரத்தில், பேயோட்டிப் பரமசிவம் என்று ஒருவர் இருக்கிறார். உண்மையில், அவர் ஒரு விசைத்தறி முதலாளி. அவருக்கு அந்த பெயர் வரக் காரணமிருக்கிறது. பொதுவாய், விசைத்தறி முதலாளிகள் வெளியூர் நூற்பாலைகள் எதற்காவது, பெரிய அளவில் நூல்கட்டுகளுக்கு ஆர்டர் கொடுத்தால், அவை பெரிய மரப்பெட்டிகள் அல்லது அட்டைப் பெட்டிகளில் அடுக்கப்பட்டு ஏ.பி.டி மற்றும் டி.வி.எஸ் பார்சல் சர்வீஸ்கள் மூலமாய் இந்த ஊருக்கு வந்து இறங்கும். அப்படி பரமசிவம் தன் தறிகளுக்குத் தேவையான நூல்கட்டுகளுக்கு வெளியூரில் ஆர்டர் கொடுத்திருந்தார். ஒருமுறை

அவருக்கு பார்சல் சர்வீஸ் மூலமாய் வந்த அட்டைப் பெட்டியை திறந்துப் பார்த்த போது, அதில், நூல்கட்டுகள் இல்லை. அதற்குப் பதிலாய் ஏராளமாய் பணக்கட்டுகள் இருந்தன. அதைப் பார்த்து ஆச்சரியமான பரமசிவம், இந்தப் பணக்கட்டுகள் அரசாங்கத்துக்குத் தெரியாமல் யாரோ, திருட்டுத்தனமாய் யாருக்கோ அனுப்பியிருக் கிறார்கள். அது, தவறிப் போய் தனக்கு வந்து விட்டது என புரிந்துக் கொண்டார். பரமசிவம் அதை நேர்மையாய் பார்சல் சர்வீசுக்குத் தெரியப்படுத்தாதது மட்டுமல்ல, அதை தானே அமுக்கிக் கொள்ள முடிவெடுத்தார்.

8

இந்த விசயத்தை சம்பந்தப்பட்டவர்கள் யாராவது கண்டுப்பிடித்துத் தேடி வந்து விட்டால் என்ன செய்வதென்ற அச்சத்தில், தான் ஆசைநாயகியாய் வைத்திருந்த பேய் ஓட்டும் ஒரு பெண்ணின் வீட்டில் அட்டைப் பெட்டியில் இருந்த பணக்கட்டுகளை ஒளித்து வைத்து விட்டார். இந்த விசயம் கொஞ்சநாட்கள் கழித்து எப்படியோ ஊருக்குத் தெரியவே அன்றிலிருந்து, அவர் பேயோட்டிப் பரமசிவம் ஆகி விட்டார்.

நடுத்தெரு மாதையன் தன்னை மற்றவர்கள் கேலிப் பேசுவதை உணர்ந்து தான் சொல்ல வந்ததை முழுதாய் சொல்லாமல் வருத்தத் துடன் தன் பேச்சை நிறுத்திக் கொள்ள, அதை கவனித்த அண்ணாமலை அவனை அப்படியே விட்டு விடாமல், மற்றவர்களை ''சும்மாயிருங் கப்பா...'' என்று அதட்டினார். அதே வேகத்தில் ''மாதையா... யாரோ என்னமோ பேசிட்டுப் போறாங்க, நீ அதக் கண்டுக்காதப் பேசு'' என்று கூறினார்.

தலைவர் அப்படிச் சொன்னது வேறு யாருக்கும் பிடிக்கவில்லை என்றாலும், அதை எதிர்க்காமல் அடங்கி விட்டனர்.

மாதையன் தொடர்ந்தான் ''இந்த பொதுச்சந்துப் பிரச்னைய வெச்சி நடேசன, தேவராசுக் கிட்ட சண்டை இழுக்க வச்சா நம்பளுக்கு லாபமிருக்குது.'' என்று.

இதற்கு திருவேங்கடம் வெடுக்கென கேட்டார் ''இதுல என்னா நம்பளுக்கு லாபமிருக்குது?'' என்று. இந்த கேள்வியால் எரிச்சலான அண்ணாமலை சட்டென்று திரும்பிப் பார்த்து முறைக்க, அவரது கோணவாய் ஒருமாதிரியாய் இளித்தது. பின் அடங்கியது.

''என்னா லாபமுன்னா, தேவராசு தானே இப்ப சிறு மொதலாளிங்க சங்கத்துக்கு தலைவரு, நாம்ப போலீசுக்குக் காசைக் கட்டி அந்த ஆளைத் தூக்கி உள்ற வெச்சோம்னா, அவுங்க சங்கம் காலி. தலைவரே ஜெயிலுக்குப் போனப்புறம் மத்தவனுக்கு நம்பள எதுக்க எப்புடி தெகிரியம் வரும்?''

மாதையன் சொன்னதைக் கேட்டு தலைவர் அண்ணாமலை மட்டு மல்ல, மற்ற பெரிய முதலாளிகளும் கூட ஆச்சரியப்பட்டார்கள், கூதை மேதைப்போல பேசுகிறதே என்று.

அது மட்டுமல்ல, அங்கிருந்த அனைவருமே ஏகமனதாய் நடுத்தெருக் காரன் சொன்னதை ஏற்றுக் கொண்டார்கள். சதி திட்டம் கிடைத்தா யிற்று. இனி, அதை செயல்படுத்துவதுதான் பாக்கி.

9

அண்ணாமலை, மாதையனை தன்னருகே கூப்பிட்டுத் தட்டிக் கொடுத்தார். சிறு முதலாளிகளுக்கு துரோகத்தைச் செய்யுமாறு நடேசனிடம் பேசும் பொறுப்பை அவனிடமே ஒப்படைத்தார்.

அது மட்டுமல்ல, இது சம்பந்தமாய் பேசுவதற்காக எந்த நேரத்திலும் தன் வீட்டுக்கு வரலாம் என்ற ஒரு சலுகையும் கொடுத்தார். அது மேலும், மாதையனை உற்சாகப்படுத்தும் என்பதால்.

உலகம் முழுக்கவே முதலாளித்துவம் தன்னை வளர்த்துக் கொள்ள சுரண்டலையும், எதிரிகளை வீழ்த்த சூழ்ச்சியையும் தான் அதிகமாய் நம்புகிறது. ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்த மண்ணில் கால் வைத்த சமயத்தில் பல சிற்றரசர்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டி ருந்தார்கள். அவர்களை ஆயுத பலத்தை விடவும், பல்வேறு சதி திட்டங்களினாலேயே எளிதில் வீழ்த்தியது. பங்காளிச் சண்டையில் மூக்கை நுழைத்து நாட்டாமை செய்வது போல் நடித்து அப்பத்தைப் பங்கிட்ட குரங்கின் கதையைப் போல அவர்களுக்குரியதை தனதாக்கி கொண்டது. அந்த கேவலமான பாரம்பரியத்தைத் தான் நகரத்துப் பெரு முதலாளிகள் சிறு முதலாளிகளுக்கெதிராய் தற்போது தங்கள் கையில் எடுத்திருக்கிறார்கள்.

ஏற்கனவே, ஊசலாடும் வர்க்க நிலை கொண்ட சிறு முதலாளிகள் என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை?

அன்று இரவே, மாதையன் தன் திட்டத்தை நிறைவேற்ற நடேசனை ரகசியமாய் சந்தித்தான். தேவராசின் மீது பொதுச் சந்து விவகாரத்தில் மட்டுமல்ல, சிறு முதலாளிகள் சங்கத்தின் தலைவர் தேர்தலில் தன்னை அவர் தோற்கடித்த காண்டும் நடேசனுக்கு இருக்கிறது.

பெரிய முதலாளிகள் வேறு தன் தறி ரகங்களுக்கு கேட்ட கூலியையும், தேவைப்பட்டால், நிறையவே காசு, பண உதவியையும் செய்வதாய் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். தேவராசை வீழ்த்த இதுதான் சரியான சந்தர்ப்பம் என்பது நன்றாகப் புரிந்தது. எனவே, அவன் மாதையன் விரித்த வலையில் எளிதாய் விழுந்து விட்டான்.

மறுநாள் காலையிலிருந்தே, நடேசன், தேவராசுடன் சண்டைப் போடுவதற்கான காரணத்தைத் தேடி தன் வீட்டின் உள்ளுக்கும், வெளிக்கும் அலைந்தான். ஒன்றும் வலுவாய் தோன்றாமல் போகவே தன் வீட்டுத் திண்ணையில் வாயில் பல்குச்சியை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

10

அவனது நேரம், காலை எட்டு மணிக்கே தேவராசு முழுக்கை சலவை சட்டை, தோளில் துண்டு, கையில் குடையுடன் எந்த வெளியூருக்கோ அவசரமாய் கிளம்பிப் போனார். கொஞ்ச நேரத்தில், அவரது மகன் சைக்கிளை எடுத்துக் கொண்டு நகரத்திலிருக்கும் தன் கல்லூரிக்கு புறப்பட்டுப் போனான். அந்த வீட்டில் உள்ள ஆண்கள் இவர்கள் இருவர் மட்டும்தான். மற்றவர்கள் தேவராசின் தாயார், மனைவி, எட்டு வயதில் ஒரு சிறுமி என்று பெண்கள் தான். அவர்களிடம் வீடேறிப் போய் சண்டை போட முடியாது. ஊர்க்காரர்கள் விட மாட்டார்கள்.

இனி, என்ன செய்வது? என்று குழம்பினான் நடேசன்.

காலையில், சீக்கிரம் சண்டையை தொடங்குவதற்கான வழியை இரவே யோசிக்காமல் போனதற்காக தன்னைத் தானே அவன் நொந்துக் கொண்டான்.

என்றாலும், தேவராசின் வீட்டுப் பெண்கள் பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்க வீட்டை விட்டு வெளியே வந்துதான் தீர வேண்டும். அப்போது, தன் மனைவியை தூண்டி விட்டு வம்புக்கு இழுப்பதன் மூலம் பெண்களுக்கு இடையே ஒரு அடிதடி தகராறை உருவாக்கி,

தேவராசு தன் வீட்டாரிடம் இப்படி செய்யச் சொல்லி விட்டு தந்திரமாய் ஊருக்குப் போவதாய் நாடகம் ஆடி விட்டார் என்று போலீசில் புகார் கொடுத்தால், அவர் மட்டுமல்ல, அவர் வீட்டுப் பெண்களும் கைது செய்யப்படலாம் என முடிவு செய்தான்.

அவனது துரதிருஷ்டம். அன்றென்னவோ தேவராசின் வீட்டிலிருந்து அவர் அம்மா ஆசையாய் வளர்க்கும் நாய்க்குட்டி உட்பட, ஒரு குஞ்சுக் குளுவான் கூட வெளியே தெரியவில்லை.

அதே சமயம், நகரத்தில் உள்ள காவல்நிலையத்தில் நக்கல் திலகம் இன்ஸ்பெக்டர் வெளியில் எங்கும் நகராமல் தன் அறையில் காத்திருந்தார். நடேசன் சதி திட்டத்துக்கு ஒத்துக் கொண்டவுடன், மாதையன் இரவோடு இரவாய் தன் மொபட்டை எடுத்துக் கொண்டு நகரத்துக்கு வந்தான். அந்த அகால நேரத்திலேயே ஜவுளி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அண்ணாமலையின் பங்களாவுக்குப் போய் அவரை எழுப்பி விசயத்தை சொன்னான். அவர் அகமகிழ்ந்து மறுநாள் காலை, எப்படியும் நடேசன் சிறு முதலாளிகள் சங்கத் தலைவர் தேவராசை வம்புக்கிழுப்பான். உடனே அவரை கைது செய்ய வேண்டும் என இன்ஸ்பெக்டருக்குப் தொலைபேசி மூலம் தகவல் கூறி இருந்தார். அதை நிறைவேற்றித தரவே பெரு முதலாளிகளின் நலன் காக்கும் அதிகாரி, அடிதடி தகவல் பேட்டையிலிருந்து வருமென தேவுடு காத்துக் கொண்டிருந்தார். போலீஸ் வாகனமும் கூட தயாராய் காவல்நிலைய வாசலில் நின்றிருந்தது.

11

ஆனால், அங்கே நடேசனுக்கு உருப்படியாய் ஒரு யோசனையும் தோணாமல் டென்ஷன் தான் மிஞ்சியது. எனவே, அவன் தன் வீட்டுத் திண்ணையில் பல்குச்சியை வாயில் வைத்துக் கொண்டு வெகுநேரம் உட்கார்ந்து விட்டான். ஓரப்பார்வை மட்டும் பக்கத்து வீட்டு வாசலையே ரகசியமாய் கண்காணித்தது. காலை நேரத்தைக் கடந்தும் அவன் அதே நிலையில் நீடித்திருக்க, தெருவில் போவோர், வருவோர் கூட ஏன், இவன் திண்ணையிலேயே பழியாய் கிடக்கிறான் என்று யோசனையாய் கடந்துப் போனார்கள்.

அவன் மனைவி செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து வாய் கொப்பளிக்கச் சொல்லி சாப்பிடக் கூப்பிட்ட போதும் நகரவில்லை. அப்படியிருந்தும், மதியத்தைக் கடந்து மாலை நெருங்க ஆரம்பித்த

பின்னரும் கூட, நடேசனால், தான் நினைத்ததை சாதிக்க இயல வில்லை.

அப்போதுதான் ஒரு யோசனை நடேசனுக்குப் பளிச்சென்று தோன்றியது. அந்த எண்ணம் உதித்தவுடன் சுறுசுறுப்பானான். சடாரென தன் வீட்டு திண்ணையை விட்டெழுந்தான்.

கடைப் பக்கம் போய் அரைக்கிலோ சுண்ணாம்புப் பவுடர் வாங்கி வந்து ஒரு பக்கெட் தண்ணீரில் கலக்கி தன் மனைவியிடம் கொடுத்து பொதுச்சந்துப் பக்கம் இருக்கும் அவர்கள் வீட்டுச் சுவற்றுக்கு வெள்ளை அடிக்கச் சொன்னான். அவன் அப்படிச் சொன்னதற்குக் காரணம் இருக்கிறது.

பொதுச்சந்தில் அவரவர் வீட்டுச் சுவற்றுக்கு சுண்ணாம்பு அடிக்கப் போகும் போதோ, மராமத்துப் பணிகள் செய்யும் போதோ ஒருவர் மற்றவர் அனுமதியைப் பெற வேண்டும் என்பது தேவராசுக்கும், அவனுக்கும் இருக்கும் எழுதப்படாத விதி. தற்போது, அந்த விதியை தான் மீறினால், வெளியூருக்குப் போன தேவராசு வந்து பார்த்து விட்டு நிச்சயம் சண்டைக்கு வருவார். அப்போது அதைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பது அவன் கொடிய எண்ணம். அவன் மனைவியும் கணவனின் எண்ணத்தைப் புரிந்துக் கொண்டவளாய் பொதுச்சந்தில் நின்று தன் வீட்டுச் சுவற்றுக்கு நிதானமாய் பழைய சீமாரை வைத்து சுண்ணாம்பு தடவ ஆரம்பித்தாள். அந்த நேரம் பார்த்து தேவராசின் வயதான தாய் சாயங்கால வாசல் பெருக்க கையில் விளக்குமாரோடு வெளியே வர, அந்த அம்மாளின் கண்ணில் இந்த காட்சி பட்டது. உடனே, ஆத்திமடைந்த அவர் நடேசனின் மனைவியைப் பார்த்து சத்தம் போட்டார். அதைக் கண்டுக் கொள்ளாத அவள், தன் வேலையில் மும்முரமாய் இருப்பதாய் காட்டிக் கொள்ள, அந்த அம்மாள் தன் கையிலிருந்த விளக்குமாரை கீழே போட்டு விட்டு ,திட்டிக் கொண்டே ஓடிவந்து நடேசன் மனைவியிடம் இருந்து சுண்ணாம்பு பக்கெட்டை வெடுக்கென்று பிடுங்கினார்.

12

அடுத்த கணம், நடேசன் கண்சாடைக் காட்ட அவள் தேவராசின் தாயாரை தலைமுடியைப் பிடித்து இழுத்து அடித்தாள். தன் மாமியாரின் அவலக்குரல் கேட்டு வீட்டினுள்ளிருந்து தேவராசின் மனைவி ஓடி

வந்துப் பார்த்து விட்டு அதிர்ச்சியானார். அதே வேகத்தில், கீழே கிடந்த விளக்குமாரை எடுத்துக் கொண்டு வந்து நடேசன் மனைவியை நாலு இருக்கு இருக்க ஆரம்பித்தார்.

இதைப் பார்த்து உண்மையாகவே அதிர்ச்சியான நடேசன் சட்டென தாவி வந்து தேவராசின் மனைவியை தெருவில் இழுத்து போட்டு ''கழுத முண்ட, கழுத முண்ட...'' என்று திட்டிக் கொண்டே அவள் இடுப்பில் மிதித்தான். அந்த பெண்மணி அலற, தெருவில் போவோர், வருவோர் இதைப் பார்த்து செய்வதறியாது திகைத்து நின்றார்கள். அதே நேரம், கல்லூரி முடிந்து தேவராசின் மகன் வீடு திரும்பினான்.

தன் அம்மா நடேசனால் தாக்கப்படுவதைப் பார்த்த அந்த இளைஞன் தன் சைக்கிளை அப்படியே கீழே போட்டு விட்டு ஆத்திரத்தோடு ஓடி வந்தான். வந்த வேகத்தில் கால்பந்தைப் போல நடேசனை ஓங்கி உதைக்க அவன் அலறியபடி எட்டப் போய் விழுந்தான். சற்றும் ஆத்திரம் தணியாத தேவராசின் மகன் நடேசனைப் புரட்டி எடுக்க, சட்டென பேட்டை கிராமம் தீப்பிடித்த மாதிரி சண்டை நடக்கும் இடத்தில் வந்து குவிந்து விட்டது. நடுத்தெரு மாதையனுக்கு இதுதானே வேண்டும். உடனே போலீசுக்குப் போன் செய்தான்.

அந்த நேரத்தில், சந்துருவும் மற்ற தோழர்களும் கந்தப்பன் வீட்டில் தான் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு விசயம் தெரிந்து ஓடி வர, அந்த குறுகிய காலத்துக்குள் தங்கள் வாகனத்தில் போலீஸ் வந்து விட்டது. தேவராசின் மகனிடம் என்ன நடந்தது? என்று விசாரிக்கக் கூட நேரமில்லை. வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனைக் கொத்தாய் பிடித்து வாகனத்தில் ஏற்றினார்.

சந்துரு, மாதேசு, ஏழுமலை, மச்சக்காளை, சிற்பி போன்றவர்கள் அதை தடுக்க முயல, விவகாரம் கை மீறிப் போய் விட்டது.

காவல் அதிகாரி தேவராசு வந்தால் அவர் மகனை கைது செய்திருப்பதைக் கூறி, அவரை உடனே காவல் நிலையத்துக்கு வந்து ஆஜராகும் படி சொல்லி விட்டு, புகார் எழுதி வாங்க நடேசனை தன்னுடன் அழைத்து சென்றார். போலீஸ் வாகனம் புறப்பட தனது மொபட்டில் மாதையன் பின் தொடர்ந்தான்.

தேவராசின் மனைவி வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறினார். தாயைப் பார்த்து எட்டு வயது மகள் அழ, அதற்கும் தெம்பில்லாமல் வயதான தாயார் அதிர்ச்சியில் பிரமைப் பிடித்துப் போய், வீதியில் நின்றிருந்தார்.

13

பொதுமக்களில் யாரோ குடிக்க தண்ணீர் கொண்டு வந்துக் கொடுத்தார்கள். பரிதாபமாய் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த சந்துருவும் மற்ற தோழர்களும் அவர்களை கை தாங்கலாய் பிடித்து திண்ணையில் அமர வைத்தார்கள். மெல்ல, ஆசுவாசப்படுத்தி என்ன நடந்தென்று விசாரித்தார்கள்.

தேவராசின் தாயாரும், மனைவியும் அவர் ஊருக்குப் போனதையும், தகராறு எப்படி ஆரம்பித்தது என்பதையும் விவரித்துச் சொல்ல, அப்போது அங்கே வந்த கருணாகரன் ''சந்துரு, நேத்து ராத்திரி, நடேசனும், மாதையனும் வயக்காட்டுப் பக்கம் ரொம்ப நேரம் பேசிக்கிட்டு இருந்தத நமக்கு வேண்டப்பட்டவங்க பாத்துட்டு வந்து, இன்னிக்கி காத்தால எங்கிட்ட சொன்னாங்க. ஒருவேள நடேசன் மூலமா பெரிய மொதலாளிங்க என்னமோ சூழ்ச்சி பண்றாங்கன்னு என் மனசுக்குப் படுத்துப்பா...'' என நடுக்கத்துடன் கூறினார்.

அதை கேட்ட சந்துரு ''ஆமாண்ணா, நீங்க நெனைக்கிறது செரிதான். நம்ப போராட்டத்த ஒடைக்க ஒரு பெரிய சதி நடந்திருக்குது...'' என்று ஆணித்தரமாய் சொன்னான்.

அடுத்த க்ணம், முதலாளி, தொழிலாளி வித்தியாசமில்லாமல் அனைவரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

''இப்ப, நாம்ப மொதல்ல தேவராசு அண்ணன் போலீசு கைல சிக்காம பாத்துக்கணும். அதுதான் ரொம்ப முக்கியம்.'' என சந்துரு மேலும் சொன்னான்.

அப்போது கந்தப்பன் பதட்டமாகி ''இப்ப என்ன தம்பி செய்றது?'' என்று கேட்டார். தோழர் அனுராதா, கூட்டுக் குழு கூட்டம் முடிந்த பின்னால், நேற்று மாலை கிளம்பி ரேணுகுண்டா போய் விட்டார். அநேகமாய், இங்கு நடக்கும் போராட்டத்தைப் பற்றி தலைமை தோழரிடம் விளக்கிச் சொல்லக் கூட போயிருக்கலாம்.

எனவே, சூழ்நிலை கருதி சந்துரு சடசடவென தீயாய் யோசித்தான். அவன் தேவராசின் மனைவியிடம் ''அக்கா, அண்ணன் புத்தூரு போயிருக்குறதா சொன்னீங்களே, எப்ப பேட்டைக்கி வருவாரு? என்று கேட்டான். அதற்கு அந்த பெண்மணி ''இப்ப வர்ற நேரந்தாம்

தம்பி.'' என்று கூறினார். உடனே, சந்துரு ''செரி, அப்ப அண்ணன் நகரத்துக்குப் போவ வாய்ப்பில்ல, மண்டபத்துல தான் பஸ்ஸ வுட்டு எறங்குவாரு. நம்ப ஆளுங்க யாராவது அங்கப் போயி அவர மடக்கி அப்புடியே பாதுகாப்பா போலீஸ் கண்ணுலப் படாம எங்கியாவது கொண்டுக்கிட்டுப் போயி மறைவா வெக்கணும் '' என்று யோசனை சொன்னான்.

14

உடனே மாதேசு ''அப்புடி எங்கப்பா அவர தங்க வெக்கிறது? இந்த ஊர வுட்டா நாம்ப எங்க போறது?'' என்று கேட்டான்.

அப்போது சந்துரு, அவனையும் மற்ற தோழர்களையும், கருணா கரனுடன் சேர்த்து கூட்டத்தை விட்டு தனியே அழைத்து வந்தான்.

''நம்ப கூலி விவசாயத் தோழருங்க, கொண்டையாவும், அனுமந்தும் எந்த கிராமம்னு ஒங்க யாருக்காவது தெரியுமா?'' என பொதுவாய் கேட்டான். எல்லோரும் உதட்டைப் பிதுக்க, பச்சையப்பன் மட்டும் ஞாபகம் வந்தவரைப் போல சட்டென கூறினார். ''தம்பி, நம்ப பேட்டை ஏரிக்கரைக்கி வடக்கால ஒரு சேரி இருக்குது. அதுதான், அவுங்க ஊருன்னு கூட்டுக் கூட்டத்துக்கு வந்தப்ப எங்கிட்ட சொன்னாங்க.'' என்று.

''நல்லதாப் போச்சு. நம்ப தேவராசு அண்ணன மண்டபத்துல இருந்து குறுக்கு தடத்துல கூட்டிக்கிட்டுப் போயி அங்க தங்க வைங்க.'' என சந்துரு, பச்சையப்பனிடமே பொறுப்பை ஒப்படைத்தான்.

அவர் அதற்கு ஆயத்தமாக, கருணாகரன் நிறைய முகச் சுளிப்புடன் கூறினார் ''என்னப்பா, நாங்க மேல் சாதிக்காரங்கன்னு ஒனக்கு தெரியாதா? தேவராசு முதலியாரக் கொண்டுக்கிட்டுப் போயி சேரியில வெக்கச் சொல்றியே...'' என்று.

சட்டென சந்துரு கோபமானான் ''அண்ணா, ஒங்க மேல் சாதிக்காரங்களால தான் இப்ப ஆபத்தே... ஏண்ணா, இந்த நேரத்துலப் போயி சாதி, கீதின்னு பேசிக் கிட்டிருக்குறீங்கலே...''

அந்த உண்மை சுட கருணாகரன் அமைதியானார்.

பச்சையப்பன் தன்னுடன் ஓபுளியைக் கூட்டிக் கொண்டார். மண்டபத்தை நோக்கி விறுவிறுவென்று நடந்தார்.

மண்டபம் என்பது புத்தூரில் இருந்து நகரம் வரும் நெடுஞ்சாலையில் பேட்டையின் நுழைவாயிலில் இருக்கும் பேருந்து நிறுத்தம். அங்கு இறங்கும் பேட்டை வாசிகள் ஒரு பர்லாங் நடந்து ஊருக்குள் வருவார்கள். நகரத்துக்குப் போய் திரும்பி வர வேண்டியதில்லை. எனவே, போலீஸ் கண்ணில் படாமல் இருக்க அதுதான் இந்த நேரத்தில் சிறந்த வழி.பச்சையப்பனும், ஓபுளியும் போன பிறகு, சந்துரு அடுத்த கட்டமாய் என்ன செய்வதென்று தீர்க்கமாய் யோசித்தான்.

மளமளவென அவனுக்குள் ஒரு போராட்ட யுக்தி விரிந்தது.

15

அதன்படி, அவன் கருணாகரனிடம் இப்படிச் சொன்னான். ''அண்ணா, அடுத்தது நாம்ப இந்த ஊர்ல இருக்குற ஆம்பள, பொம்பள அத்தன பேத்தையும் ஒண்ணு சேத்தணும். அதுல, குழந்தைகளையும், வயசானவங்களையும் மட்டும் வுட்டுட்டுங்க.'' என்று

இதைக் கேட்டு அங்கிருந்த தோழர்களோடு, கருணாகரனும் சேர்ந்து குழப்பமானார்.

ஏழுமலை வாய் விட்டே கேட்டார் ''அவுங்கள ஒண்ணு சேத்து இப்ப நாம்ப என்னப்பா பண்ணப் போறோம்?'' என்று.

''போலீஸ் ஸ்டேசனுக்கு போவப் போறோம்.''

''அங்கப் போயி...''

''ஆர்ப்பாட்டம் பண்ணுவோம்.''

கந்தப்பன் ''எனக்கென்னமோ இது விசப் பரீட்சையா தோணுது'' என்று அச்சப்பட்டார்.

''இல்லண்ணா, இத தவுத்து வேற வழியில்ல, பெரிய மொதலாளிங்களுக்கும், போலீசுக்கும் செரியான பாடம் கத்துக் குடுக்கணும். அதுவுமில்லாம, ஆர்ப்பாட்டத்துல நாம முன்ன நிக்காம பொம்பளைங்கள முன்ன நிக்க வெப்போம். போலீசு அவுங்க மேல எப்புடி கை வெச்சிருதுன்னு பாப்பம்'' என்றான் சந்துரு.

அவனுடைய உறுதியான குரலில் எல்லோருக்கும் அச்சம் விலகியது. ஒரு தலைவனாய் சந்துருவை ஏற்ற பின்பு அவன் இதுவரை காட்டிய பாதையில் நன்மை இருந்ததே தவிர தீமை இல்லை. எனவே, அவன் முடிவுக்கு கட்டுப்படுவதென ஏக மனதாய் தீர்மானித்தார்கள். ஆயினும், போர்குணத்தை இழந்த சிறு முதலாளிகளின் பிரதிநிதியாய் கருணாகரன் தயக்கம் காட்டினார்.

தம் வீட்டுப் பெண்களைக் கொண்டு போய் காவல் நிலையத்தின் முன்னால் நிறுத்துவதா? அவர்கள் பயந்து விட மாட்டார்களா? என யோசித்தார்.

அதை உணர்ந்த சந்துரு ''அண்ணா ஒண்ணும் கவலப்படாதீங்க. ஒங்க மொதலாளி வூட்டுப் பொம்பளைங்களோட சேந்து முன்னாடி நிக்கப் போறது எங்க தறிக்காரப் பொம்பளைங்க. அவுங்க உசுரக் குத்தாவது ஒங்க ஆளுங்கள காப்பாத்துவாங்க'' என்றான். அதன் பிறகுதான் கருணாகரன் சம்மதித்தார்.

சந்துரு, அவரை கூட வைத்துக் கொண்டு பேட்டை ஊர் மக்களிடம் தெளிவாய் பேசினான்.

16

''மொதலாளி, தொழிலாளி, ஆம்புள, பொம்பளன்னு வித்தியாசம் இல்லாம ஒண்ணா கலந்து இருக்குற ஊர் சனங்களே... இப்புடி நம்பள ஒத்துமப்படுத்துன பெரிய மொதலாளிங்களுக்கும், நடேசனுக்கும், போலீசுக்காரங்களுக்கும் மொதல்ல நன்றி சொல்வோம். இப்ப தேவராசு அண்ணனோட மவனப் போலீசுக்கிட்ட இருந்து நாம உடனடியா காப்பாத்தியாவனும். பாவம், அவன் சின்னப்பையன் இந்நேரம், பயந்துப் போயிருப்பான். அவுங்களுக்கு குறி தேவராசு அண்ணன் தான். அவுரு கெடைக்கிற வரிக்கும் அவுங்க அவன ஒண்ணும் பண்ண மாட்டாங்க. இருந்தாலும், ஊரோட ஒத்துமைய இப்ப நாம்ப எதிரிங்களுக்கு காமிச்சாவனும். அப்பத்தான் அவுங்களுக்கு நம்ப மேல பயம் வரும். அதே சமயம், கூலி உயர்வுப் போராட்டத்துலயும் ஜெயிச்சாவனும். அதுக்கு இதுதான் செரியான சந்தர்ப்பம். இத தவற வுடக் கூடாது. நாம்ப இப்ப போலீஸ் ஸ்டேசனு முன்னால நின்னு ஆர்ப்பாட்டம் பண்ணப் போறம். இத நிச்சயமா அதிகாரிகளும், அரசாங்கமும் எதிர்பார்க்க மாட்டாங்க. பொம்பளைங்க மேல கை

வெச்சா ஒலகமே அவுங்க மேல காறித் துப்பும். ஸ்டேசன்ல இருக்குற ஆள வெளிய வுடச் சொல்றது மட்டுமல்ல, உடனே, பெரிய மொதலாளிங்கள வெச்சு கூலி உயர்வு பிரச்னைய முடிச்சி வெக்க சொல்லி அரசாங்கத்த நிர்பந்திப்போம். என்னா சொல்றீங்க...''

அவன் பேசி முடிக்க வர்க்க பேதமின்றி அனைத்து பெண்களும், ஆண்களும் ஆதரவாய் பேசினார்கள். அதைக் கண்டு கருணாகரன் அசந்து விட்டார். அவருடன் சேர்ந்து சிறு முதலாளிகள் சங்கத்தினரும் சந்துருவின் பின்னால் அணி திரண்டார்கள்.

அந்த மாலை நேரத்தில் மிகப் பெரிய எழுச்சியுடன் அறிவிக்கப்படாத பேரணியாய் அனைத்து மக்களும் பூமியதிர நகரத்தை நோக்கி நடந்தார்கள். அவர்களுக்கு தலைமைக் கொடுத்து கூட்டு நடவடிக்கை போராட்டக் குழுவின் முன்னணியினர் சென்றார்கள்.

பெண்களுக்கு முதலிடம் என்பதால், கந்தப்பன் மனைவியும், பொன்னியும் மற்ற தறிக்காரப் பெண்களும் முதல் வரிசையில், கம்பீரமாய் நடைப் போட, கோகிலா அம்மாள் அவர் மகள்கள், என சிறு முதலாளிகள் வீட்டுப் பெண்கள் அடுத்த வரிசையில் இடம் பிடித்திருந்தார்கள். அதற்குப் பின்னால், அங்கம்மாள் தன்னுடன் வேறு சிலரை கூட்டிக் கொண்டு நடந்தாள். வழியில், சந்துரு சமயோசிதமாய் சில காரியங்கள் செய்தான். கருணாகரனையும், மச்சக்காளையுயையும் ஒரு இரு சக்கர வாகனத்தில் முன் கூட்டியே நகரத்துக்கு அனுப்பி, அங்கிருக்கும் சிறு முதலாளிகள் மற்றும் விசைத்தறி தொழிலாளர் களை முடிந்த வரை திரட்டிக் கொண்டு காவல் நிலையத்திற்கு வரும்படி சொல்லி அனுப்பினான்.

17

அப்படியே, ஏழுமலையை தனியே கூப்பிட்டு வசீகரன் வீட்டுப் போன் நம்பர் கொடுத்து அவருக்கு இங்க ஏற்பட்டிருக்கும் சூழ்நிலமை பற்றி தகவல் தரச் சொன்னான். அவரும், கூட்டத்தை விட்டு விலகினார்.

அதே நேரம், சந்துருவின் துல்லியமான கணிப்பின் படி, புத்தூர் போய் விட்டு வந்து மண்டபத்தில் பஸ்ஸை விட்டு இறங்கிய தேவராசைக் கூட்டிக் கொண்டு வயக் காட்டு வழியே கூலி விவசாயிகள் சேரிக்குப் போய் கொண்டிருந்த தோழர்கள் காதில் முழக்கச் சத்தம் கேட்டது.

அவர்கள் ஓரளவு நிலமையை யூகித்து விட்டார்கள். அதை உற்சாகமாய் தேவராசிடம் சொன்னார்கள். அவர்தான் அஞ்சி நடுங்கினார்.

வெகு சீக்கிரம் சென்னை தேசிய நெடுஞ்சாலையை அடைந்த அறிவிக்கப் படாத பேரணி தார் சாலையை அடைத்துக் கொண்டு பீடுநடை போட்டது. முன்னால், பின்னால் என்று எந்த வாகனமும் கூட்டத்தைக் கடக்க இயலவில்லை. பேருந்துகளில் இருந்த பயணிகள் தலைகளை நீட்டி எட்டிப் பார்த்தார்கள். சட்டென மாதேசும், கந்தப்பனும் அந்த வாகனங்களை ஒழுங்குப் படுத்தி வழியனுப்ப முயன்றார்கள்.

சந்துரு நகரத்தின் மையப் பகுதிக்கு வந்தவுடன் பேரணியை தடுத்து நிறுத்தினான்.

அடுத்த சில நிமிடங்களில் தெற்கு வீதியிலிருந்து நகரம் மற்றும் குப்பத்தைச் சேர்ந்த சிறு முதலாளிகள், விசைத்தறி தொழிலாளர்கள், சாரி சாரியாய் மையத்துக்கு வந்தார்கள். அவர்களை மச்சக்காளையும், கருணாகரனும் வழி நடத்திக் கூட்டிக் கொண்டார்கள். அனைத்து மக்களும் முழக்கங்கள் எழுப்பினார்கள்.

அந்த நேரத்தில் கல்லூரி மாணவர்கள் போல் தோற்றமளித்த சில இளைஞர்கள் கூட்டத்தில் இருந்த தேவராசின் மனைவியிடம் வந்து ஏதோ விசாரித்தார்கள். அதைக் கவனித்த மாதேசு சற்று அதிகப்படி யான எச்சரிக்கையில் அவர்களிடம் என்ன வேண்டும்? என்று அதட்டினான்.

ஆனால், அவர்கள் போலீசால் பிடித்துச் செல்லப்பட்ட தேவராசு மகனின் கல்லூரி தோழர்கள் என்று தெரிய அவன் ஏதும் கூறாமல் விட்டு விட்டான். தேவராசின் மனைவி அழுதபடி அவர்களுக்கு தன் மகனுக்கு நேர்ந்த கதியைச் சொல்லி விளக்கினாள். அப்போது நகரத்தின் காவல்துறை அதிகாரி அவசர அவசரமாய் தன்னுடன் பத்துக்கும் மேற்பட்ட காவலர்களை அழைத்துக் கொண்டு மையத்துக்கு வந்தார். அவர்கள் கையில் நீளமாய் லத்திக்கம்பு இருந்தது.

18

மற்ற காவலர்களும் அதே போல் கம்புகள் வைத்திருந்தார்கள். இன்ஸ்பெக்டர் நாற்சந்தியில் வாகனங்கள் ஸ்தம்பித்து நிற்பதைப் பார்த்து அதிர்ந்தார்.

அதை விட நொடிக்கு நொடிக்கு கட்டுக் கடங்காமல் திரளும் கூட்டதைப் பார்த்து மேலும் திகைத்தார்.

அவர், முகத்தில் ஈயாடாமல் நிற்பதைப் பார்த்து அந்த நேரத்திலும் சந்துருவுக்கு சிரிப்பாய் இருந்தது. அதற்கு தகுந்த மாதிரி மாதேசு அவன் காதில் வந்து கூறினான் ''இனுமே நக்கல் பார்ட்டிக்கு சிக்கல் தான்.''என்று.

கோபம் தலைக்கேறிய இன்ஸ்பெக்டர் கத்தினார் ''டேய் பொறுக்கிங்களா... மொதல்ல கொலைக்கிறத நிறுத்துங்கடா.'' என்று.

அதற்கு, மாதேசு சட்டென்று ''அத இன்னொரு பொறுக்கி சொல்லக் கூடாது...'' என்று நக்கலாக சொன்னான்.

அந்த நேரத்தில் மக்கள் முழக்கத்தை நிறுத்தியிருக்க, இன்ஸ் பெக்டரைப் பார்த்து ஊரே சிரித்தது.

அவரால் பல்வேறு விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தானே அவர்கள். அந்த கோபம் உழைக்கும் மக்களுக்கு இல்லாமலா போகும். இத்தனை நாள் அவர் தான் எல்லோரையும் நக்கல் செய்வார். இப்போது அதற்கு அனைவரது முன்னாலும் தக்க பதிலடி கிடைத்திருக்கிறது.

முகம் சிவந்த இன்ஸ்பெக்டர் ''யாரடா பொறுக்கின்னு சொன்னே?'' என்று தன் லத்திக் கம்பை சுழட்டிக் கொண்டு மாதேசை அடிக்க ஓடி வந்தார்.

அதைக் கண்டு அசராத அவன் அசால்டாக ''ஒன்னத்தாஞ் சொன்ன போலீசு. நீ சாதாரண பொறுக்கியில்ல, லஞ்சமாரிப் பொறுக்கி.'' என்று அன்று காவல் அதிகாரியிடம் பட்ட அடிக்கு வார்த்தையால் பழி தீர்த்தான். சந்துரு தன் நண்பனின் கோபத்தை ரசித்தான். இன்ஸ்பெக்டர் செய்வதறியாது ஒரு கணம் திகைத்தார். சட்டென சுதாரித்துக் கொண்டு உரத்த குரலில் எச்சரிக்கை செய்தார்.

''நீங்க என்ன செய்றோம்னு தெரியாம இருக்குறீங்க. நானு ஒடனே மேலிடத்துக்கு தகவல் சொல்லி ஆயுத போலீசை வர வெப்பேன். அவுங்க இங்க துப்பாக்கியோட வரப் போறாங்க. ஒழுங்கா கலைஞ்சுப் போயிடுங்க. இல்லன்னா குண்டடிப் பட்டு சாவீங்க.'' என்று.

19

அதைக் கேட்டு கூட்டத்திலிருந்த ஆண்களும் மட்டுமல்ல, பெண்களும் அசரவில்லை. கந்தப்பண்ணன் மனைவி ஒரு படி மேலே போய் இன்ஸ்பெக்டரிடம் சத்தமாய் சொன்னார்.

''சுடுய்யா சுடு... தெனந்தெனம் சோத்துக்கு சாவுறத வுட ஒரேடியா சாவறோம்.''

''யோவ் போலீசு, இந்த பூச்சாண்டிக்கு நாங்க பயந்தற மாட்டோம். போய் மேலிடத்துக்கு போன் பண்ணு, போ...''

இதை சொன்னது சாப்பாட்டுக்கடை அங்கம்மாள்.

அவ்வளைவுதான். பெண்கள் ஆளாளுக்குப் போலீஸ் அதிகாரியை கேள்வி மேல் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள்.

''எதுக்காவ காலேசுல படிக்கறப் பையன கைது பண்ணே?''

''பெரிய மொதலாளிங்க கிட்ட எவ்வளவு காசு வாங்குனே?''

''கூப்புடு மேலதிகாரிய... நாங்க நாயம் கேக்குறோம்.''

ஆளாளுக்கு கத்த, அந்த நேரத்தில் எதிப்பாராத திருப்பம் ஒன்று நடந்தது. கல்லூரி மாணவர்கள் நாற்பது, அம்பது பேர் தேவராசு மகனுக்காக களத்துக்கு வந்தார்கள். அவர்களில், ஒரு மாணவன் கூட்டத்தின் முன்னால் நின்றிருந்த சந்துருவிடம் வந்து பேசினான்.

இங்கு நிற்பதை விட நகரத்தின் புறவழிச் சாலைக்குப் போய் மறியல் செய்வோம் என்றான். அது நல்ல யோசனையாய் பட சந்துரு எல்லோரையும் கூட்டிக் கொண்டு புறவழிச் சாலைக்கு நகர்ந்தான்.

இன்ஸ்பெக்டர் திகைத்து நின்றார்.

அத்தியாயம்

9

1

அந்த இரவு நேரம் அர்த்தத்துடன் கூடிய நீண்ட மௌனத்தைத் தன் மேல் போர்த்தி யிருந்தது. நெடுஞ்சாலையுடனான அதன் அனுபவத்தில் இது மிகவும் புதிது. எனவே, நடப்பதைக் கண் கொட்டாமல் வேடிக்கைப் பார்த்துக் கிடந்தது. ஏராள மான நட்சத்திரங்களும், நிலவும் அதன் மடியில் உட்கார்ந்து பூமியை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. நிலவொளி போதாதென்று அதிக சக்தி வாய்ந்த மின் விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. அவ்வொளியில் சுற்றி யிருந்த மரங்களில் கூடடைந்திருந்த பறவைகள் தூக்கம் கலைந்து இலைகளை விலக்கிப் பார்த்து வாய் பிளந்தன. அந்த இடத்தில் இவ்வளவு மக்கள் கூட்டத்தை அதுவும் இந்த நேரத்தில் அவை களெல்லாம் தன் வாழ்நாட்களில் இதுவரை பார்த்ததேயில்லை. திருவிழா என்றால் ஊருக்குள் தான் பொதுமக்கள் இருப்பார்கள், இதென்ன நடு ரோட்டில்?

நகரத்தின் நாற்சந்தியில் இருந்து இரவு நெருங்கும் பின்மாலை நேரத்தில், சுமார் இரண்டு பர்லாங் தொலைவில் இருந்த

சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலைக்கு வந்த மக்கள் மூன்று மணி நேரமாய் ஆணியடித்ததுப் போல சாலையை மறித்து அப்படியே உட்கார்ந்து விட்டார்கள். யாரும், எங்கும் நகரவில்லை. ஆனால், முழக்கச் சத்தம் மட்டும் நிற்கவில்லை. ஒருவர் மாற்றி இன்னொருவர் விடாமல் தோழர்கள் முழக்கங்களை எழுப்பிய வண்ணம் இருந்தனர். அதை அனைத்துத் தரப்பு மக்களும் சோர்வின்றி பின் தொடர்ந்தனர்.

சாலையின் இருபுறமும் ஏராளமாய் மைல் கணக்கில் வாகனங்கள் நின்றிருந்தன. அவற்றில், பெரும்பாலும் திருமலைக்கு போக, வர இருந்த வாகனங்கள் தான் அதிகம்.

சக்தி வாய்ந்த மின்விளக்குகள் பொருத்தப்பட்டு, ஏராளமாய் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். முன் வரிசையில் இருந்த காவல்துறை ஜீப்புகளில் வயர்லெஸ் அலறிக் கொண்டிருந்தது. இறங்கி நின்றிருந்த காவல் அதிகாரிகள், அரசு நிர்வாகத்தைச் சேர்ந்த தாசில்தார் மற்றும் வருவாய் அதிகாரி போன்றவர்கள் செய்வதறியாது கையைப் பிசைந்தபடி தவித்துக் கொண்டிருந்தனர். உழைக்கும் மக்களிடமும், அவர்களுக்கு தலைமை ஏற்றிருந்த தோழர்களிடமும் அதிகாரிகள் செய்த சமாதான முயற்சி எந்தவித பயனும் அளிக்கவில்லை. சட்டம், ஒழுங்குப் பிரச்னை என்பதால், மேலதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு.

2

போதாக்குறைக்கு நிறைய பத்திரிக்கையாளர்கள், புகைப்படக் காரர்களோடு செய்தி வேட்டைக்காக களத்தில் காத்திருந்தனர். அவர்கள் முகத்தில் என்ன நடக்குமோ? என்ற பதட்டம் கூடியிருந்தது.

தேவராசின் மகன் இளங்கோவை காவல்நிலையத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று ஆரம்பித்த போராட்டம் மெல்ல பரிணமித்து, சிறு முதலாளிகளின் வேலை நிறுத்தம் மற்றும் வெளியூருலிருந்து பிழைக்க வந்த தொழிலாளர்களின் பிரச்னை என அனைத்தையும் உள்ளடக்கியதாய் மாறி விட்டது.

தோழர்களின் கோரிக்கை இதுதான்.

மாவட்ட ஆட்சியாளரை வரச் சொல்லுங்கள். எங்கள் பிரச்னையை நாங்கள் அவரிடம் சொல்லுகிறோம். வேறு யாரிடமும் எந்த பேச்சும் வைத்துக் கொள்ளத் தயாராக இல்லை என்பதுதான்.

அவருக்கு தகவல் போயிருக்கிறது. ஆனால், ஆட்சியர் சித்தூர் இருந்து இன்னும் வந்து சேரவில்லை. எனவே, அவருக்காக எல்லா தரப்பிலும் காத்திருப்பு நீடிக்கிறது. சாதாரணமாய், இது மாதிரியான மக்கள் போராட்டங்களை, அதுவும் இப்படி சாலையை மறிப்பவர்களை உளவுத்துறையைச் சார்ந்தவர்கள் மக்கள் கூட்டத்தோடு கலந்து எதையாவது சொல்லி மக்களின் உணர்ச்சிகளை தூண்டி விட்டு ஒரு கலவரத்தை உண்டு பண்ணுவார்கள். போலீஸ் இதுதான் சாக்கு என்று அவர்களை தடியடி நடத்தியோ, கண்ணீர் புகைக் குண்டுகளையோ வீசி கலைந்துப் போகச் செய்வார்கள். தேவைப்பட்டால் அவர்களே ஏதாவது ஒரு வாகனத்தை குறிப்பாய் போலீஸ் வண்டிகளை உடைத்து விட்டு போராட்டக்காரர்கள் வன்முறை ஈடுபட்டார்கள் என மக்களை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவார்கள்.

இங்கே, அதெல்லாம் செல்லுபடியாகாது. ஏனெனில், புரட்சியாளர்கள் போராட்டத்தில் கள நாயகர்களாய் நிற்கிறார்கள். அவர்களை ஏமாற்றி மக்களின் உணர்ச்சியை தூண்ட இயலாது. இதை விட, நகரத்தில் உள்ள கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் வேறு தங்கள் நண்பனுக்காக அவர்களுடன் கை கோர்த்துக் கொண்டிருக்கிறார்கள். காவல்துறை அவர்கள் மீது சிறு கீறலை ஏற்படுத்தினாலும் மாநிலத்திலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களும் தெருவில் இறங்கிப் போராட்டம் செய்வார்கள். ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகம் வரையில் மாணவர் அமைப்பு வேறு பலமாய் இருக்கிறது.

3

மேலும், இதை வைத்து ஓட்டரசியல் செய்து என்ன லாபம் பெறலாம் என்று எதிர்க்கட்சியினர் கணக்குப் போடுவார்கள். எனவே, போராடும் மக்களுக்கு எதிராய்,சின்னத் துரும்பையும் அசைக்க முடியாமல் எல்லா உயிர் கொல்லி ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு செய்வதறியாது நின்றிருந்தது காவல்துறை.

அதன், மேலதிகாரிகளுக்கு உள்ளூர கடுமையான ஆத்திரம் மக்கள் மீதும், முன்னணியில் நிற்கும் சந்துரு, மாதேசு, கந்தப்பன், ஏழுமலை, மச்சக்காளை போன்றவர்கள் மீதும் கனன்றுக் கொண்டிருந்தது. சரியான வாய்ப்புக்காக காத்திருந்தார்கள். அப்படி அமைந்தால் உயிர் பலிகள் நிச்சயம். அது ஒருவர் இருவரா? அல்லது கூண்டோடு கைலாசமா? என்பது அந்த நேரத்தில் தான் தெரியும்.

இன்று மாலையில், சந்துரு கொடுத்த தொலைப்பேசி எண்ணை வைத்து ரேணிகுண்டாவில் இருந்த வழக்குரைஞருக்கு தகவல் தந்திருந்தார் ஏழுமலை. வசீகரன், தன்னுடன் அனுராதா தோழரைக் கூட்டிக் கொண்டு ரயிலில் குப்பத்தில் வந்திறங்கி, சாலை மறியல் நடக்கும் இடத்துக்கு கால்நடையாய் வந்து ஆண்கள் மத்தியில் அமர்ந்திருந்தார். அதே நேரத்தில், கட்சியின் அனுமதி பெற்று அனுராதாவும் பெண்கள் மத்தியில் உட்கார்ந்து நேரடியாகக் களம் கண்டிருந்தார்.

எனினும், பேட்டைச் சிறு முதலாளிகள் மற்றும் நகரத்தைச் சேர்ந்தவர் கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சாலையில் உட்கார்ந்திருந்த னர். இந்த போராட்ட அனுபவமெல்லாம் அவர்களுக்குப் புதுசு. ஆனால், ஆண்கள் தான் அப்படியிருந்தார்களே தவிர, சிறு முதலாளிகள் வீட்டுப் பெண்கள் யாரும் பிரிக்கித்தனமாய் பயந்து நடுங்கவில்லை. ஒப்பீட்டளவில், உழைக்கும் வர்க்கப் பெண்களுக்கு போராட்டத்தில் ஈடு கொடுத்தே நின்றார்கள்.

இந்த சமயத்தில், .தேவராசுவை பச்சையப்பனும், ஓபுளியும் சேரிக்குக் கொண்டு போய் பத்திரமாய் சேர்ப்பிக்க, அவர்கள் அங்கிருந்து வேறோரு பாதுகாப்பான இடத்தில் அவரை அழைத்துப் போய் அமர வைத்தார்கள்.

என்றாலும், அவர் ஏதோ திருவிழாவில் காணாமல் போன குழந்தையைப் போல் மலங்க, மலங்க விழித்துக் கொண்டு ஒரு குடிசையில் உட்கார்ந்திருந்தார். தன் மகனுக்கு காவல் நிலையத்தில் என்ன நடக்கிறதோ? போலீஸ் அவனை சித்ரவதை ஏதும் செய்கிறதோ? என நினைத்து அஞ்சி நடுங்கினார். அவரை தோழர்கள் கொஞ்சம் சிரமப்பட்டுதான் சமாதானப் படுத்த வேண்டியிருந்தது.

4

ஒரு சமயத்தில், தேவராசு தனக்கு வயது அம்பதுக்கு மேல் என்பதை மறந்து தனக்கும், தன் குடும்பத்துக்கும் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலமையை நினைத்து தன் மேல் துண்டை வாயில் பொத்திக் கொண்டு குலுங்கி அழ ஆரம்பித்தார். அதுதான் , கொண்டையாவுக்கும், அனுமந்துக்கும் மட்டுமல்ல, பச்சையப்பனுக்கும், ஓபுளிக்கும் கூட மிக சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர்கள், அவரைப் பரிதாபமாய் பார்த்தார்கள்.

தோழர்கள் அவரை ஒரு மாதிரி தேற்றினாலும், அவருக்கு இன்னொரு பிரச்னை தலை தூக்கியது. அந்த விளிம்பு நிலை மக்களின் எளிய குடிசை அவரின் மனதுக்கு ஒப்பவில்லை. உள்ளுக்குள் அசூசையாய் உணர்ந்தார். காலகாலமாய் அந்த மக்கள் மேலிருந்த சாதிப் புறக் கணிப்பே அதற்கு காரணம். எனவே, தானும் அவர்களோடு நகரத்துக்கு வருவதாய் அடம் பிடித்தார். தோழர்கள் அதை ஏற்கவில்லை.

அவரை விட, சாலை மறியலில் உழைக்கும் மக்களோடு இணைந் திருந்த அவரது மனைவி எவ்வளவோ மேல். ஓரளவு தைரியத்துடன் இருந்தார்.

சற்று நேரத்தில், சாலையில் நெடுக நின்றிருந்த வாகனங்களை காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளர் உதவியோடு வழி நகர்த்திக் கொண்டு, போலீஸ் பாதுகாப்புடன் ஒரு அரசு வாகனம் வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கியது. மாவட்ட ஆட்சியர் அல்ல, வட்டத் துணை ஆட்சியர். வாகனத்தில் அவரது பதவி பொறிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் போராட்டக் களத்தில் இருந்த தோழர்களுக்கு சப்பென்று ஆகி விட்டது.

இவ்வளவு பெரிய எழுச்சியுடன் தங்கள் கோரிக்கைகளுக்காக மக்கள் சாலையை மறித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அதை மதித்து தான் வராமல், தனக்கு கீழே உள்ள அதிகாரியை அனுப்பியதில் இருந்தே மாவட்ட ஆட்சியரும் சரி, அரசாங்கமும் சரி, மக்களை எந்த அளவுக்கு கிள்ளுக் கீரையாய் நினைக்கிறார்கள் என்பதை தெளிவாய் தெரிந்துக் கொள்ள முடிந்தது.

அந்த கோபத்தில் தோழர்கள் முழக்கச் சத்ததை இன்னும் அதிகப் படுத்தினார்கள். அது, வந்த அதிகாரியை தொந்தரவு செய்தது.

மேலும், அவருடன் இணைந்து வந்திருந்த மாவட்டக் கண்காணிப் பாளர் அளவு கடந்த எரிச்சலுக்கு உள்ளானார்.

5

அவர் துணை ஆட்சியரை நெருங்கி ''சார், நீங்க ஆர்டர் கொடுத்தா லட்டி சார்ஜ் பண்ணி பப்ளிக்க இங்கயிருந்து டிஸ்போஸ் பண்ணிடலாம்.'' என ஆங்கிலத்தில் வினவினார்.

அதற்கு அவர் ''அதச் செய்றதா இருந்தா நாம்ப ஏன், இங்க வரணும்? நம்ப ஹெட் குவார்ட்டர்ஸ்ல இருந்தே சனங்கள அடிச்சுத் துரத்தச் சொல்லி வயர்லஸ்ல தகவல் குடுத்திருக்கலாமே...'' என்றார்.

மாவட்டக் கண்காணிப்பாளர் விடாமல் ''இல்ல, சார் சனங்களுக்கு ரொம்ப எடம் குடுத்தா ஆன்னா, ஊன்னா இப்புடி ரோட்டுக்கு வந்து ஒக்காந்துடுவாங்க.'' என்று தொடர, துணை ஆட்சியர் சூழ்நிலையை விளக்கி அவரை சமாதானப் படுத்தினார்.

பிறகு, சொன்னார் '' நாம்ப கொஞ்சம் எறங்கிப் போவோம். அவுனுங்க ரொம்ப முண்டுனா அப்புறம், லட்டி சார்ஜ் என்னா? ஃபயரே ஓபன் பண்ணுவோம்.'' என்று.

அவருக்கு, அங்கே, கூடியிருந்த கூட்டத்தை பார்த்து மலைப்பாய் இருந்தது. அவ்வளவு மக்கள் அரசுக்கு எதிராய் களம் கண்டிருப்பார்கள் என்ற எண்ணம் அவருக்கு சிறிதும் இல்லை. எனவே, கூட்ட எண்ணிக்கையை தன்னிடம் வயர்லெஸ்ஸில் குறைத்துக் கூறியிருந்த வருவாய் அதிகாரியைப் பார்த்து முறைத்தார். அதே போலத்தான் மாவட்டக் கண்காணிப்பாளரும் தனக்கு கீழிருந்த அதிகாரியை எரித்து விடுவதுப் போலப் பார்த்தார்.

அந்த நேரத்தில், வருவாய் அதிகாரி துணை ஆட்சியரிடம் அவராக முந்திக் கொண்டு ''மூணு மணி நேரத்துக்கு முன்னால இவ்வளவு சனம் இல்ல சார். நிமிசத்துக்கு நிமிசம் என்னமோ காட்டாத்து வெள்ளம் மாதிரி கூட்டஞ் சேந்துக்கிட்டே இருக்குது சார். நீங்க இன்னும் கொஞ்ச நேரங் கழிச்சி வந்திருந்தா...'' என ஆரம்பித்தார்.

ஏற்கனவே, எரிச்சலில் இருந்த துணை ஆட்சியர் தன் கையை நீட்டி அவர் சொல்ல வந்ததை தடுத்தார். அதே வேகத்தில், ''மொதல்ல, அவுங்களக் கத்தாம இருக்கச் சொல்லு மேன். சத்தம் காதைக் கிழிக்குது.'' என்று இவர் கத்தினார்.

அதைக் கேட்டதும், போராட்டக் களத்தில் இருந்தவர்களிடம் ஓடி வந்த வருவாய் அதிகாரி ''ஏம்பா, கொஞ்சம் சத்தம் போடாம இருங்கப்பா. அதான் சப்-கலெக்டர் வந்துட்டாருல்ல...'' என்று குரலுயர்த்திக் கேட்டுக் கொண்டார்.

சந்துரு முழக்கத்தை நிறுத்தச் சொல்ல, சட்டென அந்த இடம் அமைதியானது. பெருமழை ஓய்ந்தது போன்ற தோற்றம்.

6

வருவாய் அதிகாரி சற்று நிம்மதியுடன் துணை ஆட்சியரிடம் திரும்பி வந்தார். ''சார் சொல்லிட்டேன். அவுங்களும் சத்தம் போடறத நிறுத்திட்டாங்க.'' என்றார் பெருமையுடன்.

அதற்கு அவர் ''அதான் தெரியுதே, போராட்டம் பண்றவுங்க என்ன கோரிக்கை வெச்சிருக்குறாங்க? அத மொதல்ல சொல்லு மேன்.'' என்று கேட்டார். அவர் ஆங்கிலத்தில் கேட்டாலும், பேச்சில் தமிழ் வாடை அடித்தது. ஆள் அதிகார வர்க்கத்தின் அனுபவசாலி என்பதாய் தெரிந்தார். ஆனாலும், இன்னும் நடுத்தர வயதை தாண்டாத தோற்றம். கூர்மையான பார்வையால் கூட்டத்தை அளந்தபடியே பேசினார்.

வருவாய் அதிகாரியிடம் இதற்கு பதில் இல்லை. எனவே, முழித்தார். இனி, இவரிடம் எதைக் கேட்டும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்த துணை ஆட்சியர் தலையில் அடித்துக் கொண்டார்.

கூட்டத்தின் முன் வரிசையில் இருந்த சந்துருவை தன்னிடம் அழைத்து வரும் படி தாசில்தாரை பணித்தார். அவர், அப்படியே செய்ய சந்துரு தான் மட்டும் வராமல் தன்னுடன் மாதேசு, கந்தப்பன், ஏழுமலை என்று போராட்டக் கமிட்டியின் முக்கிய நபர்கள் அனைவரையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு மாவட்ட ஆட்சியரை நோக்கி வந்தான். அதைப் பார்த்த மாவட்டக் கண்காணிப்பாளர் சந்துருவை மட்டும் அனுமதித்து விட்டு மற்றவர்களை தடுத்து விட்டார்.

ஆனாலும், சந்துரு தன்னுடன் மாதேசை மட்டும் விடாப் பிடியாய் இழுத்துக் கொண்டு வந்து விட்டான்.

அவர்கள் இருவருமே கைலி கட்டியிருந்தார்கள். அவனாவது கைலியை இறக்கிக் கட்டியிருந்தான். மாதேசு வேண்டுமென்றே தன் கைலியை இறக்காமல் அப்படியே துணை ஆட்சியர் முன் வந்து அலட்சியமாய் நின்றான். ஒரு மாதிரியாய் அவர், அவனைப் பார்த்தார். அதைப் புரிந்துக் கொண்ட கண்காணிப்பாளர் மாதேசிடம் வந்து ஆங்கிலத்தில் அதட்டினார் ''லுங்கிய எறக்கி வுட்டு, சார் முன்னால கையைக் கட்டிக் கிட்டு நில்லுடா, பிளடி ராஸ்கல்...'' என்று.

அதைப் பார்த்த சந்துரு ''சார் மைண்ட் யுவர் ஓன் பிசினஸ்.'' என்று எச்சரிக்க, அவர் பின் வாங்கினார். அப்போது அங்கே, ஓரமாய்

நின்றிருந்த உள்ளூர் லோக்கல் நக்கல் இன்ஸ்பெக்டர் அவனது தைரியத்தைப் பார்த்து மிரண்டுப் போனார்.

7

ஆனாலும், சுதாரித்துக் கொண்ட கண்காணிப்பாளர் சந்துருவிடம் கோபமாய் ஏதோ சொல்ல வர, அதை கை நீட்டித் தடுத்த துணை ஆட்சியர் ''உன் பெயர் என்ன? என்ன படித்திருக்கிறாய்? நீதான் இந்த கூட்டத்துக்கு தலைவனா?'' என்று ஆங்கிலத்தில் சந்துருவிடம் திரும்பிக் கேட்டார்.

அதற்குரிய பதிலை சொல்லாத சந்துரு ''சார், இங்க நாங்க கலெக்டரத் தான் எதிர்பார்த்தோம். அவர் வராம நீங்க ஏன் வந்தீங்க?'' என்று அவரிடம் தானும் ஆங்கிலத்திலேயே கேள்வி கேட்டான்.

துணை ஆட்சியர் கொஞ்சம் தடுமாறி பிறகு, சுதாரிப்பாய் பதில் சொன்னார் ''தம்பி, கலெக்டருக்கு இன்னிக்கி சி.எம் மோட ஐதராபாத்துல மீட்டிங். அதனாலதான் அவுரு என்ன அனுப்சாரு...'' என்று அவனை சமாதானப் படுத்தினார்.

அவன் அதை ஏற்க மறுப்பது போல் தெரிய, அவர் தொடர்ந்து ''இன்னிக்கி இங்க நாந்தான் கலெக்டருன்னு நெனச்சுக் கிட்டு நீங்க ஒங்க கோரிக்கைகள தாராளமா சொல்லலாம்.'' என்றார்.

அவன் இதை ஏற்பதா? வேண்டாமா? என்று யோசித்தான். போராட்டக் களத்தில் எந்த முடிவையும் சூழ்நிலைக்கு தக்கவாறு அவன் எடுத்துக் கொள்ளலாம். அந்த அதிகாரத்தை கட்சி அவனுக்கு அளித்திருந்தது. எனவே, துணை ஆட்சியரிடம் முதலில் பேசுவோம். அதில், எந்த பயனும் இல்லை என்று தெரிந்தால், அடுத்த கட்டம் என்ன? என்பதை தோழர் அனுராதாவிடமும், வசீகரனிடமும் கேட்டுக் கொண்டு முடிவு செய்வோம் என நினைத்தான்.

அதன் பிறகு தான், அவன் தெளிவான ஆங்கிலத்தில் தன்னைப் பற்றிய விபரங்களையும், போராட்டக் கமிட்டியில் தான் முக்கிய அங்கம் வகிப்பதையும் துணை ஆட்சியரிடம் சொன்னான்.

அவர் உடனே போராட்டத்தின் நோக்கம் என்ன? கோரிக்கைகள் பற்றிய விபரங்களை ஆங்கிலத்தில் கேட்க, அவன் சட்டென்று ''சார்,

ஒங்களுக்கு தமிழ் தெரியும்னு நெனைக்கிறேன். நாம தமிழ்ல பேசுனா மத்தவங்களுக்கும் புரியும்.'' என மாதேசைப் பார்த்தான்.

8

துணை ஆட்சியர் சிரித்தபடி ''நானும், தமிழ்நாட்டுக்காரந் தான் தம்பி, தாராளமா தமிழ்ல பேசுவோம்.'' என்றார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த மாதேசு ''அப்புறம், ஏஞ்சார் மொதல்ல இங்கிலீசுல பேசினீங்க?'' என கேட்க, துணை ஆட்சியர் தடுமாறினார்.

அதைக் கேட்ட சந்துரு ''நம்ப ஆளுங்க எப்பவுமே வெளியூர்ல பாத்துக்கிட்டா இங்கிலீசுல தான் பேசிக்குவாங்க. இதே வேற மொழிக்காரங்களா இருந்தா அவுங்கவுங்க பாசையில பேசிக்குவாங்க. இல்லியா ஐஏஎஸ் சார்.'' என்று நக்கலாக பேச, துணை ஆட்சியருக்கு அவமானமாய் போய் விட்டது.

எனினும், அவர் அதை மறைத்துக் கொண்டார். பிறகு, துணை ஆட்சியர் சந்துருவின் அருகே நெருங்கி வந்து சிநேகபாவத்துடன் அவன் தோளில் கைப் போட்டு தனியே அழைத்து வந்தார்.

''நானும் நெறையா மார்க்சியப் புத்தகமெல்லாம் படிச்சிருக்குறேன்.''

''அப்படியா சார்? படிச்சத மனசுல வெச்சிக்குங்க.''

மூக்குடைப்பட்ட துணை ஆட்சியர் சட்டென தன் தொனியை மாற்றிக் கொண்டார் ''செரிப்பா, இப்ப நா ஒங்களுக்கு என்ன செய்யணும். அதச் சொல்லு.'' என அதிகாரமாய் கேட்டார். சந்துரு விலாவரியாக அவருக்கு ஒவ்வொரு பிரச்னைகளையும் எடுத்துச் சொன்னான்.

கூலிக்கு நெசவு செய்யும் சிறு முதலாளிகளுக்கும், ஜவுளி உற்பத்தி யாளர்கள் எனப்படும் பெரிய முதலாளிகளுக்கும் ஏற்பட்டுள்ள கூலி உயர்வுப் பிரச்னை.

அதே சமயம், விசைத்தறி தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம், போனஸ் நிர்ணயம் எதுவும் முறைப்படி அமல்படுத்தாமல் ஏமாற்றும் சிறு, பெரு முதலாளிகளின் கெட்ட எண்ணம். வந்தேறிகளாய் நடத்தப்படும் விசைத்தறி தொழிலாளர் பிரச்னை. அரசு, இதுவரை

பிழைக்க வந்தவர்களை கண்டுக் கொள்ளாமல் இருக்கும் பிரச்னை என்று கூறி விட்டு, அதற்கு தீர்வுகள் என்ன என்பதையும் விளக்கினான்.

இதையெல்லாம் செவி மடுத்த துணை ஆட்சியர் ''நீ சொல்றதெல்லாம் பாத்தா இதை எல்லாம் தொழிலாளர் நலத்துறைதான் தீத்து வைக்கணும். இதுல எனக்கென்னா வேலையிருக்குது?'' என்று கேணத்தனமாய் கேட்டார்.

9

சற்று கடுப்பான சந்துரு ''ஊர்ல நடக்குற இவ்வளவு பிரச்னைகளை யும் தொழிலாளர் நலத் துறை மட்டுமில்ல சார், மற்ற எந்த அரசுத் துறையும் பூனைக் கண்ண மூடிக்கிட்டக் கதையா எதையும் கண்டும் காணாமல் இருக்குறதனால தான் இந்த மாவட்டத்தோட ஆட்சித் தலைவரை பாக்கணும்னு இந்த சாலை மறியல நாங்க செஞ்சிருக் குறோம். ஆனா, அவுருக்கு பதிலா வந்திருக்குற நீங்க எங்களுக்கு தகுந்த பதில் சொல்லுங்க.'' என்று ஆணித்தரமாய் சொன்னான்.

அது, அவர் மண்டையில் உறைக்க ஐஏஎஸ் அதிச்சியானார். அவன் மறுமுறையும் தன் சில்லி மூக்கை உடைத்து விட்டான் என்பதறிந்துக் கடுப்பானார்.

அவனை ஒரு மாதிரி முறைத்து விட்டு ''செரிப்பா. ஒங்க கோரிக்கை களை மனுவா எழுதிக் குடுத்துட்டு நீங்க கெளம்புங்க. நா கலெக்டர் கிட்ட பேசி நிறைவேத்தி வெக்கறேன்.'' என்றார்.

''என்ன சார், வெளையாடுறீங்களா? இப்பத்தான் சொன்னீங்க. என்ன கலெக்டரா நினைச்சு பேசுங்கன்னு... நிமிசத்துக்கு நிமிசம் பேச்சு மாற்ர ஒங்க கிட்ட இனிமே பேசி ஆகப் போறது ஒண்ணுமில்ல, நீங்க கெளம்புங்க.''

என்ற சந்துரு சட்டென கோபமாய் போராட்டக் களத்துக்கு மாதேசைக் கூட்டிக் கொண்டு புயல் மாதிரி திரும்பி வந்தான். அதே வேகத்தில் சத்தமாய் ''தோழர்களே, துணை ஆட்சியர் பேச்சு மாற்ராரு. நாம்ப அவுரு கிட்ட கோரிக்கை மனு எழுதிக் குடுக்கணுமாம். அவுரு, கலெக்டர் கிட்ட பேசிட்டு சொல்றாராம். இதுக்கு நீங்க ஒத்துக்குறீங்களா?'' என்று கேட்டான்.

உழைக்கும் மக்கள் ஒரே குரலில் மறுப்பு தெரிவித்தார்கள்.

முகம் இருண்டு போன துணையாட்சியரிடம் மாவட்டக் கண்காணிப் பாளர் வந்தார். ''என்ன சார், லட்டி சார்ஜ் பண்ணிடலாமா?'' என்று கேட்டார். சற்று யோசித்த அவர் மளமளவென வந்து தன் வாகனத்தில் ஏறி அமர்ந்தார். அதிலிருந்த வயர்லெஸ்ஸில் யாரிடமோ பேசினார். அதைப் பார்த்த உள்ளூர் சிறு முதலாளிகளுக்கு அல்லு கழண்டு விட்டது. நிச்சயம், துணை ஆட்சியர் கலெக்டரிடம் தான் பேசுகிறார். அவர் கூட்டத்தை அடித்தோ, துப்பாக்கியால் சுட்டோ நடுரோட்டி லிருந்து விரட்டச் சொல்லி உத்திரவு பிறப்பிக்கப் போகிறார். நம் கதை இனி, அவ்வளவுதான். இந்த விசைத்தறி தொழிலாளர்களை நம்பி வந்தது தப்பாய் போய் விட்டது.

10

யாரோ எப்படியோ போகட்டும். நாமும், நம் பெண்டாட்டிப் பிள்ளைகளும் உயிர் பிழைத்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

முதல் ஆளாய் கருணாகரன் கூட்டத்திலிருந்து பதட்டமாய் எழுந்து நின்றார். தன் மனைவியைப் பார்த்து சத்தமாய் ''எழுந்துருப் புள்ள ஊட்டுக்குப் போலாம்...'' என்று அதட்டினார்.

அதைக் கேட்ட அவர் மனைவி சற்றும் நகராமல் ''எல்லாரோட சேந்து போலாம். கொஞ்சம் இருங்க.'' என்று சமாதானமாய் சொல்ல, அவர் ''ஏய், இந்த தறிக்கார வந்தேறி நாய்ங்க நம்பளக் கொல்லப் பாக்குறாங்கடீ. போலீசு சுட்டுத் தள்ளப் போவுது வா, போயிர்லாம்'' என்று கத்த, அவரது பயத்தைப் பார்த்த மாதேசு, ''யோவ், ஒக்காருய்யா... இங்க இருக்குறவுங்கள்லாம் மனுசருயில்லியா? ஒனக்கு ஒன்னுசுருதான் முக்கியமா?'' என்று சத்தம் போட்டான்.

அதைக் கேட்காத கருணாகரன் தன் மனைவியை வலுக்கட்டாயமாய் கையைப் பிடித்து இழுக்க, அந்த பெண்மணி அலற, சட்டென எழுந்த மாதேசு அவரை சப்பென்று ஓங்கி அறைந்தான். கருணாகரன் அவனைத் திட்ட வாயெடுக்க நாலாபுறமும் இருந்து அவருக்கு சரமாரியாய் அடிகள் விழுந்தன. அவர் அடியை வாங்கிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்தார்.

அதே நேரத்தில், வயர்லெஸ்ஸில் பேசி விட்டு தன் வாகனத்தை விட்டு இறங்கிய துணை ஆட்சியர் கூட்டத்தை ஒரு முறை நிதானமாய் பார்த்தார். அந்த பார்வை ஒரு பீதியை ஏற்படுத்துவதாய் இருந்தது.

அதை உணர்ந்த சந்துரு, வந்தது வரட்டும் என்று உறுதியாய் இருந்தான். அவனுக்கு இந்த போராட்டத்தின் வெற்றியில் துளியும் நம்பிக்கை குறையவில்லை. முழக்கச் சத்தமும் நிற்கவில்லை.

ஆயினும், சில நொடிகள் தான் என்றாலும், மிக முக்கியமான நேரமாய் அது பட்டது.

அப்போது துணை ஆட்சியர் சந்துருவை கையசைத்து தன்னிடம் கூப்பிட்டார். அவன் தயங்க, ஒரே நேரத்தில் வசீகரனும், தோழர் அனுராதாவும் ''தோழர் எந்திருச்சிப் போங்க...'' என கட்டளை யிடுவது போல கூறினார்கள். அவர்களது மார்க்சிய நடைமுறை அறிவு இந்த சாலை மறியல் போராட்டம் இறுதிக் கட்டத்தை எட்டி விட்டது என்ற யதார்த்தத்தைக் சரியாய் கணித்தது.

சந்துரு, தோழர்கள் சொன்னதை மீற முடியாமல் துணை ஆட்சியரின் வாகனம் அருகே சென்றான்.

11

சட்டென அவர், அவனது முகத்தைப் பார்த்து சிரித்தார். அவன் புரியாமல் பார்க்க ''கலெக்டர் நீங்க சொன்ன மாதிரியே பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லி ஆர்டர் போட்டுட்டாரு.'' என்று. துணை ஆட்சியர் சொன்ன போது போன உயிர் திரும்ப வந்தது போல் இருந்தது.

சட்டென அவன் கூட்டத்தை திரும்பிப் பார்த்து ''தோழர்களே... அரசாங்கம் பேச்சு வார்த்தைக்கு ஒத்துக்கிச்சி...'' என்று கத்தினான். ஹோவென்று ஆரவாரத்துடன் மக்கள் எழுந்து நின்றார்கள். அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. அதே போன்ற மனநிலையை தோழர்களும் மாணவர்களும் வெளிப் படுத்தினார்கள்.

அவர்கள் மட்டுமா, மறியல் களத்தைச் சுற்றியிருந்த அந்தப் பகுதியின் கிராம மக்கள் மற்றும் தங்கள் வாகனங்களை நிறுத்தி விட்டுக் காத்திருந்த ஓட்டுநர்கள், பேருந்துப் பயணிகள் அனைவரும் நிம்மதியும், மகிழ்ச்சியும் கலந்த மனநிலைக்குள்ளானார்கள்.

அதன் பிறகு, அடுத்தக் காரியங்கள் மளமளவென நடந்தேறின. நகரத்தில் உள்ள அரசுக் கல்லூரியில் இரவோடு இரவாய் பேச்சு

வார்த்தை வைத்துக் கொள்வதென்றும், பெரு முதலாளிகள், சிறு முதலாளிகள், விசைத்தறி தொழிலாளர்கள், அரசுத்துறை அதிகாரிகள் குறிப்பாய் தொழிலாளர் நலத்துறை ஆணையர் என அதில், கலந்து பேசுவதென்றும் முடிவாயிற்று.

அப்போது நேரம் இரவு பத்துமணியை தாண்டி விட்டது. அதற்குச் சாட்சியாய் சென்னை நோக்கிச் செல்லும் விரைவு ரயில் தடதடத்துச் செல்லும் ஓசை தெளிவாய் கேட்டது. மரங்களில் இருந்த பறவைகள் நிம்மதியாய் கூடுகளில் உறங்கச் சென்றன. மக்கள் வழி விட பேருந்துகள் சீராகப் புறப்பட்டன. அதில், இருந்த ஒரு சில பயணிகள் வாழ்த்துவதுப் போல கையசைத்தனர்.

ஆயினும், இந்த உற்சாகத்தில் தோழர் அனுராதாவும், வசீகரனும் அவ்வளவாய் கலந்துக் கொள்ளவில்லை. அவர்களுக்கு நன்றாய் தெரிந்திருந்தது,

உழைக்கும் மக்களின் போராட்டம் பாதி கிணறைத் தான் தாண்டியிருக்கிறது. முழு வெற்றி என்பது பேச்சு வார்த்தை நிறைவாய் முடிவதில் தான் இருக்கிறது. அதில், எந்த சிக்கலும் ஏற்படக் கூடாதேயென்ற அக்கறையும், கவலையும் அவர்கள் முகத்தில் வெளிப்படையாய் தெரிந்தது.

12

சந்துருவையும், மற்ற போராட்டக் குழுவைச் சேர்ந்த தோழர்கள் அனைவரையும் தனியாக அழைத்து பேச்சுவார்த்தையில் யாரெல்லாம் கலந்துக் கொள்ள வேண்டும்? என்னவெல்லாம் பேச வேண்டும்? என்று ஆலோசித்தார்கள்.

அவர்கள் நெடுஞ்சாலையை விட்டு கொஞ்ச தூரம் தள்ளி வந்து ஒரு வறண்ட வயல் வெளியில் நின்று பேசினார்கள்.

சந்துரு முதலிலேயே கேட்டான் ''இப்ப சாலை மறியல்ல கலந்துக் கிட்ட சனங்கள வூட்டுக்கு அனுப்சிடலாமா?'' என்று

அதற்கு அனுராதா ''வூட்டுக்கு போகணும்னு சொல்றவங்கள மட்டும் அனுப்புங்க. மத்தவங்க, அப்புடியே பேச்சு வார்த்தை நடக்குற காலேஜ் மைதானத்துக்கு வரட்டும்.'' என்று சொல்ல, சந்துரு யோசித்தான். அதைப் பார்த்த வசீகரன் காரணம் கேட்டார்.

''அதுக்கில்ல தோழர், சனங்க எல்லாரும் பசியோட களைச்சுப் போயிருப்பாங்க. நாம்ப நடத்தப் போற பேச்சு வார்த்தை எப்ப முடியுமோ? அது வரிக்கும் அவுங்க தாங்குவாங்களா?'' என்று வினவினான்.

அதை உணர்ந்த அனுராதா மக்களின் பசியைப் போக்க என்ன செய்வது? என்று யோசித்தார். அது மட்டுமல்லாமல், முன்னணித் தோழர்களோடு தானும், வசீகரனும் பட்டினி கிடப்பது அப்போது தான் அவரது நினைவுக்கு வந்தது. அனைவரும் சாப்பிட கையில் காசும் கிடையாது என்ற இன்னொரு உண்மை உறைக்க, லேசாய் அவருக்கு மலைப்பு தட்டியது.

அப்போது சற்று தொலைவில் யாரோ நின்றிருந்தார்கள். சந்துருவின் பெயர் சொல்லி அழைத்தார்கள். இருட்டில் ஆள் தெரியவில்லை. ஆனால், அது பெண் குரல் என்பதால், சாலை மறியல் போராட்டத்தில் கலந்துக் கொள்ள வந்த பெண்களில் ஒருவராய் இருக்கலாம் என்று நினைத்த அவன் நெருங்கிப் போய் பார்க்க முயன்றான்.

ஆனால், அவனைத் தனியாகப் போக அனுராதா அனுமதிக்கவில்லை. ''யாரா இருந்தாலும் இங்க வாங்க...'' என்று அவர் உரத்துக் குரல் கொடுத்தார்.

அவர் அப்படிச் செய்ததற்கு காரணம் உண்டு. போலீஸ் உளவுத் துறை முன்னணி தோழர்களை இரவு நேரத்தில் அதுவும், தனியாக கிடைத்தால் ஏதேனும் செய்ய முயற்சி செய்யலாம் என்ற அச்சம் தான் அது. பெண்களையும் அதற்கு பயன்படுத்தக் கூடும்.

13

அப்போது, அனுராதாவின் குரல் கேட்டு அவர்கள் இருந்த இடத்துக்கு தயக்கமாய் மெல்ல நடந்து வந்தது வேறு யாருமல்ல...

சரிதா தான் அது.

அவளை யாரென்று தெரியாத அனுராதா ''யார் நீங்கள்? என்ன வேண்டும்?'' என்று வினவினார். அது சற்று அதட்டலாய் தெரியவே. அவள் தான் எதற்காக அங்கு வந்தேன் என்பதை சொல்ல தயங்கினாள்.

சந்துரு உட்பட மாதேசு, கந்தப்பன், ஏழுமலை, சிற்பி, மச்சக்காளை என்று அனைத்து தோழர்களும் அவளை குழப்பமாய் பார்த்தார்கள்.

ஆயினும், மெல்ல நகர்ந்த சந்துரு அவளை தனியே அழைத்து வந்து ''என்ன வெசயம் சரிதா? இந்த நேரத்துல இங்க எதுக்கு வந்தே?'' என்று குழப்பமாய் கேட்டான்.

''நீங்கெல்லாம் பசியோட இருப்பீங்கல்ல, சோத்துக்கு என்னா பண்ணுவீங்க''

''செரி அதுக்கு என்னா இப்போ?''

''நூறு நூத்தம்பது பொட்டலம் சாம்பார் சாதம் கொண்டாந்திருக்குறேன். நம்ப தோழர்களும், நீங்களும் ஒக்காந்து சாப்புடுங்க.''

அவன் இன்ப அதிர்ச்சிக்குள்ளானான். ''நெசமா சொல்றே?'' என்று நம்ப முடியாமல் கேட்டான்.

''நா எதுக்கு பொய் சொல்றேன். அதா ரோட்டு மேல ஒரு ட்ரை சைக்கிள் நிக்குது பாருங்க. அதுல நாலஞ்சு மூங்கக் கூடைல நானும், எங்காளுங் களும் கொண்டாந்து இருக்குறோம்.'' என்று சரிதா கையை நீட்டிக் காட்டினாள்.

நெடுஞ்சாலையின் போக்குவரத்தில் வாகனங்களின் முகப்பொலியில் நன்றாகவே தெரிந்தது அந்த சரக்கு மிதி வண்டி. அதனருகில், சில பெண்கள் நின்றிருப்பதும் கண்ணுக்குப் புலப்பட்டது.

சந்துரு அதிசயித்தான். அந்த நேரத்தில் அவள் அவன் கண்ணுக்கு மிக உயர்வாய் தெரிந்தாள்.

தன்னை அடக்கிக் கொள்ள இயலாமல் சரிதாவின் தலையில் செல்லமாய் தட்டி ''ஆமா, எங்களுக்கு சாப்பாடு வேணும்னு ஒனக்கு எப்புடி தெரியும்?''என்று அன்பாய் கேட்டான்.

14

அவள் வெடுக்கென்று ''ஆமா, இதுக்குப் போயி ஆராய்ச்சி பண்ணனுமா? நேரத்துக்கு மனுசருக்குப் பசி எடுக்காதா? ஆம்புள, பொம்புள எல்லாரும் கொலப் பட்டினியாத்தான ரோட்ல வந்து ஒக்காந்து இருக்குறீங்க. நீங்க எல்லாம் எங்க போயி சோறு திம்பீங்க?'' என்று கேட்டாள்.

பிறகு, ''சாயந்தரம் நீங்க சனத்தோட ஊருக்குள்ள வந்ததையும், அப்புறம், பைபாசுக்கு போறதையும் ஒரு ஓரமா தெருவுல நின்னுப் பாத்துட்டு எங்க பொம்பளைங்க கொஞ்சம் பேரு ஒங்க எல்லாத்துக்கும் எதுனாச்சும் பண்ணனும்னு நெனச்சுதான் சோத்துப் பொட்டலம் ஒரு ஓட்டல்ல சொல்லி தயார் செஞ்சோம்.'' என்றாள்.

எவ்வளவு பெரிய காரியம் இது.

பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்த பெண்களுக்கு இரக்க மனப்பான்மை இருப்பது நல்ல விசயம். ஆனால், அதே நேரத்தில், தன் சூழ்நிலை உணர்ந்து போராட்டக்காரர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் வந்தது மிக முக்கியம்.

அதுவும், அந்த எண்ணத்தை இந்த நேரத்தில் சரியாக செயல்படுத்திய சரிதாவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவளும், சிநேகிதிகளும் போராளிகள் மீது நேசம் கொண்டு உணவு கொடுத்தார்கள் என்பது போலீசுக்கு தெரிந்தால், அவர்களுக்கு ஆபத்து வரலாம். பாலியல் தொழில் செய்ய முடியாமல் கூட ஊரை விட்டு விரட்டப்படலாம். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர்கள் உதவ முன் வந்தது வர்க்க உணர்வு அல்லாமல் வேறென்ன.

ஆனால், சாலையோரம் குழந்தைக் குட்டிகளுடன் ஒதுங்கி நிற்கும் நிறைய மக்களுக்கு இந்த சாப்பாடு பொட்டலங்கள் போதுமா? அவை, யானைப் பசிக்கு சோளப் பொரியாகத்தானே இருக்கும். சரி, முன்னணித் தோழர்கள் பசியைப் பொறுத்துக் கொண்டு மக்களை சாப்பிட வைக்கலாம். அல்லது, இருப்பதை பகிர்ந்து உண்ணலாம். அதுவும் முடியாமல் போனால்... வேறெதாவது வழி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சந்துரு, சரிதாவைக் கூட்டிக் கொண்டு தோழர்கள் நின்றிருந்த இடத்துக்கு வந்தான்.

இந்த இடைப்பட்ட நேரத்தில் மாதேசு, தோழர் அனுராதாவிடமும், வசீகரனிடமும் சரிதா யார்? என்பதை சொல்லி வைத்திருந்தான். எனவே, அவர்கள் அவளை அங்கீரிப்பதைப் போல சின்ன சிரிப்புடன் வரவேற்றார்கள்.

தோழர் அனுராதா, சரிதாவை ''வாங்க...'' என்று வாய் நிறைய கூப்பிட்டார்.

15

அப்போது சந்துரு அவரிடம் அவள் சாப்பாடு பொட்டலம் தயார் செய்து கொண்டு வந்திருப்பதைச் சொல்ல, அதைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். சட்டென அவளின் கையைப் பற்றி தன்னருகே இழுத்த அனுராதா ''நல்ல காரியம் பண்ணீங்க சரிதா'' என வாஞ்சையுடன் சொன்னார். சரிதாவுக்கு மெய் சிலிர்த்து அடங்கியது.

அவள் சந்துருவை திரும்பிப் பார்த்தாள். வசீகரனும் மற்றவர்களும் சரிதாவை வாய் விட்டுப் பாராட்டினார்கள்.

அப்போது அவள் கேட்டாள் ''நாங்க நெனச்சத வுட இங்க கூட்டம் நெறையா இருக்குது. இந்த சோத்துப் பொட்டலம் போதுமா?'' என்று பரிதாபமாய்.

அதற்கு சந்துரு ''கண்டிப்பா பத்தாது சரிதா. வேற என்னாப் பண்றதுன்னு தான் தெரியல. அதுவும், இந்த ராத்திரி நேரத்துல...'' என்று வருத்தமாய் பதில் சொன்னான்.

''ஐய்யய்ய... இதுக்கு எதுக்கு கவலப்படறீங்க? நகரத்துல, இந்த நேரத்துல எல்லா ஓட்டலும் தொறந்து தான் இருக்கும். இட்லி, தோசை, பரோட்டா எது வேணும்னாலும் கெடைக்கும். ''

''கெடைக்கும் சரிதா, ஆனா...'' என்று அவன் இழுத்தான்.

''என்ன ஆனா...''

''டிபனு வாங்கப் பணம் வேணுமுல்ல...'' என்று சந்துருவை தான் முந்திக் கொண்டு சொன்னான் மாதேசு.

அந்த நேரத்தில் சட்டென சந்துரு அவனை அனுப்பி கோகிலா அம்மாள், அங்கம்மாளை கூட்டிக் கொண்டு வரச் சொன்னான். அவனும் போய் வெகு சீக்கிரம் அழைத்து வர, சந்துரு சாப்பாட்டுக்கு பணம் தேவை என்பதை அவர்களிடம் கூறினான். கருணாகரனை, மாதேசு அடித்ததால் அவர் சோர்ந்து விட்டார். எனவே, சிறு விசைத்தறியாளர்களின் பொறுப்பை கோகிலா அம்மாள் ஏற்றுக் கொண்டு கொஞ்சம் பணத்தை வசூலித்துக் கொண்டு வந்து தரும்படிக் கேட்டுக் கொண்டான். அவர் அதற்கு ஆவன செய்வதாய் கூறினார்.

ஆனால், எப்படியும் சற்று கால தாமதமாகும். அதுவரை பசித்திருப் பவர்களுக்கு என்ன தருவது? அப்போது சந்துரு, சரிதாவை அவர்கள் இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்து அவள் செய்த காரியத்தையும் சொல்ல நெகிழ்ந்துப் போன அவர்கள் அவளுக்கு நன்றி கூறினார்கள்.

16

அங்கம்மாள் ''நல்ல காரியம் பண்ணம்மா, நீதான் இப்ப எங்களுக்கு அன்னலட்சுமி. இத என்னிக்கும் மறக்க மாட்டோம்.'' என்றாள்.

கோகிலா அம்மாள் இந்த நெருக்கடியான நேரத்தில் சரிதா கொண்டு வந்த உணவை தாங்கள் மட்டுமல்ல தங்கள் தரப்பும் உண்ணும் என்று உறுதி கூறினார். அதே நேரம், அவள் கொண்டு வந்திருந்த சாப்பாட்டையும், இனி வாங்குவதையும் எங்கு வைத்து சாப்பிடுவது? என்று யோசித்தார்கள்.

பேச்சுவார்த்தைக்கு திட்டமிடப்பட்டிருக்கும் இடமான நகரத்தின் கல்லூரி மைதானத்திலேயே மக்களுக்கு பொட்டலங்களை விநியோகித்தால் என்ன? அதற்கு கல்லூரி நிர்வாகம் ஒத்துக் கொள்ளுமா? என்ற கேள்விகள் எழுந்தது.

அப்போது சாலை மறியல் போராட்டத்துக்கு ஒத்துழைத்த அந்த கல்லூரியின் மாணவர்கள் பற்றிய நினைவு வந்தது. அவர்களும் இன்னும் கலையாமல் மக்களுடன் ரோட்டோரமாகத் தான் நின்றிருக்கிறார்கள். எனவே, மாதேசு போய் அவர்களில் சிலரை அழைத்து வந்தான்.

வந்த மாணவர்கள் அனைவரும் உறுதியானவர்களாய் இருந்தது இன்னும் நல்லதாய் போய் விட்டது. அவர்களுக்கு முதலில் போராட்டக் குழுவின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொண்டார் வசீகரன். மாணவர்கள் அதைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை.

அவர்களில் சின்னதாய் தாடி வைத்து கறுத்த நிறத்தில் இருந்த மாணவன் சொன்னான் ''சார், போலீஸ் ஸ்டேசன்ல இருக்குற எங்க காலேஜ் ஸ்டூடண்டை நீங்க எல்லாரும் மொதல்ல வெளிய கொண்டாந்தாப் போதும். ஒங்களுக்கு நாங்க எந்த ஒத்துழைப்பும் குடுப்போம்.'' என்றான்.

வசீகரன் ''கவலையேப்படாதீங்க அது எங்க பொறுப்பு.'' என்று உறுதி கொடுத்தார். பிறகு, தற்போது எழுந்துள்ள சாப்பாடு இடப் பிரச்னைப் பற்றி சொல்ல, அவன் ''என்ன சார், இப்புடிக் கேட்டுட்டீங்க. தாராளமா சனங்க காலேஜ் காம்பசுக்குள்ற ஒக்காந்து சாப்டட்டும். அங்க, குடிக்க, கை கழுவ தண்ணி வசதியும் இருக்குது. நிர்வாகம் நாங்க சொன்னா கேட்கும்.'' என சந்தோசமாய் சொன்னான். அவன் சொன்னப்படியே மக்கள் எல்லோரையும் காலேஜ் மைதானத்துக்கு அழைத்துப் போவதென்றும், சரிதா கொண்டு வந்த உணவுப் பொட்டலங்களையும், ஓட்டல்காரர்களிடம் இனி வாங்கப் போகும் பார்சல்களையும், அங்கேயே வைத்து மக்களுக்கு தருவதென்று முடிவாயிற்று. அதே சமயம், இந்த பொறுப்புகளை தாங்களும் பகிர்ந்துக் கொள்ள மாணவர்கள் முன் வந்தார்கள். பிரச்னை எளிதாய் தீர்ந்தது.

17

கூலி விவசாயிகள் அமைப்பைச் சேர்ந்த கொண்டையாவும், அனுமந்துவும் மற்றும் பச்சையப்பனும், ஓபுளியும் மறைவிடத்தில் இருக்கும் சிறு விசைத்தறி முதலாளிகள் சங்கத் தலைவர் தேவராசை அழைத்துக் கொண்டு பேச்சுவார்த்தை நடக்கும் இடத்துக்கு வருவதற்கு தோழர்கள் அனுமதி கொடுத்தார்கள். தாங்களும், உடனே அங்கே புறப்பட்டார்கள்.

நகரத்துக்கு செல்லும் நேரத்தில் நடந்தபடியே சந்துரு, மாதேசு, வசீகரன், அனுராதா நால்வரும் பேச்சுவார்த்தையை நெளிவு, சுளிவாய் எப்படி நடத்துவது? என ஆலோசித்தார்கள்.

தொழிலாளர்கள் சார்பாய் பேச முதல் இருவரும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். தோழர் வசீகரன் அவர்களுக்கு ஒத்துழைப்பது என்றும், அதேசமயம் சிறு முதலாளிகள் சொதப்பாமல் இருக்க, அவர், அவர்கள் பக்கமும் போய் உட்காருவது என்றும் முடிவானது.

தோழர் அனுராதா மக்கள் மத்தியில் நான் இருக்கிறேன் என்று கேட்டுக் கொண்டார். அப்போதுதான் உளவுத்துறை கூட்டத்தில் புகுந்து குட்டையை குழப்பாமல் இருக்கும்.

அந்த நேரத்தில், மறியல் நடந்த இடத்தில் பேட்டை சிறு முதலாளி கருணாகரனை மாதேசு, அடித்ததுப் பற்றிப் பேச்சு வந்தது. தோழர்

அனுராதா அப்படிச் செய்தது சரிதான் என்று அவனைப் பாராட்டினார்.

மேலும் அவர் ''அந்தாளோட பயத்தால சனங்க கிட்ட பதட்டம் வந்துடுமோ, கடைசி நேரத்துல இப்புடி பண்றாரேன்னு நா நெனச்சென். தோழர் மாதேசு அவருக்கு அந்த அறையக் குடுக்கலன்னா, அடங்கி ஒடுங்கி ஒக்காந்து இருக்க மாட்டாரு. சில சமயத்துல இது மாதிரியான அதிரடி நடவடிக்கை நம்பளுக்கு தேவையாத்தான் இருக்குது.'' என சிரித்தார்.

அதற்கு சந்துரு ''சொல்லிட்டீங்கல்ல, சும்மாவே மாதேசு ஊர்ல எந்த மொதலாளிய அடிக்கலாம்னு சொறிப் புடிச்சவன் கையை கீற்ன மாதிரி திரிவாப்ல. இனிமே, கள்ளுக் குடிச்ச கொரங்காட்டம் ஆடுவாப்ல பாருங்க...'' என்று கிண்டலடித்தான்.

அப்போது பட்டென்று மாதேசு செல்லமாய் அவன் முதுகில் ஒன்று வைக்க, சந்துரு ''பாத்தீங்களா தோழர். நாஞ் சொன்னத நிரூபிக்கிறான்.'' என்று அதற்கும் கேலி பேச, தோழர்கள் கலகலவென்று சிரித்தார்.

18

அதற்குள், நகரத்தின் கல்லூரி மைதானம் வந்து விட மீண்டும் அவர்கள் பேச்சுவார்த்தைப் பற்றி பேசத் தலைப்பட்டார்கள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் முத்தரப்பும் ஒன்றாய் கூடியது. கல்லூரியின் கூடம் ஒன்று உட்கார்ந்துப் பேச தோதாய் அமைந்திருந்தது. முதலில், பேச்சுவார்த்தையை தொடங்கி வைத்து சிற்றுரையாற்றிய துணை ஆட்சியர் பிரச்னைகள் சுமுகமாய் தீர ஒத்துழைக்க வேண்டுமென அனைத்து தரப்பையும் சம்பிரதாயமாய் கேட்டுக் கொண்டார்.

அத்தியாயம்

10

1

கீழ்வானம் மெல்ல சிவக்கத் தொடங்கியது. உலகத்தின் வேறு பகுதிகளுக்கு வெளிச்சம் தரப் போயிருந்த கதிரவன் அவசரமாய் தன் கடமையை முடித்து விட்டு வெகு சீக்கிரமாய் விடியலின் வாசலுக்கு வந்து விட்டதாய் தோற்றம். அவனை வரவேற்க மறந்த விடிவெள்ளியும் மற்ற நட்சத்திரங்களும் இமைக் கொட்டாமல் பூமியையே பார்த்துக் கொண்டிருந்தன. நிலவும் கூட உறங்கச் செல்லவில்லை. அதன் முகத்தில் ஆர்வம் படிந்திருந்தது. மேகங்கள் அலையாமல் ஆணியடித்தது போல ஒரே இடத்தில் கூட்டமாய் நின்றிருந்தன. மரக் கிளைகளில் கூடுகளில் இருந்த பறவைக் குஞ்சுகள் காலைத் தீனிக்காய் கரைந்துக் கிடந்தன. அவற்றை, சமாதானப்படுத்த மறந்த தாய் பறவைகள் கவலையுடன் கீழே பார்த்துக் கொண்டிருந்தன. மொத்தத்தில், அந்த இரவு முழுக்க மனிதர்களோடு சேர்ந்து இயற்கையும் தூங்கவில்லை.

முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடந்துக் கொண்டிருந்த கல்லூரி வளாகம் முழுவதுமே கனத்த மௌனம் சூழ்ந்திருந்தது. கிட்டதட்ட ஊர் முழுக்கவே அப்படித்தான் இருந்தது.

நகரத்திலும், பேட்டையிலும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் காலகாலமாய் வந்தேறிகள் என்ற பட்டத்தைச் சுமந்துக் கொண்டு, நாய்களை விட கேவலமாய் தங்கள் வாழ்க்கையை நகர்த்திக் கிடக்கும் விசைத்தறி தொழிலாளர்கள் அனைவருக்கும் இன்றைய பொழுது மிக முக்கியமானது. சொந்த ஊரை விட்டு வந்து ஏராளமான அவலங்களைச் சுமப்பவர்கள் அவர்கள். இதுவரை தாம் பட்ட அவமானங்களுக் கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கப்படுமா? அல்லது, தோற்றுப் போய் அடிமைகளாய் மீண்டும் முதலாளிகளின் தறிப் பேக்டரிகளில் வேலை செய்ய வேண்டியது கட்டாயமாய் தொடருமா?

வெற்றி பெற்றால் முதலாளிகள் சும்மாவா இருப்பார்கள்? அவர்களின் சுரண்டல் கொடுமைகள் கூடுதலாகும். தொட்டதற்கெல்லாம் ஏகடியம் பேசுவார்கள். தம் கையிலிருக்கும் அடிமைச் சங்கிலியை இறுக்கிப் பிடிப்பார்கள் .அதையெல்லாம் நினைக்கும் போதே தொழிலாளர்களின் நெஞ்சங்கள் நடுங்கின.

2

சிறு முதலாளிகளுக்கும் இதே நிலமைதான். ஆனாலும், ஒரு வித்தியாசம் இருக்கிறது. பெரிய முதலாளிகளுக்கு, விசைத்தறி தொழி லாளர்கள் வெளியூர் அடிமைகள். இவர்கள் உள்ளூர் அடிமைகள் அவ்வளவுதான்.

நகரத்தில் உள்ள டீக் கடைகள், உணவு விடுதிகள், பெட்டிக் கடைகள் அனைத்தும் வியாபார நோக்கமின்றி இரவு முழுக்க திறந்தே இருந்தன. அதன் உரிமையாளர்கள் கல்லூரியின் உள்ளரங்கத்தில் நடக்கும் பேச்சுவார்த்தையை பெரிதும் எதிர்நோக்கியிருந்தனர். துணிக் கடைகாரர்கள், மளிகைக் கடைக்காரர்கள் கூட, தமது கடைகளை பூட்டி விட்டு வாசல் படியில் உட்கார்ந்திருந்தனர். எந்த ஒருஊரிலும், பிரதானமான தொழில் நன்றாய் நடந்தால்தான், மற்ற வியாபாரங்கள் சிறப்பாய் இருக்கும். தொழில் அமைதி கெட்டால், ஊரின் நிம்மதி போய் விடும். எனவேதான், எல்லா தரப்பினரும் பேச்சுவார்த்தை முடிவுக்காக காத்திருந்தனர்.

கல்லூரியின் உள்அரங்கத்தில், இரவைப் பகலாக்கும் மின்விளக்கு வெளிச்சத்தில் நள்ளிரவில் தொடங்கிய முத்தரப்புப் பேச்சுவார்த்தையில், வரிசைக் கிரமமாய் ஆரம்பித்து ஒவ்வொரு தரப்பினரின் பிரச்னைகளும் அலசப்பட்டன.

பெரு முதலாளிகள், சிறு முதலாளிகள் என சுரண்டும் வர்க்கங்களும், துணை ஆட்சியர், வருவாய் அதிகாரி, தாசில்தார், தொழிலாளர் நல அலுவலர், காவல் துறை அதிகாரிகள் என அதிகார வர்க்கத்தின் அனைத்துப் பிரிவினரும் மற்றும் இவர்களால் ஏய்க்கப்படும் தொழிலாளர்களின் பிரதிநிகளாய் சந்துரு, மாதேசு மற்றும் இவர்களுக்குப் புரட்சிகர கட்சியின் வழிகாட்டியாய் தோழர் வசீகரனும் பேச்சுவார்த்தையில் அமர்ந்திருந்தனர்.

ஆனால், முத்தரப்பிலும் அவரவர் வர்க்க நிலைப்பாட்டுக்கு தக்கவாறு அவர்கள் அணிந்திருந்த உடைகளில் வேறுபாடுகள் இருந்தன.

பெரு முதலாளிகள், சிறு முதலாளிகள் வெள்ளை வேட்டிச் சட்டை என்றால், அதிகாரிகள் பேண்ட், சட்டையில் காட்சியளிக்க, தொழிலாளர்களான சந்துரு, மாதேசு கைலி கட்டியிருந்தது அந்த இடத்தில் வித்தியாசமாய் தோற்றமளித்தது

முதலில், தொடங்கிய பெரு முதலாளிகளிடம், சிறு முதலாளிகள் கேட்கும் கூலி உயர்வு பிரச்னை பெரிதாய் சிக்கலில்லாமல் சுமூகமாய் முடிந்தது. அதற்குக் காரணம் சின்ன முதலாளிகளின் ஊசலாட்டத் தன்மை. அவர்கள், தங்கள் கோரிக்கைகளுக்காக கடுமையாய் பெரிய முதலாளிகளிடம் போராடவில்லை.

3

தற்போது தரும் கூலியை உயர்த்திக் கொடுத்தால் போதுமானது. அதற்கு தாங்கள் நிர்ணயமாய் வைத்திருந்த கூலித் உயர்வுத் தொகையில் பெருமளவு சமரசம் செய்துக் கொண்டனர். அவர்களின் சங்கத் தலைவர் தேவராசு மட்டும் தன் மகனை போலீஸ் பிடித்துப் போனதற்கு பெரு முதலாளிகள் செய்த சதிதான் காரணம் என்பதை உணர்ந்து பேச்சுவார்த்தையில் சற்று வேகம் காட்டினார். ஆயினும், அவருக்கு கருணாகரனைப் போன்ற பயந்தாங்கொள்ளிகள் பெரிதாய் ஒத்துழைப்புத் தரவில்லை. அவர்கள் பெரு முதலாளிகள் சங்கத்தின் தலைவர் அண்ணாமலை முன் தங்கள் கைகளைக் கட்டிக் கொண்டு பவ்யமாய் உட்கார்ந்து இருந்தனர்.

அவர்களுக்குப் பேச்சுவார்தையில் உதவி செய்யும் நோக்கத்துடன் கல்லூரியின் உள்ளரங்கில் அமர்ந்திருந்த வசீகரன் உள்ளுக்குள் நிறையவே நொந்துப் போனார்.

சிறு முதலாளிகள் சரண்டர் பேர்வழிகள் என்பது அவருக்கு சித்தாந்த ரீதியிலும், நடைமுறை ரீதியிலும் தெரிந்த ஒன்றுதான் என்றாலும், அவர்கள் இப்படி அதலபாதாளத்துக்குப் போவார்கள் என்பது கற்பனைக்கு எட்டாததாய் இருந்தது. முடிந்த அளவு தேற்ற நினைத்தும் சிறு முதலாளிகள், பெரிய பண்ணாடிகளுக்கு குனிந்துக் கொடுப்பதில் தவறில்லை என்ற தங்கள் மனநிலையை மாற்றிக் கொள்ள தயாரில்லை. எனவே, போராடிப் பயனில்லை என்று விட்டு விட்டார்.

அடுத்ததாய், ஆரம்பித்த விசைத்தறி தொழிலாளர்கள், பெரிய, சிறிய விசைத்தறி முதலாளிகளிடம் முன் வைக்கும் கூலி மற்றும் போனஸ் நிர்ணயக் கோரிக்கைகள் தான் வெகுநேரத்தை நீட்டிக்க வைத்தது. அந்த கோரிக்கைகளை நிராகரிப்பதில் சுரண்டும் வர்க்கத்தின் இரு தரப்பினரும் வெகுவாய் ஆர்வம் காட்டினார்கள். ஆனால், சந்துருவும், மாதேசும் எந்த விட்டுக் கொடுத்தலையும் சமரசமின்றி நிராகரித்தார்கள்.

அதனால், சிலமணி நேரம் நீடித்த பேச்சுவார்த்தை இழுபறியாய் இருந்தது. முதலாளிகள், விசைத்தறி தொழிலாளர்களுக்கு கூலி, போனஸ் நிர்ணயம் செய்தால், தங்களுக்கு தொழிலில் நட்டம் ஏற்படும். அப்புறம், எங்களால் தொடர்ந்து தறிப்பேக்டரிகளை நடத்த இயலாமல் போய்விடும். அதனால், நாங்கள் மட்டுமல்ல, தொழிலாளர்களும் தான் பாதிக்கப்படுவார்கள். எனவே, விசைத்தறி தொழிலைக் காப்பாற்ற அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதையே திரும்பத் திரும்ப கீரல் விழுந்த கிராமபோன் இசைத்தட்டாய் சொல்லிக் கொண்டிருந்தனர்.

4

ஒவ்வொரு வருடமும் விசைத்தறிகளில் தயாராகும் துணிரகங்களான காட்டன் சட்டை மற்றும் புடவைகள், வேட்டி, கைலி, துண்டு ரகங்கள், மேசை விரிப்பு, தரைவிரிப்பு, பெட்ஷீட் ரகங்கள், திரைச்சீலைகள் என அனைத்தும் விலை உயர்ந்துக் கொண்டேயிருக்கின்றன.

ஆனால், உற்பத்தியாளர்கள் தொழிலாளர்களுக்கு அதற்கேற்ப கூலியை உயர்த்திக் கொடுப்பதில்லை. கேட்டால், பருத்தி விலை உயர்ந்து

விட்டது. நூல்விலை உயர்ந்து விட்டது நாங்கள் என்ன செய்ய முடியும்? என்கிறார்கள். ஆனால், அவர்களது சொத்துக்கள் மட்டும் பெருகிக் கொண்டேப் போகின்றன.

இந்த விபரங்கள் எதைக் காட்டுகின்றன. தொழிலாளர்கள் கடும் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். முதலாளிகள் நியாயமான கூலியை அவர்களுக்கு கொடுப்பதில்லை என்பதைத் தானே... அதைக் கேட்டால், தொழிலாளர்கள் இன்னும் கடுமையாய் உழைக்க வேண்டுமாம்.

சோம்பேறித்தனம் அதிகரித்து விட்டதாம். ஒரு தொழிலாளி பண்ணிரெண்டு மணி நேரம் தறியில் உழைப்பது போதாதாம். சமயத்தில், அவன் ஜோடித் தறிக்காரன் அடுத்த ஷிப்ட்டுக்கு வந்து சேராமல் லீவு போட்டு விட்டால் இருபத்து நான்கு மணிநேரம் உழைக்க வேண்டும். முதலாளி வீட்டுக்குப் போக விட மாட்டான். நடைமுறை இப்படியிருக்க, தொழிலாளிக்கு சோம்பேறி பட்டம் கொடுக்கிறார்கள் முதலாளிகள்.

ஒண்ணரை நூற்றாண்டுக்கு முன்பே கூலி நிர்ணயம், போனஸ் நிர்ணயம். எட்டு மணிநேர வேலை, அதே அளவுக்கு ஓய்வு, தூக்கம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அமெரிக்காவில் சிக்காகோ நகரத்தில் போராடினார்கள் தொழிலாளர்கள். கடுமையான அடக்குமுறை, போலீஸ் துப்பாக்கிச்சூடு என அவர்கள் ரத்தம் சிந்தினார்கள். ஆறாக ஓடிய உழைப்பவன் குருதியில் விழுந்து அவன் கையிலிருந்த வெள்ளைக்கொடி செங்கொடியாய் வண்ணம் மாறியது. பல தொழிலாளர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. அந்த கொடுமைகளுக்கு அஞ்சாமல் போராடி உரிமைகளைப் பெற்றுத்தான் மேதினம் பிறந்தது.

ஆனால், இன்றளவும் விசைத்தறி தொழிலாளர்களுக்கு மேற்கண்ட உரிமைகள் கிட்டவேயில்லை. பண்ணிரெண்டுமணி நேர வேலை, என்பதே அவர்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது.

தோழர் வசீகரன் இவ்வளவு விபரங்களை எடுத்துச் சொன்ன பின்னாலும், விசைத்தறி முதலாளிகள், தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதில் சுணக்கம் காட்டினார்கள். அவர்களுக்கு மார்க்சிய புத்தகங்களைப் படித்திருப்பதாய் சொன்ன துணை ஆட்சியரும் ஒத்து ஊதினார்.

5

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக.

என்ற வள்ளுவன் குறளை அவருக்கு உறைக்கிற மாதிரி நினைவுப் படுத்தினான் சந்துரு. அப்புறம் தான் அவர் அடக்கி வாசித்தார்.

துணைஆட்சியரே பதுங்குவதைப் பார்த்த பிறகுதான் முதலாளிகள் கூலி, போனஸ் நிர்ணயத்துக்கு வந்தார்கள். ஆனால், அவர்கள் எல்லா துணிரகங்களுக்கும் ஒரே மாதிரி நிர்ணயத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள். ஆனால், தொழிலாளர் தரப்பு அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஏனெனில், துணிகள் நெய்வதில் நூல் அடர்த்தி என ஒன்று இருக்கிறது. சில ரகங்கள் சல்லா துணியைப் போல லேசாய் ஊடை நூல் சந்துச் சந்தாய் இருக்கும். இன்னும் சில ரகங்களில் கெட்டியாய் காணப்படும். இவை இரண்டுக் கும் ஒரே அளவு கூலி என்பது ஏமாற்று வேலை. எனவேதான், குறிப்பாய் சந்துரு அதை எதிர்த்தான்.

அடர்த்தி குறைவான ரகங்களில் ஒரு தொழிலாளி ஒரு ஷிப்ட்டுக்கு பத்து மீட்டர் தறியோட்டினால், கெட்டியான ரகங்களில் ஏழு மீட்டர் தான் நெய்ய முடியும். ஒரு அங்குல துணியில் இருக்கும் ஊடைநூல் அடர்த்தியை வைத்து கூலி நிர்ணயம் செய்துக் கொள்ளலாம் என்று சொன்ன போது முதலாளிகள் தரப்பு அதிர்ந்துப் போனது.

தொழிலாளர்கள் என்றால், கூட்டம் போடுவார்கள். சங்கம் சேர்த்து முழக்கமிடுவார்கள். மிஞ்சிப் போனால், சற்று முன்னால் நடத்தியதுப் போல சாலை மறியல் போராட்டம் செய்வார்கள் அவ்வளவுதான்!! உழைப்பவர்களுக்கு பெரிதாய் தொழில் அறிவு இருக்காது என ஏப்பை சாப்பையாய் கருதியிருந்த அவர்களுக்கு இடி விழுந்தது போலாகி விட்டது. இதில், ஓரளவுக்கு தொழிலாளர்களின் வர்க்கப் பார்வைப் பற்றி கணிப்பு செய்திருந்த பெரு முதலாளிகள் சங்கத் தலைவர் அண்ணாமலை, சந்துருவைக் கூர்ந்துப் பார்த்தார். அவனது அறிவின் மேல் அவருக்கு பயம் கலந்த மரியாதை ஏற்பட்டது. பொதுவாய், முதலாளிகள் வீட்டுப் பிள்ளைகள் அப்பன் சேர்த்து வைத்த சொத்தைக் கூட வெளிநாடுகள் போய் வியாபாரப் படிப்பெல்லாம் படித்துத் தான் காப்பாற்ற வேண்டிய அளவில் இருக்கும் போது, சாதாரண கூலிக்காரனான அவனது அறிவு

பிரமிக்கத்தக்கதாய் அவருக்கு தோன்றியது. ஆனால், அவரது தரகு முதலாளித்துவ வர்க்க நிலைப்பாடு அவனது கோரிக்கையை ஏற்க மறுத்தது.

6

சந்துரு எதிர்காலத்தில் தம்மைப் போன்ற பெரு முதலாளிகளுக்கு மிகவும் அச்சுறுத்தலாய் அமைவான் என்பதை அவர் சரியாய் புரிந்துக் கொண்டார்.

அவன் மீது தனிக் கவனத்தை தான் வைத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தையும் எச்சரிக்க வேண்டும் என மனதுக்குள் முடிவு செய்துக் கொண்டார்.

எனவே, அவர் தமது பெரு முதலாளிகள் தரப்பிலிருந்து அவனிடம் கடுமையாய் மோதினார்.

''தம்பி, ஒம் பக்கம் கொடிப் பிடிக்க நாலு பேரு இருக்குறாங்க அப்புடீங்கிற தெனாவெட்டுல ரொம்ப ஆடாதே! நீ சொல்ற கணக் கெல்லாம் வச்சி கூலி நிர்ணயம் பண்ண முடியாது.'' என சினத்துடன் கறாராய் பேசினார்.

அதற்கு சந்துரு ''ஏண்ணா முடியாது? நீங்க விக்கிற சட்டைத்துணிக்கு அதோட கெட்டித்தன்மை, தரம் இதெல்லாம் வெச்சுத்தானே ஒரு மீட்டர் இன்ன வெலைன்னு நிர்ணயம் பண்றீங்க. அதே மாதிரி ஏன் துணி நெசவுக்கும் கூலி நிர்ணயம் பண்ண முடியாது?'' என்று கேட்டான்.

அப்போது சும்மா இல்லாமல் பெருமுதலாளிகள் சங்கத்தின் செயலாளர் திருவேங்கடம் ''ஏம்பா, நாங்க மீட்டர் கணக்கு வெச்சா நீ இஞ்ச் கணக்கு வெக்குறியே?'' என திருவாய் மலர்ந்தார், நாற்பது இஞ்ச் சேர்ந்ததுதான் ஒரு மீட்டர் என்கிற அடிப்படை அறிவு கூட இல்லாமல்.

அதை சந்துரு சுட்டிக் காட்டியதும் அந்த பேச்சுவார்த்தை அரங்கமே சிரிப்பில் அதிர்ந்தது.

அண்ணாமலை அவரை முறைத்துப் பார்த்து விட்டு தன் தரப்பை சிறிதும் விட்டுக் கொடுக்காமல் வாதிட்டார்.

அவரது பேச்சில் பெரு முதலாளிகள் வர்க்கத்துக்கே உரித்தான ஆணவமும், தொழிலாளர்கள் மீதான காழ்ப்புணர்வும் தலை தூக்கியது.

''ஏம்பா, மொதலாளிங்க நாங்க கோடிக்கணக்குல முதலீடு போட்டு தொழில் செய்றோம். அதனால, எங்க பொருளுக்கு நாங்க வெலை நிர்ணயம் பண்றோம். நீங்க அப்புடியா? கைய வீசிக்கிட்டு தறிப் பேக்டரிக்கி வந்து வேல செஞ்சுட்டுப் போறீங்க. நீங்களும், நாங்களும் ஒண்ணா?''

7

''இல்லண்ணா, வேற வேற தான் ஒத்துக்குறேன். ஆனா, ஒங்களுக்கு முதலீடு எங்கயிருந்துக் கெடைச்சுது? வானத்துல இருந்துக் குதிச்சுதா? செரி, நீங்கதான் ஒழைச்சு சம்பாதிச்சிங்கன்னு வெச்சுக்கலாம். இனிமே ஒங்க தறிப் பேக்டரிக்கி எங்க தொழிலாளிங்க யாரும் தறியோட்ட வர மாட்டாங்க. ஒங்கக்கிட்ட இருக்குற பவர்லூம் மிசினை வெச்சுக்கிட்டு நீங்களே வேல செய்ங்க. ஒங்க குடும்பம் முச்சூடும் வருசம் பூரா ஒழைச்சாலும் எவ்வளவு சொத்து சேரும்னு அடுத்த வருசம் இதே நாள்ல ஒக்காந்துக் கணக்குப் பாப்பமா? அதுக்கு நீங்க தயாரா?''

சந்துரு, அண்ணாமலைக்கு நேருக்கு நேர் சவால் விட்டான்.

அதில், முகம் சிவந்துப் போன அவர் ''என்னடா, ஊர் விட்டு ஊர் வந்து எனக்கே சவால் வுடுறியா?'' என ஆத்திரப்பட்டார்.

அவரைப் பார்த்து கனகாசலம் எகிறினார் ''அண்ணா, இந்த கூலிக்கார நாய்ங்களோட நமக்கென்ன பேச்சு.'' என்று.

மாதேசு சட்டென எழுந்து அவர் பக்கம் தாவ முயற்சித்தான். ''யோவ், நாய் கீய்னே நடக்குறது வேற...'' என்று. ஆனால், அவனை சந்துரு விடவில்லை. அவன் அண்ணாமலையை கூர்மையாய் பார்த்துக் கேட்டான்.

''என்னண்ணா... பேச்சுவார்த்தைய இத்தோட முடிச்சுக்கலாமா? சட்டுன்னு முடிவுக்கு வாங்க. நாங்களும் எங்க போராட்டத்தை பொழுது விடியறதுக்கு முன்னாடியே இன்னம் தீவிரப்படுத்துறோம்.''

அண்ணாமலை பதில் சொல்ல முடியாமல் தவித்தார். அவரது வாழ்நாளில் இது மாதிரி யாரிடமும் அவர் அவமானப் பட்டதில்லை.

எனவே, அவரது கன்னச் சதை துடித்தது. ஆயினும், 'கோபத்தோடு எழுந்தவன் நட்டத்தோடு உட்காருவான்' என்பதை தெளிவாக உணர்ந்திருந்த அவர் கொஞ்சம் நிதானப்பட்டு யோசித்தார்.

பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டால், அதுதான் நடக்கும். தொழிலாளி சொன்னதைச் செய்வான். அதனால் தனக்குத்தான் பெரிய பாதிப்பு வரும். சொன்ன தேதிக்கு வெளிநாட்டுக்காரனுக்கு துணிரகங்களை விநியோகிக்கா விட்டால், மொத்த ஆர்டரையும் கேன்சல் செய்து விடுவான். அப்புறம், நம்பிக்கை கெட்டுப் போகும் இனி, எப்போதும் அவன் பக்கம் தலைவைத்துப் படுக்க முடியாது. இன்று, ரோசமாய் பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ளச் சொல்லும் இந்த கனகாசலமோ, வேறெந்த பெரிய முதலாளியோ அதே வெளிநாட்டுக்காரனிடம் ஆர்டர் பிடித்து தொழில் நடத்துவார்கள். நாம் தான் சிக்கலில் மாட்டிக் கொண்டு கோடிக்கணக்கில் நட்டப்பட வேண்டியதிருக்கும்.

8

இது முதலாளிகளிடம் உள்ள பகை முரண்பாடு. இந்த எண்ணம் வந்ததும், அவர் சந்துருவைப் பார்த்து மென்மையாய் சிரித்தார்.

அவன் பதிலுக்கு சிரிக்காமல் அவரை துளைத்து விடுவது போன்று பார்த்தான்.

''செரிப்பா, ஒங்க கோரிக்கைய நாங்க ஏத்துக்கறோம். பிக்குக் கணக்கு வெச்சே கூலி நிர்ணயம் பண்ணிக்கலாம்.'' என்று வழிக்கு வந்தார்.

பிக்கு என்பது சிறிய அளவு பூதக்கண்ணாடியை வைத்துப் பார்த்து ஒரு துணியில் எவ்வளவு ஊடைநூல் நெருக்கம் இருக்கிறது என்று எண்ணி அளவிடுவது. அது, அரை இஞ்ச் அளவில் இருக்கும். அதன் படி கூலி நிர்ணயம் என்று வந்தாலும் கூட எத்தனை சதவீதம் என்பதில் இழுபறி வந்தது. ஆனால், சந்துரு தான் கேட்டதில் உறுதியாய் இருக்கவே, அண்ணாமலை தன் கூட்டாளிகளைக் கலந்து ஆலோசிக்காமலேயே அதற்கும் இணங்கினார்.

போனஸ் நிர்ணயப் பிரச்னையிலும் இதே நிலைதான் நீடித்தது.

தங்களின் சங்கத்தின் தலைவர் சட்டென தொழிலாளர்களின் எல்லா கோரிக்கைகளுக்கும் இறங்கி வந்தது மற்ற முதலாளிகளுக்கு

அதிர்ச்சியாய் இருந்தாலும், அவர்கள் எதையும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அவர் பதுங்குகிறார். பின்னால் தொழிலாளர்கள் மீது பாய்வதற்கு சமயம் பார்த்துக் காத்திருப்பார் என்றே தங்களை சமாதானப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் அப்படி நினைத்தது சரிதான். அண்ணாமலை லேசுப்பட்ட ஆளில்லை.

இனி, சந்துருவும் மற்ற இயக்கத் தோழர்களும் தான் அவரிடம் எச்சரிக்கை யாய் இருக்க வேண்டும். என்ன செய்யப் போகிறாரோ? அதன் பிறகு கூலி, போனஸ் விவகாரம் விடிகாலை நான்கு மணிக்கு முடிவுக்கு வந்தது.

அடுத்து, வெளியூரில் இருந்து வந்து வேலை செய்யும் விசைத்தறி தொழிலாளர்களில் திருமணமாகாத இளைஞர்களுக்கு வாடகைக்கு வீடு தருவதில் சிறு முதலாளிகள் சுணக்கம் காட்டினார்கள். பெரிய முதலாளிகளுக்கு வீடும், தறிப்பேக்டரியும் தனித்தனியே இருப்பதால் அவர்களுக்கு பிரச்னை இல்லை. தாங்கள் அப்படி வீடு கொடுத்தால் தங்கள் வீட்டுப் பெண்பிள்ளைகளின் மனதைக் கெடுத்து வெளியூர் இளைஞர்கள், கூட்டிக் கொண்டு ஓடி விடுவார்கள் என்ற பழைய பல்லவியை அவர்கள் திரும்பத் திரும்ப அபசுரமாய் பாடினார்கள்.

9

அதற்கு சந்துரு ''இப்புடிச் சொல்றது மூலியமா ஒங்க குடும்பத்துப் பொட்டப் புள்ளைங்கள நீங்களே கேவலப்படுத்துறீங்க.'' என செருப்பால் அடித்ததுப் போல கேட்டான்.

அதன் பிறகும் கூட அவர்கள் அந்த கோரிக்கைக்கு உடன்படவில்லை.

அப்போது பெரிய முதலாளிகள் தங்களுக்குள் பேசிக் கொண்டு ஒரு காரியம் செய்தார்கள். அண்ணாமலை, கோணவாய் திருவேங்கடத்தை தூண்டி விட்டு அவர் மூலமாய் தன் கருத்தைப் பேச வைத்தார்.

''செரிப்பா, நீங்க கேட்ட மாதிரி இல்லாம நாங்க சும்மாவே தொழிலா ளிங்க எல்லாத்துக்கு வூடு கட்டித் தர்றோம். அத நீங்க ஒத்துக்கறீங்களா?''

''சும்மான்னா, நீங்க கட்டித் தர்ற வூடு தொழிலாளிக்கே சொந்தமா?''

''ஏம்பா சந்துரு, என்னா வெளையாட்றியா? அதெப்புடி சொந்தமா தர முடியும்? தொழிலாளிங்க எங்க கிட்ட சம்பளம் வாங்கமயா வேல செய்றாங்க?''

''செரிண்ணா, நாங்க சும்மா வேல செய்றோம். ஆனா, லாபத்த எங்களுக்கு குடுங்க அது போதும்?''

''அதெப்புடி முடியும்? நாங்க மொதல் போடுறமில்ல...''

''நாங்க ஒழைக்குறமுல்ல... எங்க ஒழைப்பு இல்லாம ஒங்களுக்கு எப்புடி லாபம் வரும்?''

அப்போது அண்ணாமலை, திருவேங்கடம் சொதப்பி விட்டதை உணர்ந்து தானே சந்துருவிடம் நேரிடையாகப் பேச முன் வந்தார்.

''தாப்பா, நாங்க சொல்ல வர்றது என்னன்னா... ஒங்க தொழிலாளிங்க எங்க பெரிய பேக்டரில வேல செய்ற பட்சத்துல, அவுங்களுக்கு நாங்க தொகுப்பு வூடுங்க கட்டித் தர்றோம். அதுக்கு நீங்க எங்களுக்கு வாடகை தர வேணாம். போதுமா...'' என்றார்.

பெரு முதலாளிகள், வீடு தர மறுக்கும் சிறு முதலாளிகளிடமிருந்து தொழிலாளர்களைப் பிரிக்கவே இப்படி சொல்கிறார்கள் என்பது புரிந்தாலும், சந்துருவும் மாதேசும் அதற்கு ஒத்துக் கொண்டார்கள். ஏனெனில், சிறு முதலாளிகள் அப்போதுதான் வழிக்கு வருவார்கள் என்பதால்.

அவர்கள் நினைத்தது போலவே நடந்தது.

10

அதன்பிறகே, தொழிலாளர்கள் தங்கள் கையை விட்டுப் போய் விடுவார்கள் என்று பயந்து சிறு முதலாளிகள் வீடு வாடகைக்கு கொடுக்க முன் வந்தார்கள். அதற்காக, பெரிய முதலாளிகள் கட்டித் தரும் தொகுப்பு வீட்டையும் சந்துரு நிராகரிக்கவில்லை. தொழிலாளர் களுக்கு கிடைக்கும் சிறு சலுகையை ஏன் தடுப்பானேன் என்று விட்டு விட்டான்.

அதன் பிறகு, அரசுக்கும், தொழிலாளர்களுக்கும் பேச்சுவார்த்தை தொடர்ந்தது. அதில், வழக்குரைஞர் என்பதால், வசீகரன் முக்கிய பங்கு வகித்தார்.

சட்டரீதியாய் ஒவ்வொரு மாநில அரசும் வெளிமாநிலங்களிலிருந்து வந்து வேலை செய்யும் விசைத்தறி தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல,

அதன் கூடவே, கூலி விவசாயிகள், கல்லுடைக்கும் தொழிலாளர்கள், செங்கல் சூளையில் கல் அறுப்பவர்கள், கட்டிட வேலை செய்பவர் கள், நெல் மண்டியில் உள்ளவர்கள் உட்பட அனைத்துத் தொழிலாளர் களுக்கும் முதலில் அடையாள அட்டை வழங்க வேண்டும். அவர் களுக்கு முதலாளிகளிடமிருந்து சம்பளம் முறையாக வழங்கப் பட்டுள்ளதா? என்பதையும் கண்டறிய வேண்டும். அது மட்டு மல்லாமல், அவர்கள் கொத்தடிமைகளாய் இருக்கிறார்களா? அப்படி யிருந்தால் அங்கிருந்து அவர்களை விடுவிக்க நடவடிக்கையும், அவர்களின் மறுவாழ்வுக்கானப் பணிகளையும் மேற் கொள்ள வேண்டும். ஆனால், எந்த மாநிலஅரசும் இதை செய்வதில்லை. இது இந்திய நாடு. நாமெல்லோரும் இந்தியர்கள் என்று கூறும் மத்தியஅரசும் இதை கண்டு கொள்வதில்லை. ஊர் விட்டு ஊர் பிழைக்க வந்தாலே வந்தேறிகள்தான்.

அப்புறம், எங்கேயிருக்கிறது இவர்கள் பசப்பும் இந்திய தேசியம்?

தொழிலாளர் நலத் துறையின் அலுவலகம் ஏற்கனவே, நகரத்தில் இருக்கிறது. ஆனால், அதன் அலுவலர் ஒப்புக்குச் சப்பாணியாய் தான் உட்கார்ந்து இருக்கிறார். என்ற உண்மை தெரிய வந்ததும், அந்த அலுவலருக்கு எல்லோர் முன்னாலும் துணை ஆட்சியர் வாயால் திட்டு விழுந்தது.

அதற்கு அலுவலர் சொன்னார் ''லேபர் ஆபீசுக்கு இது பத்தி எந்த புகாரும் வராம என்னால எப்புடி சார் நடவடிக்கை எடுக்க முடியும்?'' என்று.

அதைக் கேட்டு கோபமான வசீகரன் கிட்டத்தட்ட கத்தலாகப் பேசினார்.

அது மிகக் கடுமையாய் இருந்தது.

11

''அய்யா, தொழிலாளர் நலத்துறை என்பதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? அவர்களுக்கு நடக்கும் கொடுமைகளுக்கு பரிகாரம் காணுவதுதான் தொழிலாளர் நலத்துறை. அதை முதலில் புரிந்துக் கொள்ளுங்கள். ஒங்களுக்கு புகார் வந்தாத்தான் நடவடிக்கை எடுப்பீங்கன்னா, நீங்க வேல செஞ்சாத்தான் சம்பளம் தருவேன்னு

அரசாங்கம் சொன்னா வுடுவீங்களா? போராட்டம் பண்ண மாட்டீங் களா?'' அவரது பேச்சு தொழிலாளர் நலத்துறை அலுவலரை தலை குனிய வைத்தது. துணைஆட்சியர் மேலும் அவரை கண்டித்து, வெளிமாநில தொழிலாளர்களுக்கான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க கூறினார்.

முதலாவது அடையாள அட்டை, இரண்டாவது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது, மூன்றாவது ரேஷன் அட்டை என வரிசைப் படுத்தி தொழிலாளர்களுக்கு வழங்குவது என்று முடிவானது. தாசில்தார், தன் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அப்போது துணை ஆட்சியர் சந்துருவிடம் கேட்டார் ''ஏம்பா, சந்துரு வெளியூர்ல இருந்து இங்க வந்து வேல செய்ற சனங்க எவ்வளவு பேரு இருப்பாங்க?'' என்று.

அதற்கு அவன் ''நகரத்துலயும், பேட்டை சுத்து வட்டாரங்கள்லயும் எட்டாயிரம் குடும்பங்கள் ஏறத்தாழ இருக்குது சார். அது மட்டுமில்லாம இதே அளவுக்கு தனி மனுசங்களா வாழ்ற தொழிலாளிங்களும் இருக்குறாங்க.'' என்றான்.

அதைக் கேட்டு அவர் மலைத்துப் போனார். இதுவரை இந்த விபரங்கள் ஏன் அரசின் கவனத்துக்கு வரவில்லை? அதிகாரி களெல்லாம் என்ன செய்கிறார்கள்? கிட்டத்தட்ட ஒரு சட்டமன்ற தொகுதியின் வெற்றி தோல்வியையே கிட்டத்தட்ட முப்பது, நாற்பதாயிரம் கொண்ட வெளிமாநில தொழிலாளர்களின் இந்த வாக்குகள் தீர்மானிக்குமே!!

ஏன், எந்த ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும் இதைக் கண்டுக் கொள்ளவில்லை? எல்லாம் உள்ளூர் முதலாளிகளின் மீதான பயம்தான் இதற்குக் காரணம்.

அவர்கள் கண்ணசைக்காமல் இங்கே ஒரு காரியத்தையும் அதிகாரிகள் செய்ய மாட்டார்கள் என்று நினைத்த அவர் எதையும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. ஏதாவது பேசப் போய் தொழிலாளர் தரப்பு நம் மீது பாயும் என்று வாளாவிருந்தார்.

இத்தனை பெரிய போராட்டத்தை தொழிலாளர்கள் ஏன் முன்னெடுத்தார்கள் என்பதற்கான காரணம் இப்போது அவருக்குப் புரிந்தது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களில் நூற்றுக்கு முப்பது பேர் தான் சாலை மறியலில் ஈடுபட்டார்கள்.

12

நூறு சதவிகிதம் அனைவரும் வந்திருந்தால், நாளை மாநிலம் முழுக்கவே இதுதான் பேச்சாய் இருந்திருக்கும்.

நல்லவேளை பத்திரிக்கையாளர்களை பேச்சுவார்த்தை அரங்கத்தில் உள்ளே அனுமதிக்கவில்லை. அப்படி செய்திருந்தால், சில பத்திரிக்கைகள் அரசாங்கத்தை கிழித்துவிடும். இந்த சூழலை உடனடியாய் அரசுக்கு அறிக்கையாய் தர உத்தேசித்தார்.

ஏனெனில், இந்த போராட்டத்தை வழிக் காட்டுவது பாட்டாளி வர்க்க கட்சி என்பதுதான் இதில், மிக முக்கியமான விசயம். இது அரசாங்கத்தின் முதலாளித்துவ நலன்களுக்கு எதிரானது.

வெளிமாநில மக்களின் பிரச்னைகளைக் கையில் எடுத்திருப்பதன் மூலமாய், இந்தப் பகுதியில் மிகப் பெரிய செல்வாக்கை புரட்சியாளர் கள் பெற்று விடுவார்கள். அப்படி நடந்தால் வரப் போகும் நாட்களில் அரசாங்கத்துக்கு மிக மோசமான நெருக்கடி காத்திருக்கிறது.

என்றாலும், அவ்வளவு பேருக்கும் அடையாள அட்டை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, ரேஷன் அட்டை வழங்குவதெல்லாம் பெரிய காரியந்தான். அதை மட்டும் அவர் தொழிலாளர்கள் தரப்பில் மனம் திறந்துச் சொல்ல வசீகரன் அதற்கு ஒரு யோசனை சொன்னார்.

''அதிகாரிங்க மனசு வெச்சா மூணு மாசத்துல முடிக்கலாம் சார். அந்த கால அவகாசத்தை நாங்க ஒங்களுக்குத் தர்றோம்.'' என்று.

துணை ஆட்சியர் மற்ற அதிகாரிகளின் அபிப்ராயத்தைக் கேட்டுக் கொண்டு அவரது யோசனைக்கு சம்மதித்தார்.

முத்தரப்பு பேச்சு வார்த்தையின் கடைசி ஷரத்து தேவராசு மகன் இளங்கோ மீது காவல்துறை எடுத்த அநியாய நடவடிக்கைப் பற்றி...

தேவராசு தனக்கும், நடேசனுக்கும் உள்ள பொதுச்சந்து பிரச்னையை சுருக்கமாய் சொல்லி அவன் தன் தாயாரை தான் ஊரிலில்லாத நேரத் தில் வேண்டுமென்றே அவன் மனைவி மூலமாய் வம்புக்கு இழுத்து அடிக்க வைத்திருக்கிறான்.. அதனால்தான் தன் மனைவி அவளை தாக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது. மேலும், நடேசன் அத்துமீறி தன் மனைவியை நடுவீதியில் வைத்து அடித்தது எந்த விதத்தில் நியாயம்? இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டுமா?

13

என் மகன் நடேசனை அடித்ததில் என்ன தவறு? என்று கம்மிய குரலில் பேசினார். விட்டால், அழுது விடுவார் போலிருந்தது.

கைப் புண்ணுக்கு கண்ணாடி தேவையா? என்பது எல்லோருக்கும் நன்றாக தெரிந்திருந்தது. பெரு முதலாளிகளின் சூழ்ச்சிக்கு நடேசன் பலியாகி விட்டான். இருந்தாலும், மாவட்டக் கண்காணிப்பாளர் கூட்டத்தில் பூனை மாதிரி உட்கார்ந்திருந்த நடேசனை கூப்பிட்டு நேரடி விசாரணை நடத்தினார். அவன் தன்னை விட பெரிய ஆட்களெல்லாம் பேச்சுவார்த்தைக் கூட்டத்தில் தொழிலாளர்களிடம் ஜகா வாங்கியதை உணர்ந்து, கண்காணிப்பாளர் போட்ட ஒரு சின்ன அதட்டலுக்கே, நடுத்தெரு மாதையன் தன்னிடம் பேசிய விவரங்களைப் புட்டுப் புட்டு சபையில் வைத்து விட்டான்.

கண்காணிப்பாளர் வேறு வழியில்லாமல் நடேசன் மீதும், மாதையன் மீதும் வழக்குப் பதிந்து தேவராசு மகனை லாக்கப்பில் இருந்து விடுவிக்கச் சொல்லி உள்ளூர் நக்கல் இன்ஸ்பெக்டருக்கு உத்தர விட்டார். ஆனால், பெரிய முதலாளிகளுக்கு ஆதரவாய் செயல்பட்ட அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

அந்த நேரத்தில் மாதேசு எழுந்து உள்ளூர் காவல் அதிகாரி இதற்கு முன்பு கள்ளிப்பாளையம் முதலாளிகளிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு தங்களை அடித்ததையும், சிறைக்கு அனுப்பியதையும் சபையில் அனைவரின் முன்னிலையிலும் சொன்னான். தான் அம்பலப்பட்டதால் இன்ஸ்பெக்டர் வேர்த்து விறுவிறுத்து போனார்.

அவர் மனதுக்குள் ''டேய் ஆணிக்காலா, என்னிக்காவது என் கிட்ட மாட்டுவே, அன்னிக்கி ஒங் கால ஒடைக்கிறனா இல்லியான்னு பார்றா.'' என மாதேசு மீது உள்ளுக்குள் கடும் வன்மம் கொண்டார்.

பளிச்சென சூரிய உதயத்தில் பேச்சுவார்த்தை முடிந்தது.

அதன் முடிவுகளை முத்தரப்பும் சிலபேப்பர்களில் தெளிவாய் எழுதி கையெழுத்திட்டார்கள். அதற்கு அரசு முத்திரை வைக்கப்பட்டது.

துணை ஆட்சியர் எழுந்து எல்லா தரப்புக்கும் அரசு சார்பில் தன் நன்றியை தெரிவித்துக் கொண்டார். ஆளாளுக்கு கை குலுக்கினார்கள். போலி சம்பிரதாயங்களில் கலந்துக் கொள்ள விரும்பாத சந்துருவும்

மற்ற இருவரும் அங்கிருந்து நகர முயல, துணை ஆட்சியர் காலைத் தேநீர் ஒன்றாக சேர்ந்து அருந்தலாம் என அவர்களை கூப்பிட்டார்.

14

ஆனால், சந்துரு கல்லூரி வளாகத்தில் இரவெல்லாம் தூங்காமல் இந்த பேச்சுவார்த்தை முடிவுக்காக காத்துக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களைக் காரணம் காட்டி அவரிடம் இருந்து நகர்ந்தான். அப்படியும் அண்ணாமலை முதலியார் அவன் தோள் மீது கைப் போட்டு தனியே இழுத்தார்.

''சந்துரு, ஒன்ன எம் புள்ள மாதிரி நெனக்கிறேம்பா, நா அடா புடான்னு பேசுனத மனசுல வெச்சுக்காத...'' என்று நைச்சியமாய் பேசினார். அவன் அதை கேட்கும் மனநிலையில் இல்லை. புறப்பட எத்தனித்தான். அப்போது அவர் ''ரெண்டு நிமிசம் இருப்பா...'' என்று தடுத்தார்.

பிறகு, ''தம்பி ஒன்னோட குடும்ப சூழ்நிலமை பத்தியெல்லாம் நா வெசாரிச்சேன். நீயெல்லாம் எங் கிட்ட வேலைக்கு வந்தா ஒன்ன நா பெரிய லெவல்ல கொண்டு போயிடுவேன். என்னா சொல்றே?'' என்று கேட்டார்.

அதைக் கேட்டதும் சந்துரு சட்டென அவரைத் திரும்பிப் பார்த்தான் இந்த ஆள் தனக்கு வலை வீசுகிறான் என்பது புரிந்தது.

அவரது நோக்கத்தைப் புரிந்துக் கொண்ட சந்துரு சட்டென பதிலடி கொடுத்தான் ''எனக்கு அதெல்லாம் வேணாம் அய்யா.. நா ஒரு தொழிலாளியா யாரையும் சொரண்டாம வாழத்தான் ஆசப்படுறேன். முதலாளியான நீங்க என்ன ஒங்க மகனாப் பாக்காதீங்க. நாம்ப பரம்பரை வர்க்க எதிரிங்க.''

அவன் முகத்திலடித்தது போல் கூறி விட்டு கம்பீரமாய் நடக்க, அண்ணாமலை அவனைக் குரோதப் பார்வையில் பின் தொடர்ந்தார்.

முதலில் கல்லூரியின் உள் அரங்கத்தில் இருந்து சந்துரு, மாதேசு, வசீகரன் என்று தொழிலாளர் தரப்பினர் வெளியே வந்தார்கள். வெளியே, கொஞ்சமும் கலையாத கூட்டத்தைப் பார்த்து பிரமித் தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் மைதானத்தில் இரவு முழுக்க உட்கார்ந்தும், களைப்பு மிகுதியால் படுத்தும் இருந்த முன்னணித் தோழர்கள், உழைக்கும் மக்கள் அனைவரும் சட்டென எழுந்து நின்றார்கள்.

அவர்கள் கூடவே இருந்த தோழர் அனுராதாவும் எழுந்தார். அனைவரும் கேள்விகள் நிறைந்த முகத்தோடு மூவர் குழுவைப் பார்த்தார்கள். போராட்டத்தின் வெற்றியை சந்துருவின் வாயால் அறிவிக்கச் சொன்னார் வசீகரன்.

15

அவன் என்ன சொல்லப் போகிறான்? என்பதைக் கேட்க பரபரப்படைந்த மக்கள் அவனை நோக்கி முண்டியடித்துக் கொண்டு முன்னோக்கி வந்தார்கள். அவர்களை மாதேசு அமைதிப்படுத்தினான்.

சந்துரு உரத்த குரலில் பேசினான் ''அன்பார்ந்த உழைக்குற சனங்களே... முத்தரப்புப் பேச்சுவார்த்தை நல்லபடியாய் முடிஞ்சது. நாம்ப ஜெயிச்சுட்டோம்.'' என்று.

அவ்வளவுதான். ஹோவென்று கடல் அலைகள் சீறியது போன்று மக்களிடமிருந்து ஆரவாரம் எழுந்தது. சூரியனைத் தோற்கும் பிரகாசத்தில் அவர்களின் முகங்கள் மலர்ந்தன.

கந்தப்பன், ஏழுமலை, ஓபுளி, மச்சக்காளை, பச்சையப்பன், சிற்பி என்று முன்னணித் தோழர்கள் ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டனர்.

தோழர் அனுராதா அவனை நெருங்க முடியாமல் தூரத்திலேயே நின்றுக் கொண்டுப் புன்னகைத்தார். மகிழ்ச்சிப் பிரவாகம் சிறிது நேரம் நீடித்தது.

அப்போது சற்று தாமதித்து வெளியே வந்த தேவராசு, கூட்டத்தை விலக்கிக் கொண்டு சந்துருவை நெருங்கினார்.

தன் மகனைக் காவல்நிலையத்தில் இருந்து பேச்சுவார்த்தையின் முடிவின்படி அழைத்து வரப் போவதாக அவன் காதில் சொன்னார். அவன் சரியென்று தலையசைக்க, தேவராசு கவலையோடு எதிர்ப்பட்ட தன் மனைவியிடமும் இதே தகவலை சொல்லிப் புறப்பட அவருடன் கல்லூரி மாணவர்கள் மகிழ்ச்சியுடன் இணைந்துக் கொண்டார்கள்.

அதன் பிறகே சந்துரு பேச்சுவார்த்தைக் குழு வென்றெடுத்த கோரிக்கைகளின் உள்ளார்ந்த விபரங்களை அனைவருக்கும் விளக்கிச் சொன்னான்.

முதலில் கூலி உயர்வுப் பற்றிச் சொல்ல, அதை ஏற்பதைப் போல விசைத்தறி தொழிலாளர்கள் பலத்த கரவொலி எழுப்பினார்கள். அதிலும், பொன்னி, கந்தப்பன் மனைவி போன்ற பெண்கள் குதூகலித்தார்கள்.

அவர்களை அமைதிப்படுத்தி விட்டு, அடுத்து போனஸ் நிர்ணய விபரத்தைக் கூறினான் சந்துரு. அதற்கும் கையொலி பட்டையைக் கிளப்பியது.

பிறகு, அனைவரும் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வந்தேறிகள் பிரச்னை. அதில், ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளை விளக்கினான். வெளியூர் தொழிலாளர்கள் மிக கவனமாய் செவிமடுத்தார்கள்.

16

"தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை தர்றதா அரசாங்கம் ஒத்துக்கிச்சு. நீங்க அதிகாரிங்க ஒங்களத் தேடிக்கிட்டு வர்ற வரிக்கும் காத்துக்கிட்டு இருக்காம எந்த பேக்டரியில தறியோட்றீங்களோ அந்தப் பேக்டரி மொதலாளிக் கிட்ட ஒரு பேப்பர்ல கையெழுத்து வாங்கிகிட்டு அது கூடவே ரெண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டாவும் எடுத்துக்கிட்டு நகரத்துல இருக்குற லேபர் ஆபீசுக்குப் போங்க. அதிகாரிங்க ஒங்கள பத்துன விபரத்தைக் கேட்டு பதிவு பண்ணிக்கிட்டு அடையாள அட்டை சீக்கிரம் குடுப்பாங்க. அப்புறம் கல்யாணம் ஆகாத எல்லாத்துக்கும் வூடு வாடகைக்கு வுடுறதா மொதலாளிங்க சொல்லி இருக்குறாங்க. அவுங்க தர்றது வூடோ, சின்ன ரூம்போ அதுல எத்தன தொழிலாளிங்க அனுசரிச்சு தங்க முடியுமோ அத்தன பேரு தங்கிக்கிங்க. அந்த முகவரிய வெச்சு வாக்காளர் பட்டியல்ல ஒடனே ஒங்க பேர சேத்துக்கச் சொல்லி தாசில்தார் ஆபீசுக்கு மனு குடுங்க. நாம்ப ஓட்டுப் போடறதா இல்லியான்னு அப்புறம் பேசிக்கலாம். இதே மாதிரிதான் ரேஷன் கார்டுக்கும் ஒங்க குடும்ப விபரத்த தெளிவாச் சொல்லி அதே தாசில்தார் கிட்ட விண்ணப்பம் கொடுங்க" என மூச்சுவிடாமல் சொல்லி முடித்தான்.

அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் உழைக்கும் மக்களின் காதுகளில் தேனாய் பாய்ந்தது.

இந்த ஊரில் பிழைக்க வந்து அனுபவித்த கொடுமைகள் கொஞ்சமா, நஞ்சமா? இதுவரை ஏனென்று கேள்வி கேட்க நாதியுண்டா? எத்தனை முதலாளிகள் மகன்கள் குடித்து விட்டு வந்து காரணமேயில்லாமல் வயது வித்தியாசம் பாராமல் தொழிலாளர்களை தூக்கிப் போட்டு மிதித்திருக்கிறார்கள்.

ஊர் திருவிழா காலங்களில் கோயில் திண்ணைகளில் உறங்கும் தறிக்காரன் தான் அவர்களுக்கு தமது மொன்னை வீரத்தைக் காட்டும் விளையாட்டுக் களம். தேவையில்லாமல் வம்புக்கு இழுத்து அடிப் பார்கள். அந்த அநீதிகளெல்லாம் தொழிலாளர்களின் நினைவுக்கு வந்து கண்ணீரை வரவழைத்தன.

இனி, தங்களை துன்பப்படுத்துவோரைத் தட்டிக் கேட்க சங்கம் வந்து விட்டது. அதனை இயக்க புரட்சிகர கட்சியிருக்கிறது. எவனுக்கும் நாம் அஞ்ச வேண்டியது இல்லை. விசைத்தறி தொழிலாளர்களின் இந்த வெற்றியானது. கூலி விவசாயிகளுக்கும் மிக பெரிய ஆன்ம பலத்தைக் கொடுத்திருக்கிறது. விவசாயிகளும்,தொழிலாளர்களும் இனிமேல் அண்ணன் தம்பியால் இணைந்து போராடலாம்.

17

அதை உணர்த்துவது போல பறை முழக்கத்தை ஒலித்தார்கள் கூலி விவசாயிகள். வாத்திய சத்தம் விண்ணைக் கிழித்தது.

மனிதர்களுடன் சேர்ந்து காற்றில் நடமாடின பறைவைகள். மேக கூட்டங்கள் வானத்தில் நீந்தின. சந்தோசக் கூச்சல்கள், கும்மாளத்துடன் பட்டாசுச் சத்தம் ஊரை அதகளம் பண்ணியது. கொஞ்ச நேரம் அதை ரசித்து விட்டு சந்துரு தான் பேசாமல் தோழர் வசீகரனைப் பேச சொன்னான்.

‘‘தோழர்களே... இந்த வெற்றியானது உழைக்கும் மக்கள் ஒன்றுப்பட்டால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஊருக்கும், உலககுக்கும் உரத்துச் சொல்கிற மாதிரி அமைந்திருக்கிறது. ஆனா, நம்பளுக்கு இது போதாது. நம்ப இறுதி லட்சியம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வென்றெடுப்பதே! எனவே, இந்த வெற்றியை

அடித்தளமாய் வைத்து அடுத்த கட்டத்துக்கு நகர்வோம். இந்த போராட்டத்தில் சற்றும் சளைக்காமல் உறுதியாய் நின்ற உங்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.'' என சுருக்கமாய் பேசினார்.

உழைக்கும் மக்கள் சந்துருவை மீண்டும் பேச சொல்லி சத்த மிட்டார்கள்.

அவன் நெகிழ்ந்துப் போனான்

''இந்தப் போராட்டத்தில் நமக்கு துணையாக நின்ற கூலி விவசாயிகள் குறிப்பாய் இந்த கல்லூரியின் மாணவர்கள், எங்களுக்கு சோறு போட்ட உணவு விடுதி உரிமையாளர்கள், சிறு விசைத்தறி முதலாளிகள் அவர்கள் வீட்டுத் தாய்மார்கள், பொதுமக்கள் இப்படி அனைவருக்கும் நமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'' என்றவன் கூட்டத்தில் யாரையோ தேடினான்.

சற்று தூரத்தில் தன் சிநேகிதிகளுடன் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் சரிதா, அவளை தன்னருகே கையசைத்துக் கூப்பிட்டான் சந்துரு. அவள் நாணம் பொங்க தயங்கி நின்றாள். அப்போது பொன்னி ஓடிப் போய் அவள் கையைப் பிடித்து இழுத்தாள். அவர்கள் அந்த இரவில் நெருக்கமாகி விட்டார்கள் போல. ஒருமையில் விளித்துக் கொண்டார்கள்.

''எங் கைய வுடுடீ...''

''அதெல்லாம் முடியாது. தோழர் கூப்டுறாருல்ல, வாடீ...''

சரிதா தன்னுடன் தன் தோழிகளையும் கூட்டிக் கொண்டு சந்துருவை நோக்கி வந்தாள். மொத்த கூட்டமும் விலகி வழி விட்டது.

18

அவள் அருகே வர, அவன் கூட்டத்திடம் பேசினான்.

''தோழர்களே, இந்த பெண்களைப் பாருங்கள். நம்ப போராட்டத்துக்கு இவுங்க செஞ்ச உதவி மகத்தானது. இவர்கள் சரியான நேரத்தில் நமக்கு கொடுத்த உணவுப் பொட்டலங்கள் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் மிகப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்தது. இவர்களுக்கு

நமது நன்றிகளை உளமார தெரிவித்துக் கொள்வோம்.'' என்று அவன் சொன்னதுதான் தாமதம் ஒட்டு மொத்த கூட்டமும் ஆண், பெண் வித்தியாசமில்லாமல் பலத்த கையொலியை எழுப்பியது.

அந்த கணம் தன் வாழ்க்கையின் மகத்தான தருணமாய் உணர்ந்தாள் சரிதா. அவுசாரிகள் என்ற இழிசொல்லில் அவளும், தோழிகளும் ஊர் முழுக்க சிறுமைப்பட்டுக் கிடந்ததுதான் இதுவரை வழக்கம். இன்று அவர்களை மனுசியராய் பார்த்து மக்கள் அங்கீகாரத்துடன் கை தட்டுகிறார்கள். சரிதா உணர்ச்சி வேகம் தாங்காமல் கதறி அழுதாள். அதைப் பார்த்த மற்ற பாலியல் பெண்களும் அழ, மற்ற உழைக்கும் பெண்களெல்லாம் கண்ணீர் விட்டார்கள். ஒரு வகையில் இங்கே, அனைத்து மகளிரும் ஆணாதிக்கத்தின் அடிமைகள்தான். அந்த உணர்வே அவர்களை கிடைத்த அங்கீகாரத்துக்காக உணர்ச்சி வயப்பட வைத்தது.

அத்தியாயம்

11

1

அன்று மேதினம்.

பேட்டையும், நகரமும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளும் செக்கச் செவே லென்று தோற்றமளித்தன. சிகப்புத் தோரணங்கள், கொடிகள், வரவேற்புப் பதாகைகள் சுவரொட்டிகள் என இது வரை காணாதக் களையை அவை ஊர் களுக்கு கொடுத்திருந்தன. புதுப் பெண்ணின் உற்சாகத் துள்ளல். இளம் தளிரின் பரிசுத்தம். நுங்கும், நுரையுமாய் சுழித்தோடி வரும் பெரு வெள்ளம். காலை நேரச் சூரியனின் பிரகாசம் அனைத்தும் கலந்ததொரு மனநிலை வாய்க்கப் பெற்று உழைக்கும் மக்கள் 'யாம் பெற்ற இன்பம் இவ் வையகம் பெருகவே' என வானத்துப் பறவைகளாய் திரிந்துக் கொண்டிருந்தனர். தோழர் என்ற இனிய சொல் ஆண், பெண் பேதமில்லா மல் அனைவரின் நாக்கிலிருந்தும் புறப்பட்டு ஊர் முழுக்க எதிரொலித்தது.

திருப்பதிக்கும், சென்னைக்கும், பள்ளிப் பட்டுக்கும், நாகலாபுரத்துக்கும் என திசை நான்கிலும் அந்த வழியாய், செல்லும்

பேருந்துப் பயணிகள் இது என்ன திருவிழா? என்று அருகிலிருந்தவர் களை விசாரித்தார்கள். அதற்கு விடை தருவது போல, அப்போது பேருந்தில் ஏறி தொழிலாளர்களால் விநியோகிக்கப்பட்ட துண்டு பிரசுரங்களை ஆவலுடன் வாங்கிப் படித்தார்கள்.

எந்த ஊரிலும் தறிச் சத்தம் கேட்கவில்லை. நூல் ராட்டைகள், சாயப் பட்டறைகள் எதுவும் இயங்கவில்லை. எனினும், டீக்கடைகள், ஓட்டல்கள் திறந்திருந்தன. வியாபாரம்தான் நடக்கக் காணோம். கடைக்கண்ணிகள் பக்கம் கூட வராமல், தொழிலாளர்கள் இப்படிச் சிறப்பாய் மேதினத்தைக் கொண்டாடுவார்கள் என அறியாத வியாபாரிகள் ஏன் கடைகளைத் திறந்தோம்? என வருத்தப்பட்டு தாமும் தொழிலாளர்கள் தினத்தில் கலந்துக் கொள்ள கூடிப் பேசி முடிவெடுத்து தமது கடைகளை ஒவ்வொருவராய் மூட ஆரம்பித்தனர்.

இதுவரை மேதினம் என்றால் என்னவென்று அறியாத பொதுமக்கள், இயக்கத் தோழர்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களைப் படித்துப் பார்த்து உழைப்பவர்கள் செய்த தியாகங்கள் , போராடிப் பெற்ற உரிமைகள் மேலும் சமூக மாற்றத்துக்கான அவசியம் பற்றித் தெரிந்துக் கொண்டனர்.

2

மொத்தத்தில் பல கிலோ மீட்டர் சுற்றளவுக் கொண்ட அந்தப் பகுதியினருக்கு மூன்றாம் கண் திறந்தது போலிருந்தது. தொழிலாளர் கள், கூலி விவசாயிகள், கல் உடைக்கும் தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஒரு புத்துலகில் சஞ்சாரம் செய்தனர் என்று சொன்னால் அது மிகையில்லை.

பேட்டைதான் மேநாளின் மையம். அங்கிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு கிராமம் கிராமமாய் போய் செங்கொடி ஏற்றி விட்டுக் கடைசியாய் நகரத்துக்கு வருவதென ஏற்கனவே,முடிவெடுக்கப் பட்டிருந்தது.

கடந்த சில மாதங்களில், ஏற்கனவே, வெளிப்படையாய் அறிவிக்கப் பட்ட வர்க்க அமைப்புகளான தொழிற்சங்கம், கூலி விவசாயிகள் சங்கம் இவற்றுடன் புதிதாய் கல் உடைக்கும் தொழிலாளர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நகரத்திலிருந்து திருப்பதி செல்லும் நெடுஞ்சாலையில் நிறைய கல் குவாரிகள் இருக்கின்றன. அதில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த

குறிப்பாய் மேட்டூர் தாலுக்காவில் அமைந்துள்ள நிலமற்ற மற்றும் விவசாயம் பொய்த்துப் போன சிறு விவசாயிகள் ஏராளமாய் கல் உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல் குவாரிகளுக்கு அருகிலேயே முதலாளிகள் போட்டுக் கொடுத்த சிறிய சாளைகளில் வருடச் சம்பளத்துக்கு வேலை செய்கிறார்கள். இதுவரை அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்ட அடையாளமற்ற வந்தேறிகள் தான் அவர்களும். கல் குவாரிகளின் முதலாளிகள் ஆந்திரத்தைச் சேர்ந்தவர்கள். விசைத் தறி தொழிலாளர்கள் தமிழ் பேசுபவர்களால் சுரண்டப்படுகிறார்கள் என்றால் கல் உடைக்கும் தொழிலாளர்கள் தெலுங்கு மொழி பேசுபவர்களால் சுரண்டப் படுகிறார்கள். இந்த வேறுபாட்டைத் தவிர மாநிலம் விட்டு மாநிலம் வந்து வாழும் கொடூர வாழ்க்கை இரு தரப்புக்கும் ஒன்றுதான்.

நடந்து முடிந்த விசைத்தறியாளர்களின் போராட்டத்தால் அவர் களுக்கும் அடையாள அட்டை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு மற்றும் ரேஷன் அட்டைகள் வழங்கப்படிருக்கின்றன. அதில், பெரு மகிழ்வு அடைந்த கல் உடைப்பவர்கள் தங்களையும் பொதுவுடமைக் கட்சியின் வழி காட்டுதலின் கீழ் அமைப்பாக்கிக் கொண்டிருக் கிறார்கள். அது போக, நகரத்தில் ,சுமை தூக்குவோர் சங்கம். ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம் என பல்வேறு உழைப்பு பிரிவினருக்கான சங்கங்கள் அமைக்கும் முயற்சிகள் நடந்துக் கொண்டிருந்தன.

மொத்தத்தில், சுரண்டுப்படுபவர்கள் அனைவரையும் ஏதாவது ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வந்து சமூக மாற்றத்தின் பால் அவர்களை நகர்த்துவதே பொதுவுடமைக் கட்சியின் நோக்கமாய் இருந்தது.

3

விசைத்தறி தொழிலாளர்கள் சங்கத்துக்கு பேட்டையில் கோகிலா அம்மாளின் வீட்டு வெளிப்புறத் திண்ணையை சற்று அகலப்படுத்தி சுவர் எழுப்பி அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

முதலாளிகளுக்கு, விசைத்தறி தொழிலாளர்களுக்கும் கூலி உயர்வில் ஆங்காங்கே சிறு பிரச்னைகள் ஏற்படத்தான் செய்தன. ஆயினும், சங்க முன்னோடிகளால் அவை எளிதாய் தீர்க்கப்பட்டு விட்டன. ஓரளவு தொழிலாளர்கள் முதலாளிகள் கொடுத்த வாடகை வீடுகளில் வசிக்க தொடங்கி விட்டனர். அப்படியும் இருப்பிடங்கள் போதவில்லை அல்லது அது போன்ற தோற்றத்தை ஒரு சில முதலாளிகள்

ஏற்படுத்தினார்கள். அந்த நேரத்தில், வாடகை வீடு தருகின்ற முதலாளி களின் தறிப் பேக்டரிகளில் மட்டுமே வேலை செய்யும் உத்தியைக் கையாளச் சொல்லி தொழிலாளர்களுக்கு சங்கம் வழிகாட்டியது.

எனவே, வீடு கொடுக்காத பண்ணாடிகள் அவசரமாய் தங்கள் நிலங் களில் சுவர் எழுப்ப ஆரம்பித்து விட்டனர். அநேகமாய், திண்ணை களில் படுக்கும் உழைப்பாளர்கள் இந்த மாத இறுதிக்குள் யாரும் இருக்க மாட்டார்கள்.

அடையாள அட்டைகள் வழங்கும் பணிகள் முக்கால் வாசிதான் பூர்த்தியாகி இருந்தது. அதே போலத்தான் மற்ற பணிகளும் கொஞ்சம் மெதுவாய் நகர்ந்தாலும் சீராய் போய் கொண்டிருந்தன.

சந்துருவுக்கும், மாதேசுக்கும் கோகிலா அம்மாள் தன் வீட்டில் ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். ஆனால், அவர்களால் தான் தங்கள் வேலைகளில் முழுக் கவனம் செலுத்த இயலவில்லை. அனு தினமும் ஏதாவது தொழில் தகராறுகள் வந்து விடுகின்றன. அந்த சமயத்தில், பெரிதாய் அலுத்துக் கொள்ளாமல் கோகிலா அம்மாள் ஒத்துழைப்புக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். அவர்கள் தறி தொழிலை நம்பி வாழும் சிறு முதலாளி என்பதால், முடிந்த வரைக்கும் இரவு நேரங்களில் வேலை செய்து பகல் நேர இழப்பை ஈடு கட்டிக் கொண்டிருந்தார்கள் இருவரும்.

சிற்பி, சில கலை ஆர்வமுள்ள தொழிலாளர்களை தேர்ந்தெடுத்து தன்னுடன் இணைத்துக் கொண்டு முழு மூச்சாய் ஒரு கலை இலக்கியப் படையை உருவாக்க முனைந்துக் கொண்டிருந்தான்.

காலை சரியாய் எட்டு மணிக்கு சந்துரு மற்ற தோழர்களோடு கம்பீரமாய் கொடியேற்ற வந்தான். அப்போது சென்னையில் இருந்து மும்பை செல்லும் ரயில் வண்டி உற்சாக கூக் குரலோடு சற்று தொலைவிலிருந்த தண்டவாளத்தில் தடதடத்துச் சென்றது.

4

தங்கள் தலைவர்களைப் பார்த்ததும் பேட்டையில் சங்க அலுவலக வாசலில் கூடியிருந்த ஏராளமான மக்கள் பலத்த கரவொலி செய்தார்கள். அந்த விண்ணதிரும் கை தட்டலுடன் சந்துரு புதிதாய் அமைக்கப்பட்ட கம்பத்தில் செங்கொடியை ஏற்றினான். சூரிய ஒளிப்பட்டு மின்னிய கொடி காலைநேரக் காற்றில் கம்பீரமாய் பறந்தது.

அதைப் பார்த்து தன் வலது கை முஷ்டியை உயர்த்திய சந்துரு உரக்க குரல் கொடுத்தான்.

''மேதினிப் போற்றும் மே நாள்

பாட்டாளி வர்க்கப் போர் நாள்''

அதை உழைக்கும் மக்கள் தீரத்துடன் எதிரொலித்தார்கள்.

பேட்டையைச் சேர்ந்த முதலாளிகள் ஆங்காங்கே காணப்பட்டார்கள். ஆனால், அவர்களில் பலர் சற்று தள்ளி நின்றே வேடிக்கைப் பார்த்தார் கள். ஒரு சிலர் டீக்கடைகளில், பெட்டிக்கடைகளில், காந்தி சிலையருகே நின்று உழைக்கும் மக்கள் கூட்டதைக் குரோதமாய் பார்த்தார்கள். வெளி யூரிலிருந்து பிழைக்க வந்தவர்களின் செங்கொடிக் கொண்டாட்டம் அவர்களால் எளிதில் செரிக்க முடியாத ஒன்றாய் இருந்தது. குறிப்பாய் நடுத்தெரு மாதையன் அவனது சூழ்ச்சிக்கு பலியான நடேசன், ஏன், கருணாகரன் கூட அப்படிதான் ஒரு ஓரமாய் நின்றிருந்தார்.

எல்லா முதலாளிகளுக்கும் பொச்செரிந்தது.

சந்துரு பெண்கள் கூட்டத்தில் சரிதாவைத் தேடினான். எங்காவது கண்ணுக்கு தெரியாமல் கூச்சப்பட்டுக் கொண்டு மறைந்து நிற்கிறாளா? என நாலா பக்கமும் சுழன்றது அவன் பார்வை.

அவளை எங்கும் காணவில்லை. என்றாலும், அவளது சிநேகிதிகளான பாலியல் பெண்கள் ஒரு சிலர் தென்பட்டனர். அவர்களை அருகில் கூப்பிட்டு 'சரிதா எங்கே?' என விசாரித்தான்.

அதில், குள்ளமாய் மாநிறத்துடன் காணப்பட்ட சுந்தரி என்ற பெண் சற்று தயக்கத்துடன் பேசினாள் ''என்னன்னே தெரியல, தோழர். இந்த கூட்டம் நடக்கப் போறதப் பத்தி நாலஞ்சு நாளா அவதான் எங்கக்கிட்ட வாய் ஓயாம நிமிசத்துக்கு நூறு தரம் பேசிக்கிட்டு இருந்தா, இன்னிக்கி நாங்க பொறப்படும் போது கூட வூட்ல தான் இருந்தா ஆனா, கூட்டத்துக்கு வர மாட்டேன்னுட்டா...'' என்று.

5

அதைக் கேட்டு சந்துரு குழப்பமானான். என்னவாயிற்று சரிதாவுக்கு? திடீரென ஏன் புதிராய் மாறி விட்டாள்?

அப்போது சுந்தரியே தொடர்ந்தாள் ''கொஞ்ச நாளாவே அவ தொழிலுக்குக் கூட போறதில்ல தோழர்... ஏன்னு கேட்டா பதுலு சொல்ல மாட்டீங்கறா. நாங்களும் கேட்டுக் கேட்டு பாத்துட்டு எப்புடியோ போன்னு சலிச்சுப் போயி வுட்டுட்டோம்.''

அவன் கேட்டான் ''அப்ப சாப்பாட்டுக்கு என்னா செய்றா? ஈகல காசு கீசு வெச்சிருக்குறாளா?''

அதற்கு சுந்தரி பதில் சொல்லும் முன் வேறொருத்தி முந்திக் கொண்டாள். ''அவக்கிட்ட காசுப் பணம் இருந்தாலும் கைல தங்காது தோழர். எங்கள மாதிரி யாராவது கஷ்டம்னு கேட்டா எடுத்துக் குடுத்துடுவா...''

சந்துருவுக்கு அப்போதுதான் அந்த எண்ணம் வந்தது. பாலியல் தொழில் செய்யும் பெண்களுக்கு பால்வினை நோய்கள் வருவது மிக அதிகம். அப்படி ஏதாவது அவளுக்கு வந்து விட்டதா? அதிலும், தற்போது உலகையே அச்சுறுத்தும் எய்ட்ஸ் நோய் கிருமிகள் ஏதாவது அவள் ரத்தத்தில் கலந்து விட்டதா? அதை தெரிந்துக் கொண்டு வெளியே யாரிடமும் சொல்லாமல் மனதுக்குள் வைத்துக் குமைந்துக் கிடக்கிறாளா?

அவனால் இதை தவிர வேறு யோசிக்க முடியவில்லை. அடுத்தடுத்த மேதினக் கூட்டங்கள் இன்று நாள் முழுக்க காத்திருக்கின்றன.

எனவே, நேரம் கருதி அந்தப் பெண்களிடம் விடை பெற்றான். அவன் அவசரமாய் புறப்படும் போது கடைசியாய் சுந்தரி சொன்னாள் ''நீங்க வந்து என்ன ஏதுன்னு வெசாரிங்க தோழர்.'' என்று.

அவன் அதற்கு தலையசைத்து உறுதிக் கொடுத்தான்.

''நாளைக்கி காத்தால சரிதாவ ஆத்தாங்கரைக்கி வரச் சொல்லுங்க. நா அங்க வந்து அவளப் பாக்குறேன்.'' என்றான்.

ஆனால், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

திடுக்கிட்டு மாதிரி ''என்னா தோழர் நீங்க போயி அங்கெல்லாம் வந்துக்கிட்டு...'' என்றார்கள் ஒரே குரலில்.

6

அவன் ''ஏன், வரக் கூடாதா? ஏற்கனவே நா அங்க வந்தவந்தானே?'' என்று கேட்டான்.

''இருக்கலாம். இனுமே அது வேண்டாம். வேணுன்னா சரிதாவ அரப்புக் காட்டுக்கு வரச் சொல்றோம். நாளைக்கி வந்து பாருங்க.'' என்று ஆளாளுக்கு கூறி விட்டுப் போனார்கள்.

அன்று ஒரு நாள் சரிதா கூட இதே போல் ஆற்றங்கரைக்கு வர வேண்டாம் என அவனிடம் கூறியது அந்த நேரத்தில் சந்துருவின் நினைவுக்கு வியப்பில் ஆழ்த்தியது. அவர்களின் மனநிலை ஒன்று போலவே இருப்பதாய் கருதிக் கொண்டான்.

பேட்டையில் இருந்து தொடங்கி சைக்கிள் ஊர்வலமாய் புறப்பட்டு, ஏரிக்கரை சேரிக்குப் போய் அங்கு கூலி விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த தோழர் கொண்டையாவின் தலைமையிலும், அனுமந்துவின் முன்னிலையிலும் இரண்டாவது மேதின கொடியேற்றம். அப்படியே நின்ற என்ற இடத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிற கொடியேற்ற நிகழ்ச்சி, அதன் பிறகு, சீவாடா, சத்தியவாடா, பொன்பாடி, குப்பம் போன்ற ஊர்களிலும் கடைசியாய் நகரத்திலும் கொடியேற்றங்கள் அடுத்தடுத்து நடக்க இருக்கிறது.

நுற்றுக் கணக்கில் வருகின்ற செங்கொடி கட்டிய சைக்கிள்களைப் பார்த்து வழியில் தென்பட்ட உழைக்கும் மக்கள் உற்சாகமாய் கையசைத்தார்கள்.

ஏரிக்கரை சேரிப்பகுதியில் தான் போராட்ட சமயத்தில் தேவராசுவை கூலி விவசாயிகள் போலீசுக்கு தெரியாமல் தலைமறைவாய் வைத்திருந்தார்கள்.

அப்படி செய்திருக்காவிட்டால், நிச்சயம் அவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டிருப்பார். மற்ற சிறு முதலாளிகள் பயந்து போய் தங்கள் தலைவருக்கே இந்த கதியா? என்று பெரு முதலாளிகளின் காலில் விழுந்து கூலி உயர்வுப் போராட்டத்தை காவு கொடுத்திருப் பார்கள்.

இன்று அவர்களின் கோரிக்கை நிறைவேறியதுடன், பெரிய முதலாளி கள் அவர்களை கவுரமாய் நடத்தும் சூழ்நிலமை வந்திருக்கிறது. அதற்கு காரணம், தொழிற்சங்கமும், கூலி விவசாயிகள் சங்கமும் புரட்சிகர கட்சியின் வழிகாட்டுதலில் தேவராசுக்கு கொடுத்த ஆதரவும், அவரது தலைமையில் இயங்கிய விசைத்தறி சிறு முதலாளிகள் சங்கத்துக்கு எடுத்துக் கொடுத்த உறுதியான நடைமுறை போராட்ட உத்திகளும் தான்.

7

ஆனால், தேவராசுவும் சரி, அவரது சங்கத்தினரும் சரி அதற்கான நன்றியை எள்ளளவும் தொழிலாளர், விவசாயிகள் சங்கங்களிடம் காட்டவில்லை. என்பதே உண்மை. ஒரு வேளை அவருடைய சகாக்கள் விடவில்லையா? தெரியவில்லை.

காரியம் முடிந்ததும் கையை கழுவி விடுவதைப் போலவே நடந்துக் கொண்டார்கள்.

ஒரு நன்றி அறிவிப்புக் கூட்டம் கூட நடத்தவில்லை. என்றாலும், தேவராசின் மகன் கல்லூரி மாணவன் இளங்கோ தன் தந்தைக்கு நேர் மாறாய். அபாரமான ஈடுபாட்டை புரட்சிகரக் கட்சியின் பால் காட்டியும், காட்டிக் கொண்டும் இருக்கிறான்.

அன்று நடந்த சாலை மறியல் போராட்டம் அவனை வெகுவாய் ஈர்த்து விட்டது.

அதன் விளைவாய், வேகமாய் மார்க்சியம் கற்றுக் கொண்டு வருகிறான். தன் மாணவ நண்பர்களுடன் இணைந்து அவர்கள் படிக்கும் கல்லூரியில் ஒரு மாணவர் சங்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இருக்கிறான். காலம் ஒன்றின் இடத்தை மற்றொன்றால் இட்டு நிரப்பி இருக்கிறது. அந்த வகையில் ஊசலாட்ட சிறு முதலாளிகள் வர்க்கத்தில் இருந்து ஒரு புரட்சிகர சக்தி கிடைத்திருக்கிறது. என்றாலும், இந்த விசயம் தேவராசுக்கு தெரியாது. தன் மகன் புரட்சியாளர்கள் அமைப்பில் இணைந்திருக்கிறான் என்று அவருக்கு தெரியவரும் போதுதான் என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை. இளங்கோ அப்போது காட்டும் உறுதிதான் அவனையும் மற்றவர்களுக்கு அடையாளம் சிறப்பாய் அடையாளம் காட்டும்.

சந்துரு யோசித்துக் கொண்டே சீராய் சைக்கிள் மிதித்தான். வெகு விரைவில், ஏரிக்கரை சேரி வந்து விட்டது. அங்கே, ஊர்வலத்துக்கு உற்சாகமான வரவேற்பு இருந்தது. கூலி விவசாயிகளோடு ஏரி, குளங்களில் மீன் பிடிப்பவர்கள் சிலரும் கொடியேற்ற நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டனர்.

அதில், உரையாற்றிய சந்துரு, தோழர் சிங்காரவேலரை நினைவு கூர்ந்தான். சாதாரண மீனவ குடும்பத்தில் பிறந்த அவர் படித்து

வழக்குரைஞராய் உயர்ந்தார். சென்னை மாகாண உயர்நீதி மன்றத்தில் சிறப்பாய் பணியாற்றினார். அத்தோடு நில்லாது உறுதியான தொழிற்சங்கவாதியாய் உழைக்கும் மக்கள் பக்கம் நின்று பல்வேறு வேலை நிறுத்தப் போராட்டங்களில் பங்கு பெற்றார். 1923ல் முதலாவது மேதினத்தைக் கொண்டாடிய அவர், அதற்கு, சுதந்திர போராட்ட வீரர் சுப்ரமண்ய சிவாவை முன்னிலை வகிக்க வைத்தார்.

8

அதை சந்துரு சொன்ன போது அந்த மீனவ மக்கள் பெரிமிதம் கொண்டார்கள். அவன் இப்படி ஒவ்வொரு இடத்துக்கும் ஏற்றாற் போல தன் பேச்சை வகுத்துக் கொள்ள மற்ற தோழர்கள் மகிழ்ந் தார்கள்

அன்று மாலை வரை திட்டமிட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் எந்த குறையும் இல்லாமல் சிறப்பாய் நடந்தேறியது. அது ஆளும் வர்க்கங் களின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

சந்துரு தான் சொன்னதுப் போலவே மறுநாள் சரிதாவை தேடிப் போனான்.

குப்பம் ரயில் நிலையத்தைக் கடந்து, பேட்டை ஏரிக்கரை வழியாகச் செல்லும் அந்த தண்டவாளங்களை ஒட்டியிருக்கும் அரப்புக் காட்டில் தான் அவர்களின் சந்திப்பு நிகழ்ந்தது. அவள் வெகுசீக்கிரம் வந்து அவனுக்காய் காத்திருந்தாள் போலும். காத்திருப்பின் களைப்பு அவள் முகத்தில் தெரிந்தது. பார்த்த மாத்திரத்திலேயே கேட்டான்.

''ஒடம்புக்கு என்னா சரிதா?''என பதட்டத்துடன்.

அவள் இயல்பாய் சிரித்தாள் ''ஒண்ணுமில்லயே.. யார் சொன்னாங்க எனக்கு ஒடம்பு செரியில்லன்னு?'' என பதிலுக்கு கேட்டாள்.

அதன் பிறகுதான் அவனுக்கு கொஞ்சம் நிம்மதி வந்தது. ஆனாலும், சந்தேகமாய் கேட்டான்.

''அப்புறம் ஏன் நேத்து நடந்த மேதின கூட்டத்துக்கு வரல?'' என்று.

''ஓ, அதனால தான் தோழர் இவ்வளவு தூரம் தேடிக்கிட்டு வந்தாரா?''

அவனுக்கு சற்று கோபம் வந்தது ''நா கேட்டதுக்கு பதுலு சொல்லாம நீ என்ன திரிப்பிக் கிட்டு கேட்குறயே? ஒஞ் சிநேகிதிங்க என்னன்னமோ சொன்னாங்களே?'' என்றான்.

''எல்லாத்துக்கும் அப்புறம் பதுலு கண்டிப்பா சொல்றே. மொதல்ல, இப்புடி வந்து ஒக்காருங்க'' என்று அவன் கையைப் பிடித்து ஒரு பாறை மீது உட்கார வைத்து, தானும் அவனருகே ஒட்டி உட்கார்ந்தாள்.

அதன் பிறகு தான் தன்னை சுற்றிலும் நடப்பதை அவன் கவனித்தான்.

ஒன்றா? இரண்டா? அடேயப்பா.. அந்த அரப்புக் காட்டில் எத்தனை மயில்கள்.

9

சந்துரு தன் வாழ்நாளில் அவ்வளவு மயில்களை ஒரே இடத்தில் பார்ப்பது இதுவே முதல் முறை. சின்னதும், பெரியதுமாய் ஆணும், பெண்ணுமாய் ஒரே மயில் கூட்டம்.

அவனது சொந்த ஊரான மணியம்பாளையத்தில் முருகன் கோயில் இருக்கிறது. அதற்கு யாரோ வேண்டுதல் வைத்து மயில் ஒன்றை கொண்டு வந்து கோயில் வளாகத்தில் விட்டிருந்தார்கள். அது விசேடம் இல்லாத நாட்களில் உணவுக்காய் கோயிலை விட்டு வெளியே வந்து வீதிகளில் திரியும்.

இயற்கையாய் காட்டில் கிடப்பதை தின்று வாழும் மயிலுக்கு ஊருக்குள் என்ன கிடைக்கும்? ஊசிப் போன காரவடை, அழுகிய வாழைப்பழங்கள் என்று சிறு கடைக்காரர்கள் பிச்சையாக தூக்கிப் போடும் உணவையே தனக்குப் பழக்கப்படுத்திக் கொண்டது. நம் நாட்டின் தேசியபறவையான மயிலுக்கு நேர்ந்த கதி இதுதான்.

அதுவும் கிடைக்காத நேரத்தில் அந்த மயில் சாலையில் குழந்தைகள் யாராவது கையில் தின்பண்டங்கள் வைத்துக் கொண்டு திரிந்தால், அவர்களை துரத்திப் போய் பயமுறுத்தியது.

குழந்தைகள் கையிலிருப்பதை அலறியடித்துக் கீழே போட்டு விட்டு ஓடினார்கள். கிட்டத்தட்ட கோயில் மயில் பிடுங்கித் தின்றது என்று கூட கூறலாம்.

நாளடைவில் அந்த மயில் குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர் களையும் ஓட்டல்களில் டிபன், சாப்பாடு பார்சல் வாங்கிக் கொண்டு போனால் விரட்ட ஆரம்பித்தது. கடைசியில் அந்த மயில் உடல் நலம் குன்றி கவனிப்பார் இல்லாமல் இறந்து விட்டது. அதன் பிறகு, மாலையெல்லாம் போட்டு மரியாதை செய்து ஊரார் கொண்டு போய் புதைத்தது வேறு கதை.

இன்றும் கூட, விலங்குகளைக் கோயிலுக்கு நேர்ந்து விட்டு அதன் இயல்பு தன்மையை மாற்றி விடுகிறார்கள் சில பேர்.

ஆனால், இங்கே அப்படியெல்லாம் இல்லாமல் அரப்புக் காட்டின் பச்சைப் பசேலென்ற இயற்கை சூழ்நிலையில் மயில்கள் அழகாய் நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் மனதுக்கு சரிதா மிகவும் நெருக்கமானவள் போலும். அவள் விநோதமாய் குரல் எழுப்பிக் கூப்பிட்டால் அவை அருகில் வருகின்றன. சிநேக பாவத்துடன் அழகாய் பார்க்கின்றன. அவள் அதனதன் கழுத்தை தடவிக் கொடுத்தால் அவை ரசிப்பதாய் தோன்ற அவன் இமை மூடாமல் அவற்றையே பார்த்துக் கொண்டிருந்தான்.

10

சரிதா ஒவ்வொன்றுக்கும் அவற்றின் பாலினத்துக்கு தகுந்தவாறு பெயர் வைத்திருக்கிறாள்.

ராசாத்தி, ஸ்ரீவள்ளி, வைதேகி, பாபு, திருப்பதி என்றெல்லாம் பெயர்கள். அதில், பாபுவுக்கு சரிதாவுவை மிகவும் பிடிக்கும் போலிருக்கிறது. அவளுடன் புதிதாய் சேர்ந்திருக்கும் சந்துருவை அந்த ஆண் மயில் குரோதமாய் பார்த்தது. தலையை வளைத்து கண்ணை உருட்டிக் கொண்டு அது பார்த்த பார்வை சற்று பயத்தைக் கொடுத்தது. பறந்து வந்து மேலே விழுந்துப் பிடுங்கி விடுமோ? என அச்சப்பட்ட அவன் சரிதாவிடம் பாபுவை சுட்டிக் காட்டினான்.

அவள் கலகலவென சிரித்தாள்.

‘‘ஒரேய் பாபு இங்க வா...’’ என்று கூப்பிட்டாள். ஆனால், அதற்கு கோபம் போலும் வர மறுத்து தலையை வேறு புறம் திருப்பிக் கொண்டது. சந்துரு மயிலின் கோபத்தை சுவாரஸ்யத்துடன் பார்த்தான்.

அப்போது சரிதா ''கூப்டா வர மாட்டியா? அவ்வளவு திமுராயிப் போச்சா? ஒன்ன...'' என்ற செல்ல மிரட்டலுடன் பாபுவின் அருகே எழுந்துப் போனாள்.

அவளைக் கண்டதும் அது தெறித்து ஓட ஆரம்பித்தது. அவள் ''டேய், நில்லுடா...'' என அரப்பு மரங்களுக்கிடையே விரட்டினாள்.

அதை செவி மடுக்காத பாபு ரொம்ப தூரம் ஓடிப் போய் நின்று திரும்பிப் பார்த்தது. சரிதா, அதைப் பிடிக்கும் முயற்சியில் தோல்வியடைந்து ''அப்புறம், எங்கையில மாட்டாமயா போவே? அப்ப இருக்கு ஒனக்கு...'' என முனகியபடியே சந்துருவிடம் திரும்பி வந்தாள்.

''அதுக்கு புது ஆளக் கண்டா பயம், அதான் தெறிச்சி ஓடுது.'' என்று மூச்சிரைக்கத் திரும்பி வந்து சந்துருவிடம் சமாதானம் சொன்னாள்.

உண்மைதான். மற்ற உயிரினங்கள் மனிதனைக் கண்டு அஞ்சவே செய்கின்றன. அவன்தானே அதுகளுக்கு அதிக தொந்தரவு தருபவன்.

சரிதா சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். பிறகு, ''இப்ப கேளுங்க, நீங்க கேக்குற எல்லாத்துக்கும் பதுலு சொல்றேன்.'' என்று அவன் தோளில் உரிமையாய் சாய்ந்துக் கொண்டாள். சந்துரு அவள் முகத்தை நிமிர்த்தி வாஞ்சையுடன் கேட்டான் ''ஒனக்கு என்னா பிரச்னை சரிதா? நீ எப்பவும் மாதிரி இல்லன்னு ஒஞ் சோடிப் பொண்ணுங்க சொல்றாங்களே... என்னம்மா ஆச்சு? ஏனிப்புடி மாற்னே?'' என்று.

11

அதற்கு அவள் மென்மையாய் கூறினாள் ''நா மாறாம எப்புடி இருக்க முடியும்? நீங்கதான் என்ன மாத்திட்டீங்களே...'' என்று புதிராய்.

அவன் ''நா என்னா ஒன்ன மாத்துனேன்?'' என்று புரியாமல் கேட்டான்.

அவள் சிரித்தாள் ''புரட்சிக்கார்ருக்கு இது தெரியாதா? பொம்பள ஆம்புளைக்கு அடிமையா இருக்க கூடாது? சுயமா சிந்தனை பண்ணணும். அப்புடின்னு ,அன்னிக்கி காலேஜ் வாசல்ல பேச்சுவார்த்தை முடிஞ்சப்புறம் எங்கிட்டயும், அங்கிருந்த மத்த பொம்பளைங்க கிட்டயும் டீக் குடிச்சுக்கிட்டு என்னன்னமோ சொன்னீங்களே...'' என்று நினைவுப்படுத்தினாள்.

''ஆமா, சொன்னேன். அதுக்கு என்னா இப்போ?'' அவன் குழப்பமாய் கேட்டான்.

அவள் அதற்கு குறும்பாய் சிரித்து விட்டுச் சொன்னாள்.

''நா ஒவ்வொரு தடவையும் ஒங்களப் பாக்குறப்பல்லாம் ஒங்களுக்கு அடிமையாயிக் கிட்டே வர்றேன். திருப்பித் திருப்பிப் பாத்தா, முழுசா ஒங்களுக்கு அடிமையாயிடுவனோன்னு பயமா இருந்துச்சி. ஒங்க பேச்ச மீற எனக்கு மனசில்ல, அதான் அதுக்கப்புறம் பாக்க வரல...''

''நீ என்னா என்ன கலாய்க்கிறியா சரிதா.?''

அவன் அவள் தலையில் செல்லமாய் தட்டினான்.

சட்டென அவன் கையைப் பிடித்துக் கொண்ட சரிதா உணர்ச்சி வயப் பட்ட நிலையில் கூறினாள் ''நெசந்தாங்க என் மனசுப் பூரா நீங்கதான் இருக்குறீங்க. எப்பவும் ஒங்க நெனப்பாவே இருக்குறதனால என்னால தொழிலுக்குக் கூட போவ முடியல... ஒரு மாதிரி பித்துப் பிடிச்ச மாதிரி இப்பல்லாம் இருக்குதுங்க...'' என்று. அப்போது அவள் கண்களில் நீர் கோர்த்திருந்தது.

அதைப் பார்த்ததும் சந்துரு நெகிழ்ந்துப் போனான். இந்த பெண்ணுக்கு தன் மேல் இவ்வளவு காதலா? இதற்கு எதைக் கொண்டு ஈடு செய்வது?

சட்டென அவன் ''சரிதா...'' என அவளை இறுக்கிக் கட்டிக் கொண்டான். கட்டுக் கடங்காமல் உணர்ச்சிக் கொந்தளிப்பு ஏற்பட்டது. அவள் உதட்டில் தன் உதடுகளை அழுத்தமாய் பதித்தான் சந்துரு. அவளுக்கும் அது தேவைப்பட்டது போலும், அந்த இனிமையான முத்தத்தை ஏற்பது போல அமைதியாய் இருந்தாள்.

12

இதுவரை, அவர்கள் வெறும் காமத்துக்காக, சதைப் பிண்டங்களாய் எத்தனையோ தடவை கூடியிருக்கிறார்கள். அதிலும் கூட, அவள் இயந்திரமாய் தான் இருந்திருக்கிறாள்.

இப்போது காதலோடு கூடுவது எவ்வளவு ருசியாய் இருக்கிறது. 'உப்பில்லா பண்டம் குப்பையிலே...' என்பார்கள். காமமும், அப்படித்தானோ? எனவே, அவர்கள் மனதுக்குப் பிடித்த சாப்பாட்டை

வயிறு நிறைய உண்பது போல, ஒருவரையொருவர் அள்ளித் தின்றார்கள்.

அதைப் பார்த்த சுற்றிலும் இருந்த மயில்கள் வெட்கப்பட்டனவோ, என்னவோ? சத்தமிட்டு அவர்களைக் கலைக்காமல் விலகிப் போய் அரப்பு மரங்களில் மறைந்துக் கொண்டன. தூர ஓடிப்போன பாபு கிட்டே வரவேயில்லை.

அப்போது, அவர்களை அந்த அரப்புக் காட்டுக்கு வெகு நெருக்கத்தில் இருந்த தண்டவாளத்தை தடதடத்துக் கடந்துச் சென்ற சென்னை ரயில் கலைத்தது. மெல்ல விலகி தங்களை சரிப்படுத்திக் கொண்ட சமயத்தில் இருவருமே வேர்த்துப் போயிருந்தனர்.

சரிதா தன் சேலைத் தலைப்பால் அவன் முகத்தை துடைத்து விட்டாள். அவன் தன் கைலியால் அவள் முகத்தை துடைத்தான். சிலு சிலுவென்றுக் காற்று வீசியது. இருவரும் இதமாய் உணர்ந்தார்கள். அவனுக்கு லேசாய் தாகம் வறட்டியது.

அவளிடம் ''கடைப்பக்கம் போயி டீ குடிக்கலாமா?'' என்று கேட்டான்.

அதற்கு சரிதா ''வேண்டாம். என்னூட்டுக்கு வாங்க, நா ஒங்களுக்கு எங்கையால காப்பி வெச்சுக் குடுக்குறேன்.'' என்றாள்.

அவன் தயக்கமாய் ''இல்ல, கடைப்பக்கம் போனா வவுத்துக்கு எதுனாச்சும் சாப்புடலாம். எனக்குப் பசிக்குது புள்ள.'' என்றான்.

அவள் கோபமானாள் ''ஏன், எங்கூட்ல சோத்தாணி கீது இருக்காதா? அடுப்பு பத்த வெக்க மாட்டமா? கொலப் பட்டினியாவா நா கெடக்குறேன்.'' என்று பொரிந்தாள்.

அவன் வேண்டுமென்றே சீண்டினான் ''நீதான் தொழிலுக்கே போறதில்லியே, அப்புறம் ஒங்கிட்ட ஏது காசு? சோத்துக்கு எத வெச்சு தவசம் வாங்குவே?'' என்றான்.

13

''ஏன், எனக்கு ஒங்கள மாதிரி நல்ல மனுசங்க பழக்கமில்லியா? அவுங்க ஒதவ மாட்டாங்களா?'' என்றவள் தொடர்ந்து ''சும்மா பேசிக்கிட்டு நிக்காம வாங்க போவோம்.'' என்று கையைப் பிடித்து இழுத்தாள்.

அப்போது அடுத்த ரயில் தடதடத்துச் செல்ல எங்கோ ஒளிந்திருந்த பாபு கடகடவென்று ஓடி வந்து சரிதாவின் அருகில் நின்றது. அவள் குனிந்து அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டாள் ''என்னடா, ரயில் சத்தத்தைக் கேட்டா பயமா இருக்குதா?'' என்று.

சந்துரு அதைப் பார்த்தபடி ''என்னா ஒம் பாபு செரியான பயந்தாங் கொள்ளியா இருப்பாம் போல்ருக்குது?'' என்று கேட்டான்.

அவள் அதற்கு முகத்தை நொடித்து விட்டு ''அப்புடியெல்லாம் ஒண்ணுமில்ல, அவனுக்கு எதப் பாத்தும் பயமில்ல, இந்த ஆதமத்த ரயிலு சத்தந்தான் பயப்படுத்துது'' என்று கூறி விட்டு ''நா வூட்டுக்குப் போறேன். தோழர் வந்துருக்குறாங்கல்ல, அவுங் களுக்குச் சோறாக்கிப் போடணுமுல்ல, வரட்டுமா?'' என பாபு விடம் விடை பெற்றாள். அதுவும் சரியென்பது போல தலை அசைத்துப் பார்த்தது.

இப்படியொரு நட்பை தன் வாழ்நாளில் பார்த்ததில்லை என நினைத்துக் கொண்டான் சந்துரு.

அவர்கள் தங்கள் கைகளைக் கோர்த்துக் கொண்டு உல்லாசமாய் நடந்தார்கள். ஆனால், இருவருக்கும் நடுவே, ஒரு குழந்தையைப் போல பாபு புகுந்துக் கொண்டு கூடவே வந்தது. அவனுக்கு முழங்கால் உயரம் இருந்தது அந்த மயில். சந்துரு சரிதாவிடம் கேட்டான் ''ஆமா, சார் எவ்வளவு நாளா ஒனக்குப் பழக்கம்?'' என்று.

அவள் அதற்கு பதில் சொல்லாமல் ''அதென்னா சார்,கீருன்னு கூப்டுக்கிட்டு பாபுவ தோழர்னு கூப்புடுங்க.'' என்றாள்.

''அப்புடியா? செரிங்க தோழர்'' என்று பாபுவை நோக்கிச் சொல்ல, அது அவனை சிநேகபாவத்துடன் பார்த்தது. அதைக் கண்டு சிரித்த சரிதா சொன்னாள் ''இது குட்டியா இருக்கும் போதே இதோட அம்மா செத்துப் போச்சு. அதுக்கு என்னமோ நோவு. இதுவும் சாகத்தான் கெடந்தது. நாந்தாம் பாத்துட்டு நகரத்துல மாட்டாஸ்பத்திரி இல்ல அங்க தூக்கிக்கிட்டுப் போயி காட்டுனேன். டாக்டரு மருந்துக் குடுத்தாரு. அப்புறம், தெளிஞ்சுருச்சி. அது இருக்கும் ரெண்டு மூணு வருசம். அன்னிக்கிருந்து அவர் நமக்கு சிநேகிதம். இல்ல பாபு...'' என சொன்னாள்.

14

அது ஏதோ புரிந்த மாதிரி லேசாய் தலையாட்டியது. பொதுவாய் மக்களுக்கு கால்நடை மருத்துவமனை என்பது மாட்டாஸ்பத்திரிதான் என சந்துருவும் புரிந்துக் கொண்டு தலையசைத்தான்.

அதற்குள், அரப்புக் காட்டின் எல்லை வந்து விடவே, மயில் அதை தாண்டி வராமல் எல்லைக்குள்ளாகவே நின்று விட்டது. அவன் ஆச்சரியமாய் பார்த்தான் ''என்னாச்சி?'' என்று சரிதாவைக் கேட்டான் ''இதுக்கு மேல அது நா கூப்டாலும் வராது, வாங்க போவோம்.'' என்று அவன் கையைப் பிடித்து இழுத்தாள்.

பிறகு, அவளாக சொன்னாள் ''நமக்கு வூடு சொந்தம்னா, அதுக்கு காடு சொந்தம். அவுங்கவுங்க எடத்துல அவுங்க இருந்தாத்தானே மருவாதி.'' என்றாள். அவன் அவளை சற்று திகைப்போடு பார்த்தான்.

எவ்வளவு பெரிய உண்மையை வெகு சாதாரணமாய் சொல்லி விட்டாள் சரிதா. மெத்தப் படித்த காசுள்ளவர்களுக்கு எங்கே இது புரிகிறது. பழங்குடி இன மக்கள் காடுகளில் வசிப்பது அவர்களின் பாரம்பரியம். அவர்களால், விலங்குகளுக்கு யாதொரு தொல்லையும் இல்லை.

ஆனால், பணம் படைத்தவர்கள் அப்படியா? தங்களின் சொகுசு வாழ்க்கைக்காக காடுகளில் போய் விலங்குகளின் வழித் தடத்தை மறித்து பங்களா கட்டிக் கொண்டு உல்லாசம் அனுபவிக்கிறார்கள். சிலர் ரிசார்ட் என்ற தங்கும் விடுதிகள் கட்டி வாடகைக்கு விட்டு கொள்ளைப் பணம் சம்பாதிக்கிறார்கள். அப்புறம், விலங்குகள் வழி மாறி எங்காவது புகுந்து விட்டால். காட்டு மிருகங்கள் ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்கின்றன என்று பத்திரிக்கைகளில் செய்தி போடுகிறார்கள்.

அட்டகாசம் செய்வது யார்?

காட்டுக் கொள்ளைக்காரன் வீரப்பன் என்கிறார்கள்.

உண்மையில் காட்டையும் அதன் கனிமவளங்களையும் ஏகபோக நிறுவனங்கள் தான் கொள்ளையடிக்கின்றன. வீரப்பனைக் கண்டு உண்மையில் அரசாங்கம் பயப்படக் காரணமே, காட்டுக்குள் அதிகாரிகள் தாங்கள் நினைத்தவாறு கனிம கொள்ளையர்களுக்கு துணை போக முடியவில்லை. காவிரி நீர் பிரச்னையை வைத்து கன்னட

மக்களை அரசியலுக்காக பயன்படுத்தி தமிழர்களை துன்புறுத்த கர்நாடக சுரண்டல் வாதிகளால் இயலவில்லை. எனவே, வீரப்பனுக்கு காட்டுக் கொள்ளைக்காரன் பட்டம்.

15

வீரப்பனை வேட்டையாடுவதாய் கூறி சிறப்பு அதிரடிப்படை அமைத்து, தர்மபுரியில் தோழர் பாலனைக் கொன்ற அதே பெரிய மீசைக்கார அதிகாரியின் தலைமையில் நடக்கின்ற அக்கிரமங்களால், அப்பாவி மாதேஸ்வரன் மலைவாழ் மக்கள் படுகின்ற துன்பங்கள் கொஞ்சமா? நஞ்சமா?

அதே போல, தமிழ்நாட்டை அந்நியர்கள் கொள்ளையடிப்பதை எதிர்த்து, தமிழக வரலாற்றில் முதன்முறையாய் தோழர் தமிழரசன் தனித் தமிழ்நாட்டுக்காக ஆயுதமேந்தி போராடினார். அவரையும், அவரது கூட்டாளிகளையும் பொன்பரப்பி என்ற ஊரில், தீவிரவாதிகள் என பொதுமக்கள் என்ற போர்வையில் வஞ்சகமாய் அடித்துக் கொன்றனர் போலீசார்.

சிங்கள இனவெறியன் பார்வையில், ஈழத்தின் விடிவெள்ளி பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள்.

போராடுபவன் கையில் தற்காப்புக்காக ஆயுதம் இருந்தால் அவன் தீவிரவாதி அல்லது கொள்ளைக்காரன்? அதே ஆயுதம் மக்களைக் கொல்பவன் கையில் இருந்தால் அவன் அதிரடிப்படை வீரன்?

பேய்கள் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்.

மெல்ல தன் சிந்தனையில் இருந்து விடுப்பட்ட சந்துரு, சரிதாவுடன் வந்து நின்ற இடம் ஒரு சாளைக் குடிசைப் பகுதி. விளிம்பு நிலை மக்களின் வாழ்விடம். நேற்று ஏரிக்கரை சேரிப்பகுதியில் கூலி விவசாயத் தோழர்களின் தலைமையில் மேதின கொடியேற்றத்தை நடத்தியது நினைவுக்கு வந்தது. ஆனால், அந்த மக்களெல்லாம் உற்பத்தி சார்ந்து உழைத்து வாழ்பவர்கள் சரிதா போன்ற பெண்கள் மட்டும் ஏன் பாலியல் தொழிலுக்கு வந்தார்கள்.?

சந்துரு நிறைய கேள்விகளுடன் அந்த சாளைப் பகுதியை அளந்தான். கிட்டத்தட்ட பத்திருபது சாளைககள் இருக்கும். அவை அனைத்தும்

ஒழுங்கற்று சீட்டுக் கட்டைக் கலைத்துப் போட்டது போல இருந்தன. அவற்றின் நுழைவு வாசல் குருவிக் கூட்டைப் போல குறுகலாய் காணப்பட்டன. ஒன்றிரண்டின் அல்லையில் ஆயிரம் ஓட்டைகள் கொண்ட பழைய தென்னங்கீற்றுகளால் அமைக்கப்பட்ட பொடக்காலிகள் தெரிந்தன. ஆங்காங்கே கயிறுகள் கட்டி துணிகள் காயப் போட்டிருந்தனர். அவை அனைத்தும் பெண்களின் உடுப்புகள். நிழலுக்காய் புங்கமரங்கள் காணப்பட்டன.

ஒரு மரத்தின் அடியில் மிக வயதான பெண்மணி ஒரு கல்லில் அமர்ந்து வெற்றிலையை மென்றபடி சந்துருவை நூதனமாய் பார்த்தார்.

16

அவன் ஒவ்வொன்றையும் வித்தியாசமாய் காண்பதை உணர்ந்த சரிதா ''எங்க ஊரு ஒங்களுக்கு என்னமோ மாதிரி தோணுதா?'' என்று கேட்டாள்.

அப்போது அவனுக்கு சில நாட்களுக்கு முன்பு வரையில் பேட்டையில் இது போன்ற எளிய சாளைகள் கூட கிட்டாமல் விசைத்தறி தொழிலாளர்கள் கோயில் வராண்டாவிலும், முதலாளிமார் வீட்டு திண்ணையிலும் கொசுக்கடியில் படுத்துக் கிடந்ததும், அவர்களோடு சேர்ந்து தானும் அந்த கொடுமைகளை அனுபவித்ததும் நினைவுக்கு வந்தது. அதை விட பாலியல் பெண்களின் வாழ்நிலை ஒன்றும் மோசமில்லை என்றே அவனுக்குத் தோன்றியது.

தான் நினைத்ததை சந்துரு சரிதாவிடம் சொல்ல, அவள் அவனைப் பரிதாபமாய் பார்த்தாள். அவள் சட்டென்று தன் குடிசை வீட்டு வாசலில் அவனை நிறுத்தி விட்டு தன் சிநேகிதிகளைக் கூப்பிடப் போனாள்.

''ஏய் சாந்தி, வனிதா, சுந்தரி... எல்லாம் வாங்கடீ, தோழர் வந்திருக்குறாரு...'' என கத்திக் கொண்டே ஒவ்வொரு சாளைக்கும் போனாள். அதைப் பார்த்து அவனுக்கு சிரிப்பு வந்தது. இங்கிருந்தே அவர்களை அழைக்கலாமே... என்ன அரை ஏக்கர் பரப்பளவு இருக்குமா, அந்த சாளைப் பகுதி? ஆனால், சரிதாவின் தோழிகள் தூக்க கலக்கத்துடன் சாளைகளிலும் வெளியே வந்த போதுதான் அவன் தன் தவறை உணர்ந்தான். அவர்களின் வாழ்க்கையில் இரவு நேரம் மிக முக்கியமானது என்று.

அவர்கள் சட்டென தூக்கத்தில் கலைந்திருந்த தங்கள் ஆடைகளை சரி செய்துக் கொண்டு ''வாங்க தோழர்...'' என்று வாய் நிறைய வரவேற்றார்கள்.

அவன் அதை ஏற்றுக் கொண்டு சிரிக்க, ஒரு பெண் ஓடிப்போய் கயிற்றுக் கட்டில் ஒன்றை தேடிப்பிடித்து எடுத்து வந்து சரிதா வீட்டு வாசலில் போட்டாள். இதற்குள் சரிதா தன் குடிசைக்கு ஓடிப் போய் ஒரு எவர்சில்வர் சொம்பில் தண்ணீர் கொண்டு வந்துக் கொடுத்தாள். அவன் வாங்கி குடித்தான்.

அத்தியாயம்

12

1

சரிதா வெகு சீக்கிரம் சமைத்து விட்டாள். அதுவரை சந்துரு அவள் சிநேகிதிகளோடு பேசிக் கொண்டிருந்து விட்டு வந்தான். ஆரியக்களி கிண்டியிருந்தாள். தொட்டுக் கொள்ள கருவாட்டுக் குழம்பு. பொது வாய் ராகி என்று அறியப்படும் தானியத்துக்கு ஒவ்வொரு ஊரிலும், விதவிதமாய் பெயர்கள் உண்டு. சேலம், தர்மபுரி உட்பட்ட கொங்கு மண்டலத்தில், ஆரியம் என்று அதற்குப் பெயர். வட மாவட்டங்களில் கேவுரு மற்றும் கேப்பை இப்படி ஏரியாவுக்கு ஒரு பெயர். அதேபோலத்தான் கேப்பைத் திரிப்பது, களி கிண்டுவது என்றும் அதைச் சமைப்பதற்கும் வினைச் சொற்கள் ஒவ்வொரு விதமாய் இருக்கின்றன. ராகி என்பது ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து இங்கு வந்ததாய் எங்கோ படித்த ஞாபகம் சந்துருவுக்கு.

எங்கிருந்து வந்தால் என்ன? உழைப்பவனுக்கு ஏற்ற தானியம் ராகி. விவசாய வேலைகளில் ஈடுபடும் உழவனுக்கு அது உடல் வலுவைக் கொடுக்கிறது.

விசைத்தறி போன்று நாள் முழுக்க நின்றுக் கொண்டே செய்யும் வேலைகளில் தொழிலாளிக்கு கால் வலுவைக் கொடுக்கிறது. இப்படி உழைக்கும் மக்களின் நண்பனான இந்த உணவை அரிசிச்சோறு பின்னுக்கு தள்ளி விட்டது. அதனால், ஏழைப் பணக்காரன் வித்தியாசமில்லாமல் இப்போது சர்க்கரை நோய் பலருக்கும் வந்திருப்பதாய் சொல்கிறார்கள்.

இதில், என்ன அரசியல் இருக்கிறதென்று அமைப்புத் தோழர்களைக் கேட்க வேண்டும். சோற்றில் கூடவா அரசியல்? பின்னே, குடிக்கும் தண்ணீரிலேயே அரசியல் இருக்கிறது. மூன்றாம் உலகயுத்தம் தண்ணீர் பிரச்னைக்காகவும் மூளலாம் என்று அன்று அனுராதா தோழர் ஒரு ஆங்கிலப் பத்திரிக்கையை மேற்கோள் காட்டிச் சொன்னாரே...

அவனது சிந்தனையை சாப்பிடக் கைக்கழுவ செம்பில் தண்ணீரைக் கொண்டு வந்து தரையில் நங்கென்று வைத்த சரிதாவின் கோபம் கலைத்தது. சந்துரு சற்று திடுக்கிடலுடன் அவளை நிமிர்ந்துப் பார்த்தான். அவள் ஒரு அலுமினியத் தட்டில் களியைப் போட்டு அவன் முன்னே வைத்திருந்தாள்.

''தோழரே, யோசிச்சது போதும்.களி ஆறிப் போய்டும். சீக்கிரம் கை கழுவிக் கிட்டு வந்து சாப்பிடுங்க.'' என்று கொதித்தாள். செம்பை எடுத்துக் கொண்டு வெளியே வந்த அவன் அப்போதும் தான் சிந்திப்பதை நிறுத்தாமல் இந்த வளர்ந்த பெண்கள் சில சமயம் குழந்தைகள் போலாகி விடுகிறார்கள் என்று நினைத்தான்.

2

மனதுக்குப் பிடித்தவர்கள் தங்கள் அருகாமையில் இருக்கும் போது இது மாதிரி கண்டுக் கொள்ளாமல் இருப்பதைப் பார்த்தால், கடுப்பாகி விடுகிறார்கள். சரிதா மட்டும் அதற்கு விதி விலக்காய் எப்படி இருக்க முடியும்? என்று கையை சுத்தம் செய்துக் கொண்டே யோசித்தான்.

அவன் குடிசையினுள் திரும்பி வந்து சாப்பிட உட்கார்ந்த போது அவள் தானும் ஒரு தட்டில் உருண்டைக் களியை போட்டுக் கொண்டு அவன் எதிரில் வந்தமர்ந்தாள். களியை சின்ன முடிச்சுகள் கூட இல்லாமல் பதமாய் கிண்டியிருந்தாள். கருவாட்டுக் குழம்பில் காரமும்,புளிப்பும் தூக்கலாய் இருந்தது. அவள் அவன் முகத்தையே பார்த்தபடி தன் கைப்பக்குவத்தைப் பற்றி ஏதாவது சொல்வானென்று சாப்பிடாமல் காத்திருந்தாள்.

அவன் அதைப் புரிந்துக் கொள்ளாமல் இருக்கவே, அவளே வாய் விட்டுக் கேட்டாள். ''எஞ் சோறு நல்லாயிருக்குதா? இல்லியா? வாயத் தொறந்து சொன்னா முத்தா வுதுந்துப் போவும்.'' என்று சினத்துடன் முகத்தை நொடித்தாள்.

அவனுக்கு சட்டென அம்மாவின் ஞாபகம் வந்தது.

''ஏண்டா... சோறு கொழம்பு எப்புடி இருக்குதுன்னு சொன்னாத் தானடா ஆக்கிப் போடுறவுங்களுக்கு தெரியும். ஒங்கப்பன மாதிரியே போட்டத தின்னுக்கிட்டு வாய் பேசாம இருக்குறியே...''

அம்மா இப்படித்தான் திட்டும். ஆனால், ஒருநாளும் அந்த திட்டு அவன் மண்டையில் ஏறியதேயில்லை. சந்துருவிடம் வேறோரு பழக்கம் கூட உண்டு. சாப்பிடும் போது ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பான். அதற்கும் அம்மா திட்டுவாள். அப்பாதான் சப்போட்டுக்கு வருவார்.

''ஏம் புள்ள, அவன் எப்புடிச் சாப்டா ஒனக்கென்னா வந்துச்சி? போட்ட சோத்த திங்குறானா? அத மட்டும் பாரு...'' என்பார்.

''ஆமா, ஒன்ன மாதிரிதானே ஒம் மவனும் இருப்பான். சோறு திங்கும் போது ஒரு கைய நிலத்துல ஊனிக்கிட்டு இருக்காதீங்கன்னு எத்தினி வாட்டி சொல்லியிருப்பேன். அத இன்னிக்கி வரைக்கிம் வுட்டீங்களா? இப்புடி படிச்சிக்கிட்டும், கைய ஊனிக்கிட்டும் தின்னா திங்கிற சோறு ஒடம்புல ஒட்டுமா?'' என்று அம்மா முகத்தை வெடுக்கென நொடித்தபடி சண்டைக் கட்டும்.

3

அதைப் பார்த்த அப்பா ''போன சென்மத்துல ஒங்கம்மா வேலியில போற ஒடக்கானா பொறந்திருப்பா போல்ருக்குடா, கழுத்த என்னா வெட்டு வெட்றா பாரு...'' என்று சிரிப்பார்.

அந்த எண்ணம் வரவே, கடகடவென்று சிரித்தான் சந்துரு. அவனுக்குப் புரையேற சரிதா மேலெல்லாம் வாயிலிருந்த சாப்பாடு தெறித்தது. அவள் பதட்டத்துடன் எழுந்து அவன் தலையில் தட்டி விட்டாள்.

''இப்ப எதுக்கு சிரிச்சீங்க?'' என்று அம்மாவைப் போலவே மீண்டும் முகத்தை நொடித்தப்படி சண்டைக்கு வந்தாள்.

அவன் கொஞ்சம் தண்ணீரை எடுத்துக் குடித்து விட்டு, கொஞ்சம் கழித்து தன் வீட்டில் அடிக்கடி நடக்கும் அந்த சம்பவத்தைச் சொன்னதும் சரிதா சட்டென உணர்ச்சி வயப்பட்டாள். அவன் தன் தாயாருடன் அவளைப் பொருத்திப் பார்த்தது நெகிழ வைத்தது. கண்ணில் கோர்த்த நீரை சந்துரு அறியாமல் துடைத்துக் கொண்டாள்.

அவன் மளமளவென சாப்பிட்டு முடித்தான். அவளுக்குத்தான் மன உணர்வு மேலிட்டதில் சோறு இறங்கவில்லை. உள்ளம் நிறைந்திருக்கும் போது உண்பதற்கு வயிற்றில் ஏது இடம்? என்பதாய் பாதி சாப்பாட்டைக் கொண்டு போய் மூடி வைத்தாள்.

ஒரு பாயை விரித்து தரையில் போட்டு ''செத்த நேரம் படுங்க.'' என சரிதா சொன்னாள். பழைய துணிகளை வைத்து அடைத்திருந்த ஒரு துணி மூட்டையை எடுத்து தலைக்கு வைத்துக் கொள்ளக் கொடுத்தாள்.

அவனும் படுத்தான். ஆனால், தூக்கமெல்லாம் வரவில்லை. அவளை சட்டென இழுத்து தன் மேல் போட்டுக் கொண்டான். அவள் ''சாப்டவுடனே இதென்னா...'' என்று கோபித்தாள்.

அவன் அதைப் பொருட்படுத்தாமல் ''நெசமாவே களியும், கருவாட்டுக் கொழம்பும் ரொம்ப நல்லா இருந்துச்சி சரிதா.''என மனதாரப் பாராட்டினான். அவன் கைகள் அவளது தலையை தன்னிச்சையாய் கோதிக் கொடுத்தன.

அதைக் கேட்ட அவள் அவன் நெஞ்சில் அழுத்தமாய் பதித்திருந்த தன் முகத்தை தூக்கி அவன் முகத்தை நேருக்கு நேராய் பார்த்தாள். ''ஒங்கம்மா இதக் கேட்ருந்தா எம் மவன் சாப்பாடு நல்லாயிருக்கு துன்னு சொல்லிட்டானே, மழை வரப் போவுதுன்னு அதிசயமா சொல்லியிருப்பாங்கல்ல.'' என கூறினாள்.

4

''நெசந்தான்.'' என்றவன், ''பரவாயில்லையே... ஒம் மாமியாரப் பாக்காமயே நல்லா தெரிஞ்சு வச்சிருக்குறியே..'' என வியப்பு தெரிவித்தான்..

சரிதா, சந்துருவின் குடும்பத்தைப் பற்றி ஆவலாய் விசாரித்தாள். அவன் தன் அப்பாவைப் பற்றி, அண்ணன், அக்கா மற்றும் அவள் கணவர். மேலும், கல்லூரியில் படிக்கும் தங்கையைப் பற்றி அவரவர் குணநலன்கள் பற்றியெல்லாம் விரிவாய் சொன்னான். அதைக் கேட்ட

அவள் சந்துருவின் குடும்ப நபர்களின் உருவ அமைப்பை தன் மனக்கண்ணில் கற்பனை செய்துக் கொண்டாள். அதன் பிறகு, அவன் தன் அக்கா கௌரிக்கு குழந்தைப் பிறந்தது பற்றியும், அது பற்றிய செய்தியை மணியம்பாளையத்தில் இருந்து பேட்டைக்கு வழக்கம் போல பணப்பாக்கிப் பட்டு ஓடி வந்த ஒரு தொழிலாளி மூலம் கேள்விப்பட்டும் தன்னால், இதுவரைப் போய் குழந்தையைக் கண்ணால் பார்க்க முடியாத அவலநிலையை துயரத்துடன் சரிதாவிடம் பகிர்ந்துக் கொண்டான். அவள் சந்துருவுக்கு தன்னால் முடிந்த ஆறுதலைச் சொன்னாள்.

அப்போது சட்டென அவனுக்கு சரிதாவின் பெற்றோரைப் பற்றியும், அவள் ஏன், இப்படியொரு அவலமான பாலியல் தொழிலுக்கு வந்தாள்? என்பது குறித்தும் அவளிடம் கேட்க தோன்றியது.

அதற்கு முன், சற்று முன்னால் தான் படுத்திருக்கும் சாளையின் வாசலில் சந்தித்த அந்த பாலியல் பெண்களின் கதையை யோசித்தான். அவர்கள் தங்கள் வாயால் அந்த சோகக் கதைகளைச் சொன்ன சமயத்தில் எவ்வளவு, வேதனையாய் இருந்தது.

அதில், சாந்தி என்பவள் திருச்சிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் ஆச்சாரமான நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள். ஒருவனைக் காதலித்து அவனுடன் வீட்டுக்கு தெரியாமல் திருமணம் செய்து கொள்ள திருப்பதி வந்திருக்கிறாள். அவன் அவளிடமிருந்த பணம், நகையை பறித்துக் கொண்டு தங்கும் விடுதியில் தவிக்க விட்டுச் சென்று விட்டான். அவள் அங்கிருந்து தப்பித்து நடந்தே தன் ஊருக்குப் போய் விடலாம் என்ற முரட்டு தைரியத்தில் திருப்பதியில் இருந்து அம்பது கிலோ மீட்டர் தூரமிருக்கும் இந்த ஊர் வழியாக கால்நடையாய் வர, பசி தாளாமல் மயக்கமுற்றிருக்கிறாள். அவளை சரிதாதான் காப்பாற்றி இங்கே அழைத்து வந்திருக்கிறாள். பாலியல் தொழில் செய்யும் பெண்கள் அவள் கதையை கேட்டு உணவு வாங்கிக் கொடுத்து, கையில் கொஞ்சம் பணமும் அளித்து சாந்தியின் சொந்த ஊருக்கு பஸ் ஏற்றி விட்டிருக்கிறார்கள். ஆனால், போன சில நாட்களில் அவள் திரும்ப இங்கேயே வந்து விட்டாள்.

5

அதற்கு காரணம், சாந்தியின் குடும்பம் அவளை ஓடுகாலி, குடும்ப மானத்தைக் கெடுத்தவள் என ஏற்க மறுத்திருக்கிறது. தன்னிடம் அன்பு

காட்டிய பாலியல் பெண்களிடமே தஞ்சம் புகுந்த அவள் நாளடை வில் தானும் அவர்களின் தொழிலை செய்ய ஆரம்பித்ததுதான் கொடுமையான விசயம்.

சுந்தரி என்ற பெண் பக்கத்து ஊர்தான். அவள் கணவன் சோம்பேறி. குடிகாரன். அவளை அவனே பாலியல் தொழிலில் கட்டாயப்படுத்தி ஈடுபட வைத்திருக்கிறான். அவனை எதிர்த்துப் போராடும் தைரிய மில்லாமல் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு வாழ்க்கையை நகர்த்தி வருகிறாள் அவள்.

வனிதாவின் கதை இன்னும் கொடுமையானது. அவள் கணவனை ஒரு திருட்டு வழக்கில் உள்ளூர் போலீசார் பொய்யாய் சேர்த்திருக் கிறார்கள். கைது செய்யப்பட்ட கணவனைக் காவல் நிலையத்துக்குப் போய் பார்த்திருக்கிறாள் வனிதா. அவள் அழகில் மயங்கிய லோக்கல் காவல் அதிகாரி அவளைத் தனியாய் கூப்பிட்டு தன் ஆசைக்கு இணங்குமாறும் மறுத்தால், அவள் கணவனை வேறு சில திருட்டு வழக்குகளிலும் சேர்க்கப் போவதாய் மிரட்டி பணிய வைத்திருக் கிறான். தன் ஆசையையும் தீர்த்துக் கொண்டு அவள் கணவனை எளிதில் பிணையில் வர முடியாத வழக்குகளில் சிக்க வைத்து, சிறையில் தள்ளி விட்டு கொஞ்ச நாட்கள் ஆசை நாயகியாய் வைத்துக் கொண்டிருக்கிறான்.

பிறகு, அந்த அதிகாரி வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய் விட்டான். அடுத்த கொஞ்ச நாட்களில், சிறையில் இருந்து வெளியே வந்த அவள் கணவன் கொஞ்சமும் மனிதாபிமானமற்று, வனிதாவை தள்ளி வைத்து விட்டு வேறு ஒருத்தியை திருமணம் செய்துக் கொண்டு இதே ஊரில் வாழ்கிறான்.

உறவினர்களால் கை விட்ட வனிதாவுக்கு பாலியல் தொழில் தான் இப்போது சோறு போடுகிறது.

ஆற்றங்கரையின் நாணல் புதர்களுக்குள் தங்கள் வாடிக்கை யாளர்களுக்காய் மறைந்து நிற்கும், இந்த சாளைப் பகுதியில் வசிக்கும் அனைத்துப் பெண்களுக்கும் ஆணாதிக்கச் சமூகத்தால் மிக ஆழமாய் பாதிக்கப்பட்ட அவலக்கதைகள் நிச்சயமாய் நிறைய இருக்கின்றன. வறுமையும் கூட அதில் அடக்கம். மொத்தத்தில், சுரண்டும் சமூக அமைப்பில் இருக்கும் பெண்கள் இரட்டைச் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களின் ஒரு காலில் சமூக சுரண்டலும், இன்னொரு காலில் ஆணாதிக்கமும் வலுவாய், இறுக்கமாய் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

6

ஆயினும், காதலர்களாலும், கணவர்களாலும் பாதிக்கப்பட்ட மற்றும் கணவனை இழந்த அனைத்துப் பெண்களும் பாலியல் தொழிலுக்குத் தான் வருகிறார்களா? என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

பேட்டையில் சாப்பாட்டுக் கடை நடத்தும் அங்கம்மாளும், சந்துரு வின் பெண் முதலாளி கோகிலா அம்மாளும் அப்படிப்பட்டவர்கள் தான். ஆனால், அவர்கள் தங்களுக்கென சமூகத்தால் அங்கீகரிக்கப் பட்ட ஒரு தொழிலை தேர்ந்தெடுத்துக் கொண்டுப் போராடி வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படியும், அவர்கள் மேல் இழிச் சொற்களை வீசுகிறார்கள் சிலர். என்றாலும், அவர்கள் அதற்காக கவலைப்படாமல் துணிந்து நிற்கிறார்கள்.

எனவே, அகநிலையும், புறநிலையும் பாதிக்கப்பட்ட பெண்களுக்குக் கான வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. ஆனால், அகநிலையே அதில் தீர்மானமான சக்தியாய் அமைகிறது.

இதில், சரிதாவின் கதை என்ன?

அவளிடம் மெல்ல விசாரித்தான் சந்துரு. அப்போதுதான் தெரிந்தது. அவள் மேற்கண்ட எந்த வகையிலும் சேர்த்தியில்லை. அதைக் காட்டிலும் கொடூரமான நிலப்பிரபுத்துவ மூடத்தனமான பண்பாட்டு முறையால் பாதிக்கப்பட்டவள் என்று.

தமிழக, ஆந்திர எல்லையோர மாவட்டங்களில் ஒரு விசித்திரமான பழக்க வழக்கம் நிலவுகிறது. சிறுவயதில் கொடிய நோய்கள் ஏதாகிலும், சிறுமிகள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு பீடித்தால், அவர்களை குணப்படுத்த சரியான சிகிச்சைகள் அறியாத அவர்களின் பெற்றோர்கள் காலகாலமாய் ஒரு காரியத்தை செய்துக் கொண்டு வருகிறார்கள். அந்த குழந்தைகளை அவர்களது கிராமத்தில் இருக்கும் பெண் தெய்வம் கோயிலுக்கு ஆடு, மாடுகளை விடவும் கேவலமாய் நேர்ந்து விட்டு விடுகிறார்கள்.

எந்த கேடு கெட்ட நிலவுடமை சிந்தனையானோ இதை அவர்கள் மனதில் விதைத்திருக்கிறான்.

நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பூசாரியால் வேப்பிலை அடித்து திருநீறு பூசப்பட்டு தெய்வத்தின் காலடியில் வைக்கப்பட்டு, 'இது,

இனி உன் குழந்தை. அதன் உயிரை நீ எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது உன் சக்தியால் நோயைக் குணப்படுத்தினாலும் சரி, நீயே முடிவு செய்து கொள். ஒரு வேளை அந்தக் பெண் குழந்தைக் காப்பாற்றப்பட்டால், அவள் உன் கோயிலுக்கு காலம் முழுதும் கல்யாணம் செய்து கொள்ளாமல் சேவை செய்வாள்.' என உறுதி செய்யப்படுகிறது.

7

அப்படி நேர்ந்து விடப்பட்ட பெண் குழந்தைகள் ஓரிருவர் அதிர்ஷ்டவசமாய் பிழைத்துக் கொள்கிறார்கள். அன்றிலிருந்து அவர்கள் கோயில் சொத்து. அவர்கள் மீது பெற்றோருக்கு யாதொரு உரிமையும் இல்லை. ஊரார் போடும் சோற்றில் உயிர் வாழும் அந்த பெண் குழந்தைகள் நாளடைவில் வளர்ந்து பூப்பெய்தினால், வக்கிரம் பிடித்த ஆண்கள் சும்மா விடுவார்களா? கடவுளின் குழந்தைகள் அனு தினமும் அவர்களால் பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்கள் காசு கொடுத்தால் உண்டு இல்லையெனில் ஊரார் தரும் பழைய துணிகளும், கோயில் திருவிழாவில் அவர்களுக்கு இனாமாக விழும் ஆடைகளும் தான் உடுத்திக் கொள்ள பயன்படுவை.

சரிதாவும் அப்படித்தான் அவள் பெற்றோர்களால் கோயிலுக்கு நேர்ந்து விடப்பட்டிருக்கிறாள். அவளுக்கு திருப்பதிக்குப் பக்கத்தில் சொந்த ஊர்.

தேவதாசி முறையை ஒழித்து விட்டதாய் கூறுகிறது அரசாங்கம். அதன் வேறொரு வடிவம் தான் இந்த கொடுமையான நேர்சை.

சரிதா கண்ணீருடன் சந்துருவிடம் மேலும் தன் வாழ்க்கையை விவரித்தாள். ''எங்கூட்ல எங்கூட பொறந்தது நாலு ஆம்பள, ஒரு பொட்டப்புள்ள. நாந்தான் கடைசி. எங்கம்மாவும், அப்பாவும் பாவம். அவுங்களுக்கு கடைசி காலத்துல யாரும் கஞ்சித்தண்ணி ஊத்த மாட்டேன்னுட்டாங்க. கோயிலுக்கு நேந்து வுட்ட பின்னால குடும்பத்தோட என்ன மாதிரி பொண்ணுங்க தொடர்பு வெச்சிக்க கூடாது. ஆனா, பெத்தத் தாயி, தவப்பன் பட்டினி கெடக்கும் போது மனசு கேட்குதா? அதனால தான் நானு இந்த மாதிரி அவுசாரித்தனம் பண்ணி அவுங்களுக்கு காசுப் பணம் குடுக்குறேன்.'' என்று.

அவளைக் கட்டிக் கொண்டு ஆறுதல் படுத்திய சந்துரு மெல்ல அவள் கண்ணீரை துடைத்து விட்டான். பிறகு, அவளிடம் ஏதோ கேட்க மனதில் நினைத்தான். என்றாலும், வாய் வராமல் தவிர்த்து விட்டான்.

ஆனால், அவன் மனதைப் படித்தவளாய் சரிதா ''உழைச்சு வாழ ஒடம்புல தெம்பு இருக்கறப்ப இந்த தொழிலுக்கு ஏன் வந்தேன்னு தானே கேட்க வர்றீங்க?'' என்று கேட்டாள்.

அவன் மௌனமாய் தலையசைத்தான்.

8

அவள் தொடர்ந்தாள் ''எங்க மாதிரி பொம்பளைங்களுக்கு காடு, கரைல யாரும் வேல வெட்டி குடுக்க மாட்டாங்க. பண்ணாடிங்க நெலத்துல அவுசாரிங்க கால் வெச்சா பயிரு வளராதாம்.'' என்று.

அடேங்கப்பா!

எத்தனை மூட எண்ணங்கள். இவர்களே பெண்ணை வேசியாக்கி விடுவார்களாம். அப்புறம், அவள் கால் பட்டால் குத்தம் என்று சொல்வார்களாம். பண்ணையக்காரன் தன் வசதிக்கு சொல்லி வைத்த பொய்கள் தான் எத்தனை? இவர்கள் தங்கள் கொடிய காமப்பசிக்கு விதவிதமாய் பழக்க வழக்கங்களை உருவாக்கி அப்பாவிப் பெண்களை பலியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மன்னர்கள் காலம் தொட்டு ஆட்சியாளர்களின் ஆதரவு எப்போதும் உண்டு.

சந்துரு கேட்டான் ''அது செரி, சரிதா... இந்த மாதிரி தொழில் செய்றத ஒங்க ஊரு ஆம்புளங்க ஒன்னும் சொல்றது இல்லியா?'' என்று.

அவனது அப்பாவித்தனத்தை நினைத்து அந்த சூழ்நிலையிலும் முறுவலித்தாள் சரிதா.

''ஏங்க, ஊர்ல நாஞ் செய்றது மட்டும் உத்தமமான காரியமா? அதுவும் அவுசாரித்தனந்தானே... அதில்லாம, எங்க ஊர் ஆம்பளைங்களுக்கு தாராளமனசு. எங்க போயும் இந்த தொழிலைப் பண்ணலாம்னு வுட்டுட்டானுங்க. ஆனா, நாங்க உழைச்சு மட்டும் பொழைக்கக் கூடாது.''

''இன்னிக்கிம் இந்த சுத்து வட்டாரத்துல இப்புடி கோயிலுக்கு நேந்து வுடுற பழக்கம் இருக்குதா?''

''இப்ப கொஞ்சம் கொறைஞ்சுடுச்சி. பொம்பள கொழைந்தங்களுக்கு ஒடம்பு செரியில்லன்னா பெரிய ஆஸ்பத்திரிக்கி தூக்கிக் கிட்டுப் போயி காப்பாத்திடுறாங்க. அப்புடியும், வசதியில்லாத வூடுகள்ல இந்த பழக்கம் இருக்கத்தான் செய்யுது.''

''அரசாங்க அதிகாரிகளுக்கு இந்த விசயம் தெரியுந்தானே?''

''நல்லாத் தெரியும். பொறுக்கி நாய்ங்க சமயத்துல அவுங்களும் தான் எங்களப் படுக்க கூப்டுறானுங்க...''

9

மன்னர்கள் ஒழிந்தார்கள். மன்னர் மான்யமும் ஒழிந்து விட்டது. பசுமைப் புரட்சி வந்து விட்டது. இது கம்யூட்டர் காலம். பெண்கள் படிக்கிறார்கள். சுய முன்னேற்றம் அடைந்து விட்டார்கள். ஆனால், உண்மையின் மறு பக்கம் இப்படித்தான் இருக்கிறது.

சந்துரு பெருமூச்சு விட்டான்.

பிறகு, சட்டென கேட்டான் ''இந்த குடிசையெல்லாம் யாருக்கு சொந்தம் சரிதா? இதென்னா பொறம்போக்கு நிலமா?'' என்று.

அதற்கு அவள் ''நெலம் பொறம்போக்கா? சொந்தமான்னு எனக்கு தெரியாது. ஆனா, நீங்க வரும் போது வெளிய ஒரு கெழவியப் பாத்தீங் கல்ல. அதுதான் இந்த சாளைங்கள எங்கள மாதிரி பொம்பளைங் களுக்கு வாடகைக்கு வுடுது. இது இன்னிக்கி நேத்துல்ல, தலமுறை தலமுறையா அந்த கெழவியோட பெரியவுங்க காலத்துல இருந்து நடக்குது.'' என்றாள்.

சந்துரு தன் வாழ்க்கையில் முதன்முறையாய் இப்போதுதான் இதுபோல கேள்விப்படுகிறான்.

அவனுக்கு இன்னொரு கேள்வியும் வந்தது. பொதுவாக, பாலியல் தொழிலுக்கு வருகின்ற பெண்களில் எவரும் பணத்துக்காக, இன்ன பிற வசதிகளுக்காக வருவதேயில்லையா?

இதை அவன் சரிதாவிடம் கேட்டான்.

''இருக்குறாங்க. அவுங்க கார்ல போயிக்கிட்டு அதுக்குன்னு புரோக்கர் கரு வச்சிக்கிட்டு திரிவாங்க. அந்த மாதிரி பொம்பளைங்கெல்லாம் எங்களக் கிட்ட கூட சேத்துக்க மாட்டாங்க. கேவலமாப் பாப்பாங்க.'' என்றாள் அவள்.

உண்மைதான். இங்கேயும் மேல் மட்டம், கீழ் மட்டம் உண்டு.

சரிதாவிடம் அவளைப் பற்றி அனைத்தையும் கேட்டு தெரிந்துக் கொண்டு சந்துரு உறுதியாய் சொன்னான் ''இந்த கொடுமைக் கெல்லாம் ஒரு முடிவு கட்டணும்.'' என்று.

அவள் வேண்டுகோளாய் அவனிடம் கேட்டாள் ''நீங்க தான் இத செய்யணும். அப்படி செஞ்சுட்டீங்கன்னா, இனிமேலாவது என்ன மாதிரி பொட்டப்புள்ளைங்க கோயிலுக்கு நேந்து வுடுற நரகத்துல இருந்து தப்பிப்பாங்க.''

10

''செய்யலாம் சரிதா. ஆனா, அந்த பழக்கத்துல இருந்து பொண்ணுங்கள மீட்டுட்டா மட்டும். அவுங்க வாழ்க்கை சுகபோகத்துக்கு வந்துடாது. அதுக்குப் பின்னாடியும் அவுங்க கௌவரவமா பொழைக்கணும்னா இந்த சமுதாயத்த எதுத்துப் போராடணும்.''

''நாங்கெல்லாம் நாலெழுத்துப் படிக்காதவுங்க. எங்களுக்கு போராடறதப் பத்தி என்னா தெரியும்.''

''இதுவரைக்கிம் இல்லன்னாலும் இனிமே, தெரிஞ்சுக்கணும். ஒங்களுக்காவ போராட ஆம்பளங்க வரணும் அப்புடீன்னு எதிர்ப்பாக்காதீங்க. ஒங்க தலவிதி, ஒங்க கைல.''

அவன் இப்படிச் சொல்லி விட்டு நேரமாவதை உணர்ந்து சட்டென எழுந்து நின்று தன் கைலியை சரி செய்துக் கட்டிக் கொண்டான். சரிதா உட்கார்ந்த நிலையிலேயே அவனை தலை நிமிர்ந்துப் பார்த்து தன் கையை நீட்டினாள். அவன் பிடித்து ஆதரவாய் கை தூக்கி விட்டான்.

பிறகு, தன்னோடு சேர்த்து ஆதரவாய் அணைத்துக் கொண்டு சொன்னான். ''நானு இந்த விசயத்த தோழர்கள் கிட்ட ஒடனே பேசறேன். அதுக்கப்புறம், ஒரு முடிவுக்கு வருவோம்.'' என்று.

சரியென்று தலையசைத்தாள் அவள்.

புறப்படுவதற்கு முன் சந்துரு சட்டென சரிதாவின் முகத்தை தன் முகத்துக்கு நேராய் நிமிர்த்திக் கேட்டான். ''நாம்ப கண்ணாலம் பண்ணிக்கலாமா?'' என்று.

அவள் சற்றும் யோசிக்காமல் அவனை இறுக தழுவிக் கொண்டாள்.

''எஞ் சாமி நீங்க இப்புடிக் கேக்க நாங் குடுத்து வெச்சிருக்கணும்.'' என அழுதாள்.

அவன் தன்னை விடுவித்துக் கொண்டு சொன்னான்.

''ஆனா, என்னக் கட்டிக்கிட்டா சௌகரியமா இருக்கலாம்னு நெனச்சுடாதே. நெறையா கஷ்டத்த அனுபவிக்க வேண்டியதிருக்கும். இப்பவே சொல்லிப்புட்டேன். நல்லா ஓசனப் பண்ணிக்க.''

''இனுமே அனுபவிக்க எந்த கஷ்டம் எனக்கு மிச்சகிருக்குது. ஏழேழு சென்மத்துக்கும் தான் பட்டாச்சே. ஒங்க கூட சேந்து என்னுசுரே போனாலும், அத சந்தோசமா நானு ஏத்துக்குவேன்.''

11

அவள் சிரித்துக் கொண்டே அவள் சொன்னதை மனதார பாராட்டினான். பிறகு, ''எப்ப நம்ப கண்ணாலத்த வெச்சிக்கலாம்?'' என கேட்டான்.

அதற்கு அவள் ''நானும், என்ன மாதிரி பொண்ணுங்களும் மொதல்ல, ஆத்தாங்கரைக்கிப் போற கொடுமைல இருந்து வெளிய வரணும். அதுக்கப்புறம், அடுத்த நிமிசமே ஒங்களுக்கு நா பொண்டாட்டி ஆயிடுறேன்.'' என்றாள்.

அவனுக்கு, தன்னோடு சேர்த்து அடுத்தவர் நலனையும் யோசிக்கும் அவளது நல்ல எண்ணம் பிடித்திருந்தது. எனவே, அதற்கு ஒத்துக் கொண்டான்.

''அப்ப செரி, நானு வர்றேன். நீ போயி ஒஞ் சிநேகிதிங்கள கூப்டு சரிதா. அவுங்க கிட்டயும் சொல்லிட்டுப் போறேன்.'' என்றான்.

''அவுங்க இந்நேரம் ஆத்தாங்கரைக்கி போயிருப்பாங்க. பொழுது சாய ஆரம்பிடுச்சில்லியா? நீங்க போங்க நானு அவுங்கக்கிட்ட சொல்லிக்கிறேன்.'' என்றாள்.

அவன் தலையசைத்து வெளியே வந்து வாசலில் கிடந்த தன் செருப்பை போட்டான் ''வரேன்...'' என்று விடை பெற்றான்.

அப்போது குடிசைகளுக்கு சொந்தக்கார கிழவி சரிதாவிடம் சத்தமாய் கேட்டாள் ''சரிதா... ஆரு புள்ள அது? வாடிக்கைக்காரங்களா?'' என்று.

அதற்கு அவள் ''இல்லாயா... எங்கூட்டுக்காரரு.'' என்றாள்.

அதைக் கேட்டுக் கொண்டே நடந்தான் சந்துரு.

அப்போது மும்பையிலிருந்து சென்னை செல்லும் தாதர் எக்ஸ்பிரஸ் உற்சாகமாய் ஆரன் அடித்துக் கொண்டு தெற்கு திசையில் சென்றது.

அவன் பேட்டைக்கு அருகே வந்து சேர்ந்த போது மாலை நெருங்கி விட்டது. கிராமத்தை ஒடிய வயல்வெளியில் பம்ப்செட் ஓடிக் கொண்டிருந்தது. சின்ன அருவி போலக் கொட்டும் தண்ணீரைப் பார்த்ததும், அவனுக்கிருந்த உல்லாசமான மனநிலையில் குளிக்கத் தோன்றியது. இன்றைக்கு அவனுக்கு தறிப் பேக்டரியில் இரவு ஷிப்ட். சரிதாவைப் பார்க்கப் போனதில் பகல் முழுக்க தூங்கவே இல்லை.

குளித்து விட்டு நேராய் அங்கம்மாள் சாப்பாட்டுக் கடைக்குப் போனால், சோறு, குழம்பு தயாராய் இருக்கும். சாப்பிட்டு விட்டு ஏழு மணிக்கு போய் அறையில் படுத்தால் நான்கைந்து மணி நேரம் நிம்மதியாய் தூங்கலாம்.

12

மாதேசு தன் பகல் ஷிப்ட்டை முடித்து விட்டு இரவு ஒரு மணிக்கு வந்து எழுப்புவான். என்று யோசித்துக் கொண்டே சந்துரு தன் உடைகளைக் களையத் தயாரானான்.

அப்போது அவனை யாரோ கூப்பிட்டார்கள் ''ஏம்பா இவனே...'' என்று.

திரும்பிப் பார்த்தால் ஓபுளி நின்றிருந்தான்.

அவனை செல்லமாய் முறைத்து விட்டு ''ஓபுளி, எம் பேரு சந்துரு. இவனே இல்ல.'' என்றான்.

''அட அத வுடுப்பா... நீயி இவ்வளவு நேரம் எங்கப் போனே?'' என்று பதட்டமாய் கேட்டான் ஓபுளி.

அதை பார்த்ததும் மண்டையில் ஏதோ விபரீதம் உறைத்தது.

''என்னாச்சி ஓபுளி?'' என தன் நெற்றியை சுருக்கிக் கொண்டு கேட்டான் சந்துரு.

''பேட்டையில நம்ப தோழருங்களுக்குள்ற பெரிய சண்டை. ஒருத்தர ஒருத்தர அடிச்சிக்கிட்டாங்க. அதனால, மத்தியானத்துல இருந்து நம்ப ஆளுங்க யாரும் தறியோட்டல...''

திக்கென்றிருந்தது.

''சண்டைப் போட்டுக்கிட்டது யாரு தோழரே?'' சந்துரு அவனிடம் அவசரமாய் கேட்டான்.

''கந்தப்பன் தோழரும், இன்னொரு தோழரும்...'' என்று இழுத்தான் ஓபுளி.

கந்தப்பனுக்கும், வேறு யாருக்கும் சண்டை? ஓபுளிக்குத்தான் அவ்வளவு சீக்கிரம் பழகிய நபர்களின் பெயர்கள் வாயில் வராதே.

சந்துரு குழப்பமாகி வெடுக்கென்று கேட்டான்.

''செரி, மொதல்ல எதனால தகராறுன்னு விசயத்த சொல்லு. ஆள் யாருன்னு நாந் தெரிஞ்சுக்கறேன்.''

''அதாம்பா... அவனும் கந்தப்பன் பொண்ணும் தனியா பேசிக்கிட்டு வயக்காட்டுல இருந்திருக்குறாங்க.. அந்தப் பக்கம் வந்த கந்தப்பன் இதப் பாத்து பொண்ணுக் கிட்ட இவங்கூட என்னடி பேச்சுன்னு கேட்டு அவள அடிச்சிருக்குறாரு...''

13

''அப்புறம், சீக்கிரஞ் சொல்லு.''

''அதைப் பாத்துட்டு அவன் தடுக்கப் போவ, இவுரு சாதிப் பேரச் சொல்லி திட்ட ரெண்டுப் பேத்துக்கும் கை கலப்பு ஆயிடுச்சி. அதுக்கப்புறம் கந்தப்பன் தம் பொண்ண வயக்காட்டுல இருந்து வீதி பூரா அடிச்சி இழுத்துட்டுப் போயி வூட்ல அடைச்சி வச்சிட்டாரு.''

அதன் பிறகு, சந்துருவுக்கு விவகாரம் என்னவென்று எளிதில் விளங்கி விட்டது. மாதேசுக்கும், பொன்னிக்கும் இடையிலான காதல்

கந்தப்பனுக்கு தெரிய வந்து விட்டது. அந்த காதலைப் பிடிக்காத அவர் தன் மகளை அடித்து இழுத்துப் போயிருக்கிறார்.

சே, என்ன இது, நாம் இல்லாத நேரத்தில் இப்படி ஆகி விட்டதே...

நாமே கந்தப்பனிடம் சமயம் பார்த்து இந்த காதல் விவகாரத்தை சொல்லி இருக்க வேண்டும். ஆனால், எங்கே நேரம்? இப்போது அவருக்கும், மாதேசுக்கும் அடிதடி அளவுக்குப் போய் விட்டதே! இப்போது என்ன செய்வது? இருவரும் தோழமையுணர்வை மறந்து விட்டு இப்படியா அடித்துக் கொள்வார்கள்?

கந்தப்பன் தான் ஆத்திரத்தில் திட்டியிருந்தாலும், இந்த மாதேசு முரடன் கொஞ்சம் பொறுத்துப் போயிருக்கக் கூடாதா?

இந்த விவகாரத்தை எப்படித் தீர்ப்பது? கந்தப்பன் மகள் மாதேசைக் காதலிப்பதில் என்ன தவறு? இருவருமே தாழ்த்தப்பட்டவர்கள் தான். என்றாலும், வேறு வேறு உட்பிரிவு சாதியை சேர்ந்தவர்கள். அதனாலென்ன? கந்தப்பன் ஏன், இப்படி இருக்கிறார்.

சந்துரு செய்வதறியாமல் தவித்தான்.

அப்போது அவனையே பார்த்துக் கொண்டிருந்த ஓபுளி அவன் தோள் மீது ஆதரவாய் கை வைத்தான்.

''ஏம்பா, இவனே... நம்ப ஆளுங்க எல்லாம் இப்ப கோயிலு வெராண்டாவுல தான் இருக்குறாங்க. நாம் வேணாப் போயி இங்க கூட்டிக்கிட்டு வரட்டுமா?'' என்று கேட்டான். சந்துருவுக்கு அது சரியான யோசனையாய் தோன்றியது ''செரி தோழரே... சீக்கிரமா வா.'' என்று அனுப்பி வைத்தான்.சற்று நேரத்து முன்பிருந்த உற்சாகமான மனநிலை மாறி, நடந்த சண்டையைக் கேள்விப்பட்டதும் மண்டை சூடாகி விட்டதாய் தோன்றியது.

14

எனவே, தன் உடைகளை களைந்து விட்டு பம்ப்செட் தொட்டியில் இறங்கினான். தலையில் தபதபவென விழுந்த தண்ணீர் சூடாய் உடம்பில் வழிந்தோடியது.

தந்தை பெரியார் தான் வாழ்நாளெல்லாம் எதையெதிர்த்துப் போராடினாரோ, அந்த ஆரியம், சாதியைக் கண்டுப்பிடித்த

பார்ப்பனீயம் எவ்வளவு கொடூரமாய் உழைக்கும் மக்களிடத்தில் மோதலை உருவாக்கி வைத்திருக்கிறது. மேல் சாதிக்காரனுக்கு கீழ் சாதிக்காரன் அடிமையாய் இருந்தால் மட்டும் போதாது.

சமூகத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்குள் ஒற்றுமையாய் இருந்து விடக் கூடாது. என்றாகிலும், அது ஆதிக்க சாதிக்காரனுக்கு ஆபத்தாய் வந்து முடிந்து விடும்.

எனவே, சாதீய கட்டுமானத்தில் பல தந்திரங்களை செய்து வைத்திருக்கிறார்கள் நிலவுடமை சிந்தனையாளர்கள். எனவேதான், டாக்டர் அம்பேத்கர் 'சாதிதான் சமூகம் என்றால் வீசும் காற்றில் விசம் பரவட்டும்' என்றார் போலும்.

இந்தியாவில் இயந்திர உற்பத்தி முறை புகுத்தப்பட்டிருந்தாலும், நிலவுடமை அடித்தளம் அடித்து நொறுக்கப்படவில்லை. அதனால் தான், சாதீயம் பேயாட்டம் ஆடுகிறது. மார்க்சிய சிந்தனையாளர்கள் அரை முதலாளித்துவ சமுதாயம் என்று இந்தியாவை சரியாகத்தான் கணித்திருக்கிறார்கள்.

கந்தப்பன், மாதேசு இருவருமே தனித் தனியே சார்ந்திருக்கும் தாழ்த்தப் பட்ட உட்பிரிவு சாதிகளின் மக்கள். ஆதிக்க சாதிகளால் ஒடுக்கப்படு கிறவர்கள். தங்கள் சூழ்நிலையை மறந்து விட்டு இப்படியா தங்களுக்குள்ளாக மோதிக் கொள்வது? அதுவும், பிழைக்க வந்தவர் களை வந்தேறிகள் என வசைப்பாடும் இந்த ஊரால் முன்னால்...

இந்த விசயத்தை தானே தீர்க்க முயல்வதா? அல்லது கட்சி அமைப்புத் தோழர்களிடம் கொண்டு செல்வதா? அனுராதா தோழர் சில நாட்களுக்கு முன்னால் ரேணிகுண்டா போய் விட்டார். இங்கே, அவர் திரும்பி வரும் வரையில் ஏன், காத்திருக்க வேண்டும். நாமே தலையிடுவோம். பிரச்னை தீராவிட்டால், பிறகு, தோழர்களுக்காக காத்திருப்போம்.

சந்துரு எங்கிருந்து தொடங்குவது? என்ன பேசுவது? என்று நிதானமாய் யோசித்தபடி குளித்தான். ஒபுளி மளமளவென ஊருக்குள் கோயில் வராண்டாவில் சோகத்துடன் உட்கார்ந்திருந்த மாதேசையும் அவனுக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்த சிற்பி, ஏழுமலை. மச்சக்காளைப் போன்றோரைக் கூட்டிக் கொண்டு வந்தான்.

15

அப்போது சந்துரு குளித்து முடித்து தன் கைலியால் தலை துடைத்துக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் சிற்பிதான் முதலில் கொஞ்சம் எரிச்சலாய் ஆரம்பித்தான். ''ஏம்பா, ஓபுளி நடந்த சண்டையப் பத்தி சொல்லியும், ஒடனே பேட்டைக்குள்ற வராம ஒனக்கு மேலுக்கு வாத்துகறதுதான் முக்கியமாப் போச்சா?'' என்று.

சந்துரு அதற்கு பதில் சொல்லாமல் நனைந்த தன் உள்ளாடையைக் கழட்டிப் பிழிந்தான்.

சிற்பி மேலும் ஏதோ கேட்க முயல அவனை ஏழுமலை தடுத்தார். மாதேசு முகத்தில் கந்தப்பனுடன் அடிதடிப் பட்ட காயம் இருந்தது. அதை அவன் தடவித் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மச்சக்காளை மட்டும் ''என்னப்பா, சந்துரு எங்கப் போயிருந்தே? நீயி இருந்திருந்தா இந்த விசயம் இவ்வளவு தூரம் முத்திப் போயிருக்காதே.'' என்று கேட்டார்.

சந்துரு தன் உள்ளாடையை பம்ப்செட் திட்டின் மீது காய வைத்து விட்டு தன் சட்டையை மாட்டியபடி திரும்பி வந்தான். அவரிடம் ''சரிதாவப் பாக்கப் போயிருந்தேன் தோழர். நாம் போறப்ப ரூம்புல மாதேசு தூங்கிக் கிட்டு இருந்தான். தொரைக்கி தூக்கத்துல எழுப்புனாத் தான் புடிக்காதே. அதனால தான் சொல்லிட்டுப் போவல...'' என்று தன்மையாய் பதில் சொன்னான்.

பிறகு, மாதேசின் அருகாமையில் சென்று அவன் முகத்தை தன் கைகளால் ஏந்திக் கூர்ந்துப் பார்த்தான். சட்டென மனதுக்குள் வேதனை ஏற்பட்டாலும், அதை மறைத்துக் கொண்டு சீறினான்.

''ஒனக்கு கொஞ்சங் கூட புத்தியே கெடையாதா மாதேசு? சல்லிப்பய மாதிரி நம்ப தோழர் கந்தப்பன் கிட்டயே செரிக்குச் செரி மல்லுக்கு நின்னுருக்கியே...''

உடனே மாதேசு ''அவுருதான் என்ன சாதியச் சொல்லி திட்டுனாரு...'' என விளக்கம் தர முயல, சந்துரு தன் குரலை உயர்த்தினான்

''என்னப்பா சாதி... அதயெல்லாம் ஒழிக்கணும்னுதானே நாம்ப புரட்சிகர இயக்கத்துக்கு வந்தோம். அப்புறம், அவுரு சாதி சொல்லி திட்னாருன்னு புகார் சொல்றியே. எனக்கு நிசமாலுமே வருத்தமா யிருக்குது தோழர்களே. யார் என்ன சாதின்னு பாக்காம மொதலாளிங் களுக்கு எதிரா போராட்டத்துல கைய கோத்து நின்னம். அத மறந்துட்டு ஒங்களக்குள்ற அடிச்சிக் கிட்டு நிக்கிறீங்களே...'' என்றான்.

16

அப்போது ஏழுமலை ''சந்துரு, கந்தப்பன் தோழர் மேல தான் மொதல் தப்பு. அவரு சட்டுன்னு மாதேசு மேல கைய வெச்சிருக்க கூடாது.'' என்று குறுக்கே வந்தார்.

அவன் அதற்கு பதில் சொல்லும் முன்பாக மச்சக்காளை முந்திக் கொண்டார்.

''இல்ல தோழர். அவர விட மாதேசு தான் வர்க்கப் போராட்டத்துல வீரியமா நின்னவரு. அவுருக்குத்தான் கந்தப்பன வுட பொறுப்பு அதிகமாயிருக்குது.'' என்றார்.

அதைக் கேட்டு சிற்பி ''ஆமால்ல...'' என்று ஒத்திசைந்தான்.

ஓபுளிக்கு கூட மச்சக்காளை சொன்னது சரியாகப் பட்டது.

அவன் ''இவனே நீ பண்ணது தப்புதான்.'' என்று மாதேசைக் கண்டித்தான்.

அப்போது சந்துரு ''ஏழுமலை தோழர், கந்தப்பன்தான் தப்பு செஞ்சாருன்னு இன்னமும் நீங்க நெனைக்கிறீங்களா?'' என கேட்டார்.

ஆனால், அவர் தன் கருத்தை மெல்ல மாற்றிக் கொண்டிருந்தார்.

''இல்ல தோழர், நீங்க எல்லாரும் சொன்ன பின்னாடி தான் எனக்கும் புரியுது.'' என்றார்.

சந்துரு ''என்னா மாதேசு, மத்த தோழருங்க சொன்னதக் கேட்டியா? இதுக்கு என்னா சொல்ற?''என்று கேட்டான்.

அவன் ஏதோ சொல்ல வாயெடுக்க, அப்போது மாலை மறைந்த மெல்லிய இருட்டில் ஒரு பெண் குரல் கேட்டது. ''சந்துரு...'' என்று கூப்பிட்டது.

அது கந்தப்பனின் மனைவி என்பதை உணர்ந்துக் கொண்ட அவன் ''அக்கா... நீங்க எதுக்கு இந்த நேரத்துல இங்க வந்தீங்க?'' என்று சத்தமாய் வினவினான்.

அவன் குரல் அடையாளத்தை வைத்து நெருங்கி வந்த அந்த பெண்மணி ''நீங்க இங்க நின்னு பேசிக்கிட்டு இருக்குறீங்கன்னு காட்டுப் பக்கம் வந்த நம்ப தறிக்கார்ரு ஒருத்தரு வந்து சொன்னாரு தம்பி. சண்டை நடந்ததுல இருந்து நீ எப்ப வருவேன்னு காத்துக்கிட்டு கெடந்தனா, அதான், வூட்ல இருக்க முடியாம நானே தேடிக்கிட்டு வந்தேன்.'' என்று கூறினாள்.

அதற்கு சந்துரு ''அதுக்காவ இந்த இருட்டுல எதுக்கு தனியா வரணும். இன்னம் செத்த நேரத்துல நானு மத்த தோழருங்கள கூட்டிக்கிட்டு ஒங்க வூட்டுக்குத்தான் வரலாம்னு இருந்தேன்.'' என்று கூறினான்.

17

அப்போது கந்தப்பன் மனைவி ''நா மட்டும் தனியா வரல தம்பி....'' என்று இழுத்தார்.

''அப்ப கூட யாரு வந்திருக்குறா?''

''ஒங்க தோழரு கந்தப்பனுந்தான் வந்திருக்குறாரு. ஒம் மூஞ்சில முழிக்க வெக்கப்பட்டுக்கிட்டு தூரமா நிக்கிறாரு...''

உடனே அவன் ''செய்றதெல்லாம் செஞ்சிப்புட்டு வெக்கம் என்ன வேண்டியிருக்குதுது. அவரு வயசுக்கு தகுந்த மாதிரியா நடந்துக் கிட்டாரு... பேட்டை ஊர்க்காரங்க முன்னாடி நம்ப சங்கதோட மானத்தை வாங்கிட்டாரே...'' என வேண்டுமென்றே சற்று தொலைவில் நிற்கும் கந்தப்பனுக்கு கேட்கட்டும் என்று உரத்துச் சொன்னான்.

அப்போது மச்சக்காளை ''சந்துரு நாம்ப இப்ப இங்கயிருக்க வேணாம். கந்தப்பன் சம்சாரம் அவரக் கூட்டிக்கிட்டு முன்னால அவுங்க வூட்டுக்கு போவட்டும். நம்ப பின்னால பேசிக்கிட்டே போவோம்.''என்று ஆலோசனைக் கூறினார்.

அது சந்துருவுக்கு மட்டுமல்ல மற்ற எல்லோருக்கும் சரியெனப் பட்டது.

சந்துரு, கந்தப்பன் மனைவிடம் ''அக்கா, பொன்னிய வூட்ல தனியாவா வுட்டுட்டு வந்தீங்க. வயசுப்புள்ள மனசொடஞ்சு என்னத்தையாவது

பண்ணித் தொலைக்கப் போவுதுக்கா. நீங்க மொதல்ல தோழரக் கூட்டிக்கிட்டு கெளம்புங்க.'' என்றான்.

அதற்கு அந்தப் பெண்மணி ''இல்ல தம்பி, பச்சையப்பன் தோழரு பொன்னிக்கு தொணையா இருக்குறாரு...'' என்றார்.

அதற்கு அவன் ''செரி கெளம்புங்க, நாங்க பின்னாடி வர்றோம்.'' என அனுப்பி வைத்தான்.

அப்போது ஏழுமலை சொன்னார் ''சந்துரு, பச்சையப்பன் தோழர் மட்டும் நல்ல சமயத்துல இந்த சண்டைய பாத்துட்டு தடுத்து கந்தப்பன் தோழர அவுரு வூட்டுக்கு இழுத்துக்கிட்டுப் போவாம இருந்திருந்தா இன்னம் முத்தியிருக்கும் '' என பாராட்டினார்.

அதைக் கேட்ட அவன் சந்தோசப்பட்டான்.

பிறகு, சந்துரு தன் உள்ளாடை காய்ந்த வரைக்கும் போதுமென்று எடுத்து அணிந்துக் கொண்டு மற்ற தோழர்களுடன் பேட்டையை நோக்கிப் புறப்பட்டான்.

18

ஊருக்குள் நுழைந்ததும் சிறு முதலாளிகள் கூட்டமாய் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அதில், மாதையனும், நடேசனும் சேர்ந்திருந் தார்கள்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பார்கள். இங்கே, உழைக்கும் வர்க்கம் மோதிக் கொண்டதில் முதலாளிகளுக்கு பெருத்த சந்தோசம். அதிலும், வந்தேறிகள் கொஞ்ச நாட்களாய் என்னமாய் ஆட்டம் போடுகிறார்கள். இனிமேல், அவர்களுக்குள் முட்டி மோதி அடித்துக் கொண்டு சாகப் போகிறார்கள். கோவணம் கட்டிகளின் சங்கம் உடைந்து சுக்கு நூறாய் உதிரப் போகிறது. இதுதான் அந்த முதலாளிகளின் கெட்ட எண்ணம்.

அது, தோழர்களுக்குப் புரியாமல் இல்லை. எதையும் காது கொடுத்து தான் கேட்க வேண்டுமா? உடல் மொழியே எத்தனையோ சங்கதிகளை உணர்த்தி விடுமே.

ஒரு காதல் விவகாரம், பெரும்பாடு பட்டுக் கட்டிய சங்கத்தைப் பாழாக்கி விடக் கூடாதேயென அனைவரும் கவலைப்பட்டார்கள்.

அத்தியாயம்

13

1

மாதேசுக்கும், பொன்னிக்கும் இன்று திருமணம். இந்த நல்ல காரியம் இவ்வளவு சீக்கிரம் நடக்குமென்று சந்துரு கொஞ்சமும் நினைக்கவில்லை. அவன் மட்டுமா? மற்ற தோழர்களும் கூடத்தான். அலங்கரிக்கப்பட்ட அந்த பெரிய மண்டபம் எழில் மிகுந்து காணப் பட்டது. மண மேடையில் பூக்களின் வாசம் மனதைக் கவர்ந்திழுக்கும் வண்ண மிருந்தது. காலைநேர இளம்வெயில் சூடாகவே புறப்பட்டிருந்தது. மின்விசிறி கள் முடிந்தவரையில் வெக்கையை தணித்துக் கொண்டிருந்தன. கல்யாண மண்டபம் நிறைவாய் காட்சியளித்தது.

மாதேசும், பொன்னியும் முகம் கொள்ளா உற்சாகத்தில் இன்னும் சற்று நேரத்தில் கணவன், மனைவியாய் வாழ்க்கையில் இணை சேரக் காத்திருந்தனர். அதைப் பார்த்த சந்துரு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். கந்தப்பன் தன் பிற்போக்குத் தனத்தைக் களைந்து விட்டு புது மனித னாய் மகளின் திருமணத்துக்கு வந்தவர் களை வரவேற்றுக் கொண்டிருந்தார்.

மாதேசுக்கும், அவருக்கும் கை கலப்பு ஏற்பட்ட அன்றைய இரவு மிகவும் உணர்ச்சி மிகுந்ததாய் அமைந்தது.

இருள் கவ்வும் நேரத்தில் பேட்டை முதலாளிகளின் ஏளனப்பார்வை யில் மனம் நொந்துப் போய், தங்களின் வருத்தம் எதையும் ஒருவருக்கொருவர் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சந்துருவும் மற்ற தோழர்களும் கந்தப்பனின் வீட்டுக்குப் போய் சேர்ந்தனர். அந்த நீளமான பேட்டையின் நடுத்தெரு அன்று இன்னும் அதிகமாய் நீண்டிருப்பதாய் ஒவ்வொருவருக்கும் தோற்றம்.

சந்துரு, மாதேசை மட்டும் கோயில் வராண்டாவில் இருக்கச் சொல்லி விட்டு தான் கூப்பிடும் போது வந்தால் போதும் என்று சொல்லி விட்டான். பிரச்னை தீராமல் அவனும், கந்தப்பனும் மீண்டும் நேருக்கு நேர் சந்தித்தால், இன்னும் சண்டை முற்றுமோ? என்ற அச்சம் இருந்தது அவனுக்கு.

மாதேசும் தன் தோழன் சொன்னதை மறுத்துப் பேசவில்லை. அவனுக்குப் பொன்னி முக்கியம் தான். அதை விட இயக்க நலன் முக்கியம் என்று தோன்றியது. தன் தவறை அவன் நன்றாய் உணர்ந்திருந்தான். கந்தப்பன் திட்டியதற்கு கொஞ்சம் பொறுத்துப் போயிருக்கலாம். எதிரிகள் இதை விட கேவலமாய் நேருக்கு நேர் திட்டவில்லையா?

2

அன்று கள்ளிப்பாளையம் முதலாளி கேட்டானே, 'நீ கந்தப்பன் குடும்பத்துப் பெண்களை வைத்திருக்கிறாயா?' என்று. நக்கல் அதிகாரி, காவல்நிலையத்தில் எவ்வளவு கேவலமாய் திட்டி தன்னை அடித்தான்?

சக தோழன் அறியாமையினால் திட்டியதைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளலாமா? வர்க்கப் பகைமையைக் கையாளுவது பற்றி தோழர் மாவோ சொன்ன மேற்கோளை எத்தனை தடவை படித்திருக்கிறோம்.

'உழைக்கும் வர்க்கம் தங்களுக்கிடையிலான முரண்பாட்டை பூனை தன் குட்டியைக் கவ்வுவது போலவும், எதிரியுடனான முரண்பாட்டை புலி தன் இரையைக் கவ்வுவது போலவும் கையாள வேண்டும்.' என்று.

ஆனால், கந்தப்பன் திட்டிய நேரத்தில் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் அதை இழந்தோமே...

தெரியாமலா பெரியவர்கள் சொன்னார்கள் 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.' என்று.

மாதேசு பலவாறாய் யோசித்து தன்னைத் தானே நொந்துக் கொண்டு கோயில் வராண்டாவில் உட்கார்ந்தான்.

கந்தப்பன் வீட்டில் இருந்த தோழர் பச்சையப்பன் இந்த பிரச்னை எப்படித் தீருமோ? என்ற திகிலுடன் பாய்கூட போடாமல், தரையில் சுவற்றில் சாய்ந்து அமர்ந்திருந்தார். சந்துருவை எப்போது வந்தாய்? என்று விசாரிக்க கூட அவருக்கு வாய் வரவில்லை.

பொன்னி ஒரு ஓரமாய் சுருண்டு படுத்திருந்தாள்.

வழக்கம் போல அவள் தாயார் வீட்டுக்கு வந்த தோழர்கள் அனைவருக்கும் முதலில் குடிக்க தண்ணீர் கொடுத்தார்.

பிறகு ''சந்துரு, தோழருங்க யாரும் தப்பா நெனச்சுக்கப் போறாங்க, வூட்ல பாலு இல்ல. வேணுன்னா வரக் காப்பி போட்டுத் தரட்டுமா?'' என தயக்கமாய் கேட்டார்.

அவன் பதில் சொல்ல வாயெடுக்கும் முன்னால் தன் மனைவியிடம் கந்தப்பன் சீறினார் ''ஏம் புள்ள, இதையெல்லாம் அவுங்ககிட்ட கேட்டுக்கிட்டு இருக்கணுமா? நம்ப வூட்ல இருக்கறத குடுத்தா வேணான்னா சொல்லப் போறங்க. கேக்கறாப் பாரு கேணச்சி மாதிரி...'' என்று.

3

அவர் மனைவி பதிலுக்கு அதே சீற்றத்தைக் காட்டினார் ''இந்த மொன்ன கோவத்துக்கு ஒண்ணும் கொறச்சலு இல்ல. பண்றதப் பண்ணிப்புட்டு எம் மேல கொண்டாந்து ஒங் கோவத்தக் காட்டு. நாந்தானே ஒனக்கு இளிச்சவாச்சி.'' என்று.

அவர்களின் சண்டையை தொடரவிடாத சந்துரு குறுக்கே புகுந்து ''அக்கா, நீங்க போயி வேலயப் பாருங்க. தோழர் கிட்ட நாங்க பேசணும்.'' என்று அவரை சமையல் கட்டுக்கு அனுப்பி வைத்தான்.

அந்த நேரம் படுத்திருந்த பொன்னி எழுந்து மெல்ல வீட்டை விட்டு வெளியேறப் பார்த்தாள். தோழர்கள் தன் அப்பாவிடம் பேசும் போது தான் அங்கே இருப்பது சரியல்ல என்பது அவள் எண்ணம்.

ஆனால், சந்துரு அவளை வெளியே போக விடவில்லை. ''பொன்னி எங்கப் போற? நீ இங்கியே இரு...'' என்றான்.

தோழர் ஏழுமலை கூட அவன் சொன்னதை அங்கீகரித்தார் ''ஆமாம்மா, நடந்த சண்டைக்கி நீதான் சாட்சி. செத்த இரு தாயி...'' என்று பொன்னியை அமர வைத்தார்.

அப்போது சந்துரு ''வயசுல மூத்த தோழர்கள் கந்தப்பன் தோழர் கிட்ட பேசுனா நல்லாயிருக்கும்.'' என்று சொல்ல, அதற்கு மச்சக்காளை ''சந்துரு இது ஒண்ணும் ஊர் பஞ்சாயத்து இல்ல. நமக்குள்ள நடக்குற விவகாரம். அரசியல் ரீதியா எங்கள வுட நீ தெளிவான ஆளு. நீயே பேசு.'' என்று அவனை தூண்டினார். பச்சையப்பனும், ஏழுமலையும் அதை சரியென்றே சொன்னார்கள்.

சந்துரு தொண்டையை செருமிக் கொண்டு மெல்ல ஆரம்பித்தான்.

''பொதுவா ஒவ்வொரு பொருளுக்குள்றயும் இருக்குற முரண்பாடு தான் அந்த பொருளோட வளர்ச்சிக்கே காரணம். அதுக்கு மனுசனும் விதி விலக்கில்ல. அதனால, கந்தப்பன் தோழருக்கும், மாதேசுக்கும் இருக்குற முரண்பாட்டை அங்கீகரிக்கறதுதான் செரி. இந்த முரண்பாடு நம்ப இயக்கத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போவுன்னு நானு நெனைக்கிறேன். கந்தப்பன் தோழருக்கு இதுல மாறுப்பட்ட கருத்தில்லையே...''

அவன் சொன்னதை அவர் சின்ன தலையசைப்புடன் ஏற்றுக் கொண்டார். அந்தளவில் அவர் இருந்தது மேலும் பேசுவதற்கான நம்பிக்கையை கொடுத்தது. எனவே, சந்துரு கந்தப்பனை ஆழமாய் பார்த்துக் கொண்டே தன் பேச்சை தொடர்ந்தான்.

4

''கந்தப்பன் தோழர் மேல எனக்கு எந்த கோபமும் இல்ல. ஆனா, வருத்தம் இருக்குது. மாதேசும், பொன்னியும் ஒருத்தர ஒருத்தர் விரும்புறது அவருக்குப் பிடிக்கலன்னா, நம்ப சங்க அமைப்புல வெச்சி அவர் பேசியிருக்கலாம். அத வுட்டுட்டு இளைஞர்களான எங்களுக்கு புத்திமதி சொல்ல வேண்டிய இடத்துல இருந்துக்கிட்டு, அவுரு இப்புடி சின்னப் பையன் மாதிரி எதிரிங்க சிரிக்கிற அளவுக்கு நடந்துக்கிட்டு இருக்க வேணாம். மாதேசை அவரு வெறுக்கறதுக்கு

சாதி தான் காரணமுன்னா, அன்னிக்கி கள்ளிப்பாளையத்து மொதலாளிங்க கிட்ட அவன் சண்டைப் போட்டப்பவே, நீ என்ன வுட கீழ்சாதி எங் குடும்பத்துக்காவ நீயொன்னும் சப்போட்டுக்கு வர வேணாம்னு அப்பவே சொல்லி இருக்கலாம். கந்தப்பன் தோழருக்கு அந்த நேரத்துல மாதேசு செஞ்சது பெரிய உதவியாப் பட்டுது இல்லியா?'' என்று அவன் நிறுத்த அவர் பதில் பேசாமல் தலையைக் குனிந்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

அந்த நேரத்தில் கந்தப்பன் மனைவி சமையல் கட்டிலிருந்து குரல் கொடுத்தார் ''நீ இப்ப கேட்ட அதே கேள்வியத்தான் நானும் மத்தியானத்துல இருந்து கேட்டுக்கிட்டு இருக்கறந் தம்பி மனுசன் வாயத் தொறக்க மாட்டங்குறாரு.'' என்று.

அப்போது பச்சையப்பன் ''அன்னிக்கி பொன்னி மேல இருந்த விருப்பத்துல கூட மாதேசு சப்போட்டு பண்ணியிருக்கலாம் இல்லியா?'' என்று கந்தப்பனுக்கு ஆதரவாய் பேசுவதாய் காட்டிக் கொண்டார்.

உடனே மச்சக்காளை பொன்னியிடம் கேட்டார் ''தோழர் சொல்றது நெசமா தாயி, அதுக்கு முன்னாடியே ஒனக்கும், மாதேசுக்கும் பழக்கம் இருந்துச்சா?'' என்று கேட்டார்.

அப்போது அவள் பதில் சொல்ல வாயெடுக்கும் முன்னால் சிற்பி சொன்னான் ''அவுங்க ரெண்டு பேத்துக்கும் பழக்கம் இல்லாம இருந்து இருக்கலாம். ஆனா, மாதேசு பொன்னிய மனசுல வெச்சித்தான் பள்ளிப்பாளையம் மொதலாளிங்க கிட்ட தன்னோட வீரத்த காட்டியிருக்குறாருன்னு எனக்கு தோணுது.'' என்று.

அவனும், பச்சையப்பனைப் போலவே நடிக்கிறான் என்பதைப் புரிந்துக் கொள்ளாத ஓபுளி கோபப்பட்டான்.

''இவனே... நீ அப்புடிச் சொல்லாத. அவன் ரொம்ப நல்லவன்.''

சட்டென அவன் தலையில் தட்டிய சிற்பி கண்ணடிக்க, ஓபுளி புரிந்துக் கொண்டு அமைதியானான்.

5

சந்துரு அதைப் பார்த்து மனதுக்குள் ரசித்தான். தோழர்கள் சூழ்நிலையைப் புரிந்துக் கொண்டு சடுதியில் தங்களை தயாரித்துக் கொண்டது சந்தோசமாய் இருந்தது.

அப்போது ஏழுமலை போலி அதட்டலாய் ''ஆளாளுக்கு பேசாதீங் கப்பா. பொன்னி நீ பேசு தாயி.''என்று சொன்னார்.

அவள் பேச ஆரம்பிக்கும் முன் தன் தகப்பனை வெறுப்பாய் பார்த்தாள். அதை உணர்ந்த கந்தப்பன் தன் தலையை நிமிரவே இல்லை.

''இங்க இருக்குற தோழருங்க எல்லாம் எங்கப்பன் மனசுல என்ன நெனைக்கிதோ அத நல்லாப் புரிஞ்சி வெச்சிக்கிட்டு அவுரு பேசாதத அவுங்க பேசுறாங்க. அவுரு ஏன் வாயத் தொறக்கலன்னா சந்துரு தோழர் மேல இருக்குற மரியாத. தான் பொறாத புள்ளயா அவுங்கள அவுரு நெனைக்கிறாரு. அத வுடுங்க, மாதேசு ஒண்ணும் மொதல்ல என்ன விரும்புல. நாந்தான் அவுரு மேல ஆசப்பட்டேன். எனக்காவ கள்ளிப்பாளையத்து மொதலாளிங்க கிட்ட அவரு சண்ட போட்டாரே, அதுக்காவ இல்ல. அன்னிக்கி அவுரு மட்டுமா சண்ட போட்டாரு. நீங்க எல்லாருந்தானே... அப்புறம் எதுக்கு நான் பெசலா மாதேச மட்டும் விரும்பணும்?''

பொன்னி ஒரு நியாயமான கேள்வியைக் கேட்டு நிறுத்தி விட்டாள். ஆனால், சபையில் இருந்த யாருக்கும் பதில்தான் தெரியவில்லை. எனவே, திருதிருவென முழித்தனர்.

அதைப் பார்த்த பொன்னி தொடர்ந்தாள்.

''ஏன்னா, ஒங்க எல்லார் மாதிரியும் இல்ல அவுரு. இந்த சங்கம் வர்றதுக்கு முன்னாடி நீங்கெல்லாம் எப்புடி இருந்தீங்க? எங்கப்பனை யும் சேத்துதான் சொல்றேன். சந்தை நாளானா சாராயத்தையும், கஞ்சாவையும் குடிச்சிப்புட்டு ஆத்தாங்கரைக்கு பொம்பளைங்கள தேடிப் போவுல...'' என்று நிறுத்தினாள்.

அதைக் கேட்டு கந்தப்பன் தன் மகளை கண்டிப்பது போல ஏதோ சொல்ல வர, சட்டென அதை கை நீட்டித் தடுத்தாள்.

பிறகு, அவளே பேசினாள்.

''ஆனா, மாதேசு போச்சா... இத வுட ஒரு பொண்ணுக்கு ஒரு ஆம்புளய விரும்பறதுக்கு வேற என்னா காரணம் வேணும்? ஒருக்கால் நாளைக்கி நீங்க மாறனாலும் மாதேசு மாறாது.''

என்று பொன்னி வெடித்தாள்.

6

அவளது ஒவ்வொரு வார்த்தைகளும் செவிட்டில் அறைந்தது போலிருந்தது. ஆனாலும், சந்துரு தன் உயிர் நண்பனுக்கு கிடைத்த பாராட்டை எண்ணி பெருமைப்பட்டான். இனி, பேச என்ன இருக்கிறது?

தோழர்கள் அனைவரும் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தனர்.

அதைப் பார்த்த பொன்னி கண்ணில் நீரைத் தேக்கிக் கொண்டு சட்டென தோழர்களை கையெடுத்துக் கும்பிட்டாள்.

''நானு இப்புடி பேசுனதுக்கு எல்லாரும் மன்னிக்கணும். சந்துரு அண்ணா... என்ன ஒங் கூடப் பொறந்த தங்கச்சியா நெனச்சுக்க.''

என்று அழுதாள்.

அதற்கு சந்துரு பதிலேதும் சொல்லாமல் அன்று கள்ளிப்பாளையம் முதலாளிகள் பொன்னி மீது கை வைத்த சமயத்தில் தனக்கு தோன்றிய அதே சகோதர உணர்வை அவள் பிரதிபலிப்பதை நினைத்து வியந்தான்.

எனினும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''அத வுடு பொன்னி. நீ சொல்ல வந்தத முழுசா சொல்லிடு.'' என்றான்.

ஆனால், அவள் வெடுக்கென்று கூறினாள் ''இன்னம் நானு என்னத்த சொல்றது? ஒஞ் சிநேகிதக்காரனப் பத்தி நாஞ் சொல்லித்தான் ஒனக்கு தெரியணுமா?'' என்று.

சந்துரு விடாமல் கேட்டான் ''அப்ப இன்னேரம் வரிக்கிம் மாதேசப் பத்தி யாருக்காவச் சொல்லிக்கிட்டிருந்தே?'' என்று.

அவள் தன் தகப்பனாரை ஓரக்கண்ணால் பார்த்த படி ''அது, புரியறவுங்களுக்குப் புரிஞ்சா செரி.''என்றாள்.

அதன் பிறகு, அங்கே மௌனம் நிலவியது.

இனி, இந்த விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டியது கந்தப்பன் தான். எனவே, அனைவரும் அவர் பேசுவார் என்று காத்திருந்தார்கள்.

அப்போது, பொன்னியின் தாயார் ஒரு தட்டில் நான்கைந்து தம்பளரை வைத்து எடுத்துக் கொண்டு வரக் காப்பி கொண்டு வந்தார். ஒவ்வொருவருக்கும் வழங்கினார். கந்தப்பன் முறை வரும் போது மட்டும் அவர் தனக்கு வேண்டாம் என்று மறுத்தார். அதைப் பார்த்து தோழர்கள் சத்தம் போட்டார்கள். மச்சக்காளை, சந்துருவிடம் '' நீ சொல்லுப்பா..'' என்று கேட்டுக் கொண்டார்.

7

அவன் ''கந்தப்பன் தோழர் எடுத்துக்குங்க. நீங்க காபி குடிக்கலன்னா நாங்களும் தம்பளர வெச்சிட்டு அப்புடியே எந்திரிச்சுப் போயிடு வோம்.''என்று அதட்டினான்.

அதன் பிறகே, அவர் தன் மனைவி கொடுத்த காபியை வாங்கிக் குடித்தார்.

கீழ் சாதிக்காரன் என்று தான் இகழ்வாய் நினைத்தவனுக்கு தன் மகள் கொடுத்த நற்சான்றிதழ் கந்தப்பனை நிலை குலைய வைத்திருந்தது. மாதேசு உண்மையில் அவரை வென்று விட்டான். ஆயினும், தன் தோல்வியை அவ்வளவு சீக்கிரம் வெளிப்படையாய் ஒப்புக் கொள்ள தயங்கினார். சந்துருவும் மற்ற தோழர்களும் அவரை சரியாய் கணித்து விட்டார்கள். என்றாலும், அவர் வாய் விட்டுச் சொல்லட்டும் என காத்திருந்தார்கள்.

ஆனால், கந்தப்பன் மனைவி ஒரு முடிவு எடுத்து விட்டார் போல, தன் மகளின் புத்திசாலித்தனத்தில் ஆனந்தப்பட்டார். ஒரு காபி தம்பளரை தன் கையில் எடுத்துக் கொண்டு வந்து தன் மகள் அருகே உட்கார்ந்து அவளை தன் தோள் மேல் ஆதரவாய் சரித்துக் கொண்டார். பிறகு, தன் காபியை அருந்தினார். பொன்னியிடம் காபி குடிக்கும் பழக்கம் இல்லை.

சூழ்நிலையின் மௌனத்தை கலைக்கும் விதமாய் ஓபுளி, சந்துருவிடம் கூறினான் ''ஏம்பா, இவனே... ஒங்கிட்ட ஒண்ணு சொல்லணும்.'' என்று.

அவன் நிமிர்ந்து பார்த்து ''என்ன?''என்று கேட்டான்.

''இந்தப் புள்ள சொன்னத வெச்சிப் பாத்தா, நாமெல்லாம் சந்தர்ப்பத்துக்கு தான் யோக்யனா இருக்குறோம். மாதேசு, எப்பவுமே யோக்யனா இருக்குறான்.''

''செரி அதுக்கு என்னா இப்போ?''

''இல்ல, இவனே... நாஞ் சொன்னது கரெக்ட்தானே...''

சிற்பி கடுப்பாகி இவ்வளவு தாமதமாய் ஒரு உண்மை இவனுக்கு புரிந்திருக்கிறதே என அவன் தலையில் தட்டினான்.

பிறகு, ''எப்பப் பாத்தாலும், அவனே இவனேன்னுக்கிட்டு எங்க பேரெல்லாம் எப்பத்தான்யா ஒன் வாயில வரும்?''என்று எரிச்சலாய் கேட்டான்.

அவ்வளவுதான் சட்டென எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

8

அதன் பிறகு, வெகு நேரமெல்லாம் ஆகவில்லை. கந்தப்பன் தானே எழுந்துப் போய் மாதேசு கோயில் வராண்டாவில் இருப்பதை தெரிந்துக் கொண்டு தன் வீட்டுக்கு கூட்டி வந்தார்.

எல்லா தோழர்கள் முன்னிலையிலும் அவனைக் கட்டிக் கொண்டு மன்னிப்புக் கேட்டு கண்ணீர் விட்டார். மாதேசும் அவருடன் சேர்ந்து அழுதான்.

அனைவருக்கும் மனநிறைவாய் தோன்றியது.

வந்தேறிகளிடம் ஏதோ பெரிதாய் பிளவு ஏற்படப் போகிறது. இனி சங்கம் அவ்வளவுதான் என்று விசைத்தறி முதலாளிகள் குடித்த மனப்பால் செரிக்காமல் வாந்தியாகி விட்டது.

அடுத்தடுத்த நாட்களில் மாதேசு-பொன்னியின் கல்யாணப் பேச்சு ஆரம்பமானது. கந்தப்பன் தான் செய்த தவறுக்கு பிராயசித்தம் தேடுவது போல தோழர்களைப் பார்த்த நேரமெல்லாம் ''கல்யாணத்தை எப்ப வெச்சிக்கலாம்னு மாப்பிள்ளைத் தோழரைக் கேளுங்க.'' என்று நச்சரிக்க தொடங்கினார்.

சந்துரு அவரது வற்புறுத்தல் தாளாது ''என்ன தோழர், ஊருக்குப் போயி ஒங்க அப்பா அம்மாவ கூட்டிக்கிட்டு வாங்க கல்யாணத்தப் பேசி முடிவுப் பண்ணிடலாம்'' என்று மாதேசிடம் கேட்டுக் கொண்டான்.

ஆனால், அவன் எந்த முடிவும் சந்துருவே எடுக்கட்டும் என உறுதியாய் சொல்லி விட்டான்.

அதன் பிறகு, அனுராதா தோழரையும், வசீகரனையும் ரேணிகுண்டாவி லிருந்து வர வைத்துப் பேசி திருமண தேதி குறித்தார்கள். மாதேசு அந்த செய்தியை தன் பெற்றோரிடம் சொல்லவும், திருமண செலவுக்கு கொஞ்சம் பணம் வாங்கி வரவும் ஊருக்குப் போனான்.

கந்தப்பன் பொன்னிக்காக காசுப் பணம் எதுவும் பெரிதாய் சேர்த்து வைக்கவில்லை. தன் முதலாளி தேவராசிடம் கடன் வாங்கி தன் பங்குக்கு கல்யாண செலவுகளைப் பார்த்துக் கொண்டார். அப்படியும், பணம் போதாது என்ற நிலை வந்த போது கோகிலா அம்மாள் பணம் கொடுத்தார் தொழிலாளர்களும் மனமுவந்து நன்கொடையளித் தார்கள்.

எனவே, எந்த தடையும் இல்லாமல் மாதேசு- பொன்னி காதல் இன்று திருமணம் வரை வந்து விட்டது. சித்திரை மாத அக்னி நட்சத்திரம் இன்னும் முடியவில்லை.

9

இந்த நாட்களில், நல்ல காரியங்கள் எதுவும் நடத்தக் கூடாது என்ற பிற்போக்குத்தனத்தை உடைத்து இன்னும் சிறிது நேரத்தில் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ளப் போகிறார்கள்.

முதலில், இந்த திருமணத்தைப் பேட்டையிலேயே எளிமையாய் வைத்துக் கொள்ளலாம் என்று தான் சந்துரு தன் எண்ணத்தைக் கந்தப்பனிடம் சொன்னான். அவரும் சம்மதிக்க, மாதேசும், ஏழுமலையும் கூட அதுதான் சரியென்றார்கள். அதிக செலவு செய்து கல்யாணம் என்பது தொழிலாளர் வாழ்க்கையில் சுமைதானே என நால்வரும் ஒரு சேர நினைத்தார்கள். ஆனால், மச்சக்காளை, பச்சை யப்பன், ஓபுளி போன்றவர்கள் அதற்கு இசைவு தெரிவிக்கவில்லை.

நீண்ட காலமாய் தங்கள் குடும்பங்களைப் பிரிந்திருக்கும் அவர்கள் இந்த திருமணத்தை முன்னிட்டு தங்கள் மனைவி மக்கள் மற்றும் உறவினர் களை பார்க்க ஆசைப்பட்டார்கள். சொந்த ஊருக்குப் போனால், பணப்பாக்கி கொடுத்தவன் பார்த்தால் விட மாட்டான். ஆனால், இங்கு தற்போது வெளியூர் முதலாளிகள் யாரும் தேடி வருவதில்லை.

அதனால், ஊருக்குப் போன் மூலமோ, கடிதம் எழுதியோ தமது குடும்பத்தினரை வரவழைத்துப் பார்க்க வேண்டும் என

விரும்பினார்கள். அப்படி, அவர்கள் கல்யாணத்திற்கு வரும் பட்சத்தில், தங்களுக்கு முதலாளிகள் கொடுத்த சின்ன அறைகள் போதாது. வருபவர்களை வாடகைக்கு அறையெடுத்துத்தான் தங்க வைக்க வேண்டும். தங்கும் விடுதிக்கு வாடகைப் பணம் தருவதை விட மாதேசு- பொன்னி திருமணத்தையே மண்டபத்தில் வைத்துக் கொண்டால், வருபவர்கள் தங்க ஏதுவாய் இருக்கும். அப்படிச் செய்தால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதாய் முடிந்து விடுமே என ஆலோசனை சொன்னார்கள். அப்போதுதான் சந்துருவுக்கும் அந்த யோசனை தோன்றியது. தன் குடும்பத்தையும் கூட வரவழைக்கலாமே என்பதுதான் அது. எனவே, தன் கல்யாண தகவலைக் கூற ஊருக்குப் போன மாதேசிடம், சந்துரு தன் விருப்பத்தையும் சொல்லி அனுப்பியிருந்தான்.

அவனது விருப்பமும், மற்ற தோழர்களின் விருப்பமும் நிறைவேறியது. எல்லா தோழர்களின் குடும்பத்தினரும் திருமணத்திற்கு வந்து விட்டனர். மாதேசின் பெற்றோர் மணியம்பாளையத்தில் இருந்து வந்திருந்தனர். அவர்கள் தம் ஒரே மகனின் ஆசைக்கு எந்த தடையும் சொல்லவில்லை. அவர்களுடன், சந்துருவின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மாதேசின் திருமணத்தில் வந்து கலந்துக் கொண்டிருந்தனர். மேலும், புதிதாய் இயக்கத் தொடர்புப் பெற்ற மனோகரன் உள்ளிட்ட தோழர்களும் கூட வந்திருந்தது மகிழ்ச்சியாய் அமைந்தது.

10

இந்த திருமணத்தை நடத்தி வைக்கப் போகும் வழக்குரைஞர் வசீகரன் மண்டபத்தில் சந்துருவின் அப்பாவிடம் ஆவலுடன் பேசிக் கொண்டிருந்தார். தோழர் அனுராதாவும், நிர்மலாவும் அவருடன் இருந்தனர்.

அவர்களோடு சந்துருவும், மாதேசும் முதன் முதலில் ரேணிகுண்டா வில் பார்த்த நடுத்தர வயது பெண் தோழரும், அங்கிருந்த இளைய ஆண் தோழர்களும் வந்திருந்தனர். மூத்த தோழர் மட்டும் வரவில்லை. அவர்கள் அனைவரும் மாதேசின் பெற்றோருடனும், சந்துருவின் அம்மா, அக்கா, அண்ணன், தங்கையுடன் அளவளாவிக் கொண்டிருந்தனர். சந்துருவின் அக்காள் கணவர் அவர்களை கலைக்க விரும்பாமல் தன் குழந்தையை தூக்கி மடியில் வைத்து விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்.

தோழர்கள் மச்சக்காளையும், பச்சையப்பனும் தங்கள் குடும்பங்களை வரவழைத்திருந்தார்கள். ஓபுளியும் தன் அண்ணன், அண்ணி இருவரையும் அழைத்திருந்தான். ஏழுமலைக்கு தன் குடும்பத்தை தவிர, வேறு உறவுகள் இருந்தும் சில கசப்பான நினைவுகளால் அவர் யாரையும் கூப்பிடவில்லை. வெளியூரில் இருந்து எல்லா குடும்பங்களை சேர்ந்தவர்களும் நேற்று இரவே ஏறத்தாழ வந்து விட்டார்கள். எனவே, திட்டமிட்டபடி வந்தவர்கள் திருமண மண்டபத்திலேயே தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

நெடிய பிரிவிலான அவர்களின் சந்திப்பு நெகிழ்ச்சிக்குரியதாய் இருந்தது. வார்த்தைகளால் விவரிக்க இயலாத அளவுக்கு அங்கே, சந்தோசம் கரை புரண்டோடியது.

அது மட்டுமல்லாமல், பணப்பாக்கிப் பிரச்னையால் குடும்பத்தைப் பிரிந்து மாநிலம் விட்டு மாநிலம் வந்து வாழும் விசைத்தறி தொழிலாளர்கள் பலருக்கும் அவர்களது மனைவி, மக்களை, உறவுக்காரர்களை நீண்ட நாட்களுக்குப் பின் நேரில் காணும் சந்தர்ப்பத்தை மாதேசு, பொன்னியின் திருமணம் உருவாக்கியிருந்தது

அந்த தொழிலாளர்களுக்கு பேட்டை, நகரம் மற்றும் சுற்று வட்டார ஊர்களில் தறிப் பேக்டரிகளில் வேலை செய்வதற்கான அடையாள அட்டை, வாக்காளர் பட்டியலில் பெயர், மற்றும் ரேஷன் அட்டை என எல்லாம் கிடைத்து விட்டது. எனவே, அவர்களில் கணிசமானோர் தங்கள் குடும்பத்தை இங்கேயே வீடு பார்த்து தங்க வைத்துக் கொள்ளலாம் என திட்டமிட தொடங்கியிருந்தார்கள். மேலும், திருமணமாகாதவர்கள் பலருக்கு வாழ்க்கை துணை அமையவும் வாய்ப்பிருந்தது.

11

ஆகவே, அனைத்துத் தரப்பினரும் மன மகிழ்ச்சியோடு காணப் பட்டனர். மேற்கண்ட பொருளாதார நன்மைகள் தற்காலிகமானது தான் என்றாலும், நிரந்தர நன்மைகளுக்குப் போராட அதுதானே ஊக்கத்தைக் கொடுக்கிறது. எனவே, அன்றைய சந்தோசத்தை உழைக்கும் மக்கள் முழுமையாக அனுபவித்தனர்.

அப்போது மேடையில் ஏறிய சந்துரு அனைவரையும் மைக்கில் வரவேற்றான்.

பிறகு, மாதேசு-பொன்னி திருமணத்தை தலைமையேற்று நடத்திக் கொடுக்குமாறு தோழர் வசீகரனை மேடைக்கு அழைத்தான். அதை மற்ற அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் ஒவ்வொருவராய் வந்து வழி மொழிந்தார்கள்.

தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பைத் தொடர்ந்து தோழர் வசீகரன் அவர் மட்டும் வராமல், தன்னுடன் நிர்மலாவையும் கூட்டிக் கொண்டு மேடையேறி இருக்கையில் அமர்ந்தார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாய் சிற்பி தன் கலைக் குழுவுடன் முதல் முறையாய் மேடையேறினான். அவனது தாய் தந்தையும் கூட திருமணத்துக்கு வந்திருந்தனர். சொந்த ஊர் நண்பர்களையும் அழைத்திருந்தான். மேலும், பல ஊர் மக்களால் நிறைந்துக் காணப்பட்ட அந்த மண்டபத்தில் அவன் அரங்கேற்றம் சிறப்பாய் அமைந்தது. தியாகிகள் செவ்வணக்கப் பாடல் உட்பட பல பாடல்களைப் பாடினான். நடித்தான். அவனது கலைத் திறமை பல்வேறு பரிமாணங்களில் வெளிப்பட, ஒட்டு மொத்த மண்டபமும் வெகு நேரம் கரவொலி எழுப்பியது.

சிற்பி மகிழ்ச்சியின் உச்சத்தில் ஓடிப் போய் சந்துருவைக் கட்டிக் கொண்டான். தனக்கு சரியான பாதை கிடைத்தது அவனால் தான் என்று நன்றி சொன்னான்.

பிறகு, சந்துரு இரண்டு மாலைகளை கொண்டு வந்து வசீகரனிடம் கொடுக்கப் போனான். அவர் அதை வாங்காமல் மைக் அருகே சென்றார். அவன் அதை குழப்பமாய் பார்த்தான்.

ஆனால், அவர் தெளிவாய் பேசினார். "தோழர்களே... இந்த திருமணத்தை நடத்தி வைக்க என்னை விட தகுதியான ஒரு தோழர் இங்க வந்திருக்குறாரு, அவர் யாருன்னா..." என்று ஒரு நிமிடம் நிறுத்தினார்.

சந்துருவோடு சேர்ந்து மற்ற தோழர்களும் குழப்பமானார்கள்.

கல்யாண மண்டபத்தில் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

வசீகரனை விட தகுதியான நபரா? யார் அது?

12

வழக்குரைஞர் புன்னகையோடு அந்த புதிரை விடுவித்தார். "அவர் யாருன்னா, கடந்த பல வருசங்களுக்கு முன்னயே ஒரு சாதி மறுப்பு

திருமணத்தை செஞ்சுக்கிட்டு தன் மனைவியோட இன்று வரை நல்லறம் நடத்தி வருகின்ற, மூத்த தோழர், உழைக்கும் மக்களின் அன்புக்குரிய தலைவன் சந்துருவின் தகப்பனார் ரங்கசாமி அவர்கள்தான் அது. அவர்தான் இந்த கல்யாணத்தை நடத்தி வைக்க தகுதியான தோழர்.''

இதை எதிர்பாராத ரங்கசாமி தன் மகனைப் போலவே திகைப்பில் ஆழ்ந்தார். என்றோ தான் செய்த முற்போக்கான செயலை அங்கீகரிக்க இன்றும் வழித் தோன்றல்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பிற்போக்காளர்களை காலம் மனதில் வைத்துக் கொள்ளாது. சமுதாயத்தை முன்னோக்கி நகர்த்துபன் யாரோ அவன் செய்த காரியம் சிறிதெனினும் காலமும், ஞாலமும் தன்னுள் பொத்தி வைத்துக் கொண்டு அவனைப் போற்றிப் புகழவே செய்யும்.

சந்துருவின் தகப்பனார் சட்டென உணர்ச்சி வயப்பட்டார்.

அவரது கண்கள் பனித்திருந்ததை மூக்கு கண்ணாடி பிரதிபலித்தது. மெல்ல தன் நாற்காலியில் இருந்து எழுந்து சற்றே தடுமாறினார். அதைப் பார்த்த வசீகரன் சந்துருவின் கையிலிருந்த மாலைகளை தான் வாங்கிக் கொண்டு அவனை அப்பாவை அழைத்து வரும்படி பணித்தார்.

அவன் துரித கதியில் மேடையை விட்டிறங்கி அப்பாவின் அருகில் வந்து அவரது இடது கையைப் பிடித்தான். சட்டென அவனைக் கட்டிக் கொண்ட அவர் அன்பாய் அவன் கன்னத்தில் முத்தமிட்டார். அதன் பிறகு, மகனின் துணையுடன் மெல்ல மேடையேறி வந்தார்.

தோழர் வசீகரன் அவரிடம் கல்யாண மாலைகளை எடுத்துக் கொடுக்க, அவற்றை அவர் மணமக்களிடம் அளித்து மாற்றிக் கொள்ளச் சொன்னார். மாதேசும், பொன்னியும் ஒருவர் கழுத்தில் இன்னொருவர் மாலை அணிவிக்க, பலத்த கையொலி எழுப்பி உழைக்கும் மக்கள் மண்டபம் அதிர வாழ்த்தினார்கள்.

மணமக்கள் அப்பாவிடம் ஆசி வாங்க வந்தார்கள். அவர்களைக் கட்டிக் கொண்ட அவர் ''நல்லாயிருங்கடா புள்ளைங்களா...'' என மனமார வாழ்த்துச் சொன்னார். பிறகு, மாதேசின் கையைப் பிடித்து பொன்னியிடம் கொடுத்து ''இந்த மொரட்டுப் பையன பத்தரமாப் பாத்துக்கோ...'' என்றார்.

அதைப் பார்த்த எல்லோரும் சிரித்து விட்டார்கள். அப்பா அன்பாய் பொன்னியின் கன்னத்தில் தட்டிக் கொடுத்தார்.

13

வசீகரன் சந்துருவின் அப்பாவிடம் இரண்டொரு வார்த்தைகள் பேச சொன்னார்.

அதையேற்ற அவர் மெல்ல மைக் முன் வந்து நின்றார். ''எல்லாருக்கும் மொதல்ல செவ்வணக்கம். நீங்க பல ஊர்கள்ல இருந்து ஒங்க சொந்த, பந்தத்தப் பாக்க இங்க எப்புடி வந்திருக்கீறீங்களோ, அதே மாதிரி தான் நானும் எம் மவன் சந்துருவப் பாக்க குடும்பத்தோட வந்திருக்குறேன். இப்படி ஒரு சந்தர்ப்பத்த நம்பளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த மணமக்களுக்கு மொதல்ல என் நன்றிய தெரிவிச்சிக்கறேன். மாதேசு நாம் பொறாத புள்ள. அவன் அவுங்கூட்ல இருந்தத வுட எங்கூட்ல தான் சாஸ்தியிருப்பான். அவனுக்கு நாந்தான் தறி தொழில் கத்துக் குடுத்த குரு. அவன் இப்ப வேறொரு விசயத்துல குருவ மிஞ்சுன சிஷ்யன் ஆயிட்டான். நான் சாதியுட்டுத்தான் கல்யாணம் பண்ணுனேன். ஆனா, அவன் அதையும் மிஞ்சி காதலிச்சி கல்யாணம் பண்ணியிருக்குறான். அவனும் அவம் பொண்டாட்டியும் நல்லாயிருக்கட்டும். இந்த ஊர்ல நடந்த கள்ளிப்பாளையம் மொதலாளிங்க பிரச்னை, சந்துருவும், மாதேசும் மத்த ரெண்டு தோழர்களும் சிறைக்குப் போனது, அதுக்கப்புறம் நடந்த போராட்டத்தப் பத்தியெல்லாம் தோழர் வசீகரன் எங் கிட்ட விரிவா சொன்னாரு. பொதுவா ஊர் வுட்டு ஊர் வந்தாலே வந்தேறின்னு சொல்றதுதான் சிலரோட வழக்கம். ஆனா, பொதுவுடமைக் கட்சி அப்புடியில்ல. மனுசன எந்த ஊர்னு பாக்காம அவன் எந்த வர்க்கம்னு பாக்குது. அதனாலதான் இங்க இருக்குற மொதலாளிகள எதுத்து போராட சொல்லி அந்த கட்சி ஒழைக்குறவனுக்கு வழி காட்டியா நின்னுருக்குது. நாம்ப ஊர் பாகுபாடு, மொழிப் பாகுபாடு, சாதிமதப் பாகுபாடு இல்லாம வாழனும்னா அதுக்கு பொதுவுடமை சிந்தனைகள் தான் தீர்வு. ஒங்களையெல்லாம் பாத்ததுல எனக்கு சந்தோசம்.'' என்று கூறி முடித்தார்.

அதன் பிறகு, தோழர்கள், தொழிலாளர்கள் என பலர் அப்பாவை சூழ்ந்துக் கொண்டு ஆவலுடன் பேசினார்கள். அவர், மிகுந்த மனநிறை வுடன் அவர்களுடன் அளவளாவினார். மேலும், திருமணத்திற்கு வந்திருந்த கோகிலா அம்மாள் தன் மகள்களை கூட்டிக் கொண்டு வந்து அவரிடம் நலம் விசாரித்தார். தேவராசும் வேறு சில பேட்டை முதலாளிகளும் அவர்கள் குடும்பத்தினரும் கூட அப்பாவிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசினார்கள்.

திருமணத்தில் சமையல் பொறுப்பை தான் ஏற்றுக் கொண்ட அங்கம்மாள் குறையில்லாமல் அதை செய்திருந்தாள்.

எல்லா காரியங்களுக்கும் ஒத்தாசையாய் இருந்த . சரிதாவும் அவளது தோழிகளும் உழைக்கும் மக்களைப் பொறுப்பாய் அழைத்துச் சென்று உபசரித்தார்கள்.

14

உழைக்கும் மக்கள் சாப்பிட்டு முடிந்த பின்னால், முன்னணித் தோழர்கள் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து அவரவர் குடும்பத்தோடு சாப்பிடலாம் என்று ஆசைப்பட்டார்கள். சந்துருவுக்கும் அது நல்ல யோசனையாய் பட்டது. எனவே, கொஞ்சம் கால தாமதமாய் அனைவரும் காலை உணவு சாப்பிட உட்கார்ந்தார்கள்.

கந்தப்பன் ,ஏழுமலை, ஓபுளி, மச்சக்காளை, பச்சையப்பன், சிற்பி போன்ற தோழர்கள் நேற்று இரவே அப்பாவுக்கு அறிமுகம் ஆனாலும், அவர்களின் குடும்பத்தினரிடம் பேசும் வாய்ப்பு இப்போதுதான் அவருக்கு கிட்டியது. அப்பா, அவரவர் குடும்ப பின்னணி பற்றியும், அவர்கள் ஏன் ஊரை விட்டு வந்தார்கள் என்பது பற்றியும் சாப்பிட்டுக் கொண்டே விசாரித்தார். அம்மாவுக்கு தன் கணவர் இந்த கல்யாணத் தில் திடீர் கதாநாயகன் ஆனதில் முகம் கொள்ளாத சந்தோசத்தில் இருந்தாள்.

அதே சமயத்தில், சந்துருவின் அக்கா, மாமா, அண்ணன், தங்கை என அனைவரும் அவனை பிரமிப்புடன் பார்த்து கொண்டிருந்தார்கள். அக்காவின் குழந்தையை அவன் ஆசை தீர கொஞ்சி மகிழ்ந்தான்.

ஆயினும், அவனுக்கு நேரம் போதவில்லை. ஏற்கனவே, தோழர் வசீகரனிடம் சரிதாவின் கதையைக் கூறி, அது சம்பந்தமாய் பெண் பிள்ளைகளை கோயிலுக்கு நேர்ந்து விடுவதை தடுக்க இரு மாநில உயர்நீதி மன்றங்களில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அது பற்றி அவரிடம் மேல் விபரம் கேட்க வேண்டும்.

மேலும், மணியம்பாளையம், கள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளில் சில இயக்கத் தொடர்புகள் ஏற்கனவே தலைமை தோழர்களிடம் கொடுக்கப் பட்டிருந்தன. அந்த தோழர்களும் மாதேசு-பொன்னி

திருமணத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களுடனும், மனோகரனுடனும் பேசி அந்தந்தப் பகுதிகளில் அமைப்புக் கட்டும் பணிகள் எந்த அளவில் இருக்கிறது என விசாரிக்க வேண்டியிருந்தது.

மதுரை மாவட்டத்திலும் இப்படித்தான் கண்டறிய வேண்டியிருந்தது. எனவே, சந்துரு பம்பரமாய் சுழன்றான்.

அதே சமயத்தில், தான் சரிதாவை மணக்க விரும்பும் விசயத்தை முதலில் அப்பாவிடம் சொல்ல வேண்டும். ஒரு பாலியல் பெண்ணை தன் மருமகளாய் ஏற்பதில் அவருக்கு சிக்கல் ஏதும் இருக்காது.

ஆயினும், அம்மா என்ன சொல்வாளோ? அண்ணனும், அக்காவும், தங்கையும் என்ன சொல்வார்களோ? என்று அச்சமாய் இருந்தது.

அத்தியாயம்

14

1

மாதேசின் திருமணம் முடிந்து ஓரிரு நாட்கள் இருந்து விட்டே தோழர்களின் குடும்பங்கள் பேட்டையை விட்டு தங்கள் ஊர்களுக்கு திரும்பிச் சென்றன. ஆனால், சந்துருவின் குடும்பம் மட்டும் அவன் மணியம்பாளையம் முதலாளியிடம் பட்ட பணப்பாக்கியை சீக்கிரம் கட்ட வேண்டும் என்பதால் வேலை நிமித்தம் உடனே புறப்பட்டு விட்டது. இந்த அவசரத்திலும் கூட சரிதாவைப் பற்றி அப்பாவிடம் சொல்லி வைத்திருந்தான் சந்துரு.

புது மாப்பிள்ளை மாதேசு இன்னும் தறிக்கு வரவில்லை. அவன் தறியை தற்காலிகமாய் சிற்பி தான் ஓட்டுகிறான்.

பேட்டை கிராமத்தின் காலை நேரம் விசைத்தறிகளின் சத்தத்தால் நிரம்பிக் கிடந்தது. குடிசைத் தொழில் போல ஒவ்வொரு வீட்டிலும் தறிகள் ஓடிக் கொண்டிருந்தன. அவற்றின் முன்னால் யாராவது ஒரு விசைத்தறி தொழிலாளி தூக்கக் கலக்கத்துடன் நின்றிருந்தான். ஆனால், அவன் முகத்தில் கொஞ்ச நாட்களாய் ஒரு சிறு கம்பீரம் வந்திருந்தது.

உள்ளூர் முதலாளிகளுக்கு பயந்த காலம் மலையேறி விட்டது. பணப்பாக்கிப் பட்டு ஓடி வந்த காரணத்தால், வெளியூரிலிருந்து கார் வைத்துக் கொண்டு வரும் பிணந்தின்னிகளுக்கு அஞ்சி நடுங்கிய உணர்வும், பொய்யாய் பழங்கதையாய் மெல்ல போய் விட்டது. அதனால், தொழிலாளியின் அகத்தில் ஒரு சுதந்திர உணர்வு வந்திருப்பதில் வியப்பில்லை. முன்பெல்லாம் மந்தையில் இருக்கும் டீக்கடைக்குப் போனால், அங்கு வரும் காலைப் பத்திரிக்கையை நிம்மதியாய் படிக்க இயலாது.

உள்ளூர்காரன் வந்து தான் படிக்க கேட்டால், யோசிக்காமல் கையில் இருக்கும் பேப்பரை படித்தும், படிக்காமலும் கொடுத்து விட வேண்டும். இல்லையென்றால், 'என்னடா, வந்தேறி நாயே...' என்பான். சவரக்கடைக்கு முடி வெட்டிக் கொள்ளப் போனால் கூட உள்ளூர்காரர்களுக்குத்தான் முதல் மரியாதை. அப்படித் தராவிட்டால் நாவிதர் அங்கே கடை நடத்த முடியாது. பேட்டையில் இருந்து நகரத்துக்கு செல்லும் பேருந்தில் உள்ளூர்காரன் வந்தால், சீட்டில் இருந்து எழுந்து வெளியூர்காரன் அவனுக்கு எழுந்து இடம் கொடுத்து விட வேண்டும். இப்படிப்பட்ட கொடுமைகளெல்லாம் தற்போது அறவேயில்லை. பண்பாட்டு ரீதியாய் தங்களை பல வழிகளில் அவமானப்படுத்திய பேட்டை விசைத்தறி முதலாளிகள் தங்கள் வாலை சுருட்டிக் கொண்டு கிடக்கிறார்கள்.

2

இப்படி பேட்டையில், நகரத்தில், தடுக்குப் பேட்டையில், குப்பத்தில், சீவாடாவில், பொன்பாடியில், நின்றவில் என எல்லா ஊர்களிலும் வந்தேறிகள் என்ற அவச் சொல்லை துடைத்து விட்டு தற்காலிகமாகவேனும் ஒரு வசந்த காலத்தை தொழிலாளர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

கோகிலா அம்மாள் தறிப் பேக்டரியில் இருந்து டீக் கடைக்குப் போக சிற்பியுடன் தெருவில் இறங்கி நடந்த சந்துரு இதையெல்லாம் யோசித்துப் பார்த்தான். சின்னதாய் ஒரு மனநிறைவு அவனுக்குள் தோன்றினாலும், இதையெல்லாம் சாதிக்க தங்கள் பின்னால் ஒரு புரட்சிகர கட்சி இருந்ததே காரணமென்பதையும் அவன் உணரத் தவறவில்லை.

அப்போது அவனையும் சிற்பியையும் குரோதமாய் பார்த்தப்படி எதிரே நடேசன் நடந்து வந்தான். இவர்கள் தானே தேவராசு விவகாரத்தில் தன்னை சிறைக்கு அனுப்பியவர்கள் என்ற கடுப்பு அவனுக்கு.

இதை கவனித்த சிற்பி, ''இவன் நெட்டக் கால ஒடைக்கணும் சந்துரு...'' என்று சொன்னான். அதற்கு அவன் ''கண்டிப்பா ஒரு நாளைக்கி செய்யணும் தோழர்'' என்று சத்தமாய் சொல்ல, அப்போது அதைக் கேட்ட படி அவர்களின் பின்னாலிருந்து வந்த தேவராசின் மகன் இளங்கோ ''அதுக்கு எதுக்கு தோழர் நாள், நட்சத்திரம் பாத்துக்கிட்டு இன்னிக்கே செஞ்சுரலாமே.'' என சட்டென ஒரு வேகத்தில் சொன்னான்.

இவர்களின் பேச்சைக் கேட்டதும்தான் தாமதம், நடேசன் குடுகுடு வென அருகிலிருந்த தன் வீட்டுக்குள் கொக்கு மாதிரி ஓடினான். அதைப் பார்த்ததும் சந்துருவுக்கு சிரிப்பு வந்து விட்டது. அவனுக்கு சிற்பி நெட்டக்காலன் என்று சரியாய் தான் பெயர் வைத்திருக்கிறான்.

இளங்கோவுடன் பேசிக் கொண்டு அவனையும் டீக் கடைக்கு அழைத்துக் கொண்டு மற்ற இருவரும் நடக்க, தன் வீட்டுக் கதவுச் சந்தில் இருந்து ஒளிந்து நின்று வன்மத்துடன் மூவரையும் பார்த்துக் கொண்டிருந்தான் நடேசன்.

அடுத்த இரண்டொரு நாட்களிலேயே அவனுக்கு அந்த வன்மத்தைத் தீர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தது.

அது ஒரு மாலை நேரம். அன்று சந்தை நாள் மட்டுமல்ல, வாரச் சம்பள நாளும் கூட. எனவே, விசைத்தறி தொழிலாளர்கள் தறிகளை நிறுத்தி விட்டு நெய்த துணிகளுக்கான கணக்கு வழக்குகளை முடித்துக் கொண்டு கொஞ்சம் பேர் தங்கள் மனைவிமாருடன் நகரத்தில் இருந்த சந்தைக்குப் போயிருந்தனர்.

3

சந்துரு, சிற்பி, ஓபுளி, உட்பட முன்னணி சங்கத் தோழர்கள் கோகிலா அம்மாள் வீட்டுத் திண்ணையில் புதிதாய் கட்டப்பட்ட சங்க அலுவலகத்தில் அமர்ந்திருந்தனர்.

சங்கப் பொருளாளர் ஏழுமலை ஒரு நோட்டுப் புத்தகத்தை வைத்துக் கொண்டு சங்கத்தின் வரவு செலவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரை சுற்றி நின்று தொழிலாளர்கள் நிறைய பேர் தாங்கள் சங்கத்துக்கு செலுத்த வேண்டிய மாதச்சந்தா தொகை மற்றும் நன்கொடைகளை வரவு வைத்துக் கொண்டிருந்தார்கள். ஏழுமலைக்கு உதவியாய் மச்சக்காளையும், பச்சையப்பனும் இருந்தார்கள்.

அதைப் பார்த்தப் பின்தான் சந்துருவுக்கு அந்த யோசனை தோன்றியது. இதுவரை சங்கம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து தொழிலாளர்களுக்கு சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள் பற்றி முறையாய் தெரிவிக்கப் படாமல் இருக்கிறது. அதை தொழிலாளர் பேரவையைக் கூட்டி சீக்கிரமே தெரிவிக்க வேண்டும். உழைக்கும் மக்களிடம் இருந்து பெறப்படும் ஒவ்வொரு நயாபைசாவும் எந்த வகையில், என்ன காரணத்துக்காக செலவிடப்படுகிறது என்பதை வெளிப்படையாய் அவர்கள் அறியச் செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு சங்க நடவடிக்கைகளில் ஈடுபட இன்னும் ஆர்வம் வரும்.

சந்துரு இதை தொழிற்சங்க முன்னோடிகளிடம் உடனே சொல்ல வாயெடுத்தான். அப்போது சிறிது நாட்கள் இடைவெளியில் மாதேசு சங்கத்துப் பக்கம் வந்திருந்தான். அவனைப் பார்த்ததும் அனைவரும் கவனம் சிதறினார்கள். மாதேசு சங்கத்தின் திண்ணையில் உட்கார்ந்ததும் ஓபுளி ''என்ன இவனே, வா... இன்னிக்கித்தான் சங்கத்தோட நெனப்பு வந்துச்சா?'' என்று வழக்கம் போல ஆரம்பித்தான்.

அதைக் கேட்ட சிற்பி ''தோழர் என்னாப்பா பண்ணுவாரு. பொன்னித் தோழர் இத்தினி நாளு அவர ஊட்டுக்குள்ற கட்டிப் போட்டு வெச்சிருந்தாங்க. இன்னிக்கித்தான் அப்படியே காத்தாட வீதியில நடக்கச் சொல்லி கட்ட அவுத்து வுட்ருக்காங்க. அப்புடித்தானே மாதேசு?'' என்று கலாய்த்தான்.

அடுத்தடுத்து இதே ரீதியில் தோழர்கள் பேச மாதேசு வெகுவாய் வெட்கப்பட்டான். அவனுக்கு தரையில் கால் பாவவில்லை.

4

அதைப் பார்த்த மச்சக்காளை ''என்ன தோழரே, பொண்ட்டாட்டி யோட பேச வேண்டியதெல்லாம் பேசி முடிச்சுட்டீங்களா? இன்னம் மிச்சம் மீதி வெச்சிருக்குறீங்களா?'' என்றார்.

மாதேசு அவரைப் பரிதாபமாய் பார்த்து விட்டு ''என்னண்ணா, நீங்களும் கேலி பண்றீங்களே...'' என்று சொன்னான்.

அதற்குப் பச்சையப்பன் ''தோழரே, நாங்களும் கல்யாணம் ஆனவுங்க தான். கொஞ்ச நாளு அப்புடித்தான் மயக்கந் தட்டும். அப்புறம், தானா எல்லாஞ் செரியாயிடும்.'' என்று அவனைப் பார்த்து குறுஞ் சிரிப்பு சிரித்தார்.

இதற்கு நடுவே குறுக்கேப் புகுந்த ஏழுமலை ''ஏம்பா, செயலாளரே... இந்த மாசம் நீ சங்கத்துக்கு சந்தா தொகை இன்னும் கட்ல. ஒடனே பணத்தைக் கட்டு. இல்லன்னா ஒம் மேல நடவடிக்கை எடுப்போம்.'' என்று மிரட்டினார்.

அதற்கு மாதேசு ''பொருளாளரே, கல்யாணம் முடிஞ்சு நா இன்னம் வேலைக்கே போவல, எங் கிட்ட ஏது பணம்?'' என்றவன் சிற்பியின் பக்கம் திரும்பி ''ஏம்பா தோழரே, இப்ப எந் தறிய நீதான ஓட்றே... எஞ் சந்தாவ நீ கட்டிடுடேன்.'' என்று கேட்டான்.

அதற்கு அவன் ''எங்க தலைவர் சொல்லட்டும். நாந் தர்றேன்.'' என்று சந்துருவை கை நீட்டிக் காட்டினான்.

அப்போதுதான் அவனைப் பார்த்ததாய் காட்டிக் கொண்ட மாதேசு ''செவ்வணக்கம் தோழரே...'' என்று சொல்ல சந்துரு ''செவ்வணக்கம் சொல்லுங்க தோழரே...'' என்று அவன் இத்தினி நாட்களாய் சங்கத்துப் பக்கம் வராத கடுப்பில் முறைப்பாய் கூறினான்.

அதைக் கண்டுக் கொள்ளாத மாதேசு ''தோழரே, நீங்கதான் சிற்பிக் கிட்ட சொல்லி எஞ் சந்தாப் பணத்தைக் கட்ட வைக்கணும். இந்த உதவிய நீங்க செஞ்சா காலத்துக்கும் மறக்க மாட்டேன்.'' என்று குறுஞ் சிரிப்புடன் கூறினான்.

அவன் அப்படிச் சொன்னதும் தான் தாமதம் சந்துரு கூறினான் ''செஞ்ச உதவியெல்லாம் போதும். ஏழுமலை தோழர், மாதேசு வெரல்ல இருக்குற மோதிரத்தைப் பறிமுதல் பண்ணி சங்க கணக்குல வரவு வெய்ங்க.''என்று

இதைக் கேட்டதும் முன்னணி தோழர்கள் மட்டுமல்ல, சந்தா கட்ட வந்த தொழிலாளர்களும் உற்சாகமானார்கள்.

5

ஓபுளி ''இந்தா இவனே, நீ நல்லா மாட்டுனே...'' என்று பறிமுதல் நடவடிக்கைக்கு எழுந்து நின்றான். அவனுக்கு ஒத்துழைப்புத் தர சிற்பியும் மற்றவர்களும் முடிவு செய்து மாதேசை நெருங்க அவன் அலறினான் ''இது ரொம்ப அராஜகம் தோழர்களே... முதலாளிகளோட சொத்துக்களப் பறிமுதல் பண்ணச் சொல்லித்தான் மார்க்சிய ஆசான்கள்

வழி காட்டினாங்க. நீங்க செய்றது தப்பு...'' என்று அந்த நேரத்தில் அவன் இடது கையை தன் பின்புறம் மறைத்துக் கொண்டான்.

என்றாலும் தோழர்கள் விடாமல் பலவந்தம் செய்ய முயல ''சந்துரு, வேணான்னு சொல்லுப்பா. இது எங்கப்பா அம்மா போட்ட மோதிரம்பா...'' என்று கத்தினான்.

''ஓ... அப்புடியா அப்ப பறிமுதல் பண்றது தப்பே இல்ல. வுடாதீங்க தோழர்களே. அவுங்க வந்து கேட்டா நாம் பதிலு சொல்லிக்கிறேன்.'' என்று சந்துரு ஊக்கமளிக்க, ஒரு இழுபறி ஆரம்பித்தது. மாதேசால் தன் இடது கையை நீண்ட நேரம் பின்புறம் வைத்திருக்க முடியவில்லை. தோற்றுப் போகும் தருணத்தில் அவனே ''இருங்கப்பா, ஒங்களுக்கு மோதிரந்தானே வேணும். நானே தர்றேன்.'' என்று கழட்டினான்.

அதைப் பார்த்த சந்துரு ''இரு... இரு கழட்ட வேணாம்.'' என்று அவசரமாய் தடுத்தான். ''ஏம்பா..?'' என்று மாதேசு கேட்க, அதற்கு அவன் ''அப்பாம்மா ஆசையாப் போட்ட மோதிரம் கொஞ்ச நாளைக்கி அது ஒங் கைல இருக்கட்டும். அதுவுமில்லாம நாளைக்கி ஒனக்கு வர்ற குடும்ப நெருக்கடிக்கி அது ஒதவும். நாஞ்சும்மா வெளையாட்டுக்கு தோழர்கள் கிட்டப் பறிமுதல் பண்ணச் சொன்னேன்'' என்று தன்னிலை விளக்கம் அளித்தான்.

ஆனால், மாதேசு சொன்னான் ''எனக்கு இந்த மோதிரமெல்லாம் போட்டுப் பழக்கம் இல்லப்பா. என்னமோ கைல உறுத்தற மாதிரியி ருக்குது.'' என்றவன் விடாமல் தன் கையிலிருந்ததை கழட்டி ஏழுமலை யிடம் நீட்டினான். அதை ஏற்க மறுத்த அவர் ''மாதேசு, சந்துரு தோழர் தான் சொல்லிட்டாருல்ல, அப்புறம் எதுக்கு தர்றீங்க? வேணாம், நீங்க மொதல்ல அத, ஒங்க வெரல்ல போடுங்க'' என்று அறிவுறுத்தினார்.

அதற்கு மாதேசு ''இல்லத் தோழர், எங் கல்யாணத்துகாவ சனங்க கிட்ட நிதி வசூல் பண்ணீங்க. கணிசமா பணம் குடுத்தாங்க. அதுல எம் பங்கா இந்த மோதிரத்தை வெச்சிக்குங்க...'' என மனமுவந்துச் சொன்னான்.

6

அதைக் கேட்ட ஏழுமலை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்ற குழப்பத்துடன் சந்துருவைப் பார்த்தார்.

ஆனால், மாதேசு விடாமல் அவரை வற்புறுத்தினான் ''நெசமாச் சொல்லணும்னா இத சங்கத்துக்கு தரணும்னு தான் நானே இங்க வந்தேன். வாங்கிக்குங்க.'' என்று.

அதைப் பார்த்த தோழர்கள் நெகிழ்ந்துப் போனார்கள். ஓபுளி ஒரு படி மேலே போய் அவனைக் கட்டிக் கொண்டு சொன்னான் ''மாதேசு... ஒங் கல்யாணத்துக்கு நிதி கேட்டப்ப தொழிலாளிங்க என்ன சொன்னாங்க தெரியுமா? இது வரிக்கிம் நாங்க குடிக்க, கூத்தியா வெக்கன்னு எவ்வளோ கெட்ட வழியில செலவு பண்ணி இருக்கறம். ஒரு நல்ல காரியத்துக்கு தர்றதுக்கு ரொம்ப சந்தோசப்படுறோம்னு சொல்லி ஒரு வாரத்துச் சம்பளத்தைக் கூட நிதியா குடுத்தாங்க'' என்றான்.

அதைக் கேட்ட சிற்பி ''ஓபுளி, இன்னிக்கித்தான்யா வாழ்கையில நீ தெளிவாப் பேசியிருக்குறே...'' என்று சொல்ல, தோழர்களும், தொழிலாளர்களும் கலகலவென்று சிரித்தார்கள்.

அதன் பிறகு, மாதேசு தன் மனதை மாற்றிக் கொண்டான். ஆயினும், தன் விரலில் மோதிரத்தைப் போடப் பிடிக்காமல் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். பொன்னியிடம் கொடுத்து பத்திரப்படுத்தச் சொல்லலாம் என்ற நினைப்பில்.

பிறகு சொன்னான் ''ஏம்பா கடைப்பக்கம் போயி நாம்ப டீக் குடிச்சுட்டு வரலாமே...'' என்று.

அது சரியென எல்லோருக்கும் தோன்ற, மெல்ல எழுந்து நின்றார்கள். அப்போது மாதேசிடம் ஓபுளி சொன்னான் ''இவனே... ஒன் அக்கவுண்ட்ல இன்னிக்கி டீ போண்டா வாங்கிக் குடு.'' என்று அதைக் கேட்ட சிற்பி '' மறுபடியும், அவனே, இவனேன்னு ஆரம்பிச் சுண்டாண்டா வேதாளம் முருங்க மரத்துல ஏறுன கதையா...'' என்று சொல்ல, அனைவரும் சிரித்தனர்.

அந்த நேரம் பார்த்து சந்துரு, மாதேசிடம் ''ஆமா, எங்கப்பா கந்தப்பன் தோழர்?'' என்று.

அதற்கு அவன் ''சந்தைக்கு போறதாச் சொல்லி தோழரும் அவுரு சம்சாரமும் பொன்னியும் நகரத்துக்கு கெளம்பிக்கிட்டு இருந்தாங்க.'' என்றான்.

7

அதைக் கேட்டுக் கொண்டே ஒரு கூட்டமாய் தோழர்களும், தொழிலாளர்களும் டீக் கடைக்கு கிளம்ப எத்தனிக்க, அந்த நேரம் எதிரே சங்கத்தை நோக்கி அனுமந்துவும், கொண்டையாவும் வந்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் இளங்கோவும் சேர்ந்திருந்தான்.

அதைப் பார்த்த மச்சக்காளை ''என்னா சந்துரு, கூலி விவசாயிகள் சங்கமும், மாணவர் சங்கமும் ஒண்ணா வருது.'' என்று சொல்ல, அவன் ''நல்ல விசயம் தானே தோழர்.'' என்று சிரித்தான்.

அவர்கள் நெருங்கி வர ''வாங்க தோழர்களே...'' என்று விசைத்தறி தொழிலாளர்களும், தோழர்களும் உற்சாகமாய் வரவேற்றனர்.

வந்தவர்களும் ''செவ்வணக்கம் தோழர்களே...'' என்று ஒரு சேர தங்கள் வலது கை முஷ்டிகளை உயர்த்த, பதிலுக்கு தோழர்கள் தரப்பும் அவ்வாறே செவ்வணக்கம் சொன்னது.

மாலை நேர வெயிலில் அந்த காட்சி அழகாய் எல்லோர் மனதிலும் பதிவானது.

டீக் கடைக்குப் போகும் முடிவை தற்காலிகமாய் ஒத்தி வைத்த தோழர்கள் வந்தவர்களின் நோக்கத்தை தெரிந்துக் கொள்வதில் ஆர்வம் காட்டினார்கள். மூன்று பேரையும் விசைத்தறி தொழிலாளர் சங்கத்தின் திண்ணையில் உட்கார வைத்து விசாரித்தார்கள். முதலில் சந்துரு ஆரம்பித்தான் ''இளங்கோவத்தான் நாங்க தெனமும் பாத்துக்கிட்டு இருக்குறோம். அதனால அவர நலம் விசாரிக்கத் தேவையில்ல. நீங்க எப்புடியிருக்குறீங்க தோழர்களே?'' என்று அனுமந்து, கொண்டையாவைக் கேட்டான்.

அவர்கள் தங்கள் நலத்தைக் கூறி விட்டு, பதிலுக்கு நலம் விசாரித்தார்கள். குறிப்பாய், புது மாப்பிள்ளை மாதேசிடம் மண வாழ்க்கையின் துவக்கம் குறித்துக் கேட்டார்கள். அவன் சிரித்து விட்டு ''அதுக்கென்ன தோழர்களே, நானும், பொன்னியும் ஏற்கனவே காதலிச்சவுங்கதானே... புரட்சிகர வாழ்க்கைல இணைஞ்சது இன்னும் சந்தோசமாத்தான் இருக்குது.'' என்றான்.

அவர்கள் மனநிறைவாய் உணர்ந்தார்கள் போல அனுமந்து முந்திக் கொண்டு சொன்னார் ''மகிழ்ச்சி தோழர்.'' என்று.

அப்போது சந்துரு அவரிடம் கேட்டான் ''என்ன தோழர்களே, இவ்வளவு தூரம் நீங்க தேடி வந்திருக்குறதப் பாத்தா ஏதோ முக்கியமான விசயம் பேச வந்திருக்குறீங்க போல்ருக்குது?'' என்று.

8

அதற்கு அனுமந்து தான் பதில் சொல்லாமல் கொண்டையாவைப் பார்த்தார். பிறகு, ''நீங்க சொல்லுங்க தோழர்.'' என்றார்.

கொண்டைய்யா மெல்ல ஆரம்பித்தார் ''ரெண்டு நாளைக்கி முன்னால எங்க கூலி விவசாயிகள் சங்க கூட்டத்துல ஒரு அவசியமான தீர்மானத்த நிறைவேத்தியிருக்குறோம். அது என்னன்னா, தோழர் சிற்பிய கொஞ்ச நாளு எங்கப் பகுதிக்கி நீங்க அனுப்பனும். அது எதுக்குன்னா எங்க கூலி விவசாய சனங்கக் கிட்ட இருக்குற வாழ்க்கை முறை, பழக்க வழக்கம் இதையெல்லாம் அவுரு தெரிஞ்சுக்கிட்டு அதுல இருக்குற நல்ல அம்சங்கள எடுத்துக்கிட்டு ஒரு கலை வடிவத்த உருவாகித் தரனும். அது தெருக் கூத்து இல்லன்னா, கதைப் பாடல்கள் மாதிரியோ கூட இருக்கலாம். இது எங்கப் பகுதியில இயக்கத்த முன்னெடுத்துக்கிட்டுப் போக வசதியா இருக்கும்.'' என்று முடித்தார்.

அதை கேட்ட சந்துரு இது நல்ல விசயமாக இருக்கிறதே என நினைத்தான். பிறகு, கொண்டையாவிடம் கேட்டான் ''தோழர் நாங்க இங்க வாழ வந்தமே தவுர எங்களுக்கு தெலுங்கு மக்களோட கலாச்சாரம் அதுலயும் கூலி விவசாயிகளோட பழக்க, வழக்கம் எதுவும் சுத்தமா தெரியாது. அத கொஞ்சம் எங்க எல்லாருக்கும் சொல்லுங்களேன்.'' என்று ஆர்வமாய்.

அதற்கு அவர் முதலில் சந்தோசப்பட்டார். பிறகு விரிவாய் தொடங்கினார் ''இந்த எல்லையோரப் பகுதில பொதுவா தேசம்மா பண்டிகையும் கொண்டாடப்படுது. பொங்கல் பண்டிகையும் கொண்டாடப்படுது. அதையே சங்கராந்தியாவும் செஞ்சுக்குறாங்க. அப்புறம், இந்த ஏரியாவுல ஒரு குறிப்பான விசயமா இருக்குறது என்னன்னா, கூலி விவசாயிகள்ல எல்லாருமே தெலுங்கு பேசற மாதிகா சனங்க மட்டுமில்ல, தமிழ் பேசற ஆதி திராவிட மக்களும் இருக்குறாங்க. நெறையா நெலம் வெச்சிருக்குற பண்ணையக்காரங் கள்ல கூட தமிழ் பேசற அகமுடையாருங்க அதிகம் பேரு இருக்குறாங்க. ரெட்டி, நாயுடு கம்மியாத்தான் உண்டு. எங்க தெலுங்குப் பேசற மாதிகா, மாலா சனங்க முக்கியமா சிறு பெண் தெய்வங்கள

கும்புடுறாங்க. அதுக்கு திருவிழா நடத்துறது உண்டு. அதுல, தேசம்மாங்கிறதும் ஒன்னுதான். அது, ஒங்க ஊரு மாரியம்மா, காளியம்மா மாதிரிதான்.'' என்று முடித்தார்.

சந்துரு தொடர்ந்து கேட்டான். ''உங்க உணவு பழக்கம் எப்புடித் தோழர்?'' என்று.

இதற்கு அனுமந்து பதில் சொன்னார்.

9

''நீங்க ராகிக் களின்னு சொல்ற உணவு எங்களுக்கு சங்கட்டி. களிக் கிண்டும் போதே அதுல அரிசிப் பருக்கை கொஞ்சம் கலந்துக்குவோம். கொழம்புல மாட்டுக்கறி தான் முக்கியம். அது இல்லாம எங்களுக்கு சாப்பாடு எறங்காது. மீன், கருவாடுன்னு சேத்துக்கிட்டாலும் மாட்டுக் கறின்னா எங்க கூலி விவசாயிகளுக்கு கொண்டாட்டந்தான். இப்பெல்லாம் நாங்க செத்த மாட்டை சாப்புடுறது இல்ல. வாரச் சந்தையில கறியெடுத்துக்குறோம். திருவிழா சமயத்துல மாட்டு வியாபாரிங்க கிட்ட சொல்லி சதைப் பிடிப்பா இருக்குற மாடுகள வாங்குவோம். இதுக்கான பணத்த ஊர் மக்கள் கிட்ட வசூலிச்சுக்கு வோம். அத கொண்டாந்து அறுத்து பெரிய மூங்கில் படல்ல ஒரே மாதிரி கூறுக் கட்டி வெப்போம். கறிக் கேட்டு வர்ற சனங்க அவுங்க விருப்பட்ட கூற எடுத்துக்குவாங்க. அப்புறம், மாட்டுக் கறிய நாங்க வெறும் உணவா மட்டும் பயன்படுத்துறது இல்ல தோழரே... மருத்துவத்துக்கும் அது உதவுது. விவசாய வேலைங்க கடுமையா இருக்குறப்ப, கால் வலிக்கி மாட்டு ஈரல சாறு வெச்சிப் பூசிக்குவோம். அதே மாதிரி குழந்தைப் பெத்த பொண்ணுங்களுக்கு நல்லா தாய்ப்பால் சுரக்க ஈரல சுட்டுக் குடுப்போம். இப்புடி மாட்டுக் கறியினால பல நன்மைங்க எங்களுக்கு இருக்குதுங்க..''

அவர் சொன்னது இதுவரை தாங்கள் கேள்விப்படாத தகவல்களாய் இருக்கவே, சந்துருவும் மற்றவர்களும் கூலி விவசாயிகளின் வாழ்க்கை யில் எந்த அளவுக்கு மாட்டுக் கறி இரண்டறக் கலந்திருக்கிறது என்பதை உணர்ந்துக் கொண்டார்கள். கொஞ்ச நேரம் அது பற்றி தங்களுக்குள் வியப்புடன் பேசினார்கள்.

அதைப் பார்த்து அனுமந்து கேட்டார் ''ஒங்க பக்கம் வூடுகள்ல எப்படி தோழர், மாட்டுக்கறி சமைப்பீங்களா?'' என்று.

அதற்கு சந்துரு சொன்னான் ''விசைத்தறி தொழிலாளர்கள்ல பெரும் பாலான சனங்க அசைவம்தான். ஆட்டுக்கறி, கோழிக்கறி செய்வாங்க. ஆனா, முக்காவாசி மாட்டுக்கறி சாப்பிடாதவங்கதான். ஏன்னா, அவுங்க தலித் அல்லாதவுங்க. இருந்தாலும், அவுங்கள்ல கொஞ்சம் பேரு இப்ப மாட்டுக்கறி ஓடம்புக்கு தெம்புன்னு தெரிஞ்சிக்கிட்டு வூட்ல சமைக்க ஆரம்பிச்சுருக்குறாங்க. இன்னும் சில ஆளுங்க கடைகள்ல மட்டும் போயி திம்பாங்க. வூட்ல செய்ய மாட்டாங்க. ஆனா, தலித் சனங்க எல்லாருமே மாட்டுக்கறி செய்வாங்க. எங்க வூட்ல அம்மா ரொம்ப நல்லா சமைப்பாங்க. அப்பா ஃபீவ் ஸ்டால்ல போயி எளங்கறியா நெறையாவே எடுத்துக்கிட்டு வருவாரு. என்று.

10

பிறகு, ஓரக்கண்ணால் பார்த்தபடி ''அப்பல்லாம் மாதேசு எங்கயிருந் தாலும் அவனுக்கு மூக்கு வேர்த்துரும். கரெக்டா எங்க வூட்டுக்கு வந்துடுவான். நாங்கெல்லாம் கிராம் கணக்குல மாட்டுக்கறி சாப்டா அவன் கிலோ கணக்குல திம்பான்.'' என்று விளையாட்டாய் சொல்லி விட்டு, சட்டென அவனை கை நீட்டி சுட்டிக்காட்டி ''இப்ப கூட பாருங்க மாட்டுக்கறியப் பத்திப் பேசுன வுடனே, சள்ளுவாய ஒழுக்கி கிட்டு ஒக்காந்து இருக்குறான்.'' என்று கேலி செய்ய அனுமந்து, கொண்டையா மட்டுமல்ல அங்கிருந்த அத்தனைப் பேரும் சிரித்தார்கள்.

ஆனால், மாதேசு அதைப் பொருட்படுத்தாமல் ஏக்கமாய் சொன்னான் ''ஹீம்... இப்பல்லாம் எங்க தோழர் அந்த மாதிரி சாப்ட முடியுது. கந்தப்பன் வூட்ல கூட அப்பப்ப செய்றாங்க. ஆனா, சந்துரு வூட்ல செய்ற மாதிரியில்ல.'' என்று.

அதற்கு கொண்டையா சொன்னார் ''தோழர் நீங்க ஒண்ணும் கவலப் பட வேண்டாம். எங்க வூட்டுக்கு வாங்க. பிரமாதமா ஒங்களுக்கு சமைச்சுத் தர்றோம்.'' என்று.

அதைக் கேட்ட மாதேசு ''ரொம்ப நன்றி தோழரே...'' என்று சொல்ல, உடனே சந்துரு ''சொல்லிட்டீங்கள்ல நாளைக்கே வந்துடுவாம் பாருங்க.'' என்று கூற, அனைவரும் சிரித்தார்கள்.

அப்போது மச்சக்காளை சொன்னார் ''எங்க தென் மாவட்டத்துப் பக்கம் தறிக்காரங்க ஆட்டுக்கறி, கோழிக்கறி வூடுகள்ல செய்வோம். ஆனா, மாட்டுக்கறி கிடையாது.'' என்று.

அதற்கு பச்சையப்பன் கூறினார் ''ஆனா, இந்த ஊருக்கு வந்து நாங்க ரெண்டு பேரும் கடைகள்ல ஃபீவ் வறுவல் சாப்புட பழகிட்டோம்.'' என்று.

இதற்கும் சிரிப்பொலி எழுந்தது.

அப்போது அனுமந்து கேட்டார் ''அப்ப, ஒங்கள்ல யாருமே சைவம் இல்லியா?'' என்று.

அதற்கு ஏழுமலை ''ஏன் இல்ல? நம்ப தோழர் ஓபுளி இருக்குறாரே...'' என்று கூறினார்.

அந்த சமயம் சிற்பி பட்டென ஒரு ரகசியத்தைப் போட்டு உடைத்தான் ''தோழரே, அப்புடியெல்லாம் ஒண்ணுமில்ல. ஒரு நாளு ஓபுளி முட்டை போண்டா தின்னு ருசி கண்டுட்டாரு...'' என்று.

அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

11

சந்துரு ஆவலாய் கேட்டான் ''இது எப்ப நடந்தது?'' என.

அதற்கு சிற்பி பதில் சொல்லும் முன்னால், ஓபுளியே முந்திக் கொண்டு கூறினான் ''அது ஒண்ணுமில்லப்பா... அன்னிக்கி நம்ப பேட்டைல இருக்குற பலகாரக் கடைக்காரன் கெரகம் புடிச்சவன் முட்டை போண்டாவையும், உருளைக்கிழங்கு போண்டாவையும் ஒரே தட்டுல போட்டு வெச்சிருந்தான். நானு தெரியாம உருளைக்கிழங்குன்னு நெனச்சி முட்டைப் போண்டாவ தின்னுட்டேன்.'' என்று சொல்ல, சட்டென எல்லோரும் சிரித்தார்கள்.

அப்போது சிற்பி '' முட்டைப் போண்டா நல்லாயிருந்துச்சா?'' என வினவ, ஓபுளி மையமாய் தலையசைத்தான்.

சிரிப்புச் சத்தம் ஓய்ந்ததும் சந்துரு கூலி விவசாய சங்கத்தினரிடம் கேட்டான். ''ஏங்க தோழர் ஒங்க மாதிகா மக்கள் தெலுங்கு பேசறவுங்க. நம்ப சிற்பி வந்து அங்க கலை நிகழ்ச்சிகள் நடத்தினா நல்லா இருக்குமா? அந்த மக்கள் அத ஏத்துக்குவாங்களா? இதுக்கு பதுலா ஆந்திர மாநில தெலுங்கு கலைக் குழுக்களை நீங்க இங்க கூப்டலாமே...'' என்று சந்தேகமாய்.

அதற்கு கொண்டையா ''தோழர் அவுங்களுக்கு தெலுகு மட்டுந்தான் தெரிஞ்சிருக்குது. தமிழ் தெரியாது. ஆனா, மாதிகா சனங்க எல்லாத்துக்கும் தமிழ் தெரியும். அதனால, இப்போதைக்கி தமிழ்லயே கலை நிகழ்ச்சிகள் இருக்கட்டும். பின்னாடி மாதிகா கூலி விவசாயிகளுக்கு மத்தியில இருந்து தமிழ், தெலுகு கலைஞர்கள உருவாக்குவோம்.'' என்று கூறி விட்டு அனுமந்துவைப் பார்த்தார். அவர் அதற்கு சரிதான் என்பது போல தலையசைத்தார்.

அப்போது இவ்வளவு நேரம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தைக் கேட்டு இளங்கோ சொன்னான் ''சந்துரு தோழர், எங்க மாணவர்கள் மத்தியில போதைப் பழக்கம் இப்ப அதிகமாயிருக்குது. அத ஒழிக்க நேரடியா அவுங்கக் கிட்ட பிரச்சாரம் பண்றத வுட ஏதாவது கலை வடிவத்துல சொன்னா நல்லாயிருக்கும்.''

''ஆமா, இளங்கோ செரியா சொன்னீங்க. அதே சமயத்துல உழைக்கிற மக்கள் மத்தியிலயும் குடிப்பழக்கம், கஞ்சா போதை ஏராளமாயிருக்குது. அதுக்கும் சேர்த்து செய்வோம்'' என்று.

அதை இளங்கோ ஏற்றுக் கொள்ள சந்துரு, சிற்பியிடம் ''எப்ப தோழரே, கூலி விவசாயிகள் கிட்ட போகப் போறீங்க?'' என்று. அதற்கு, அவன் ''மாதேசு தறிக்கி வந்துட்டா நா நாளைக்கே கூட கெளம்பிடுவேன்.'' என்றான்.

12

அதைக் கேட்ட அவன் ''கந்தப்பன் தோழர் வூட்ல என்னையும், பொன்னியையும் தனிக் குடித்தனம் வெக்கிறதா இருக்குறாங்க. ஆனா, இன்னும் வாடகைக்கு வூடு கெடைக்கல.. அவசரம்னா சொல்லு கோகிலா அம்மா ஒனக்கு குடுத்திருக்குற ரூம்புக்கு நாங்க வந்துடறம்.'' என்றான்.

அதற்கு சந்துரு ''அப்புறம் நா எங்க திண்ணையில படுக்கட்டுமா? மறுபடியும்...'' என்றான்.

மாதேசு ''ஏம்பா சங்க ஆபீசு இருக்குதுல்ல, அதுல படுத்துக்கோ. நீயும் பொன்னி கையால சாப்ட மாதிரியிருக்கும்ல...'' என வழி சொன்னான்.

அதை அவன் ஏற்றுக் கொள்ள மாதேசு மறுநாளே தறிக்கு வரவும், சிற்பி கூலி விவசாயிகள் இடத்துக்கு செல்லவும் முடிவானது.

அப்போது சந்துரு கூலி விவசாயத் தோழர்களிடம் கேட்டான் ''இளங்கோவ எங்கப் பாத்தீங்க?'' என்று

அதற்கு அனுமந்து ''தோழர் படிக்கிற கல்லூரிக்கு இன்னிக்கி மத்தி யானம் போயிருந்தோம். அவரும் பேசிக்கிட்டே எங்க கூட வந்துட் டாரு.'' என்று கூற, இளங்கோ அதை ஆமோதித்து தலையசைத்தான்.

அப்போது பச்சையப்பன் நினைவுப்படுத்தினார். ''செரி தோழர்களே, நாம்ப கொஞ்ச நேரத்துக்கு முன்ன டீக் குடிக்க மந்தைக்கி போலான்னு முடிவு பண்ணமே அத இப்ப நடைமுறைப் படுத்திடலாமே...''என்று.

அதற்கும் ஆரவாரமான ஆதரவு கிட்ட சங்க அலுவலகத்தில் இருந்து அனைவரும் மந்தையை நோக்கி நடந்தார்கள்.

அங்குதான் நெட்டக்கால் நடேசனும், மாதையனும் ஒரு சதி வலையை ஊரார் முன்னிலையில் பின்னி வைத்திருந்தார்கள்.

அத்தியாயம்

15

1

மந்தையில் பெரும் கூட்டம் கூடியிருந்தது. சற்று தொலைவில் இருந்துப் பார்க்க ஏராளமாய் மனிதத் தலைகள் தெரிந்தன. என்ன பிரச்னை? எதற்காக இத்தனைப் பேர் கூடியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை? சூழ்நிலையில் பதட்டமும், பரபரப்பும் நிலவிக் கிடந்தது. சந்துருவும் மற்ற தோழர்களும் ஏதுமறியாமல் கொஞ்சம் நடையை எட்டிப் போட்டார்கள். உள்ளூர்காரர்களுக்குள் சண்டை வந்து விட்டதா? அல்லது வெளியூர் தொழிலாளர்கள் யாரேனும் தங்களுக்குள் அடித்துக் கொள்கிறார்களா?

அதை வேடிக்கைப் பார்க்கத் தான் இத்தனை கூட்டமோ?

கூட்டத்தின் நடுவே கந்தப்பன் தோழர் தெரிந்தார். அவரது பக்கத்தில் மனைவியும், பொன்னியும் நிற்பதைக் காண முடிந்தது. பொன்னி இடுப்பில் சந்தைக் கூடை வைத்திருந்தாள். அவர்கள் யாரிடமோ பெருங்குரலில் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு

வேளை பள்ளிப்பாளையம் முதலாளிகள் தான் திரும்ப வந்து விட்டார்களோ? என்று தோன்றியது.

இந்த எண்ணம் வந்தவுடன் சந்துரு ஓட்டமாய் தன் நடையை துரிதப்படுத்தினான். அவனுக்கு ஈடு கொடுத்து மற்றவர்கள் விரைந் தார்கள். சடசடவென சந்துரு கூட்டத்தை நெருங்கி அங்கிருந்தவர் களை தள்ளாத குறையாய் விலக்கிக் கொண்டு சடுதியில் மையத்துக்கு வந்து விட்டான்.

அங்கே...

சரிதாவும் அவள் தோழிகளும் கண் கலங்க நின்றிருந்தார்கள். அவர்களைச் சுற்றித்தான் அத்தனைக் கூட்டமும் நின்றிருந்தது. அந்த சூழ்நிலை தோழர்கள் மனதில் சட்டென ஒரு திகிலை ஏற்படுத்தியது. சரிதா, சந்துருவைப் பார்த்ததும் பெருகி வந்த கண்ணீரை துடைத்துக் கொண்டாள். அவளுடன் இருந்த சாந்தி, வனிதா, சுந்தரி போன்ற வர்களும் தங்கள் பதட்டத்தை தணித்துக் கொள்ளும் முகபாவனைக் காட்டினார்கள். போன உயிர் திரும்ப வந்தது போலிருந்தது.

அவர்கள் சற்று நேரத்துக்கு முன் தங்களுக்குள் ஏதேதோ யோசித்து உற்சாகமாய் பேசிக் கொண்டு வந்தார்கள். புதுமண தம்பதிகளான மாதேசையும், பொன்னியையும் தங்கள் குடிசைப் பகுதிக்கு நாளை வரச் சொல்ல வேண்டும். அவர்களுக்கு தங்கள் கையால் விருந்து செய்து பரிமாற வேண்டும். ஒரு நாள் முழுக்க அந்த இளஞ்சோடிகளை கேலி, கிண்டல் செய்ய வேண்டும்.

2

அவர்களின் திக்குமுக்காட்டதைக் கண்டு ரசிக்க வேண்டும் என வண்ணக் கனவுகளோடு வந்திருந்தார்கள். ஏனெனில், தாங்கள் அடையாத பேறு இந்த திருமண வாழ்க்கை. சுந்தரி தவிர்த்த ஓரிரு பாலியல் தொழிலாளிகளுக்கு கணவர்களாய் வந்து வாய்த்தவர்கள் கூட முறையாய் வந்தவர்கள் அல்ல, மேலும், சிலர் தொழில் முறை புரோக்கர்கள் தான். இவர்கள் தங்களை என்றும் மனைவியாய் பார்த்ததில்லை.

எனவேதான், தமக்கு கிட்டாத நல்ல வாழ்க்கை அடுத்தவர்களுக்கு கிட்டியதை உளம் மகிழ்ந்துக் கொண்டாட வேண்டும் என முடிவு

செய்து வந்திருந்தார்கள். ஆனால், பேட்டை கிராமத்துக்குள் நுழைந்தவுடனே இப்படி நடக்கும் என்று அவர்கள் கொஞ்சமும் நினைக்கவில்லை. 'ஏண்டா வந்தோம்...' என நினைக்குமளவுக்கு எத்தனை ஏச்சுக்கள், பேச்சுக்கள், அவமானம்.

பாலியல் தொழிலாளிகளுக்கு மனது என்ற ஒன்றே இருக்காது என்று எண்ணி விட்டார்கள் போலும் இந்த ஊர்காரர்கள். பேட்டையில் கால் வைத்ததுமே இரையைப் பார்த்த நரிகளைப் போல சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

சந்துரு, சரிதாவுக்கு மிக நெருக்கமாய் போய் நின்று கொண்டு ''என்னாச்சி, ஏன் அழறே?'' என்று குழப்பமாய் கேட்டான்.

அவள் பதில் சொல்லும் முன்பாக கந்தப்பன் தோழர் முன் வந்து ''இந்த அநியாத்த கேளுப்பா, இவுங்கள ஊருக்குள்ற வரக் கூடாதுன்னு சொல்றாங்க.'' என்று சத்தமாய் கூறினார்.

அதற்கு சந்துரு ''அப்புடி எவஞ் சொன்னான்?'' என்று ஆத்திரமாய் கேட்டான்.

கந்தப்பன் ''இவுங்கதான்...'' என்று யாரையோ கை நீட்டிக் காட்ட, அங்கே நடேசனும், மாதையனும் கணிசமாய் உள்ளூர்காரர்களும் இருந்தார்கள்.

''ஏ... ஏன் வரக்கூடாதாம்? என்று சந்துரு தன் பார்வையை முதலாளிகள் மீது வைத்துக் கொண்டு வினாவை மட்டும் கந்தப்பனிடம் தொடுத்தான்.

அவர் சற்று தடுமாறினார் ''அ... அது வந்து தம்பி...'' என்று இழுத்தார்.

சந்துரு சட்டெனப் பார்வையை கந்தப்பன் மீது திருப்பினான்.

''என்ன தோழர் ஏம் மென்னு முழுங்குறீங்க. பட்டுன்னு சொல்லுங்க.'' என அதட்டலாய் கேட்டான்.

அந்த தொனி ஒரு கர்ஜனைப் போல வெளிப்பட்டது.

3

அதைக் கேட்ட முதலாளிகள் மிரண்டார்கள். ஏன், கந்தப்பனையும் மற்ற தோழர்களையும் கூட அது திடுக்கிட வைத்தது.

பிறகு, கந்தப்பன் சுதாரித்துக் கொண்டு பதில் சொன்னார் ''இவுங் கல்லாம் ஒடம்ப வித்துப் பொழைக்கிறாங்களாம், அதனால...'' என்று முடிக்கும் முன்பாகவே அவன் கை நீட்டி அவர் பேசுவதை தடுத்தான்.

சந்துருவுக்கும் மற்ற தோழர்களுக்கும் அப்பட்டமாய் விசயம் இன்னதென விளங்கி விட்டது. சரியான தருணத்தில் தன் நயவஞ்சக வேலையை காட்டி விட்டார்கள் எதிரிகள். ஆனால், நேரடியாய் விசைத்தறி தொழிலாளர் சங்கத்தின் முன்னணித் தோழர்களிடம் மோதாமல் கோழைத்தனமாய் அவர்களுக்கு மன நெருக்கடி கொடுக்கும் படியாய் ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

சந்துருவின் மனதில் எழுந்த சீற்றம் இன்னும் அதிகமானது. ஆனால், அவசரப்படாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடேசனிடம் கேட்டான் ''அண்ணா... சரிதாவும் மத்தவுங்களும் இந்த ஊருக்குள்ற வர்றதுனால ஒங்களுக்கு என்னா பிரச்னை? நீங்க திங்கிற சோத்துல அவுங்க மண்ணள்ளிக் கீது போட்டுட்டாங்களா? அவுங்க ஒண்ணும் இங்க புதுசா வர்லியே?'' என்று.

அதற்கு அவன் உடனே பதில் சொல்லாமல் தன்னைச் சுற்றியிருந்த ஊர்காரர்களை நோட்டம் விட்டான். அது, சந்துருவின் கேள்விக்கு விடையளிக்க அவர்களை தூண்டி விடும் விதமாய் அமைந்தது. ஆனாலும், யாரும் வாயைத் திறக்கவில்லை. மாறாய், பூனைக்கு மணிக்கட்ட தவிக்கும் எலிகளைப் போல கள்ள மௌனம் சாதித்தார்கள்.

எனவே, நடேசன் தன் கூட்டாளி மாதையனை ஒரு முறைப் பார்த்து விட்டு தனக்குள் குருட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சத்தமாய் ஆரம்பித்தான்.

''இங்கப் பாருப்பா சந்துரு, இது சம்சாரிங்க பொழைக்கிற ஊரு, இந்த அவுசாரிங்க ஊருக்குள்ற வந்தா எங்க குடும்பம் கெட்டுப் போவும். அதுவுமில்லாம இங்க நெறையா வயசுப் பசங்க இருக்குறாங்க. அவுங்களும் கூட நாசமாப் போயிடுவாங்க. அதனால தான் சொன்னோம் இவுங்க யாரும் இங்க வரக் கூடாது. இது வரிக்கிம் வந்தது போதும்.''

என்று சொல்லி விட்டு மீண்டும் மாதையனைப் பார்த்தான். அவன் சரிதான் என்பது போல தலையை அசைத்தான்.

4

அதைக் கேட்டதும் சே, என்ன கேவலமான பிறவிகள் இவர்கள் என்று தோன்றியது சந்துருவுக்கு. அவன் பதில் சொல்லும் முன்பாக பொன்னி வெடித்தாள்.

''ஆமா, இவுங்க இங்க வர்றதனால தான் இந்த ஊரு கெட்டுப் போவுது.. இப்ப மட்டும் மணக்குது...'' என்று.

அவள் இதைச் சொல்லி விட்டு முதலாளிகளையும் அவர்கள் பின்னால் நின்றிருந்த ஊராரையும் எரித்து விடுவதுப் போல பார்த்தாள்.

அவளுக்குத் தோதாய் உடனே கந்தப்பன் மனைவி கேட்டார் ''அய்யா, நல்லவுங்களே இப்ப ஊருக்குள்ற வர வேணான்னு சொல்ற இந்த பொம்பளைங்கள தேடிக்கிட்டு நீங்க ஆத்தாங்கரைக்கிப் போறீங்களே, அது எதுக்கு? அவுங்க ஒங்கள என்னா வெத்தலப் பாக்கு வெச்சா அங்கப் கூப்டறாங்க. அப்ப மட்டும் ஒங்க குடும்பம் கெட்டுப் போவலையா? அவுங்க இங்க வந்தா மட்டுந்தான் கெட்டுப் போவுமா?'' என நறுக்கென்று.

இந்த கேள்விக்கு நடேசனோ, மாதையனோ, ஊர்க்காரர்களோ யாரும் பதில் சொல்வதற்கு வாயை திறக்கவில்லை. திருடனுக்கு தேள் கொட்டியதைப் போல பேந்தப் பேந்த முழித்தார்கள்.

அந்த நேரம் கந்தப்பன் மனைவி சொன்னதைக் கேட்டவளாய் கூட்டத்தை விலக்கிக் கொண்டு சாப்பாட்டுக் கடை அங்கம்மாள் மையத்துக்கு வந்தாள். சமையல் கட்டிலிருந்து விசயத்தைக் கேள்விப் பட்டு வந்திருப்பாள் போலும், அவள் உடம்பிலிருந்து அடுப்புப் புகை வாடை வந்தது.

அவள் சீற்றமாய் கந்தப்பன் மனைவியிடம் ''நாக்கப் புடுங்கற மாதிரி நல்லா கேளுங்க அப்பவாவது இவுனுங்களுக்கு புத்தி வருதான்னு பாப்பம்.'' என்றவள் முதலாளிகளைப் பார்த்து த்தூ என்று துப்பினாள்.

அப்போது நிறைந்துக் காணப்பட்ட ஊர் கூட்டத்தின் பின்னாலிருந்து ஒரு பெண்ணின் குரல் எல்லோருக்கும் கேட்கும் படி ஒலித்தது.

''இந்த ஊர்ல வயசுப்பசங்கல்லாம் நல்லவுங்களாத்தான் இருக்குறாங்க. கல்யாணமாயி நாலஞ்சுக் கொழைந்தைக் குட்டிப் பெத்த அரைக்

கெழவனுங்க, முக்காக் கெழவனுங்கதான் அக்கம் பக்கத்துல எவ சிக்குவான்னு நோட்டம் வுடுறதும், ஆத்தாங்கரைக்குப் போறதுமா திரியறானுங்க.'' என்று.

சட்டென சில பெண்களின் கேலி சிரிப்பு எழுந்தது.

5

ஊர் ஆண்களுக்கு அவமானமாகி விட்டது.

நடேசன் முகம் சிவக்க கத்தினான்.

''ஏய், யாரது? சபையில ஆம்பளைங்கள கேவலமாப் பேசுறது? நாக்க இழுத்து வெச்சி அறுத்துருவம் பாத்துக்க.'' என்று.

அப்போது அந்த குரலை அடையாளம் தெரிந்துக் கொண்ட இளங்கோ கூட்டத்தை விலக்கிக் கொண்டு போய் அந்த பெண்ணை சபைக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினான்.

அது வேறு யாருமல்ல, அவன் தாயார் தான்.

அவரைப் பார்த்து அதுவரை சரிதாவுக்கும் அவள் தோழிகளுக்கும் ஆதரவாய் பேசிக் கொண்டிருந்த கந்தப்பன் மனைவியும், பொன்னியும், அங்கம்மாளும் உற்சாகமடைந்தார்கள். தோழர்களின் முகங்கள் பிரகாசமடைந்தன.

அந்த சமயம் இளங்கோ நடேசனிடம் நேருக்கு நேர் நின்று கேட்டான் ''யோவ், என்னமோ சொன்னியே... நாக்க இழுத்து வெச்சி அறுத்துருவன்னு. எங்க செய் பாப்பம்.'' என்று.

உடனே நடேசன் ''எளங்கோ... பேசுனது ஒங்கம்மான்னு தெரியாம வார்த்தைய வுட்டுட்டேன். ஊர் விவகாரத்துல ஒங்கம்மாவ மூக்க நொளைக்க வேணான்னு சொல்லு. நீயும் சின்னப்பையன் இதுல எல்லாம் தலையிடாதே.'' என்று தயவாய் சொன்னான்.

ஆனால், அது போலியானது என்பதை சந்துருவும் மற்ற தோழர்களும் நன்றாய் புரிந்துக் கொண்டார்கள். எனவே, தங்களுக்குள் குசுகுசுத்தார்கள்.

''என்னப்பா, நெட்டக்காலன் பம்முறான்...'' என்றான் சிற்பி.

''அயோக்கிய ராசுகோலு...'' என்று பல்லைக் கடித்தான் மாதேசு.

அப்போது மச்சக்காளை ஆத்திரமாய் முணுமுணுத்தார் ''இவன செமத்தியா ஒதைக்கணும்பா.'' என்று.

பச்சயப்பன் அதை தலையசைத்து ஆமோதித்தார்.

அப்போது ஏழுமலை கேலியாய் நடேசனைப் பார்த்துக் கேட்டார் ''என்னா மொதலாளி திடீர்னு எங்க தோழர் மேல பாசத்தைக் காட்றீங்க? நீங்க அவருக்கும், அவரு குடும்பத்துக்கும் செஞ்ச அநியாயம் மறந்து போயிருக்கும்னா?'' என்று.

6

ஓபுளி அதை விடாமல் தொடர்ந்தான். மாதேசிடம் சாடையாய் சொன்னான் ''என்னா இவனே எலி அம்மணதோடு ஓடுது?'' என்று.

அதற்கு அவன் ''அது எலி இல்ல தோழரே, ரெண்டு காலு பெருச்சாளி.'' என சொல்ல, அந்த உவமானத்தை சந்துருவும், தோழர்களும் மட்டுமல்ல, சரிதாவும் அவள் தோழிகளும் கூட ரசித்து குறுநகைப் புரிந்தார்கள்.

இளங்கோ நடேசனின் நைச்சியத்தை வெறுப்பாய் பார்த்து விட்டுச் சொன்னான் '' யோவ் நீயும், மாதையனுந்தான் இந்த ஊருக்கு கங்காணியா? நீங்க யாரை மட்டும் ஊருக்குள்ற வரக் கூடாதுன்னு சொன்னா அத நாங்க ஏத்துக்கணுமா? '' என்று.

அப்போது நடேசனுக்கு ஆதரவாய் வந்த மாதையன் முதன் முறையாய் வாய் திறந்தான். சூத்திரதாரி என்பதால் அவன் வார்த்தைக்கு தோழர்களும் மற்றவர்களும் காத்திருந்தார்கள்.

''எளங்கோ, இந்த கேடு கெட்டப் பொம்பளைங்க நம்ப ஊருக்குள்ற வரக் கூடாதுன்னு பெரியவுங்கள்லாம் ஒண்ணா சேந்து ஊர் கூட்டம் போட்டுத் தான் முடிவுப் பண்ணம். ஏதோ நடேசனும், நானும் மட்டும் இத செய்யல...'' என்றான்.

பிறகு, அவன் ஊராரைப் பார்த்து சத்தமாய் கூறினான் ''என்னா, எல்லாரும் வாயடைச்சிப் போயி நிக்கிறீங்க. சொல்லுங்கப்பா...'' என்று.

அதைக் கேட்டதும் ஊர் பெரிய மனிதர் ஒருவர் தெளிவாய் சொன்னார் ''ஆமாப்பா மாதையன் சொன்னது நெசந்தான். நேத்து ராத்திரி ஊர் கூட்டம் நடந்துச்சி. அதுல தான் இந்த மாதிரி முடிவுப் பண்ணம்.'' என்று.

அதைக் கேட்டதும் சந்துரு திடுக்கிட்டான்.

என்னது, ஊர் கூட்டம் நடந்ததா? அப்படியென்றால் தேவராசும் அதில், கலந்துக் கொண்டிருக்க வேண்டுமே?

அவர் ஏன் இந்த விசயத்தை முன் கூட்டியே தங்களிடம் தெரிவிக்க வில்லை. எங்கே அவர்? அவன் கண்கள் கூட்டத்தில் அவரைத் தேடின. அதை தெரிந்துக் கொண்ட இளங்கோ சொன்னான்.

''அப்பா இங்கயில்ல தோழர். அவுரு நேத்துக் காலைலயே ஒரு வேலையா ஈரோடு போய்ட்டாரு...''

சந்துரு யோசித்தான். திடீரென்று அவருக்கு தொலை தூரத்தில் இருக்கும் ஈரோட்டில் என்ன வேலை?

7

ஒருவேளை இந்த உள்ளூர்காரர்களுக்கு அவரும் உடந்தையோ? இது மாதிரி ஊரார் கூட்டம் நடத்துவது தெரிந்து திட்டமிட்டே அவர் வெளியூர் போய் விட்டாரோ? அல்லது அவரது பயணம் இயல்பாய்த்தான் நடந்ததோ? அவனுக்குள் குழப்பம் மேலெழுந்தது. அதற்கு காரணம் அவர் ஒரு முதலாளி என்பதே.

அந்த சமயத்தில் இளங்கோ கூறினான் ''தோழர், அப்பா ஊர்ல இல்லன்னு நல்லா தெரிஞ்சுக்கிட்டுதான் இந்த அயோக்கியனுங்க ஊர் கூட்டம்ங்கிற பேரால சதிப் பண்ணி இருக்குறாங்க. அப்பா இருந்திருந்தா நிச்சயமா இதுக்கு ஒத்துக்கிட்டு இருக்க மாட்டாரு.'' என்று. அது சற்று ஆறுதலாய் சந்துருவுக்கு தோன்றியது.

ஆயினும், சரிதாவும் அவள் தோழிகளும் ஊருக்குள் வரக் கூடாதென நடேசனும், மாதையனும் சங்கத்தின் மேலிருந்த பகையாலும், தேவராசிடனுனான வெறுப்பாலும் திட்டமிட்டு ஊர் மக்களை திசை திருப்பி விட்டார்கள். இந்த முயற்சியில் அவர்கள் வெல்லக் கூடாது? அப்படி நடந்தால் இதே போல் சங்கத்தின் மற்ற நடவடிக்கைகளுக்கும் தொல்லை கொடுப்பார்கள்.

இதை எப்படி சமாளிப்பது? என்றுதான் அவனுக்கு தெரிய வில்லை.

சட்டென ஒரு யோசனை தோன்றியது.

இவர்களிடம் நாம் மோதுவதை விட உள்ளூர்காரர்களுக்குள் மோதலை ஏற்படுத்துவதே புத்திசாலித்தனம். இப்போது நாம் பேசினால், 'என்னடா வந்தேறி. எங்கள் ஊர் கூடி எடுத்த முடிவில் தலையிட நீ யார்?' என்று கேட்பார்கள். அதுவுமில்லாமல் இது கூலி உயர்வுப் பிரச்னையோ, போனஸ் பிரச்னையோ அல்ல. ஒரு பண்பாட்டுப் பிரச்னை. இதுவரை நிலவி வரும் பிற்போக்குப் பண்பாட்டுச் சீரழிவை ஊர் மக்களிடம் இருந்து கலைய நிதானம் தேவை.

அதே சமயம் முதன் முறையாய் இந்த ஊருக்கு தோழர்கள் அமைப்புக் கட்டும் நோக்கத்தில் வந்த போது ஒரு விசயத்தை வலியுறுத்திச் சொன்னது நினைவுக்கு வந்தது. உள்ளூரில் ஆதரவு சக்திகளை வென்றெடுக்காமல் விசைத்தறி தொழிலாளர் சங்கத்தை வெளிப்படை யாய் அறிவிக்க கூடாது என்பதே அது. அப்படித்தான் சிறு விசைத்தறி முதலாளிகளின் போராட்டத்தை ஆதரித்து அதை வெற்றியடையச் செய்ததன் மூலமாய் உள்ளூரில் ஒரு சிலரை வென்றெடுத்து அதன் பிறகே சங்கத்தை அரங்கத்துக்கு கொண்டு வர முடிந்தது

ஆக, இந்த நேரத்தில் சங்கத்துக்கு பலம் உள்ளூர்காரர்கள் தான்.

8

சந்துருவுக்கு இந்த எண்ணம் வந்ததும் முதலில் சங்கத்துக்கு ஆதரவான சக்திகளை ஒன்றிணைக்க முடிவெடுத்தான். ஊர் மக்கள் மத்தியில் கோகிலா அம்மாள் இல்லை என்பதை உணர்ந்து ஓபுளியைக் கூப்பிட்டு அந்த பெண்மணியை இங்கே அழைத்து வரச் சொன்னான்..

அவன் நகர்ந்ததும் இளங்கோவிடம் கேட்டான்.

''செரி தோழர் ஒங்கப்பாதான் ஊர்ல இல்ல, நீங்க இங்க தானே இருந்தீங்க. இந்த பெரிய மனுசனுங்க ஒங்கள ஊர் கூட்டத்துக்கு ஏன் கூப்டல?''

உடனே அவனும் ''ஆமா, என்ன ஏன் நீங்க கூப்டல?'' என்று நடேசனையும், மாதையனையும் பார்த்து வினவினான்.

அதற்கு நடேசன் திருதிருவென விழிக்க, அது மிகவும் பரிதாபகரமாய் இருந்தது. அதைப் பார்த்த மாதையன் இனி இவனை நம்பி புண்ணியமில்லை என்று முடிவெடுத்தான் நடேசனுக்குப் பதிலாய் மறுபடியும் தானே வாயை திறந்தான்.

''தம்பி, நீ கல்யாணம் ஆகாத அறியாப் பையன். பெரியவுங்கள வெச்சித்தான் ஊர் கூட்டத்தை நடத்த முடியும். விவரமில்லாத சின்னப் பசங்கள வெச்சிக்கிட்டு என்னா செய்ய முடியும். இதென்ன சொப்பு வெச்சி வெளையாடறதா?''

''செரி, ஒங்கப் பேச்சுக்கே வருவம். எங்கூட்ல ஆயா இருந்தாங்கல்ல அவுங்க பெரிய மனுசிதான. ஏன் அவுங்கள கூட கூப்டல?''

''பொம்பளைங்கள வெச்சி ஊர் கூட்டத்த நடத்துறது நம்ப ஊரு வழக்கமில்ல.''

''அதெல்லாம் சும்மா சால்சாப்பு. ஒங்க சதி திட்டம் வெளிய தெரிஞ்சுருமுன்னு எங்கூட்ல யாரையும் நீங்க கூப்டல.''

''தம்பி இதுல சால்சாப்பெல்லாம் ஒண்ணும் கெடையாது. ஒங்கப்பாவோட கூட்டாளியுந்தானே கூட்டத்துக்கு வந்திருந்தாரு. நாங்க நெனச்சிருந்தா அவரையுந்தான கூப்டாம வுட்றுப்போம்.''

என்று மாதையன் கூட்டத்தில் ஒரு ஓரமாய் நின்றிருந்த சிறு விசைத்தறி முதலாளிகள் சங்கத்தின் செயலாளர் கருணாகரனை சுட்டிக் காட்டிச் சொன்ன போது சந்துருவுக்கும் தோழர்களுக்கும் ஒரு சேர அதிர்ச்சியாய் இருந்தது.

என்ன இது கொடுமை?

10

பெரிய முதலாளி மாதையனும், நடேசனும் விரித்த சதி வலையில் அவரும் விழுந்து விட்டாரே...

தோழர்கள் தாங்கள் நின்ற இடத்திலிருந்தே பார்வையால் அவரை சுட்டெரித்தார்கள்.

அதை தாங்க முடியாமல் கருணாகரன் தலை குனிந்தார்.

ஆனால், இளங்கோ சடசடவென அவரை நோக்கி முன்னேறிச் சென்றான். அவரை முகத்துக்கு நேராய் நின்று ஒரு புழுவைப் பார்த்தான். .

''நீங்க செஞ்சது செரியா சித்தப்பா? இந்த பொறுக்கி நாய்ங்க பண்ற அநியாயத்துக்கு நீங்களுமா தொணைப் போறீங்க?'' என்று கேட்டான்.

தேவராசின் உடன்பிறந்தவர் அல்ல கருணாகரன். ஆயினும், பேட்டை கிராமத்தில் உள்ள ஓரிருவரைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள், ஏதாவது ஒரு வகையில் உறவுக்காரர்கள். எனவே, அவர்கள் தங்களுக்குள் உறவு முறை வைத்து அழைத்துக் கொள்வதே ஊர் வழக்கம்.

இளங்கோவின் கேள்விக்கு பதில் சொல்ல இயலாமல் கருணாகரன் திணறினார்.

அப்போது இளங்கோவின் தாயார் கருணாகரனை நெருங்கி வந்தார் ''என்னா கொழுந்தனாரே, நீங்க போயி அவுங்கப் பக்கம் நிக்கிறீங்களே... என்னூட்டுக்காரரு ஒங்க மேல எவ்வளவு நம்பிக்கை வெச்சிருக்குறாரு. அவுருக்குப் போயி துரோகம் பண்றீங்களே, செரி, அதப்பத்தி அப்புறம் பேசுவோம். அந்த பொட்டப் புள்ளைங்க இந்த ஊருக்குள்ற வர்றதுனால ஒங்களுக்குமா பிரச்னை?'' என்று சூடாய் வினவினார்.

அதற்கு அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை சந்துருவும் மற்ற தோழர்களும் கூர்ந்துப் பார்த்தார்கள்.

ஏன், நடேசனும், மாதையனும் ஊர்காரர்களும் கூட அதே மனநிலை யில் தான் இருந்தார்கள்.

அப்போது கருணாகரன் தன்னிடம் கேள்விக் கேட்ட இளங்கோவின் தாயாருக்கு மட்டுமல்ல அங்கு நின்றிருந்த கூட்டம் அத்தனைக்கும் ஒட்டு மொத்தமாய் பதில் கூறினார்.

11

''என்னா அண்ணி, ஒரு நல்ல குடும்பத்துப் பொம்பளையா இருந்துக்கிட்டு நீங்களே இப்புடிக் கேக்குறீங்க? இந்த அவுசாரிங்கள ஊருக்குள்ற வுட்டா அக்கம் பக்கத்து ஊர்காரங்க நம்பளப் பத்தி என்ன

நெனைப்பாங்க. என்னப்பா, ஒங்க ஊர்ல குடும்ப பொம்பளையும், அவுசாரியும் ஒண்ணா திரியறாங்க. எவ எப்புடின்னு தெரியா மாட்டீங்குது அப்புடீன்னு கேக்க மாட்டாங்க. நாளைக்கி நம்பூருக்கு அவுங்க யாராவது நல்லது கெட்டதுக்கு வருவாங்களா? இல்ல, நம்ப குடும்பத்துல கல்யாணத்துக்குப் பொண்ணு குடுத்து வாங்குறதுன்னு சம்மந்தான் வெச்சிக்குவாங்களா? சொல்லுங்க பாப்பம்.''

அவர் வாய் மூடாமல் சொல்லி முடித்தார். அவரது பேச்சு இளங்கோவின் தாயாரை மட்டுமல்ல, சாப்பாட்டுக் கடை அங்கம்மாள் போன்ற ஒரு சில நல்ல குணம் கொண்ட மற்ற உள்ளூர் பெண்களையும் கூட திகைக்க வைத்தது.

இதுதான் சாக்கு என்று மாதையன் எகிறினான் ''வெளியூர்ல இருந்து நம்பூருக்குப் பஞ்சம் பொழைக்க வந்த தறிக்கார்ரு சங்கத்து ஆளுங்க இன்னிக்கி இங்க இருப்பாங்க. அவுங்களுக்கு தோதுப்படலன்னா இந்த ஊரவுட்டு அடுத்த ஊருக்கு துண்டை ஒதறி தோள்ல போட்டுக் கிட்டு போய்க்கிட்டே இருப்பாங்க. நாம்ப அப்புடியா? தலமுறை தலமுறையா இந்த ஊர்ல வாழ்றோம். நமக்குன்னு ஒரு கட்டுப்பாடு வேணாம்?'' என்று அப்பட்டமாய் ஊர்காரர்களையும், விசைத்தறி தொழிலாளர்களையும் பிரித்தாளும் விதமாய் பேசி தன் வர்க்க நலனைக் காட்டிக் கொண்டான்.

அப்போது சந்துரு அவனிடம் கேட்டான் ''அண்ணா, நாங்க வெளியூர்காரங்க தான். உள்ளூர்கார்ரு நீங்க கொஞ்ச நாளைக்கு முன்ன கூலிப் பிரச்னைக்காவ நடந்த போராட்டத்துல இதே ஊரச் சேந்த சின்ன மொதலாளிங்களுக்கு எதுரா என்னன்ன பண்ணீங்க. நடேசன தூண்டி வுட்டு தேவராசு அண்ணனோட பொண்டாடிய அடிக்க வெச்சீங்க. இளங்கோவ போலீஸ்ல சொல்லி உள்ற தூக்கி வெச்சீங்க. வெளியூர் காரங்க நாங்க மட்டும் சப்போட் பண்ணலன்னா அந்த குடும்பத்தையே நடுத்தெருவுக்கு கொண்டாந்து இருப்பீங்க. அப்ப மட்டும் எங்க போச்சு ஒங்க உள்ளூர் பாசம்? இப்பத்தான் பொத்துக்கிட்டு வருதோ?'' என்று.

அதைக் கேட்ட மாதையன் ஒன்றும் பேச முடியாமல் நிற்க, அப்போது நடேசன் அவனுக்கு ஆதரவாய் வந்தான்.

''இங்கப் பாருப்பா, அது வேற, இது வேற. இப்ப நடக்குறது எங்க ஊர் கௌரவப் பிரச்னை. இதுல நீயி தலையிடாதே.''

12

அந்த நேரத்தில் ஏற்கனவே ஓபுளி கூட்டி வந்திருந்த கோகிலா அம்மாள் கூட்டத்தில் நின்று நடப்பதை கவனித்துக் கொண்டிருந்தார். அவர் அவனிடம் வெடுக்கென கேட்டார்.

''ஏ நடேசா, இந்த ஊரு ஆம்பளங்க எல்லாரும் யோக்யமா? எம் புருசன் கீழ வுழுந்து தலையில அடிபட்டு அரைப் பைத்தியமானப் புறம் எத்தினி ஆம்புளைங்க எனக்கு ஆறுதல் சொல்ற மாதிரி நடிச்சி என்ன படுக்கைக்கு கூப்டிருப்பீங்க. அதெல்லாம் ஒங்களுக்கு கௌவுரமா? சொல்லுங்க பாப்பம்.''

அவருக்கு ஆதரவாய் வந்த சாப்பாட்டுக் கடை அங்கம்மாள் ''எம் புருசன் செத்த நாலாவது நாளே ராத்திரியில தலைல முக்காடு போட்டுக் கிட்டு வந்து என்னூட்டுக் கதவ தட்டாத ஆம்புளைங்க இந்த ஊர்ல எவனாவது இருக்குறானுங்களா? பெருசா கௌரவத்தப் பத்திப் பேச வந்துட்டாங்க பொறம்போக்கு நாய்ங்க...'' என்று மறுபடியும் ஊராரைக் காரித் துப்பினாள்

அவர்கள் இருவரது பேச்சுக்கும் ஊரிலுள்ள ஆண்கள் யாராலும் மறுபேச்சுப் பேச இயலவில்லை. எல்லோரது தலைகளும் பூமியை நோக்கி நட்டுக் கொண்டன. ஆனால், அவர்களது அயோக்கியத்தனம் ஒரு பொருட்டல்ல என்பதைப் போல மாதையன் மட்டும் தன் இனத்துக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்தான். ''இங்கப் பாருங்க ஊருன்னு இருந்தா அதுல சாக்கடைன்னு ஒண்ணு இருக்கும். எல்லா எடத்துலயும் இப்புடிப்பட்ட ஆம்புளைங்க இருக்கத்தான் செய்யுறாங்க. அதுக்காவ என்னாப் பண்ண முடியும்?'' என்றான்.

அதைக் கேட்டு அங்கம்மாள் ஆத்திரமாய் வெடித்தாள்

''ஆமாண்டா ஒங்க கௌரவுமல்லா பொம்பளைங்க ...னத்துல தாண்டா இருக்குது. ஆம்புள எவக்கிட்ட போனாலும் ஒங்களுக்குத் தப்பில்ல.''

உடனே கோகிலா அம்மாள் ''நல்லா கேட்டடீ அங்கம்மா, நல்ல சாதி ஆம்புளைங்களா இருந்தா இதே மந்தையில மரத்துல தூக்குப் போட்டுத் தொங்கணும்.'' என்றார். அதற்கு அங்கம்மா ''அட நீ வேறக்கா, எவனாவது வாய தொறக்கரானான்னுப் பாரு. கல்லுளி மங்கனுங்க.'' என்று கேலி செய்தாள்.

அப்போது கூட்டத்தில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாய் இரண்டு ஆண் குரல்கள் எழுந்தன.

''பாருங்கய்யா.. அவுசாரிங்களுக்கு இந்த ஊரு கழுத முண்டைங்க சப்போட் பண்றத...''

13

''பின்ன... அவுசாரிங்களுக்கு அவுசாரிங்க தானே சப்போட் பண்ணுவாங்க.''

அவ்வளவுதான். கோகிலா அம்மாள், அங்கம்மாள், இளங்கோவின் தாயார் என அனைவரும் கொதித்துப் போனார்கள்.

''டேய் எவண்டாவன் செரியத்த ஆம்புளையா இருந்தா எங்க முன்னாடி இப்புடி வந்து நின்னு சொல்லுடா பாப்பம்'' என்று அங்கம்மாள் ஓங்கிக் குரல் கொடுத்தாள்.

அதைக் கேட்ட பின்பும் அவர்கள் யாரும் தாங்கள் முகத்தைக் காட்டவில்லை.

ஆனால், அங்கம்மாள் விடவில்லை. ''டேய் பொட்டப் பசங்களா... ஏண்டா பம்முறீங்க. வாங்கடா வெளிய...'' என கத்தினாள்.

அப்போது மாதையன் அவளை விரல் நீட்டி எச்சரித்தான் ''இங்க பாரு... நீ ரொம்ப ஓவராப் பேசற. ஒன் யோக்கியத இந்த ஊருக்கே தெரியும். சும்மா பத்தினி வேசம் போடாத. அப்புறம் நாறிடுவ...'' என்று.

அவனது பயமுறுத்தலைக் கண்டு அங்கம்மாள் சற்றும் அஞ்சவில்லை. புலியாய் சீறினாள்.

''என்னடா நாறிடும். எங் கடைல வேல செய்ற வெளியூர்காரப் பையன நா வெச்சிக்கிட்டு இருக்குறேன்னு சொல்லப் போறீங்க. அவ்வளவுதானே, இதெல்லாங் கேட்டு எங் காது புளிச்சிப் போச்சுடா. வேற ஏதாவது புதுசா சொல்லுங்கடா. பண்ணாடைங்களா...''

''மொதல்ல இந்த அவுசாரிய ஊர வுட்டு முடுக்கியுட்டா செரியாப் போயிரும்பா...''

''ஒனக்கு அந்த தைரியம் இருந்தா செஞ்சுப் பாருடா.''

சட்டென பேச்சுக்கள் தடித்து கண நேரத்தில் ரகளையானது. முட்டல் கள். மோதல்கள். குமுறல்கள் என சரசரவென உச்சத்துக்குப் போனது. சண்டையில் ஏது சிங்காரம் என்று பழமொழி சொல்வார்கள். அதை நிரூபணம் செய்வது போல் ஆபாசப் பேச்சுக்கள் அரங்கேறின.

அந்த நேரத்தில் தோழர்களும் சரி, சரிதாவும் சரி, என்ன நடக்குமோ என திகில் படிந்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், சந்துரு மட்டும் கலகம் பிறந்தால் தான் நியாயம் பிறக்கும் என்பதை உணர்ந்தவனாய் அமைதி காத்தான்.

மாலை நேரம் இருட்டிக் கொண்டு வந்தது.

14

மந்தையைச் சுற்றிலும் இருந்த மரங்களில் கூடடைய வந்த பறவைகள் திகிலடைந்துப் போய் கிடந்தன. நகரத்திலிருந்து பேட்டைக்கு வந்த லங்கடா பேருந்து சற்று தூரத்திலேயே பயணிகளை இறக்கி விட்டு வெறும் வண்டியாய் திரும்பிப் போனது. மந்தையில் இருந்த சிறு கடைகள் மளமளவென சாத்தப்பட்டன. இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர்கள் என்று சொல்லப்படும் தேச தலைவர்கள் சிலை வடிவில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சண்டையிட்ட இரு தரப்பும் தங்கள் நிலையில் இருந்து எந்த விட்டுக் கொடுத்தலும் இல்லாமல் வார்த்தைகளால் மோதிக் கொண்டனர். ஆனால், நியாயத்தின் தரப்பு சிறுபான்மையாய் இருந்தது. எனவே, பெரும்பான்மையான அநியாயக்காரர்கள் சண்டையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் முனைப்பில் இருந்தனர்.

கை கலப்பு உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது. மாணவர் இளங்கோவை நடேசனும், மாதையனும் ஊராருடன் சேர்ந்து தாக்க முற்பட்டனர்.

அவனுக்கு ஆதரவாய் வந்த பெண்கள் அரண் கட்டிக் கொண்டு நின்றனர். அவர்களும் தாக்கப்படும் அபாயம் ஏற்பட்டது. அதைப் பார்த்து தோழர்களும், தொழிலாளர்களும் களத்தில் இறங்கினர்.

அதைப் பார்த்த ஊரார்ின் கோபம் சந்துரு உட்பட தோழர்கள் மீது திரும்பியது. அப்போது மாதையன் தூண்டுதலாய் கத்தினான்

''இதுக்கெல்லாம் காரணம் இந்த வந்தேறி நாய்ங்கதான். மொதல்ல இவுனுங்கள ஒதச்சி ஊர வுட்டு தொறத்துனா எல்லாம் செரியாப் போயிடும்.'' என்று.

அப்போது அவனுக்கு ஆதரவாய் ஊரார் சிலர் வசைமாறிப் பொழிந்தனர்.

''டேய் ஊர வுட்டுக் கௌம்பிப் போங்கடா...''

''ஒருத்தங் கூட இனிமே இங்க இருக்க கூடாது.''

''எங்க ஊட்டுத் தறிய நாங்களே ஓட்டிக்கிறம். ஒங்கள நம்பிப் பொழைக்க வேண்டிய அவசியம் எங்களுக்கில்ல..''

''ஊர வுட்டுப் போங்க...''

''ஊர வுட்டுப் போங்க...''

15

வினாடிக்கு வினாடி கூக்குரல்கள் அதிகரிக்க, அதுவரை தைரியத்தை இழக்காமல் இருந்த தோழர்கள் அனைவரும் மிரண்டுப் போயினர்.

மாதையனும், நடேசனும் உற்சாகமடைந்து தோழர்கள் மீது தாக்குதல் நடத்த கைகளை முறுக்கிக் கொண்டு கிட்டே வந்தார்கள். இப்போது என்ன செய்வது? எதிர் தாக்குதல் நடத்துவதா? அல்லது பின் வாங்கி ஓடுவதா? சந்துருவும் மற்ற தோழர்களும் முடிவெடுக்க இயலாமல் தடுமாறினார்கள். கந்தப்பன் மனைவி, பொன்னி திகிலடைந்து என்ன நடக்குமோ? என பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதே நிலைதான் சரிதாவுக்கும் அவள் தோழிகளுக்கும் ஏற்பட்டது.

அப்போது இளங்கோவை சுற்றி நின்ற பெண்களும் திகைத்தனர். அவர்கள் அங்கிருந்து நகர வழியில்லாமல் இருந்தது.

அப்போது கூலி விவசாய சங்கத்தின் தோழர்கள் அனுமந்துவும், கொண்டையாவும் சட்டென ஒரு முடிவுக்கு வந்து விசைத்தறி தொழிற்சங்க முன்னணியரை தங்களுக்குப் பின்னால் இருத்திக் கொண்டு முன் களத்துக்கு வந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் மாதையனும், நடேசனும் தயங்கி நிற்க ஆரம்பித்தார்கள். ஏனெனில், அந்த தோழர்கள் முகத்தில் தெரிந்த ஆவேசம் அவர்களை முன்னேற விடாமல் தடுத்தது.

அனுமந்து உரத்த குரலில் பேசினார் ''யோவ் மொதலாளிங்களா... என்னய்யா நெனச்சுக்கிட்டு இருக்குறீங்க. எங்க தோழருங்க மேல நீங்க கைய வெச்சா நாங்க பாத்துக்கிட்டு சும்மா இருப்பம்னா... சாக்கிருதி.'' என்று எச்சரிக்கை செய்தார்.

அவருக்கு ஆதரவாய் வந்த கொண்டையா ''இங்க பாருங்கய்யா பேட்டைக் காரனுங்களா... தறிக்காரு சங்கத்து தோழருங்க மேல ஒரு தூசுப்பட்டாக் கூட நீங்க யாரும் இந்த ஊர வுட்டு வெளிய எங்கயும் நவர முடியாது. இப்பவே சுத்துப்பட்டுல இருக்குற எங்க கூலி விவசாய சனங்கள திரட்டி ஒங்க ஊரச் சுத்தி காவல் போட்ருவம், பாத்துக்குங்க.'' என்று உறுதியான குரலில் கூறினார்.

அதற்கு மாதையன் சொன்னான் ''இங்க பாருங்கப்பா, ஒங்களுக்கும் எங்களுக்கும் பிரச்னையில்ல, நீங்க இதுல தலையிட வேணாம்.'' என்று.

''ஏம் பிரச்னையில்ல, எங்களுக்கு சாதிப் பேரச் சொல்லி ஒங்க ஊரு டீக் கடைல கூட தனியா டம்ளர் குடுத்த ஈனப் பிறவிங்கதானேய்யா நீங்க...''

மாதையன் , நடேசன் உட்பட யாரும் வாயைத் திறக்கவில்லை. அதற்கு காரணம் உண்டு.

16

கூலி விவசாயிகள் தெலுங்கு மொழி பேசுபவர்கள். அதனால், இந்த ஊரைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் மீது நிறைய அச்சம் உண்டு. . மொழி வாரிப் பிரிவினையில் இந்தப் பகுதி ஆந்திர மாநிலத்தில் சேர்ந்ததால், தெலுங்குக் காரர்களுக்கு தாம் அந்நியமாகி விட்டதாய் தோற்றம். அவர்கள் பார்வையில் தாமும் வந்தேறிகள் அல்லவா?

இந்த முரண்பாடு தான் கூலி விவசாயிகளிடம் அவர்களை பயம் கொள்ள வைத்திருந்தது.

அனுமந்தும், கொண்டையாவும் அதோடு விட வில்லை.

''நீங்க எல்லாம் என்ன சென்மம்? பொழைக்க வந்தவுங்கக்கிட்டயா ஒங்க வீரத்தக் காட்டுவீங்க?

''அவுங்க சம்பாரிச்சிக் குடுக்கலேன்னா ஒங்களுக்கு ஏதுய்யா? தறியும், வூடும் சொத்துப் பத்தும்...''

''இத்தினிக்கும் நீங்களும் தமிழ் பேசுறவுங்கதான். அவுங்களும் தமிழ் பேசுறவுங்கதான்.''

''சுரண்டுறவன் மொழி இனம் பாக்குறதில்ல தோழரே...''

அவர்களின் சாட்டையடிப் பேச்சில் கூனிக் குறுகிப் போனார்கள் பேட்டை முதலாளிகள்.

அதே நேரம் சந்துருவும் மற்ற தோழர்களும் தொழிலாளர்களும் அக மகிழ்ந்தார்கள்.

அப்போது, சரிதா தன் தோழிகளைக் கூட்டிக் கொண்டு சபையின் முன்னால் வந்தாள். அவள் ஊராரிடம் பேசினாள்! ''அய்யா பெரியவங் களே... எங்களால தானே இப்ப பிரச்னை வந்தது. இனுமே நாங்க இங்க வர மாட்டோம். ஒங்களுக்கு பயந்துக்கிட்டு இல்ல. மதிக்காத வங்க வாசலை மிதிக்கக் கூடாதுங்குறது எங்களுக்கும் தெரியும்.'' என்று.

அப்போது சாந்தி சொன்னாள் ''எங்கள நீங்க அவுசாரின்னு சொல்றீங் களே, நாங்க என்னா மனசார ஆசப்பட்டா இந்த ஈனத் தொழிலுக்கு வந்தம். எங்க சூழ்நிலைதான்யா அப்புடி வர வெச்சிது...'' என்றாள். அப்படிச் சொல்லும் போது அவள் அழுதாள்.

17

அதைப் பார்த்த வனிதா ''ஏண்டீ அழுவறே நாம்ப என்ன இந்த மொதலாளிங்க மாதிரி அடுத்தவுங்கள சொரண்டியா திங்கறம்.'' என்று அதட்டினாள்.

அப்போதும் சாந்தி அழுகையை நிறுத்தவில்லை. ''போடீ, எதுக்குத்தான் இப்புடியொரு சென்மமா பொறந்தோம். கண்டவுங்க கிட்ட சிக்கி சீரழியறதுக்கா?'' என்று குலுங்கினாள்.

அதை பார்த்து அங்கிருந்த கந்தப்பன் மனைவி, பொன்னி, அங்கம்மாள் போன்ற பெண்களெல்லாம் கண் கலங்கினார்கள்.

சரிதா மீண்டும் ஊராரிடம் பேசினாள் ''அய்யா, எங்களுக்கு இந்த சுத்துப் பட்டுல யாரும் எந்த வேலையும் தர்றதில்ல. காடு கரைக்குப் போனா வெரட்டி வுடுறாங்க. தறிப் பேக்டரியிலயும் உள்ற வுட மாட்டீங்கிறீங்க. அப்புறம், நாங்க சோத்துக்கு என்னா பண்ண முடியும்? ஒடம்ப வித்துதான் பொழைக்க முடியும். நீங்க ஒங்க பேக்டரியில எங்களுக்கு வேல குடுங்க. நாங்க இனுமே ஆத்தாங்கரைப் பக்கமே போவ மாட்டோம். என்னா சொல்றீங்க? இத மட்டும் நீங்க செஞ்சீங்கன்னா என்னிக்கும் நாங்க மறக்க மாட்டம்.'' என்று.

அதற்கு ஊர் முதலாளி எவனும் வாயை திறக்க வில்லை.

அதைப் பார்த்த சுந்தரி பொறுமையிழந்து கத்தினாள்.

''யோவ், இது ஒங்க எடம்னுதானே எங்கள இங்க வரக் கூடாதுன்னு சொல்றீங்க. இங்க இருக்குற ஆம்புளைங்க எவனாவது இனுமே ஆத்தாங்கரைக்கி வந்துடாதீங்க. அப்புடி வந்தீங்க செருப்பு பிஞ்சிரும் பாத்துக்கங்க.'' என்று சொல்லி விட்டு ''வாங்கடீ போலாம்.'' என்று மற்ற பாலியல் பெண்களைக் கூப்பிட்டாள்.

அப்போது சரிதா ''இருடீ போலாம்.'' என்றவள் ''அம்மா இந்த ஊர்க்கார பொம்பளைங்க சிலபேரு எங்களுக்கு சப்போட் பண்ணீங்க. நாங்க பேசுனதுல ஏதாவது தப்பிருந்தா எங்கள மன்னிச்சிருங்க.'' என்று அனைவரிடமும் கை கூப்பினாள்.

அப்போது கோகிலா அம்மாள் அருகில் வந்து அவள் கையை விலக்கி விட்டார்,

''சரிதா.. நீங்கதாம்மா எங்கள மன்னிக்கனும். அன்னிக்கி போராட்டம் பண்ணி நாங்கெல்லாம் புள்ளக்குட்டியோட நடு ரோட்டுல ராத்திரின்னுப் பாக்காம மறியல் செஞ்சு ஒக்காந்தப்ப, எங்களுக் கெல்லாம் சோறு தண்ணி குடுத்து எங்க கொழந்தைங்களுக்குப் பால் வாங்கிக் குடுத்து உவகாரம் பண்ண புண்ணியவதிங்க நீங்க தாயி...'' என்று கலங்கினார்.

18

பிறகு, ''ஒங்க உப்ப தின்னுட்டு இந்த ஊருக்குள்ற வரக் கூடாதுன்னு சொல்றாங்க நன்றி கெட்டவுங்க. அத மனசுல வெச்சி ஏதாவது

நொந்துக்காதீங்க புள்ளைங்களா... ஒங்க சாபம் எங்கள தலமுறைக்கும் பாதிக்கும்.'' என்று நெகிழ்வாய் பேசினார்.

சரிதாவும் தோழிகளும் அதைக் கேட்டு பதறிப் போனார்கள்.

''அய்யோ அம்மா என்ன வார்த்தப் பேசுறீங்க?'' என ஒரு சேர சொன்னார்கள்.

சரிதா ஒரு படி மேலே போய் '' நாங்க கெட்டுப் போனாலும், அடுத்த வுங்க நல்லா இருக்கணும்னு தாம்மா என்னிக்கும் நெனப்போம்.'' என்று உணர்ச்சி மேலிட கூறினாள்.

அதைக் கேட்ட அங்கம்மா கத்தினாள் '' டேய் நடேசா, மாதையா கேட்டீங்களாடா அந்தப் புள்ளங்க சொன்னத.. ஒங்களையும் ஒரு தாயி பெத்தாளேடா...'' என்று.

அவர்கள் ஏதும் பேச முடியாமல் அவளை எரித்து விடுவது போல் பார்த்தார்கள்.

மாதையன் அதற்கு மேல் அங்கு நின்றால் மேலும் அவமானப்பட நேரும் என்பதை உணர்ந்து விடுவிடுவென நடையைக் கட்டினான். அவனைப் பார்த்து விட்டு நடேசனும் நகர்ந்து விட்டான்.

மெல்ல கூட்டம் கலைய ஊர் பெரிய மனிதர் சந்துருவிடம் வந்தார் ''தம்பி, இந்த பொண்ணுங்களால தான் ஒங்கள ஊர வுட்டுப் போகச் சொல்ல வேண்டிய அளவுக்கு நாங்க போயிட்டோம். நீங்க எங்கயும் போ வேணாம்.'' என்று சமாதானமாய் சொல்லி விட்டுப் போனார்.

தன் தோழிகளைக் கூட்டிக் கொண்டு தோழர்களிடம் வந்த சரிதா ''எங்களால ஒங்களுக்கு கஷ்டமாயிடுச்சுல்ல.'' என்று ஏதோ சொல்ல வந்தாள். ஆனால், யாரும் அவர்களை பேச விடவில்லை. எல்லோர் மனதிலும் வர்க்க கோபம் தீயாய் எரிந்தது.

சந்துரு சொன்னான் ''சரிதா இதுக்கு நாங்க பழி வாங்காம வுட மாட்டோம். நீங்க மனசு விடாதீங்க.'' என்று.

அவர்கள் தலையசைத்து விட்டுப் போக, அதன் பின்னால் தோழர்கள் சங்க அலுவலகத்துக்கு வந்து அடுத்து என்ன செய்வதென வெகு நேரம் ஆலோசித்தார்கள்.

அத்தியாயம்

16

1

அரப்புக் காட்டில் மீண்டும் ஒரு முறை பாபுவைச் சந்திக்கும் வாய்ப்பு சந்துருவுக்கு கிட்டியது. ஒரே இடத்தில் அத்தனை மயில்களை ஒரு சேரப் பார்த்து விட்டு மனம் துள்ளினாள் பொன்னி. அவளுடன் வந்த மாதேசுக்கு வியப்புத் தாளவில்லை. ஆனால், நீளமான அலகுகளுடன் அங்கும் இங்கும் திரியும் அவற்றைப் பார்த்து விட்டுக் கொஞ்சம் பயந்தான். அதைப் பார்த்துச் சிரித்த சந்துரு ''பிரிக்கி...'' என்று கேலி செய்தான். அவன் முதன் முறையாய் அரப்புக் காட்டுக்கு சரிதாவுடன் வந்த சமயத்தில் ஒட்டியும், ஒட்டாமலும் சற்று விலகியிருந்த பாபு, இந்த முறை அவனிடம் சிநேக பாவத்துடன் நெருங்கியது. அதைப் பார்த்து பொன்னியும், மாதேசும் ஆச்சரியப்பட்டார்கள்.

''எப்புடித் தோழர் இது?'' என்று பொன்னி வாய் விட்டே கேட்டாள்.

அப்போதுதான் சந்துரு பாபுவுடனான சரிதாவின் நட்பையும், அவள் மூலமாய் தனக்கு கிடைத்த அறிமுகத்தையும் அவர்களுக்கு விளக்கிச் சொன்னான்.

அதற்கு பொன்னி ''சரிதா பெரிய ஆளுதான். ஒங்கள மட்டுமில்ல, மயிலையும் மயக்கி வெச்சிருக்குறாளே...'' என்று வியந்தாள்.

செல்லமாய் அவள் தலையில் தட்டிய மாதேசு ''அதென்னா மயக்கி வெச்சிருக்குறாளே? அவுங்களப் பத்தி மரியாதையா சொல்லு.'' என்று கண்டித்தான்.

நேற்று பேட்டைக் கிராமத்துக்கு சரிதாவும் அவள் தோழிகளும் வந்த சமயத்தில் ஏற்பட்ட பெரிய ரகளைக்குப் பின்தான் சந்துருவுக்கு தெரிந்தது. அவர்கள் புதுமணத் தம்பதிகளான மாதேசையும், பொன்னியையும் தங்கள் குடிசைப் பகுதிக்கு விருந்துக்கு அழைக்க வந்திருந்தார்கள் என்பது.

சரிதாவும் அவள் தோழிகளும் பேட்டைக்குள் நுழைந்த நேரத்தில் பொன்னியும் அவள் தாயாரும் கந்தப்பனும் நகரத்தின் சந்தைக்குப் போக கூடையுடன் மந்தையில் பஸ் ஏற காத்து நின்றிருந்திருக் கிறார்கள். அவர்களைப் பார்த்ததும் மகிழ்ந்த சரிதா தான் தன் தோழிகளுடன் அங்கு வந்த நோக்கத்தை கந்தப்பன் குடும்பத்தாரிடம் கூறியிருக்கிறாள். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

2

இப்படி இரு தரப்பும் ஒருவருடன் இன்னொருவர் சந்தோசமாய் அளவளாவுவதைப் பார்த்து விட்டுத்தான் யாரோ போய் மாதையனிட மும், நடேசனிடமும் சொல்ல அவர்கள் வந்து மறித்திருக்கிறார்கள்.

ரகளைக்குப் பிந்தைய ஆலோசனைக் கூட்டத்தில் தான் இந்த விசயம் கந்தப்பன் தோழர் மூலமாய் மற்ற அனைவருக்கும் தெரிய வந்தது. அப்போதே சந்துரு முடிவெடுத்து விட்டான். தானே புதுமண தம்பதிகளை சரிதாவின் இருப்பிடத்துக்கு கூட்டிச் செல்வதென்று. அதை தோழர்களிடமும் பகிர்ந்துக் கொண்ட போது அடுத்த நாளே அதைச் செய்யும்படி அவர்கள் ஆலோசனை சொன்னார்கள். அதுதான் பேட்டை முதலாளிகளால் அவமானப்படுத்தப்பட்ட சரிதாவுக்கும் அவள் தோழிகளுக்கும் ஆறுதலாய் அமையும் என்றும் எடுத்துக் கூறினார்கள்.

எனவே, இன்று காலையில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு மாதேசையும், பொன்னியையும் அழைத்து வந்து விட்டான் சந்துரு.

பேட்டையிலிருந்து புறப்படும் போது அவ்வளவாக முழுதாய் கடைகள் திறக்காத அந்த நேரத்தில் பெட்டிக் கடையில் கிடைத்த வாழைப்பழங்கள், பிஸ்கட் பாக்கெட்டுகளை வாங்கி தன் மடியில் கட்டிக் கொண்டு வந்திருந்தாள் பொன்னி. சரிதாவின் இருக்கும் குடிசைப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு தருவதற்குத் தான் அவை. அந்த குழந்தைகளை தன் திருமணத்தில் பார்த்திருந்தாள் அவள்.

ஆனால், அரப்புக் காட்டில் மயில்களைப் பார்த்ததில் மனம் மாறி விட்டாள். தான் கொண்டு வந்ததை வெளியில் எடுத்து ஒவ்வொன்றாய் பிய்த்து அவற்றுக்கு போட ஆரம்பித்தாள். மயில்களும் தின்பண்டங் களை ஆசையாய் கொத்தி தின்றன.

பாபு, சரிதாவின் சாயலில் பொன்னியைப் பார்த்ததோ என்னவோ அவள் போட்டதை தின்று கொண்டே அவளை சுற்றிச் சுற்றி வருவதும், சேலை தலைப்பை தன் அலகால் பிடித்து இழுப்பதுமாய் கொண்டாட்டமாய் இருந்தது. அதை கண்டு பொன்னி இன்னும் குதூகலித்தாள். ஆனால், பாபு ஏனோ, மாதேசை கண்டுக் கொள்ளவேயில்லை.

மாதேசு அதை உணர்ந்து சந்துருவிடம் சொன்னான்

''இந்த ரெண்டு காலு, நாலு காலு சீவனுங்களுக்கெல்லாம் ஆம்பளைங்களக் கண்டா அவ்வளவா புடிக்க மாட்டீங்குது தோழரே, பொம்பளங்கள மட்டும் சட்டுன்னு புடிச்சுப் போவுது.'' என்று அங்கலாய்ப்புடன்.

3

சந்துரு அதற்கு விளக்கம் கேட்க மாதேசு சொன்னான்.

கந்தப்பன் மனைவி தெருவில் கிடந்த ஒரு நாய்க்குட்டியை தன் வீட்டுக்கு எடுத்து வந்து வளர்க்கிறார். அந்த குட்டி ஆண்கள் யாரும் சோறு வைத்தால் தின்னாது. பெண்கள் வைத்தால்தான் தின்னும். அந்த நாய்க்கு வேறொரு பழக்கமும் இருந்தது. தெருவில் மனிதர்களைப் பார்த்தால் குறைக்காது. ஆனால், இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்களைக் கண்டால் குறைத்தபடி வேகமாய் துரத்தும்.

அதைப் பார்த்து முகம் சுளிக்கும் கந்தப்பன் ''ராவுல திருடன் வந்தாக் கூட இந்த நாயி கொறைக்காது. அவன் நம்பூட்டுக்குள்ற பூந்து எதையாவது தூக்கிக் கிட்டுப் போவட்டும்னு வுட்ரும்.'' என்பார்.

அதற்கு அவர் மனைவி ''நம்பள மாதிரி ஏழப்பாழங்க வூட்ல பூந்து திருடன் தூக்குறதுக்கு என்னா இருக்குது? சட்டிப் பானைய எடுத்துக்கிட்டுப் போயி அவன் என்னா பண்ணப் போறான்? அது நாய்க்கு நல்லா தெரியும்.'' என்று வளர்ப்புப் பிராணிக்கு வக்காலத்து வாங்குவார்.

அதை அவன் சொன்ன போது சந்துரு ''நா அவுங்க வூட்டுக்கு எத்தினியோ தடவ வந்துட்டுப் போறேன். இத கவனிக்கிலியே...'' என்று வியப்பு தெரிவித்தான்.

இந்த பரந்த உலகத்தில் உள்ள எல்லா விலங்கினங்களும் இப்படித்தானா? என்று தெரியவில்லை. பொதுவாய் விலங்குகள், பறவைகளிடம் பெண்கள் காட்டும் அன்பு ஆண்களை விட அலாதியானது. ஆனால், தன் வீட்டில் அப்பா வளர்ப்பு நாயை இழுத்து தன் காலுக்கடியில் போட்டு இறுக்கிக் கொண்டு அதன் உடம்பில் உள்ள உண்ணிகளைப் பிடுங்கி எடுப்பதை சந்துரு பார்த்திருக்கிறான்.

அதை அவர்தான் வாரம் ஒரு முறை காவிரி ஆற்றுக்கு கூட்டிச் சென்று குளிப்பாட்டி வீட்டுக்கு அழைத்து வருவார்.

சந்துருவும், மாதேசும் தன்னை விட்டு தனியாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த பொன்னி மயில்களை விட்டு விலகி அவர்களின் அருகில் வந்தாள். ''ரெண்டு பேரும் என்னா பேசிக்கிறீங்க?''என்று ஆவலாய் கேட்டாள். மாதேசு அவள் வீட்டு குட்டி நாயைப் பற்றி சந்துருவிடம் கூறியதை அவளிடம் பகிர்ந்துக் கொண்டான்.

4

அவள் சிரித்தபடி ''நீங்க சொன்னது நெசந்தான். அந்த நாயி எங்கம்மாவோ, நானோ சோறு போட்டாத்தான் திங்கும். எங்கப்பன் போட்டாலோ, எந் தம்பிங்க போட்டாலோ திங்காது.'' என்றாள்.

மூவரும் பேசிக் கொண்டே அரப்புக் காட்டிலிருந்த ஒத்தயடிப் பாதை வழியாய் சரிதாவின் சாளையை நோக்கி நடந்தார்கள். சந்துரு அவர்களை கூட்டிச் சென்றான்.

பாபுவும் மேலும் ஒரு சில மயில்களும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தன. பொன்னி அவற்றை திரும்பி திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தாள். அரப்புக் காட்டில் மரங்கள் மிகவும் அடர்த்தியாய் இருந்தன.

அதனால், மயில்கள் மட்டுமல்ல பெயர் தெரியாத வேறு சில பறவை களையும் கூட காண முடிந்தது. அவை எழுப்பும் சத்தங்கள் வினோத மாய் இருந்தன. அதில், காட்டுக் கோழிகளின் ஒலியெழுப்புதல் இனிமையான பயத்தை ஏற்படுத்தியது.

மணியம்பாளையத்தில் இருந்த சமயத்தில் சந்துருவும், மாதேசும் ஒவ்வொரு வருடமும் சித்ரா பவுர்ணமி இரவில் தறியோட்டும் சக நண்பர்களோடு சேர்ந்துக் கொண்டு காவிரியாற்றின் கரையில் நெரிஞ்சிப் பேட்டை கிராமத்தையொட்டிய பாலமலைக்குப் போவார்கள். நல்ல நிலா வெளிச்சத்தில் காடுகள் நிறைந்த மலையில் ஏறுவது அருமையான அனுபவமாய் இருக்கும். அவர்கள் மட்டுமல்ல, சுத்துப்பட்டில் இருக்கக் கூடிய பூலாம்பட்டி, பவானி, எடப்பாடி, ஜலகண்டாபுரம், கண்ணாமூச்சி, கொளத்தூர், மேட்டூர் போன்ற ஊர்களில் இருந்தெல்லாம் ஏராளமாய் மக்கள் அங்கு வந்து மலையேறுவார்கள்.

பாலமலையின் உச்சியில் நின்று நள்ளிரவில் மேற்கு தொடர்ச்சி மலையின் அழகை பால்நிலா வெளிச்சத்தில் பார்ப்பது அலாதியான அனுபவம். அதிலும், பரந்து விரிந்த மேட்டூர் அணையின் முழு பரப்பளவையும் அங்கிருந்துப் பார்த்தல் சிலிர்ப்பான சுகம்.

அந்த அனுபவத்தைப் பேசிக் கொண்டே சந்துருவும், மாதேசும் நடக்க பொன்னி தன் பின்னால் கடைசியாய் வந்த பாபுவோடு விளையாடிய படி நடந்தாள். பாபு வழக்கம் போலவே தன் எல்லையோடு நின்று விட்டது.

பொன்னி அதற்கு ஒரு குழந்தையைப் போல டாடா காட்டினாள்.

பாபு ஒரு நிமிடம் நின்று பார்த்து விட்டு திரும்பி போனது. பொன்னியின் முகத்தில் சின்னதாய் ஒரு ஏக்கம் படர்ந்தது.

5

அதைப் பார்த்த மாதேசு ''அந்த மயிலும், இந்த மயிலும் ரொம்ப பிரண்டா ஆயிட்டாங்கப்பா...'' என்று கமெண்ட் அடித்தான்.

உடனே சந்துரு பொய் கோபத்துடன் ''ஏய், முண்டம் எம் முன்னாடியே எந் தங்கச்சிய வர்ணிக்கிறியா நீ...'' என்று கூறினான். ''அதுக்குத்

தானப்பா எனக்கு நீ கல்யாணம் பண்ணி வெச்ச...'' என்று மாதேசு திருப்ப, சந்துரு ''அத நாலு செவுத்துக்குள்ற வெச்சிக்குடா நாயே...'' என்று கண்டித்தான்.

''நாய் என்ன தெரியுமா செய்யும்?''

''கரண்டுக் கம்பத்தப் பாத்தா காலத் தூக்கிக் கிட்டு நிக்கும்''

''இந்த நாயி தொறத்தித் தொறத்திக் கடிக்கும்.''

என்ற மாதேசு சந்துருவை துரத்த அவன் கல்லால் அடிக்கப் பார்த்தான். இருவரும் சட்டென சிறுவர்களாய் மாறி விட்டார்கள். பொன்னிக்கு சிரிப்புத் தாளவில்லை. காற்று வெளியில் கலகலவென தெறித்தாள்.

அவர்களின் உற்சாகக் குரல் சரிதாவின் சாளைக் கூட்டத்தை எட்டியது. அவள் உள்ளே ஏதோ வேலையாய் இருந்தாள். ரகளைச் சத்தம் சரிதாவின் காதில், கேட்டதும் அவள் சட்டென போட்டது போட்டபடி சரசரவென தன் சாளையை விட்டு வெளியே வந்தாள். மற்ற சாளைகளில் இருந்த பெண்களும் அதே போல வேகமாய் வெளியே வந்தார்கள்.

எல்லோருமாய் சேர்ந்து தங்கள் இருப்பிடத்துக்கு வந்து சேரும் ஒற்றையடிப் பாதையை எட்டிப் பார்த்தார்கள்.

சாந்தி தான் முதலில் மூவரையும் கண்டு உற்சாகமாய் கத்தினாள் ''அடியே... தோழருங்க வர்றாங்கடீ..'' என்று.

அவ்வளவுதான்.

எல்லோரும் விடுவிடுவென நடந்து மூன்று பேரையும் முகம் கொள்ளா சிரிப்புடன் எதிர் கொண்டார்கள்.

''வாங்க தோழர்.''

''வா... பொன்னி.''

என்று ஆளாளுக்கு அன்பாய் வரவேற்றார்கள்.

6

புதுமண தம்பதிகள் இங்கு வருவார்கள் என்று அவர்கள் யாரும் எதிர்பாராததால் சரிதாவிடமும், தோழிகளிடமும் திக்கு முக்காட்டம்

தெரிந்தது. தாங்கள் காண்பது கனவா? நனவா? என்பது போல திகைப்பில் ஆழ்ந்து விட்டார்கள்.

எனினும், வந்தவர்களிடம் அது பற்றி எதுவும் கேட்காமல், பொன்னி யின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு உற்சாகமாய் முன்னால் நடந்தார்கள்.

சாளையின் வாசற்பகுதியில் கொண்டு வந்து புதுமண தம்பதிகளை நிறுத்தினார்கள். சாணம் மெழுகிய வாசல் குளிர்ச்சியாய் இருந்தது.

சரிதா ''கொஞ்சம் இருங்க, ஆராத்தி கரைச்சி எடுத்துட்டு வர்றேன்.'' என்று தன் சாளைக்குள் ஓடப் பார்த்தாள்.

மாதேசு அதை அவசரமாய் தடுத்தான். ''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஆராத்தி எடுக்குறதெல்லாம் தோழருங்க வழக்கம் இல்ல...'' என்றான்.

அதற்கு வனிதா ''அதெல்லாம் எங்களுக்கு தெரியாது. நாங்க புதுப் பொண்ணு மாப்புளைக்கி ஆராத்தி கண்டிப்பா எடுப்போம். நீ போயி எடுத்துட்டு வாடீ.'' என்றாள்.

மாதேசு அதை அனுமதிக்கலாமா? என்பதைப் போல சந்துருவைப் பார்க்க அவன் ''செரி வுடுப்பா, அவுங்க இஷ்டப்படி செய்யட்டும்.'' என்று கூறினான். நேற்றைய அவர்களின் அவமானச் சுவடுகள் அதில் கரையட்டும் என்பதாய் இருந்தது அவன் எண்ணம்.

அந்த நேரத்தில் பொன்னி அந்த எளிய சாளைகளை மலங்க மலங்கப் பார்த்தாள். இவ்வளவு ஏழ்மையிலா இவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்? என்று வியப்படைந்தாள்.

அதற்குள் சரிதா ஆரத்தி கரைத்து எடுத்து வந்து விட்டாள். புதுஜோடியை கிழக்குப் பார்த்து நிற்க வைத்து தட்டைச் சுற்றி ஆரத்தி நீரை ஒரு ஓரமாய் ஊற்றி விட்டு மாதேசிடம் ''காசுப் போடுங்க புதுமாப்ளே...'' என்று தட்டை அவன் முன் நீட்டினாள்.

அவன் தன் பாக்கெட்டை தடவிப் பார்த்து விட்டு சட்டென பொன்னியைப் பரிதாபமாய் பார்த்தான்.

அவள் அதைப் புரிந்துக் கொண்டு தன் முந்தானையில் முடிந்து வைத்திருந்த பணமுடிச்சை அவிழ்த்து பத்து ரூபாய் போட்டாள்.

7

அதைப் பார்த்த சரிதா ''என்னடீ... இப்பத்தான் கல்யாணமாச்சி அதுக்குள்ற எங்க தோழர சுத்தமா சொரண்டிப்புட்டியா?'' என்று கேலி செய்தாள்.

அதற்கு பொன்னி பதில் சொல்லும் முன், முந்திக் கொண்ட மாதேசு ''நல்லா கேளுங்க தோழர், எங் கைல இருந்த மோதிரத்தக் கூட புடிங்கி வெச்சிக்கிட்டாங்க.'' என்று நடித்தான்.

அப்போது லேசாய் பதட்டமான பொன்னி ''அய்யோ அண்டப் புளுகு நானா புடிங்கி வெச்சேன்...'' என்றவள் பின்னால் திரும்பி ''சந்துரு தோழர் இவுரு சொன்னத கேட்டீங்களா?'' என்றாள்.

அதற்கு அவன் ''மாதேசு மோதிரம் போட்டா வெரல்ல உறுத்துதுன்னு சொல்லிட்டு இப்ப கத வுடறயா?'' என்று கேட்டான்.

உடனே பொன்னி ''ஆமாங்க தோழர் எங்கிட்டயும் அப்புடிச் சொல்லித்தான் கழட்டிக் குடுத்தாரு...'' என்று உண்மையைப் போட்டு உடைத்தாள்.

''நாஞ் சொன்னாலும் நீ வாங்கி இருக்கக் கூடாது.'' மாதேசு குற்றம் சாட்டினான்.

அதைக் கேட்ட சரிதா ''ஆமாமா தோழர் சொல்றதுதான் செரி, அவுரு குடுத்திருந்தாலும் நீயெப்புடி வாங்குனே?'' என்று மாதேசுக்கு ஆதரவாய் பேசினாள். அதற்கு பொன்னி பதில் சொல்ல, சட்டென ஒரு கலகலப்பு தொற்றிக் கொண்டது.

அதை சுற்றியிருந்தப் பெண்களெல்லாம் ரசித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள். அப்போது அங்கிருந்த சாளைகளுக்கெல்லாம் சொந்தக்கார மூதாட்டி தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சரிதாவையும் மற்ற பெண்களையும் அதட்டினார். ''ஏம்மா, பொண்ணுப் புள்ளைய வாசல்ல நிக்க வெச்சிக்கிட்டு எவ்வளவு நேரம் பேசுவீங்க? மொதல்ல உள்ற கூட்டிக்கிட்டுப் போங்க.'' என்று.

தங்கள் தவறை உணர்ந்த அவர்கள் மாதேசையும், பொன்னியையும் சரிதாவின் சாளைக்குள் அழைத்துச் சென்றார்கள். சட்டென ஒரு பாயை சரிதா விரித்துப் போட்டு ''ஒக்காருங்க...'' என சொல்ல,

இருவரும் அமர்ந்தார்கள். அப்போது தான் சந்துரு கவனித்தான் பாய் புத்தம் புதிதாய் இருந்தது.

அது மட்டுமல்ல, சுவற்றோர மூலையில் ஒரு புதிய மூங்கில் கூடையில் மளிகைச் சாமான்கள், பழங்கள் என்று இருந்ததன. மேலும், ஒரு புதிய துணிப் பையில் சிகப்புக் கலரில் ரவிக்கைத் துணி நீட்டிக் கொண்டிருந்தது.

8

அவற்றையெல்லாம் பார்த்த அவன் சரிதாவிடம் கேட்டான் ''என்னா இதெல்லாம்... இன்னிக்கி பொண்ணு மாப்புள இங்க வருவாங்கன்னு எப்புடி கண்டுப் புடிச்சீங்க?'' என்று.

பிறகு, தானும் மெல்ல தரையில் அமர்ந்தான்.

அதைப் பார்த்த சரிதா ''கீழ ஒக்காராதீங்க...'' என்று சொல்லி விட்டு ஒரு பழைய பாயை கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கி ஓரமாய் வைத்து விட்டு, தன் கேள்விக்கு பதிலை எதிர்பார்ப்பது போல அவள் முகத்தை நோக்கினான்.

இதற்குள், மற்ற பெண்களெல்லாம் அந்த சின்ன சாளையில் நெருக்கிக் கொண்டு தாங்களும் தரையில் அமர்ந்தார்கள். ஒரு சிலர் வெளி எரவாணத்தின் அடியில் இருந்த சிறிய மண் திண்ணையின் உட்கார்ந்துக் கொண்டு உள்ளே பார்த்தார்கள்.

அப்போது சரிதா ஒரு செம்பில் புதுசோடிக்கு தண்ணீர் எடுத்து வந்து கொடுத்து விட்டு, அவனுக்கும் ஒரு ஈய டம்ளரில் நீர் தந்தாள்.

அவர்கள் தாகம் தணித்துக் கொண்டிருக்கும் போதே அவள் கூறினாள். ''இது எல்லாத்தையும் நேத்து மத்தியானமே சந்தைக்கிப் போயி வாங்கிக் கொண்டாந்து வெச்சிட்டுத்தான் புதுப்பொண்ணு மாப்ளய அழைக்க பேட்டைக்கி நாங்க வந்தோம்.'' என்று நேற்று நடந்ததை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

அப்போது சாந்தி சொன்னாள் ''நேத்து ராத்திரி நாங்க யாரும் தூங்கவேயில்ல தோழர். இப்புடியாயிப் போச்சேன்னு வெசனப்பட்டுக் கிட்டு கெடந்தோம்.'' என்று.

அதற்கு சந்துரு கூறினான் ''செரி வுடுங்க. நடந்ததையே நெனச்சிக் கிட்டு இருக்காதீங்க.'' என்று ஆறுதலாய்.

அதைக் கேட்டு வனிதா ''அய்யய்ய... அந்தப் பேட்டைக்கார கம்முனாட்டிங்க எங்கள திட்டுனத நெனச்சில்ல தோழர். நாங்க ஆச ஆசயா என்னாப் பேசிக்கிட்டு வந்தமோ... அது நடக்காம போயிருமோன்னுதான் வெசனப்பட்டோம்.'' என்று.

அப்போது சுந்தரி ''ஆமா தோழர், ஆனா நீங்க இப்ப பொண்ணு மாப்ளய இங்க கூட்டிக்கிட்டு வந்ததுல ரொம்ப சந்தோசம்.'' என்று சொன்னாள்.

உடனே சாந்தி கூறினாள் '' எனக்கு ஒடம்பெல்லாம் சிலுத்துப் போச்சி தோழர். அதான், ஒங்கள பாத்ததும் கத்திப்புட்டேன்.'' என்று உற்சாகமாய்.

9

சக மனிதர்கள் மீது இவ்வளவு பிரியம் காட்டும் இவர்களைத் தான் நேற்று பேட்டைக்குள் நுழையக் கூடாது என்று தடுத்து திட்டினார்கள் அந்த பாவிகள். சந்துருவுக்கு வெறுப்பில் மனசெல்லாம் கசந்தது.

அப்போது சரிதா தன் தோழிகளிடம் அதட்டலாய் சொன்னாள் ''என்னடீ, எல்லாரும் ஒக்காந்துட்டீங்க. விருந்துக்கு காய்கறி வெட்டணும். ஒப்புட்டு சுட கடலைப் பருப்பு ஊற வெச்சிருக்குறேன். அத ஆட்டணும். எவ்வளவு வேல இருக்குது. எந்திரிச்சி ஆளுக்கொரு வேலயா செய்ங்க. நாஞ் சோறாக்குறேன்.'' என்று.

''ஆமால்ல...'' என்று அவர்களும் எழ முயல சந்துரு தடுத்தான்.

''இருங்க, இருங்க. இப்ப என்னா அவசரம். மதிய சோத்துக்கு இன்னம் கொள்ள நேரமிருக்குது. நானு ஒங்க எல்லாத்துக்கிட்டயும் கொஞ்சம் பேசணும். நீயும் ஒக்காரு சரிதா.''

''என்னா பேசணும்?''

''மொதல்ல ஒக்காரு சொல்றேன்.''

அதற்கு அவள் ''டீத் தண்ணியாவது வெச்சித் தர்றேன். குடிச்சிப்புட்டு அப்புறம் பேசலாம்.'' என்று நின்ற நிலையிலேயே கூறினாள்.

''அதெல்லாம் வேணாம். கொஞ்ச நேரம் போவட்டும்.''

சந்துரு சொல்லி முடிக்க மாதேசு '' ஏம்பா வேணாங்குறே, அவுங்களே இன்னும் காத்தால எந்திரிச்சி டீக் குடிச்சாங்களோ என்னமோ...'' என்றவன், தன் மனைவியிடம் திரும்பி ''நீ போயி டீப் போடு பொன்னி. நாங்க இவுங்கக் கிட்ட பேசிக்கிட்டு இருக்குறோம்.'' என அவளை எழுப்பி விட்டான். உடனே சரிதாவுக்கு கோபம் வந்து விட்டது. ''என்னா நீங்க எங்கூட்டுக்கு ஒறம்பறையா வந்துட்டு ஒங்க பொண்டாட்டிய போயி டீப் போடச் சொல்றீங்க. ஏ பொன்னி அடுப்புப் பக்கம் போனே ஒதப்பேம் பாத்துக்க...'' என்றாள். சரிதா சொன்னதை சட்டை செய்யாத பொன்னி ''ஏய் போடீ, தோழருங்க எதுக்கு சொல்றாங்கன்னு புரிஞ்சுக்கோ. நேத்து நடந்த பிரச்னைய வெச்சி தொழிலாளர் சங்கம், கூலி விவசாயிகள் சங்கம், மாணவர் சங்கம்னு மூணு குரூப்பும் ஒண்ணா சேந்து என்னமோ முடிவு செஞ்சு இருக்குறாங்க. அதப் பத்தி ஒங்க எல்லாத்துக் கிட்டியும் பேசத்தான் சந்துரு தோழர் எங்களையும் கூட்டிக் கிட்டு இங்க வந்திருக்குறாரு.'' என்று விளக்கிச் சொன்னாள்.

10

அதை கேட்ட சரிதா சந்துருவிடம் திரும்பி அவள் சொன்னது உண்மையா? என்பதைப் போல் பார்த்தாள்.

''நெசந்தான், கூட்டமும் பேசுவோம். விருந்தும் சாப்டுவோம்.'' என்றான்.

சரிதா சரியென தலையசைத்து விட்டு பொன்னிக்கு டீப் போட தேவையான பொருட்களை எடுத்துக் கொடுத்து விட்டு வந்து தானும் மற்ற பெண்களுடன் சேர்ந்து உட்கார்ந்தாள்.

சந்துரு பேச ஆரம்பிக்கும் முன் சட்டென ஏதோ ஞாபகம் வந்தது போல சுந்தரி மற்றும் அங்கிருந்த பெண்கள் சிலரைப் பார்த்து ''ஏம்மா ஒங்க புள்ளைங்கல்லாம் எங்க? நாம்ப பேசி முடிக்க கொஞ்சம் நேரம் ஆவும். அதுங்க பாட்டுக்கு அழப் போவுது. ஒங்கூட்ல போயி கூட்டியாந்துடுங்களேன்.'' என்று சொன்னான்.

அதற்கு சுந்தரி ''அது ஒண்ணும் பிரச்னையில்ல தோழர். எல்லாரும் தூங்குறாங்க. அப்புடியே அவுங்க எந்திரிச்சி அழுதாலும் வூட்டுக்கார ஆயா பாத்துக்கும்.'' என்றாள்.

அதற்கு அவன் ''அப்ப ஒண்ணும் பிரச்னையில்லியே நாம்ப ஆரம்பிக்கலாமா?'' என்று பொதுவாய் கேட்டு சம்மதம் வாங்கி விட்டு பேச தொடங்கினான். அந்த நேரத்தில் சாளையின் பின் பக்கம் இருந்து யாரோ நடந்து வரும் ஓசை துல்லியமாய் கேட்டது. அதை தொடர்ந்து நாய்கள் குரைக்கும் சத்தமும் எழ, சந்துரு தான் பேச வந்ததை ஆரம்பிக்காமலே போனான்.

சட்டென சரிதாவின் சாளைக்குள் துல்லியமான அமைதி குடி கொண்டது.

நாய் குரைப்பு நீடிக்கவே, இந்த சாளைப் பகுதிக்கு சம்பந்தம் இல்லாத யாரோ வந்திருக்கிறார்கள் என்பதை மாதேசும், சந்துருவும் அங்கிருந்த பெண்களும் கணித்து விட்டார்கள்.

அப்போது வந்த ஆள் ''சரிதா...'' என உரக்க கூப்பிட்டது கேட்டது. அது பெண் குரல் என்பதாய் தோன்றியது.

ஆனால், ஆளை கணிக்கும் முன்பாக பேட்டையின் ஏரிக்கரையையும், சரிதாவின் சாளைப் பகுதியையும் இரண்டாய் பிரிக்கும் இருப்புப் பாதையில் தடதடத்துச் செல்லும் ரயில் சத்தம் பெரிதாய் கேட்க, சந்துரு, சரிதாவை வெளியில் போய் பார்க்கச் சொல்லி சைகை செய்தான். அவளும் சட்டென எழுந்து உட்கார்ந்திருந்தவர்களை சற்று சிரமப்பட்டு விலக்கிக் கொண்டு வெளியே போனாள். அந்த நேரத்தில் ஒரு சின்ன காத்திருப்பு தொடங்கியது

11

ரயில் சத்தம் நீடிக்க, ஒரு சில விநாடிகளில் சரிதா போய் வந்த ஆளிடம் பேசும் குரலும் அதை தொடர்ந்து அவளுடன் சேர்ந்து யாரோ வருவதும் தடதடப்பையும் மீறி. சரசரப்பாய் எழும் காலடி சத்தத்தில் உணர முடிந்தது.

சரிதா கூட்டி வந்தது வேறு யாரையுமல்ல, தோழர் அனுராதாவைத் தான். அவரைப் பார்த்ததும் எல்லோருக்கும் வியப்பு தாளவில்லை.

சந்துரு வாய்விட்டே கேட்டான் ''தோழர் நீங்களா?'' என்று.

அவர் அவனுக்கு பதில் சொல்லாமல் மர்மமாய் சிரித்தார்.

பிறகு, வாசல் மண் திண்ணையில் உட்கார்ந்திருந்த பெண்களிடம் முதலில் ''எப்புடியிருக்குறீங்க... எல்லாரும்?'' என்று நலம் விசாரித்தார். அவர்கள் ஒருமித்த குரலில் ''நல்லாயிருக்குறோம் தோழர்.'' என்று சொன்னார்கள். அனுராதா சரிதாவோடு சாளையின் உள்ளே வர, மாதேசு ''வாங்க தோழர். இப்புடி ஒக்காருங்க...'' என்று நகர்ந்து, தான் உட்கார்ந்திருந்தப் புதுப்பாயில் இடம் கொடுத்தான்.

அவர் தன் ஜோல்னா பையை கீழே வைத்து அமர்ந்தும், அமராமலும் தலை நிமிர்ந்து ''என்னா பொன்னி எப்புடி இருக்குறீங்க? மாதேசு தோழர் என்ன சொல்றாரு?'' என்று புன்னகையோடு டீப் போட்டுக் கொண்டிருந்தவளை வினவினார். அவள் ''நா நல்லாயிருக்குறேன் தோழர். ஒங்க தோழர் தான் நெறையா பொய் சொல்றாரு...'' என்று சலித்துக் கொண்டாள்.

உடனே அவர் மாதேசிடம் திரும்பி ''என்னா தோழரே, ஒங்க மேல அதுக்குள்ற புகார் வருது...'' என்றார். அவன் பதில் சொல்ல வாயெடுக்க, அனுராதா தடுத்து ''செரி அத அப்புறம் பேசுவோம்.'' என்று சந்துருவைப் பார்த்தார். ''தோழர், நீங்க புதுச்சோடியோட பேட்டையில இருந்து இந்த பக்கம் பொறப்புட்டதும், நானு அந்தப் பக்கம் லங்கடா பஸ்ல வந்து எறங்கிட்டேன். ஆனா, எறங்கன வுடனே ஊர் சனங்க மத்தியில ஏதோ மாற்றம் தெரிஞ்சுது. ஒண்ணு ரெண்டு பேரு குறுகுறுன்னு விரோதமா பாத்தாங்க. செரி, வழக்கம் போல தொழிற்சங்கப் பிரச்னையாத்தான் இருக்கும்னு நெனச்சேன். கந்தப்பன் தோழர் வூட்டுக்குப் போனப்புறந்தான் அவரு நேத்து சரிதாவுக்கும் மத்தவுங்களுக்கும் அந்த அயோக்கியனுங்களால ஏற்பட்ட அநியாய, அக்கிரமங்கள விலாவரியா சொன்னாரு. அதுக்குப் பின்னால நம்ப மூணு அமைப்புகளும் கூடிப் பேசி முடிவெடுத்தது, இப்ப கொஞ்சம் முன்னாடி நீங்க மாதேசையும், பொன்னியையும் கூட்டிக்கிட்டு இங்க வந்தது எல்லாம் அவரு மூலமா தெரிஞ்சது. அத கேட்டதும் எனக்கு இருப்புக் கொள்ளல, அதான் ஒடனே கெளம்பி வந்துட்டேன்.'' என்று.

12

சரிதா அவருக்கு குடிக்க தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அவர் தாகம் தணிய ஒரு சில விநாடிகள் காத்திருந்து விட்டு சந்துரு கேட்டான்.

''இந்த எடம் ஒங்களுக்கு எப்புடி தெரியும்? தோழர்.''

''நம்ப சாலை மறியல் போராட்டத்தப்ப நீங்க பேச்சுவார்த்தைல கல்லூரிக்குள்ற இருந்த ராத்தியில சரிதா கிட்ட யதார்த்தமா நீங்க எங்க குடியிருக்குறீங்கன்னு வெசாரிச்சு வெச்சேன். அதுலதான் தெரிஞ்சது ரயில் தண்டவாளத்துக்கு பக்கத்துல அரப்புக்காடு. அதுல நொழைஞ்சா ஒத்தடிப்பாதையில இந்த எடத்துக்கு வரலாங்குற வெவரமெல்லாம்... அத ஞாபகத்துல வெச்சித்தான் இங்க வந்தேன்.''

உடனே மாதேசு '' ஒங்களுக்கு ரொம்ப தைரியம் தோழர். கொஞ்சம் கூட பயமில்லாம தனியொரு பொம்பளயா அரப்புக் காட்டுக்குள்ற பூந்து வந்திருக்குறீங்களே...'' என வியப்பெய்தினான்.

''இதுல பயமென்னா தோழரே.. இத வுட அடர்த்தியான மலங்காட்ல நம்ப தோழருங்க அரசியல் பணி செய்யலியா... இத்தினிக்கும் அங்க மிருகங்கள், கடுமையான விசமிருக்குற பாம்புகள் எல்லாம் உண்டு.''

அப்போது சரிதா ''இந்த அரப்புக் காட்ல கூட நெறையா பாம்புகள் திரியுது'' என்றாள்.

அதைக் கேட்ட மாதேசு அலறினான் ''என்னது பாம்பா... சந்துரு, இத நீயி எங்கிட்ட ஏஞ் சொல்லவேயில்ல? என்று.

அதற்கு சந்துரு ''எனக்கே இப்பத்தானப்பா தெரியும்.'' என்றான்.

மாதேசின் பயத்தைப் பார்த்து பொன்னி உட்பட அங்கிருந்த பெண்கள் அனைவரும் அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அப்போது சுந்தரி அவனை கலாட்டா செய்தாள் ''தோழரே அஞ்சுத் தலை நாகம் கூட அரப்புக் காட்ல இருக்குது.'' என்று.

அவளைத் தொடர்ந்து வனிதா ''ஆமா தோழரே, ரெண்டு பாம்புங்க சட்டுனு மனுசனா மாறி டான்ஸு கூட ஆடும்.'' என்றாள்.

மேலும் சாந்தி ''கூடவே, ஒரே ஜீவன் ஒன்றே உள்ளம் வாராய் கண்ணான்னு பாட்டுக் கூடப் பாடும்'' என்று சொன்னாள்.

மறுபடியும் அனைவரும் சிரித்தார்கள்.

13

மாதேசுக்கு வெட்கமாய் போய் விட்டது, இந்த பெண்களுக்கு இருக்கிற தைரியம் தனக்கில்லையே என்று.

அப்போது சந்துரு அனுராதாவிடம் ''எதுக்கு தோழர் இப்புடி தனியா வரணும்? நம்ப கந்தப்பன் தோழர் இல்ல சிற்பி மாதிரி யாரையாவது தொணைக்கி கூட்டியாந்திருக்கலாமே...'' என்று அக்கறைப் பட்டான்.

அனுராதா அதை பெரிதாய் எடுத்துக் கொள்ளாமல் '' செரி வுடுங்க தோழர். நேத்து நீங்க கூட்டா சேந்து எடுத்த முடிவை சரிதா கிட்டேயும், மத்தவுங்க கிட்டேயும் சொல்லிட்டீங்களா?'' என்று வினவினார்.

''இன்னும் இல்ல தோழர். அதுக்குள்ற தான் நீங்க வந்துட்டீங்க.''

அப்போது பொன்னி டீப் போட்டு எடுத்து வந்தாள். அனைவரும் இருந்த டம்ளர்களில் இரண்டு மூன்று பேராய் ஒருவர் மாற்றி இன்னொருவராய் குடித்து முடித்தார்கள்.

பிறகு, சந்துரு அனுராதாவிடம் ''நீங்களே இவுங்க கிட்ட பேசிடுங் களேன் தோழர்.'' என்று கேட்டுக் கொண்டான்.

அதற்கு அவர் மறுத்தார் ''வேணாம், ஒங்க முடிவை நீங்க தான் விளக்கிச் சொல்லணும். அதுதான் செரி. வேணுன்னா நா ஒத்துழைக் கிறேன். மொதல்ல நீங்க ஆரம்பிங்க.''என்று வழிகாட்டினார்.

அதற்கு சம்மதம் தெரிவித்த அவன் தன் எதிரே இருந்த பெண்களை ஒருமுறைப் பார்த்து விட்டு மெல்ல தொடங்கினான்.

''தோழர்களே, இந்தியாவுல பல மாநிலங்கள்ல நம்ப இயக்கம் இன்னிக்குப் பரவியிருந்தாலும், அங்கெல்லாம் கெடைக்காத புது அனுபவம் இந்தப் பகுதியில கெடைச்சிருக்குது. ஒங்கள மாதிரி பாலியல் தொழிலாளிகளா வாழ்க்கை நடத்துற பெண்கள் ஒண்ணு ரெண்டு பேரு அங்கங்க ஒரு சில இடங்கள்ல இயக்கத்துக்கு ஆதரவா இருந்திருக்குறதா தோழர்கள் சொல்லியிருக்குறாங்க. ஆனா, அவுங்க போராட்டக் களத்துக்கு வந்ததா எனக்கு தெரியல, இருந்தாலும், ஒரு தொடர்ச்சி மாதிரி இங்க மொத தடவையா இத்தினி பேரு ஒண்ணா புரட்சிகர இயக்கத்துக்கு நெருக்கமா வந்தது சந்தோசமான விசயம்.'' என்ற சந்துரு பேச்சை நிறுத்தி விட்டு அனுராதா தோழரை தான் சொன்னது சரிதானா? என்பதைப் போல் பார்த்தான்.

14

அவர் தலையசைக்க சந்துரு தொடர்ந்தான் '' அதுக்கு காரணம் இந்த பகுதியோட சூழ்நிலை. நீங்க கொஞ்ச நாளைக்கு முன்னால

விசைத்தறி தொழிற்சங்கமும், சிறு முதலாளிகள் சங்கமும் சேர்ந்து நடத்துன கூலி உயர்வுப் போராட்டத்துக்கு குடுத்த ஒத்துழைப்பு மறக்க முடியாத ஒண்ணு... அப்பவே ஒங்கள நாங்க அமைப்புக்குள்ற கொண்டு வந்திருக்கலாம். ஆனா, அப்பப்ப வர்ற நடைமுறைச் சிக்கல்னால அது சாத்தியமில்லாம போயிடுச்சி. இனியும், அத தள்ளிப் போட கூடாது. இதத்தான் நேத்து மூணு அமைப்பும் பேசி முடிவெடுத்தோம். ஏன்னா, நீங்க இப்ப பிற்போக்கு சக்திகளுக்கு எதிராப் போராட வேண்டிய கட்டாயத்துக்கு வந்துட்டீங்க இல்லியா...'' என்று.

அதற்கு சரிதா ''ஆமாந் தோழர். இதுப் பத்தித்தான் நேத்து ராத்திரி நாங்களே எங்களுக்குள்ற பேசிக்கிட்டோம்'' என்று சொல்ல மற்ற பெண்களும் அதை ஆமோதித்தார்கள்

அவளை அனுராதா கேட்டார் ''சரிதா தோழர் நீங்க ஒங்களுக்குள்ற பேசிக் கிட்டதுல என்னா முடிவுக்கு வந்தீங்க? அத சொல்லுங்க மொதல்ல... '' என்று.

அவள் அதற்கு பதில் சொல்லாமல் சுந்தரியை தூண்டி விட்டாள் ''நீ சொல்றீ...'' என்று.

அவள் தெளிவாய் சொன்னாள் ''தோழர் இந்த ஊருக்கு தறிகார்ரு சங்கம் வர்றதுக்கு முன்ன எங்கள மாதிரி அவுசாரித் தொழில் பண்ற பொண்ணுங்க எல்லாத்துக்கும் காலம் முச்சூடும் இப்புடியே ஆத்தாங்கரையில நின்னே பொழைப்பு போயிடுமோன்னு தான் பயந்தோம். ஆனா, ஒங்களப் பாத்தப்புறம் நெறையா மனசுக்குள்ற நம்பிக்க வந்துடிச்சி. நாங்களும் ஏன் எங்களுக்குள்ற ஒரு சங்கம் கட்டக் கூடாதுன்னுதான் நேத்து பேசுனோம்.'' என்று.

உடனே மாதேசு ''பரவால்லியே... எங்கள வுட நீங்க முன்னேற்பாடாத் தான் இருக்குறீங்க.'' என்று பாராட்டினான்.

அதற்கு சுந்தரி குறும்பாய் கூறினாள் ''இதெல்லாம், தோழருங்க ஒங்க கூட சேந்த பழக்க தோசம் தான்னு வெச்சிக்குக்குங்களேன்.'' என்று.

உடனே வனிதா ''அது தோசம் இல்லடி, பாசம்னு சொல்லு.'' என்று திருத்தி விட்டு சந்துருவைப் பார்த்து சொன்னாள் ''தோழர் நாஞ் சொல்றது செரிதானே?'' என்று.

அவன் அதை ஆமோதித்து தானும் ஒரு திருத்தம் சொன்னான் சிரித்தவாறு ''பாசம் தான் வனிதா ஆனா, உண்மையில இதுக்குப் பேர் வர்க்கப் பாசம்.'' என்று.

15

அதை ஏற்பது போல எல்லா பெண்களும் ''ஹே...'' என்று கை தட்டினார்கள். அதில், சாந்தி ஒரு படி மேலே போய் வாயில் விரல் வைத்து சத்தமாய் விசில் அடித்தாள்.

அதைப் பார்த்து கோபப்பட்ட சரிதா ''ஏய், என்னடி இதெல்லாம், நீயென்னா விசிலடிச்சான் குஞ்சா?'' என்று கண்டித்தாள்.

அப்போது சந்துரு சொன்னான் ''அவுங்க தனக்கு தெரிஞ்ச மாதிரி தம் மனசுல இருக்குற உற்சாகத்த வெளிப்படுத்தறாங்க. அதுல என்ன இருக்குது.'' என்று. அதற்கு சரிதா ஏதோ சொல்ல வர, அனுராதா அதை தடுத்து வேறு விசயத்தில் யாருடைய கவனமும் திரும்பாமல் பார்த்துக் கொண்டார்.

அவர் ''சரி, ஒரு அமைப்புக் கட்றதுல ஒங்க யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இல்ல தானே?'' என்று அனைவரிடமும் ஒப்புதல் கேட்டார்.

அதற்கு பாலியல் பெண்கள் ஒரு மனதாய் ''இல்ல தோழர்.'' என்று சொன்னார்கள்.

அடுத்த கணம் அனுராதா தன் அருகிலிருந்த ஜோல்னா பையில் கை விட்டு ஒரு குறிப்புப் புத்தகத்தையும், பேனாவையும் எடுத்தார். புத்தகத்தை தன் மடி மீது பிரித்து வைத்துக் கொண்டார்.

பிறகு ''சரி, இங்கயிருக்குற எல்லாரும் அவுங்க பேரச் சொல்லுங்க.'' என்றவர் சந்துருவிடம் திரும்பி ''அது மட்டும் போதுமா? இல்ல, இவுங்க ஊர், ஏன் இந்த தொழிலுக்கு வந்தாங்க, அப்புடிங்கிறதையும் குறிச்சுக்கலாமா?'' என்று கேட்டார்.

அவன் ''அத அவுங்க கிட்டயே கேப்போம்.'' என்று அந்த பெண்களைப் பார்த்தான். அவர்களில் சுந்தரி ''தோழர் நாங்க தான் ஒங்கக் கிட்ட ஏற்கனவே சொல்லிட்டோமே, மறுபடியுஞ் சொல்லி என்னாவப் போவுது?'' என்றாள்.

அதற்கு சாந்தி ''ஆமாந் தோழர். இனுமே, நாங்க என்னா எங்க ஊட்டுக்கு திரும்பியா போவப் போறோம். பொழைச்சாலும், செத்தாலும் இங்கதான்னு ஆயிப் போச்சி.'' என்று ஆதரவு தெரிவித் தாள். அதன் பிறகு அனுராதா, சரிதாவில் ஆரம்பித்து மளமளவென அனைவரின் பெயரையும் கேட்டு தன் நோட்டுப் புத்தகத்தில் குறிக்க ஆரம்பித்தார். பாலியல் பெண்கள் மிகுந்த உற்சாகத்துடன் தங்கள் பெயர்களை அவரிடம் கூறினார்கள். அந்தப் பணி ஒரு சில நிமிடங்களில் முடிவடைந்தது. அதன் பின்னர் அனுராதா சந்துருவிடம் கேட்டார் ''தோழர், இவுங்க அமைப்புக்கு என்னா பேரு வெக்கிறது? யார் யாரெல்லாம் பொறுப்புக்கு வரணும்? அதெல்லாம் முடிவு பண்ணலாமே...'' என்று.

16

அப்போது மாதேசு கேட்டான் ''தோழர் அதுக்கு முன்னாடி சரிதாவை யும் அவுங்கள சேந்தவுங்களையும் தனி அமைப்பா வெச்சிக்கிறதா? இல்ல, மத்த உழைக்கும் பெண்களோட சேத்து ஒரே அமைப்பா வெச்சிக்கிறதா? அத மொதல்ல பேசலாமே...'' என்று.

சட்டென அவனை திரும்பிப் பார்த்த சந்துரு ''செரியா சொன்னே தோழரே... அதுதான், அடுத்து நாம்ப முடிவு பண்ண வேண்டியது.'' என்று பாராட்டினான்.

ஆனால், அனுராதா வேறு விதமாய் பேசினார் ''அத எதுக்கு நாம்ப முடிவு பண்ணனும்? சரிதாவும், மத்தவுங்களுமே இதுக்கு கருத்து சொல்லட்டுமே.'' என்றார்.

சந்துரு அதை ஏற்றுக் கொண்டான்.

சம்பந்தப்பட்ட பெண்கள் மட்டுமே எதையும் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். நம் எண்ணம் எதுவாயினும் அவர்களிடம் திணிக்கக் கூடாது. எனவே, அவன் சரிதாவைப் பார்த்தான்.

அவள் தன் தோழிகளை யோசனையுடன் நோக்கினாள். அவர்கள் அவளையே தங்கள் சார்பாக பேசுமாறு கண்சாடைக் காட்டினார்கள்.

சரிதா சற்று நிதானித்துச் சொன்னாள் ''நாங்க தறி நெய்ற நூல் போடுற பொம்பளைங்களோட ஒரே அமைப்பா சேர்றதுல எந்த

ஆட்சேபணையும் இல்ல தோழர். ஆனா, அவுங்க எங்களை இணைச்சிக்குவாங்களா? அதுதான் முக்கியம்.'' என்று.

அவளுடைய கருத்து ஆழமானது. எனவே, சில நிமிடங்கள் அனுராதா உட்பட மற்றவர்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். என்ன முடிவு எடுப்பதென சிக்கல் வந்தது.

அப்போது சந்துரு சட்டென சொன்னான் ''தோழர், இதோ இங்க பொன்னி இருக்குறாங்க. அவுங்கதானே இப்ப உழைக்கும் பெண்கள் மத்தியில அமைப்பு வேலைகள் செய்றாங்க. அவுங்கள முன்னோடியா நெனச்சி கருத்து கேப்போமே...'' என்று. அவனது எண்ணம் எல்லோருக்கும் பிடித்திருந்தது.

இப்போது அங்கிருந்த அனைவரின் கவனமும் பொன்னி மீது திரும்பியது. எல்லோரையும் விட்டு சற்று தள்ளி அமர்ந்த்திருந்த அவளிடம் சரிதா உரிமையாய் கேட்டாள். முதன்முறையாய் ''சொல்லுங்க தோழர், ஒங்க கருத்து என்ன?'' என்று விளித்து.

17

பொன்னி சட்டென நகர்ந்து அவள் அருகில் வந்து சரிதாவின் கையைப் பிடித்துக் கொண்டு ''இந்த கேள்வியே அநாவசியமா எனக்குப் படுது. இந்த சமுதாயத்தால நீங்க எப்புடி ஒடுக்கப்பட்ட வங்களா இருக்குறீங்களோ, அப்புடித்தானே மத்த உழைக்கும் வர்க்கப் பெண்களும். அன்னிக்கி போராட்டத்தப்ப நீங்க வாங்கிக் குடுத்த சோத்த நாங்க திங்க மாட்டம்னு தறியோட்டுற, நூல் போடற பொம்பளைங்க யாராவது வேணாமுன்னா சொன்னாங்க. அப்புற மென்னா, நீங்க வேற நாங்க வேறன்னு பிரிச்சிக்கிட்டு, நாம்ப ஒண்ணா எணைஞ்சி ஒரே அமைப்பா இருப்போம். நம்பள நசுக்குற ஆணாதிக்க சமுதாயத்த போராடித் தூக்கி எறிவம்.'' என்று சொன்னாள்.

அவளது பேச்சும், நடத்தையும் சட்டென அங்கிருந்த பெண்களை நெகிழ வைத்தது. அவர்கள் நன்றி மேலிட பொன்னியை பார்த்தார்கள். சரிதா, பொன்னியைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டாள். அது ஒடுக்கப்பட்ட பெண்கள் ஒருவர் மீது ஒருவர் காட்டும் நேசத்தை வெளிப்படுத்தியது.

அந்த அழகான காட்சியை அனுராதாவும், சந்துருவும், மாதேசும் மன நிறைவுடன் பார்த்து மகிழ்ந்தார்கள்.

அதன் பிறகு, பெண்கள் அமைப்புக்கு என்ன பெயர் வைப்பது? என ஒரு சின்ன விவாதம் எழுந்தது.

''மாதர் சங்கம்.''

''அது வேணாம்... பெண்கள் முன்னணி. ''

''ஒடுக்கப்பட்ட பெண்கள் அமைப்பு.''

என்றெல்லாம் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன.

அதில், சந்துருவும், மாதேசும் கலந்துக் கொள்ளவில்லை. அதையும் பெண்களே தீர்மானிக்கட்டும் என்று விட்டு விட்டார்கள்.

கொஞ்ச நேர இழுபறிக்குப் பின்னர், இறுதியாய் 'ஒடுக்கப்பட்ட பெண்கள் முன்னணி.' என்ற பெயர் முடிவானது.

அதை அங்கிருந்த பெண்கள் ஆளாளுக்கு தங்களுக்குள் சொல்லிப் பார்த்து மகிழ்ந்தனர்.

இனி, யாருக்கும் அஞ்சத் தேவையில்லை.

18

தங்கள் ஒற்றுமையை உறுதி செய்துக் கொள்ள, அநீதியை எதிர்த்துப் போராட ஒரு ஆயுதம் கிடைத்து விட்டது. நமக்கான விடுதலையை நாம் வென்றேடுப்போம். ஆணுக்கு நிகராய் பெண்ணை பொதுவில் வைப்போம். என எண்ணியெண்ணி சந்தோசப்பட்டார்கள்.

அடுத்ததாய் தமது அமைப்புக்கு பொறுப்பாளர்களையும் அவர்களே தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். பொன்னி தலைவராகவும், சரிதா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய அமைப்புக்கும் பொறுப்பாளர்களுக்கும் முதல் வாழ்த்தை புரட்சிகர கட்சியின் சார்பாய் அனுராதா பதிவு செய்தார். அதை தொடர்ந்து விசைத்தறி தொழிலாளர் சங்கத்தின் சார்பாக அதன் செயலாளர் மாதேசு வாழ்த்து சொன்னான். அதை சந்துரு வழி மொழிந்தான்.

அமைப்புக் கட்டுதல் முடிந்து விருந்து என தொடர்ந்த அந்த நாளில் தான் ஒரு மோசமான சம்பவம் நடந்தது.

அத்தியாயம்

17

1

ஒடுக்கப்பட்ட பெண்கள் முன்னணி உதயமான மகிழ்ச்சியில் மாதேசுக்கும், பொன்னிக்கும் புது மணமக்கள் விருந்து வைக்க பாலியல் பெண்கள் இருந்த அந்த சாளைப் பகுதி மும்முரமாய் இயங்கியது. அனைத்துப் பெண்களும் ஆளுக்கொரு வேலையை இழுத்துப் போட்டு செய்து கொண்டிருந்தார்கள். சோறாக்க, காய்கறி நறுக்க, ஒப்பிட்டுக்கு கடலைப் பருப்பு அரைக்க, வடைப் பாயாசம் தயாரிக்க என பம்பரமாய் சுழன்றார்கள். அவர்களுடன் விருந்து சாப்பிட வந்தவர்கள் மட்டுமின்றி தோழர் அனுராதாவும், சந்துருவும் கூட சேர்ந்து சமையலுக்கு ஒத்துழைப்பாய் இருந்தார்கள்.

சந்துரு சில தேங்காய்களை எடுத்து உடைத்துக் கொடுக்க அனுராதா அதில் கத்தியால் கீறி சமையலுக்கு தேவையான அளவுக்கு சின்னச் சின்னதாய் பருப்பெடுத் துக் கொண்டிருந்தார். மாதேசு சில மரக் கட்டைகளை ஒவ்வொன்றாய் கீழே வைத்து அதன்மேல் பெரிய கல்லை தூக்கிப்போட்டு அடுப்பெரிக்கத் தோதாய் உடைத்துக் கொண்டிருந்தான்.

சரிதா, பொன்னி, சாந்தி, வனிதா, சுந்தரி என்று ஒருவருக்கும் வாய் நிற்கவில்லை. ஓயாமல் பேசிக் கிடந்தார்கள். அவர்களின் உற்சாகத்தை யும், சந்தோசத்தையும் அங்கிருந்த சாளைகளுக்கு சொந்தக்கார பாட்டி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். அந்த கொண்டாட்டங்கள் அவருக்குப் புதிது போலும். சுருக்கம் விழுந்த முகத்தில் ஒளி ரேகைகள் தெரிந்தன.

தூங்கியெழுந்த சுந்தரியின் குழந்தையும், வேறு சில பாலியல் பெண்களின் குழந்தைகளும் ஏதோ திருவிழா வந்தது போல சரிதாவின் சாளைவாசலில் கூச்சல் போட்டு அங்குமிங்கும் விளையாடித் திரிந்தன. அதில், ஆண் குழந்தகள் அதிகம் காணப்பட்டாலும் ஓரிரு பெண் குழந்தைகளும் இருந்தன.

அதைப் பார்த்த அனுராதாவுக்கு தன்னையறியாமல் உள்ளுக்குள் ஒரு இரக்கம் சுரந்தது.

நாளை இந்த குழந்தைகளின் எதிர்காலம் என்ன? இவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை யார் தருவார்கள்? இவர்களின் தாய்மார்கள் ஏதோ ஒரு நம்பிக்கையில் தானே இந்த குழந்தைகளைப் பெற்றெடுத் திருப்பார்கள். அந்த நம்பிக்கை பொய்த்துப் போனால்...

2

நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கியது.

பெரியவர்களாய் இவர்கள் வளர்ந்த பின்னால், உதிரிகளாய் தானே வாழ முடியும். அதை உருவாக்கித் தருவது யார்? இந்த கேடு கெட்ட சமூக அமைப்புதானே

ஆனால், நாம் அப்படி விடக் கூடாது. அவர்களுக்கு மார்க்சிய கல்வியை தர வேண்டும். போராளிகளாய் வளர்க்க வேண்டும்.

குழந்தைகளை தன்னருகே கூப்பிட்ட அனுராதா ஒவ்வொருவர் பெயரையும் கேட்டார். அவர்கள் படிக்கிறார்களா? எந்தப் பள்ளியில் படிக்கிறார்கள்? என விசாரித்தார். ஆனால், பெரும்பாலானோர் படிக்கவில்லை என்றே சொன்னார்கள். சுந்தரியின் மகனும், வேறு சில பிள்ளைகள் மட்டும் அரப்புக் காட்டுக்கு அருகே உள்ள குப்பத்துப் பள்ளியில் படிப்பதாய் கூறினார்கள். மற்றவர்கள் தங்கள் தாயார்

தொழிலுக்காய் ஆற்றங்கரை போகும் போது அவர்களுடன் போய் விடுவார்களாம்.

சுந்தரியின் மகனுக்கு ஐந்து வயதிருக்கும். அவன் கொஞ்சம் விபரமாய் பேசினான். ''நாங் காத்தால சீக்கிரமே எந்திரிச்சி பள்ளிக்கோடம் போயிடுவேன். இல்லன்னா, ரயில் ரோட்டுக்குப் பக்கத்துல கஞ்சா விப்பாங்க, எங்கப்பன் அதப் போயி காசுக் குடுத்து வாங்கியாரச் சொல்லும். இல்லீன்னா சுரீர் சுரீர்னு அடிக்கும்.'' என்று.

அனுராதா பரிதாபமாய் பார்த்தார்.

அப்போது இன்னொரு சிறுவன் சுந்தரி மகனை விட இரண்டோரு வயது மூத்தவன் அவன் சொன்னான். ''டேய், உனக்காச்சும் அப்பன் இருக்குது. எங்களுக்கு அது கூட இல்ல. எங்கம்மாளக் கேட்டா சொல்ல மாட்டீங்குது. '' என்று.

அதைக் கேட்ட மற்றொரு சிறுமி கூறினாள் ''எங்கம்மா கூட அப்புடித்தாண்டா, அப்பம் பேரக் கூட சொல்ல மாட்டீங்குது. அதுதான் ஏன்னு தெரியல.''

தன் காதுகளைப் பொத்திக் கொள்ள வேண்டும் போல தோன்றியது அனுராதாவுக்கு. ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை.

அப்பன் பேர் தெரிந்து மட்டும் என்னவாகப் போகிறது? எத்தனைக் குடும்பங்களில் பிள்ளைகள் பெற்ற தகப்பனால் சுரண்டப்படு கிறார்கள்.

ஏன், சற்று முன் சுந்தரி மகனே சொன்னானே தன் தகப்பன் நடத்தையை.

அதன் பிறகு அனுராதா அந்த குழந்தைகளிடம் பேச்சை திசை மாற்றி, பாட்டாளி வர்க்க சர்வ தேசிய கீதத்ததின் சில வரிகளைப் பாட, குழந்தைகள் கோரசாய் பின் தொடர்ந்தார்கள்.

3

'பட்டினிக் கொடுஞ் சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்

பாரிற் கடையரே, எழுங்கள் வீறு கொண்ட தோழர்காள்.

கொட்டு முரசு கண்ட நம் முழக்கம் எங்கும் குமுறிட

குதித்தெழு புதியவுலகை வாழ்வதில் திளைத்திட.

ங் பட்டினி...சி

பண்டைய முழக்கமென்னும் சங்கிலி அறுந்தது

பாடுவீர் சுயேட்சி கீதம் விடுதலைப் பிறந்தது.

இங்கு புதிய முறையிலே இப்புவனமும் அமைந்திடும்

இன்மை சிறுமை தீர நம் இளைஞருலகமாகிடும்.

ங் பட்டினி...சி

பிரஞ்சுக் கவிஞன் யூஜின் பட்டியர் எழுதிய இந்தப் பாட்டு கம்யூனிச மேடைகளில் பாடப்படுவது.

அனுராதா அதை அழகாய், கம்பீரமாய் பாடி முடிக்க, பின் தொடந்த பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகள் குதூகல மானார்கள்.

கொஞ்ச நேரத்தில் விருந்து தயாராகி விட்டது. சரிதா வந்து அனுராதாவை சாப்பிட கூப்பிட்டாள். ஆனால், அவர் முதலில் குழந்தைகளை சாப்பிட வைக்கும்படி கூறி விட்டார். அதைக் கேட்டதும் பிள்ளைகள் உற்சாகமாய் சாப்பிடப் போனார்கள்.

அவர்களுடன் சேர்ந்து மாதேசும் பொன்னியும் சாப்பிட்டார்கள். அவர்களுக்குப் பின் தோழர் அனுராதாவும், சந்துருவும் மற்ற பெண்களும் சாப்பிட்டு முடிக்க மதியம் மூன்று மணிக்கு மேல் ஆகி விட்டது. கடைசியாய் அந்த சாளைப் பகுதிக்கு சொந்தக்கார பாட்டி உணவருந்தி முடித்தார். அப்போது நேரத்தை உணர்த்துவது போல ஐதராபாத்திலிருந்து அரக்கோணம் வழியே செல்லும் ரயில் ஒன்று குப்பத்தை தாண்டி விரைந்தது.உண்ட களைப்பில் அனைவரும் சரிதாவின் சாளை வாசலில் வந்து பாய் போட்டு உட்கார்ந்தார்கள்.

சூரிய ஒளி திசை மாறி இருந்ததால் கொஞ்சம் வாசற்புறத்தில் நிழலாய் இருந்தது வசதியாய் போய் விட்டது.

4

சரிதா எல்லோருக்கும் ஒரு சின்ன தட்டில் வைத்து வெற்றிலை பாக்கு கொண்டு வந்து கொடுத்தாள். சுந்தரி தன் கையால் மாதேசுக்கும், பொன்னிக்கும் தாம்பூலம் மடித்துக் கொடுத்து ஒருவருக்கொருவர் ஊட்டி விடச் சொல்லி கலாட்டா செய்தாள்.

பொன்னி அவள் சொன்னபடியே மாதேசுக்கு ஊட்டி விட அவன் ரொம்ப வெட்கப்பட்டான்.

சந்துரு ''இன்னிக்குத்தான் தோழரே, நீ வெட்கப்பட்டத நா வாழ்க்கை யில மொத தடவப் பாக்குறேன்.' என்று சொல்ல , அனுராதா உட்பட பெண்களெல்லாம் பக்கென்று சிரித்தார்கள்.

மாதேசு அதைப் பார்த்து கோபப்பட்டான். சந்துவைப் பழி தீர்க்க நினைத்தான்.

பிறகு, ''சரிதா தோழர் அவர்கள் இப்போது சந்துரு தோழருக்கு வெற்றிலைப் பாக்கு ஊட்டி விடுவார்கள்.'' என்று ஒரு அறிவிப்பைச் செய்தான். அதற்கு எல்லோர் மத்தியிலும் பலத்த வரவேற்பு இருந்தது.

சடசடவென சுந்தரி இரண்டு வெற்றிலையை எடுத்து சுண்ணாம்பு தடவி அதில், பாக்கை கொட்டி சரிதாவிடம் கொடுத்தாள். ஆனால், சரிதா அதை வாங்க மறுத்து கையை பின்னுக்கு மறைத்து ''ஏய், ஒனக்கு கொஞ்சமாவது அறிவிருக்குதா? அவுங்க புதுப் பொண்ணு மாப்புள அவுங்க ஊட்டி வுட்டுக்குவாங்க. எங்களுக்குத்தான் இன்னும் கண்ணாலம் ஆகலியே.'' என்று சமாளித்தாள்.

ஆனால்,அதை யாரும் ஏற்க மறுத்தார்கள். நீங்கள் இருவரும் காதலர்கள் தானே. அப்படியிருக்க, இதில், என்ன தவறு இருக்கிறது? என்று சரிதாவை, சந்துருவுக்கு ஊட்டி விடச் சொல்லி வற்புறுத்தினார்கள்.

அவள் சட்டென அனுராதாவின் பின்னால் வந்து மறைந்துக் கொண்டாள். ''பாருங்க தோழர். இவுங்க பண்ற அநியாயத்த...'' என்று அவரை சப்போர்ட்டுக்கு கூப்பிட்டாள்.

ஆனால், அவர் அவளுக்கு ஒத்துழைக்க மறுத்து ''இந்த வெளையாட்டுக்கு நா வரலப்பா...'' என்று சரிதாவின் கையை இழுத்து முன்னுக்கு விட்டார், சட்டென சரிதா ஓட சுந்தரி அந்த சாளையின்

வாசற்பகுதி முழுக்க சுற்றிச் சுற்றி துரத்த அனைவரும் கலகலவென சிரித்தார்கள். அங்கிருந்த குழந்தைகள் கைத் தட்டி கெக்கலித்தன.

சந்துரு அதைப் பார்த்து ரசித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

5

அந்த சமயத்தில் தான் கடுமையான சாராய போதையில் சுந்தரியின் கணவன் அங்கே வந்தான். ஆள் பார்ப்பதற்கு முரட்டுத்தனமாய் தெரிந்தான். ஆனால், ஒல்லியான உடல் வாகுதான். வந்தவன் சட்டென சுந்தரியின் தலைமுடியை எட்டிப் பிடித்தான்.

''ஏண்டீ... அங்க ஆத்தாங்கரையில வாடிக்கைக்காரங்கல்லாம் வந்து நிக்கிறாங்க. கொஞ்சம் பேரு அவுசாரிங்கள காணம்னு திரும்பி வேறப் போய்ட்டாங்க. நீங்க எல்லாரும் இங்க கூத்தும், கும்மாளமுமா இருக்குறீங்களா... வாரா வாரம் போலீசுக்கு மாமூல் பணம் எங்கயிருந்துக் கட்றது? ஒங்களுக்கு புத்தியில்ல, மொதல்ல ஒன்ன ஒதைக்கணும்டீ...'' என்ற அவன் சட்டென அவளை அறைந்தான்.

முதலில் அவன் யாரென்று அறிந்திராத சந்துரு, மாதேசு, அனுராதா, பொன்னி போன்றவர்கள் திகைத்தார்கள். அவர்களுக்கு சட்டென என்ன செய்வதென்றும் தோன்றவில்லை. அப்போது சுந்தரியின் மகன் ஓடி வந்து ''அப்பா, அம்மாள அடிக்காதப்பா...'' என்று அந்த முரடனை தடுத்த பிறகுதான் அவன் யாரென்று விளங்கியது. அதன் பின்னால், அவன் சுந்தரியை அடித்த நோக்கமும் விளங்க, மாதேசு சரேலென்று எழுந்து நின்றான்.

அவன் கண்களில் கோபம் தீப்பொறியாய் கனன்றது. சற்றும் யோசிக்காமல் சுந்தரியின் தலைமுடியை இறுக்கமாய் பிடித்திருந்த அவள் கணவனின் இடுப்பை காலால் எட்டி உதைத்தான். அந்த உதையின் வேகம் தாங்காமல் முரடன் சில அடிகளில் தள்ளிப் போய் சொத்தென விழுந்தான். அதைப் பார்த்து பாலியல் பெண்கள் திகிலடைந்த முகபாவத்தைக் காட்டினார்கள்.

தலை நிற்காத போதையில் இருந்தாலும் சுந்தரியின் கணவன் சில நொடிகளில் தட்டுத் தடுமாறி எழுந்தான். அவன் வாய் அசிங்கமான வார்த்தைகளை முணுமுணுத்தது.

''என்னயாடா அடிச்சே? தேவடியாப் பையா... ஒன்ன என்னப் பண்றம் பாருடா... '' என அவிழ்ந்திருந்த தன் அழுக்கு வேட்டையை இழுத்துக் கட்டினான். அப்போது அவன் இடுப்பிலிருந்து சற்று நீளமாய் இருந்த சூரிக் கத்தியொன்று நழுவி கீழே விழுந்தது. அவன் குனிந்து அதைக் கையால் எடுத்து ''டேய் பாடுப்பையா ஒன்ன பொணமாக்குறண்டா...'' என மாதேசைப் பார்த்து மிரட்டினான்.

ஆனால், மறுபடியும் அவனுக்கு உதை விழுந்தது. ஹக்கென்ற சத்தத்துடன் வெட்டுண்ட மரமாய் கீழே விழுந்த அவன் பேச்சு மூச்சில்லாமல் சற்று நேரம் அப்படியே கிடந்தான்.

6

காலையில் இருந்து இத்தனை நேரம் அந்த சாளைப் பகுதி முழுக்க நிறைந்திருந்த மகிழ்ச்சி அந்த நிகழ்வால் சட்டென காணாமல் போனது. அப்போது சுந்தரி தன் கணவன் கையிலிருந்த கத்தியை முதலில் பிடுங்கி தூர எறிந்தாள். அவள் தரையில் கிடப்பவன் மேல் எந்த அனுதாபத்தையும் காட்டவில்லை.

சந்துரு மட்டும் மாதேசைக் கடிந்துக் கொண்டான்.

''ஏம்பா, அவசரப்பட்டு அந்தாளை அடிச்சே?'' என்று.

அதற்கு, அவன் ஏதோ சொல்ல வாயெடுக்க சுந்தரி முந்திக் கொண்டாள்.

''தோழர், அவுரு அடிச்சது சரிதான். அவன் ரவுடி. நீங்க மட்டும் இல்லன்னா இந்நேரம் என்னை அடிச்சு அரை உசுரு பண்ணி யிருப்பான். அவனுக்கு கொஞ்ச நாளாவே சங்கத்து ஆளுங்க கூட சேர்றது புடிக்கல. அதனால, அப்பப்ப எங் கிட்ட சண்டைக் கட்டிக்கிட்டே இருந்தான். இத்தினி நாளா அவன் எனக்கும், எம் மவனுக்கும் செஞ்ச கொடுமை கொஞ்ச நஞ்சமுல்ல. அவனால என்னுடம்புல காயம் படாத எடமே கெடையாது...''

என்றவள் சட்டென தன் தலையை குனிந்துக் காட்டினாள். அங்கே முடியினூடாய் பெரிதாய் அடிப்பட்ட காயத் தழும்பு இருந்தது. உடம்பின் மறைவிடங்களில் கத்தியால் கீறிய காயங்களும், சிகரெட்டால் சூடுப்பட்ட தீப் புண்களும் உள்ளதாய் கூறினாள். அது

மட்டுமா.. தன் குழந்தையின் கைகளில், கால்களில் தன் கணவன் இரக்கமில்லாமல் சூடு போட்ட காயத்தழும்புகள் இருப்பதை சுந்தரி காட்ட, சட்டென அனைவரின் கண்களும் கசிந்தன.

அப்போது சந்துரு கீழே கிடப்பவனை பார்த்தான். அவனிடம் இவ்வளவு நேரமாகியும் தொடர்ந்து எந்த அசைவும் காணாமல் போகவே ''சுந்தரி அந்தாளுக்கு என்ன ஆச்சுன்னு பாரு. எதாவது விபரீதம் ஆயிடப் போவுது.'' என்று சற்று கவலையுடன் கூறி எச்சரித்தான்.

ஆனால், அவள் ''செத்துத் தொலையட்டும் அந்த புரோக்கர் நாயி, வுடுங்க தோழர்.'' என்று அலட்சியம் காட்டினாள். அவள் மகன் அம்மாவை இறுக்க கட்டிக் கொண்டிருந்தான். அவன் பயத்தைப் போக்குவது போல சுந்தரி தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

ஆனால், சந்துருவால் அவளைப் போல இருக்க முடியவில்லை. சுந்தரியின் கணவன் உண்மையிலேயே செத்து விட்டால், தற்போதைய சூழலில் தேவையில்லாத புதிய பிரச்னையொன்றை சந்திக்க நேரிடும்.

7

எனவே, அவன் சரிதாவிடம் ஒரு சொம்பில் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி கீழே கிடந்தவனின் முகத்தில் தெளித்தான். இரண்டொரு முறை விழுந்த நீரின் குளுமையில் அந்த ஆள் மெல்ல அசைந்தான். ஒருக்களித்துக் கிடந்தவன் நிமிர்ந்து படுத்து கெட்ட வார்த்தைகளாய் கத்திப் பேசினான்.

அந்த உளறலுக்கு மீண்டும் மாதேசுக்கு கோபம் வர காலை தூக்கிக் கொண்டு அவன் முகத்தில் மிதிக்கப் போனான்.

அப்போது அனுராதா அவனை அதட்டி சும்மாயிருக்கச் சொன்னார். பிறகு, பேட்டையிலிருந்து வந்தவர்களை கிளம்பச் சொன்னார்.

சந்துரு அவரிடம் ''இப்படியே வுட்டுட்டுப் போனா, அவன் மறுபடியும் சுந்தரியை அடிப்பானே...'' என்று கவலை தெரிவித்தான். ஆனால், அவள் சொன்னாள். ''தோழர் நீங்கயெல்லாரும் போங்க. இனுமே நா பாத்துக்குறேன். இந்த எடத்துக்கு வராத மாதிரி இவன தொறத்தியுட்டாத்தான் செரிவரும்.'' என்று.

அப்போது அவளுக்கு ஆதரவாய் வந்த சரிதா அவள் கூற்றை ஆமோதித்தாள். ''ஆமா தோழர், நீங்க போய்டுங்க. இவன மாதிரி இன்னம் நாலஞ்சிப் பொறுக்கி நாய்ங்க இங்க திரியுதுங்க. இதுங்க தான் போலீசுக்குப் போய் எங்க பணத்தை வாங்கி மாமூல் கட்டிப் புட்டு வருங்க. அந்த தைரியத்துல பண்ணாத அட்டூழியம் பண்ணுங்க. ஏன்னா, நாங்கெல்லாம் நாதியத்தவுங்க தானே. இதுக்கப்புறம் நாங்க திருப்பி அடிச்சாத்தான் செரி வரும்'' என்று.

அதைக் கேட்ட வனிதா '' இந்த நாய்ங்களப் பாத்து நாங்க இந்த நிமிசத்துல இருந்து பயப்படப் போறதில்ல, திருப்பிக்கிட்டு அடிக்கிறதுன்னு முடிவுப் பண்ணிட்டம்.'' என்றாள்.

இதையே சாந்தி உட்பட மற்ற பாலியல் பெண்களும் வேறு வேறு வார்த்தைகளில் சொல்ல அதை சாளைக்கு சொந்தக்கார பாட்டிப் பார்த்து சந்தோசப்பட்டு ''இப்பத்தாண்டி, பொண்ணுங்களா ஒங்களுக்கு ரோசம் வந்திருக்குது.'' என்று பாராட்டினார்.

அப்போது உளறியபடி படுத்திருந்த சுந்தரியின் கணவன் சட்டென எழுந்தான். அங்கிருந்த பெண்களை முறைத்துப் பார்த்தான். பிறகு, ஏதும் பேசாமல் விடுவிடுவென நடந்து தூரப் போனான்.

அதைப் பார்த்து விட்டு சுந்தரி கூறினாள்.

8

''என்னா நடிப்புப் பாத்தீங்களா தோழர். என்னமோ செத்துப் போயிரு வான்னு பயந்தீங்களே... கூறு கெட்டவன் நாம்ப பேசறதையெல்லாம் இந் நேரம் வரைக்கிம் கேட்டுக்கிட்டு இருந்துட்டு அசாம எந்திரிச்சுப் போறாம் பாருங்க.''

அதற்கு மேல் சந்துருவுக்கு அவர்களிடம் ஏதும் பேசத் தோண வில்லை. பாலியல் பெண்கள் எதையும் சந்திக்கும் மனநிலைக்கு வந்து விட்டார்கள். இனி, அவர்கள் வாழ்க்கை அவர்கள் கையில்.

மாதேசும், பொன்னியும் தங்களுக்கு விருந்து வைத்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறி விட்டுப் புறப்பட சந்துருவும், அனுராதாவும் சேர்ந்துக் கொண்டார்கள். அரப்புக் காட்டைக் கடக்கும் போது பொன்னி மட்டும் தன்னையறியாமல் பாபுவைத் தேடினாள். மாதேசுக்கும், சந்துருவுக்கும் அந்த எண்ணம் இல்லை. அவர்கள்

நடந்த சம்பவத்தைப் பற்றி அனுராதாவுடன் விவாதித்துக் கொண்டு வந்தார்கள். அவர் சொன்னார். ரவுடிகளிடம் நாம் மிகுந்த எச்சரிக்கை யாய் இருக்க வேண்டும், அவர்களை எந்த நேரத்திலும் முதலாளி களும், காவல்துறையும் நமக்கு எதிராய் திருப்பி விட வாய்ப்புண்டு.

ரவுடித்தனம் என்பது சுரண்டல் சமூகத்தின் விளைவுதான். மார்க்சிய ஆசான்கள் ரவுடிகளை உதிரிகள் என்றே குறிப்பிடுகிறார்கள். ஏனெனில், எந்த உற்பத்தி சார்ந்த தொழில்களிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. இவர்களில் பலரும் காவல்துறையின் நேரடி மற்றும் மறைமுக தூண்டுதல்களால் உருவாகிறார்கள். அதே சமயம், ரவுடிகளிலும் உள்ளுக்குள் போலீஸ் மீது பகை கொண்டு வன்மத்துடன் திரிபவர்களும் சிலர் உண்டு.

எப்படியாகிலும், அவர்களை நாம் பகைத்துக் கொள்வது இயக்க நலனுக்கு உகந்தது அல்ல. முடிந்த வரையில், ஆளும் வர்க்கத்தின் பின்னால் நாம் ரவுடிகளை தள்ளி விட்டு விடக் கூடாது.

தோழரின் பேச்சு கவனத்துக்குரியதாய் இருந்தது.

அடுத்த சில நாட்களில் வெளியூர் போயிருந்த தேவராசு பேட்டைக்கு திரும்பி விட்டார்.

அவரிடம் இளங்கோ ஊரில் நடந்த சம்பவத்தை விவரித்திருந்தான் போலும். சந்துருவை கூப்பிட்டு கந்தப்பனை வைத்துக் கொண்மேலும் விபரங்களை விசாரித்தார். பின்பு, சொன்னார் ''இந்த மாதையனும், நடேசனும் இப்புடிப் பண்றாங்களே...'' என்று உண்மையாகவே வருத்தப்பட்டு பேசினார்.

9

ஆனால், அந்த சமயத்தில் தான் ஊரில் இருந்திருந்தாலும் கூட சரிதாவுக்கும் மற்ற பெண்களுக்கும் ஆதரவாய் தன்னால் ஏதும் செய்திருக்க முடியாது. ஏனெனில், இது ஊர் பிரச்னையாக மாற்றப்பட்டு விட்டது. என்னதான் ஏதோ ஒரு வகையில் பேட்டை முழுக்க தனக்கு சொந்தம் என்றாலும், நாளை யாரும் நல்லது கெட்டதுக்கு தன் வீட்டுக்கு வரப் போக இருக்க மாட்டார்கள். என்று அவர் தன் இயலாமையை சொன்னார். அதன் பிறகு, சந்துரு அவரிடம் கேட்டான்.

''என்னண்ணா, திடீர்னு ஈரோடு வரைக்கிம் போய் வந்திருக்குறீங்க. எதுனாச்சும் விசேசமா?''

''சந்துரு, கொஞ்ச நாளாவே நகரத்துல இருக்குற பெரிய மொதலாளிங்க, என்ன மாதிரி சின்ன மொதலாளிங்கள பொழைக்க வுடாமப் பண்ணனும்னு ஏதோ பெருசா திட்டம் போட்டு வேலை செஞ்சுக்கிட்டு வர்றாங்கன்னு எனக்கு தோணுது.''

''அதுக்கு?''

சந்துரு அப்படிக் கேட்டதும் தேவராசு எழுந்துப் போய் தன் வீட்டு வாசல் கதவை சாத்தி விட்டு வந்து பேச்சை தொடர்ந்தார்.

அதுசற்று வியப்பாய் இருந்தது.

''அவுனுங்க எங்கள ஏதாவது பண்ணி தொழில் நடத்த வுடாம செஞ்சாங்கன்னா ஈரோடு பக்கத்துலயிருந்து இங்க துணி ரகங்கள் வாங்கியாந்து தறியோட்டலாம்னு ஒரு ஐடியா.''

அதற்கு சந்துரு சொன்னான்.

''அவுங்க என்ன மட்டும் திட்டம் போடட்டும்ணா, ஆனா, ஒங்களுக்கு ரகம் தராமயிருக்க பெரிய மொதலாளிங்களால எப்புடி முடியும்? நீங்களா எதுனாச்சும் கற்பனை பண்ணிக்க வேணாண்ணா...''

''நீ நெனைக்கிறது அப்புடியிருந்தா சந்தோசந்தாம்பா. ஆனா, என்னால இவுனுங்க கிட்ட ரொம்ப நாளு மாரடிக்க முடியாதுன்னு தான் தோணுது.''

அவன் அதற்கு ஏதுவும் கூறவில்லை, என்றாலும், கூட மனதின் மூலையில் அவர் சொன்னதை வைத்து ஒரு அச்ச உணர்வு எழாமல் இல்லை. சிறு முதலாளிகளுக்கு வரும் எந்த பாதிப்பும் அது அவர்களோடு நிற்காது. நிச்சயம் விசைத்தறி தொழிலாளர்களையும் பாதிக்கவே செய்யும் என்று நினைத்தான்.

10

சரிதாவின் சாளைப் பகுதியில் அன்று நடந்த சம்பவத்திற்குப் பின் சுந்தரியின் கணவன் அங்கே வருவதில்லையாம். ஆற்றங்கரைக்கும் வந்து எந்த பிரச்னையும் செய்வதில்லையாம். எனவே, அவள் நீண்ட நாட்களுக்குப் பின்னால் நிம்மதியாய் உணர்வதாய் சந்துருவிடம் கூறினாள்.

அத்தியாயம்

18

1

அன்றைய காலை நேரம் ஒரு நல்ல செய்தியும், ஒரு கெட்ட செய்தியுமாய் விடிந்தது. பெண் குழந்தைகளைக் கோயிலுக்கு நேர்ந்து விடும் கொடுமைக்கு எதிராய் ஆந்திர, தமிழக உயர்நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்குகளில் அந்தந்த மாநில அரசுகளுக்கு கோர்ட் ஏற்கனவே நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அதில், ஆஜரான அரசுத் தரப்பு மேற்கண்ட அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்திருப்பதாய் தத்தமது வழக்குரைஞர்கள் வாயிலாய் தெரிவித்து உடனே தடை ஆணை பிறப்பிப்பதாய் உறுதி கூறியதன் பேரில் கோர்ட்டார் வழக்குகளை பைசல் செய்திருக்கிறார்கள். இது நல்ல செய்தி.

இதை முழுமையாய் அனுபவிக்க விடாமல் செய்த இன்னொரு கெட்ட செய்தி என்னவெனில்....

மத்தியஅரசின் புதிய ஜவுளிக் கொள்கையின் படி இனிமேல் விசைத்தறிகளில் புடவை, வேட்டி, கைலி, ஜமுக்காளம்,

தரை விரிப்பு, போர்வை போன்ற அகலம் அதிகமான ஜவுளிரகங்களை நெய்யக் கூடாது என்பதே அது.

அதற்கு அரசு கூறும் காரணம்....

மேற்கண்ட ரகங்கள் கைத்தறிக்கென ஒதுக்கப்பட்டதாம். எனவே, கைத்தறியைப் பாதுகாக்கும் பொருட்டு விசைத்தறிகளில் நெய்யக் கூடாதாம். வேண்டுமானால் அகலம் குறைந்த துண்டு மற்றும் கைக்குட்டை போன்ற ரகங்களை தயாரித்துக் கொள்ளலாமாம்.

இப்படியொரு அறிவிப்பை எல்லா மொழி நாளிதழ்கள் மூலமாய் வெளியிட்ட மத்திய அரசின் ஜவுளித்துறை சூட்டோடு சூடாய் காலையிலேயே சுமார் பத்து மணி வாக்கில் நகரம் மற்றும் சுற்றியுள்ள அனைத்து விசைத்தறி மையங்களிலும் ஆள் வைத்து துண்டறிக்கை விநியோகம் செய்தது.

அந்த துண்டறிக்கையில் இருந்த சில வாசகங்கள் விசைத்தறி உரிமையாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அதிர்ச்சியூட்டக் கூடிய தாய் இருந்தது. அரசின் தடை அறிவிப்பு உடனடியாய் அமுலுக்கு வருவதாகவும், அதை மீறி யாராவது கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத்தறியில் தயாரித்தால்...

2

மூன்று மாத சிறை தண்டனை விதிக்கப்படுமாம். அது மட்டு மல்லாமல், சம்பந்தப்பட்ட விசைத்தறி பேக்டரிகளுக்கு அதிகாரி களால் சீல் வைக்கப்படுமாம்.

என்ன கொடுமை இது. மேற்கண்ட துண்டறிக்கையைப் பார்த்ததும் நகரம் மட்டுமல்ல, பேட்டை கிராமமும் தீப்பிடித்தது போல ஆகி விட்டது. மந்தையில் வழக்கமாய் டீக் குடிக்க வரும் சிறு விசைத்தறி முதலாளிகள் கடும் அதிர்ச்சியடைந்தார்கள். பலருக்கு பூமி பிளந்து விட்டதாய் தோன்றியது. காலகாலமாய் அவர்கள் எந்த தொழிலை நம்பி பல காலங்களாய் வாழ்ந்து வந்தார்களோ அதில், மண்ணள்ளிப் போட்டு விட்டது மத்திய அரசின் நாசகார புதிய ஜவுளிக் கொள்கை.

இனி என்ன செய்வது? அவர்கள் மந்தையிலேயே தனியாய் கூடினார்கள். அந்த கூட்டத்தில் மையமாய் தேவராசும், கருணாகரனும் இருந்தார்கள். சலசலவென பேச்சு எழுந்தது.

இது எதுவும் அறியாமல், காலைப் பேப்பரையும் ஆட்கள் மூலமாய் அரசு ஜவுளித்துறை விநியோகம் செய்த துண்டறிக்கையையும் பார்க்காமல் விசைத்தறி தொழிலாளர் சங்கத்தின் முன்னணியினர் கந்தப்பன் வீட்டில் தோழர் அனுராதாவுடன் பேசிக் கொண்டிருந்தார் கள். தோழர் நேற்று இரவே வந்து விட்டாலும் அவரை சந்துருவும் மற்ற தோழர்களும் காலையில் தான் பார்க்க நேர்ந்தது. சரிதாவின் கோரிக்கைகளில் ஒன்றான அவளைப் போல பெண்களை கோயிலுக்கு நேர்ந்து விடும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று. அடுத்ததாய், பாலியல் பெண்களுக்கு வேலைத் தரும்படி எந்த வகையில் விசைத்தறி உரிமையாளர்களுக்கும் மற்றும் விவசாய நிலவுடமையாளர்களுக்கும் நிர்பந்தம் தருவது என்பதைப் பற்றி தீவிரமாய் ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல, தீபாவளிப் பண்டிகை நெருங்கி விட்டது. ஏற்கனவே, முதலாளி களிடம் பெற்ற கூலி, போனஸ் போன்ற உரிமைகளில் மேலும் சில கோரிக்கைகளை இணைத்து கொண்டு அவர்களிடம் பேசுவது என்பதைப் பற்றியெல்லாம் தோழர்களின் ஆலோசனை நீடித்தது.

அந்த நேரத்தில் தான், தேவராசு சந்துருவையும், மாதேசையும் உடனே பேட்டையின் மந்தைக்கு வரும்படி அழைத்ததாய் ராசு வந்து சொன்னான். அப்போது அவன் கையில் அரசாங்கத்தின் துண்டறிக்கை யும் இருக்கவே விசயம் இன்னதென்று எல்லோருக்கும் எளிதில் விளங்கியது. அத்துடன் ஆலோசனையை நிறுத்திக் கொண்ட அனுராதா தற்போது எழுந்துள்ள உடனடி பிரச்னையில் கவனம் செலுத்துமாறு தோழர்களுக்கு வழி காட்டினார்.

3

சந்துருவும், மாதேசும் மந்தைக்கு அவசரமாய் வந்த நேரத்தில் அங்கிருந்த சிறு விசைத்தறி முதலாளிகள் சங்கத்தின் முன்னணியினர் பெருத்த சோகத்தில் முகமெல்லாம் வெளிறிப் போய் காணப்பட்டனர். அவர்களைச் சுற்றியிருந்த கூட்டத்தில் ஒரு சிலர் அழுதுக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தனர். இத்தனைக்கும் அந்த நபர்கள் வயதில் மூத்தவர்கள். அதைப் பார்த்ததும் ஏதோ இழவுக்கு வந்தது போல் தோன்றியது சந்துருவுக்கு.

அவன் கூட்டத்தில் சரசரவென்று முன்னேறி மாதேசோடு போய் தேவராசின் முகம் பார்த்து நின்றான்.

தேவராசு ''சந்துரு வாப்பா... அரசாங்கத்தோட நோட்டீசப் பாத்தியா?'' என பதட்டமாய் கேட்டார். அவன் அதற்கு ஆமாம் என்பது போல தலையாட்டினான்.

சந்துரு பேச வாயெடுத்தான்.

அதைப் பார்த்த தேவராசு சக முதலாளிகளிடம் சத்தம் போட்டு அமைதியாய் இருக்கும் படி கேட்டுக் கொண்டார்.

சந்துரு ''அண்ணா... இன்னிக்கிருக்குற மத்திய அரசாங்கம் வெளி நாட்டு மொதலாளிகள் நலனுக்காவ காட் ஒப்பந்தத்துல கையெழுத்துப் போட்டதே உள்நாட்டுல ஒங்கள மாதிரி இருக்குற சின்ன மொதலாளிங்கள நசுக்கத்தான். இது எங்களப் பொறுத்த வரிக்கிம் எதிர்பார்த்த ஒண்ணுதான். அதனால நீங்க யாரும் பதட்டப்படாதீங்க. நாம்ப அரசாங்கத்த எதுத்து உறுதியா போராடுவோம்.'' என்று சமாதானம் சொன்னான்.

அதைக் காதில் வாங்கியும், வாங்காமலும் தேவராசு ''அது வரிக்கிம் தறிங்கயெல்லாத்தையும் நிறுத்தி வெக்கணுமேப்பா...'' என்று பரிதாபமாய் சொன்னார்.

அதற்கு மாதேசு கூறினான் ''அதெல்லாம் வேணாம்ணா, நீங்க தெகிரியமா தறியோட்டுங்க. வர்றதப் பாத்துக்கலாம்.'' என்று.

''அதெப்புடிப்பா முடியும்? மூணு மாசம் ஜெயில் தண்டனைன்னு அரசாங்கம் அறிவிப்பு குடுத்திருக்குதே.'' என்று கேட்டது கருணாகரன்.

''அண்ணா... அதெல்லாம் சும்மா பூச்சாண்டி. நீங்க பயப்படாம தறியோடுங்க.'' என்று அவருக்கு சந்துரு பதில் சொன்னான். ''தம்பி, நீங்கயெல்லாம் அன்னாடங்காச்சிங்க. எது வந்தாலும் சமாளிப்பீங்க. ஆனா, எங்களால அது முடியுமாப்பா?'' என்று கேட்டது கருணாகரனோ, தேவராசோ அல்ல. கூட்டத்தில் வேறு யாரோ..

4

சட்டென குரல் வந்த திசையில், சந்துருவுடன் மாதேசும் திரும்பிப் பார்த்தான். அது வேறு யாருமல்ல, நடேசன்தான் அந்த அவலக் குரலுக்கு சொந்தக்காரன். அவன் ஊரோடு சேர்ந்து நின்றது ஆச்சரியமாய் இருந்தது.

அவனது குரல் சிறு விசைத்தறி முதலாளிகளின் அபயக் குரலாய் வெளிப்பட்டது.

அதைக் கண்டுக் கொள்ளாத மாதிரி தன் பார்வையை திருப்பிய சந்துரு தேவராசிடம் ''அண்ணா... தறிய நிறுத்தரதும், ஓட்றதும் ஒங்க விருப்பம். ஆனா, நம்ப எல்லாரு தலக்கி மேலயும் கத்தி தொங்கிக் கிட்டு இருக்குறத மறந்துடாதீங்க.'' என்றான்.

அதற்கு அவர் ''ஏம்பா இந்த அரசாங்கம் இப்புடி செய்யுது? நாங்க யெல்லாம் கைத்தறிய வுட்டுட்டு பவர்லூமுக்கு வந்து பல வருசம் ஆவுது. அத நம்பி பொழைக்க முடியாமத்தானே மாற்னோம். அப்புறம் ஏன் கைத்தறிக்கு சலுகைப் பண்ணப் பாக்குது கவர்மெண்டு?'' என்று கேட்டார்.

''நீங்க கைத்தறிய வுட்டாலும் இன்னம் காஞ்சிப்புரம் மாதிரி இருக்குற பல ஊர்ல கைத்தறிய நம்பி நெறையா குடும்பங்கள் இருக்கத்தான் செய்யுது. ஆனா, கைத்தறி நெசவாளர்கள வாழ வைக்க இந்த அரசாங்கம் புதிய ஜவுளிக் கொள்கைய கொண்டுக்கிட்டு வரல. இன்னிக்கி வரக்கிம் கைத்தறி சொசைட்டிகள்ல செரியான கூலி வராம பல கைத்தறிக்காரங்க கஷ்டப்பட்டுக்கிட்டு தானே இருக்குறாங்க. கோ ஆப்டெக்ஸ்லயும், காதி க்ராப்ட்லயும் துணிங்க பர்சேஸ் பண்ணாம கெடக்குது. அதையெல்லாம் அரசாங்கம் கண்டுக்காம இருக்குது. ஆனா, இப்பப் பாத்தா நாங்க கைத்தறிய காப்பாத்துறோம்னு புதுசா சட்டம் கொண்டாருது. இதுக்கு நெசமான காரணம் வேற. இப்ப நம்ப நாட்டோட ஜவுளித் தேவைல 70 சதமானம் மில் துணிங்க தான் பூர்த்தி பண்ணுது. 29 சதமானம் விசைத்தறி துணிகள் ஈடு கட்டுது. வெறும் ஒரு சதமானம் மட்டுந்தான் கைத்தறி துணிங்களுக்கு மார்க்கெட்டுல இடமிருக்குது. அதனால, இந்த அரசாங்கம் கைத்தறிய வாழ வெக்கப்போறேன்னு சொல்றது புருடா. விசைத்தறிய நசுக்குறது மூலியமா மில் துணிகளுக்கு சந்தைய தொறந்து வுடுது அரசாங்கம்.''

சந்துரு சொன்ன புள்ளி விபரங்களைக் கேட்டு அங்கிருந்த சிறு முதலாளிகள் மலைத்துப் போனார்கள்.

இதென்ன அநியாயமாய் இருக்கிறதே அரசாங்கத்தின் கைத்தறியைக் காக்கும் நடவடிக்கை. சந்துரு சொன்னது போல கைத்தறி சொசைட்டிகள் காற்று வாங்கிய படிதானே கிடக்கின்றன என்ற எண்ணம் அனைவரது மனங்களிலும் எழுந்தன.

5

அப்போது கூட்டத்தில் இருந்த நடேசன் முன்னால் வந்து கேட்டான் ''அது செரிப்பா, இந்த சுத்து வட்டாரத்துல பெரிய மொதலாளிங்களும் தானே பவர்லூம் வெச்சிருக்குறாங்க. அரசாங்கத்தோட ஜவுளிக் கொள்கையால அவுங்களும் தான பாதிக்கப்படுவாங்க?'' என்று.

''அண்ணா, அப்புடியெல்லாம் அவுங்க பாதிக்கப்பட மாட்டாங்க. இதுல பெரிய மொதலாளிங்களோட சூழ்ச்சியும் இருக்குது.''

''என்னா சூழ்ச்சி?''

சந்துரு அதற்கு தான் பதில் சொல்லாமல் தேவராசைப் பார்த்தான்.

அவர் ''கொஞ்ச நாளைக்கி முன்னால நானு தமிழ்நாட்டுக்குப் போயி ஈரோட்டுல இருக்குற ஜவுளி மொதலாளிங்களப் பாத்துட்டு வந்தேன். அதுக்கு காரணம் நம்ப ஊரு பெரிய மொதலாளிங்க, சின்ன மொத லாளிங்கள பழி வாங்க என்னமோ சதி பண்றாங்கன்னு மனசுக்குப் பட்டுச்சி. அதனால தான் அங்க போயி ரகம் வாங்கிக்கிட்டு வந்து என்னூட்டு தறியில நெய்யலான்னு நெனச்சேன்.'' என்று நிறுத்தினார்.

கூட்டம் அவர் சொன்னதை உன்னிப்பாய் செவி மடுக்கவே மேலும் தொடர்ந்தார்.

''அதுக்குப்புறந்தான் பெரிய மொதலாளிங்க என்ன பண்ணப் போறங்கன்னு கண்டுப்புடிச்சேன். அது என்னான்னா அண்ணாமலை, திருவேங்கடம் அப்புறம் நம்ப ஊரு மாதையன் மாதிரியான ஆளுங்க நகரத்தச் சுத்தியும் மூணு துணி மில்லுங்க கூட்டா சேந்துக் கட்டப்போறாங்க. அதுல ஜெட்லூம்னு சொல்ற ரொம்ப நவீனமான நாடா இல்லாத வெளிநாட்டு தறிங்கள கொண்டாந்துப் போடப் போறாங்க. அந்த தறிங்க நாம்ப வெச்சிருக்குற தறிங்க மாதிரி பத்திருவது மடங்கு துணி உற்பத்திய குடுக்கும். அத வெச்சி நம்பளுக்கு ரகம் கொடுக்குறத நிப்பாட்டப் போறாங்க. அவுங்க மட்டுமில்ல நம்ப நாடு பூரா பெரிய மொதலாளிங்களுக்கு அரசாங்கம் மான்ய வெலையில ஜெட்லூம், எட வசதி, கரண்டுன்னு கொடுக்கப் போவுது.''

அவர் சொல்லி நிறுத்த கேட்டுக் கொண்டிருந்த, அனைவரும் அதிச்சியின் உச்சத்திற்கே சென்றனர்.அப்போது ஒருவர் ஆவேசமாய் நடேசனின் சட்டையைப் பிடிக்க வந்தார் ''ஏண்டா எப்பப் பாத்தாலும்

அந்த கூதையன் கூடவே சுத்திக்கிட்டு இருந்தியே, இதெல்லாம் ஒனக்கு தெரியாதா? இல்ல, தெரிஞ்சும் கமுக்கமா இருந்தியா? அவன் ஒன்ன மில்லுல கூட்டா சேத்துக்கறன்னு சொன்னானா?'' என்று.

6

அந்த சிறு முதலாளியின் செயலால் அவன் நடுங்கி விட்டான். ''சத்தியமா அப்புடியெதுவும் இல்லப்பா, என்ன நம்புங்க. கொஞ்ச நாளா நான் அவன் வூட்டுக்குப் போனாலும், உள்ற இருந்துக்கிட்டே இல்லன்னு சொல்லச் சொல்லி ஆளனுப்புறான். எனக்கு இப்பத்தான் அது ஏன்னு தெரிஞ்சுது.''என்று கெஞ்சலாய் சொன்னான்.

அப்படியும் அதை நம்பாமல் ஓரிருவர் நடேசனை திட்டவே செய்தனர். ஆனால், சந்துருவுக்கும், மாதேசுக்கும் தெளிவாய் தெரிந்தது. மாதையன் அதுவரை தன் காரியங்களுக்காகவே அவனை பயன் படுத்திக் கொண்டிருக்கிறான் என்பதே அது.

இனி, அதைப் பற்றியெல்லாம் பேசிப் பயனில்லை என்பதால், சந்துரு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு முன்னேறினான்.

அவன் தேவராசிடம் ''அண்ணா... இப்ப நீங்க இங்க சொன்ன பெரிய முதலாளிங்க பத்தின முழு வெவரத்தையும், சுத்து வட்டாரத்துல இருக்குற எல்லா சின்ன தறி மொதலாளிங்க கிட்டயும் உடனடியாச் சொல்லி ஒண்ணு சேத்துங்க. நாங்களும் தொழிலாளிங்கள கூட்டிப் பேசறம். அப்புறம் என்ன செய்றதுன்னு ஒரு முடிவுக்கு வருவோம். சீக்கிரம்.'' என்று சொன்னான்.

அதற்கு தலையசைத்த அவர் தன் சங்க நண்பர்களை சந்துரு சொன்னவாறு செய்ய துரிதப்படுத்தினார்.

அதன் பிறகு, சந்துருவும், மாதேசும் ஆளுக்கொரு டீயைக் குடித்து விட்டு கந்தப்பன் வீட்டுக்கு வந்தார்கள். தோழர் அனுராதாவிடமும் மற்ற தோழர்களிடமும் நடந்த விபரங்களை சொன்னார்கள். அதைக் கேட்ட அனுராதா சற்றும் தாமதிக்காமல் இந்த பிரச்னையைக் எப்படிக் கையாள்வதென மேலிட தோழர்களை கலந்துக் கொண்டுப் பேச அவசரமாய் ரேணிகுண்டா கிளம்பிச் சென்றார்.

அடுத்த நாட்களில் சிறு விசைத்தறி முதலாளிகள் தரப்பும், தொழிலாளர் தரப்பும் தனித் தனியே கூடி ஆலோசித்தார்கள்.

அரசாங்கத்தின் மக்கள் விரோத புதிய ஜவுளிக் கொள்கை நாடு முழுவதிலும் பெரும் கோபத்தை விசைத்தறியாளர்கள் மத்தியில் ஏற்படுத்தி இருந்தது. பத்திரிக்கைகள் வாயிலாகவும், அவ்வப்போது தோழர் வசீகரன், தேவராசு வீட்டுக்குப் போன் செய்து சொன்ன தகவல்கள் மூலமாகவும் அது உறுதிப்பட்டது.

7

நாட்டில் இருந்த அனைத்து புரட்சிகர தொழிற்சங்கங்களும் ஒரு சில வேறு கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும் அரசுக்கு எதிராய் அணி திரண்டன. அவை ஒன்று கூடி, ஒரு குறிப்பிட்ட தேதியில் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் செய்ய முடுவெடுத்து செயல் பட்டன. அந்த நீரோட்டத்தில் பேட்டை மற்றும் நகரத்தின் விசைத்தறி தொழிற்சங்கமும், சிறு விசைத்தறி முதலாளிகள் சங்கமும் இணைந்தன. புரட்சிகர சக்திகள் இந்த சமயத்தை பயன்படுத்திக் கொண்டு தங்கள் தலமையில் ஐக்கிய முன்னணிக்கு வருமாறு அனைத்து தேச உணர்வுள்ள முதலாளித்துவ அமைப்புகளுக்கும் அறைகூவல் விடுத்தன.

இதையெல்லாம் முன் கூட்டியே எதிர்பார்த்து அரசும், உளவுத்துறையும் பொது வேலை நிறுத்தத்தை ஒடுக்க அனைத்து பலப் பிரயோகங்களை யும் செய்ய முனைப்புக் காட்டின. அதில், மிக முக்கியமாய் பொது வேலை நிறுத்தத்தில் ஒவ்வொரு ஊரிலும், நகரங்களிலும் யாரெல்லாம் தொழிலாளர்கள் மற்றும் சிறு முதலாளிகள் தரப்பில் முன் வரிசையில் நிற்கிறார்களோ அவர்களை முன் கூட்டியே கைது செய்து சிறையில் அடைக்க காவல்துறை மூலமாய் தேடுதல் வேட்டை நடத்தியது அதிகார வர்க்கம். அதிலும், புரட்சிகர இயக்கங்களால் வழி நடத்தப் படும் தொழிற்சங்கங்கள் என்றால் கேட்கவே வேண்டாம். காவல் துறையின் பட்டியலில் முதலிடம் அத்தகைய தொழிற்சங்கங்களின் முன்னோடிகளுக்குத்தான்.

நகரத்திலும், பேட்டைச் சுற்று வட்டாரங்களிலும் வெளியூரில் இருந்து வந்து தறிகள் ஓட்டும் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே அடையாள அட்டைகள், ரேசன் கார்டுகள் வழங்கப்பட்டு இருந்ததால், அதிலிருந்த முகவரிகள் போலீசாருக்கு சாதகமாய் இருந்தன. அதன் மூலமாய் தொழிற்சங்க முன்னோடிகள் எந்த முகவரியில் வசிக்கிறார்கள். யார் பேக்டரியில் தறியோட்டுகிறார்கள் என்பதை துல்லியமாய் அறிந்துக்

கொண்டு அங்கெல்லாம் தேடி வந்தார்கள். ஏற்கனவே, சிறு விசைத்தறி முதலாளிகளும், தொழிலாளர்களும் சேர்ந்து நடத்திய சாலை மறியல் போராட்டத்தில் சமரசம் பேச வந்த துணை ஆட்சியர் இந்த பகுதியில் செயல்படும் புரட்சிகர சக்திகளை ஒடுக்க அரசுக்கு பரிந்துரையாய் ஒரு அறிக்கையை தயார் செய்து கொடுத்திருந்தார். அதையொட்டியே அடக்குமுறைகள் அரங்கேறின. அதற்கு பொது வேலை நிறுத்தம் ஒரு வாய்ப்பாய் அமைந்து விட்டது. அரசுத்துறையில் இருந்த சில ஜனநாயக சக்திகள் மூலமாய் புரட்சிகர இயக்கத் தலைமைக்கு இந்த தகவல்கள் முன் கூட்டியே கசிந்து விட்டன. எனவே, தோழர் அனுராதா தொழிற்சங்க முன்னோடிகளை போலீசில் சிக்காமல் கவனமாய் இருக்குமாறு எச்சரிக்கை செய்திருந்தார்.

8

அவரும் பேட்டைக்கு வருவதை நிறுத்தி விட்டு சுற்று வட்டார கூலி விவசாயிகள் இருப்பிடத்தையே தன் ஷெல்டராய் மாற்றிக் கொண்டு சந்துரு, மாதேசு, கந்தப்பன், ஓபுளி, ஏழுமலை, மச்சக்காளை, பச்சையப்பன், சிற்பி போன்ற தோழர்களை ரகசியமாய் அங்கு வரவழைத்து போராட்ட செயல் திட்டங்களை வடிவமைத்தார்.

ஆனால், என்னதான் எச்சரிக்கையாய் இருந்த போதும் அந்த கொடூர சம்பவத்தை தடுக்க இயலவில்லை.

சங்க முன்னோடிகள் அனைவரும் போராட்ட நெறிமுறைகளின் படி நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை தங்களுக்குள் பிரித்துக் கொண்டு அங்கெல்லாம் காவல்துறையின் கண்ணில் படாமல் ஆளுக்கொரு சைக்கிளை எடுத்துக் கொண்டு தொழிலாளர்களை கலந்தாலோசிக்க சுற்றி வந்தார்கள். அவர்களுக்கு தங்களை பாதுகாத்துக் கொள்வது மட்டுமல்லாமல், சிறு முதலாளிகள் சங்கத்தின் முன்னோடிகளையும் பாதுக்காக்க வேண்டிய கடமை இருந்தது. எந்த வகையிலும் பொது வேலை நிறுத்தத்தில் போலீசால் இடையூறு ஏற்படக் கூடாது.

அந்த வகையில் மாதேசு நின்ற கிராமத்தின் கல் குவாரியொன்றில் தேவராசு, கருணாகரன் மற்றும் நகரத்தை சேர்ந்த சில சிறு முதலாளி களை தங்க வைத்திருந்தான். தினமும் அவர்களைப் பார்த்து விட்டு அப்படியே சுற்றியுள்ள கிராமங்களுக்குப் போய் தொழிலாளர்களை சந்திப்பது அவன் வழக்கம்.

இதை யாரோ பார்த்து விட்டு சுந்தரியின் கணவனிடம் கூறி இருக்கிறார் கள். மாதேசின் மீதான தன் வஞ்சத்தை தீர்த்துக் கொள்ள, இந்த சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தான் அந்த அயோக்கிய ரவுடி. அதற்காக தன் கூட்டாளிகள் சிலரை தயார் செய்தான்.

ஒரு மாலை நேரத்தில் நின்ற கிராமத்தைச் சுற்றியிருந்த மலைக்குன்றில் பதுங்கிக் கொண்டு மாதேசு சைக்கிளில் அந்த இடத்தை கடக்கும் போது சட்டென ஒரு பெரிய பாறாங்கல்லை உருட்டி விட்டு சைக்கிள் தடத்தை மறைத்தார்கள் சுந்தரி கணவனின் சகாக்கள். மாதேசு பாறாங்கல் உருண்டு வரும் சமயத்தில் சட்டென தன் சைக்கிளை நிறுத்தி விட்டான்.

அப்போது ஏற்கனவே, திட்டமிட்டபடி அருகிலிருந்த புதர் மறைவில் இருந்து வெளிப்பட்ட சுந்தரியின் கணவன், மாதேசு எதிர்பாராத சமயத்தில் நீண்ட கத்தியால் அவன் தலையில் வெட்டினான். மாதேசு பெருங்குரலெடுத்து அலற, அருகாமையில் இருந்த விவசாயத் தொழிலாளர்கள் இதைக் கேட்டு ஓடி வர, சுந்தரியின் கணவன் மேலும் சில ஆழமான வெட்டுகளை மாதேசின் உடம்பில் ஏற்படுத்தினான்.

9

அவன் இனி பிழைக்க வாய்ப்பில்லை என புரிந்துக் கொண்டு எல்லா ரவுடிகளும் தப்பிவிட, ஓடி வந்த கூலி விவசாயிகள் ரத்த வெள்ளத்தில் மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்த மாதேசை யாரென அடையாளம் தெரிந்துக் கொண்டு அனுமந்துவுக்கும், கொண்டையாவுக்கும் தகவல் தெரிவித்திருக்கிறார்கள்

அவர்கள் உடனே ஒரு மாட்டுவண்டியில் மாதேசை தூக்கிப் போட்டுக் கொண்டு நகரத்தின் அரசு மருத்துவமனை வந்து சிகிச்சைக்காக சேர்த்தார்கள். ஆனால், உயிருக்குப் போராடுபவனைக் காப்பாற்ற மருத்துவர்களுக்கு காவல்துறை சம்பிரதாயங்கள் குறுக்கே நின்றன. போலீஸ் வர வேண்டும். வெட்டுப்பட்டவனின் உடம்பிலுள்ள காயங் களை அவர்கள் குறிக்க வேண்டும் அதற்குப் பிறகுதான் சிகிச்சை தொடங்கப்பட வேண்டும். எனவே, தங்கள் இயலாமையை மருத்துவர் கள் தெரிவிக்க, தோழர்கள் அனுமந்துவும், கொண்டையாவும் ஓடிச் சென்று' அருகிலிருந்த நகரத்தின் காவல்நிலையத்தில் தெரிவித் தார்கள்.

அங்கு யாரும் சிறிதும் அசையவில்லை.

தோழர்கள் ஆத்திரத்தில் காவலர்களைப் பார்த்து சத்தம் போட்டார்கள். அதன் பிறகு, சாவகாசமாய் தன் அறையை விட்டு வெளியே வந்த நக்கல் இன்ஸ்பெக்டர் ''என்னய்யா... அந்த ஆணிக்காலன் இன்னுமா உசுரோட இருக்குறான்?'' என்று கேட்டார்.

அந்த வார்த்தைகள் தோழர்களுக்கு எதையோ உணர்த்தியது. நிச்சயம் இது ரவுடிகள் மட்டும் செய்த பழி வாங்குதல் அல்ல. சுந்தரியின் கணவன் பின்னே இந்த காவல் அதிகாரியின் தூண்டுதல் இருக்கிறது. முன்பு நடந்த சாலை மறியல் போராட்டத்தின் பேச்சுவார்த்தை சமயத்தில் மாதேசு இவனை அனைவர் மத்தியில் அம்பலப்படுத்திய தற்கு ரவுடிகளை வைத்து தோழரைப் பழி தீர்த்துக் கொண்டிருக்கிறான். இந்த முடிவுக்கு வந்த அவர்களில் அனுமந்து ஆவேசமாய் எச்சரித்தார் ''இங்க பாருங்க இன்ஸ்பெக்டரே, எங்க தோழர் மட்டும் பொழைக்கலன்னா இதுக்கு நீங்க குடுக்குற வெல ரொம்ப அதிகமாயிருக்கும். ஒங்களுக்கு மட்டுந்தான் பழி வாங்க தெரியுமா? எங்களுக்கும் தெரியும்.'' என்று.

காவல் அதிகாரி திடுக்கிட்டுப் போனார். அனுமந்தும், கொண்டய்யா வும் யார்? அவர்களின் பின்னே எப்படிப்பட்ட இயக்கம் இருக்கிறது? என்பதெல்லாம் அவருக்கு தெரியாதா என்ன? அது மட்டுமல்லாமல் அவர்கள் இந்த பகுதியை சேர்ந்தவர்கள். சொன்ன மாதிரி ஏதாவது செய்து விட்டால் நமக்குத்தான் ஆபத்து என்ற எண்ணம் அவருக்கு ஒரு கணம் வந்து போனது. ஆயினும், அதிகார வர்க்கத்தின் திமிர் மறுகணமே வந்து விட்டது.

10

''செரி, செரி போங்க நா இப்ப ஸ்டேசன் ரைட்டரை ஆஸ்பத்திரிக்கு அனுப்புறேன்.'' என்று வெகு அலட்சியமாய் சொல்லி வலுக்கட்டாய மாய் தோழர்களை வெளியேற்றினார். எனினும், சட்டென சூழ்நிலை மாறியது. தோழர் இளங்கோ தன் சக மாணவர்களுடன் அங்கு வந்தான்.

அவன் மாதேசை கொலை செய்யப் பார்த்திருக்கிறார்கள் என்று தெரிந்ததும் மருத்துவமனைக்குப் போய் விசாரித்து விட்டு வந்திருக் கிறான். காவல் அதிகாரியின் அலட்சியத்தை அனுமந்தும், கொண்டையாவும் தெரிவிக்க மாணவத் தோழர்கள் காவல்

நிலையத்தின் முன்னால் முழக்கமிட ஆரம்பித்தார்கள். அதற்குப் பின்னரே, நக்கல் இன்ஸ்பெக்டர் ரைட்டரை உடனடியாய் மருத்துவ மனைக்கு அனுப்பினார்.

எல்லோரும் அங்கே போன சமயத்தில் விவரமறிந்து பேட்டையில் இருந்து அலறித் துடித்தபடி பொன்னியும் அவள் தாயாரும் வர, அவர்கள் கூடவே அங்கம்மாளும், கோகிலா அம்மாளும் தேவராசு வீட்டுப் பெண்களும் வந்திருந்தார்கள். ரைட்டர் மளமளவென ரத்தச் சகதியில் கிடந்த மாதேசின் உடல் காயங்களை குறித்தார். சாகக் கிடப்பவனிடம் எதையும் விசாரிக்க முடியவில்லை. எனவே, டாக்டர்கள் சடுதியில் சிகிச்சையை ஆரம்பித்தார்கள்.

சற்று நேரத்தில் மருத்துவமனையின் முன்னால் பெருங் கூட்டம் சேர்ந்து விட்டது. அதன் முன்னணியில் சரிதாவும், சுந்தரியும் மற்றும் அவர்கள் சிநேகிதிகளும் தெரிந்தார்கள். அவர்கள் பொன்னிக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், யாரையும் உள்ளே போக விடவில்லை மருத்துவமனை ஊழியர்கள். எனினும், மாதேசை கடைசியாய் பார்த்து விட்டு வெளியே வந்த அனுமந்து, கொண்டையா, இளங்கோ போன்ற தோழர்களுக்கு தெளிவாய் தெரிந்து விட்டது மாதேசு உயிர் பிழைப்பது சிரமமென்று. அவர்கள் உள்ளுக்குள் அழுதுக் கொண்டிருந்தார்கள். பொழுது நன்றாக இருட்டி விட்டது.

அதற்குப் பிறகுதான் நகரத்தை அடுத்துள்ள தடுக்குப் பேட்டை. சீவாடா, சத்திரவாடா பொன்பாடி போன்ற பகுதிகளைச் சுற்றியிருந்த தொலைதூர கிராமங்களில் தங்கியிருந்த சந்துரு, அனுராதா, கந்தப்பன், ஏழுமலை, ஓபுளி, சிற்பி, மச்சக்காளை மற்றும் பச்சையப்பன் போன்றவர்களுக்கெல்லாம் மாதேசு சாக கிடக்கிறான் என்ற விசயம் தெரிந்தது.

எல்லோரும் துடித்துப் போய் விட்டார்கள். சந்துரு அழுதே விட்டான்.

இரவோடு இரவாய் தோழர்கள் ஓரிடத்தில் ஒருங்கிணைந்தார்கள்.

11

அனைவரது முகத்திலும் கோபக் குமுறல் தெறித்தது. அவர்கள் வந்து அமர்ந்திருந்தது ஒரு எளிய குடிசை. வெளியே லேசாய் தூறல் போட்டுக் கொண்டிருந்தது. குடிசைக்குள் சில்லிப்புத் தட்டினாலும் அது யாருடைய மன வெப்பத்தை தடுத்து விடவில்லை.

சந்துரு தன் குரலை உயர்த்தி அனுராதாவிடம் சொன்னான் ''தோழர் இத இப்புடியே வுட்டா எதிரிக்கு தொக்காப் போய்டும்.'' என்று.

அதை அவர் ஆமோதித்து தலையாட்டினார்.

அதைப் பார்த்த சிற்பி ''தோழர் நம்ப தொழிலாளிங்கள வெச்சி உடனே அந்த ரவுடிங்கள தேடச் சொல்லலாம். கிடைச்சா அந்த எடத்துலயே கையக் கால முறிக்கச் சொல்லுவோம்.'' என்று காட்டமாய் சொன்னான்.

அதற்கு கந்தப்பன் ஒரு படி மேலே போய் ''அது மட்டும் பத்தாது. அவனுங்கள்ல சுந்தரி புருசனுக்கு மரண தண்டனை கொடுக்கணும். அப்பத்தான் இனுமே நம்ப தோழர்கள் மேல அவுனுங்க கை வெக்க மாட்டாங்க.'' என்று ஆவேசப்பட்டார்.

அதைப் போலவே மற்றவர்களும் கருத்துச் சொல்ல அனுராதா கூறினார் ''அதுக்கு முன்னாடி அவுங்களுக்கு ஒரு எச்சரிக்கை குடுப் போம்.'' என்று. அப்படி அவர் சொல்லக் காரணம் அவசரப்பட்டு தேவையில்லாமல் எதிரிகளை அதிகப்படுத்திக் கொள்ளக் கூடாது. ரவுடிகளிடையே ஒரு அச்சத்தை உருவாக்கி சுந்தரி கணவனை தனிமைப் படுத்த வேண்டும் என்பதே.

அவரது ஆணித்தரமான பேச்சில் சந்துருவும் மற்ற தோழர்களும் உடன்பட்டார்கள்.

முன்னணி அமைப்புகளின் தோழர்கள் கொண்டையா, அனுமந்து, இளங்கோ போன்றவர்கள் மூலமாய் அந்த ரவுடிகளுக்கு நெருக்கமாய் இருந்தவர்களிடம் எச்சரிக்கை செய்தி விடப்பட்டது.

அவர்கள், அதை ரவுடிகளுக்கு உடனடியாய் தகவல் சொன்னது மட்டுமில்லாமல், கூலி விவசாயிகளுக்கு, மாணவர்களுக்கு மற்றும் தொழிலாளர்களுக்கு இந்த ஊரில் மட்டுமல்ல, சுற்று வட்டார கிராமங்களிலும் செல்வாக்கு உண்டு என்பதை அறிவுறுத்தி அவர்களை பகைத்துக் கொள்வது ஆபத்து எனவும் எடுத்துக் கூறினார்கள்.

தங்களுக்கு நெருக்கமானவர்கள் கொடுத்த அறிவுறுத்தலால் ரவுடிகள் மனதில் திடுமென அச்சம் சூழத் தவறவில்லை.

12

நாளையே யாரேனும் பொதுமக்கள் நம்மை அவர்களிடம் பிடித்துக் கொடுத்து விடலாம். அவசரப்பட்டு சுந்தரிக் கணவனின் பேச்சைக்

கேட்டது தவறென அவர்கள் தங்களுக்குள் கூடிப் பேசினார்கள். ரகசியமாய் அனுமந்து மூலமாய் சந்துருவுக்கு தகவல் அனுப்பி மன்னிப்புக் கேட்டார்கள். அது, திருந்தாத சுந்தரியின் கணவன் வாயிலாய் போலீசுக்கு தெரிந்தது. பொது வேலை நிறுத்தத்தை உடைக்கவும், தொழிலாளர்களை அச்சுறுத்தி அன்றைய தினத்தில் தலையெடுக்க விடாமல் செய்யவும், ரவுடிகளை ஆயுதமாய் பயன்படுத்த நினைத்திருந்த உள்ளூர் காவல் அதிகாரிக்கு இந்த தகவல் மனநெருக்கடியை ஏற்படுத்தியது.

மாதேசு உயிருக்குப் போராடிக் கொண்டு இருக்கும் போதே புரட்சிகர இயக்கத்தின் நடவடிக்கைக்கு சவால் விடும்படி அந்த நக்கல் ஒரு காரியம் செய்தது.

இரவோடு இரவாய் சரிதாவின் குடிசைப் பகுதிக்கு சென்று அங்கிருந்த அவளையும், சுந்தரி, வனிதா, சாந்தி போன்றவர்களையும் காவல்நிலையத்துக்கு இழுத்து வந்து அடித்து சித்ரவதை செய்தது. அதிலும், சரிதாவை நிர்வாணமாக்கி தலை கீழாய் தொங்க விட்டு அவள் தலைமுடியைப் பொசுக்கி, பிறப்புறுப்பில் லட்டியை சொருகி கொடூரமாய் நடந்துக் கொண்டது.

''சந்துரு எங்கடீ?''

''நக்சலைட்டுங்களுக்கு சப்போர்ட் பண்றியா?''

''அவுசாரிங்கல்லாம் ஒண்ணா சேந்து சங்கமா கட்றீங்க...''

என்று சொல்லிச் சொல்லி அடி விழுந்தது.

இந்த விசயம் காவல்துறையில் இருந்த சில மனிதாபிமான காவலர்களால் மறுநாள் காலை வெளியே கசிந்தது.

மருத்துவமனையில் மாதேசின் பக்கத்தில் தன் தாயாரோடு இருந்த பொன்னிக்கு இந்த தகவல் தெரிந்ததும் அவள் எரிமலையானான். அவளுக்குள் ஆவேசம் சுழன்றடித்தது. அந்த சமயத்தில் அங்கே வந்த அனுமந்து, கொண்டையா மற்றும் இளங்கோவிடம் ஆலோசித்து உடனடியாய் முடிந்த அளவில் பெண்களை திரட்ட முடிவெடுத்தாள். அதற்கு தோழர்கள் அபாரமாய் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள்.

அவர்களின் முயற்சியின் பலனாய் அடுத்த ஒரு மணி நேரத்தில் ஒடுக்கப்பட்ட பெண்கள் முன்னணியில் இருந்த மகளிர் மட்டு மல்லாது கூலி விவசாயப் பெண்கள், கல்லூரி மாணவிகள் என்று ஒன்று திரட்டப்பட்டார்கள்.

13

நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் நகரத்தில் திரண்ட அதே நேரத்தில் தோழர் வசீகரன், தோழர் இளங்கோவின் தொலைப்பேசி தகவல் அறிந்து தன்னுடன் பெண் வழக்கறிஞர்கள் கொஞ்சம் பேரை ரேணிக்குண்டாவில் இருந்து அழைத்து வந்து விட்டார்.

பெண்கள் அனைவரும் நேரே காவல்நிலையத்திற்குப் போனார்கள்.

உரத்த குரலில் முழக்கமிட்டு அப்படியே தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

லோக்கல் இன்ஸ்பெக்டர் இதை எதிர்பார்க்கவில்லை. அவரது கணிப்பில் வெறும் கூலிக்கார பெண்கள் என்றால், சுலபமாய் தடியடி நடத்தி துரத்தி விடலாம். ஆனால், இங்கே வந்திருப்பது பெண் வழக்குரைஞர்கள், அவர்களுக்கு இணையாய் கல்லூரி மாணவிகள், அதுவும் வக்கீல்கள் வந்திருப்பது வழக்குரைஞர் உடையில். அடக்குமுறையைப் பிரயோகித்தால் நிச்சயம் வம்பு வரும். நம்மை சும்மா விட மாட்டார்கள்.

அவர் தந்திரமாய் ஒரு காரியம் செய்தார்.

தனக்கு கீழிறுந்த காவலர்களிடம் சரிதாவையும் மற்ற பெண்களையும் விடுவிக்கச் சொல்லி விட்டு தனக்கு ஏதோ அவசர வேலையிருப்பதாய் காட்டிக் கொண்டு தன் வாகனத்தை எடுத்துக் கொண்டு காவல் நிலையத்தின் பின்புற வழியே கிளம்பி விட்டார்.

சற்று நேரத்தில், சரிதா உடம்பு முழுக்க காயங்களோடு சுந்தரியின் தோளைப் பிடித்து மெல்ல நடந்து, காவல் நிலையத்தின் உள்ளிருந்து வெளியே வந்தாள். அவளுக்கு நடந்த அநியாயங்களை கூட இருந்த தோழிகள் சொல்லக் கேட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அனைவரும் கொதித்துப் போனார்கள்.

அந்த அயோக்கியன் இன்ஸ்பெக்டர் தங்கள் கையில் சிக்காமல் தப்பித்து ஓடி விட்டானே என பொருமினார்கள். அந்த இடத்திலேயே வசீகரன் தன் சக வழக்குரைஞர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். சரிதாவை அரசு மருத்துவமனையில் சேர்க்க இயலாது. அவர்கள் போலீசுக்கு விரோதமாய் ஏதும் செய்யப் போவதில்லை. எனவே,

அரசுப் பதிவுப் பெற்ற தனியார் மருத்துவமனையில் சேர்த்து அவள் உடம்பிலுள்ள கொடிய காயங்களை குறித்துக் கொடுக்கச் சொல்லி அங்குள்ள மருத்துவரிடம் கேட்பது. அவர் தரும் மருத்துவ அறிக்கையை வைத்து நக்கல் இன்ஸ்பெக்டர் மேல் தனியார் வழக்கொன்றை கோர்ட்டில் பதிவு செய்து தண்டனை வாங்கித் தருவது என்று முடிவு செய்தார்கள்.

14

அதன் படியே அவள் தன் தோழிகளுடன் தனியார் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டாள். அவளுடன் ஒப்பிடும் போது சுந்தரி, வனிதா, சாந்தி போன்றவர்களுக்கு வெறும் உள் காயங்கள் மட்டும் தான். பொன்னி, இப்போது மாதேசைப் பார்த்துக் கொள்வதை தான் ஏற்றுக் கொண்டு தன் அம்மாவை சரிதாவைப் பார்த்துக் கொள்ளும்படி செய்தாள். என்றாலும், தனியார் மருத்துவமனையில் கெடுபிடி குறைவு என்பதால் அவள் தோழிகள் கூட இருந்து பணிவிடை செய்தார்கள்.

தோழர் வசீகரன் தன் சக வழக்குரைஞர்களை ஊருக்கு அனுப்பி விட்டு அன்றிரவு ரகசியமாய் தோழர்கள் அனுமந்து, கொண்டையா மற்றும் இளங்கோவுடன் அனுராதாவையும், சந்துருவையும் சந்தித்தார். அவர்களிடம் சரிதாவுக்கு நேர்ந்த கொடுமையை அவரே தன் வாயால் சொல்ல சந்துருவை விடவும் அனுராதா துடித்துப் போய் விட்டார். அது சரிதாவின் வேதனையை தன்னிடத்தில் உணர்ந்த வெளிப்பாடாய் இருந்தது.

அனைவருமாய் சேர்ந்து இதற்கெல்லாம் காரணமான அந்த காவல் அதிகாரிக்கு தக்க பாடம் புகட்ட முடிவு செய்தார்கள். சட்டப்படி அவன் தண்டிக்கப் படாவிட்டால், மக்கள் முன் நிறுத்தி தண்டனை தருவது என முடிவு செய்தார்கள்.

பொது வேலை நிறுத்தத்திற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தது. சந்துருவுக்கு ராப்பகலாய் தூக்கமே இல்லை. அவனுக்கு மாதேசும், சரிதாவும் மற்றவர்களை விட நெருக்கமானவர்கள். அவர்களை தன் இரண்டு கண்களாய் நேசித்தான். எனவே, மனதில் எழும் துக்கத்தை அடக்கிக் கொண்டு பொது வேலை நிறுத்தம் சிறப்பாய் முடியட்டும் மற்றதை அப்புறம் வைத்துக் கொள்ளலாம் என மனதுக்குள் கறுவிக் கொண்டிருந்தான்

மறுநாள் பொழுது விடிந்ததும், பத்திரிக்கை வாயிலாய் மத்திய அரசாங்கம் அகில இந்திய போராட்டக் குழுவை பேச்சு வார்த்தைக்கு வரும்படி விடுத்த வேண்டுகோள் தெரிய வந்தது. இந்த சமயத்தில் இயக்கத்தின் தலைமைக் குழுவுக்கு தங்கள் ஆலோசனை தேவைப்படும் என்பதால் அனுராதாவும் தோழர் வசீகரனும் செய்தி அறிந்த மறு நிமிடமே ஊருக்குப் புறப்பட்டார்கள்.

போகும் போது சந்துருவுக்கு உணர்ச்சி வயப்பட்டு ஏதேனும் ஒரு வழியில் தனித் தனி மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெறும் மாதேசையும், சரிதாவையும் பார்க்க முயல வேண்டாம் அது எதிரியின் கண்ணில் பட்டால் ஆபத்தாகி விடும் என அறிவுறுத்திச் சென்றார்கள். அவனும் வேறு வழியில்லாமல் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

15

என்றாலும், மாதேசுக்கோ, சரிதாவுக்கோ உயிருக்கு ஆபத்து ஏதும் வந்து விடக் கூடாது என மனதுக்குள் பதட்டப்பட்டுக் கொண்டு கிடந்தான்.

பொது வேலை நிறுத்தத்துக்கு முதல் நாள் டெல்லியில் அனைத்துக் கட்சிப் போராட்டக் குழுவுக்கும், மத்திய அரசின் அமைச்சர் மற்றும் ஜவுளித் துறை அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை தொடங்கியது. பெரு முதலாளிகள் ஏகாதிபத்தியங்களின் நலன் காக்கும் அரசு தனது புதிய ஜவுளிக் கொள்கையை செயல்படுத்துவதில் உறுதியாய் இருந்தது. அதற்கு ஏழை தொழிலாளர்களைப் பற்றியோ, சிறு விசைத்தறி உரிமையாளர்கள் பற்றியோ கொஞ்சமும் கவலையில்லை.

ஆனால், போராட்டக்குழுவில் இருந்த புரட்சிகர கட்சிகளின் தொழிற் சங்கங்கள் அரசின் போக்கை ஏற்றுக் கொள்வதாயில்லை. கோடிக் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை சிறு எண்ணிக்கையிலான முதலாளிகளுக்கு மத்திய அரசு பலியிடுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை.

இரு தரப்பும் தத்தமது வர்க்க நலனுக்காக பேச்சு வார்த்தையில் கடுமையாய் மோதிக் கொண்டன. சிறுக சிறுக இந்த நாடு அந்நியருக்கு தாரை வார்க்கப்படுகிறது. ஏகாதிபத்தியத்தின் வேட்டைக்காடாய் மாறி வருகிறது. அவர்களுக்கு இங்குள்ள தரகு முதலாளிகள் நீண்ட

நெடுங்காலமாய் கூட்டாளிகளாய் இருக்கிறார்கள். இந்த இரண்டு தரப்புக்கும் சேவை செய்யவே மத்திய அரசு விரும்புகிறது.

இதற்கு மாநில அரசுகளும் துணைப் போகின்றன.

நீண்ட நெடிய சொல்லாடல்கள். ஆவேசமான மோதல்கள். புரட்சிகர தொழிற்சங்களின் தொடர் போராட்ட எச்சரிக்கைகள் இதற்கெல்லாம் பிறகு, மத்திய சற்று கீழிறங்கி வந்தது. தான் அறிவித்த புதிய ஜவுளிக் கொள்கையில் உள்ள சில ஷரத்துகளை நீக்க ஒப்புக் கொண்டது. அது, யாதெனில்...

விசைத்தறிகளைப் பொறுத்த வரையில் தற்போதுள்ள நடைமுறையே நீடிக்கும். ஆனால், அந்நிய மூலதனங்களை ஜவுளித்துறையில் அனுமதிப்பதை நிறுத்தாது. பெரு முதலாளிகளுக்கு நவீன மில்கள் அமைக்கவும், தறி இயந்திரங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய ஊக்கமும், சலுகையும் அளிக்கப்படும். என்றாலும், போராடும் தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டபடி அவற்றுக்கான ரகங்கள் பாலியஸ்டர் மற்றும் ஜீன்ஸ் துணிகளாய் மட்டும் இருக்கும். மற்ற ரகங்களை விசைத்தறியில் தயாரித்துக் கொள்ளலாம்.

16

கைத்தறிக்கான துணி கொள்முதல்கள் இனி முறைப்படுத்தப்படும்.

இந்த அளவில் மத்திய அரசு ஒப்புக் கொண்டதன் பேரில் அன்று நள்ளிரவில் பொது வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொள்ள போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து தொழிற்சங்கங்களும் முடிவு செய்து அதை பத்திரிகையாளர் தரப்புக்கு அறிக்கையாய் கொடுத்தன.

அது மறுநாள் அனைத்துப் பத்திரிக்கைகளிலும் பிரசுரமானது. முன் தினம் இரவு தூங்காமல், கொள்ளாமல் பேச்சுவார்த்தை முடிவுக்காக காத்திருந்த விசைத்தறி தொழிலாளர்களுக்கு, சிறு முதலாளிகளுக்கு நிம்மதியான விடியலாய் இருந்தது.

சந்துரு எல்லா விபரங்களையும் பத்திரிக்கையில் படித்து விட்டு உடனே நகரத்துக்கு ஆள் அனுப்பி தோழர் வசீகரனிடம் தலைமறை வில் இருந்து தொழிற்சங்க முன்னோடிகளும், சிறு விசைத்தறி முதலாளிகளும் வெளியே வரலாமா? என தொலைப்பேசியில் கேட்டு வரச் சொன்னான். அவர் தாராளமாய் வெளியே வரலாம் எந்த

பிரச்னையும் இல்லை என கூற, தகவலுக்காக அனுப்பிய தோழர் உற்சாகமாய் வந்து சொன்னார்.

சரசரவென சந்துரு, கந்தப்பன், சிற்பி, ஓபுளி, ஏழுமலை, மச்சக்காளை, பச்சையப்பன் போன்ற தோழர்கள் கிராமப்புறங்களில் இருந்து வெளிப்பட்டு நகரத்துக்கு பஸ் பிடித்தார்கள்.

அதே போல தேவராசு மற்றும் அவரது சகாக்கள் தங்கள் ஷெல்டர் களில் இருந்து நகரம் நோக்கி கிளம்பினார்கள். எல்லோரது மனதிலும் மாதேசின் உயிருக்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்க கூடாது. சரிதா குணம் பெற்றிருக்க வேண்டும் என்ற எண்ணங்களே மேலோங்கி இருந்தன.

நகரத்துக்கு முதலில் வந்து சேர்ந்த தேவராசு மற்றும் அவரது கூட்டாளிகள் சந்துருவும் மற்ற தோழர்களும் எதிர்திசையில் இருந்து வந்துக் கொண்டிருப்பதைக் கேள்விப் பட்டு அவர்களுக்காக பஸ் நிலையத்திலேயே காத்திருந்தார்கள்.

சிறிய கால இடைவெளியில் தோழர்கள் வந்து விட அனைவரும் டெல்லிப் பேச்சுவார்த்தை பற்றிக் கூட எதுவும் பேசிக் கொள்ளாமல் தற்போது முதலில் எந்த மருத்துவமனைக்குப் போவது என்று யோசித் தார்கள். சந்துரு, மாதேசைப் பார்க்கலாம் என்று கூற, அனைவரும் அவன் அனுமதிக்கப்படிருக்கும் அரசு மருத்துவமனைக்கு விரைந்தார்கள். ஏனெனில், அதுதான் சற்று அருகாமையில் இருந்தது.

17

நகரத்தின் பேருந்து நிலையத்தில் இருந்து வெறும் ஐந்து நிமிட நடைதான் என்றாலும், சந்துருவுக்கு நடப்பது சிரமமாய் இருந்தது. கால்கள் இழுத்துக் கொண்டது போல தோன்றியது. சமாளித்து நடந்தான். அந்த காலை நேரத்தில் வேர்த்தது.

அவனது அவஸ்தையைப் புரிந்துக் கொண்டது போல் ஓபுளி நடந்துக் கொண்டே சந்துருவின் கையைப் பிடித்தான் ''இவனே.. மாதேசுக்கு ஒண்ணும் ஆயிருக்காது.'' என்று தைரியம் சொன்னான்.

அவன் வாய்ச்சொல் பலித்தது போலவே மருத்துவமனையிலும் இருந்தது. மாதேசு இரவு தான் அபாயக் கட்டத்தை தாண்டியிருந்தான். அவனை காலையில் சற்று முன்புதான் ஐசியூவிலிருந்து தனி வார்டுக்கு மாற்றியிருந்தார்கள். என்றாலும், அவன் தலையில் உடம்பில்

போடப்பட்டிருந்த காயக்கட்டுகள் சந்துருவின் மூளையில் தீப்பிடிக்க வைத்தன.

அவனும் மற்ற தோழர்களும் தேவராசும் அவரது கூட்டாளிகளும் கூட்டமாய் போய் நின்ற போது செவிலியர்கள் சத்தம் போடத்தான் செய்தார்கள். ஆனால், ஆர்வ மிகுதியால் அதைப் பொருட்படுத்தாமல் மாதேசின் கண் எதிரே அவர்கள் நிற்க, அவன் மெல்ல சிரித்தான். அவனை நலம் விசாரிக்கும் முன் அவன் போராட்டத்தின் நலனை சன்னமான குரலில் விசாரித்தான். பொது வேலை நிறுத்தம் திரும்ப பெறப்பட்டதையும், அதற்கான காரணத்தையும் பற்றி சந்துரு விளக்கிச் சொல்ல சந்தோசப்பட்டான். அப்போது கண்ணீரோடு பொன்னி சொன்னாள் ''நேத்து வரிக்கிம் மனுசம் பொழைப்பாருன்னு எனக்கு நம்பிகையில்ல...'' என்று.

அவளுக்கு இசைவாய் பேசிய கந்தப்பன் மனைவி ''டாக்டருங்களே அதிசயப்பட்டு சொன்னாங்க. ஒம் மருமவனுக்கு தெம்பான ஒடம்பும்மா... இல்லன்னா வுழுந்த வெட்டுக்குத்துக்கு செத்திருக்குணும்னு...'' என்றார்.

அதைக் கேட்டு சற்று அச்சத்துடன் தேவராசு கூறினார் '' டாக்டர் சொன்னது செரிதாம்மா. எங்கள மாதிரி ஆளுங்களுக்கு இந்த கொடுமை நடந்திருந்தா அந்த எடத்துலயே உசுரு போயிருக்கும்'' என்று.

உடனே அவருக்கு ஓபுளி ஒத்துப் பாடினான் ''ஆமா, இவனே...'' என்று.

அப்போது சந்துரு ''ஓபுளி அதுக்குத்தான் மாட்டுக்கறி திங்கணும்னு சொல்றது...'' என்று சொல்ல, சட்டென எல்லோரும் சிரித்தார்கள்.

18

அந்த நேரத்தில் பொன்னி சந்துருவிடம் ''சீக்கிரம் போயி சரிதாவப் பாருங்க.'' என்று துரிதப்படுத்தினாள்.

அடுத்த பதட்டம் தொற்றிக் கொள்ள சந்துருவும் மற்றவர்களும் மாதேசிடம் சொல்லி விட்டு, அதே வேகத்தில் தனியார் மருத்துவ மனைக்குப் புறப்பட்டார்கள். தேவராசும் கூட்டாளிகளும் அங்கும் பின் தொடர்ந்தார்கள்.

மாதேசோடு ஒப்பிடும் போது சரிதா சற்று பலவீனமாகத்தான் இருந்தாள். அவளுக்கு பூஞ்சை உடம்பு. வாழ்க்கையில் சத்தான உணவுக்கு வழியில்லை. அதிலும், போலீசின் தாக்குதல் என்பது கொடூரமானது என்பதை சந்துருவும், கந்தப்பனும், ஏழுமலையும் அனுபவித்தறிந்தவர்கள் அல்லவா? எனவே, தங்களையும் அறியாமல் சரிதாவின் மீது பரிதாபம் மேலிட கண் கலங்கினார்கள்.

சந்துரு வாழைத் தண்டாய் மருத்துவமனைக் கட்டிலில் கிடந்தவளை நெருங்கிச் சென்று ஆதரவாய் அவள் தலையில் தன் கையை வைத்தான். அப்போது அந்த கொடுமைக்கார நக்கல் போலீஸ் இன்ஸ்பெக்டரால் சிகரெட் லைட்டர் தீயால் பொசுக்கப்பட்ட முடிகளில் ஒன்றிரண்டு அவன் உள்ளங்கையில் ஒட்டிக் கொண்டு வந்தன. சட்டென திடுக்கிட்டு அருகேயிருந்த சுந்தரி, வனிதா, சாந்தியிடம் அது பற்றி விசாரித்தான்.

அதில், சுந்தரி நடந்ததை சொல்லி விட்டு ''நல்லவேளை சரிதா தலைமுடிய ஆசுபத்திரியில சுத்தம் பண்ணிட்டாங்க. அதுக்கு முன்னால நீங்க பாத்திருந்தா இந்த அளவுக்குக் கூட ஒங்க மனசு தாங்கியிருக்காது தோழர்.'' என்றாள்.

அவள் சொன்னது சந்துருவுக்கு மட்டுமல்ல மற்ற தோழர்களுக்கும் பேரதிர்ச்சியாய் இருந்தது.

அந்த நேரத்தில் தேவராசு ஆறுதலாய் கூறினார். '' நீயெதுக்கும் கவலப்படாதம்மா... அந்த அயோக்கியனுக்கு ஆண்டவன் கூலி கொடுப்பான்.'' என்று.

ஆனால், சரிதா தனக்கு ஏற்பட்ட துன்பத்தைப் பொருட்படுத்தாத வளாய் சந்துருவின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு சொன்னாள்

''நீங்க எங்கிட்ட எத்தனையோ தடவ சொல்லியிருக்குறீங்க, இந்த மாதிரி கஷ்டத்தையெல்லாம் அனுபவிக்க வேண்டியிருக்கும்னு... அந்த போலீசுக்காரன் அடிச்சப்ப அதத்தான் நா மனசுல நெனச்சுக்கிட்டேன். அதனால, எனக்கு வலியெல்லாம் பெருசா தெரியல.'' என்று.

19

அவள் அப்படிச் சொன்னது சந்துருவுக்குப் பெருமையாய் இருந்தது. அந்த நேரத்தில் அவன் சட்டென நினைவுக்கு வந்தவனாய் சரிதாவிடம் சொன்னான். அவளைப் போல இனி பெண்களை கோயிலுக்கு நேர்ந்து

விடும் கொடுமைக்கு சட்ட ரீதியாகவே முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது என்பதை.

அதைக் கேட்டு உணர்ச்சிக் கொந்தளிப்பு மேலிட ''நெசமாவாங்க...'' என்றவள், தன் உடல்நிலையையும் மீறி மெல்ல எழுந்து உட்கார முயன்றாள்.

சந்துரு அவள் சாய்ந்து உட்காரத் தோதாய் கட்டிலில் இருந்த தலையணைகளை சரி செய்து கொடுத்து உதவினான்.

சரிதாவின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வெளிப்பட்டது. ''என் சென்மத்துக்கு இது போதுங்க. இத்தோட அந்த கெரகம் ஒழியட்டும். எனக்கு இப்ப எவ்வளவு நிம்மதியா இருக்குது தெரியுமா? அந்த சாமி தட்டிக் கேட்காத அநியாயத்த நம்ப சங்கம் கேட்டுருக்குது. இந்த சந்தோசத்துல என்னுசுருப் போனாலும் இனுமே கவலை யில்ல...'' என்றாள் அவள்.

சந்துரு, சரிதாவின் கண்ணீரைத் துடைத்து விட்டு சொன்னான் ''அப்புடிச் சொல்லாதம்மா, நீ சாதிக்க வேண்டியது இன்னும் நெறையா இருக்குது.'' என்று. அதைக் கேட்டு அவளுக்கு உடம்பில் புது தெம்பு வந்ததாய் உணர்ந்தாள்.

பிறகு, குழந்தைப் போல சொன்னாள் ''நா ஊட்டுக்குப் போறேன். டாக்டர் கிட்ட கேட்டு என்ன வெளிய அனுப்பச் சொல்லுங்க.'' என்று.

ஆனால், அதை சந்துரு ஏற்றுக் கொள்ளவில்லை. அவனும் மற்றவர்களும் அவளை கண்டித்தார்கள்.

பிறகு, திடீரென சரிதா தன் தோழிகளை மெல்லிய குரலில் அதட்டினாள் ''ஏண்டீ எல்லாரும் ஆசுபத்திரியே கதின்னு கெடக்குறீங்க, எனக்கு ஒண்ணுமில்ல. நீங்க வூட்டுக்குப் போயி குளிச்சிட்டு சோறாக்கி தின்னுங்கடீ. மூதேவி புடுச்சுவளுங்களா...'' என்று.

அதற்கு வனிதா ''யம்மா... எங்களுக்கு இது தேவதான்.'' என்று முகத்தை நொடித்தாள். அவளும், சாந்தியும் சுந்தரியை மட்டும் இருக்க வைத்து விட்டு நகர முயல, சரிதா கூப்பிட்டுச் சொன்னாள் ''அப்புடியே பாபுவப் பாத்துக்குங்கடீ, நா இல்லாம அது ஏங்கிப் போயிருக்கும்.'' என்று.

வனிதா திரும்பி அவளைப் பார்த்து ''செரிம்மா ஒம் பிரண்ட நாங்க பத்திரமாப் பாத்துக்குறோம்'' என்று கூறி விட்டு நகர்ந்தாள்.

20

சந்துரு, தேவராசு உட்பட எல்லோரும் கொஞ்ச நேரம் அந்த தனியார் மருத்துவமனையில் இருந்து விட்டு வெளியே வர, அப்போது எதிரே அனுமந்துவும், கொண்டய்யாவும், இளங்கோவும் அவசரமாய் எதிர்பட்டார்கள். அவர்கள் முகத்தில் ஏதோ தீவிரம் தெரிந்தது.

சந்துரு அதைப் புரிந்துக் கொண்டு பொதுவாய் விசாரித்தான் ''என்ன தோழர்களே?'' என்று.

இளங்கோ முந்திக் கொண்டு சொன்னான் ''நீங்க எல்லாரும் தலைமறவா இருந்தப்ப மாதேசு தோழர கத்தியால வெட்டுன அந்த ரவுடிய கண்டுப்புடிக்க அவனாளுங்களே நமக்கு ஒத்துழைப்புக் கொடுக்குற மாதிரி நாங்க முயற்சிப் பண்ணி அவுங்க கிட்ட பேசி மனச மாத்துனம். அதுக்கு இப்ப பலன் கெடைச்சிருக்கு. அந்த ரவுடி எங்க இருக்குறான்னு தெரிஞ்சிப் போச்சி.''

''எங்க?'' என்று சந்துருவுடன் சேர்ந்து தோழர்கள் அனைவரும் ஒரே குரலில் கேட்டார்கள். அது பரபரப்பாய் இருந்தது.

அதற்கு அனுமந்து ''புதுப் பாலம் இருக்குதுல்ல, அதுக்கு கீழ குடிச்சிட்டு கெடக்குறானாம்.'' என்று சொன்னார். சந்துரு அவரிடம் ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன்னால் அங்கே, ரேணிக்குண்டாவுக்குப் போன தோழர் அனுராதா சரிதாவைப் பார்த்து நலம் விசாரிக்கவும், தனியார் மருத்துவமனைக்கு பணம் கட்டவும் திரும்பி வந்தார். அவர் தோழர்களிடம் நடந்த விபரத்தைக் கேட்டறிந்தார். சுந்தரியின் கணவனை பிடித்து வந்து அவன் மூலமாய் உள்ளூர் கொடிய இன்ஸ்பெக்டரை அம்பலப்படுத்தவும் திட்டம் வகுத்தார்.

திருப்பதி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் குசஸ்தலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட புதுப்பாலத்தின் அடியிலிருந்து அடுத்த ஓரிரு மணி நேரத்தில் அந்த ரவுடி தோழர்களால் நகரம் பேருந்து நிலையத்துக்கு அருகாமையில் இருக்கும் சந்தை திடலுக்கு இழுத்து வரப்பட்டான்.

அவன் வருவதற்கு முன்பாக விசயமறிந்து அங்கே பொதுமக்கள் ஏராளமாய் திரட்டிருந்தனர். முடிந்த அளவு தொழிலாளர்களும் அழைத்து வரப்பட்டிருந்தனர். கூடவே, உள்ளூர் பத்திரிக்கை நிருபர்கள் வந்து காத்திருந்தனர்.

கூட்டத்தைப் பார்த்து இழுத்து வரப்பட்ட ரவுடி முகம் வெளிறிப் போய் அச்சத்தின் உச்சத்தில் இருந்தான். எல்லோரையும் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டான்.

21

சிற்பி, சட்டென அவன் தலை முடியைப் பிடித்து அடிக்கப் போனான். அதைத் தடுத்த சந்துரு, ரவுடியிடம் ''இங்க பாருப்பா, நீ உண்மைய சொல்லிடு. ஒன்ன யாரு எங்க தோழர் மாதேச வெட்டச் சொல்லி தூண்டி விட்டா? அத தெளிவா இங்க இருக்குற பொதுசனத்துக் கிட்டயும், பத்திரிக்கைகாரங்க கிட்டயும் சொல்லிட்டா ஒனக்கு உசுரு மிஞ்சும். இல்லன்னா, நானும், எங்க தோழருங்களும், சனங்களும் அடிச்சே கொன்னுடுவோம் பாத்துக்க...'' என்று ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு நிதானமாகவே சொன்னான்.

அவன் அதற்காக காத்திருந்தவன் போல பொலபொலவென உண்மையை கொட்டி விட்டான். தன்னை மாதேசு அடித்ததை வைத்து உள்ளூர் காவல் அதிகாரி தான் அவனை கொன்று விடும்படி தூண்டி விட்டார் என்றும், அது மட்டுமல்ல, சந்துரு போன்றவர்களையும் சேர்த்தே தீர்த்துக் கட்டினால், அரசே பரிசு கொடுக்கும். ஏனெனில், அவர்கள் நக்சலைட்டுகள் என ஆசைக் காட்டினார் என்றும் கூறினான்.

அதன் பிறகு, மளமளவென அடுத்தடுத்த காரியங்கள் நடந்தன. அங்கிருந்த உள்ளூர் நிருபர்கள் தங்கள் பத்திரிக்கைகளுக்கு தகவல் தர விரைந்தார்கள். அதே சமயம், கூட்டத்தில் ஊடுருவியிருந்த அரசு உளவுத்துறையும் தங்கள் மேலிடத்துக்கு சொல்ல புறப்பட்டார்கள்.

ரவுடியின் வாக்குமூலத்தை வைத்து அவனை காவல் நிலையம் கூட்டிச் சென்ற தோழர்களும், பொதுமக்களும் இன்ஸ்பெக்டரை கண்டித்து முழங்கினார்கள். பொறியில் சிக்கிய எலியாய் தவித்த அந்த கொடுமைக்காரனுக்கு பதவி நீக்கமும், கைதும் பொதுமக்கள் போராட்டத்தால் விளைந்தது. அதை வைத்து அரசாங்கமும் தன்னை நல்லவனாய் காட்டிக் கொண்டது.

ரவுடிக்கும் கொலை முயற்சி வழக்கில் சிறைக்குப் போனான். இதை கேள்விப்பட்ட சுந்தரி நிம்மதியானாள்.

அடுத்த சில நாட்களில் மாதேசு அரசு மருத்துவமனையில் இருந்தும், சரிதா தனியார் மருத்துவமனையில் இருந்தும் சிறிய கால இடைவெளியில் டிஸ்சார்ஜ் ஆனார்கள்.

அத்தியாயம்

19

1

அளவு மாற்றம் குண மாற்றம் அடைவ தென்பது இயக்கவியலின் விஞ்ஞான விதி. இது மனிதர்களுக்கும் பொருந்தும். சிந்தனையில் மாற்றம் நிகழாத மானுடர் கள் யாரும் இல்லை. தான் வாழ்கின்ற காலத்தில் பிறந்தது முதல் இறக்கும் வரை நாளுக்கு நாள் மனித சமுதாயம் அக நிலையிலும், புறநிலையிலும் மாற்றங் களை எதிர் கொண்டே வருகிறது. இதற்கு நகரமும், பேட்டை கிராமமும் விதி விலக்கல்ல. விசைத்தறிகளிலும், துணிரகங் களிலும் புதிய தொழில் நுட்பங்கள் புகுந்து விட்டன. தானியங்கி கொண்ட தறிகள் மில்களில் நடைமுறைக்கு வர ஆரம்பித்து விட்டன. ஜக்கார்டு மிஷின் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, ஏதேதோ புதிய டிசைன்கள் வர தொடங்கி விட்டன. அதில், பெங்களூரு பட்டு ரகங்கள் பிரபல மாகி வருகின்றன. அதில், கடையாலி என்ற ஒரு பட்டுச் சேலை கல்யாண விசேடங்களுக்கு பெண்கள் அணிய தோதாய் அமைந்து சிறப்பு பெற்று விட்டது. நூல் போடும் இயந்திரம், தறி நாடாவுக்கு தார் போடும் இயந்திரம் எல்லாவற்றிலும் மாற்றம் வந்து விட்டது.

பேட்டை சிறு முதலாளிகளின் மன மாற்றம் பெரிய முதலாளிகளுக்கு எதிராய் ஊசலாடும், தெளிவதுமாய் போய் கொண்டிருக்க, அவர்களின் வர்க்கத் தன்மை இடை விடாது மாற்றம் அடைந்தபடி இருக்கிறது.

புதிய ஜவுளிக் கொள்கைக்கு எதிரான வேலை நிறுத்தப் போராட்டத்தில், வெளியூர் விசைத்தறி தொழிலாளர்களும் தங்கள் தொழிலுக்கு சம்பந்தமேயில்லாத பாலியல் பெண்கள் செய்த தியாகங்களும் குறிப்பாய் சரிதா காவல் நிலையத்தில் அடைந்த கொடுந்துன்பமும் பேட்டை மனிதர்களிடம் ஓரளவு அனுதாபத்தை அவர்கள் மேல் ஏற்படுத்தி விட்டது. மேலும், ஒடுக்கப்பட்ட பெண்கள் முன்னணி அவ்வப்போது கொடுத்த போராட்ட நெருக்கடி அவர்களுக்கு விசைத்தறிப் பேக்டரிகளில் வேலை கிடைக்க வைத்து விட்டது.

தொடர்ந்து சந்துருவும், மாதேசும் கோகிலா அம்மாள் பேக்டரியில் தான் தறியோட்டுகிறார்கள். அவர் மேலும் இரண்டு தறிகள் வாங்கி விட்டார். அதற்கு அவர்கள் இருவரும் தன் வீட்டுக்கு வந்த ராசிதான் காரணம் என்று கோகிலா அம்மாளுக்கு நினைப்பு. அதை எப்போதாவது அவர் வாய் விட்டுச் சொல்லும் போது சிரிப்புதான் வரும்.

2

உற்பத்தி கருவிகள் பெருகுவது, மனித உழைப்புச் சக்தியால் தான் என்பதை சந்துருவோ, மாதேசோ எடுத்துச் சொன்னால் அந்த அம்மாள் நமட்டுச் சிரிப்புடன் நகர்ந்து விடுவார்.

சரிதா, இப்போது சந்துருவிடம் தறிக் கற்றுக் கொண்டு வருகிறாள். சுந்தரியும், சாந்தியும் தேவராசின் வீட்டில் நூல் போடும் பெண்களாய் வேலை செய்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்பு, பாலியல் தொழில் செய்யும் பெண்கள் இந்த ஊருக்குள் நுழையக் கூடாது என்று பெரு முதலாளி மாதையனுடன் சேர்ந்து பெரிய ரகளை செய்த நடேசன் தன் பேக்டரியில் சரிதாவின் சிநேகிதி வனிதாவுக்கு தார் இயந்திரத்தில் வேலை செய்ய இடம் கொடுக்கும் அளவுக்கு மாறி விட்டான்.

மாதையன், அவனது கூட்டாளிகளான ஜவுளி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அண்ணாமலையும், திருவேங்கடமும் தூண்டி விட்டதன் காரணமாய் தேவராசை போலீசில் சிக்க வைக்க அவனுக்கு காட்டிய

ஆசை வார்த்தைகள் எதையும் கொஞ்சமும் மதிக்கவில்லை. அவர்களால், தேவையில்லாமல் ஒரு வழக்கை சந்தித்தது தான் மிச்சம். இதை ஏற்கனவே உணர்ந்து திருந்தியிருந்த நடேசன் இப்போது அவர்களை கடும் விரோதமாய் பார்த்ததன் விளைவுதான் இந்த மனமாற்றம் அவன் தற்போது நகரத்தைச் சேர்ந்த எந்த பெரிய முதலாளிகளிடமும் தன் தறிகளுக்கு ரகங்கள் வாங்குவதில்லை. அவனது பக்கத்து வீட்டுக்காரர் தேவராசின் வழிகாட்டுதலின் பேரில் ஈரோடு போய் ரகங்கள் வாங்கி வந்து துணி உற்பத்தி செய்துக் கொடுக்கிறான். உள்ளூரை விடவும் ஈரோட்டில் வாங்கும் ரகங்களுக்கு ஓரளவு கூலி அதிகம். எனவே, தேவராசின் மீது மரியாதை கூடி அவரை கேட்காமல் தொழில் விசயத்தில் நடேசன் எந்த நடவடிக்கையும் மேற் கொள்வதில்லை. அவரது அறிவுரையின் பேரிலேயே வனிதாவையும் தன் பேக்டரியில் வேலைக்கு சேர்த்துக் கொண்டான்.

மற்ற பாலியல் பெண்கள் பலருக்கு பேட்டை நடைமுறையை முன் உதாரணமாய் கொண்டு நகரத்தின் தறிப் பேக்டரிகளில் வேலை கொடுத்திருக்கிறார்கள் அங்குள்ள விசைத்தறி முதலாளிகள்.

என்றாலும், பாலியல் தொழில் முற்றாக அங்கே முடிவுக்கு வந்து விட்டதா? என்றால், இல்லை. உழைத்து வாழ வேண்டும் என்ற உண்மையான அக்கறை உள்ள பல பெண்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அந்த தொழிலில் இருந்து மீண்டு விட்டார்கள். உழைக்கத் தயங்கும் சோம்பேறிகள், போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள் என ஒரு சிலர் தொடரவே செய்தார்கள்.

3

அதே போல நகரத்தின் தங்கும் விடுதிகளின் காசு பணத்தை குறி வைத்து பாலியல் தொழில் நடக்கவே செய்கிறது.

இதற்கெல்லாம் இப்போது தீர்வு காண இயலாது. ஒரு சோசலிச சமுதாயம் அமையும் போதுதான் சரியான போதனையின் மூலம் தடுத்து நிறுத்த முடியும்.

சுந்தரியின் கணவன் இன்னும் பிணையில் எடுக்க ஆளில்லாமல் சிறைக்குள் தான் கிடக்கிறான். அவனை தூண்டி விட்டுப் பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த முன்னாள் நக்கல் இன்ஸ்பெக்டர் மட்டும் கண்டுக் கொள்ளாமல் வெளியே வந்து விட்டான்.

இது பற்றி சுந்தரியிடம் ஒரு நாள் தோழர்கள் பேசினார்கள். அவன் கணவன் மேல் பரிதாபம் கொண்டு வசீகரனை வைத்து பிணையில் எடுத்து விடலாமா? என்று கேட்டார்கள்.

ஆனால், சுந்தரி அந்த ரவுடி நிச்சயம் திருந்த மாட்டான். தான் இப்போது தன் மகனுடன் புரட்சிகர அமைப்பில் இணைந்திருப்பதே சிறந்த வாழ்க்கை என்று முடிவாய் சொல்லி விட்டாள். தோழர்கள் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை.

சந்துரு, சரிதாவுக்கு தறி கற்றுக் கொடுத்து விட்டு தான் இயக்கத்தின் முழு நேர ஊழியனாய் போக முடிவு செய்திருந்தான்.

அவர்கள் இருவருக்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை. அதற்கு காரணம். சொந்த ஊரில் இருக்கும் அப்பா தன் மனைவியிடம் சரிதாவைப் பற்றி சொல்லியிருந்தாலும், சந்துருவின் அம்மா இது நடைமுறை சாத்தியமா? ஊரில் சரிதா யார் என்று தெரிந்தால் என்ன சொல்வார்கள்? குறிப்பாய், தன் மூத்த மகள் வாழும் அவள் கணவன் வீட்டார் ஏதாவது சொல்லி தன் மகளை இடித்துக் காட்டுவார்களோ? என அச்சப்படுகிறார்.

இந்த சமுதாயத்தில் பிற்போக்கு சம்பிரதாயங்களை மீறிய சாதி மறுப்புத் திருமணம் உட்பட எந்த ஒரு முற்போக்கான மண உறவுகளும் சம்பந்தப்பட்ட ஆண், பெண் இருவரை மட்டும் சார்ந்ததாய் இல்லை. அவர்களைச் சுற்றியுள்ள உறவினர்கள், சமுதாய உறவுகள் என பலரையும் சார்ந்திருக்கிறது. அதனால் தான் காதல் வயப்பட்டவர்கள் சொந்த சாதியாகவே இருந்தால் கூட பல்வேறு ஏற்றத் தாழ்வுகளால் ஊரை விட்டு ஓடிப் போய் வேறொங்கோ திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். அதையும் மீறி சொந்த ஊருக்கு வந்தாலும் உறவினர்கள் யாரும் உடனடியாய் அவர்களோடு எந்த தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை.

4

சந்துருவின் அம்மாவுக்கு இன்னொரு பயமும் சேர்ந்தே இருக்கிறது. தனக்கு இன்னொரு மகள் இருக்கிறாள். பாலியல் தொழிலில் இருந்தப் பெண்ணை தன் வீட்டு மருமகளாய் ஏற்றால், அவளுக்கு சரியான வரன் அமையாமல் போகுமோ? அல்லது யாரும் பெண் கேட்டு வர மாட்டார்களோ? என்பது தான் அது.

இது போன்ற காரணங்களால் குழம்பிக் கிடக்கும் அம்மாவை அப்பா பக்குவமாய் பேசி புரிய வைத்து சம்மதம் வாங்க கொஞ்சம் கால அவகாசம் கேட்டிருக்கிறார்.

சந்துரு தன் அம்மாவுக்கு தெரியாமலேயே இதே ஊரில் சரிதாவை மணந்துக் கொண்டு வாழலாம் தான். அம்மா மனம் மாறும் போது மாறட்டும் அப்போது சரிதாவை தன் மனைவியாகவே அவருக்கு அறிமுகம் செய்து வைக்கலாம் தான்.

ஆனால், அப்பா தன் தலைமையில் ஊரும், உலகும் அறிய இந்த திருமணம் நடக்க வேண்டும். இதன் மூலம், பாலியல் பெண்களை மணக்க இளைஞர்கள் முன் வர வேண்டும் என்று நினைக்கிறார். ஏனெனில், சில திரைப்படங்களில் காட்டுவது போல அது அவ்வளவு எளிதாய் பிற்போக்கு சமுதாய நடைமுறையில் இல்லை என்பதே.

சந்துரு, அப்பாவின் இந்த நல்ல நோக்கத்தை ஏன் கெடுப்பானேன் என்று விட்டு விட்டான்.

மணியம்பாளையத்தில் அவன் அடித்த அந்த தறி முதலாளி தொழிலாளர்களுக்கு எதிரான தனது எதேச்சதிகார மனப்பான்மையால், கடுமையான வெறுப்புக்கு ஆளாகியிருக்கிறான்.

தறிக்காரர்கள் யாரும் அவன் பேக்டரிக்கு வேலைக்குப் போவ தில்லை. எனவே, தொழில் செய்ய முடியாமல் தறிப் பேக்டரியை இழுத்து மூடும் நிலமைக்கு ஆளாகி விட்டான். அவனது இந்த நிலைக்கு ஆரம்பம் சந்துருவையும், அவன் அக்காவையும் கேவலமாய் திட்டி பிறகு, அடி வாங்கி அது தொழிலாளர்கள் மத்தியில் பரவியதின் பின் விளைவேயாகும்.

இரண்டொரு மாதங்களுக்கு முன்னால், அப்பாவும், அண்ணனும் அந்த முதலாளியிடம் சந்துரு வாங்கிய பாக்கிப் பணத்தில் ஒரு பகுதியை திருப்பிக் கொடுக்க அவன் வீட்டுக்குப் போக, அவன் அழ மாட்டாத குறையாய் அவர்களிடம் இதைச் சொல்லி யிருக்கிறான். அவனது இப்போதைய மனநிலையில் சந்துரு திரும்ப ஊருக்கு வந்தால் அவன் தன்னை அடித்ததை மறந்து விட்டு மறுபடியும் தன் பேக்டரியில் மறுபடியும் வேலைக்கு சேர்த்துக் கொள்வான் போல.

5

அப்படிச் செய்தால் மறுபடியும் தன்னிடத்தில் தொழிலாளர்கள் வேலைக்கு வருவார்கள் என்று நம்புகிறான்.

இந்த விவரத்தை, அப்பா தேவராசு வீட்டுக்குப் போன் செய்து சொன்ன போது, தங்கள் சொந்த ஊர் விசைத்தறி முதலாளிகளிடம் பணப்பாக்கிப் பட்டு இந்த ஊருக்கு ஓடி வந்த மற்ற தொழிலாளிகள் விசயத்தில் நடக்காத ஒன்று தன் விசயத்தில் விதி விலக்காய் நடந்திருப்பதை நினைத்து சந்துரு ஆச்சரியப்பட்டான்.

அவன் மீதும், மாதேசு, கந்தப்பன் மற்றும் ஏழுமலை மீதும் கள்ளிப் பாளையம் முதலாளிகள் சம்பந்தப்பட்ட வழக்கு தற்போது சித்தூர் கோர்ட்டில் இறுதிக்கட்ட விசாரணை முடிந்து நடுவரின் தீர்ப்புக் கட்டத்திற்கு வந்திருக்கிறது.

அதை சந்திக்க, இன்று விடிகாலை நால்வரும் நகரத்தில் இருந்து ஆந்திர மாநில போக்குவரத்துக் கழக பேருந்தில் பயணப்பட்டு சில மணி நேரங்களில் சித்தூருக்கு வந்து விட்டார்கள். பேருந்து நிலையம் அருகிலேயே ஒரு ஓட்டலில் சாப்பிட்டு விட்டு நீதிமன்ற வாசலில் வழக்குரைஞர் வசீகரனுக்காக காத்திருந்தார்கள்.

தீர்ப்பு எப்படியிருக்கும் என்று தெரியவில்லை? எப்படியிருந்தாலும் அது தண்டனையாகவே இருந்தாலும் கூட அதற்காக அச்சப்படும் மனநிலையில் அவர்களில் யாருமில்லை. புரட்சிகர வாழ்க்கையில் வழக்கு, சிறை தண்டனை என்பதெல்லாம், அடிக்கடி நிகழும் சம்பவங்கள் என்பதை தற்போதைய இயக்க அனுபவங்கள் அவர்களுக்கு நன்றாய் கற்றுக் கொடுத்து விட்டது. அதிர்ஷ்ட வசமாய் வேறேந்த வழக்குகளும் இப்போது இல்லை. எனினும், எதிர்காலத்தில் வராமல் போக வாய்ப்பில்லை.

ஆனால், தாங்கள் நால்வரும் தண்டனைப் பெற்று சிறைக்கு சென்றால் தற்காலிகமாய் இயக்க முன்னேற்றம் பாதிக்கப்படலாம் என்ற கவலை மட்டும் அவர்களுக்கு இருந்தது.

காலை பத்து மணிக்கு முன்பாகவே வசீகரன் கோர்ட்டுக்கு வந்து விட்டார். அவர்களைப் பார்த்ததும் ''வாங்க தோழர்களே...'' என்று சிரித்தார்.

வழக்கமான நலம் விசாரிப்புகளுக்குப் பிறகு வழக்கின் போக்கு பற்றி பேச்சு எழுந்தது.

வசீகரன் சொன்னார் ''இப்ப புதுசா வந்திருக்குற நீதிமன்ற நடுவர் அவ்வளவு சீக்கிரம் யாருக்கும் தண்டனை குடுக்க மாட்டாருன்னு மற்ற வக்கீலுங்க தகவல் சொல்றாங்க. இது நம்பளுக்கு சாதகமான அம்சந்தான்...'' என்று.

6

ஆனாலும், இயக்க முன்னணியினர் என்பதால் நான்கு பேருக்கும் அரசின் உளவுத்துறை தண்டனை தர சொல்லி நடுவரை நிர்பந்திக்கலாம் என்று வழக்குரைஞர் அச்சம் தெரிவித்தார்.

அதைக் கேட்ட சந்துரு ''எதுவா மட்டும் இருந்துட்டுப் போவட்டும் தோழர். போன தடவை ஒரு நாள்ல எங்களை பிணைல வெளிய கொண்டாந்துட்டீங்க. செரியா ஜெயிலப் பாக்காம வந்துட்டோம். இந்த தடவை நிதானமா உள்ற இருந்து நல்லாப் பாத்துட்டு வர்றமே...'' என்று சிரித்தான்.

அதை மற்றவர்களும் ஆமோதித்து சிரித்தார்கள்.

அதற்கு வசீகரன் பாராட்டும்படிக் கூறினார் '' நாம் மொத மொதல்ல ஒங்க நாலு பேத்தையும் இதே கோர்ட்டு வாசல்ல வெச்சிப் பாத்தப்ப பரிதாபமா இருந்தீங்க. இப்ப நல்லா தேறிட்டீங்க...'' என்று.

அதைக் கேட்ட மாதேசு ''அதுக்கு காரணம் நீங்க எங்களுக்கு அறிமுகம் செஞ்சு வெச்ச புரட்சிகர அரசியலும், அமைப்புந்தான் தோழர்.'' என்று நன்றி கலந்தது போல பேசினான்.

அதைக் கேட்டு அவருக்கு பெருமிதம் தோன்றியது.

அப்போது நடுவர் சேம்பருக்கு வந்து விட்டதாய் வசீகரனின் உதவியாளர் சொல்ல அவர் சட்டென கிளம்பி நடுவரைப் பார்க்கப் போனார்.

கொஞ்ச நேரத்தில், சேவகர் பெயர் சொல்லி அழைத்தார். நீதி மன்றத்துக்குள் நால்வரும் சென்றார்கள்.

ஏற்கனேவே தன் இருக்கையில் வந்து அமர்ந்து விட்ட நடுவர் சந்துரு உட்பட நான்கு பேரையும் ஒரு நிமிடம் உற்றுப் பார்த்து விட்டு என்ன நினைத்தாரோ தீர்ப்பை அடுத்த மாதம் இறுதியில் வைத்து கொள்வதாய் எழுந்து தன் அறைக்குச் சென்று விட்டார். அவரது நடவடிக்கை விசித்திரமாய் இருந்தது.

சஸ்பென்ஸ் நீடித்தது.

அவர்கள் வெளியே வந்த சற்று நேரத்துக்கெல்லாம் வசீகரனும் வந்து விட்டார். அவரிடம் மலர்ச்சி தெரிந்தது. அது சாதகமாய் தோன்றியது. வசீகரன், நால்வருக்கும் பொதுவாய் சந்துருவின் தோளில் தட்டி தைரியமாய் ஊருக்குப் போகும்படிச் சொன்னார்.

7

நீதிமன்ற வளாகத்துக்கு எதிரே வந்து ஒரு கடையில் டீக் குடிக்கும் போது சந்துரு கேட்டான் ''நிர்மலா எப்படியிருக்குது தோழர்?'' என்று.

''அவுங்களுக்கு என்னப்பா, இப்பெல்லாம் எனக்கு அரசியல் வகுப்பு எடுக்குறாங்க?'' என்று பெருமையாய் சொன்னார் வசீகரன்.

கொஞ்ச நேரம் அவரிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு நான்கு பேரும் நகரத்துக்கு பஸ் ஏறினார்கள்.

பேட்டைக்கு வந்து சேர்ந்த போது மாலை நெருங்கி விட்டது.

அவரவர் இருப்பிடத்துக்குச் செல்ல, கொஞ்ச நேரத்தில் தேவராசு வீட்டில் இருந்து இளங்கோ வந்தான். சந்துருவுக்கு ஊரிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாய் கூறினான்.

இளங்கோ, சந்துருவுடன் தன் வீட்டுக்கு நடந்துக் கொண்டே பேசினான் ''இயக்கத்துல என்ன முழுநேரமா மாணவர் அமைப்புக் கட்ற பணியச் செய்யச் சொல்லி அறிவுறுத்துறாங்க தோழரே...'' என்று.

''வாழ்த்துக்கள்.'' என்றான் சந்துரு.

அதற்கு அவன் ''அப்பாவத்தான் சம்மதிக்க வைக்கணும். அவருக்கு நா படிப்பை முடிக்கணும்னு இன்னும் கூட நெனப்பிருக்குது.'' என்றான்.

''நல்லப் பிள்ளைக்கு அழகு சொல்லாம செய்றதுதான். அவர நாங்க பாத்துக்குறோம். நீங்க இயக்கம் என்ன சொல்லுதோ அத செய்ங்க.'' என்று ஊக்கப்படுத்தினான்.

தான் வென்றெடுத்த ஒரு சிறந்த மாணவன், முழுநேரப் புரட்சி யாளனாய் பரிணமித்திருப்பது மனதுக்கு சந்தோசமாய் இருந்தது.

தேவராசு வீட்டிற்கு வந்த போது சந்துருவை கூப்பிடச் சொல்லி மறுமுனையில் ரிசீவரை வைத்திருந்தார்கள். சற்று நேரம் காத்திருந்தான். சில நிமிடங்களில் போன் மணியடித்தது. எடுத்துப் பேச எதிர் முனையிலிருந்து அப்பாவின் குரல் கேட்டது.

அவன் தங்கைக்கு அடுத்த வாரத்தில் திருமணம் நடத்தப் போவதாக கூறினார். ''என்னப்பா, திடீர்னு...'' என்று சந்துரு ஆச்சரியமாய் அவரிடம் வினவினான். அதற்கு அவர் ''இது காதல் சாதி மறுப்புக் கல்யாணம்பா. சீக்கிரம் நடத்த வேண்டிய கட்டாயம் வந்துடுச்சி...'' என்றார்.

8

தங்கை காதலிக்கிறாளா?

அவனுக்கு இன்னும் வியப்பு கூடியது.

''யாருப்பா பையன்?'' என்று உற்சாகமாய் கேட்டான்.

''எல்லாம் ஒஞ் சிநேகிதக்காரன் மனோகரன் தாம்பா...''

''சந்தோசமான விசயம்பா... மனோகரன் நல்லவன். இப்ப நம்ப இயக்கத்தோட தொடர்புலயும் இருக்குறான். ''

''ஆனா, மேல்சாதிப் பையனாச்சே. அவுங்க வூட்ல ஓசனப் பண்றாங்க. ஆனா, அந்தப் பையன் நம்ப பொண்ணக் கட்டிக்கிறதுல உறுதியா இருக்குறான். ஒரு வழியா அவந் தாய் தகப்பன் கிட்ட பேசி சம்மதம் வாங்கியாச்சி. இருந்தாலும், காலதாமதம் பண்ணுனா வேற ஏதாவது அவுங்க சொந்தக்காரங்க மூலமா வில்லங்கம் வந்துடக் கூடாதுன்னு தான் இந்த அவசரக் கல்யாணம்..''

மனசுக்கு நிறைவாய் இருந்தது. தன் தங்கை சரியான முடிவு எடுத்திருக்கிறாள்.

அப்பா தொடர்ந்தார்

''நீ சரிதாவக் கூட்டிக்கிட்டு நாளைக்கே ஊருக்கு பொறப்படுப்பா...''

''சரிதா எதுக்குப்பா?அம்மா தான் இன்னும் சரியாகலையே...''

''அதெல்லா நாம் பாத்துக்கறேன். நீ வாப்பா... ஏற்கனவே ஒங்க அக்கா புருசன் வூட்லயெல்லாம் பேசியாச்சி. நீ எம் மருமவளோட வந்துடு.''

''செரிப்பா...''

அப்பா போனை வைத்தார்.

சந்துரு யோசித்தான்.

சொந்த ஊருக்குப் போவதென்றால் தலைமை தோழர்களிடம் தகவல் சொல்லி விட்டுப் போனால் நல்லது. ஆனால், முன்பு போல தோழர் அனுராதா பேட்டைக்கு வருவதில்லை. அரசின் நெருக்கடி அதிகரித்து விட்டதால், ஏற்கனவே பாதியளவு தலைமறைவுத் தன்மை (semi under ground) கொண்டிருந்த அவர் தற்போது முழு மூச்சாய் தலைமறைவு வாழ்க்கை மேற் கொண்டிருக்கிறார்.

9

அவரைப் பார்ப்பதென்றால் கூலி விவசாயிகள் பகுதிக்கோ அல்லது கல் குவாரிக் குடிசைப் பகுதிக்கோ தான் செல்ல வேண்டும். அங்கெல்லாம் தான் இப்போது அவருக்கு ஷெல்டர்.

எனவே, தனக்கு வந்த போன் தகவலை தோழர் இளங்கோவிடம் விபரமாய் கூறி தோழர் அனுராதா எங்கிருக்கிறார் என்பதை கண்டறிய உதவுமாறு கேட்டுக் கொண்டான். அவன் துரித கதியில் தன் இரு சக்கர வாகனத்தில் விரைந்தான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், இளங்கோ திரும்பி வந்து விட்டான். அனுராதா கூலி விவசாயிகள் பகுதியில் உள்ள ஷெல்டரில் இருப்பதாகவும், அவருடன் மூத்த தோழரும் கூட சற்று நேரத்துக்கு முன்தான் வந்து சேர்ந்திருக்கிறார் என தகவல் சொன்னான்.

உடனே சந்துரு அவன் வாகனத்தை தான் வாங்கிக் கொண்டு தோழர்களைப் பார்க்க புறப்பட்டான்.

நீண்ட நாட்களுக்குப் பின், தன் சொந்த ஊருக்குப் போக வாய்ப்புக் கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி ஏற்பட்டது. இருந்தாலும், ஒரு சிந்தனை அவன் மனதில் எழுந்தது.

உண்மையில், உழைப்பவனுக்கு எது சொந்த ஊர்? எங்கே பாட்டாளிகளின் கையில் அரசு அதிகாரம் இருக்கிறதோ, அவனுக்கான அடிப்படை தேவைகள் நிறைவடைகிறதோ, சாதிமத பேதமற்று சகமனிதர்களோடு கூடி வாழ முடிகிறதோ அதுதானே அவனது சொந்த ஊர். அதுதானே உழைப்பவனின் தாய்நாடு. நாம் பிறந்து வளர்ந்த மணியம்பாளையத்திலும் சரி, தற்போது பிழைக்க வந்த பேட்டையிலும் சரி அப்படி எதுவும் இல்லையே. எல்லா உழைக்கும் மக்களும் தமது சொந்த ஊர் என சொல்லப்படுவதில் எந்த உரிமைகளும் அற்று ஏதிலிகளாய் தான் வாழ்ந்து வருகிறார்கள். அதே சமயம், தன்னைப் போல் புலம் பெயர்ந்து வெளியூரில் பிழைக்க வந்தால் வந்தேறிகள் என்றுதான் வசை மொழியால் வதைக்கப்படுகிறார்கள். எனவேதான் தோழர் லெனின் சொன்னார் போலும். 'எங்கே பாட்டாளி அரசாள்கிறானோ அதுவே அவனது சொந்த நாடு.' என்று

இங்கே இயக்கப் பணிகள் நிறைய இருக்கின்றன. விசைத்தறி தொழிலாளர்கள் மாநாடு ஒன்றை நடத்த ஏற்கனவே திட்டமிடப்பட்டு இருக்கிறது. சந்துருவை அது சம்பந்தமாய் சந்திக்கத்தான் ரொம்ப நாட்களாய் இந்தப் பகுதிக்கு வராத மூத்த தோழர் வந்திருக்கிறார் போலும்.

10

அந்த பணியை காரணம் காட்டி தோழர்கள் சந்துருவை ஊருக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்துவார்களோ என யோசித்தான்.

அப்படி அவர்கள் கூறினால், போகாமல் இருந்து விட வேண்டியது தான். என்ன சற்று முன்தான் அப்பா தன்னிடம் பேசியதை கோகிலா அம்மாள் பேக்டரியில் இருந்த சரிதாவிடம் சொல்லியிருந்தான். ஊருக்குப் போகும் சந்தோசத்தில் அவளுக்கு தலைகால் புரியவில்லை. அதில், மாற்றம் ஏற்பட்டால் ஏமாந்து போவாள்.

ஆனால், அப்படியெல்லாம் அவள் ஆசை நிராசையாகி விடவில்லை. அந்த கூலி விவசாயிகள் பகுதியில் இருந்த குடிசையில் தன் வந்த வாகனத்தை மறைவாய் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்ததும் மூத்த

தோழரும், அனுராதாவும் உற்சாகமாய் வரவேற்றார்கள். அங்கே அனுமந்தும், கொண்டையாவும் கூட இருந்தார்கள்.

''வாங்க சந்துரு.. தங்கச்சிக்கு கல்யாணமாமே...''

''அப்பா, ஊருக்கு வரச் சொன்னாராமே...''

என்று இருவரும் கேட்டார்கள்.

இளங்கோ முன் கூட்டியே ஆர்வத்தில் தகவல் சொல்லி விட்டான் போலும்.

அவர்கள் கேட்டதற்கு சந்துரு ''அது பத்திப் பேசத்தான் நா இங்க வந்தேன்.'' என்றான்.

உடனே மூத்த தோழர் அவனை தன்னருகில் உட்கார வைத்துக் கொண்டு அன்பாய் கூறினார்.

''நீங்க தாராளமாய் ஊருக்குப் போலாம்''

சட்டென சந்துருவுக்கு சந்தோசம் தாளவில்லை. இருந்தாலும் கேட்டான். ''அதெப்புடி தோழர் மாநாட்டுக்கு திட்டமிட்டு இருக்குறோமில்ல...'' என்று.

அதற்கு மூத்த தோழர் ''அதெல்லாம் மத்த தோழர்கள் பாத்துக்கு வாங்க. அதில்லாம மாநாட்டுக்கு இன்னும் தேதி குறிக்கலியே...'' என்று நினைவுப் படுத்தினார்.

அப்போது அனுராதா தெளிவாய் சொன்னார் ''நீங்க சரிதாவக் கூட்டிக்கிட்டு தாராளமா ஊருக்குப் போய்ட்டு வாங்க. ஏன்னா, தோழர் மனோகரன் இப்ப வளரும் புரட்சிகர சக்தி. நீங்க நேர்ல போயி அவரையும், தங்கையையும் வாழ்த்துறதுதான் முறை.''

11

அதை சந்துரு ஏற்றுக் கொள்ள தோழர்கள் இருவரும் அவன் ஊருக்குப் போக செவ்வணக்கத்துடன் விடை கொடுத்தார்கள். அனுமந்துவும், கொண்டையாவும் சந்துருவை சந்தோசமாய் கட்டித் தழுவி அனுப்பி வைத்தார்கள்.

மறுநாள் காலை...

சரிதாவை தன்னுடன் ஊருக்கு அழைத்துச் செல்ல அவளது சாளைக்கு வந்திருந்தான் சந்துரு. அங்கே, உற்சாக வெள்ளம் கரை தளும்பியது. சுந்தரி, சாந்தி, வனிதா என்று ஒரு பெண்கள் கூட்டமே சரிதாவை வழியனுப்பக் காத்திருந்தது. சாளைக்கார பெரிய மனுசி சரிதாவுக்கு வருங்கால மாமியார், மாமனாரிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என அறிவுரையாய் சொல்லிக் கொண்டிருந்தார். அவள் புதுப் புடவையில் ஜொலித்தாள். சந்துருவுக்கு கண் நிறைந்துக் காணப்பட்டாள்.

நேற்று தோழர்களைப் பார்த்து விட்டு பேட்டைக்கு வரும் போது இரவாகி விட்டது. உடனே மற்ற தோழர்களிடம் விசயத்தை சொல்லி விட்டு, அப்படியே வசீகரனுக்கும் தகவல் கூறி அவரது வாழ்த்தையும் பெற்றுக் கொண்டு, சரிதாவைக் கூட்டிக் கொண்டு நகரத்துப் போய் புதிதாய் இரண்டு புடவைகள் அவளுக்கு எடுத்துக் கொடுத்தான். ஆனால், கூட்டத்தை சேர்த்துக் கொண்டு பின்னாலேயே வந்த பொன்னியும், அவள் தாயாரும், கோகிலா அம்மாள் போன்றவர்களும் ஜவுளிக் கடையை ஆக்ரமித்து ஆளாளுக்கு புது துணிகள் எடுத்துக் கொடுத்தார்கள். சேர்ந்த துணிகளைப் பார்த்து சந்துவும், சரிதாவும் திகைத்துப் போனார்கள். என்றாலும், வேண்டியதை மட்டும் ஊருக்கு கொண்டு செல்ல முடிவெடுத்தார்கள்.

அதன் பிறகு, பிரயாணத்துக்கான தோல் பை, புதுச் செருப்புகள், கைக் கடிகாரங்கள் என்று தோழர்கள் எடுத்துக் கொடுத்தார்கள்.

சந்துரு, சரிதாவை ஊருக்குக் கூட்டிக் கொண்டு கிளம்ப அவர்களுடன் குப்பம் ரயில் நிலையம் வரை வந்து வழியனுப்புவதாய் அவள் தோழிகள் அங்கிருந்த சுந்தரியின் மகன் உள்ளிட்ட சிறுவர் சிறுமியர் புறப்பட்டனர்.

அரப்புக் காட்டில் நுழைந்த போது சரிதா தன் செல்லங்களை விநோத குரலெழுப்பிக் கூப்பிட்டாள். பாபு உட்பட மயில்கள் அனைத்தும் விரைந்து வந்தன.

பாபுவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்தமிட்ட சரிதா தான் ஊருக்குப் போய் வருவதாய் சொல்ல அது சத்தமிட்டது.

12

அதை பார்த்த சந்துரு குறும்பாய் கேட்டான் ''என்ன சரிதா ஒம் பாபு ஒன்ன ஊருக்கு போக வேண்டான்னு சொல்லுதா?''என்று.

உடனே அவள் ''அதெல்லாம் ஒண்ணுமில்ல, நல்லபடியா போயிட்டு வான்னுதான் சொல்லுது.'' என்றாள்.

அதற்கு அவன் ''என்னமோ போ... அது பாசை ஒனக்கு மட்டுந்தான் தெரியும்.'' என்று செல்லமாய் அலுத்துக் கொண்டான்.

அனைவரும் சிரித்தார்கள்.

எல்லோரும் புறப்பட பாபு வழக்கம் போல அரப்புக் காட்டின் எல்லை வரை வந்தது. அவள் கடைசியாய் அதை திரும்பிப் பார்த்த போது பிரிவின் துயரில் லேசாய் கண்கலங்கினாள்.

சுந்தரி ''ஏய், போடீ.. நீ வர்ற வரைக்கும் பாபுவ நாங்க பாத்துக்கு றோம்.'' என நெட்டித் தள்ளினாள்.

குப்பம் ரயில் நிலையம் கொள்ளாமல் கும்பல் சேர்ந்திருந்தது. தோழர் களும், தொழிலாளர்களும், தேவராசு உள்ளிட்ட சிறு முதலாளிகள் கொஞ்சம் பேரும், கோகிலா அம்மாள், அங்கம்மாள் மற்றும் இளங்கோ அவன் தாயார் என்று வழியனுப்ப பெரும் கூட்டம் சேர்ந்து விட்டது.

சந்துருவின் கையைப் பிடித்துக் கொண்டு ஆளாளுக்கு சொன்னார்கள்.

''ஊருக்குப் போய்ட்டு சீக்கிரம் வந்துடுப்பா...''

''ஆமாப்பா...''

அவன் சரியென தலையசைத்தான்.

எப்போது இந்த ஊரை விட்டு சொந்த ஊருக்குப் போவோம் என்றிருந்தது ஒரு காலம். இப்போது போய் விட்டு விரைவில் திரும்பி விட வேண்டும் போலிருந்தது.

கந்தப்பன் மனைவி சரிதாவிடம் ''அங்கியே கல்யாணத்தப் பண்ணிக் கிட்டு வராதே. இங்க வந்துதான் பண்ணிக்கணும்.'' என்று உரிமையாய் சொன்னார்.

அதை மற்ற பெண்கள் ஆமோதித்தார்கள். சரிதா தன் அருகில் பொன்னியை அழைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டுச் சொன்னாள் ''ஒடம்ப பாத்துக்கம்மா...'' என்று. ஏனெனில், பொன்னி விரைவில் தாயாகப் போகிறாள்.

13

அப்போது ரயில் வந்து விட்டது.

மாதேசு, கந்தப்பன், ஏழுமலை, ஓபுளி, சிற்பி, மச்சக்காளை, பச்சையப்பன் என்று தோழர்கள் சந்துருவுக்கு செவ்வணக்கம் சொன்னார்கள்.

ஓபுளி கட்டித் தழுவி ''சந்துரு... நல்லபடியா போயிட்டு சீக்கிரம் வா தோழரே.'' என்றான்.

அவன் முதன் முதலில் தன்னை பெயர் சொல்லி அழைத்தது மகிழ்ச்சியாய் இருந்தது. எனவே, சந்துரு சிரித்தான்.

அப்போது சிற்பி '' ஓபுளி திருந்திட்டாருப்பா... இதுக்காகவே நீயும், சரிதாவும் போன வேகத்துல திரும்பி வரணும்.'' என்றான்.

அனைவரும் சிரித்தார்கள்.

சந்துருவும், சரிதாவும் ஏறி அமர, ரயில் உற்சாகமாய் ஒலியெழுப்பிக் கிளம்பியது.

வந்தேறிகள்

இரா. பாரதிநாதன்



ஆந்திரத்துக்குக் குடிபெயர்ந்த
தமிழக விசைத்தறித் தொழிலாளர்களின்
போராட்ட வாழ்வின் பின்புலத்தில் ஒரு நாவல்.